
SINCE 1997
லேடீஸ் ஸ்பெஷல்
பெண்கள் மாத இதழ்
புறப்படு பெண்ணே! புவியசைக்க...
ஆசிரியர்
கிரிஜா ராகவன்
தீபாவளி மலர்
2016
விலை
₹150/-

THE MAGNAT MAGAZINES


பழைய நகைகளை ஏன்
லாக்கரில் வைத்திருக்க வேண்டும் ?
செலவே இல்லாமல் எங்களிடம்
புது நகைகளுக்கு மாற்றிக் கொள்ளலாமே !
www.TheMagnat.com
லலிதா ஜுவல்லரி மார்ட் (பி) லிமிடெட்
சென்னை: தி.நகர் - பனகல் பார்க். Ph : 044 - 2814 1155 / 77 / 88 | புரசைவாக்கம் - அபிராமி மால் எதிரில். Ph : 044 - 2641 1188.
அண்ணாநகர் - 'L' வெஸ்ட் ப்ளாக், 2வது அவென்யூ, திருமங்கலம் ஜங்ஷன் அருகில், செந்தில் நர்சிங் ஹோம் அருகில். Ph: 044 - 4555 0005.
மதுரை • திருச்சி • புதுச்சேரி • கும்பகோணம் • பெங்களூரு • இராமநாதபுரம் • கோயம்புத்தூர் • திருப்பதி • விசாகப்பட்டினம்

# பழைய நகைகளின் அதே எடைக்கு புதிய நகைகளை பெற்றுக் கொள்ளலாம்.

## லலிதா ஜுவல்லரியின் ‘அட்வான்ஸ் நகை புக்கிங் திட்டம்’.

செலவே இல்லாமல் உங்கள் பழைய நகைகளை எக்ஸ்சேஞ்ச் செய்து கொள்ள இது ஒரு அரிய வாய்ப்பு. நீங்கள் என்ன எடையில் பழைய தங்க நகைகளை கொடுக்கிறீர்களோ, அதே எடைக்கு புதிய தங்க நகைகளை வாங்கிக் கொள்ளலாம்.

வெறும் அரை சதவிகிதம் (0.5%) உங்கள் பழைய தங்கத்தை உருக்குவதற்கும், தூய்மைப் படுத்துவதற்கும் கழித்துக் கொள்ளப்படும்.
தங்கத்தின் விலை ரூ.2850/கிராம் என்ற தோராயமான கணக்கில்,
இது கிராமிற்கு வெறும் ரூ. 14/- ஆகும்.

**சேதாரம் செலுத்த வேண்டாம்.**
**1% VAT-ம் செலுத்த வேண்டாம்.**

www.TheMagnat.com

உங்கள் பழைய நகைகளைக் கொடுத்து, 6 மாதங்களின் முடிவில் புத்தம் புதிய 2017 மாடல் டிசைன்களில் நகைகளை வாங்கிக் கொள்ளலாம்.

**இத்திட்டம் எங்களிடமுள்ள எல்லா நகைகளுக்கும் பொருந்தும்.**

பழைய நகைகள் BIS 916 ஹால்மார்க் தர நிர்ணயத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படும். எல்லா விதமான செயின்கள் மற்றும் வளையல்களை 6 மாதங்களின் முடிவிலும், மற்ற எல்லா நகைகளையும் 7 மாதங்களின் முடிவிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**ஒரு உதாரணம் :**

**உங்கள் பழைய நகையின் எடை : 100 கிராம்**

**6 மாதங்களின் முடிவில் நீங்கள் வாங்கும் நகையின் எடை : 100 கிராம்**

(வெறும் அரை சதவிகிதம் (0.5%) பழைய தங்கத்தை உருக்குவதற்கும், தூய்மைப் படுத்துவதற்கும் கழித்துக் கொள்ளப்படும்).

Lalithaa™




www.TheMagnat.com



www.TheMeomat.com


பேஷன்
நகைகளின்
ராணி
என்றென்றும்
கல்யாணி
56
ஆண்டுகளாக
மக்களின் நம்பிக்கை,
நல்லாதரவுடன்
புகழ் பெற்ற
ஸ்தாபனம்!
கல்யாணி
கவரிங்
அனைத்து விதமான லேட்டஸ்ட் பேஷன் நகைகள் வாங்க...
91/97, உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை. போன்: 2433 6061
மற்றும் தமிழகமெங்கும்



/efifdiamonds
efifdiamonds@gmail.com
www.efifdiamonds.com
+91 - 9176972821
மாதாந்திர 'முகூர்த்த வைரம்' வைரநகை சேமிப்புத்
திட்டத்தில் சேர்ந்து 11 மாதம் பணம் செலுத்தி
+1 மாத தவணை வெகுமதியாக பெற்று
கூடுதலாக ஒரு வைரமூக்குத்தியை
சிறப்பு பரிசாக பெறுங்கள்
வைரம் ஒரு காரட்
ரூ.58000/-*
(0.07 cents வரை)
நிகரற்ற
வைரத்தின் நிறம்..
எங்கள்
நிறுவனத்தின் பெயர்
EF·IF
DIAMOND JEWELLERY
பு.எண்:57. ஜி.என்.செட்டிரோடு
(ஜெயின் கோவில் அருகில்)
தி.நகர். சென்னை-17.
தமிழ்நாடு. இந்தியா
044-45588811/28151987





Little Millennium™
The preschool chain from EduComp

www.TheMagnat.com

Little MilleniumTM, Adambakkam
11 (Old #. 20), Mohanapuri 3rd Street
Adambakkam
Chennai - 600 088
www.LMAdambakkam.com

Little MilleniumTM, Velachery
No.11, 2nd Main Raod
Jaganathapuram, Velachery
Chennai - 600 042
www.LMVelachery.com





**Meena Alagu**
9500 1800 34
fb.com/LMAdambakkam




If you've been dreaming about buying a home for your family, we can help put your name on the door. Talk to us. We are here to listen, and you can use our expertise to take the right decision. **Count on us for guidance on home loans, legal and technical counseling and property search assistance.** We've helped over 5.2 million families across the country buy their dream homes. We'll be glad to be with you, right through.

**We make homes happen.**

**Call: 2859 9300**
SMS: HDFCHOME to 56767

HDFC HOME LOANS
*create your space*

All Loans at the sole discretion of HDFC Ltd. Terms and Conditions Apply.
CIN: L70100MH1977PLC019916

# Festival Greetings

TO THE ESTEEMED READERS

www.TheMagnat.com

ROTARY CLUB OF MADRAS MOUNT

Rotary International District 3230



INNER WHEEL CLUB OF MADRAS MOUNT

DR. PADMA RAMAMURTHY, President

98401 06938


GRT
G.R.Thanga Maligai
JEWELLERS
Since 1964
மங்களப்
பொன்னில் எந்நாளும்
பொன்னாள்
www.TheMagnat.com
சென்னை: தி.நகர்: உஸ்மான் ரோடு Ph: 044-2434 5062; கோட்ஸ் ரோடு Ph: 044-2346 1515 | அடையார் | அண்ணாநகர்
பழைய வண்ணாரப்பேட்டை | பெரம்பூர் | ஃபீனிக்ஸ் மார்க்கெட் சிட்டி | பூவிருந்தவல்லி | புரசைவாக்கம் | ரெட்ஹில்ஸ் | தாம்பரம் | வேளச்சேரி
கடலூர் | தருமபுரி | ஈரோடு | ஓசூர் | காஞ்சிபுரம் | கும்பகோணம் | மதுரை | மயிலாடுதுறை | தஞ்சாவூர் | திருவண்ணாமலை
திருச்சிராப்பள்ளி | திருவள்ளூர் | விருத்தாசலம் | புதுச்சேரி | பெங்களூரு | குண்டூர் | திருப்பதி | விசாகப்பட்டினம் | ஹைதராபாத்
இப்பொழுது துபாய், சிங்கப்பூர் மற்றும் மலேசியாவிலும்.
Shop online at: www.grtjewels.com | mail@grtjewels.com


K.M.G
DEVELOPERS
FLATS AT CHROMPET
READY TO OCCUPY
VILLAS AT PERUNGUDI
Special Features
Covered Car Parking
Lift
Gym
Generator backup
Wall Painting With Two Coats Birla Putty
VILLAS ARE AVAILABLE FOR RENT
Promoted by:
K.M.G Developers
No: 81/54,Bazullah Road, T.Nagar,
T.Nagr, Chennai - 600 017.
PROJECT MANAGED BY:
SAI ANAND
PROPERTIES & INFRASTRUCTURE (P) LTD
Tel: 98844 82435 / 98840 23785 / 93810 23785




www.TheMagnat.com




www.TheMagnat.com



உங்கள் காஞ்சிபுரம் S.M. Silks
இப்போது 7 மாடிகள் கொண்ட
பிரம்மாண்டமான கட்டிடத்தில்
5 லட்சத்திற்கும் அதிகமான வண்ண வண்ண பட்டு சேலைகள்
இதுவரை கண்டிராத டிசைன்களின் அணிவகுப்பு !
1 சேலை வாங்கினால் அதே விலையில்
2 சேலைகள் FREE
Wide range of sarees starting from
₹999 to ₹99,999
பெரியார் மாளிகை, E.V.K சம்பத் சாலை,
எழும்பூர் & சென்ட்ரல் இரயில் நிலையம் மிக அருகில்,
வேப்பேரி, சென்னை
: 044 4850 7455 / 6455
Kancheepuram
S.M. Silks
• CHENNAI • BANGALORE • KANCHEEPURAM
தி.நகர் | அமைந்தகரை | புரசைவாக்கம் | பழைய வண்ணாரபேட்டை | மைலாப்பூர் | காஞ்சிபுரம் | பெங்களூரு மெஜஸ்டிக் | பெங்களூரு R R நகர் | பெங்களூரு அல்சூர்
P: 044 2435 6890 / 2722 7686 | E: smsilks2010@gmail.com | www.kancheepuramsmsilks.com

# BRS HOSPITAL

**Multi Speciality Centre**

**CASUALTY: • 24 HRS TRAUMA • BURNS • HEAD INJURY**

• General Medicine & Surgery • Pediatrics & Neonatology
• Plastic and Reconstructive Surgery • Otolarynology
• Head and Neck Oncology • Obstetrics & Gynecology
• Laparoscopic Surgery

• • •

**COSMETIC SURGERY**

• Liposuction • Hair Transplantation • Abdominoplasty
• Breast Augmentation • Rhinoplasty • Gynaecomastia

www.TheMagnat.com


*Diwali Greeting From*

**Rtn. R. Manjula Venkatakrishnan &**
**Dr. Venkatakrishnan**


**BRS HOSPITAL**
Multi Speciality Centre


**28, Cathedral Gardens Road, Nungambakkam,**
**Chennai - 600 034. Tamilnadu, India**

**Phone :** 91 - 44 - 30414200 / 230 / 250 **Fax :** 91 - 44 - 28221947
**E-mail :** drmadhu@brshospital.com



www.TheMagnat.com


SHRI GANAPAHTY
Courtesy:
KAPPA GROUP OF COMPANIES
CHENNAI


Wish You All A Very Happy Diwali
Mahindra
First Choice
ESHWARI CAARS
Wide Variety and peace of mind guaranteed
ANNA NAGAR
Y-23, 6th Main Road, Anna Nagar, Chennai - 600040.
PALLAVARAM
9, 10, 11, Pallavaram Radial Road, Keelkattalai, Chennai - 600117.
SHOLINGANALLUR
361, Madha Kovil Street, Okkiam, Thoraipakkam, Chennai - 600097.
www.easvaricarshoppee.com

# பலன் பெற்றோரின் பாராட்டுரைகள்!



**இடுப்புவலி**

நான் கடந்த ஐந்து ஆண்டு காலமாக கடுமையான இடுப்பு வலியால் மிகவும் சிரமப்பட்டேன். பல டாக்டர்களிடம் காண்பித்தும் சரியாகவில்லை. ஒரு வருடமாக வீட்டிலேயே படுத்த படுக்கையாக இருந்தேன். நடந்தாலே சுளுக்கென்று இருக்கும். ரப்பானி வைத்தியசாலா டாக்டரின் டி.வி. விளம்பரத்தைப் பார்த்து ரப்பானி வைத்தியசாலா சென்றேன். ஆறு மாத காலம் தொடர்ந்து மருந்து சாப்பிட்டதில் இடுப்புவலி இல்லாமல் மிக நன்றாக இருக்கிறேன்.

**திரு. முத்தையா, நேதாஜி நகர், சென்னை-81.**



**முடக்குவாதம்**

நான் கடந்த 25 வருடங்களாக முடக்குவாத நோயால் மிகவும் அவதிப்பட்டு வந்தேன். முதுகுவலியால் தினமும் வீட்டு வேலைகளை செய்ய முடியாது. பல மருத்துவமனைக்கு சென்றும் பலன் இல்லை. டிவியில் டாக்டரின் விளம்பரத்தைப் பார்த்தேன். நேரில் வந்து ரப்பானி வைத்தியசாலாவில் மருந்து சாப்பிட்டேன். பிறகு முடக்குவாதம் சரியாகிவிட்டது. இப்பொழுது எனக்கு எந்தப் பிரச்னையும் இல்லை.

**திருமதி ராஜம்மாள், ஆதம்பாக்கம், சென்னை.**



**பக்கவாதம்**

நான் கடந்த 4 வருடங்களாக பக்கவாத நோயால் அவதிப்பட்டேன். என்னால் எழுந்துகொள்ள முடியாத நிலையில் இருந்தேன். பல மருத்துவமனைக்கு சென்றும் பலன் இல்லை. பிறகு டிவியில் விளம்பரத்தைப் பார்த்தேன். ரப்பானி வைத்தியசாலாவில் மருந்து சாப்பிட்டு வந்தேன். இப்பொழுது நன்றாக நடக்கிறேன். எந்த குறையும் இல்லை.

**திரு. அப்துல் ரஹிம, திண்டிவனம்.**

www.TheMagnat.com



**கால் மூட்டு வலி**

நான் கடந்த ஐந்து ஆண்டு காலமாக கால் மூட்டு வலியால் நடக்க முடியாது, தண்ணீர் தூக்க முடியாது, துணி துவைக்க முடியாது, பாத்திரங்களைக்கூட கழுவ முடியாது, வீட்டிலேயே முடங்கி இருந்தேன். பிறகு டி.வி.யின் மூலம் ரப்பானி வைத்தியசாலா பற்றி டாக்டரின் விளம்பரத்தைப் பார்த்தேன். நேரில் சென்று சந்தித்து அவர் கொடுத்த மருந்தை சாப்பிட்டேன். இப்போது நல்ல முன்னேற்றம் கிடைத்தது. எந்த பிரச்னையும் இல்லை.

**திருமதி பூச்சி அம்மாள், தண்டையார்பேட்டை, சென்னை-81.**



**நாட்பட்ட மூட்டுவலி, முடக்குவாதம், பக்கவாதம், நரம்புத் தளர்ச்சி, மைரேன் உள்ளிட்ட அனைத்து வகையான தலைவலிகள் கர்ப்பப்பைக் கோளாறு போன்ற பெண்களுக்கான நோய்கள், ஆஸ்துமா, சைனஸ் போன்ற நோய்களுக்கும் முழுக்க முழுக்க இந்திய மற்றும் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட மூலிகைகளைக் கொண்டு தரமான சிகிச்சை அளிக்கிறோம்.**

**பக்க விளைவுகள், பத்தியம் ஏதும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது**

## டாக்டர் ஹக்கீம் S.A.சையத் சத்தார்

# ரப்பானி வைத்ய சாலா

**புதிய எண்.65, பழைய எண்.139, டாக்டர் பெசன்ட் ரோடு, (மீர்சாகிப்பேட்டை, மார்க்கெட் அருகில்)**
**சென்னை - 600 014. போன்: 28476969 / 28470874**

பார்க்கும் நேரம்: காலை 9.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை (ஞாயிறு விடுமுறை)

தமிழன் டிவியில் தினசரி காலை 9.00 மணி முதல் 9.30 மணி வரை, மாலை 6.00 மணி முதல் 6.30 மணி வரையும்,
மெகா டிவியில் திங்கள் முதல் சனி வரை காலை 9.00 மணி முதல் 9.30 மணி வரையும்,
கேப்டன் டிவியில் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.30 மணி முதல் 9.00 மணி வரையும்,
வேந்தர் டிவியில் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.30 மணி முதல் 11.00 மணி வரையும்,
வின் டிவியில் தினமும் மாலை 5.00 மணிக்கும் **டாக்டர் சையத் சத்தாரின் பேட்டியைக் காணத் தவறாதீர்கள்**


Wish You All A Very Happy Diwali
Hotel Shan Royal
In the Finest Traditions
85, Poonamalle High Road, Near Koyambedu Bus Stand, Chennai - 600107.
Ph: 91-44-26221212 Fax: 91-44-26286998
E-Mail: contact@hotelshanroyal.com


Niketana
Niketana
Feel @ Home
Welcome Home
Here modern comforts confluence with old world charm...
Feel at home, yet experience the facilities of a star hotel.
18 Air conditioned rooms with 100% power back-up.
Excellent home prepared food.
Business centre and Conference hall.
Gym and Library.
Entire premises is Wi-Fi enabled.
Niketana
New No. 17, Sathyanarayana Avenue
Boat Club Road, Chennai - 600 028
Phone : 044 4211 3838 / 2435 2225
Email : admin@niketana.in
Web : www.niketana.in
Joshva Ravi : 98414 32489


Creating Wealth
generating values
for generations
HOMELAND
PROMOTERS PVT. LTD.
With Best Compliments from
Rtn. PHF. R. Tamilselvan
Chairman
No. 2069/2, Nehru Nagar 5th Street,
13th Main Road, Anna Nagar West, Chennai - 600 040.
Mobile : 96770 11415 Email : rtntamilselvan@gmail.com

ஆர்.எம்.டி. பெயின் அன்ட் பேலடிவ் கேர் டிரஸ்ட்

# RMD PAIN & PALLIATIVE CARE TRUST

(Centre for Advanced disease & Terminal Care)

## வலி இல்லாமல் இறுதி மூச்சு



என்னுடைய மனைவிக்கு புற்றுநோய் கர்ப்பப்பையைச் சுற்றி உள்ளதால், நாங்கள் மின் சிகிச்சையில் ஹீமோதெரப்பி செய்தோம். வயிற்று வலி மற்றும் இடுப்பு வலியும் இருந்தது. இந்த இரண்டு வலியும் தாங்க முடியாமல் அழுதபடி இருந்தாள். RMD Pain and Palliative care வந்து சிகிச்சைப் பெற்றுவந்தோம். அதிலிருந்து வலிகள் குறைந்தன. எங்கள் குறைகளை தெய்வத்திடம் முறையிட்டோம். தெய்வமோ டாக்டர் ரிபப்ளிக்கா அவர்களை காட்டியதால் எங்கள் வலியும், வேதனையும் குறைந்தது. டாக்டர் ரிபப்ளிக்கா அவர்களுக்கு எங்கள் உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- கே.அன்பழகன், திருவேற்காடு





RMD மருத்துவ மனையில் நான் சேர்க்கப்பட்ட போது என் உடல் வேதனையைத் தவிர வேறு எதுவும் என் மனதில் இல்லை. வலியும் தாங்க முடியாத நிலையில் இருந்தேன். நடக்கவும் முடியவில்லை. மருத்துவமனை வாசலில் வண்டியிலிருந்து இறங்கியதும், பெரிய நர்ஸ், தானே சக்கர நாற்காலியை வாசலுக்கே கொண்டு வந்து படுக்கையில் கிடத்தினார். பரிவோடு பேசினார். உடனே மருத்துவர்களும் வந்தனர். ECG கூட எடுக்க முடியாத நிலையில் முடங்கியிருந்த என்னை ஒரு மணி நேரத்தில் நேராக படுக்க வைத்து, ECGயும் எடுத்து, விரைவில் வலியிலிருந்தும் விடிவு கிடைத்தது. ஒரு வாரத்திலேயே நடந்து சென்று வண்டி ஏறி வீடு செல்ல முடிந்தது. Drips ஏற்றுவதற்கு என் உடலில் Vein கிடைக்க மிகவும் சிரமப்பட்டார்கள். பெரிய நர்ஸ், மிக அருமையாகவும், பொறுமையாகவும், அனுபவ பூர்வமாக நரம்பு தேர்ந்தெடுத்து விட்டார். மருத்துவர்கள் டாக்டர் ரிபப்ளிக்கா ஸ்ரீதர், மற்றும் டாக்டர் பிரகாஷ், மிக அன்பாகவும், ஆறுதலாகவும், ஆற்றலுடன் நுணுக்கமாக நோயாளியின் உணர்வுகளை புரிந்து, மதித்து, வலி நிவாரணம் அளிக்கிறார்கள். பெரிய நர்ஸ், மருத்துவ மனையில் அனைத்து பராமரிப்பு, மற்ற உதவி நர்ஸ் பெண்களிடம் பழகுவது, உணவு மற்ற விஷயங்களையும் தக்க நேரத்தில் தானே கவனிப்பது மிகவும் போற்றதக்கது. எல்லோரும் அமைதியாகவும், ஆறுதலாகவும், புன் சிரிப்புடன் பணி புரிவது மனதுக்கு சுகமாக உள்ளது. RMD மருத்துவ மனை சேவையைப் பற்றி மக்கள் எல்லோரும் அறிந்திருப்பது அவசியம். அவர்களுடைய சேவை நோயாளியின் உணர்வுகளுக்கு மிகுந்த இதமாக இருப்பதால், உறவினரும் நிம்மதியாக உள்ளனர்.

- P.S. ஜெயசிம்மா

www.themagnat.com

எனது பெயர் ஸ்ரீதேவி. நான் ஒரு புற்றுநோயாளி. நான் அடையாறு கேன்சர் இன்ஸ்டியூட்டில் இரண்டு வருடமாக சிகிச்சை செய்து வந்தேன். நான் மிகவும் வலியுடன் கேன்ஸர் இன்ஸ்டியூட்டில் சிகிச்சைக்கு சென்றேன். நான் எனது வீட்டிற்கு வந்து ஒரு வார காலம் மிகவும் வலியுடன் துடித்து தற்கொலைக்கு முயற்சி செய்தேன். நான் படும் வேதனையை பார்த்து எனது வீட்டில் இருப்பாவர்கள் என்னை கருணாசாகரில் என்னை சேர்த்தார்கள் நான் இங்கு வந்தவுடன் சிகிச்சை பெற்று இரண்டு நாட்களில் நான் மிகவும் வலி குறைந்து நன்றாக தூங்குகிறேன். நன்றாக சாப்பிடுகிறேன் வலி மிகவும் குறைந்து உள்ளது. R.M.D. கருணாசாகருக்கு நன்றி.

- V. ஸ்ரீதேவி, அயனாவரம், சென்னை-23

என் பெயர் VK. ரமேஷ்குமார். நான் சேலத்தில் இருந்து வருகிறேன். எனக்கு உதட்டில் புற்றுநோய் வலி அதிகமாக உள்ளதால் மிகவும் அவதிபட்டேன். என் நண்பர் ஒருவர் ஒரு மாத இதழில் கேன்சருக்கு வலி நிவாரணி உள்ளதாய் போட்டு உள்ளனர் என்று சொல்லி என்னிடம் புக்கை கொடுத்தார். அதில் சென்னை தி. நகர் R.M.D. மருத்துவனை பெயர் இருந்தது. நான் இங்கு வந்து 3 நாட்கள் ஆகிறது. எனக்கு வலியை போக்க சிகிச்சை அளித்தனர். நன்றாக உள்ளது. R.M.D.மருத்துவமனையில் எனக்கு மிகவும் அன்பாக பணிவிடை செய்தனர். நர்ஸ்கள் உட்பட மருந்து மாத்திரை, மற்றும் தங்கு என்று எல்லா வசதிகள் அனைத்து இலவசமாய் செய்து கொடுத்தனர். டாக்டர் மேடம் பற்றி சொல்ல வார்த்தை இல்லை. அவர்கள் செய்யும் இந்த தொண்டு மென்மேலும் சிறக்க ஆண்டவனை அனுதினம் வேண்டுகிறேன். R.M.D. மருத்துவமனையில் பணிபுரியும் அனைவரும் நல் உள்ளத்தோடு பணிவிடை செய்கிறார்கள். என் நோயின் தீவிரம் என்ன என்று என் மனதுக்கு தெரியும் இங்கு வந்த பிறகு அந்த தீவிரம் மறந்து விட்டது. நான் குணமடைய அவர்கள் எடுத்த முயற்சி என்னை ஆனந்த பட வைத்தது.

- ரமேஷ்குமார், சேலம்-635001.



**Dr.Republica**

Pain Palliative Care Physician,
Founder and Managing Trustee


### நீங்கள் எங்களுக்கு எப்படி உதவலாம்?

| | |
|---|---|
| ஒரு நாள் சாப்பாடு | Rs. 1500/- |
| ஒரு நோயாளிக்கு ஒரு மாதத்திற்கு மருந்து உதவி | Rs. 2000/- |
| ஒரு நோயாளிக்கு ஒரு வருட மருத்துவ உதவி | Rs. 10000/- |
| அனைவருக்கும் சேர்த்து மருந்துகள் | Rs. 5000/- |
| ஒரு நோயாளிக்கு ஆயுள் உதவி | Rs. 25000/- |

ரு.500/- முதல் எங்களுக்கு நன்கொடை அனுப்பலாம்

(80G வரிவிலக்கு உண்டு - DIT(E) No-2(265)/06&07)

13, ராகவையா சாலை, தி.நகர், சென்னை-17.
போன்: 044-2815 7373, மொபைல்: (0) 93810 16588
Email:rmd.rmd1970@gmail.com
Website: www.rmdpainpalliative.com / www.rmdignoucommunitycollege.org


Wish You All A Very Happy Diwali
SINCE 1970
KA Kutties
WoodCrafts
Interior Designer & Decorators Manufacturer of Teakwood Furniture
Everyone Deserves a custom Kitchen we will give you the best style & function
Loft, wardrobe, T.V Cabinets, Show units & Drawer units.
Teak Wood
Furniture in Modern design
For all your Furniture needs Think of
Affordable price
KA Kutties
WoodCrafts
66, Brindavan Street, West Mambalam, Near Duraiswamy Subway.
Chennai - 600 033. Ph : 24833967 Cell : 98400 47719
E-mail : kuttieswoodcrafts@gmail.com

*With Best compliments from*

Rtn. **D.Dev**

# ADARSH SHIPPING & SERVICES

INTERNATIONAL LOGISTICS SERVICE PROVIDERS

- Custom House Agent
- Container Booking
- Warehousing
- Door to Door Local Transport




www.TheMagmat.com




www.TheMagnat.com

70 வருடங்களாகப் புகழ்பெற்ற நிறுவனம்




பேன்ஸி நகைகள் செய்வதற்குத் தேவையான அனைத்து பொருட்களும், ஏராளமான டிசைன்களில் இமிடேஷன் நகைகள், மைக்ரோ பிளேட்டிங் செய்யப்பட்ட தரமான பளபளப்பான நகைகள், வித்தியாசமான டிசைன்களில் ஆன்டிக் ஜுவல்லரி செட்டுகள், ஒரிஜினல் முத்துக்கள், பவழம் மற்றும் அழகுக் கற்கள், ஜெய்ப்பூர் இரத்தினங்கள் இவையனைத்தும் எங்களிடம் மிகக் குறைந்த விலையில் கிடைக்கும்.

Whatsapp மூலம் டிசைன்கள் அனுப்புகிறோம். நீங்கள் கேட்கும் பொருட்கள் நகைகள், கூரியர் மூலம் உங்கள் இருப்பிடத்திற்கே வந்து சேரும்.

**044 - 2536 8982 / 97916 97773**

S.K.B. BEADS & PEARLS

Sha Kasturchand Bhawarlal, 51-A Perumal Mudali Street, Chennai - 79



Authorised Channel Partner for

BOSCH
Invented for life

Diwali Wishes from...

## Mr. M. Viswanathan
Managing Director

# RENSOL POWER (P) LTD

» Solar PV Systems » Telecom Power Solutions » Energy Efficiency Products

#279, Murugu Nagar, 3rd Street, Velachery, Chennai - 600 042. INDIA
Telefax : 91 44 2259 3637 Mobile : 91 98410 67515
Email : rensolpower@gmail.com Web : www.rensolpower.com


www.TheMagnat.com








Second Home

# SECOND HOME

*An alternate Home facility, Providing Social, Physical and mental well being.*

**Second Home** *is an in house facility providing assistance & support for daily living, aided by trained health care providers when needed, to ensure safety, health & well being. A place where care is provided as a way of life.*

**SERVICES PROVIDED**

- Food and Shelter
- Assistance to daily Living Activites
- Psychological, emotional support
- Housekeeping and Laundry
- Transportation
- Access to other services - (Bank, Functions, etc)
- Access to health, Medical sertices, Therapies
- Round the clock security
- Emergency call systems
- Exercise, well being programme, (Yoga, Art therapy, Occupational, Reiki, Meditation Spirtual support)
- Social, Recreational, Library, Prayers, activities
- Trained staff available to specific Needs.

**Address:** No.158, 5th Cross Street, Pallavan Nagar, Maduravoyal, Chennai-78.
Phone: 044-65550591 Email: secondhome217@gmail.com, rmd.rmd1970@gmail.com

**Head Office:** No.13, Ragaviah Road, T.Nagar, Chennai-17. Phone: 044-28157373
Mobile: 93810 16588 Email: rmd.rmd1970@gmail.com / www.rmdpainpalliative.com






# தீபாவளி நல்வாழ்த்துகள்



Dr. ரேணுகா ராமகிருஷ்ணன்,
சென்னை

# தலையங்கம்



**அன்பு வாசகர்களுக்கு,**

வணக்கம். அனைவருக்கும் மனம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள். லேடீஸ் ஸ்பெஷல் ஆரம்பித்து இருபதாம் ஆண்டு துவங்கியிருக்கும் இந்நேரம் எங்களது 19ம் ஆண்டு தீபாவளி மலரை வாசகர்களின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன். பரீட்சை எழுதிவிட்டு ரிசல்ட் எதிர்பார்க்கும் மாணவி போல் உங்கள் விமர்சனங்களுக்காகக் காத்திருக்கிறேன்.

பிரபல ஓவியர், துக்ளக் இதழில் திரு சோ மற்றும் திரு வேளுக்குடி கிருஷ்ணன் போன்ற பிரபலங்களின் ஆன்மிகத் தொடர்களுக்கு தன் ஓவியங்களால் 18 வருடங்களாகச் சிறப்பு சேர்த்தவர். ஓவியக் கல்லூரி மாணவர், மிகத் திறமையானவர். **திரு விஜயகோபால்** என்கிற **கலைமதி** அவர்களின் கைவண்ணத்தில் இந்த வருட தீபாவளி மலர் அட்டைப்படம் அழகுற மிளிர்கிறது. ராதா கிருஷ்ணனின் ஏகாந்தமான மாலைப்பொழுது உங்கள் அனைவரின் கண்களுக்கும் விருந்தாகும் என்பது நிச்சயம்.

வாசகர்களின் எல்லா ரசனைகளுக்கும் ஈடு கொடுக்கும் கலவையாகத்தான் இந்த மலர் மலர்ந்திருக்கிறது. படைப்புகளைப் பொறுத்தவரை தானாக வருபவைகள் சில, இந்தத் தலைப்புதான் உங்களிடமிருந்து வேண்டும் என்று நான் கேட்டு வாங்குபவை பல. அதனாலேயே பக்கங்களைக் கோர்க்கும் போது வாசகியாக நான் குதூகலிக்கும் தருணங்கள் அதிகம். **காந்தாமணி நாராயணின் 'உலோபமுத்திரா'** ரொம்ப சுவையான கட்டுரை. **பருத்தியூர் கே.சந்தானராமனின் நவதிருப்பதிகள்** கட்டுரையை சின்னக் கையேடாகவே அச்சடிக்கலாம். அவ்வளவு தகவல்கள்! **ரேவதி பாலுவின் ஆன்லைன் வர்த்தகம்** நடைமுறை ஹாஸ்யம். **குருகுலம் மூர்த்தி**க்கு நகைச்சுவை ரொம்ப சரளமாக வருகிறது. **காம்ப்கேர் புவனேஸ்வரி** கட்டுரையில் பெண்கள் மீது சமூகத்தின் பார்வை நம்மை நிறையவே சிந்திக்கத் தூண்டுகிறது. **டாக்டர் பாஸ்கரனின்** கதைகளில் எப்போதுமே மனதைத் தொடும் நெகிழ்வு இருக்கும். **குச்சனூர் கோவிந்தராஜின் தத்தைவிடு தூதும், யோகாவின் சிங்கம்பட்டி நினைவுகளும், பால திரிபுரசுந்தரியின் இராமாயண மேளா** பயணமும் படிக்கவைக்கும் பக்கங்கள்.

என் எழுத்துலக ஆசான் **அமரர் விக்கிரமன்** இந்த வருடம் நம்முடன் இல்லையே என்கிற குறை தீர, அவருடைய மனைவி **திருமதி ராஜலட்சுமி விக்கிரமனின்** "ஆடும் குதிரை" சிறுகதை இடம் பெற்றுள்ளது. அவர் ஒரு சிறந்த எழுத்தாளர் என்பது கதையைப் படித்தாலே புரியும். படிக்கப் படிக்கத் திகட்டாத படைப்புகள் இந்த மலரில் இன்னும் ஏராளமாக நிறைந்துள்ளன.

படைப்பாளி எத்தனை முக்கியமோ, அந்த அளவிற்கு ரசிகனும் மிக முக்கியம். ரசிகனின் தேவைக்கும், சுவைக்கும் ஏற்பத்தான் கலைஞன் தன் படைப்பை அளிக்கிறான். இன்னும் தரமாக, இன்னும் சுவையாக, இன்னும் மெருகாக என்று ரசிகனின் எதிர்பார்ப்பு உயரும்போது படைப்பும் தரமாகிறது. நம்முடைய லேடீஸ் ஸ்பெஷலின் வாசகர்களின் ரசனையும் உயர்ந்தது என்று எனக்குத் தெரியும். அதனாலேயே தரமான படைப்புகள் இந்த தீபாவளி மலரிலும் அணிவகுத்துள்ளன.

மலர் தயாரிப்பில் உதவிய அத்தனை அன்பான உள்ளங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி. லேடீஸ் ஸ்பெஷல் தீபாவளி மலருக்காகவே ஸ்பெஷலாக எழுதும் **படைப்பாளர்கள்,** வடிவமைத்து, அச்சிட்டு அடுக்கித் தரும் **தொழில்நுட்பக் கலைஞர்கள்,** ஓடி ஆடி உதவிடும் **அலுவலக ஊழியர்கள்,** என் பங்கிற்கு நானும் கொஞ்சம் என்று உதவிய **இளங்கோ, ஹரி** போன்ற பாசமான **நண்பர்கள்,** தவறாமல் ஒவ்வொரு வருடமும் உதவும் **விளம்பரதாரர்கள்,** நட்புக்காக விளம்பரங்கள் தந்த **ரோட்டரி சினேகிதர்கள்** அனைவருக்கும் என் சிரம் தாழ்ந்த வணக்கங்கள். நன்றிகள்.

தொடர்ந்து என்னிடம் பாசம் காட்டி ஆதரிக்கும் என் **அன்பு வாசகர்களின்** முன்னால் இந்த தீபாவளி மலரை சமர்ப்பிக்கிறேன். உங்கள் மேலான விமர்சனத்திற்காகக் காத்திருக்கிறேன்...

**மீண்டும் அனைவருக்கும் அன்பான தீபாவளி நல்வாழ்த்துக்கள்.**

நட்புடன்
கிரிஜா ராகவன்

Phone : +91 44 2489 8162
Mobile : +91 94443 62244
Email : girijaraghavanls@gmail.com

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| தலையங்கம் | | கிரிஜா ராகவன் | 5 |
| வண்ணப்படம் | | ஜகத் குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சந்திர சேர் சரஸ்வதி சங்கராச்சாரிய ஸ்வாமிகள் | 9 |
| விகட விநாயகர் | அருள்வாக்கு | தெய்வத்தின் குரல் | 10 |
| குறுகிய மனத்துடன் இருக்கக் கூடாது | நேர்காணல் | கவிஞர் மெ.ரூஸ்வெல்ட் | 14 |
| கருட தண்டகம் | ஆன்மீகம் | ஸ்லோகம் | 16 |
| டாக்டர்... பேஷண்ட்... பொறுமை! | ஹாஸ்யம் | சந்திரா | 18 |
| ஞானமலை ஞானபண்டித ஸ்வாமி | ஆன்மீகம் | சுந்தரம் | 20 |
| உடல் பருமனுக்கு உறுதியான தீர்வு | மருத்துவம் | விஜயா கண்ணன் | 23 |
| பாபநாசம் திருக்கோயில்கள் | ஆன்மீகம் | டாக்டர் ஹேமா சந்தானராமன் | 24 |
| தித்திக்கும் தீபாவளி | கலாசாரம் | தேச.மங்கையர்க்கரசி | 29 |
| சித்தர்கள் போற்றும் கற்பின் ஆற்றல்! | கலாசாரம் | மு.க.ராக்கோ | 33 |
| டூரிங் டாக்கீஸ் நினைவுகள்! | சினிமா | டாக்டர் ஜெ.பாஸ்கரன் | 35 |
| உலோபமுத்திரா | புராணம் | காந்தாமணி நாராயணன் | 40 |
| நாடு எங்கே போகிறது? | சிறுகதை | கண்ணன் மகேஷ் | 45 |
| அன்றே சொன்னது இலக்கியம் | நிகழ்வு | லக்ஷ்மி விஸ்வநாதன் | 50 |
| உன்னை விட உயர்ந்தவள் | கவிதை | ஆண்டாள் பிரியதர்ஷினி | 55 |
| மனத் தூய்மை | சிறுகதை | ராஜலக்ஷ்மி கௌரிசங்கர் | 56 |
| மருத்துவமனையில் மகத்தான சிரிப்புகள் | ஹாஸ்யம் | பாக்கியம் ராமசாமி | 60 |
| சிங்கம்பட்டியும் என் வனத்துறை நினைவுகளும் | பயணம் | கலைமாமணி 'யோகா' | 65 |
| கதை, விதை, கவிதை | கவிதை | லெமன் | 72 |
| மனைவியை வணங்கும் மாமனிதர் | செய்தி | விஜயா கண்ணன் | 73 |
| பெரிய புராணத்தில் மூன்றே பெண்கள் | புராணம் | ம.நித்யானந்தம் | 74 |
| இரு நதிகள் இணைந்தால் | கவிதை | கவிஞர் சாந்தா வரதராஜன் | 80 |
| ஞானம், கல்வி அளிக்கும் ஸ்ரீலட்சுமி ஹயக்ரீவர் | ஆன்மீகம் | சாந்தா வரதராஜன் | 81 |
| மலைகள் சூழ்ந்த மேகாலயா | பயணம் | காந்தாமணி நாராயணன் | 85 |


www.TheMagnet.com

| | | | |
|---|---|---|---|
| தவப்புதல்வர் அப்துல் கலாம் | கவிதை | எம்.ஏ.எம்.தாஜுதீன் | 91 |
| பக்த மீரா | பக்தி | கோ.வெ.கீதா | 92 |
| நின் தாள் வருட..! | கவிதை | சுப்ர.பாலன் | 96 |
| செக் | சிறுகதை | பத்மினி பட்டாபிராமன் | 97 |
| திருமணத் தடைகள் நீக்கும் திருப்புலிவனம் வியாக்ரபுரீஸ்வரர் | ஆன்மீகம் | நித்தியா | 104 |
| அந்தக் காலத்து அழகு தேவதைகள் | சினிமா | மேஜர்தாசன் | 108 |
| நல்லோர் வணங்கும் நந்தாஜி! | நிகழ்வு | வேணு. ராச நாராயணன் | 113 |
| இராமாயண மேளா | பயணம் | பா. பாலதிரிபுரசுந்தரி | 117 |
| புன்னாகவராளி | சிறுகதை | சாந்தா தத் | 121 |
| நினைவு நல்லது வேண்டும் | சுய முன்னேற்றம் | திருப்புகழ் திலகம் மதிவண்ணன் | 127 |
| கூரத்தாழ்வார் | ஆன்மீகம் | லெக்ஷ்மி ஸந்தானம் | 129 |
| பாலைவனச் சோலைவனம் துபாய் | பயணம் | பூமா கஸ்தூரி | 132 |
| நவதிருப்பதிகள் | ஆன்மீகம் | பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன் | 136 |
| கோயில்கள் | ஆன்மீகம் | ஆலப்புழை உமாஹரிஹரன் | 144 |
| நாளை பொற்காலம் | கவிதை | இதயகீதம் ராமானுஜம் | 151 |
| இதயம் பேத்துகிறது | பயணம் | கே.ஜி.ஜவர்லால் | 152 |
| தீபாவளி வாணங்கள் | கவிதை | எஸ்.ஆர்.ஜி.சுந்தரம் | 155 |
| இந்திரா சிவசைலம் விருது பெற்ற இசை இரட்டையர் | சங்கீதம் | சாருகேசி | 157 |
| கல்வி கற்க வைத்த கணவன் | செய்தி | விஜயா கண்ணன் | 160 |
| கணவனுக்கோர் கடிதம் | சிறுகதை | மைதிலி சம்பத் | 161 |
| ஆன்லைன் வர்த்தகம் | சிறுகதை | ரேவதி பாலு | 166 |
| அம்மாவைத் தேடி | சிறுகதை | டாக்டர் ஜெ.பாஸ்கரன் | 170 |
| நூற்றாண்டு அனுபவங்கள்! | அனுபவம் | பி.வெங்கட்ராமன் | 177 |
| மஹா மகளிர் மன்றம் | சிறுகதை | சரோஜா வாஞ்சி | 180 |
| அவன் | சிறுகதை | Dr. ஷ்யாமா சுவாமிநாதன் | 183 |
| மதுரகவியின் தத்தை விடு தூது! | இலக்கியம் | குச்சனூர் கோவிந்தராஜ் | 190 |
| ஆடும் குதிரை | சிறுகதை | ராஜலட்சுமி விக்கிரமன் | 192 |


www.TheMagnet.com



| | | | |
|---|---|---|---|
| சேதுராமன் என்று ஒரு... | சிறுகதை | மாயூரன் | 198 |
| ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவா சரணம் | ஆன்மீகம் | வேதபாரதி வெங்கட்ராமன் | 203 |
| செந்தூரில் ஸ்கந்த ஷஷ்டி | ஆன்மீகம் | ஆர்.பி.வி.எஸ்.மணியன் | 207 |
| அம்மா மாறிவிட்டாள் | சிறுகதை | காந்தலக்ஷ்மி சந்திரமௌலி | 213 |
| அன்றும், இன்றும், என்றும் பெண்! | கட்டுரை | காம்ப்கேர் புவனேஸ்வரி | 216 |
| அரிய நிகழ்ச்சி | சிறுகதை | அஸ்வத் | 221 |
| ஆய கலைகளின் அதிபதி! | ஆன்மீகம் | ஆரூர். ஆர்.சுப்பிரமணியன் | 227 |
| குலவிளக்கும், குத்துவிளக்கும்! | சிறுகதை | குருகுலம் மூர்த்தி | 234 |
| மோதகம் | கவிதை | ஸவ்மித்ரி | 238 |
| அப்பா | சிறுகதை | சுதேவன் | 239 |
| அக்ஷதை | ஆன்மீகம் | பாரதி காவலர் டாக்டர். கே. ராமமூர்த்தி | 244 |
| பாதுகாப்பு வளையங்கள்! | சிறுகதை | சுப்ர.பாலன் | 246 |
| தியாகத்தின் சிகரம்! | இதிகாசம் | முனைவர் சி.ஆர். மஞ்சுளா | 251 |


www.TheMagnet.com


## இதழ் தயாரிப்பு

அலுவலக உதவியாளர்கள் : பி. மூர்த்தி, புவனேஷ்வரி, தனசேகர்
கணினி அச்சாக்கம் : லக்ஷ்மி அசோக்
பக்கங்கள் வடிவமைப்பு : ரகுராஜ், கார்த்திக்
ஓவியர்கள் : பிள்ளை, செந்தமிழ்
புகைப்படங்கள் : கலைமாமணி யோகா
நெகடிவ், பாசிடிவ் : ஸ்பெக்ட்ரா கிராபிக்ஸ்
பாரம் பிரிண்டிங் : முரசு பப்ளிகேஷன்ஸ்
கலர் பிரிண்டிங் : மெர்குரி ஆப்செட் பிரிண்டர்ஸ்
பைண்டிங் : குமார் பைண்டிங்

## வண்ணப்படங்கள்

- ஸ்ரீ கர்ப்பரக்ஷாம்பிகை
- ஸ்ரீ குருவாயூரப்பன்
- ஸ்ரீ இருக்கன்குடி மாரியம்மன்
- ஞானமலை ஸ்ரீ ஞானபண்டித ஸ்வாமி

அட்டைப்பட ஓவியம்: பழம்பெரும் ஓவியர் **கலைமதி**

ஆசிரியர் & வெளியீட்டாளர்:
**கிரிஜா ராகவன்**

60/9, எல்.கே.எஸ். ரெஸ்ட், 7வது அவென்யூ, அசோக்நகர், சென்னை - 600 083.
**போன்:** 2489 8162, 94450 99839 email: girijaragahvan@ladiesspecial.com
girijaraghavanls@gmail.com Website : www.ladiesspecial.com



www.TheMagnat.com

ஜகத் குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சந்திர சேர் சரஸ்வதி

**சங்கராச்சாரிய ஸ்வாமிகள்**

# விகட விநாயகர்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஸ்ரீ சந்திரசேகர் சரஸ்வதி சங்கராச்சாரிய ஸ்வாமிகள்



**வி**க்நேச்வரர் நிறைய விகடம் பண்ணுபவர். அப்பா அம்மா ஸாக்ஷாத் **பார்வதீ பரமேச்வரான்** ஊடல் பண்ணிக் கொண்டு கோபமும் தாபமுமாக இருக்கும் போது அவர் ஏதாவது வேடிக்கை, குறும்பு பண்ணி அவர்களை ஒன்று சேர்த்து விடுவார். **காக்கா**யாகப் போய் **அகஸ்தியரை** விகடமாக ஏமாற்றி நமக்குக் **காவேரி** கிடைக்கும்படிப் பண்ணுவார். பிரம்மசாரியாகப் போய் **விபீஷணரை** ஏமாற்றிக் காவேரி தீரத்தில் **ஸ்ரீரங்கநாதர்** ப்ரதிஷ்டை ஆகும்படி லீலை பண்ணுவார். **கோகர்ண க்ஷேத்ரத்திலே** அவனுடைய அண்ணாவான **ராவணனை**யும் இதே மாதிரி அவர் ஏமாற்றி விளையாட்டுப் பண்ணி தான் **சிவலிங்கம்** பிரதிக்ஷ்டையாகும்படிச் செய்திருக்கிறார். இதெல்லாம் விகடர் பண்ணின அதாவது அவர் விளையாட்டாகப் பண்ணினதே இன்னொருத்தருக்கு வினையாக முடிந்தது. ஆனாலும் ஒரு **அகஸ்தியர், ஒரு ராவணன், ஒரு விபீஷணன்** ஏமாந்தாலும், இந்த லீலைக்கெல்லாம் நோக்கம், இந்த லீலைகளுடைய விளைவு, லோக கல்யாணம்தான். காவேரியும் ஸ்ரீரங்கநாதரும், கைலாஸ லிங்கமும் யாரோ ஒரு தனி மநுஷ்யருக்கு உடைமையாக இல்லாமல் லோகம் முழுதற்கும் ப்ரயோஜனப்படுகிற விதத்தில் அவர் செய்த அருள் லீலை! விகடமாகப் பண்ணி விட்டார்!

**திருத்தலங்களில் விகட விநாயகர்கள்**

'**கள்ளவாரணப் பிள்ளையார்**' என்று அவருக்குத் **திருக்கடையூரில்** திருட்டுப் பேரே இருக்கிறது. தப்புப் பண்ணிய தேவர்களிடமிருந்து அம்ருத கலசத்தை அபேஸ் பண்ணி விட்டு, அப்புறம் அவர்கள் தங்கள் தப்பை தெரிந்து கொண்டு பூஜை பண்ணிய பிறகு அதைக் கொடுத்தவர் அவர். இப்படி அநேக க்ஷேத்ரங்களில் விகடங்கள் பண்ணி, வேடிக்கை வேடிக்கையாய்ப் பெயர் வாங்கியவர்.

'**கடுக்காய்ப் பிள்ளையார்**' என்று இப்படியொருத்தர். திருவாருருக்குத் தெற்கே **திருக்காறாயில்** என்று ஒரு ஸப்தவிடங்க க்ஷேத்ரம். அதாவது தியாகராஜர் ஏழு விதமான நாட்டியமாடும் ஏழு ஸ்தலங்களில் ஒன்று. அந்த ஊருக்கு ஒரு வியாபாரி ஜாதிக்காய் மூட்டைகள் விற்பனை பண்ணுவதற்காக வாங்கிக் கொண்டு வந்தான். ஜாதிக்காய்க்கு வரி உண்டு. அதனால் அவன் 'டோல்கேட்' என்கிற சுங்கச் சாவடியில் கடுக்காய் மூட்டை என்று பொய் சொல்லி - முன்னேற்பாடாக வண்டியில் முன்னாடியும் பின்னாடியும் கடுக்காய் மூட்டைகளும் போட்டுக் கொண்டு வந்திருந்தான். அதனால் அப்படிச் சொல்லி - வரியை ஏமாற்றி விட்டு, கொண்டு வந்து விட்டான். விக்நேச்வரர் நீதி நியாயம் தப்பினால் தண்டனை கொடுத்து விடுவார். அதையும் விகடமாகப் பண்ணி விடுவார். அதனால் நிஜமாகவே ராவோடு ராவாக எல்லா மூட்டைகளில் இருந்ததையும் கடுக்காயாகவே மாற்றி விட்டார். மறு நாள்

www.TheMagnat.com

மூட்டைகளைப் பிரித்து பார்த்த வியாபாரி, "ஐயோ!"னு என்று உட்கார்ந்து விட்டான். அப்புறம் புத்தி வந்து பிள்ளையாருக்கு வேண்டிக் கொண்டு, கடுக்காய் மறுபடி ஜாதிக்காயானால் அதற்குண்டான வரியும், வரிக்கு மேல் அபராதமும் கட்டுவதாக ஒப்புக் கொண்டான். அவரும் மனஸ் இறங்கி கடுக்காயை மாற்றிப் பழையபடி ஜாதிக்காயாகப் பண்ணினார். தித்திக்கும் மோதகப் பிள்ளையாருக்கு அங்கே கடுக்காய்ப் பிள்ளையாரென்று பேர் வந்து விட்டது!

**க**டுக் காய்க்கு நேர் எதிர் கரும்பு. ஒரு கரும்பில்லை. ஆயிரம் கரும்பைப் பெயரில் வைத்துக் கொண்டு, **கரும்பாயிரப் பிள்ளையார்** என்று கும்பகோணத்தில் ஒருத்தர். கும்பேச்வர ஸ்வாமி கோவிலுக்கு வடமேற்கே அவருடைய கோவிலிருக்கிறது. ஏன் அப்படி பேர், என்ன கதை என்றால் ஆதியில் அவருக்கு வராஹப் பிள்ளையாரென்று பெயராம். வராஹ அவதாரத்தின் போது பகவான் அவரை வேண்டிக் கொண்டே பூமாதேவியை **ஹிரண்யாக்ஷனிடமிருந்து** மீட்டுக் கொண்டு வந்ததால் **வராஹப் பிள்ளையார்** என்று பெயராம். அந்தப் பிள்ளையார் கோவில் வாசலில் ஒரு நாள் ராத்திரி ஒரு கரும்பு வண்டிக்காரன் ஆலைக்குச் சரக்கு எடுத்துப் போகிற வழியில் தங்கினானாம். வண்டியில் ஆயிரம் கரும்பைக் கட்டுக் கட்டாக கட்டிப் போட்டிருந்ததாம்.

விக்நேச்வரருடைய வாஸம் கருப்பஞ்சாற்று ஸமுத்ரத்துக்குள்ளே தான். **கைலாஸம், வைகுண்டம்** மாதிரி அவருக்கென்று ஒரு லோகம் உண்டு. ஆனந்த ஸ்வரூபமான அவருடைய அந்த லோகத்தின் பேர் **ஆனந்த புவனம்** என்பது. **மஹாவிஷ்ணு** க்ஷீரஸாகரத்தில் சயனித்துக் கொண்டிருந்தார். **அம்பாள்** அம்ருத ஸாகரத்துக்குள் இருக்கிற **மணி த்வீபத்தில்** இருக்கிறாள். பிள்ளையாருடைய ஆனந்த புவனத்தைச் சுற்றி **இக்ஷுஸார ஸாகரம்**, அதாவது கருப்பஞ்சாற்றுக் கடல் இருக்கிறது. அவர் ரொம்பவும் ஸ்வீட் என்பதைக் கையிலிருக்கும் மோதகம் மட்டுமில்லாமல் அவரைச் சூழ்ந்திருக்கும் பெரிய ஸமுத்ரமே தெரிவித்து விடுகிறது. அவரிடமிருந்தே கருப்பஞ்சாறு மாதிரி மத ஜலம் பெருகிக் கொண்டிருக்கும் என்றும், வண்டுக் கூட்டம் வந்து மொய்க்கும் என்றும் சொன்னேன்.

கருப்பங்கடலுக்கு நடுவிலிருப்பவர் வேடிக்கையாக ஒரு **பாலப்ரம்மசாரி வேஷம்** போட்டுக் கொண்டு வந்து வண்டிக்காரனிடம் ஒரு கரும்பு கேட்டாராம். தர முடியாது என்று அவன் சொன்னானாம். போகிறவர்கள் வருகிறவர்கள், வண்டி நிறைய இவ்வளவு வெச்சுண்டிருக்கே, அந்தக் கொழந்தை வாயைத் திறந்து கேக்கறச்சே ஒண்ணு குடுக் கப்படாதா? என்றார்களாம். ஏதாவது சொல்லித் தப்பித்துக் கொள்ளணுமென்று அவன், இது ஒரு தினுஸுக் கரும்பு. அப்படியே சாப்பிட்டாக் கரிக்கும். ஆலையிலே காச்சி வெல்லம் எடுக்கறப்போ தான் தித்திப்பாகும். என்று அளந்தானாம் "அப்படியா?" என்று அவர்கள் போய் விட்டார்களாம். "அப்படியா?" என்று பிள்ளையாரும் சிரித்துக் கொண்டாராம்.

உங்களுக்கே புரிந்திருக்கும். மறு நாள் அத்தனை கரும்பும் ஒரே கரிப்பாக கரிக்க ஆரம்பித்து விட்டதும் ஆலையில் அவன் கரும்பைக் கொண்டு போய் இறக்கியவுடன் அந்த விஷயம் தெரிந்தது. பிள்ளையார் கோவில் வாசலில் வந்து கரும்பு கேட்ட ப்ரம்மச்சாரி யாரென்று அவனுக்குப் புரிந்தது. ரொம்பவும் பச்சாத்தாபப்பட்டு வேண்டிக் கொண்டானாம். ஸ்வாமியும் அநுக்ரஹம் பண்ணிக் கரும்பெல்லாம் பழையபடி தித்திப்பாக மாறிற்றாம். வராஹப் பிள்ளையார் என்ற பேரும் கரும்பாயிரப் பிள்ளையார் என்று மாறிற்று.

**இ**ப்படி விகட அம்சமிருப்பதாக அநேகக் கதைகள்.

இந்த மாதிரி விளையாடியே அவர் மோக்ஷ பர்யந்தம் எல்லா அநுக்ரஹமும் பண்ணுவாரென்பது ஔவையார் கதையிலிருந்து தெரிகிறது. அவளைத் தன்னுடைய தும்பிக்கையை வளைத்துத் தூக்கி, விகட விளையாட்டாக அதை அப்படியே நீட்டிக் கொண்டு போய் தான் கைலாஸத்தில் தொப்பென்று போட்டிருக்கிறார்.



**கேலிக் கவிதைகள்**

**தா**ன் மற்றவர்களிடம் விகடம் செய்வது மட்டுமில்லை, தன்னை வைத்தும் பக்தர்களான கவிகள் விகடம் பண்ணுவதற்கு நிறைய இடம் கொடுத்திருப்பவர் அவர். சந்திரன் நிஜமாகவே அவரைப் பரிஹாஸம் பண்ணி தண்டனைக்கு ஆளான மாதிரியில்லாமல், "நம்ப பிள்ளையார்" என்று ஸ்வாதீன ப்ரியத்தின் பேரில் நிந்தா ஸ்துதியாகக் கேலி பண்ணினால் ரஸித்துக் கேட்டுக் கொள்வார்.

**கா**ளமேகப் புலவர் இப்படி நிறைய விகடமான சிலேடைக் கவிகள் பாடி இருக்கிறார். ஒரு பாட்டில் அம்பாள் விக்நேச்வரரைப் பெற்றதைக் "கோட்டானையும் பெற்றாள்" என்கிறார். "என்னது? பிள்ளையாரையா இப்படி தூக்கி வாரிப் போடுகிறாற் போலக் கோட்டான் என்கிறார்?" என்றால் இங்கே, 'கோட்டானை' என்றால் 'கோட்டு யானை', அதாவது 'தந்தமுடைய யானை' என்று அர்த்தம் பண்ணிக் கொள்ள வேண்டும். இன்னொரு பாட்டில் அவர் விக்நேச்வரர் மூஷிக வாஹனராக இருப்பதைப் பரிஹாஸம் பண்ணி "ஆனையை எலி இழுத்துக் கொண்டு போகிறதே!" என்று பாடியிருக்கிறார்.

ஔவையுங் கூடத் தனக்குப் பிள்ளையார் கொடுப்பதை விட, தான் அவருக்குக் கொடுக்கிறது தான் ஜாஸ்தி என்று த்வனிக்கிற விதத்திலேயே, தான் நாலு கொடுக்கிறதற்கு ப்ரதியாக அவர் மூன்று கொடுத்தாலே போதும் என்று பரிஹாஸமாகச் சொல்கிற விதத்திலேயே

*பாலும் தெளிதேனும் பாகும் பருப்பு மிவை*
*நாலும் கலந்துனக்கு நான் தருவேன்*
*கோலம்செய் துங்கக் கரிமுகத்து தூமணியே*
*நீயெனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா.*

என்று பாடியிருக்கிறாள்.

அவருக்காக நாம் தலையில் குட்டிக் கொள்வது, தோப்புக்கரணம் போடுவது, சிதறுகாய் போட்டு லபோ லபோ என்று பல வேர் பொறுக்கப் போய் அதிலே சில பேர் ஏமாந்து போவது முதலிய எல்லாவற்றிலுமே ஒரு விகட அம்சம் இருக்கிறது.

**விகட சக்ர விநாயகர்**


தோப்புக் கரணம் என்றதும் ஞாபகம் வருகிறது. அவர் விகடம் பண்ணிய சில க்ஷேத்ரங்கள் சொன்னேன். காஞ்சீபுரத்திலேயே 'விகட சக்ர விநாயகர்' என்ற பெயரில் அவர் இருக்கிறார். தம்பி மூலவராகவுள்ள குமரக் கோட்டத்தில் அந்த விகட சக் ரர் இருக்கிறார். அதென்ன விகட சக்ரர் என்றால், சக்ர பாணியான மாமா விஷ்ணுவிடமும் Practical joke ஆகப் பிள்ளையார் விகடம் பண்ணி இருக்கிறார். ஒரு விநாயக சதுர்த்தியன்று 'மருமான் பிறந்த நாளாச்சே!' என்று மஹாவிஷ்ணு நிறைய ப்ரெஸன்ட்களோடு கைலாஸத்துக்கு வந்தாராம். குழந்தை ஸ்வாமியானால் அந்த ப்ரெஸன்ட்களையெல்லாம் தூக்கிப் போட்டு விட்டு மாமாவின் சக் ரத்தைப் பிடுங்கிக் கொண்டு விட்டாராம். அந்த ஸுதர்சனம் இல்லாமல் மஹாவிஷ்ணு இருப்பாரா? பிள்ளையாரைப் பிடித்து அவரிடமிருந்து திரும்ப வாங்கிக் கொள்ள முயற்சி செய்தாராம். பிள்ளையார் லபக்கென்று அதை வாய்க்குள்ளேயே போட்டு அடக்கிக் கொண்டு விட்டாராம்! மஹாவிஷ்ணு தம்முடைய சதுர்புஜத்தால் இரண்டு காதையும் பிடித்துக் கொண்டு தொப்புத் தொப்பென்று தோப்புக்கரணம் போட்டாராம். அதைப் பார்த்துப் பிள்ளையார் குபீர் குபீரென்று சிரித்தாராம். அப்போது வாயில் அடக்கிக் கொண்டிருந்த சக்ரம் வெளியில் விழுந்து விட்டதாம். விஷ்ணு அதை எடுத்துக் கொண்டு விட்டாராம்.

விஷ்ணுவின் சக்ரத்தைத் தம்மிடம் வைத்துக் கொண்டு விகடம் செய்தவர் தான் விகட சக்ர விநாயகர்.

கஜகர்ணகர் விசிறிக் காதால் வண்டை விரட்டி விளையாடிச் சிரிக்கப் பண்ணுகிறவர். லம்போதரர் தொங்குகிற தொப்பையாலேயே பார்த்த மாத்ரத்தில் சிரிக்கப் பண்ணுகிறவர். விகடர் அநேக தாஷ்கள், சேஷ்டைகள், குறும்புகள் செய்து சிரிக் கப் பண்ணுகிறவர். ஸுமுகராக சிரித்த முகத்தோடு முதல் பேரில் வந்தவருக்கு அடுத்தடுத்து இப்படி மூன்று பேர்கள் - **கஜகர்ணகர், லம்போதரர், விகடர்.**

ஸதா ஏதாவது கஷ்டத்தில் மாட்டிக் கொண்டு தவிக்கிற லோக ஜனங்களை ஸந்தோஷப்படுத்த விக்நேச்வரருக்கு மிஞ்சி தெய்வமில்லை.

**நன்றி: தெய்வத்தின் குரல்**



# அன்றே சொன்னது... அர்த்தமுள்ளது...



**- கவியரசு கண்ணதாசன்**

எந்த மொழியையும் வெறுப்பதன் மூலம் ஒருவன் தாய்மொழிக்கு நன்மை செய்து விட முடியாது. அது மட்டுமல்ல, அவன் தனக்கே துரோகமும் செய்து கொள்கிறான்.

வெறுப்பினால் பிற மொழிகளைப் படிக்காது விட்டு விடுபவன், அற்புதமான கருவூலங்களை இழந்து விடுகிறான்.

வடமொழி, ஆழ்ந்த கருத்துகள் நிறைந்த ஒரு பொக்கிஷம். இரண்டு ஆண்டுகளாக நான் வடமொழியில் பயிற்சி பெற்று வருகிறேன். தமிழைப் போலவே தோன்றிய காலம் தெரியாத அந்த மொழியில் எவ்வளவு அற்புதங்கள் நிறைந்திருக்கின்றன!

வடமொழியைப் படிக்கும் ஆர்வம் ஏற்பட்டதன் காரணமாக, இப்போது பகவத் கீதை விளக்கவுரையைக் கவிதைதமிழிலும் உரை நடையிலும் எழுதியுள்ளேன்.

www.TheMagnat.com

பஜகோவிந்தத்தில் வரும் முப்பத்தொரு பாடல்களையும் விவேக சிந்தாமணியைப் போல சந்தக் கவிதைகளாக்கியுள்ளேன்.

இந்த சுயபுராணம் எதற்கு என்றால் பல மொழி கற்பதில் உள்ள சுகத்தைச் சொல்லவே! தமிழ் மாணவர்களுக்கு ஆங்கிலப் பயிற்சி இருக்கிறது. அவர்களுக்கு வட மொழிப் பயிற்சியும் இருக்குமானால் மற்றவர்களைத் திகைக்க வைக்கலாம். சபையில் நிமிர்ந்து நிற்கலாம்.

முட்டாள்தனமாக வடமொழி செத்த மொழி என்று எவனெவனோ சொன்னதைக் கேட்டு, நான் தான் காலத்தை வீணாக்கி விட்டேன். இன்றைய இளைஞன் உடனடியாக வடமொழி கற்க வேண்டும். ஆங்கிலம் காப்பாற்றாத அளவுக்கு வடமொழி காப்பாற்றும்.



தமிழன் பெயரால் கூப்பாடு போடுவது அரசியல். தமிழ் நமது உயிர். அது போல் வடமொழி நமது ஆத்மா. வெறும் பட்டப் படிப்புப் படித்தவனுக்கெல்லாம் கிடைக்காத வாய்ப்பு, மொழிப் பயிற்சி பெற்றவர்களுக்கு கிடைக்கும்.

**கவியரசர் அன்று சொன்ன கூற்றை இன்று வழி மொழிவோம்....**

**கடவுள் மொழியாம் வடமொழி ஸமஸ்கிருத மொழியைப் போற்றிப் பரப்புவோம்...**

*உங்கள் அன்பு சகோதரன்*

**ஜெ.பாலசுப்ரமணியன்,** FCA LLB



# தமிழுக்குத் தொண்டு

**கவிஞர் மெ.ரூஸ்வெல்ட்**

*கவிஞர் மெ.ரூஸ்வெல்ட் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பேரில் மிகுந்த மரியாதை கொண்டவர். அவருக்காக விழக்கள் எடுப்பதோடு பட்டுக்கோட்டையில் அவர் பிறந்த இடத்திற்கே சென்று அவருக்கு பெருமை தரும் விழாவினை நடத்துபவர். அவருடன் ஒரு சந்திப்பு...*

- **பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பால் தாங்கள் வைத்த ஈர்ப்பு எப்படி ஏற்பட்டது?**

பட்டுக்கோட்டையாரின் பாடல்கள் தான் காரணம். அதில் உள்ள கருத்துக்கள் என்னை ஈர்த்தன. சமுதாய தாக்கத்துடன் இருந்தன. அவரது காதல் பாடல்களிலும் கூட சமுதாய நோக்கம் மிளிர்வதை காண முடியும். மக்களுக்கு நல்வழி கூறுவதாக இருக்கும். அதில் ஒரு கேள்வியும் இருக்கும். அந்தக் கேள்விக்கு ஒரு பதிலும் அந்தப் பாடலிலேயே இருக்கும்.

- **தாங்கள் நடத்தும் பட்டுக்கோட்டையார் விழா பற்றி?**

மக்கள் கவிஞர் அறக்கட்டளை மூலமாக ஆண்டுதோறும் அவர் பிறந்த நாளில் சீர்மிகு விழா எடுக்கிறோம். அறிஞர் ஒருவருக்கு மக்கள் கவிஞர் விருது வழங்குகிறோம். பட்டுக்கோட்டையாரின் புகழ் பரப்புகிறோம்.

- **இன்றைய இளைஞர்களுக்கு தாங்கள் கூறும் அறிவுரை யாது?**


படிக்கும் போது கவனம் செலுத்த வேண்டும். சமுதாய சிந்தனை பெற வேண்டும். படித்து விட்டு நல்ல வேலைக்குப் போனால் போதும் என்ற குறுகிய மனத்துடன் இருக்கக் கூடாது. தன்னால் பிறருக்கு எந்த வகையிலாவது உதவி இருக்க வேண்டும் என்ற பரந்த உள்ளம் வேண்டும்.

- **கருத்துச் சுதந்திரம் பற்றி தங்கள் கருத்து?**

கருத்துச் சுதந்திரம் எல்லோருக்கும் வேண்டும். என் கருத்தை நான் சொல்கிறேன். ஏற்பதும் விலக்குவதும் உனது சுதந்திரம் என்பதே யதார்த்தம். சுதந்திரம் எல்லோருக்கும் பொதுவானது. அதை நாம் மதிக்க வேண்டும்.

- **தங்களுடைய அடுத்த இலக்கிய இலக்கு என்ன?**

அனைவரும் தமிழ் கற்க வேண்டும். திருக்குறள் நமக்கு பாடமாக வேண்டும். திருக்குறள் நம்மை வாழ்வில் உயர்த்தும். பட்டுக்கோட்டையார் தன் பாடல்களில் திருக்குறளை எடுத்துக் கையாண்டு இருப்பார். திருக்குறளுக்காக என்னாலானதை நான் செய்வேன்.



# NAVAJEEVAN BLIND RELIEF CENTRE

(FREE HOME FOR THE BLIND, ORPHAN AND AGED)

TIRUCHANOOR, TIRUPATI-517503.PH:0877-2239992, 9908537528[Mob]

Email: sreenavajeevan@gmail.com website: www.navajeevan.org

## DEEPAVALI GREETINGS - 2016

37 YEARS OF SERVICE TO HUMANITY 1979 – 2016

**OUR SERVICE CENTRES**

| | |
|---|---|
| 1.Navajeevan Schools & Hostels for Blind Children | - Tirupati , Parlekhimundi, Golamunda |
| 2.Navajeevan Free Eye Hospital | - Tirupati |
| 3.Navajeevan Free Home for Aged | - Tirupati, Parlekhimundi & Chennai |
| 4. Navajeevan Dumb & Deaf Home | - Patapatnam |
| 5. Navajeevan Sharanagati Vridhashram | - Tirupati |
| 6. Navajeevan Rural Medical Centre | - Berhampur (Orissa) |
| 8. Navajeevan Eye Care Centres | - Serango & Kalahandi (Orissa) |
| 9. Navajeevan Orphan Children Homes | - Tirupati, Parlekhimundi, Saluru, Golamunda, Berhampur, Pandukal, Vizag & Araku , Dundelmal |
| 10. Navajeevan Veda Vidyalaya [For Atharvan Vedam] | - Brahmapuram |

Our Humble Request for Donation

| | |
|---|---|
| 1. Sponsor one day Annadan to Blind Children and aged people | - Rs. 5000/- |
| 2. Sponsor 4 IOL Cataract Eye Operations | - Rs. 10000/- |
| 3. Sponsor one blind child or Orphan child for one year | - Rs. 6000/- |
| 4. Sponsor one poor aged person for one year | - Rs. 5000/- |
| 5. Sponsor one free eye camp at Rural/Tribal area | - Rs. 50000/- |
| 6. Vidyadan – Educational aid for one Child | - Rs. 2000/- |

Donor devotees can send their contributions by cheque/DD/M.O to the above address on the occasion of birthday, Wedding day or any other special occasions and receive prasadam of Lord Balaji Venkateswara of Tirupati as blessings.

**Contributions to NAVAJEEVAN BLIND RELIEF CENTRE, Tirupati are eligible for Tax Relief U/S 80G of Income Tax Act.**

**"NETRADANAM-MAHADANAM"**

Our Bank details for online transfer :
Bank Name : Indian Bank , Gandhi Road Branch, Tirupati
SB A/c No: *463789382*, **Account Holder : Navajeevan Blind Relief Centre**, Branch Code: T036,
IFSC code: IDIB000T036,

K.Sridhar Acharya
Founder/President

ஸ்ரீமத் வேதாந்த தேசிகர் அருளிய

# கருட தண்டகம்

*தினந்தோறும் இதனை தவறாமல் கூறிவந்தால் பலவகைக் காரியங்களையும் நிறைவேற்றித் தரும் மிகவும் பெருமை பெற்றது இந்தக் கருடதண்டகம்*



*நம: பந்நக நத்தாய*
*வைகுண்ட்ட வச வர்த்திநே*
*ச்ருதி ஸிந்து ஸுதோத்பாத*
*மந்தராய கருத்மதே*

**கருத்து:** பெரும் பெரும் பாம்புகளால் சுற்றப்பட்டவராக மகாவிஷ்ணுவிற்கு அந்தரங்க தாசராக இருந்து எல்லா கைங்கரியங்களையும் செய்பவரே! வேதங்கள் என்னும் பாற்கடலில் இருந்து அமுதத்தை எடுப்பதில் மந்தர மலை போன்றவரும், அழகு மிகுந்த சிறகுகளைக் கொண்டவருமான கருட பகவானுக்கு நமஸ்காரம்.

**கருட மகில வேத நீடாதிருடம்**
**த்விஷத் பீடநோத் கண்ட்டி தாகுண்ட்டவைகுண்ட்ட**
**பீடீக்ருத ஸ்கந்தமீடே**
**ஸ்வநீடா கதிப்ரீத ருத்ரா ஸுகீர்த்தி ஸ்தநாபோக**
**காடோபகூட**
**ஸ்ப்புரத்கண்டக வ்ராத வேத வ்யதா**
**வேபமாநத்விஜிஹ் வாதிபாகல்ப விஷ்ப்பார்யமாண**
**ஸ்ப்படாவாடிக ரத்ந ரோசிச்சடா ராஜி நீராஜிதம்**
**காந்தி கல்லோலிநீ ராஜிதம்**

**கருத்து:** வேதங்கள் அனைத்திலும் இருப்பவர்; பகைவர்களைத் துன்புறுத்துவதில் ஆவல் கொண்டவர்; யாராலும் தடுக்க முடியாத ஆற்றல் கொண்டவர்; பகவானான மகாவிஷ்ணுவுக்கு ஆசனமாகத் (வாகனமாக) தனது திருத்தோள்களைக் கொண்டவர்; (வெளியில் சென்று விட்டு) தம் இருப்பிடத்திற்குத் திரும்பியதும், ருத்திரை- சுகீர்த்தி என்னும் இரு மனைவியரால் நெஞ்சோடு அணைத்துக் கொள்ளப்பட்டவர்; அப்போது மெய் சிலிர்ப்பதால், தம் திருமேனியில் இருக்கும் பாம்புகள் பயந்து போய்ப் படங்களை விரிக்கும் போது, அந்தப் படங்களில் உள்ள ரத்தினங்களில் செக்கச்செவேல் என்று ஒளிக்கற்றைகளை வீசி ஆரத்தி எடுப்பது போல வீச, அந்த ஒளி வெள்ளத்தில் விளங்கும் கருட பகவானைத் துதிக்கிறேன்.

**ஜய கருட ஸுபர்ண தர்வீகராஹார**
**தேவாதிபாஹார ஹாரிந்**
**திவௌகஸ்பதி க்ஷிப்த தம்போளி தாரா கிணா**
**கல்ப**
**கல்பாந்த வாதூல கல்போதயாநல்ப வீராயி**
**தோத்யச் சமத்கார**
**தைத்யாரி ஜைத்ர த்வஜாரோஹ**
**நிர்த்தாரிதோத்கர்ஷ ஸங்கர்ஷணாத்மந்**
**கருத்மந் மருத் பஞ்சகாதீச ஸத்யாதிமூர்த்தே**
**ந கச்சித் ஸமஸ் தே நமஸ் தே புநஸ் தே நம:**

**கருத்து:** அழகான சிறகுகளைக் கொண்ட கருட பகவானே! சர்ப்பங்களை உணவாகக் கொண்டவரே! (தாயின் அடிமைத்தளை நீங்குவதற்காக) தேவேந்திரனின் உணவான அமிர்தத்தைக் கவர்ந்தவரே! அப்போது தேவேந்திரன் வீசிய வஜ்ஜிராயுதத்தால்


லேடீஸ் ஸ்பெஷல்
தீபாவளி மலர் 2016
ஞானமலை ஸ்ரீ ஞானபண்டித ஸ்வாமி

உண்டான தழும்புகளை ஆபரணமாகக் கொண்டவரே! பிரளய காலத்தில் வீசும் பெரும் புயலைப் போல, வீரச் செயல்களால் வெளிப்படும் சாதுரியத்தைக் கொண்டவரே! மகாவிஷ்ணுவின் வெற்றியைக் காட்டும் கொடியில் ஏறி அமர்ந்ததால், நிச்சயிக்கப்பட்ட பெருமையை உடையவரே! சங்கர்ஷணன் வடிவானவரே! ஐந்து விதமான வாயுக்களுக்கும் தேவதைகளான சத்தியர், சுபர்ணர், கருடர், தார்க்ஷ்யர், விஹகேசுரர் என்னும் வடிவங்களைக் கொண்டவரே! உயர்ந்த சிறகுகளைக் கொண்டவரே! வெற்றி கொண்டு விளங்குவீராக! உங்களுக்கு ஒப்பானவன் உலகில் ஒருவனும் இல்லை கருடபகவானே! உங்களுக்கு நமஸ்காரம்! மறுபடியும் நமஸ்காரம்!

**நம இத மஜஹத் ஸபர்யாய**
**பர்யாய நிர்யாத பக்ஷா நிலாஸ்ப் பாலநோத்வேல**
**பாதோ தி**
**வீசீ சபேடாஹதா காத பாதாள பாங்கார**
**ஸங்க்ருத்த நாகேந்த்ர**
**பீடா ஸ்ருணீ பாவ பாஸ்வந் நக ச்ரேணயே சண்ட**
**துண்டாய**
**ந்ருத்யத் புஜங்க ப்ருவே வஜ்ரிணே தம்ஷ்ட்ரயா**
**துப்யம் அத்யாத்ம வித்யா விதேயா:**
**பவத் தாஸ்ய மாபாதயேதா தயேதாச் ச மே**

**கருத்து:** கருட பகவானே! பெரியோர்களால் இடைவிடாமல் செய்யப்படும் பூஜையைப் பெறுபவரே! உங்கள் சிறகுகளில் இருந்து அடிக்கடிக் காற்றுக்கள் வலிமையாய் வீசுகின்றன. அதன் காரணமாகக் கடல்கள் எல்லாம் கரையை மீறிப் பொங்கி எழுகின்றன. அலைகள் எழும்பிப் பாதாளம் வரை ஆழ்ந்து அடிக்கையில், உள்ளங்கையால் ஓங்கி அடித்தாற் போல் இருக்கிறது. அப்போது 'பாம்' என்னும் பெரும் சப்தம் கேட்கிறது. அந்தப் பேரொலியைக் கேட்டு அஷ்டதிக்கஜங்கள் என்னும் எட்டு யானைகளும், மிகவும் கோபம் கொண்டு உங்களை எதிர்த்து வருகின்றன. உங்களுடைய நகங்களின் வரிசையை அங்குசமாகக் கொண்டு, துன்புறுத்தி அந்த யானைகளை அடக்கி விடுகிறீர்கள். பயங்கரமான அலகு, பாம்பு போன்ற புருவம், வஜ்ஜிராயுதம் போன்ற கோரைப்பல் ஆகியவற்றைக் கொண்ட உங்களுக்கு நமஸ்காரம். வேதாந்த வித்தைகள் அடியேனுக்கு வசமாகும்படி, நீங்கள் அருள்புரிய வேண்டும்! உங்களுக்குக் கைங்கரியம் செய்யும்படியான பாக்கியத்தை நீங்கள் கருணை கூர்ந்து எனக்கு அருள் புரிய வேண்டும்.

**மநுரநுகத பக்ஷி வக்த்ர**
**ஸ்ப்புரத் தாரகஸ் தாவகச் சித்ரபாநுப்ரியா சேகரஸ்**
**த்ராயதாம்**
**நஸ் த்ரிவர்க்காப வர்க்க ப்ரஸூதி; பரவ்யோம**
**தாமந்**
**வலத்வேஷிதர்ப்ப ஜ்வலத் வாலகில்ய**
**ப்ரதிஜ்ஞாவதீர்ண**
**ஸ்த்திராம் தத்த்வ புத்திம் பராம் பக்திதேநும்**
**ஜகந்மூல கந்தே முகுந்தே**
**மஹாநந்த தோக்த்ரீம் ததீதா முதாகாம ஹீநா**
**மஹீநா மஹீநாந்தக ந்ரீ**

**கருத்து:** ஸ்ரீ வைகுண்டத்தை இருப்பிடமாக கொண்டவரே! கருடபகவானே! உங்களுடைய மந்திரம் எங்களைக் காத்தருள வேண்டும்! தேவேந்திரனின் அகம்பாவத்தினால் கோபமடைந்த வாலகில்ய முனிவர்களின் வாக்கை நிறைவேற்றுவதற்காக அவதரித்தவரே! பெரும் பாம்புகளையெல்லாம் அழித்தவரே! உறுதியான தத்துவ ஞானத்தை எனக்குத் தந்தருள வேண்டும், உலகங்களுக்கு முதற்காரணமான மகா விஷ்ணுவிடம் எல்லையற்ற பக்தி என்னும் பசுவை அடியேனுக்கு அளித்து, பேரானந்தமாகிய பாலை, அடியேன் அனுபவிக்குமாறு அருள வேண்டும்.

**ஷட்த்ரிம்சத்கண சரணோ**
**நர பரிபாடி நவீந கும்ப கண :**
**விஷ்ணுரத தண்டகோயம்**
**விகடயது விபக்ஷ வாஹிநீ வ்யூஹம்**

**கருத்து:** தண்டகத்திற்குச் சொல்லப்பட்ட இலக்கணப்படி அமைக்கப்பட்ட இந்தக் கருட தண்டகம் விசித்திரமான வாக்கிய அமைப்பு கொண்டது. இந்தக் கருட தண்டகம் எதிரிகளை நிலை குலையச் செய்ய கூடியது.

**விசித்ர ஸித்தித : ஸோயம்**
**வேங்கடேச விபச்சிதா**
**கருடத்வஜ தோஷாய**
**கீதோ கருட தண்டக :**

**கருத்து:** பலவகைக் காரியங்களையும் நிறைவேற்றித் தரும் மிகவும் பெருமை பெற்ற இந்தக் கருடதண்டகம் கருடக் கொடியோனான மகாவிஷ்ணுவின் மகிழ்ச்சிக்காக ஸ்ரீவேங்கடேசன் என்னும் வித்வானால் பாடப்பட்டது. ●

Lady : மே ஐ கமின் டாக்டர்

Dr : வந்துட்டீங்களே உட்காருங்க!

Lady : தேங்க் யூ!

Dr : சொல்லுங்க!

Lady : என்னது?

Dr : என்ன பிரச்னைன்னு சொல்ல சொன்னேன்!

Lady : ஓ! பையனுக்கு ஒடம்பு சரியில்லை!

Dr : பேர் என்னம்மா?

Lady : மஞ்சளா!

Dr : என்னது ஆம்பளப் பிள்ளைக்கு மஞ்சளான்னு பேர் வெச்சிருக்கீங்க?

Lady : டாக்டர் அது என் பேரு!

Dr : பையன் பேர சொல்லுங்கம்மா!

Lady : குஞ்சு!

Dr : மொத்தமே அதுதான் பேரா?

Lady : இல்லை. அது நாங்க வீட்டுல கூப்பிடுற பேர்!

Dr : படுத்தாதீங்கம்மா! பையனுக்கு என்ன?

Lady : லூஸ் மோஷன்!

Dr : எப்படிப் போறான்?

Lady : மஞ்சளா!

Dr : அதான் மொதல்லயே சொல்லிட்டீங்களே பையனப் பத்தி சொல்லுங்கம்மா! பையன் எப்படி வெளியே போறான்னு கேட்டேன்!

Lady : கதவத் தொறந்து வெச்சா போதும் டாக்டர், உடனே ஓடிப்போயிடுவான்!

Dr : அம்மா நீங்க எப்போவுமே இப்படித்தானா!

Lady : இல்ல டாக்டர், சுடிதாரும் போடுவேன்! இன்னைக்கு சாரி கட்டிருக்கேன்!

Dr : கடவுளே! அம்மா, பையன் ஆய், ஆய் அது எந்தக் கலர்ல போறான்னு கேட்டேன்! புரிஞ்சுதா!

Lady : அதுதான் சொன்னேனே, மஞ்சளா!

Dr : ஐயோ, அது உங்க பேருன்னு சொன்னீங்க?

Lady : இல்ல டாக்டர், என் பேரு இல்ல, இவன் மஞ்சளாப் போறான்னு சொன்னேன்!

Dr : ஓ! சாரி! சாப்ட்டானா?

Lady : இல்ல டாக்டர், நல்லவேளை, அதுக்குள்ளே கையைக் கழுவி விட்டுட்டேன்!

Dr : அம்மா, நான் அதக் கேட்கலம்மா! உங்க வீட்டுல வேற யாரும் இல்லையா?

Lady : இல்லைங்க அவரு துபாய் போய் அஞ்சு வருஷம் ஆச்சு!

Dr : என்னம்மா இது பையனுக்கு ரெண்டு வயசு! அவர் ஊருக்குப் போய் அஞ்சு வருஷம்! எப்படி இது? ஸ்கைப்லயேவா!

Lady : சீ! அவர் நடுவுல ஒரு ரெண்டுநாள் வந்திருந்தார்! ஒரு பிரச்னைக்கு!

Dr : வந்தபோது பிரச்னை பண்ணிட்டார் போல! சரி, சொல்லுங்க, என்ன பிரச்னை!

Lady : அது ஒரு சொத்துப் பிரச்னை டாக்டர்!

Dr : அதுக்கு நீங்க வக்கீல்கிட்டதானே போகணும்? இங்க ஏன் வந்தீங்க? நான் பையனுக்கு என்ன பிரச்னைன்னு கேட்டேன்!

Lady : அதுதான் சொன்னேனே, லூஸ் மோஷன்!

Dr : ஓ சாரி!

Lady : அதுதான் சரி பண்ணிடுவீங்களே, அப்புறம் எதுக்கு சாரி?

Dr : ஐயோ ஆண்டவா! பையன் சாப்பிட்டானான்னு கேட்டேன்!

Lady : இல்லை டாக்டர், காலைல ரெண்டு தடவை பால்தான் குடிச்சான்!

Dr : சர்க்கரை எவ்வளவு போட்டீங்க?



# டாக்டர்... பேஷண்ட்... பொறுமை!

சந்திரா

www.TheMagnet.com

**Lady** : **தாய்ப்பாலுக்கு எப்படி சர்க்கரை போடறது டாக்டர்?**

**Dr** : ரெண்டு வயசுப் பையனாச்சே, தாய்ப்பால் இன்னும் கொடுக்கறீங்களா?

**Lady** : **ஆமாம் டாக்டர்! அவன் அவங்க அப்பா மாதிரி!**

**Dr** : என்னம்மா இவ்வளவு பச்சையா ...

**Lady** : **இல்ல டாக்டர், மஞ்சளாப் போறான்!**

**Dr** : அம்மா! நீங்க பச்சையா பேசறீங்கன்னு சொல்லவந்தேன்!

**Lady** : **டாக்டர், நீங்க தப்பா புரிஞ்சுக்கிட்டீங்க! அவங்க அப்பா அஞ்சு வயசு வரைக்கும் தாய்ப்பால் குடிச்சாறாம். நான் அதைச் சொன்னேன்.**

**Dr** : ம்க்கும் எனக்கு இந்த இன்பர்மேஷன் ரொம்பத் தேவை! பையன் ஆவின் பால் ஏதும் குடிச்சானா?

**Lady** : **இல்லை டாக்டர் நான் ஆரோக்யாதான் வாங்கறேன்.**

**Dr** : முருகா! ஏம்மா இப்படி! உங்க வீட்டுக்காரர் எப்பம்மா வருவார்?

**Lady** : **அவர் இன்னும் அஞ்சு வருஷம்கழிச்சுத்தான் வருவார்!**

**Dr** : ம் ...கொடுத்து வெச்சவன்! சரி, நீங்க என்ன சாப்பிட்டீங்க?

**Lady** : **வர்ற வழியில தலப்பாக்கட்டி பிரியாணி!**

**Dr** : ஏம்மா, பையனுக்கு லூஸ் மோஷன், தாய்ப்பால் வேற கொடுக்குறீங்க, பிரியாணி சாப்பிடலாமா?

**Lady** : **ஏன் டாக்டர், புல்லு சாப்பிடுற மாட்டுப் பாலே தர்றோம்! அது மட்டும் பரவாயில்லையா?**

**Dr** : அம்மா! நான் உங்கள மாதிரி மாட்டையெல்லாம் உட்கார வெச்சு அட்வைஸ் பண்ண முடியாது. புரிஞ்சுதா? சரி, எத்தனை தடவை போனான்?

**Lady** : **எங்க டாக்டர்?**

**Dr** : ம்! என் தலை மேல! லூஸ் மோஷன் எத்தனை தடவைம்மா போனான்?

**Lady** : **அப்படிக் கேட்கலாம்ல்ல, என்ன டாக்டரோ! நாலுதடவை!**

**Dr** : தண்ணி மாதிரி போனானா?

**Lady** : **இல்ல டாக்டர், சாம்பார் மாதிரி மஞ்சளா!**

**Dr** : அம்மா, மஞ்சுளா, உங்க சாம்பார் பத்தி நான் கேட்கலம்மா! (சாம்பார் எப்படியிருக்குன்னு கேட்டா என்ன சொல்லுவீங்கன்னு நெனைச்சாலே திக்குங்குது!) இதுக்குமேல நீங்க பேசவே வேண்டாம்! இந்த மாத்திரைய மூணு வேலை தண்ணில கரைச்சுக் குடுங்க! அப்புறம் இந்த பௌடர,

**Lady** : **பூசிவிடவா டாக்டர்?**

**Dr** : ம். ஆமாம், அதுக்கு முன்னால, அந்த எடத்துல fair and lovely கொஞ்சம் பூசிவிடுங்க! சாவடிக்கறீங்களே! நான் என்ன மேக் அப் கிளாசாம்மா நடத்துறேன்? சுடுதண்ணில கரைச்சுக் குடுங்கம்மா! ரெண்டு நாள்ல மோஷன் நிக்கலைன்னா, வந்து காட்டுங்க!

**Lady** : **டப்பாவுல போட்டு எடுத்துக்கிட்டுவரவா டாக்டர்?**

**Dr** : அம்மா பரதேவதே,

**Lady** : **என் பேர் மஞ்சுளா டாக்டர்!**

**Dr** : உங்க பையன் குஞ்சக் கொண்டாந்து காமிங்க! புரிஞ்சுதா?

**Lady** : **மோஷன் பின்னாடிதான போகும், அப்புறம் ஏன் குஞ்ச...?**

**Dr** : அம்மா, உங்க பையன் பேர் அதுதானே!

**Lady** : **இல்ல டாக்டர், அது வீட்டுல கூப்பிடுறது! வெளியில ஹ்ரிதிக் ரோஷன்னு கூப்பிடுவோம்!**

**Dr** : நீங்க லூஸ் மோஷன்னே கூப்பிடுங்க! எனக்கென்ன போச்சு!

**Lady** : **டாக்டர், டயட் சொல்லலியே!**

**Dr** : என்ன எங்கம்மா பேச விட்டே நீ! காலைல மூணு இட்லி, மதியம் ஒரு கப் தயிர் சாதம், ராத்திரி ரெண்டு தோசை அல்லது மூணு இட்லி!

**Lady** : **அவன் அவ்வளவு சாப்பிட மாட்டான் டாக்டர்!**

**Dr** : தாயே, அது உங்களுக்கு! ரோஷனுக்கு மோஷன் நிக்கற வரைக்கும்!

**Lady** : **அப்போ, நைட்டுக்கு வாங்கிட்டு வந்த பார்சல் சிக்கனை என்ன செய்ய?**

**Dr** : உங்க வீட்டுல நாய் இல்லைன்னா, வெளியில நர்ஸ் இருக்கும், அதுக்குக் கொடுத்துடுங்க!

**Lady** : **ஏன், அவங்க உங்க செட் அப்பா?**

**Dr** : கடவுளே, கிளம்பும்மா ப்ளீஸ்!

**Lady** : **டாக்டர் பீஸ்?**

**Dr** : நர்ஸ்கிட்ட கொடுத்துட்டுப் போம்மா!

**Lady** : **அப்போ செட் அப்புதான்! நான் வரேன் டாக்டர்!**

**Dr** : வராதம்மா! தயவு செஞ்சு அப்படியே போய்டு!

நர்ஸ்.. லைட் லாம் ஆஃப் பண்ணுங்க..
HOSPITAL ஒருவாரம் லீவு.. ●

www.TheMagnet.com

# ஞானமலை ஞானபண்டித ஸ்வாமி



முருகப்பெருமான் ஞான சொருபன்; ஞானபண்டிதன். அவன் எத்தனையோ குன்றுகளில் வீற்றிருந்தாலும் ஞானமலை என்ற அருட்தலத்தில் ஆட்சி செய்வது மிகவும் சிறப்பானதல்லவா? இன்று நமக்குக் கிடைத்துள்ள 206 திருப்புகழ் தலங்களில் 33 மலைத்தலங்கள். அவற்றில் ஞானமலையும் ஒன்றாகும்.

அருணகிரிநாதர் சென்று வழிபட்ட ஞானமலை என்னும் திருப்புகழ்த்தலம் 1998ஆம் ஆண்டு வரை இடம் விளங்காதத் தலமாகவே இருந்து வந்துள்ளது. அருணகிரியார் அருளிய திருப்புகழ் முதலான நூல்களுக்கு உரைவகுத்த தணிகைமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளையவர்கள் இதனை இடம் விளங்காதத் தலமாகவே காட்டியுள்ளார். திருப்புகழ் அடியார்களின் விருப்பத்தாலும் வேண்டுதலாலும் ஞானபண்டித சொருபன் தாம் உறையும் ஞானமலையை நமக்குக் காட்டி அருளியுள்ளார்.

வேலூர் மாவட்டம் காவேரிப்பபாக்கத்திலிருந்து சோளிங்கர் செல்லும் வழியில் 14வது கிலோ மீட்டரில் மங்கலம் என்ற ஊருக்கு மேற்கில் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில்



> **தணிகைமலை வரும் வழியில் ஒரு அழகான மலையைக் கண்டான். அங்கே குறவர் மட மகளுடன் இனிதமர்ந்து பொழுது போக்கினான். வேதங்கள் தேடியும் காணாத வேலனின் திருப்பாதங்கள் அங்கே பதிந்தன.**

உள்ளது கோவிந்தச்சேரி என்னும் சிறிய கிராமம். அங்குள்ள மலை மீது அமைந்துள்ள முருகன் கோயில் தான் அருணகிரிநாதர். சென்று வழிபட்டு திருவடிக் காட்சி பெற்ற ஞானமலை என்று அறியும் போது நமக்கு ஆச்சரியமாக உள்ளது.

சுமார் 25 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள பெரியமலை. இம்மலையின் சுற்றளவு இரண்டு கிலோ மீட்டர் தூரம். மலையில் பெரும்பாலும் 'வெப்பாலை' என்னும் 'குடசப்பாலை' மரங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. மலையின் ஒரு புறம் ஒரு சுனை உள்ளது. அதன் மேல்புறம் காளிங்கராயன் கல்வெட்டு ஒன்று பாதிக்கு மேல் அழிந்துள்ள நிலையில் உள்ளது.

"சகல லோகச் சக்ரவர்த்தி வென்று மண்கொண்ட சம்புராயரின் (1322 - 1340) 18-வது ஆட்சியாண்டில் சம்புவராயப் பழரையர் மகன் காளிங்கராயன் என்பவன் இங்கு ஞானமலை மேல்ல உள்ள கோயிலுக்குச் செல்ல படிகளை அமைத்தான்."

இக் காளிங்கராயன் வென்று மண் கொண்ட சம்புவராயர் முதலாம் ராஜ நாராயணன், இரண்டாம் ராஜநாராயணன் முதலிய சம்புவராயர்களின் காலத்தில் தொண்டை மண்டலத்தின் ஒரு பகுதிக்கு அதிகாரியாக இருந்தான். இக் கல்வெட்டினை வேலூர் அரசு அருங்காட்சியகக் காப்பாளர் திரு. காந்தி அவர்களும் காவேரிப்பாக்கம் அரசினர் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் திரு. வெங்கடேசன் அவர்களும் கண்டுபிடித்து 1998ஆம் ஆண்டு மார்ச் மாதம் செய்தித்தாளில் வெளியிட்டிருந்தார்கள். இச்செய்தி தான் பல காலம் வெளியே தெரியாமல் இருந்த திருப்புகழ்பாடல் பெற்ற திருவருள் கொண்டு நமக்கு உணர்த்திய அரிய வாய்ப்பாகும். அத்துடன் அங்குள்ள பல்லவர் காலத்து முருகன் கோயில் திருப்புகழடியார்கள் சென்று தரிசிக்கக் கிடைத்த பெறும் பேறாகும். இக்கோயிலைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்க முதன் முதலில் ஞானமலைக்குச் சென்று வந்தவர் திருவண்ணாமலை திருப்புகழ் அடியார் திரு.வே. முரளிதரன் அவர்கள்.

வள்ளிமலையில் வள்ளியம்மையைக் கரம் பற்றிய கந்தப்பெருமான் அவளோடு இன்புற்று இருக்க அவளைத் திருத்தணிக்கைக்கு அழைத்து வருகிறான். பதி எங்கிலும் இருந்து விளையாடி பல குன்றிலும் அமர்ந்தவன் அல்லவா? எங்கெல்லாம் மலை இருக்கின்றதோ அங்கெல்லாம் மகிழ்ந்து ஆடும் குமரனல்லவா? தணிகைமலை வரும் வழியில் ஒரு அழகான மலையைக் கண்டான். அங்கே குறவர் மட மகளுடன் இனிதமர்ந்து பொழுது போக்கினான். வேதங்கள் தேடியும் காணாத வேலனின் திருப்பாதங்கள் அங்கே பதிந்தன. அந்த ஞானபண்டிதனின் பாதங்கள் பதிந்த புண்ய பூமியே ஞானமலையாகும்.

திருவண்ணாமலையில் திருமுருகனது பாததரிசனம் பெற்ற அருணகிரி நாதர் இம்மலைக்கு வருகிறார். வள்ளிக் கணவனின் திருவடிச் சுவட்டைப் பார்த்து பரவசம் அடைகிறார். மனையவளும், ஊராரும், ஊற்றாரும் தம்மை இகழ்ந்து பரிகசிக்க அதனால் வேதனையும் துக்கமும் அடைந்து, இந்தப் பிறவியை எதற்கு எடுத்தோம் என நொந்து, உலகை வெறுத்து உயிரை விடக் கருதிய போது திருமுருகன் திருவடிகளைக் காட்டித் தம்மை

**சுந்தரம்**

www.TheMagnat.com



www.TheMagnet.com

ஆட்கொண்டது அருணகிரியாரது நினைவுக்கு வருகிறது. அந்தத் திருவடி தரிசனத்தை மீண்டும் கண்டு இன்புற கந்தவேளின் கருணையை வேண்டுகிறார். அடியவர் உயிரைக் காத்த அந்த ஆறுமுகப்பரமன் இங்கே நீலச்சிகண்டியில் ஏறி கோலக் குறத்தியுடன் வந்து காட்சி நல்கி அவருக்கு யோகாநுபூதியை உபதேசித்து திருவடிக் காட்சி அளித்து அனுக்ரஹம் செய்கிறார். "ஆஹா! என்ன அற்புதம்! எனை மனம் உருக்கி யோக அநுபூதி அளித்த பாதம் அல்லவோ இது" என்று ஆனந்தபரவசத்தால் ஆர்ப்பரிக்கிறார்.

மலை அடிவாரத்தில் படிகள் தொடங்கும் இடத்தில் "ஞான சித்தி கணபதி" ஒரு அழகான சிறிய ஆலயத்தில் அருட்காட்சி வழங்குகிறார். தெற்கு நோக்கி அருள்பாலிக்கும் ஞானசித்தி கணபதி நான்கு திருக்கரங்களில் முறையே பரசு, மாங்கனி, கரும்புத்துண்டு, பூங்கொத்து ஆகியவையும் துதிக்கையில் எள் உருண்டையும் கொண்டுள்ளார். அவரை வலம் வந்து தரிசித்து படி ஏறத் தொடங்கலாம். பெங்களூர் அன்பர்களால் மலைப்படிகளில் கைப்பிடி குழாய்த் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது. 150 படிகள் ஏறியவுடன் நமது வலப்புறம் இயற்கையாக அமைந்த கல்லால மரத்தடியில் "ஞான தக்ஷிணாமூர்த்தியை" தரிசிக்கலாம். இச்சிலையை வழங்கியவர் சென்னை மேற்கு மாம்பலம் திரு. ஷி.நாராயண சுவாமி அவர்கள்.

அருணகிரிநாதருக்கு யோகானுபூதி அளித்த தலம் ஆதலால் இங்கு புதிதாகக் கட்டப் பெற்றுள்ள மண்டபம் "அருணகிரிநாதர் யோகானு பூதி மண்டம்" என்னும் பெயரிடப் பெற்றுள்ளது. இங்கிருந்து மலையில் சற்று தூரம் நடந்தால் ஞான பண்டிதசுவாமி திருக்கோயிலை அடையலாம். மலை மேல் மிகச்சிறிய கோயில். முன்புறம் கொடிமரம், பலிபீடம், மயில்வாகனமும் உள்ளன. வெளியே மகாமண்டபம் தாண்டி உள்மண்டபம், அர்த்தமண்டபம் அடுத்து மூலஸ்தானத்தில் முருகப்பெருமான் ஒரு முகம், நான்கு கரங்களுடன் காட்சியளிக்கிறார். பின் இரு கரங்களில் ஜபமாலையும், கமண்டலமும் ஏந்தி முன் வலக்கரம் அபய முத்திரையிலும் முன் இடக்கரம் இடுப்பிலும் உள்ள அமைப்பு. இவ்வடிவை "பிரம்ம சாஸ்தா" என்றழைப்பர்.

ஞானமலை முருகன் மூலவர் பல்லவர் காலத்தில் அமைக்கப்பெற்ற சிலையாகும். ஞானமலைக்கு வந்த முருகனை வழிபடுவோர் கல்வி, அறிவு ஆகியவற்றில் தேர்ச்சி பெற்று பேரறிஞராகத் திகழ்வர்.

ஞானமலை முருகனுக்கு இருபுறமும் வள்ளி, தேவசேனை இருவரும் சுமார் மூன்றடி உயர அமைப்பில் நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றனர். "இமையவர் துதிப்ப ஞானமலையுறை குறத்திபாக இலகிய சசிப்பெண் மேவு பெருமானே" என்று அருணை முனிவர் போற்றிப் புகழும்படி இங்கு ஞானபண்டித சுவாமி ஞானவள்ளி, ஞானகுஞ்சரி சமேதராகத் திருவருளைப் பொழிகின்றார். தெற்கு பிராகாரத்தில் அருணாகிரிநாதருக்கு அருட்காட்சியளித்த குறமகள் தழுவிய குமரன் வடிவம் மிகவும் அற்புதமாக உள்ளது. ●




# உடல் பருமனுக்கு உறுதியான தீர்வு

www.TheMagnet.com

**2009** ஆம் ஆண்டு முதல் கோயமுத்தூர் 2100-திருச்சிரோடு ராஜலட்சுமி மில்ஸ் ஸ்டாப் என்ற முகவரியில் வெற்றிகரமாக பல ஆயிரக்கணக்கான நோயாளிகளை குணப்படுத்தி சாதனை படைத்து வரும் VGM Hospital இந்தியாவிலேயே முதன்முதலாக NABH தரச் சான்றிதழ் பெற்ற முதல் இரைப்பை - குடல் சிகிச்சை மருத்துவமனையாகும். இதன் 30 வருட மருத்துவ அனுபவ சேர்மன் **Dr. V.G. MOHAN PRASAD,** M.D. D.M. (GASTRO) DYIASL, FCCP, FASGE, FRCP(E) FSGEI, FICP அவர்கள் சர்க்கரைநோய், ரத்தக் கொதிப்பு, மாரடைப்பு, மூச்சிரைப்பு போன்ற பல கடும் உடல் நல பாதிப்புகளை உண்டாக்கும் 'உடல் பருமன்' நோய்க்கி அற்புதமான அரிய மருத்துவ கண்டுபிடிப்பினை தந்துள்ளார். அது பற்றி கூறுகிறார்...

"இரண்டரை வருடம் என் நோயாளிகளிடம் பரிசோதனை செய்து உடல்பருமன் முழுங்கால் மூட்டுவலி இருப்பவர்களுக்காகவே எந்தவித பக்கவிளைவுகளும் உண்டாக்காத 'க்ரீன் டீ வித் கார்சினியா எனும் ப்ராடக்டை அறிமுகம் செய்துள்ளேன். இது எங்கள் பரிசோதனையில் உடல் எடையை நிச்சயம் படிப்படியாக குறைத்து காட்டியுள்ளது. வி.ஜி.எம். கிரீன் டீ கார்சீனியா, விஜிஎம். காப்பி என்று இரண்டு உடல் பருமன் உறுதியாக குறைக்கும் பொடிகளாக வழங்குகிறோம். இதனை ஒரு பாக்கெட்டை ஒரு கிளாஸ் தண்ணீரில் கலக்கி சாப்பாட்டிற்கு ஒரு மணி நேரம் முன்னால் சாப்பிட்டால், காலை, மதியம், இரவு மூன்று வேளை குடித்தால் மாதம் இரண்டு கிலோ எடை நிச்சயம் குறையும். இது கொலஸ்ட்ராலை சரி செய்கிறது. பிபியை குறைக்கிறது. சுகரை ரெகுலேட் செய்கிறது. கல்லீரலில் உள்ள கொழுப்பை கரைக்கிறது. இந்த வி.ஜி.எம் கிரீன் டீ, வி.ஜி.எம். கிரீன் காப்பி இரண்டும் இப்போது எங்கள் மருத்துவமனை பார்மசியில் கிடைக்கிறது. 98422 04995 என்ற எண் கைபேசிக்கோ, 0422-2572573 என்ற தொலைபேசிக்கோ அழைத்து விவரம் கேட்டு வாங்கி பலன் பெறலாம். இதனை தமிழகம் முழுக்க விரைவில் கிடைக்க வைக்க போகிறோம்"

டாக்டர் வி.ஜி. மோகன் பிரசாத் உடல்பருமன் குறைப்பு ப்ராடக்டை வாங்கி பயன்படுத்தி மூட்டுவலி இல்லாத நோய் இல்லாத வாழ்வு பெறலாமே?

**- விஜயா கண்ணன்**



# பாபநாசம் திருக்கோயில்கள்

www.TheMagNat.com

நெல்லை மாவட்டத்தில், தாமிரபரணி தரையிறங்கிப் பயணிக்கத் தொடங்கும் இடத்தில் உள்ள பாவநாசத்தை அனைவரும் அறிவர். காவிரிநதி பாயும் தஞ்சை மாவட்டத்திலும் ஒரு பாவநாசம் (பாபநாசம்) உள்ளது.

கும்பகோணத்திலிருந்து பத்து கி.மீ தொலைவில் தஞ்சாவூர் செல்லும் நெடுஞ்சாலையில் உள்ளது பாபநாசம். விவசாயமே இப்பகுதி மக்களின் முக்கியத் தொழிலாகும். நெல், கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலை போன்ற பயிர்களும் இப்பகுதியில் விளைகின்றன. திருவையாற்றில் பாயும் ஐந்து நதிகளில் மூன்று நதிகள் பாபநாசத்தின் அருகில் செல்கின்றன.

பாபநாசத்தில் தொடர்வண்டி நிலையம் உள்ளது. திருக்கருகாவூர், திருவையாறு, கபிஸ்தலம், கண்டியூர் போன்ற பல தலங்களும் பாபநாசத்திற்கு அருகில் உள்ளன. எளிதான போக்குவரத்து வசதிகள் உள்ளன.

பாபநாசத்தின் கிழக்கெல்லையில் திருப்பாலைத்துறை என்ற பாடல் பெற்ற சிவத்தலம் உள்ளது. மேற்கெல்லையில் நூற்றெட்டு சிவலிங்கங்கள் காட்சியருளும் சிவாலயமும் உள்ளது.

**ஸ்ரீஸர்ப்ப விநாயகர்**

பாபநாசத்தில் இருபதாம் நூற்றாண்டின் நிறைவுப் பகுதியில் புதிதாக எழுந்தருளி அருள்பாலிக்கும் அருள்மிகு ஸர்ப்ப விநாயகரின் வரலாற்றை முதலில் காணலாம். பாபநாசத்தின் மையப் பகுதியில் சிவசக்தி காளியம்மனின் திருக்கோயிலில்தான் ஸர்ப்ப விநாயகர் எழுந்தருளியுள்ளார்.

காளியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த திரு. டி.என். இராமசாமி பிள்ளையவர்கள் கடவுள் மறுப்புக் கொள்கையில் பற்றுடையவராக இருந்தார். அருள்மிகு

டாக்டர் ஹேமா சந்தானராமன்

சிவசக்தி காளியம்மனின் தனிப்பெருங் கருணையினால், பிள்ளையவர்கள், தெய்வநெறிக்குத் திரும்பினார்! அவருக்கு தன்னை அறியாமலேயே சிவசக்தி காளியம்மனிடம் பக்தி மேலிட்டது. பல்வேறு திருப்பணிகளையும் சமுதாய நலப்பணிகளையும் மேற்கொள்ளத் தொடங்கினார்.

திரு. டி.என்.இராமசாமி பிள்ளையவர்கள் தன்னுடைய நண்பர்களின் உதவியுடன் சிவசக்தி காளியம்மன் திருக்கோயில் நிர்வாகத்தைச் செவ்வனே செய்து வந்தார். காளியன்னையிடம் ஈடுபட்டு, இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் பிள்ளையவர்களுக்கு ஒரு விநோதமான கனவு தோன்றியது!

பிள்ளையவர்கள் ஒரு மகானுடன் ஒரு திருக்கோயிலுக்குச் செல்கிறார். அங்கு, மூலஸ்தான மூர்த்தியை வணங்கி நிற்கிறார். அப்போது மூலஸ்தான மூர்த்தி சற்றுச் சாய்ந்து தோன்றுகிறது. பிள்ளையவர்களுடன் சன்னதியில் இருந்த மகான், "ஏன் மூலஸ்தானம் சாய்ந்துள்ளது?" என்று கேட்கிறார். அப்போது திருக்கோயில் கருவறையிலிருந்து, "இராமசாமி பிள்ளையை ஸர்ப்ப விநாயகர் வைக்கச் சொல்லியிருக்கிறேன்!" என்று ஓர் அசரீரி கேட்கிறது. அதே நேரத்தில் கருவறையில் ஒரு ஸர்ப்பம் தோன்றி, படமெடுத்து ஆடுகிறது. பிள்ளையவர்களும் அந்த மகானும் திருக்கோயிலுக்கு வெளியே வருகின்றனர். அப்போது ஒரு யானை பிள்ளைவர்களின் அருகில் வருகிறது. அது பிள்ளையவர்களின் தலையின்மீது துதிக்கையை வைத்து ஆசீர்வாதம் செய்கிறது. பிள்ளையவர்களின் கனவில் தோன்றிய இந்தக் காட்சியை எண்ணி அவர் வியந்தார்! ஸர்ப்பம், யானை, அசரீரி ஆகியவை குறித்துச் சிந்திக்க முற்பட்ட பிள்ளையவர்கள் பல பெரியவர்களையும் சந்தித்துப் பேசினார். விநாயகர் தொடர்பான நூல்களையும் ஆராய்ந்தார்.

இறுதியாகப் பிள்ளையவர்கள் காஞ்சிக்குச் சென்ற மாமுனிவரை வணங்கினார். தான் கண்ட கனவைப் பற்றி விளக்கிக் கூறினார். "ஸர்ப்ப விநாயகரைப் பிரதிஷ்டை செய்வதில் தவறில்லை! மேல் விவரங்களைப் புதுப் பெரியவாளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்!" என மகாசுவாமிகள் கூறினார்.

பிள்ளையவர்கள் புதுப்பெரியவாளைத் தரிசித்து விவரம் கூறினார். அவர், ஸ்ரீமடத்து ஸ்தபதியின் ஆலோசனையைக் கேட்டார். ஸ்தபதி, "விநாயகருக்கு முப்பத்திரண்டு வடிவங்கள் உள்ளன. ஆனால், அவற்றுள் ஸர்ப்ப விநாயகர் இடம் பெறவில்லை என்று கூறினார். பிள்ளையவர்களுக்கு இறைவன் அசரீரியாகக் கூறிய ஸர்பப்விநாயகரை, பிரதிஷ்டை செய்வதில் தவறில்லை என்று கூறினார். அத்துடன் விநாயகர் மூர்த்தத்திற்கு ஐந்து தலையுள்ள ஸர்ப்பம் குடைபிடிப்பது போல் அமைக்கலாம் என்று புதுப்பெரியவர் கூறினார்.

தெளிவு பெற்றுப் பாபநாசம் திரும்பிய பிள்ளையவர்கள், கபஸ்தலம் ஸ்ரீசேஷாத்ரி பட்டர் சுவாமிகளிடம் விவரம் கூறினார். பட்டர் அவர்கள் தஞ்சாவூர் முருகன் ஆஸ்ரம சுவாமிகளின் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படச் சொன்னார். அந்த சுவாமிகளும் பிள்ளையவர்களுக்கு ஆசிகள் வழங்கினார்.

மயிலாடுதுறை திரு சந்திரகாசு ஸ்தபதி அவர்கள் ஸர்ப்ப விநாயகர் சிலையை, சிறப்பாக உருவாக்கிக் கொடுத்தார். பாபநாசம் சிவசக்தி காளியம்மன் கோயிலில் தனியான கோஷ்டத்தில் ஸர்ப்ப விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டார். 27-10-1985 அன்று ஸர்ப்ப விநாயகர் கும்பாபிஷேகம் இனிதே நிறைவேறியது.

3-2-1988 அன்று ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளும், ஸ்ரீவிஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளும் பாபநாசத்திற்கு எழுந்தருளி, ஸ்ரீஸர்ப்ப விநாயகரைத் தரிசித்தனர். அன்றே, 'ஸர்ப்ப விநாயகர் தல வரலாறு' என்ற நூலை ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்கள் வெளியிட்டார்கள்.

**ஸ்ரீ ஸர்ப்ப விநாயகர் திருவுருவம்**

பொதுவாக விநாயகர் நான்கு கரங்களுடன் காட்சி அளிப்பார். துதிக்கையும் சேர்த்துக்

கணக்கிட்டு அவரை, 'ஐந்து கரத்தன்' என்று போற்றுவோம். பாபநாசம் ஸர்ப்ப விநாயகர் பத்துத் திருக்கரங்களுடன் காட்சி அளிக்கிறார். ஆக, இவர் துதிக்கையுடன் சேர்த்து, பதினோரு(ஏகாதச) கரத்தனாக விளங்குகிறார்.

பாம்புகளின் முதல்வனாகிய ஆதிசேஷன் ஐந்து தலையால் விநாயகருக்கு உரிய குடையைப் போல் விளங்குகிறார். அவருடைய உடற்பகுதி விநாயகரின் முதுகில் தவழுகிறது. வால் பகுதி, விநாயகரின் திருமலர்ப் பாதத்தில் திகழ்கிறது. ஒரு ஸர்ப்பம் விநாயகரின் அரைஞாண் கயிறாக விளங்குகிறது. மூன்றாவது ஸர்ப்பம், கணபதியின் மார்பில் பூணூலாகத் திகழ்கிறது. இரண்டு ஸர்ப்பங்கள் பெருமானின் கைக் கடகங்களாக விளங்குகின்றன.

பக்கத்திற்கு ஐந்தாக மொத்தம் பத்துக் கரங்களைக் கொண்டுள்ளார். வலப்பக்கக் கரங்களில் சக்கரம், தாமரை, கதாயுதம், ரத்தின கலசம் தன்னுடைய தந்தம் ஆகியவற்றைத் தாங்குகிறார். இடபக்கக் கரங்களில், பாசம், கரும்புவில், நெற்கதிர், மாதுளை, கருநெய்தல் மலர் ஆகியவற்றைத் தரித்திருக்கிறார். இடக்காலை மடக்கியும், வலக்காலைத் தொங்கவிட்டும் அமர்ந்த நிலையில் அரிய காட்சியை அருளுகிறார். ஸர்ப்ப விநாயகரின் திருவடியில் மூஞ்சூறு அமர்ந்துள்ளது.

ஸர்ப்ப விநாயகர் தன்னை வழிபடும் பக்தர்களின் விஷநோய்களை விரைவில் நீக்குகிறார். அதனை அனுபவத்தால் உணர்ந்த பக்தர்கள் அவரை, 'விடம் நீக்கும் விநாயகர்' என்று போற்றுகின்றனர். ஸர்ப்ப விநாயகரையும் சிவசக்தி காளி அம்மனையும் தரிசித்துவிட்டு நாம் ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயிலுக்குச் செல்கிறோம்.

**பாப(வி)நாசம் ஸ்ரீநிவாசப் பெருமாள்**

மூன்று நிலை கோபுரத்துடன் அமைந்துள்ள ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயிலில் நுழைந்தவுடன் கருடபகவான் காட்சியளிக்கிறார். மகாமண்டபத்தில் ஆழ்வார் பெருமக்களும் விஷ்வக்ஸேனரும் எழுந்தருளி உள்ளனர்.

மூலவர் ஸ்ரீநிவாசப் பெருமாள் நான்கு கரங்களுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். சங்கு, சக்கரம் ஏந்தி, அபய வரதக் கரங்களுடன் விளங்குகிறார். ஸ்ரீநிவாசப் பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவி சமேதராகத் திகழ்கிறார்.

ஸ்ரீநிவாசப் பெருமாள் சன்னதியிலேயே தாயார், ஆண்டாள் பிராட்டி, ஆகியோரின் உற்சவ மூர்த்தங்கள் உள்ளன. தேசிகர், இராமானுஜர் இராமபிரான் ஆகியயோரின் உற்சவ மூர்த்தங்களும் உள்ளன.


பாஞ்சராத்ர ஆகமப்படி, தென்கலை வைணவர்களால் இத்திருக்கோயில் வழிபாடுகள் நடத்தப்படுகிறது. பிராகாரத்தில் பங்கஜவல்லித் தாயார், நான்கு கரங்களுடன் மூலவராக அமர்ந்த நிலையில் காட்சியளிக்கிறார். இத்திருக்கோயில் விமானத்தை, 'பாபவிநாச விமானம்' என்று குறிப்பிடுகின்றனர். புண்டரீக தீர்த்தத்தை உடைய பாபநாசம் பெருமாள் கோயில் குடமுருட்டி ஆற்றங்கரைத் திருத்தலங்களில் ஒன்றாகும்.

**பெயர்க் காரணம்**

மாதவராஜா என்ற ஓர் அரசனை, பிரம்மஹத்தி தோஷம் பிடித்திருந்தது. அவ்வரசன் ஸ்ரீநிவாசப் பெருமாளை வழிபட்டான். அவனுடைய தோஷம் (பாவம்) நீங்கிய இத்தலத்தைப் பாப(வி)நாசம் என்று அழைத்தனர்.

பிரம்மஹத்தி தோஷம் நீங்கப் பெற்ற மாதவராஜா என்ற அரசனுக்கும் பாபநாசம் ஸ்ரீநிவாசர் திருக்கோயிலில் ஒரு சன்னதி உள்ளது.

ஜெயங்கொண்ட சோழன் என்ற அரசன் பாபநாசம் ஸ்ரீநிவாசப் பெருமாளிடம் ஈடுபாடு கொண்டவன். பகையரசன் ஒருவன் ஜெயங்கொண்ட சோழனைப் போருக்கு அழைத்தான். பகையரசன் போர்க்களத்தில் சூழ்ச்சிகள் செய்து, ஜெயங்கொண்ட சோழனைக் கொல்லத் திட்டம் தீட்டினான். வீரப்போர் புரியாது, சூழ்ச்சியால் வெல்ல நினைத்த பகையரசனிடம் சிக்காது தன்னைக் காத்திடும்படி, ஜெயங்கொண்ட சோழன் பாபசநாசம் ஸ்ரீநிவாசப் பெருமாளிடம்



வேண்டினான்.

ஸ்ரீநிவாசப் பெருமாள் ஒரு போர் வீரனின் உருவத்துடன், குதிரை மீது ஏறி, போர்க்களம் புகுந்தார். பகையூசனின் சூழ்ச்சியை முறியடித்து, சோழனைக் காத்தருளினார் என்றும் ஒரு வரலாறு உள்ளது.

பாபநாசம் ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயிலில் வைகாசி மாதத்தில் ஆண்டுப் பெருவிழா சிறப்பாக நடைபெறுகிறது.

**பாலைவனநாதர் திருக்கோயில்**

திருப்பாலைத்துறை பாபநாசம் கிழக்கெல்லையில் அமைந்துள்ள தொன்மையான திருத்தலம் ஆகும். தஞ்சை மாவட்டத்தினர், என்பதை, 'எம்பளது' என்பர். திருக்கருகாவூரை 'திருக்களாவூர்' என்பர். அதுபோல், திருப்பாலைத்துறையை 'திருப்ளாத்துறை' என்று கூறுகின்றனர்.

பாலைமரத்தை, தலவிருட்சமாகக் கொண்டதால், இத்தலத்தைத் திருப்பாலைத்துறை என்றனர். இத்தலத்து இறைவனை, பாலைவனநாதர் என்றே அழைக்கின்றனர். இங்கு உறையும் அம்பிகையைத் தூய தமிழில், தவளவெண் நகையாள் என்று குறிப்பிடுகின்றனர்.

அர்ச்சுனன் இந்தப் பகுதியில் வில்வித்தை பயின்றான் என்று கூறுகின்றனர். அதனால், இத்தலத்திற்கு அர்ச்சுனின் ஆசிரியர் துரோணரும் வந்திருக்க வேண்டும். மேலும், துரோணரை விஞ்சிய அல்லது இணையான விற்பயிற்சி வல்லுநர்கள் இப்பகுதியில் வாழ்ந்திருக்க வேண்டும். படைப்புக் கடவுளான பிரமனும் பாலைவன நாதரை வழிபட்டுள்ளான்.

தாருகாவனத்து முனிவர்கள் அபிசார யாகம் என்னும் தீய வேள்வியை நடத்தினர். அதர்வண வேத மந்திரங்களைக்கூறி, விஷ சமித்துக்களை ஹோம குண்டத்தில் இட்டனர். அந்த வேள்விக் குண்டத்திலிருந்து பாம்புகள் வெளிப்பட்டு சிவபெருமானைத் தாக்க முற்பட்டன. அவற்றை ஈசன் அடக்கித் தனக்கு அணிகலனாக ஆக்கிக் கொண்டான். முயலகன் என்ற அரக்கன் வெளிப்பட்டான். அவனை ஈசன் தன் திருவடியில் அடக்கி வைத்துக் கொண்டான். பெருந்தீயை ஏவினர். அதனையும் ஈசன் தன் கரத்தில் தாங்கினான். தீயமந்திரங்களை ஈசன் மீது ஏவினர். அவற்றை ஈசன் தன் உடுக்கையில் அடக்கிவிட்டான். சீறிப்பாயும் கொடிய புலியை ஈசன் மீது ஏவினர். சிவபெருமான் அப்புலியின் தோலை உரித்து ஆடையாக உடுத்திக் கொண்டான்.

தாருகாவனத்தில் வெளிப்பட்ட புலியின்

www.TheMagnet.com



தோலை இறைவன் உடுத்திக் கொண்ட திருத்தலம் திருப்பாலைத்துறையாகும்.

ஓர் அதிசய நெற்களஞ்சியம் இத்திருக்கோயிலில் உள்ளது! 86 அடி அகலமும் 36 அடி உயரமும் உடைய இந்த நெற்களஞ்சியம் சுட்ட செங்கற்களால் கோள வடிவில் கட்டப்பட்டுள்ளது. தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னரால் பதினேழாம் நூற்றாண்டில் கட்டப்பட்டுள்ள இந்தக் களஞ் சியத்தில் 6000 கலம் நெல்லைச் சேமிக்க இயலும். 12 தஞ்சாவூர் மரக்கால் நெல், ஒரு கலம் ஆகும்.

திருப்பாலைத்துறை என்ற ஒரு சிறிய கிராமத்தில் அத்துணை நெல் சேமிக்கப்பட்டது! காவிரி நீர் தட்டுப்பாடு இல்லாமல் கிடைத்த அந்தப் பொற்காலம் மீண்டும் மலர்ந்திடத் திருப்பாலைத்துறை ஈசனை வேண்டுவோம்.

**இராமலிங்கர் திருக்கோயில்**

பாபநாசத்தின் மேற்கெல்லையில் அமைந்துள்ளது இராமலிங்கர் திருக்கோயில். கரன், தூஷணன் என்ற இரண்டு அரக்கர்களை ஸ்ரீராமர் வதம் செய்தார். பிரமனின் குலத்தில் தோன்றிய அவ்வரக்கர்களைக் கொன்றதால் இராமருக்கு, பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டது. பகவானைப் பாப புண்ணியங்கள் பற்றாது. எனினும், மனிதனாகவே வாழ்ந்து காட்டிய ஸ்ரீராமர் பிரம்மஹத்தி தோஷம் நீங்கப் பரிகாரம் செய்ய விரும்பினார்.

ஸ்ரீராமர், பாபநாசத்தில் 108 சிவலிங்கங்களைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டார். இராமர், கர-தூஷணரை வதைத்த பாவம் நீங்கப் பெற்றதால், இத்தலம், பாபநாசம் என்று பெயர் பெற்றது என்பர்.

முன்னோர்கள் செய்த பாவங்கள் சந்ததியினரைப் பாதிக்கும் என்பது ஐதீகம். இத்தலத்தில் பக்தர்கள் தங்கள் முன்னோர்களின் பாவங்கள் நீங்கவும் பரிகாரங்கள் செய்கின்றனர்.

மேற்கு நோக்கிய நிலையில் 108 சிவலிங்கங்களும் கருவறையில் எழுந்தருளியிருப்பது இத்தலத்தின் தனிச் சிறப்பாகும். இராமர், இராமேஸ்வரத்தில் சிவவழிபாடு செய்தது போல், இங்கும் வழிபட்டனர். அதனால் இத்தலத்தைக் கிழக்கு இராமேஸ்வரம் என்றும் குறிப்பிடுகின்றனர். இங்கு உறையும் அம்பிகையின் பெயரும் பர்வதவர்த்தனிதான்!

இராமபக்த அனுமார் பிரதிஷ்டை செய்து வழிபட்ட, 'ஹனுமந்த லிங்கம்' வெளிச்சுற்றில் உள்ளது. அகத்தியரின் அறிவுரைப்படி, ஸ்ரீஇராமர் இங்கு, காமதேனுவை பூஜித்தார். அதனால் இங்கு பிரதோஷ நாட்களில் காமதேனுவுக்கும் வழிபாடுகள் நடக்கின்றன.

இத்திருக்கோயிலில் காசி விஸ்வநாதர், அன்னபூரணி, காலபைரவர் ஆகியோரும் எழுந்தருளியுள்ளனர். இங்கு, கருவறை மூர்த்தங்களைத் தவிர, மற்ற தெய்வங்களைப் பக்தர்கள் தாங்களே வழிபடலாம்.

பாபநாசம் திருக்கோயில்களைத் தரிசித்த நாம், காசி-இராமேஸ்வர யாத்திரையை மேற்கொண்டது போன்ற மனநிறைவுடன் திரும்புகிறோம்! ●

www.TheMagnet.com



# முறையான தீபாவளி

www.TheMagnaf.com

பண்டிகை என்பது நமது பண்பாட்டையும், பக்தியையும் பிரதிபலிக்கும் நாள். உலகமே கொண்டாடும் பண்டிகையான தீபாவளியை ஏன் கொண்டாட வேண்டும் என்ற உண்மை நம்மில் பலருக்கும் மறந்தே போய் விட்டது. உண்மையிலே ஏன் இந்த தீபாவளி? இதை எப்படி கொண்டாட வேண்டும்? என்பதைப் பற்றி சிந்திக்கலாம் வாருங்கள்.

தீபாவளி என்றால் உலகம் அறிந்த கதை ஒன்று தான். அது நரகாசுரனை கொன்றதற்காக தீபாவளி என்பது. ஒரு பண்டிகை என்பது ஒரு அரக்கனை கொன்றதற்காக கொண்டாட ஆரம்பித்தால் இரணியன், இராவணன், கம்சன், இடும்பன், பகன், துரியோதனன், அந்தகாசூரன், இரண்யாட்சன் இப்படி பல ஆயிரம் அசுரர்கள் அழிந்தார்களே அந்த நாளை எல்லாம் கொண்டாட ஆரம்பித்தால் எல்லா நாளும் நமக்கு தீபாவளியே!

தீபாவளி அன்று பலருக்குப் பிறந்த நாள் வருகிறது அல்லவா? அது போலத் தான் நரகாசுரன் இறந்தது தீபாவளி அன்று. அவன் இறந்ததற்காக தீபாவளி அல்ல என்பதை முதலில் நினைவில் கொள்ள வேண்டும். நரகாசுரன் வாழ்ந்தது துவாபரயுகத்தில், அது 3வது யுகம். ஆனால் தீபாவளி கொண்டாட்டத்தைப் பற்றி கிரேதாயுகமான

**தேச.மங்கையர்க்கரசி**

முதல் யுகத்திலேயே பேசப்பட்டுள்ளதே. எனவே தீபாவளி முதல் யுகத்திலேயே உண்டு. கந்தபுராணம் நடந்தது முதல் யுகத்தில். அந்த கந்தபுராணத்தின் ஏழாவது காண்டமான உபதேச காண்டத்தில் சிவபெருமானின் எட்டு விரத நாட்கள் பற்றிக் கூறுகிறது.

அவை

1. சோமவாரம்
2. உமா மகேஸ்வர விரதம் (கார்த்திகை மாதம் பௌர்ணமி)
3. திருவாதிரை (மார்கழி)
4. சிவராத்திரி (மாசி)
5. கல்யாண விரதம் (பங்குனி உத்திரம்)
6. பாசுபத விரதம் (தைப்பூசம்)
7. அஷ்டமி விரதம் (வைகாசி பூர்வபட்ச அஷ்டமி)
8. கேதாரகௌரி விரதம் (தீபாவளி)

இறைவன் ஜோதிமயமானவர், அவரை தீபங்களின் மூலம் வழிபடுவது சிறப்பு. **தீபம் - விளக்கு ; ஆவளி - வரிசை.** விளக்குகளை வரிசையாக வைத்து வழிபடும் நாளே தீபாவளி. இந்த உண்மையை உணர்த்தும் பாடல் இதோ.

www.TheMagnet.com

***"தொல்லைவல் வினைகழித்துத்***
***தருஞ்சோமவாரமா திரை நோன்பன்றிப்***
***புல்லியவு மாமகேச் சுரஞ்சிவராத்***
***திரிமுறையில் பொருத்த நோற்கப்***
***பல்வினையுந் தொலைந்திடுகே***
***தாரமணவிரதமிவை பரமநோன்பு***
***கொள்ளுறு சூற் படைவிரத மெனுமெட்டுஞ்***
***சிவ விரதங் குணிக்குங்காலே"***

**கௌரி**யான அம்பாள் மேற்கொண்ட விரதம் என்பதால் **கேதார கௌரி** விரதம் ஆனது. இதை எப்படி முறைப்படி கொண்டாடுவது? ஐப்பசி மாதம் வரும் அமாவாசைக்கு முந்தின நாள் சதுர்த்தசி அன்று நீராடி, தூய உடை உடுத்தி நெல்லின் மீது நிறைகுடம் வைத்து, மாவிலை தருப்பை வைத்து, சிவபெருமானை அதில் ஆவாகனம் செய்து அர்ச்சித்து, தீப தூப ஆராதனை செய்து வழிபட வேண்டும். நூலை 21 இழையாக மடித்துக் கையில் காப்பாக அணிந்து கொள்ள வேண்டும்.

மறுநாள் அதாவது அமாவாசை (தீபாவளி) அன்று அதிகாலை 3 மணி முதல் 4.30 மணிக்குள் தலைக்கு எண்ணை, அரப்பு வைத்து சுடுநீரில் நீராடி விளக்குகளை வரிசையாக அடுக்கி, தீபமேற்றி, பல வகையான பலகாரங்கள், புத்தாடை, பட்டாசு என அனைத்தும் படையலிட்டு, மின்சார விளக்குகளை அணைத்து விட்டு தீப ஒளியில் இறைவனை வழிபட வேண்டும். பின் காப்பை அவிழ்த்து விட்டு உணவு உண்டு விரதத்தை பூர்த்தி செய்யலாம். இப்படி செய்வதே தீபாவளியின் சரியான வழிபாட்டு முறை.

விரதம் இருந்து பழக்கமில்லாதவர்கள்



அமாவாசை அன்று மட்டும் தீபாவளியை கொண்டாடலாம். அந்த நேரத்தில் (காலை 3 மணி முதல் 4.30 மணிக்குள்) சுடுநீரில் கங்கையும், எண்ணெயில் மகாலெட்சுமி, அரப்பில் சரஸ்வதி தேவி, புத்தாடையில் யோகியர், பண்டங்களில் அமிர்தம் இவையெல்லாம் வாசம் செய்யும் நேரம். எனவே தான் "தீபாவளி அன்று குளியல் ஆச்சா? எனக் கேட்க மாட்டார்கள், கங்காஸ்தானம் ஆச்சா?" என்று தான் கேட்பார்கள்.

தன்னைத் தேடி வர முடியாத மனிதர்களுக்காக வருடத்தில் ஒரு நாள் நானே வருகிறேன் என்று நமது வீட்டு சுடுநீரில் கங்கை வாசம் செய்கிறாள். அன்று முறைப்படி நீராட, கங்கையில் நீராடிய பலன் வரும். வீட்டில் உள்ள எல்லோரையும் வணங்கி விட்டு வந்து வீட்டின் பெரியவர்கள் தரையில் 3 முறை எண்ணெய், சீயக்காய் சிறிது வைத்து பூமி தேவியை வணங்கி அதை எடுத்து வரிசையாய் எல்லோர் தலையிலும் தடவ வேண்டும்.

பிறகு எல்லோரும் சுடுநீரில் தான் நீராட வேண்டும். சிலர் நீராடிய உடன் புத்தாடை அணிவர், பலர் படைத்து விட்டு அணிவர். எப்படி முறையோ அப்படி அணியலாம். படைத்து விட்டு அணிவதே சிறந்தது. காலை 4.30 மணி முதல் 6 மணிக்குள்ளாக பூஜை அறையில் அகல் விளக்குகளால் நிறைய தீபம் ஏற்ற வேண்டும். அவரவர் வசதிக்கு தகுந்தாற்போல் 24, 30, 42, 50, 60 என ஏற்றலாம். அதில் ஒரு விளக்காவது கண்டிப்பாக நெய் தீபம் இருக்க வேண்டும்.

மூன்று இலை போட்டு வெற்றிலை பாக்கு, பழங்கள், இனிப்பு, கார வகைகள், இட்லி, தோசை, சட்னி, சாம்பார் என உணவு வகைகள், வடை, சுழியம் போன்ற பதார்த்தங்கள், புத்தாடை, பட்டாசு என அனைத்தும் வைத்து இறைவா இந்த தீப ஒளியில் எப்படி இருள் மறைந்ததோ அது போல் உனது கருணை ஒளியால் எங்கள் வாழ்வில் உள்ள இருள் அனைத்தும் நீங்கி மகிழ்வு நிலைக்க வேண்டும் என பிரார்த்தித்துக் கொள்ளவும்.



தீப தூப ஆராதனை செய்து, வீட்டில் உள்ள பெரியவர்களை வணங்கி அவர்கள் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்று, புத்தாடையும் பெற்றுக் கொண்டு, புத்தாடை அணிந்து, பட்டாசு கொளுத்தி, உணவு உண்டு மகிழ்வதே முறையான தீபாவளிக் கொண்டாட்டம். தீபாவளி அன்று கண்டிப்பாக அசைவ உணவுகள் சாப்பிடக் கூடாது. தீபாவளி விரத நாள் ஆகையால் அன்று சைவ உணவே உண்ண வேண்டும்.

என்றைக்குமே சைவமே உயர்ந்த உணவு. மற்ற நாட்களில் அசைவம் உண்பவர் ஆனாலும் தீபாவளி அன்று சைவம் தான் சாப்பிட வேண்டும். அன்று அசைவ உணவு உண்பது மிகப் பெரிய பாவச் செயலாகும். இதை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். "இந்த அற்பமான உடலை வளர்க்க இன்னொரு உயிரைக் கொன்று தான் வளர்க்க வேண்டுமா? அப்படி உண்பவனுக்கு அருள் கிடைக்குமா?" என்கிறார் வள்ளுவர்.

***"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா***
***னெங்ஙன மாளு மருள்."***

நாம் அனைவரும் தீபாவளியை மகிழ்வாக கொண்டாடும் போது நம்மை விட கீழ் நிலையில் உள்ளவர்களுக்கு உதவ வேண்டும். ஏழைக்கு ஒரு துண்டாவது எடுத்துத் தந்து உதவினால், அது நமது குழந்தைகளுக்கு தர்மம் செய்யும் குணத்தை மேலோங்கச் செய்யும். அற வழியில் தீபாவளியை கொண்டாடி மகிழ்வோம். ●

www.TheMagnet.com



# சித்தர்கள் போற்றும் கற்பின் ஆற்றல்!

*சபித்தாய் நீ கொக்கை என்று,*
*தனிக்கோபம் பெண்ணின்மேலே!*
*எரித்தாய் நீ ஏறாதேனோ?*
*விதமென்ன ஊணிப்பாரு!*
*ஒன்றினாள் பர்த்தா மேலே,*
*ஓங்கிய மனவே கத்தை*
*பன்றினாள் மனதில் உள்ள*
*பல நினை வெல்லாம் விட்டாள்*
*கன்றினாள் ஏதும் பாரான்*
*கற்பிற்கு வகுத்த வாரே!*

(கொங்கணர் வாத காப்பியம் - 3000 - மூன்றாம் காண்டம் - பாடல் - 238 முதல் 239 வரை சுருக்கம்)

கொங்கணரைப் பார்த்து, அவரது முப்பாட்டன் திருமூலர் கூறுகின்றார் "சித்தனே! அன்றொரு நாள் ஒரு பெண்ணின் மேல் சினம் கொண்ட நீ, கொக்கை எரித்தது போல அவளையும் எரித்து விட நினைத்தாயே, முடிந்ததா? இல்லையே! ஏன்? ஊணிப்பாரு" - அதாவது. ஆழ்ந்து சிந்தித்துப் பாரு, புரியும், என்று கூறிய அவரே உரிய பதிலையும் சொல்லியுள்ளார். அது குறித்து இனி, இங்கு பார்ப்போம்.

"நெருப்பையும் கரையான் அரிக்குமோ?" - அரிக்காது! அது மட்டும் அல்ல; நெருப்பில் துருவும் பிடிக்காது. அதனால் தான் கற்பிக்கு நெருப்பை ஒப்பிட்டுக் கூறினர் - நமது ஆன்றோர்.

"கற்பு" என்பது ஆண் - பெண் இரு பாலருக்கும் பொதுவே. ஆனாலும், அது பெண்களுக்கு அணிகலன்களாகவும், ஆயுதமாகவும், பாதுகாப்பு அரணாகவும், நின்று அவர்களுக்குப் பேரழகைத் தருகின்றது.



உங்கள் குழந்தைகளின் கனவுகள் எதுவாகவும் இருக்கலாம்!
அதை நிறைவேற்றுவதற்கான
உங்களின் முதலீட்டு திட்டம் சரியானதாக இருக்க வேண்டும்.
DTCP
Approved Plots
கூடுவாஞ்சேரி அருகில்
LAND LOAN AVAILABLE
www.TheMagnat.com
ஸ்ரீ சத்யசாய் நகர்
மனைப்பிரிவின் சிறப்பம்சங்கள்
• கூடுவாஞ்சேரி – திருப்போரூர் இணைக்கும் நெடுஞ்சாலைக்கு அருகில்
• பிரசித்தி பெற்ற பள்ளிகள் (DAV, Velammal Vidhyashram & Sri Ma Vidhyalaya) சுற்றியுள்ள வீட்டுமனைப் பிரிவு
• 10 நிமிட பயண தூரத்தில் கூடுவாஞ்சேரி இரயில் மற்றும் பேருந்து நிலையம்
• சுற்றுசுவர், தார்சாலை மற்றும் நிழல் தரும் மரங்களுடன் கூடிய வீட்டுமனைப் பிரிவு
More DTCP Approved Plots Available at
SRIPERUMBUDUR
ORAGADAM
SP KOIL
SUNGUVARCHATRAM
KANCHIPURAM
WALAJABAD
Wisdom properties
sign of prosperity
www.wisdomproperties.com
044-2238 0000
93606 93606
93607 93607

C1



www.TheMagnet.com

C2



www.TheMagnat.com

Wish You All A Very Happy Diwali

# CHENNAI DRIPTECH PRIVATE LIMITED

*Import Industrial Cranes*

# MAGA GANAPATHE CONSULTANTS & SERVICES (INDIA) LIMITED

# SVAP GROUP OF COMPANIES


*Property Developers*

www.TheMagnat.com



**Rtn. C. MUTHUSAMY, B.A., B.L.,**

No. 19/15, Kumarappa Street,
Nungambakkam, Chennai-600034.
**Ph** : 044-2822 1515
**Mobile** : 94440 61166 / 98418 77777
**Email :** chinnamuthu2004@yahoo.co.in


Agam Organics
நெய்
பசு நெய்
பாரம்பரிய நெய்
தேன்
மலைத் தேன்
மாவு
சம்பா ரவை
சுஜ்ஜி ரவா
கோதுமை ரவா
சேமியா
மாவு
ராகி மாவு
மைதா மாவு
அரிசி மாவு
கடலை மாவு
உளுந்து
பாசிப்பருப்பு
பொரிக்கடலை
கடலை பருப்பு
மிளகு
வெந்தயம்
கடுகு
சோம்பு
சீரகம்
மிளகாய்
மலபார் புளி
சிறுதானியம்
தினை
வரகு
சாமை
குதிரைவாலி
கடுக்காய்
புதினா
சிறுதானியம்
கம்பு
ராகி
சோளம்
பனிவரகு
மூங்கில் அரிசி
சர்க்கரை
நாட்டுச் சர்க்கரை
அச்சு வெல்லம்
சர்க்கரை
கருப்பட்டி
பனைசர்க்கரை
தென்னஞ்சர்க்கரை
அரிசி
இட்லி அரிசி
மசாலா
AGAM ORGANICS
19, South Raja Street,
Alandur, Chennai - 600 016.
Mobile : 8754060097
சுத்தமான
பாரம்பரிய நாட்டுப்பசு
நெய், மலைத்தேன் மற்றும்
மரச்செக்கில் ஆட்டிய
எண்ணெய் கிடைக்கும்.
சென்னை
மற்றும் மதுரையில்
டோர் டெலிவரி
செய்யப்படும்
Email: agamorganics@gmail.com | Web: www.agamorganics.com

# தீபாவளி நல்வாழ்த்துக்கள்



**திரு. ரூஸ்வெல்ட்**

தலைவர்,
ரஷ்ய கலை இலக்கிய கழகம்,
சென்னை

www.TheMagnat.com





www.TheMagnet.com

# KRISHNA ASSOCIATES

(A UNIT OF KRISHNA TRADING ASSOCIATES PVT LTD)

## BATH FITTINGS & ACCESSORIES
## SANATERYWARE / TILES



www.TheMagnat.com

ESSESS BATH FITTINGS asianpaints Smart Like You

American Standard LIXIL GROUP

hindware

GROHE

WovenGold

Kriztle

Kajaria

Sicagen

No: B-184/2, 11th Avenue, Ashok Nagar, Chennai - 600083.

Ph: 044 - 4203 3042

E-mail : 1krishnaassociates@gmail.com / krishnaassociates2002@gmail.com

Web : www.kta.co.in

அந்த வகையில் ஒரு பெண் **(அனுசூயா)** தேவர்கள் மூவரையும் பச்சிளங்குழந்தைகளாக மாற்றி இருக்கிறாள். வேறொரு பெண் **(சத்யவான் சாவித்திரி)** எமனிடமிருந்தே தன் கணவனை மீட்டுக் கொண்டு வந்திருக்கிறாள். இன்னும் ஒரு பெண் (கண்ணகி) மதுரை மாநகரையே தீக்கு இரையாக்கி இருக்கிறாள்.

பெண்களின் கற்பிற்கு இவ்வளவு ஆற்றலா? ஆம் உண்டு! ஆனாலும், ஈரேழு - பதினாறு உலகங்களிலும் சென்று புகழ்க் கொடி நாட்டிய திருமூலர் பரம்பரையில் வந்த கொங்கணவர், இதை எல்லாம் மறந்து விட்டு, ஒரு நாள், வள்ளுவரின் மனைவி வாசுகி அம்மையாரிடம் எக்குத்தப்பாக (வசமாக) மாட்டிக் கொண்டார்.

அதாவது, அவர் ஒரு நாள் ஒரு வீட்டின் வாசலில் போய் நின்று கொண்டு தனக்கு உணவு தரும்படி கேட்டார். தற்செயலாக அந்த வீடு, வள்ளுவர் மற்றும் வாசுகி அம்மையார் இவர்களின் வீடாக இருந்தது. ஆனால், கொங்கணருக்கு அது தெரியாது.

அந்த நேரம் பார்த்து வாசுகி அம்மையார் தன் கணவருக்கு உணவு பரிமாறிப் பணிவிடைகள் செய்து கொண்டிருந்ததால் முனிவருக்கு உணவு கொண்டுவருவதில் சற்றுதாமதமாகி விட்டது.

சித்தர் சினம் கொண்டார். அம்மையாரைப் பார்த்தார். பார்த்த பார்வையில் நெருப்புப் பொறிகள் பறந்தன. அன்றொரு நாள் கொக்கைத் தாம் எரித்த போது சினந்து பார்த்தாரே அதே பார்வை.

அவரது அந்தப் பார்வையின் ஆழத்தை அம்மையார் நொடிப் பொழுதில் புரிந்து கொண்டார். கொங்கணர் கொக்கை எரித்த அந்தக் கதை அம்மையாரின் மனத்திரையில் நொடிப் பொழுதில் தோன்றி மறைந்தது. உடனே அம்மையாரின் முகத்தில் சின்ன ஒரு குறுநகை மட்டும் தோன்றி மறைந்தது.

அம்மையார் கேட்டார், "கொக்கென்று நினைத்தாயோ - கொங்கணவா?" என்று அவரது இந்தக் கேள்வியில் கொஞ்சம் கூட ஆணவமோ, ஆத்திரமோ இல்லை. மாறாக அசைக்க முடியாத தன் நம்பிக்கை மட்டுமே குடி கொண்டிருந்தது.

ஆனால், இதற்கிடையில் வாசுகி அம்மையாரை நேரில் பார்த்த கொங்கணர், "அம்மையார் சாமானியமானவர் அல்ல" என்ற உண்மையை உடனடியாகப் புரிந்து கொண்டார். கூடவே வியந்தும் போனார்.

ஏனென்றால், தாம் கொங்கணர் என்பதையும், தாம் கொக்கை எரித்த விவரத்தையும் அம்மையார் தெரிந்து கொண்டிருப்பது மட்டுமல்லாமல், கைலாயப் பரம்பரையில் வந்த தம்மை, ஒருமையில், "நீ" என்றல்லவா குறிப்பிட்டுப் பேசினார் என்பது தான் அவரது வியப்பிற்குக் காரணம்.

அதே நேரம், தாம் அங்கு சினந்து, நின்றது தவறு தான் என்பதையும் முனிவர் உணர்ந்து கொண்டார். இங்கு நாம் ஓர் உண்மையை உற்றுணர்ந்து பார்க்க வேண்டும்.

பொதுவாக சித்தர்கள் சினந்து சாபமிட்டால், அண்டரண்டங்களும் தீயாய் வேகும் என்பார்கள். அதைத் தான் சட்டை முனி நாயனார் தமது "ஞானம் - 4ல் (பெரிய ஞானக் கோவை, பக்கம் - 197ல்) கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

***"தானென்ற மேருவைத்தான் பூஜை செய்வார்***
***சாபமிட்டால் அண்டரண்டம் தீயாய் வேகும்"***

என்று

அப்படித்தான் கொங்கணரும் பிரயோகித்தார் - ஆனால் அது பயனற்றுப் போயிற்று. காரணம், அம்மையாரின் பதிபக்தியும் கற்பும் அவருக்கு தவ ஆற்றலையும் மிஞ்சும் ஒப்பற்ற ஓர் ஆற்றலைத் தந்திருக்கிறது.

அப்படிப்பட்ட மனைவியைத் தெரிந்தெடுத்துக் கொண்ட வள்ளுவரின் பெருமையை இந்த உலகம் எப்படிப் பாராட்டி மகிழ்கிறது தெரியுமா? பாருங்கள்

***"தம்பி வாய்த்தது இராமனுக்கு***
***தாரம் வாய்த்தது வள்ளுவர்க்கு"*** என்று

**மு.க.ராக்கோ**



இந்தப் பெருமையை வாசுகி அம்மையார் பெறுவதற்குக் காரணம், அவரது சோதனைகளையும் சாதனையாக்கிக் காட்டும் ஆற்றல் தான் என்றால் அது மிகை அல்ல. சோதனை என்று பெரிதாக எதுவும் இல்லை என்றாலும், அவரது பண்புதான் அவருக்கு இவ்வளவு பெரிய இடத்தை சமுதாயத்தில் தந்திருக்கிறது.

அதில் சிலவற்றை இங்கு பார்ப்போம்.

முதன் முதலில் வள்ளுவர் வாசுகியைப் பெண் பார்க்க வந்த போது, வாசுகியிடம் அவர் அதிகம் எதும் பேச வில்லை.

ஒரு துண்டில் முடிந்து தம் கையோடு கொண்டு வந்திருந்த (சுமார் அரை படி) ஆற்று மணலை வாசுகி அம்மையாரிடம் கொடுத்து, அதைச் சமைத்து அமுது படைக்கும் படி கேட்டுக் கொண்டார்.

உடன் இருந்த சிலர் வள்ளுவருக்கு மரை கழன்று விட்டதோ என எண்ணினர். வேறு சிலர் எதுவும் புரியாமல் விழித்தனர். ஆனால் வாசுகியோ ஒரு புன்முறுவலோடு அந்த மணலைப் பெற்றுச் சென்று, நீரில் அலம்பி சமைக்க ஆரம்பித்து விட்டார்.

அங்கு தான் ஓர் அற்புதம் நிகழ்ந்தது. அதாவது, சாதம் வெந்து இறக்கிய போது, பானையில் சோறு பிச்சிப்பூப் போல மலர்ந்திருந்தது. அதைப் பார்த்த அங்கிருந்த அனைவரும் வியந்து போனார்கள்.

மணலைக் கொடுத்தாலும் ஏற்றுக் கொண்டு சமைக்கும் பக்குவம் அம்மையாரிடம் இருந்தது. காரணம், பக்தர்கள் தம்மை இறைவனிடம் அர்ப்பணித்துக் கொள்வது போல, வாசுகியும் தம்மைத் தம் கணவரிடம் அர்பணித்துக் கொண்டார் என்பது தான் பொருள்.

இது போல வேறொரு நிகழ்வு. திருமணத்திற்குப் பிறகு, வள்ளுவர் நெசவுத் தொழில் மேற்கொண்டிருந்தார். அப்போது நாடா ஒன்று கீழே விழுந்து விட்டது. பகல் நேரமாக இருந்ததால், அந்த நாடா கீழே கிடப்பது நன்றாகத் தெரிந்தது.

ஆனாலும், வள்ளுவர் வாசுகியை அழைத்தார். ஓடி வந்த அம்மையாரிடம், "வாசுகி! நாடா கீழே விழுந்து விட்டது. விரைந்து சென்று கைவிளக்கைக் கொண்டு வா, அதை எடுப்போம்" என்றார். நாடா கீழே கிடந்தது அம்மையாருக்கும் நன்றாகவே தெரிந்தது. இருந்தாலும், அவர் ஓடிச் சென்று கை விளக்கு ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்த பிறகே, வள்ளுவர் நாடாவை எடுத்துக் கொண்டார்.

பழைய சோற்றில் தயிர் ஊற்றி சாப்பாடு வைத்தால் கூட சோறு சுடுகிறது. விசிறி கொண்டு வந்து வீசு என்பாராம் வள்ளுவர் வாசுகியிடம், அம்மையாரும் அப்படியே, செய்வாராம்.

இப்படி எண்ணற்ற சோதனைகளை வாசுகி அம்மையார் வென்றதால் தான் அவர், "மனைவி வாய்த்தது வள்ளுவர்க்கு என்ற பெயரெடுத்தார். அந்த அடிப்படையில் தான் வள்ளுவரும்

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" என்றார்.

எனவே, "கற்பு" என்பது அதைப் பெற்றிருப்பவருக்கு, தவ ஆற்றலினும் மேலான ஓர் ஆற்றலினைத் தந்து விடுகிறது. இதைத் தான் கொங்கணர்க்கு, அவரது முப்பாட்டனான திருமூல நாயனார் விளக்குகிறார். அப்பாடல்கள் தான் இக்கட்டுரையின் முகப்பில் தரப்பட்டுள்ளது. அதன் விளக்கம்:-

கற்பினைத் தன் உயிர்மூச்சாக எண்ணும் ஒரு பெண், தனது பர்த்தாவான கணவனின் உயிரோடு ஒன்றிவிடுகிறாள்.

தன்னுடைய மனவேகத்தையும், பல நினைவுகளையும் எல்லாம் ஒதுக்கித் தள்ளி விட்டு (நெருப்பு ஆற்றை மயிர்ப் பாலம் அமைத்து, அதன் மேல் ஏறிக் கடப்பது போல) கற்பிற்கு வகுக்கப்பட்ட இலக்கணம் தப்பாமல் நடந்து, வாழ்க்கையில் வெற்றிக் கொடி நாட்டி விடுகிறாள். "அப்படிப் பட்ட பெண்ணிடம், சித்தனே உன் சாபம் எப்படிப் பலிக்கும்? சிந்தித்துப்பார்" என்றார் திருமூலர்

புதுக்குறள்!

**"கற்பின் வழிநின்று வாழ்வோர்க்கு அக்கற்பே ஆற்றல்கள் எல்லாம் தரும்"** ●






# டூரிங் டாக்கீஸ் நினைவுகள்!

www.TheMagnat.com

"டக்கர டக்கர டக்கர டன்டக்கர" சன்னமாகக் கேட்டது தப்பட்டை சத்தம்!

"ஹேய் சினிமாவண்டி"

கோடியிலிருந்த கிணற்றடியிலிருந்து, ஒற்றையடிப்பாதை, கொல்லைத்தாவாரம், இரண்டுபடிகள் (ஒன்று உடைந்தது!)இவற்றை ஒரே எட்டில் தாண்டி, தெற்குத் தாவாரத்தில் சறுக்கியவாறு குனிந்து குட்டை நிலைப்படி, ரேழியைக் கடந்து, இரண்டு திண்ணைகளுக்கிடையே ஓடி, சட்டக் கதவைத் தள்ளித் திறந்து, மூச்சிரைக்க வாசல் வேப்ப மரத்தைச் சுற்றிப் புழுதி பறக்க வந்து நின்றால், நாலு வீடு தள்ளி கழுத்தில் மாலையுடன் இரட்டை மாடுகள் பூட்டப்பட்ட கட்டை வண்டி - இரண்டு வாழைக் கன்றுகள் கட்டப்பட்டு, பக்கத்துக்கு ஒன்றாக இரண்டு பேனர்களுடன் - அசைந்தசைந்துவர எங்கள் ஊரில் புதுப்படம் ரிலீஸ்!

பேனரில் நீலக் கலரில் எழுதப்பட்ட வாசகங்கள்!

'இன்று முதல் இன்னார் (ஏதோ ஒரு திலகம், மன்னன், இலச்சியம் அல்லது பேரொளி பட்டம் நிச்சயம் உண்டு!) நடிக்கும் படம் - சனி / ஞாயிறு மூன்று காட்சிகள் + காலைக் காட்சி ஓர் ஆங்கிலப் படம்!

**டாக்டர் ஜெ.பாஸ்காரன்**




கலரில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டு, தியேட்டரின் பெயருடன், தெருத் தெருவாக வலம் வரும் அந்த வண்டிக்கு ஊருக்குள் வரவேற்பும், மரியாதையும் அதிகம்!

கொஞ்சம் நீள வாட்டத்தில், 'சாணி'த் தாள் வகைப் பேப்பரில், மெல்லிய நீலம், மஞ்சள், ஆரஞ்சு, நஞ்சன் கூடு பல்பொடி கலரில் - 'கொடியிடை, நடை அழகி, பைங்கிளி, கண் அழகி, கனவுக் கன்னி என நடிகைகளின் படங்கள், டைரக்சன், இசை இத்தியாதிகளுடன் - காற்றில் வீசி யெறியப்படும் நோட்டீசுகள்!தரையில் விழுவதற்கு முன் பிடித்துப் பார்ப்பது அவரவர் திறமைக்கான சவால்!

"இன்றே இப்படம் கடைசி" அறிவுப்புடனும் இதே வண்டிகள் - காய்ந்த வாழைக் கன்றுகளுடன், தப்பட்டை ஒலி குறைவுடனோ அல்லது இல்லாமலோ - அமைதியாக வரும் பூக்களைத் தின்று தீர்த்த நார்மாலை மாடுகளின் கழுத்தில் தொங்கிக் கொண்டிருக்கும்!

அறுபதுகளில், சிதம்பரத்தில் முனிசிபாலிடி பள்ளியில் படிக்கும் காலங்களில் ஸ்ரீமன் நடராஜா கோயிலும், திருவக்குளத்தில் இருந்த அண்ணாமலை யுனிவெர்சிடியும் விட்டால், ஊருக்குள் இருந்த மூன்று சினிமா தியேட்டர்களே மக்களின் புகலிடம்!

'அய்யர்கொட்டா' எனப்படும் நடராஜா தியேட்டர் - பஸ் ஸ்டாண்டுக்கு எதிரில்! 'வடுகனாதன்' எனப்படும் செட்டியார் தியேட்டர் - அந்தப் பக்கம் டவுன் ஹால் எதிரில்! மூன்றாவது, ஊருக்கு வடக்கே, தில்லை காளி கோயில் அருகில், தில்லை டாக்கீஸ் எனும் 'டூரிங்' தியேட்டர். ஆறு மாதத்துக்கு ஒரு முறை லைசென்ஸ் புதுப்பித்து, கீத்துக் கொட்டா இடம் மாற்றிப் போடப்படும் - அதே மைதானத்தில் ஆறு மாதம் வடக்குப் பக்கம், மற்ற ஆறு மாதம் தெற்குப் பக்கம்!

சின்ன டவுன் - இரண்டு அல்லது மூன்று வாரங்கள் ஓடினாலே படம் வெற்றிப் படம் தான்! - ஐம்பது நாட்கள் ஓடிய படங்கள் மெட்ராஸில் (இன்றைய சென்னை) சில்வர் ஜூபிளி கொண்டாடியதற்கு இணையான பெருமை வாய்ந்தவை. சிதம்பரத்தில் ஐம்பதாம் நாள் டிக்கட் கிடைக்காமல், நான் திரும்பி வந்த படம் 'எங்க வீட்டு பிள்ளை'!

அய்யர் கொட்டாயில் சிங்கிள் ப்ரொஜெக்டர், என்பதால், நான்கு இண்டெர்வல் விடுவார்கள் - ரீல் மாற்ற நேரம் வேண்டுமே!

இடையே 'சோடேலர்' (சோடா, கலர் என்றறிக!), கை முறுக்கு, மல்லாட்டை கேக், மீன் மிட்டாய், தேன் மிட்டாய், பொம்மை பிஸ்கட், பீடி, சிகரெட் - கழுத்தில் மாலையாய்த் தொங்கும் அலுமினிய ட்ரேயில் வியாபாரம்! மரக் கைப் பிடியுடன் இரும்புக் கம்பியில் செய்த பெயர் தெரியாத ஒரு ட்ரே - அதில் ஆறு காளி மார்க் கலர் பாட்டில்கள் - ஒப்பனர் விற்பவரின் சட்டைப் பையில்!

முன்னால் பெஞ்ச் 35 பைசா, பேக் பெஞ்ச் 65 பைசா, பின்னால் சேர் ஒண்ணே கால் ரூபாய், கடைசி வரிசை, கை வைத்த சேர்கள் இரண்டு ரூபாய் டிக்கட்! அரங்கின் சைட் வாசல்களில் கரு நீல படுதாக்கள், காற்றில் விலக, அவ்வப்போது ஃப்ளாஷ் போல் தெரியும் வெளிச்சம்! மாலை, இரவுக் காட்சிகளில் படுதாக்கள் சுருட்டிக் கட்டப்படும்! இன்றைய சவுண்ட் ப்ரூஃப் தியேட்டர்கள் அன்று இல்லை - இரவின் அமைதியில் சினிமா வசனங்களும், பாடல்களும் ஒரு மைல் விஸ்தீரணத்திற்கு ஊருக்குள் கேட்கும்!

வடுகனாதனும் கிட்டத்தட்ட இப்படியே - ஆனால் டபுள் ப்ரொஜெக்டர், ஒரே இண்டர்வெல் தான்! பால்கனியும், இடைவேளையில் கலர், தின்பண்டங்கள் விற்பனை செய்யும் ஸ்டால்களும் உண்டு!

தில்லை டூரிங் டாக்கீஸ் அனுபவம் அலாதியானது! முன் பெஞ்சுக்குப் பதில் மணல் பரப்பிய தரை டிக்கட்! (சுண்ணாம்பில் 'தீ' என்றெழுதிய சிகப்பு நிற பக்கெட்டுகளில், மணல் நிரப்பி முன்னால் தொங்க விட்டிருப்பார்கள் - தீ விபத்து ஏற்பட்டால் தீயணைக்க!

www.TheMagnat.com



**அய்யர் கொட்டாயில் சிங்கிள் ப்ரொஜெக்டர், என்பதால், நான்கு இண்டெர்வல் விடுவார்கள் - ரீல் மாற்ற நேரம் வேண்டுமே! இடையே 'சோடேலர்' (சோடா, கலர் என்றறிக!), கை முறுக்கு, மல்லாட்டை கேக், மீன் மிட்டாய், தேன் மிட்டாய், பொம்மை பிஸ்கட், பீடி, சிகரெட் - கழுத்தில் மாலையாய்த் தொங்கும் அலுமினிய ட்ரேயில் வியாபாரம்!**

தரை டிக்கட் மண் தீயணைக்காதோ என்ற கேள்விக்கு இன்று வரை எனக்கு விடை தெரியாது!)மணல் மீது துண்டு போட்டு அமர்வது அவரவர் வசதியைப் பொருத்தது - கூட்டமில்லாத நாட்களில், பெட்ஷீட் போட்டு படுத்துக் கொண்டும் படம் பார்க்கலாம்!

தரை டிக்கட் மணற் பரப்பில், ஒரமாய்த் தூங்கிக் கொண்டிருக்கும் சில நாய்கள், படம் ஆரம்பித்தவுடன், சோம்பலாய் எழுந்து, காலைத் தூக்கி சிறுநீர் கழித்து விட்டு, ஏதோ தப்பித்தாற் போல திடீரென்று ஓடுவதும் உண்டு!

தரை டிக்கட்டுக்குப் பின்னால் நடுவில் பெஞ்ச், அதற்கும் பின்னால் சேர் டிக்கட்!

தரை, முன், பேக் பெஞ்சு டிக்கட்டுகளில் மட்டும் இடதுபுறம் பெண்களும், வலதுபுறம் ஆண்களும் தனித்தனியாக அமர வேண்டும் - சேர் டிக்கட்டுகளில் சேர்ந்து உட்கார்ந்து படம் பார்க்கலாம். (அனுபவி ராஜா அனுபவி படத்தில் நாகேஷ்-மனோரமா டூரிங் டாக்கீஸில் படம் பார்க்கும் சீன் நினைவுக்கு வருகிறதா?)

அப்போதெல்லாம் சினிமாவுக்குப் போவதென்பது ஒரு பெரிய மகிழ்வான சடங்கு. என்ன படங்கள் பார்க்கலாம் என்பது முதல் தீவிரமான திட்டமிடல், பெரிய குடும்பங்களில் அவசியம்! (அந்த வயதில் எனக்கு வெண்ணிற ஆடை, சில எம்ஜிஆர் படங்கள் பார்க்க அனுமதி இல்லை!)

www.TheMagnet.com

காலையிலிருந்தே மாலை டிபன், இரவுச் சாப்பாடு, வீட்டிலிருப்பது யார் போன்றவை உயர் மட்ட அளவில் தீர்மானிக்கப்படும்! அரை மணி நேரம் ஆடை அலங்காரம் - தலையில் ஸ்பெஷல் கதம்பம்! முகத்தில் பெருமையுடன், சிறு நடையாய்த் தியேட்டருக்குச் செல்வது மகிழ்ச்சியானது. கைப் பையில் குடிக்கத் தண்ணீர், பழம், நொறுக்குத் தீனி சகிதம், குட்டி பிக்னிக் !

எத்தனைப் படங்கள் - எவ்வளவு மகிழ்வான தருணங்கள்! அன்றைய படங்கள் நல்லவைகளையே போதித்தன. குடும்பம், பாசம், நட்பு, தர்மம், தியாகம், நல்லவை ஜெயிக்கும், தீயவை தோற்கும் - சமூக அக்கறையுடன் எடுக்கப்பட்ட நல்ல படங்கள். வாழ்க்கையின் எல்லா சந்தர்ப்பங்களிலும் சினிமாவின் தாக்கம் இருந்தே வந்திருக்கிறது.

**அன்றைய படங்கள் நல்லவைகளையே போதித்தன. குடும்பம், பாசம், நட்பு, தர்மம், தியாகம், நல்லவை ஜெயிக்கும், தீயவை தோற்கும் - சமூக அக்கறையுடன் எடுக்கப்பட்ட நல்ல படங்கள். வாழ்க்கையின் எல்லா சந்தர்ப்பங்களிலும் சினிமாவின் தாக்கம் இருந்தே வந்திருக்கிறது.**

முதன் முதலில் தனியாய்த் தியேட்டரில் பார்த்த 'சாது மிரண்டால்' படம் - காரில் பிணத்தைப் பார்த்து நாகேஷ் குதித்து செய்யும் ஸ்லாப்ஸ்டிக் காமெடி, போலிஸ் ஸ்டேஷனில் கையில் சோற்று உருண்டையுடன் அவர் தவிக்கும் தவிப்பு - தில்லை

டாக்கீஸ் வெளியிலேயே அமர்ந்து, ஓடையின் சில்லென்ற காற்றோடு, அனுபவித்துக் கேட்ட 'படகோட்டி' பாடல்கள்.

மாமாவே அனுப்பி வைத்த முதல் நால் முதல் ஷோ - சர்வர் சுந்தரம்

வடுகநாதனில் முதல் நாள் மோட்டார் சுந்தரம் பிள்ளை டிக்கட் கிடைக்காமல், நடராஜாவில் நான்கு வாரங்களாக ஓடிக் கொண்டிருந்த அன்பே வா சென்றது

சினிமாவும் கண்டிஷன்களும் - நல்ல மார்க், விடுமுறை எல்லாவற்றுக்கும் பரிசு நல்ல சினிமா - தண்டனையும் அதே சினிமா தான், மூன்று மாதங்களுக்கு 'நோ சினிமா'!

வேதமும், புரோஹிதமுமே வாழ்வென இருந்த என் தாத்தா பார்த்த இரு படங்கள் - கர்ணன், ஔவையார்! (ஜெமினியில் வேலை பார்த்த அப்பா அனுப்பிய பாஸ் - ஒரு டிக்கட், கூட இருந்ததால் தாத்தா என்னுடன் வந்த படம் ஔவையார்!)




அந்த வருடத்துடன், சிதம்பரம் விட்டு மெட்ராஸ் வந்து விடும் உத்தேசம் - மறு நாள் காலை பத்தரைக்கு டே எக்ஸ்பிரஸ் - முதல் நாள் இரவு மாமாவுடன் அய்யர் கொட்டாயில் பார்த்த படம் எம்ஜிஆரின் 'கண்ணன் என் காதலன்'!

லைசென்ஸ் முடியும் போது டூரிங் டாக்கீஸில் கடைசியாகத் திரையிடும் படத்தை "வந்தனோபசார" கடைசிப் படம் என விளம்பரம் செய்வார்களாம் - அது போல இந்தக் கட்டுரையின் வந்தனோபசார விபரம்:

அன்று மூன்று தியேட்டர்களில் நூறு நாட்கள் ஒரு படம் ஓடியது. இன்று, நூறு தியேட்டர்களில் மூன்று நாட்கள் மட்டும் ஒரு படம் ஓடுகிறது! ஒரு வேளை, ஈக்வேஷன் சரியாகத் தான் இருக்கிறதோ?

இன்று நூறும் இருநூறும் கொடுத்து குளு குளு அரங்குகளில், முதுகைத் தாங்கித் தாலாட்டும் சோஃபாக்களில், பெப்சி, பாப்கார்ன் காம்போவுடன், ஸ்டீரியோ ஃபோனிக் சர்ரவுண்ட் சவுண்ட் எஃபெக்டுடன் என்ன தான் சொகுசாகப் படம் பார்த்தாலும், அந்த நாளைய படம் பார்த்த சுகமும், மனநிறைவான படங்களும் இப்போது இல்லையென்றே தோன்றுகின்றது! ●



# உலோபமுத்திரா

www.TheMagnat.com

உலோபமுத்திரா மாமுனி அகத்தியரின் மனைவி. சிறந்த பதிவிரதை. ரிக் வேதத்தில் ஒரு பாடல் இவளால் இயற்றப்பட்டது. அகத்திய முனிவர் குருமுனி என்றாலும் அவரது மகிமையைப் புரிந்து கொண்டு திருமணம் செய்து கொண்டவள். புராண காலத்தில் பெண்கள் நல்ல படித்த ஞானிகளைத் திருமணம் செய்து கொள்ளவே விரும்புவார்கள். ஜனகர் அரசவையில் ஒரு பெண் தனக்கு சமமாக படித்தவர் இல்லை என்பதால் ஆயுள் முழுவதும் திருமணமே செய்து கொள்ளவில்லை.

மகாபாரதத்தில் வனபருவத்தில் லோமஷ மகரிஷி மூலம் பாண்டவர்களுக்கு **லோபமுத்திரா-, அகஸ்த்திய மகாமுனி** பற்றி வர்ணிக்கப்படுகிறது. **இலவல்** என்ற ஒரு அசுரன் அவனது தம்பி **வாதாபி.** இலவல் அந்தணர்களிடம் தேவேந்திரனுக்குச் சமமான புத்திரனைக் கொடுங்கள் என்று கேட்டான். அவர்கள் முடியாது என்று மறுத்ததால் கோபம் வந்தது இலவலுக்கு. அன்று முதல் இலவல் அந்தணர்களுக்குத் தொந்தரவு கொடுக்க ஆரம்பித்தான். இலவல் மாயம் செய்வதில் வல்லவன். தம்பி வாதாபியை மிருகமாக மாற்றி அதை உணவாக சமைத்து அந்தணர்களுக்கு உணவு வழங்கும் போது சேர்த்துக் கலந்து கொடுப்பான். சாப்பிட்டு முடித்தவுடன் "வாதாபி வெளியே வா" என்று கூறி ஒவ்வொரு அந்தணர்கள் வயிற்றிலிருந்தும் வாதாபியை வெளியே வரச் செய்து அவர்களுக்கு முடிவு கட்டுவான். தொடர்ந்து பல நாட்கள் இப்படி நடந்து வந்தது. ஒரு நாள் அகஸ்திய மாமுனியே இலவனின் விருந்தாளியாக வந்தார். இலவன் அன்றும் அதே போல் செய்தான். அகஸ்தியர் சாப்பிட்டு முடித்தவுடன் எப்போதும் போல் இலவல் வாதாபியை "வெளியே வா" என்று அழைத்தான். வாதாபி வெளியே அன்று வரவில்லை. அப்போது அகத்தியர் சிரித்து கொண்டே "நான் வாதாபியை ஜீரணித்து விட்டேன்" என்றார். இலவனுக்கு கடும் கோபம். அகஸ்த்தியரை அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

அங்கிருந்து கிளம்பி வரும் வழியில் அகத்தியர் தனது முன்னோர்கள் நற்கதி அடையாது நிர்கதியில் இருப்பதைக் கண்டார். காரணம் என்ன என்று கேட்ட போது "எங்களுக்கு நீத்தார் கடன் செய்ய யாரும் இல்லை. அதனால் நீயாவது திருமணம் செய்து கொண்டு உன் மகன் மூலம் பித்ருக் கடன் நிறைவேற்றினால் நாங்கள் கரை சேருவோம்" என்றனர். அதனால் அகத்தி. யர் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தார். தனக்குத் தகுந்த பெண்ணைத் தேட ஆரம்பித்தார்.

**தெ**ன்னகம் வரும் வழியில் அகத்தியர் **விதர்ப்பம்** என்ற நாட்டை அடைந்தார். விதர்ப்பதேச மன்னன் யாகம் ஒன்று நடத்திக் கொண்டிருந்தான். அங்கு வந்த அகத்தியரை அதில் பங்கேற்கும்படி கூறினான் அரசன். யாகத்தீ கொழுந்து விட்டு எரியும் போது அதிலிருந்து ஒரு பெண்மணி தோன்றினாள். அப்போது அசரீரி தோன்றி "இந்தப் பெண்ணின் பெயர் **உலோபமுத்திரை**. தாங்கள் தான் இந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்" என்று கூறியது. அகத்தியரும் தெய்வ வாக்கிற்கு இணங்க அந்தப் பெண்ணிடம் தன்னை திருமணம் செய்து கொள்ளுமாறு கேட்டார். அப்போது அவள், "மாமுனிவரே நான் விதர்ப்ப நாட்டில் தோன்றியதால் இந்த நாட்டு மன்னன் எனது தந்தையாகிறார். அதனால் அவர் சம்மதித்தால் மனைவியாகிறேன்" என்றாள். அரசனும் ஒரு வழியாக அவர்கள் திருமணத்திற்கு சம்மதித்தான். அப்போது உலோபமுத்திரை அகத்தியரிடம், "தாங்கள் என்னை மணம் முடிக்க வேண்டிய அவசியம் என்ன" என்று கேட்டாள். அப்போது அகத்தியர் "என் முன்னோர்கள் ஆண் குழந்தை இல்லாததால் அவர்கள் இறந்ததும் திதி செய்ய ஆள் இல்லாமல் தவிக்கின்றனர். சுவர்க்கத்தை அடையமுடியவில்லை. நானும் துறவியாகி விட்டதால் அவர்களின் நிலமை பரிதாபமாக உள்ளது. அவர்களின் ஆத்ம சாந்திக்காக நான் திருமணம் செய்து கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. நான் இல்லறத்தில் ஈடுபட்டு உன் மூலம் ஒரு மகனைப் பெற்று அதன் மூலம் எனது முன்னோர்கள் கரை சேர வேண்டும்" என்று கூறினார். அப்போது உலோபமுத்திரை தனது பெற்றோர்களின் சம்மதத்துடன் அகத்தியரை திருமணம் செய்து கொண்டாள். திருமணம் முடிந்தவுடன் அகத்தியர் மனைவியிடம் "அரண்மனையில் உள்ள ஆடம்பர வஸ்த்துக்களை கழற்றிவிட்டு மரவுரி தரித்து என்னுடன் வரவேண்டும்." என்றார் அவளும் அவ்வாறே விலை உயர்ந்த பொருட்களை அரண்மனையில் விட்டு விட்டு மரவுரியுடன் முனிவருடன் கிளம்பி இருவரும் ஹரித்வாரம் வரை சென்றனர். அங்கு கடும் தவம் செய்தனர். உலோபமுத்திரா அகத்தியருக்கு முனிவருக்கே உரிய முறையில் பணிவிடை செய்து வந்தாள். அகத்திய முனியும் அவளிடம் மிகுந்த அன்பு காட்டினார். கடும் தவம் செய்ததால் உலோபமுத்திரை தங்கம் போல் பிரகாசமாக ஜொலித்தாள்.

அப்போது அகத்தியர் அவளிடம் நாம் இருவரும் ஒன்று சேர்ந்து எனது முன்னோர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவோம். இது சரியான தருணம் என்றார். அவரது கூற்றைக் கேட்டு பெருமிதம் அடைந்தாள். தனக்கு ஏற்படப் போகும் பாக்கியத்தை நினைத்து வெட்கத்துடன் முனிவரிடம், "எனக்கும் மனதில் ஒரு விருப்பம் உள்ளது. அதைத் தாங்கள் நிறைவேற்றினால் நாம் இருவரும் இணையலாம் என்றாள். அதாவது நான் இந்த அழுக்கடைந்த உடையுடன் இந்த ஆஸ்ரமத்தில் உங்களுடன் இணைய விரும்பவில்லை. எனக்கு அரண்மனை போன்ற வசதிகளுடன் ஒரு இடம் வேண்டும்.. நாம் இருவரும் அணிந்து கொள்ள நல்ல உடைகள், நகைகள் வேண்டும். உங்கள் தவத்தால் அதை அடைய முடியும்" என்றாள். அப்போது "முனிவர் வாழ்வியல் பொருட்களுக்காக எனது தவத்தை வீணாக்க முடியாது." என்றார். அப்போது உலோபமுத்திரா முனிவரிடம் "நான்

**காந்தாமணி நாராயணன்**

www.TheMagnet.com

கூறியதில் எந்தவித மாற்றமும் இல்லை" என்று ஆணித்தரமாகக் கூறிவிட்டாள். மேலும் அவ்வாறு பிறரிடம் பொருள் கேட்கும் போது தங்களுக்கு எந்தவிதக் கௌரவக்குறைவும் ஏற்படக்கூடாது. தர்மத்திற்கு உட்பட்டு பொருளை ஈட்ட வேண்டுமென்ற நியதியையும் விதித்தாள். அகத்தியரும் அவளது விருப்பத்தை நிறைவேற்ற வெளியே கிளம்பினார். புறப்படும் முன் "நீ இங்கிருந்து கொண்டு ஆஸ்ரமக்கடமைகளை நிறைவேற்று" என்று கூறினார்.

**மு**தலில் அகத்தியர் **ஸ்ருத்ருவா** என்ற அரசனிடம் சென்றார். அரசன் முனிவரைத் தகுந்த முறையில் உபசரித்து அரண்மனைக்கு அழைத்து வந்தான். முனிவர் வந்த காரணத்தைக் கேட்டான். "எனக்குக் கொஞ்சம் பணம் தேவை. ஆனால் அதைக் கொடுக்கும் போது யாருக்கும் கஷ்டம் வரக்கூடாது. உனது ஆட்சிக்குத் தேவைக்குப் போக மீதயிருந்தால் கொடு" என்றார். அப்போது அரசன் தனது வரவு செலவுக் கணக்கைக் காட்டினான். இரண்டும் சமமாக இருந்தது. அதனால் அகத்தியர் அவனிடம் எதுவும் பெற்றுக் கொள்ளாமல் அவனையும் அழைத்துக் கொண்டு **பிரக்ஸைவ** என்ற அரசனிடம் சென்றார். அந்த அரசன் எல்லை வரை வந்து முனிவரையும், அரசனையும் வரவேற்றான். அகத்தியர் தான் வந்த காரணத்தை முன்பு அரசனிடம் சொன்னது போல் தெரிவித்தார். அந்த அரசனும் தனது வரவு செலவுக் கணக்குகளை முனிவரிடம் காட்டினான். இரண்டும் சமமாக இருந்தது. அதனால் முனிவர் அந்த அரசனிடமிருந்தும் எதுவும் பெற்றுக் கொள்ளவில்லை. பிறகு முனிவர் மற்றும் இரண்டு அரசர்களும் **புருகுத்ஸரந்தன்** என்ற அரசனிடம் சென்றனர். அந்த அரசனும் வந்த விருந்தினர்களின் உபசாரங்கள் முடிந்தவுடன் தன்னைத் தேடி வந்த காரணத்தைக் கேட்டான். முனிவர் "எனக்குக் கொஞ்சம் பணம் தேவை. ஆனால் தர்ம நியதிகளுக்கு உட்பட்டு யாருக்கும் கஷ்டம் கொடுக்காமல் உன் தேவை போக மீதி உள்ள பணத்திலிருந்து கொடுத்தால் போதும்" என்றார். அரசனும் அவரிடம் தனது வரவு செலவுக் கணக்கைக் காட்டினான். அந்த அரசனும் எந்தப் பொருளும் கொடுக்கும் நிலையில் இல்லை. அதனால் முனிவர் மற்றும் மூன்று அரசர்களும் அமர்ந்து மேலே என்ன செய்யலாம் என யோசித்தனர்.

"**இலவன்** என்று ஒரு அசுர அரசன். அவனிடம் நிறையப் பணம் உள்ளது. அவன் சிறந்த கொடையாளி. அதனால் அவனிடம் செல்வோம்" என்று கூறி மூன்று அரசர்கள், அகத்திய முனி ஆகியோர் அவனிடம் சென்றனர். இலவன் அவர்களை நல்ல முறையில் வரவேற்று வந்த காரணம் பற்றிக் கேட்டான். அப்போது அகத்திய முனி, "எங்களுக்கு அதிகம் பணம் வேண்டும். ஆனால் உன் கீழ் இருப்பவர்களுக்கு எந்தவித சிரமமும் இல்லாமல் தர்ம நியதிக்கு உட்பட்டு நாங்கள் விரும்பும் பணம் தர வேண்டும்" என்றார். அப்போது இலவல் "தங்களுக்கு எவ்வளவு பணம் வேண்டும்" என்று கேட்டான். உடனே அகத்தியர், "இங்கு வந்திருக்கும் அரசர்களுக்கு 10000 பசுக்கள், 10000 தங்க நாணயங்கள் கொடுக்க வேண்டும். எனக்கு அவர்களுக்குக் கொடுத்ததைப் போல் இரண்டு மடங்கு பசுக்கள், நாணயங்கள் கொடுக்க வேண்டும். அதைத் தவிர தங்கரதம், அதில் மிக வேகமாக மனோவேகத்தில் ஓடக்கூடிய இரண்டு குதிரைகள் வேண்டும்" என்று கூறினார். அப்போது அரசன் "தாங்கள் கேட்ட பசுக்கள், தங்க நாணயங்கள் என்னால் கொடுக்க முடியும். ஆனால் என்னிடம் தங்கரதம் இல்லை" என்றான்.

அப்போது அகத்தியர், "எனது வாயிலிருந்து பொய்யான வார்த்தைகள் வராது. உங்களிடம் இருப்பது தங்கரதம் தான்" என்று கூறினார். உடனே அரசன் ரதத்தின் அருகே சென்றான். அரசனுக்கு ஒரே ஆச்சரியம்! ரதம் தங்கமயமாக இருந்தது. இதே அகத்திய முனிவர் தான் இலவனின் தம்பி வாதாபி மரணத்திற்கு காரணமானவர் என்றாலும் முனிவரின் சக்தி மீது இலவனுக்கு மிகுந்த கௌரவம் ஏற்பட்டது. முனிவர் கேட்ட பொருட்கள்,

www.TheMagnet.com




படம்: **யோகா** கமெண்ட்: **ஜ்வாலா**

www.TheMagnatt.com

ரதம் அதில் வேகமாக ஓடக்கூடிய **விராவ், சுராங்** என்ற பெயருள்ள இரண்டு வேகமாக ஓடக்கூடிய குதிரைகளையும் கொடுத்தான். அகத்தியரும், மூன்று அரசர்களும் ரதத்தில் வேகமாக சென்றனர். இலவன் அந்த ரதத்தின் பின் சென்று அகத்தியரைக் கொல்ல முயன்றான். வாதாபியின் கொலைக்கு பழிவாங்க பின் தொடர்ந்தான். முனிவர் தனது அபரிமிதமான சக்தியினால் இலவனையும் அழித்தார். எல்லோரும் அகத்தியமுனிவரின் ஆஸ்ரமத்தை அடைந்தனர். அரசர்கள் அனைவரும் தங்கள் நாடு திரும்பினர்.

**உ**லோபமுத்திரையின் விருப்பத்தை அகத்தியர் நிறைவேற்றினார். அவளுக்கு ஒரே ஆனந்தம். "இப்போது என் மூலம் உங்களது முன்னோர்கள் கரைசேர ஒரு புத்திரனைக் கொடுங்கள்" என்று கேட்டாள். முனிவரும் மகிழ்ச்சி அடைந்து அவளிடம் ஒரு கேள்வி கேட்டார். "ஆயிரம் குழந்தைகள் அவர்கள் நூறு குழந்தைகளின் பலத்திற்குச் சமமானவர்கள், நூறு பிள்ளைகள் அவர்கள் பத்து பிள்ளைகளின் சக்திக்குச் சமமானவர்கள், ஒரு குழந்தை அவன் ஆயிரம் குழந்தைகளின் சக்திக்குச் சமமானவனாக இருப்பான். இவற்றில் உனது விருப்பம் எது" என்று கேட்டார். அதற்கு உலோபமுத்திரா "பலஹீனமான பல குழந்தைகளைக் காட்டிலும் சக்திவாய்ந்த, புத்திசாலியான ஒரு பிள்ளை எனக்குப் போதும்" என்று கூறினாள். "அவனே உத்தமபுத்திரனாக இருப்பான்" என்றும் கூறினாள். முனிவரும் அவளது மொழியைக் கேட்டு ஆனந்தம் அடைந்து "அப்படியே ஆகட்டும்" என்று ஆசி கூறினார். பிறகு இருவரும் சேர்ந்தனர். உலோபமுத்திரை கருவுற்றாள். அவளுக்கு பாதுகாப்பை ஏற்படுத்திவிட்டு முனிவர் வனம் சென்றார். ஏழு ஆண்டுகள் உலோபமுத்திரை கர்ப்பம் தரித்திருந்தாள். நல்ல ஆண் குழந்தை பிறந்தது. அதன் பெயர் **திருடஸ்யு**.




பிறப்பிலேயே சிறந்த ஞானியாக இருந்தான். அகத்தியர் அவனுக்குத் தேவையான கலைகளைக் கற்றுக் கொடுத்தார். அந்தணர்களில் தலை சிறந்தவன் என அந்தப் பையன் போற்றப்பட்டான். அகத்தியர் மகனின் வளர்ச்சியைக் கண்டு பெருமிதம் அடைந்தார். அவர் வாழ்ந்த இடம் இன்றும் அகத்திய ஆஸ்ரமம் என்று போற்றப்படுகின்றது. பாகீரதி நதிக் கரையில் அந்த ஆஸ்ரமம் உள்ளது. அகத்தியரின் முன்னோர்களும் சாபம் நீங்கி கரை சேர்ந்து சுவர்க்கம் புகுந்தனர்.

ஒரு நாள் அகத்தியர் உலோபமுத்திரையிடம் "பிரவாகம் எடுத்து வரும் நதியைப் போல் என்னை இதுவரை ஆட்டி வைத்தாய். இனி எனக்கு நீ அடங்கி நடக்க வேண்டும். நமக்குக் கிடைத்த செல்வம் உலகிற்கும் கிடைக்க வேண்டும். சிவபெருமானின் திருமணத்தின் போது உலகைச் சமநிலைப்படுத்தும் பொறுப்பு எனக்கு வந்தது. அதன் பொருள் என்னவென்றால் உலகத்தில் உள்ள உயிர்கள் சமநிலை பெற வேண்டும். அதற்கு உலகம் செழிப்பாக இருக்க வேண்டும். உலகம் செழிக்கத் தண்ணீர் வேண்டும். தண்ணீர் இருந்தால் தான் பயிர்கள் விளையும். தண்ணீர் தேவையான அளவு இருந்தால் உலகம் வளம் பெறும். அதனால் என் கமண்டலத்திற்குள் வந்துவிடு" என்றார். அவளும் கமண்டல்த்திற்குள்வந்து விட்டாள். அந்தக் கமண்டலத்துடன் அகத்தியர் குடகு மலைக்கு வந்தார். மலையின் ஓரிடத்தில் தனது கமண்டலத்தை வைத்துவிட்டு லிங்க பூஜை செய்ய ஆரம்பித்தார். அப்போது அங்கு வந்த காகம் கமண்டலத்தை தட்டி விட்டது. அப்போது அதில் உள்ளேயிருந்த தண்ணீர் ஆறாகப் பெருகி ஓடியது. பெரிய நீர்வீழ்ச்சியாகக் கீழே விழுந்தது. இதை அகத்தியர் எதிர்பார்க்கவில்லை. அதில் மீதியிருந்த தண்ணீரை பத்திரமாக எடுத்துக் கொண்டார். பெருக்கெடுத்த நதி கடல் போல் ஓடியதால் **சிவசமுத்திரம்** என்று சிவனின் பெயர் வந்தது. காகம் தட்டித் தண்ணிர் விரிக்கப்பட்டதால் **காவிரி** என்று அதற்குப் பெயர் வைத்தார். பிறகு கமண்டலத்தில் மீதி உள்ள தண்ணீருடன் பொதிகை மலை வந்தார். அப்போது முனிவர் "உலோபமுத்திரா நீ என்றும் நிரந்தரமானவள். என் முன்னோரின் சாபம் தீர்த்த நீ குடகைப் போல் இங்கும் பிரவாகம் எடுத்து ஓடு" என்று கூறி கமண்டலத்தில் உள்ள மீதி நீரை பொதிகை மலையின் உச்சியிலிருந்து கொட்டினார். தென் பகுதியையும் வளமைப்படுத்து என்றார். அந்த நீர் மின்னிக் கொண்டு பாணம் போல் வேகமாக ஓடியது. அது தான் **பாண தீர்த்தம்** என்று பெயர் பெற்றது. அங்கு தான் பார்வதி-சிவனின் கல்யாண கோல தரிசனம் அகத்தியருக்கும் உலோபமுத்திரைக்கும் கிடைத்தது. அது தான் **கல்யாண தீர்த்தம்** என்று அழைக்கப்படுகின்றது. **அகத்தியர் தீர்த்தம்** என்ற பகுதி பக்தர்கள் நீராட ஒரு பகுதி இருக்கிறது. அகத்தியரை ஒரு சித்தர் என்றும் கூறுவார்கள். இப்படி மகா தபஸ்வி அகத்தியரின் மனைவி உலோபமுத்திரா இன்றும் காவிரியாக, தாமிரபரணி நதியாக நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறாள். அகத்தியர் அங்கிருந்து கிளம்பி திருவனந்தபுரத்தை அடைந்து அங்கே மகாசமாதி அடைந்தார் என்று வரலாறு கூறுகின்றது. ●

சிவன் கோவிலின் வெளிப்பிராகாரத்தை மூன்று முறை வலம் வந்து,

**ஐயா அருணகிரி அப்பா உனைப்போல**
**மெய்யாக ஓர் சொல் விளம்பினர் யார்? வையகத்தார்**
**சாற்றரிது என்று ஏசற்றார், தன் அனையாய், முக்கன் எந்தை**
**நாற்றிசைக்கும் கை காட்டினான்**

என்று தாயுமானவர் பாடலை முணுமுணுத்து நடேசன் கொடிமரம் அருகே நமஸ்கரித்து அங்கிருந்த ஒரு கல் மேடையில் அமர்ந்தார்.

தெளிந்த நீல வானம். ஆயிரக்கணக்கில் நட்சத்திரப் பூக்கள். சில் என்று குளிர்ந்த காற்று. அமைதியான சூழ்நிலை. அதிக பக்தர் நடமாட்டம் இல்லை, அப்பாடா!

யாரைத் தான் நம்புவதோ பேதை நெஞ்சம், அம்மம்மா, பூமியிலே யாரும் வஞ்சம் என்றபடி அருகில் வந்து அமர்ந்தார் நீலமேகம். "தரிசனம் முடிச்சுட்டியா? இந்தா வேர்கடலை உருண்டை" என்று காகிதப் பொட்டலத்தை நீட்டினார்.

"வந்துட்டியா அளப்பக்காரா! இன்னிக்கு யார் பத்தி என்ன கதை விடப் போற? சரி, கேக்க மறந்தேன். நம்ம தியாகு நியூயார்க் போய் மூணு மாசம் இருந்தவன் சென்னை திரும்பி மூணு நாள் ஆகியும் நம் திருச்சபை பக்கம் வரலியே ஏன்?" என்றார் நடேசன்.

நடேசன், நீலமேகம், தியாகு என்கிற மூவர் அணி தினமும் அந்த சிவன் கோவில் பிராகார மண்ணில் ஒரு கல் பெஞ்சு மீது இரவு ஏழரை மணிக்குக் கூடி ஒரு மணி நேரம் உரையாடிப் பிரிவது கடந்த சில ஆண்டுகளாகத் தொடரும் வழக்கம்.

நடேசன் மாநில அரசு ஆபீசில் கீழ்நிலை குமாஸ்தாவாக துவங்கி கெசடெட் ஆபீசர் ஆகி ஓய்ந்தவர். நீலமேகம் போலீஸ்காரராக நுழைந்து சப் இன்ஸ்பெக்டர் நிலையில் ஓய்வு. தியாகு, சூப்ரண்டு நிலை வரை உயர்ந்து விருப்ப ஓய்வு. நடேசனுக்கு

# நாடு எங்கே போகிறது?

**கண்ணன் மகேஷ்**




www.TheMagzine.com

சொந்த வாழ்விலும், பொது விஷயங்களிலும் நேர்மை, ஒழுக்கம், சொன்ன சொல் தவறாமை, எளிமை, எவர் மனதையும் சொல்லால் செயலால் புண்படுத்தாமை முக்கியம். அலுவலகப் பணியில் லஞ்சம் வாங்காதவர். சிவன், முருகன், நாராயணன் மீதான துதிப்பாடல்களை எப்போதும் முணுமுணுப்பதும், இறை பக்தி உணர்வில் கரைவதும் அவர் வழக்கம். நீலமேகமும், தியாகுவும் இவர் அளவு ஆன்மீகத் தீவிரவாதிகள் இல்லை. அவர்கள் சராசரி மனிதர்கள்தான்.

"ஒரு முக்கிய விஷயம்" என்று ஆரம்பித்தார் நீலமேகம் "நம்ம தியாகுவுக்கு ஒரே ஒரு பெண். அவ நாலு வருஷமா நியூ ஜெர்சீல இருக்கா. ரெண்டு வருசம் முந்தி இவரு அவளைப் பார்க்க அமெரிக்கா போனாரு. அப்ப அந்தப் பெண் அப்பாவை வரவேற்க நியூயார்க் விமான நிலையம் வந்தாளாம். அந்தப் பெண் பக்கத்துல ஒரு கறுப்பர் இன இளைஞன் (நைஜீரியன்) நின்னானாம். நண்பன்னாளாம். மறுபடி இப்ப தியாகு யு.எஸ். போனப்பவும் அதே வாலிபன் வந்து ஹாய்ன்னானாம். சென்றமுறை இவர்களை அவன் விமான நிலைய வாசல்ல டாக்சீல ஏத்திவிட்டுப் போனானாம். இந்தத் தடவை தன் சொந்த கார்ல தியாகுவோடு கூடவே வந்திட்டான். நல்ல அழகான சொந்த வீடு, வசதிக்கு ஒண்ணும் குறைச்சல் இல்ல. அவனும் இவங்க கூடவே இருந்தானாம். கேட்டா, அவனோட தான் வாழறேன். அவன் தான் தனக்கு சகலமுன்னாளாம் தியாகுவின் பெண்!"

"அவனையே கல்யாணம்?"

"நீ எந்த காலத்துல இருக்க? கல்யாணம், தாலி நலங்கு எல்லாம் இப்ப ஏது? சேர்ந்து வாழறாங்க, Living Together! அவ்வளவு தான். தியாகு ரொம்ப இடிஞ்சு போய் வந்திருக்காரு...."

"இடிவானேன்? சட்டப்படி பதிவுத் திருமணம் நடத்தி எப்படியோ நல்லா இருங்கனு வாழ்த்திட்டு வராம...."

"அதெல்லாம் ஒரு மண்ணும் தேவை இல்ல. எங்களை எங்க போக்குல அமைதியா வாழ விடுங்கங்கறாளாமே பெண்? இவர் பேச்சு எதுவும் அங்கே எடுபடல. எங்ககிட்ட ஏற்கெனவே இவ இது பத்திச் சொல்லி இருக்கலாமே? பெற்றோர் எங்ககிட்ட ஒளிவு மறைவு என்ன? நாங்க என்ன செத்தா போயிட்டோம்னு தியாகு கண்ணீர்..."

"அடப் பாவமே, அவர் நிலை அப்படியா ஆயிப் போச்சி! பகவானே, நீ தாண்டா அவருக்கு இனி நிம்மதியக் குடுக்கணும்" என்று மூலஸ்தானம் நோக்கி ஒரு கும்பிடு போட்டார் நடேசன்.

"சரி, உன் விஷயம் என்ன? நீ எப்ப உன் பெண் கல்யாண சாப்பாடு போடப் போற? உனக்கும் ஒரே பெண்..."

"ஆமா, உடனே என் கிட்ட வா... எவளோ ஒரு பொண்ணு எப்படியோ நடந்தான்னா எல்லா பெண்களும் அப்படித் தான்னு நினைப்பா? என் மவ சின்ன வயசுலேந்தே பக்தி சிரத்தையானவ. காலேல குளிச்சிட்டுத் தான் காபி அடுப்பே பத்த வெப்பா. சுவாமி தீபம் ஏத்துவா. ஏதாவது சுலோகம் சொல்லிக்கிட்டே இருப்பா. நேரம் கிடைக்கும் போதெல்லாம் கோவில் போகாம இருக்க மாட்டா. உரத்த குரல்ல பேசமாட்டா. மாத விலக்கானா எல்லா பகுதிலயும் வீட்ல சந்நிதிரியாம கட்டுப்பாடா இருப்பா. சம்பளம் வாங்கினாலும் ஏதோ கருணை இல்லத்துக்கு முதல் காசோலை ஆயிரம் ரூபா..."

"பெங்களூருல பன்னாட்டு நிறுவனத்துல நல்ல வேலை. தனி அபார்ட் மெண்ட்ல தானே சமைச்சி சாப்பிடுறா. மூணுமாசத்துக்கு ஒரு தடவை சென்னை வந்து பெற்றோர் கூட மூணு நாள் தங்கல். இதெல்லாம் தெரிஞ்ச விஷயம் தானே? இருந்தாலும்...."

"ஒரு ஆலுமில்ல. என் பொண்ணு மேல எனக்கு ரொம்ப நம்பிக்கை. நீ விபரீதமான கற்பனையை ஓட்டாதே"

"அட, நா ஒண்ணும் தப்பா சொல்லலப்பா. நல்லாவே இருக்கட்டும். ஆனாலும் இந்த காலப் பசங்களை நம்ப முடியாது இல்ல? எந்தப் புத்துல எந்த பாம்போ! இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமான்னு...."

"நீ என்ன சொல்ல வர்றே?"

"அதாவது... நீ ஒரு தடவை பெங்களூரு போய் வா. முன் அறிவிப்பு இல்லாம திடீர்னு போ, என்ன நடக்குதுன்னு பாரு..."

www.TheMagzz.com

"போறேன். இந்த சனிக்கிழமையே போறேன். என் பொண்ணு சொக்கத் தங்கம்னு நிருபிக்கறேன். அவதூறு சொன்னவங்க, வாய் புளிச்சுதோ, மாங்கா புளிச்சுதோனுப் பேசறவங்க மூஞ்சில கரியை..."

"தாரளமா ஒரு தார் டப்பாவே கொண்டு வா... என் மூஞ்சி காத்திருக்கு"

**அ**திகாலை ஐந்து மணிக்கு பெங்களூருவில் இறங்கினார் நடேசன். ஜெயநகர் சாமுண்டீஸ்வரி அபார்ட்மெண்ட் ஐந்தாவது மாடி. மின் தூக்கியைப் பயன்படுத்தாமல் படிகள் ஏறி, அழைப்பு மணி அழுத்தினார். கதவு திறந்து ஒரு வாலிபன் "எஸ்"? என்றான். நடேசனுக்குக் குழப்பம். "மிஸ் அகிலா நடேசன்?"

"நீங்க?"

"நடேசன்"

"உள்ளே வாங்க" கதவைத் திறந்து விட்டு அவன் லிஃப்டில் இறங்கிச் சென்றான்.

"யாரது நலங்கிள்ளி?" - குளி அறை உட்புறம் இருந்து அகிலாவின் கேள்வி. யாரும் பதில் கொடுக்கவில்லை. அவளே வெளிப்பட்டு, "அய அப்பா! என்ன சர்ப்ரைஸ்!" என்றாள். "அவன் எங்கே போனான்? ஏய் நலங்கிள்ளி! சரி, நீங்க பிரஷ் பண்ணுங்கப்பா, காபி சாப்பிடலாம்"

காபி அருந்திய போது நடேசன் ஏதும் பேசும் மனநிலையில் இல்லை. கடைசியில் நீல மேகம் சொன்னதுப் போலவே ஆயிற்று பார்!

"அப்பாவை அறிமுகப்படுத்தறேன். அவர் ஒண்ணும் தப்பா நினைக்கமாட்டார். ச்சீ வா, ரொம்பத் தான் சீன் போடாத, எங்க அப்பா ரொம்ப கல்ச்சர்டு அண்டு சோஃபிஸ்டிகேடட். அவர் ஒண்ணும் பழைய பஞ்சாங்கம் இல்ல. நம்மளைப் புரிஞ்சுப்பாரு. வரமாட்டியா? சரி, உன் அபார்ட்மெண்ட்லயே இரு...." என்று கைபேசியை சோபா மீது வைத்தவள், "அவனுக்கு கீழ் தளத்துல இன்னொரு அறை இருக்குது அதுலயே இருந்துப்பானாம். கூச்ச சுபாவக்காரம்பா" என்றாள்.

"என்னம்மா இதெல்லாம்? யார் அந்த பையன்? என்ன நடக்குது இங்கே---?

"நலங்கிள்ளிப்பா, மூணு வருஷமா நாங்க சேர்ந்து தான் வாழறோம்.



**பத்மஜா:** என்னம்மா உங்க பையன் கோயிலுக்குப் போய் முருகன் டாலர்களை நிறைய சேர்த்து வைத்திருக்கிறானே எதுக்கு?

**நிர்மலா:** அடுத்த மாசம் அமெரிக்கா போகப் போகிறான். அதுக்காகத்தான்.

- சரவெடி ஸ்ரீதர்

"பிடிச்சிருந்தா கல்யாணம் கட்டலாமே?"

"நல்லவனானுப் பழகிப் பாக்கணுமே?"

"இவ்வளவு நாள்ளப் புரியலையா?"

"கொஞ்சம் நல்லவன். கொஞ்சம் அப்படி இப்படி இருக்கான். சரியா தெரிஞ்சுக்க இன்னும் சில காலம்...."

"நல்லவன் இல்லங்கற அதிருப்தி வரும்போது-?"

"இவனை வெட்டி விட்ற வேண்டியது தான். வேற ஒருவனைப் பிடிச்சுக்கலாம். Living Together! நாகரீகம்பா!"

"சரி, உங்க உறவு எப்படி? நிஜ தம்பதிகள் மாதிரியா? இல்ல, தனித் தனிப் படுக்கையா?"

"எல்லாம் உண்டுப்பா... உண்மையான கணவன் மனைவி போலத் தான் எல்லாமே"

"இதெல்லாம் நல்லவா இருக்கு? சீச்சீ!"

"காலம் ரொம்ப முன்னேறிடிச்சிப்பா. நாமும் நாகரீக வாழ்க்கை வாழப் பழகிக்கணும். எல்லா Taboosஐயும், அஷாடாபூதித்தனத்தையும், மூட நம்பிக்கைகளையும் ஒழிக்கணும். அப்புறம் நாம் படிச்ச படிப்புக்கும், அறிவுபூர்வமா சிந்திக்கறத்துக்கும் என்ன அர்த்தம்?"

"இருந்தாலும் சில நியதிகளும், இயற்கைச் சூழலும் மாறுவதில்லை குழந்தை. ஆம்பளை மாத விலக்கு ஆறானா, பிள்ளை

பெக்கறானா? நம் பண்பாடு, ஒழுக்க நெறிகள், கட்டுப்பாடான வாழ்க்கை முறை இதை எல்லாம் தூக்கி எறிஞ்சுட்டு கண்டபடி வாழத் துவங்குவது சரியா?"

"சாரிப்பா, அம்மா, அப்பா ரெண்டுப் பேருமே பழைய பழக்கங்கள்ளேந்து புதிய உலகிற்கு அவ்வளவு சுலபமா வரமாட்டீங்கன்னு தெரியும். ஆனா, இது இளைய தலைமுறையினரான எங்க வாழ்க்கைப்பா. இதை நாங்க தான் தீர்மாணிக்கணும். ப்ளீஸ், எங்களை எங்க போக்குலயே விடுங்க. இந்தப் புதிய கலாச்சாரம் ரொம்ப பிடிச்சிருக்குப்பா".

"என்ன கிரகச்சாரமோ! கணினி படிப்பும், ஆயிரக் கணக்கான ரூபாய் மாத ஊதியமும் இளைய சமுதாயத்தின் மூளையை எப்படி எல்லாம் விபரீதமாக சிந்திக்க வைக்குது! என்று வேதனையுடன் பெருமூச்சு விட்டு நடேசன் தலைகுனிந்தார். சட் என்று எழுந்து மௌனமாக அங்கிருந்து புறப்பட்டு விட்டார்.

"என்ன சொன்னே, பையன் பேரு நலங்கிள்ளியா? நமக்கு ரொம்ப வசதியாப் போச்சி சரி, நீ வீர சைவன், வீர வைஷ்ணவன் மாதிரி கொள்கைக்காரனா?" என்றார் நீலமேகம். தியாகுவும் மனம் தேறி, மாலைகளில் சிவன் கோவிலில் இவர்களைச் சந்திக்க வந்து விட்டார்.

"உன் கேள்வியே புரியலை"

"புரியும்படி சொல்றேனே. நாம் தினமும் சந்திக்கும் இடத்தை அடுத்த தெரு பெருமாள் கோவிலுக்கு மாத்தலாமே?"

"மாத்தி?...."

"வாயேன்... உனக்கு ஒரு அதிசயம் காட்றேன். உன் பிரச்சனைக்கும் தீர்வு அங்கே தான்."

அடுத்த மாலையில் பெருமாள் தரிசனம் முடித்து துளசி மென்றபடி - காதிலும் துளசி - நடேசன் ஆலய வெளிப்பிராகாரம் வந்தார். நீலமேகமும், தியாகுவும் ஏற்கெனவே ஆஜர்.

"வா, வா நம்மை மாதிரி ரெண்டு, மூணு ரிடையர்டு கேஸ்கள் இங்கே இருக்கு பாரு. சார் பேரு குலசேகரன். தமிழ் ஆசிரியரா இருந்தவரு. உன்னை மாதிரி தான் ஒழுக்கம், பண்பாடுனு உயிரை விடுற பைத்தியம். "சம்பளம் போதும், தனியே ட்யூஷன், கியூஷன்னு நடத்தி எக்ஸ்ட்ரா துட்டுக்கு ஆலாப் பறக்க மாட்டேன். பள்ளி நேரம் தவிர மற்ற பொழுதை என் இஷ்டத்துக்கு சுதந்திரமாச் செலவிடுவேன்"னு வாழ்ந்தவரு என்றார் நீலமேகம்.

குலசேகரன் தமிழ் இலக்கியம் பற்றி சுவையாக நிறையைப் பேசினார். இவரின் நட்பு நடேசனுக்கு இனித்தது. ஒரு மாத அவகாசத்தில் நீலமேகம் தன் திட்டத்தை செயல்படுத்த ஆரம்பித்தார்.

"ஏம்பா குலசேகர ஆழ்வார், உன் ஒரே பையன் நலங்கிள்ளி பெங்களூருல இருக்காங்றியே, அவன் எப்படி? சொல்லாம கொள்ளாம ஒரு நா திடீர்னுப் போய் வாயேன்!"

"என் மவன் பட்டை தீட்டின வைரம்"

"அட, பிளாட்டினமாவே இருக்கட்டும்பா, ஒரு தடவை பாத்துட்டு வந்து சொல்லேன்!

பெங்களூரு சென்று திரும்பிய குலசேகரனும் நடேசன் போல வருத்தத்தில் தான் ஆழ்ந்தார். என்னப்பா. இந்த காலப் பசங்க... இவங்களை யார் தான் நல்ல பாதைக்குத் திருப்ப முடியும்? யார் சொன்னா கேப்பாங்க?"

"ஒரு யோசனை... அதுக்கு நீங்க தயாரா," என்றார் நீலமேகம்.

"மல்லாந்து படுத்து எச்சில் துப்பினா அது நம் மார்மேல, நம் குழந்தைகளை நாமே கேவலப்படுத்தலாமா?"

"வேற வழி இல்ல. நான் நல்ல நீதி நெறிகளை பசங்களுக்கு போதிச்சி, அப்படியே வாழ்ந்தேன். நீங்களும் லஞ்சம், கிஞ்சம்னு அசடு வழியாம நேர்மையைக் கடைபிடிச்சீங்க, தேச நலன் தான் முக்கியம். இதை நடத்திக் காட்டுவோம்" என்றார் குலசேகரன் உறுதியாக.

நலங்கிள்ளியின் செல்ஃபோன் ஒலி எழுப்பியது. ஐ, அப்பா! அவரின் கோபம் தீர்ந்ததா? அவர் என்னை மன்னித்து அங்கீகரித்தாரா! "ஹலோ அப்பா!"

"தம்பி, நான் உன் அப்பாவின் நண்பன் நீலமேகம், பயப்படாதே, உன் அப்பா மாடியில் இருந்து தவறி விழுந்து பலத்த அடி. அவர் பேசற நிலைல இல்ல. அவர் சொல்லித்தான் நான் உன் கிட்டப் பேசறேன். அவரு வாயால பேசாம ஜாடை காட்டுறாரு.

www.tamilmagnat.com




*With best compliments from*


**Rtn.Dr.SAIPRASANNA**
Vasantha Nursing Home, Thiruvannamalai

**DHANVANTHRI PROJECT OF ROTARY DISTRICT 3230**

# பாடம் கற்றுத் தந்த பணம்

ஒரு தந்தை ஏராளமான சொத்துகள் வைத்திருந்தார். தன் பணத்தை ஏழை எளிய மக்களுக்கு தொழில் செய்வதற்கு தானமாக வழங்கினார். அவரது தானத்தால் மகிழ்ந்து மக்கள் அவரை வாழ்த்தினர். தொழில் பெருகி ஊரே செழித்தது. ஒரு நாள், அவர் இறந்து போனார்.

சொத்து முழுவதும் அவரது மகனுக்குச் சேர்ந்தது. அப்பாவுக்கு கொஞ்சம் கூட பொருத்தமில்லாத குணம் கொண்ட அந்த மகன், யாருக்கும் எதுவும் கொடுக்காமல், ஊதாரித்தனமாக பணத்தைச் செலவழித்தான். குடி, பெண் சகவாசம் என அத்தனையும் தொலைத்தான். வறுமையில் ஆழ்ந்தான்.

இதை பிதுர் லோகத்தில் இருந்து கவனித்த தந்தை வருத்தப்பட்டார். தேவதைகளிடம் அனுமதி பெற்று பூலோகம் வந்த அவர், தன் மகனிடம் ஒரு அட்சய பாத்திரத்தைக் கொடுத்தார்.

"மகனே! இது கேட்டதையெல்லாம் தரும். இதில் கிடைக்கும் செல்வத்தை பயனுள்ள வழியில் செலவழி. உன் கஷ்டமும் தீரும். பிறர் கஷ்டமும் தொலையும்." என்று புத்திமதி சொல்லி விட்டு போனார்.

சரியென தலையாட்டிய அவன், பாத்திரத்தைப் பெற்ற அடுத்த நிமிடமே, "பாத்திரமே! எனக்கு நிறைய மதுவைக் கொடு" என பிரார்த்தித்தான். மதுவைக் குடித்தான். அதிலிருந்து கிடைத்த பொற்காசுகளைக் கொண்டு மீண்டும் சுகம் தேட ஆரம்பித்தான். ஒரு நாள், போதையில் அந்த பாத்திரத்தை கீழே போட அது நொறுங்கிப் போனது. நல்லவர்களிடம் சேரும் பணமே என்றும் நிலைக்கும். கெட்டவர்களுக்கு அந்தப் பணமே பாடம் கற்றுத் தந்து விடும்.

**- எஸ்.ஆறுமுகம், தேனி.**

www.TheMagnat.com

உங்கம்மா அழுதுகிட்டே இருக்காங்க. அவங்களும் பேசற மனநிலைல இல்ல. உடனே புறப்பட்டு வா!"

இதே போல நடேசனின் கைபேசியை எடுத்து அகிலாவிடம் தியாகு பேசினார். "ஐயோ அகிலா, உங்கம்மா..."

**ந**லங்கிள்ளி பதறி சென்னை வந்தான். தன் வீட்டு அழைப்பு மணியை அழுத்தினான் "யாரப்பாநீ?" என்று வெளிப்பட்டாள் திருமதி நடேசன்.

"யாரம்மா நீங்க!"

உள்ளே படுத்திருந்த குலசேகரன் செயற்கையான பலவீனக் குரலில் சொன்னார். "உள்ளே வாப்பா, இவங்க தான் இனி உன் அம்மா, இவங்களோடு தான் இப்ப மனம் ஒத்து வாழ்ந்துக்கிட்டிருந்தேன். உங்கம்மா என்னை விட்டு விலகிப் போயிட்டாங்க" உஹ்ஹுா உஹ்ஹு! (இருமல்)

**அ**கிலா இங்கே காலிங்பெல் அழுத்த திருமதி குலசேகரன் வந்து கதவைத் திறந்தாள் "யாரம்மா நீ?"

படுத்திருந்த நடேசன் மெல்லிய குரலில் பேசினார். "உள்ளே வாம்மா, இவங்க தான் உன் புது அம்மா. இவங்களோடு தான் வாழறேன். உன் அம்மாவுக்கு என்னைப் பிடிக்கலேனுப் பிரிஞ்சுப் போயிட்டா. என் மேல ஒரு தப்புமில்ல. புரிஞ்சுக்கோ"

அதிர்ந்தாள் அகிலா.

பிறகென்ன, தனக்கு வரும்போது எங்க வாழ்க்கை, எனது இஷ்டம் என்று இருந்த குழந்தைகளுக்கு தன் பெற்றோர் அப்படி வாழ ஆரம்பிப்பதை தாங்க முடியவில்லை. திடுக்கிட்டுத் தடுமாறியவர்கள் நீலமேகம் மூலம் உண்மையைத் தெரிந்து கொண்டதோடு தாங்களும் திருமணம் செய்துகொண்டு முறையாக குடித்தனம் செய்ய ஆரம்பித்துவிட்டனர்.

அவரவர் பாஷையில் சொன்னால்தானே புரிகிறது! ●



# அன்றே சொன்னது
# இலக்கியம்

www.TheMagnet.com

"புறச் சாதனங்களால் ஓரளவுக்கு மட்டுமே தோற்றப் பொலிவைச் சீர்படுத்திக் கொள்ள முடியும். எந்தக் கவலையும் இல்லாமல், மனதில் அமைதியும் நிம்மதியும் இருந்தால் உள்ளும் புறமும் அழகாகப் பொலிவாகக் காணப்படும்.

'வரலாறு அவசியம் இல்லை, இலக்கியம் புரியாது, தத்துவம் வேண்டவே வேண்டாம்!'

இவற்றை நாம் இப்போது நிறைய கேட்கிறோம். வரலாறுக்கு நிறைய அவசியம் இருக்கிறது. வரலாற்றைப் படிப்பதன் மூலம் நாம் வாழ்க்கையைப் படிக்கிறோம், இலக்கியத்தைச் சுவைக்கிறோம். வரலாறு காலத்தின் கண்ணாடி அந்தந்த காலத்து மனிதர்களின் சமூக, பொருளாதார நிலைப்பாடுகள், கலாச்சார மேம்பாடுகள் வாழ்வியல் நெறிகள், தத்துவங்கள் கொள்கைகளை அறிந்து கொள்ள முடிகிறது.

இலக்கியமும் கலாச்சாரமும் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தவை. செய்திதாள்களும் பத்திரிகைகளும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் இன்றைய வாழ்வு முறையை பிரதிபலிக்கின்றன. இவற்றின் ஊடே வரும் விளம்பரங்கள் மனிதர்களின் ஆசா பாசங்கள், நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் இவற்றைத் தெள்ளத் தெளிவாகப் படம் பிடித்தக் காட்டுகின்றன. தொலைக்காட்சியில் நெடுந் தொடர்களுக்கு இடையே வரும் சில விளம்பரங்கள் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

'அக்கா, பிரண்ட்ஸோட சினிமாக்குப் போறேன். அம்மாகிட்ட சொல்லாதே, என்பவன் திகைத்துப் போகிறான். குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்ப்பது அக்கா

லக்ஷ்மி விஸ்வநாதன்

அல்ல, அம்மா! தலைமுடிக்குக் கலர் செய்திருக்கும் அம்மா இளமையாகத் தெரிவதால் ஏற்பட்ட குழப்பம் அழகாகக் காட்சிப் படுத்தப் பட்டிருக்கிறது.


மற்றொன்றில் சிறுமிகள் இருவர் தம் தாயிடம், 'எங்களப் பாத்துக்கறீங்க, வீட்டை கவனிச்சுக்கறீங்க. சரியான நேரத்திலே சாப்பாடு குடுக்கறீங்க பதிலுக்கு நாங்க என்ன செஞ்சிருக்கோம்? உங்க தலைமுடியை நரைக்க வெச்சிருக்கோம். தலைமுடியைப் பராமரிக்கவேணும். இதை பயன்படுத்துங்க என்று ஒரு பாக்கெட்டைத் தருகிறார்கள். தாய் இளமையாகப் பொலிவுடன் தோன்ற வேண்டும் என்ற சிறுமிகளின் அக்கறை தெளிவாகத் தெரிகிறது.

புறச் சாதனங்களால் ஓரளவுக்கு மட்டுமே தோற்றப் பொலிவைச் சீர்படுத்திக் கொள்ள முடியும். எந்தக் கவலையும் இல்லாமல், மனதில் அமைதியும் நிம்மதியும் இருந்தால் உள்ளும் புறமும் அழகாகப் பொலிவாகக் காணப்படும்.



இந்தக் காலத்தில் தான் இது பெரிய அளவில் பேசப்படுகிறதா? இதைப் பற்றி இலக்கியங்களில் எங்கேனும் சொல்லப்பட்டிருக்கிறதா என்று தேடினேன். சிறிது தேடலுக்குப் பின் எனக்குக் கிடைத்தது ஒரு அமையான சங்கப்பாடல். குடும்பத்தில், அரசாங்கத்தில், சமூகத்தில் என்று வெளியில் எல்லாம் சரிவர இயங்கினால் ஒவ்வொருவனுக்குள்ளேயும் நிம்மதி நிலவுகிறது, கவலை பறந்தோடுகிறது. இது அகம், புறம் இரண்டையும் பொலிவுடன் திகழச் செய்கிறது என்பதை இப்பாடல் அழகுபட விவரிக்கிறது.

புலவரிடம் நண்பர் கேட்கிறார், 'உமக்கு நிறைய வயதாகிறது. தலைமுடி நரைக்கவே இல்லையே? அதற்கென்ன காரணம்?' புலவரின் பதில் சிறப்பானதாக உள்ளது. அக்காலக் குடும்ப, சமூக வாழ்வியலை எடுத்துக் காட்டுகிறது. புலவரின் பதில் 'என் மனைவி சிறந்தவள், நல்லவள். எனக்குக் குழந்தைகள் உண்டு. என் குடும்பத்தில் உள்ள இளைவர்கள் நான் நினைப்பதையே நினைக்கிறார்கள். என் கருத்துக்கு மாற்றுக் கருத்து சொல்வதில்லை. குடும்பம் இவ்வாறு நிம்மதியையும் சந்தோஷத்தையும் தருகிறது. என் நாட்டு அரசன் தீமை இழைக்காமல் நல்லதையே செய்து எங்களைக் காக்கின்றான். நல்ல தலைவனால் நாட்டில் அமைதி நிலவுகிறது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக, நான் வாழும் ஊரில் அறிவுள்ளவர்கள், நிதானமாகச் சிந்தித்துத்



தெளிவு பெறுபவர்கள் பலர் வாழ்கிறார்கள்! சமூக நிலையில் இவர்கள் செம்மையாகச் செயல்படுகிறார்கள். எந்தக் கவலையும் பயமும் எனக்கில்லை. என் தலை நரைக்கவில்லை!

எவ்வளவு நுண்ணிய உள்ளார்ந்த பதில்! அகத்தூய்மை புறப் பொலிவைத் தருகிறது. தனி மனிதன் சீரிய வாழ்க்கை வாழ்வதோடு அவன் குடும்பமும் மரியாதையுடனும் பண்போடும் விளங்குகிறது. நாட்டை ஆள்பவன் நன்மைகளையே செய்வதால் மக்கள் இன்பமாக வாழ்கின்றனர். படித்தவர்கள் நிரம்பிய ஊர் என்பது மேலும் சிறப்பைத் தருகிறது. நுட்பமான கேள்விக்குக் கிடைப்பது அழகிய பதில். பாடியவர் பிசிராந்தையார். புறநானூறில் உள்ள பாடல்

**'யாண்டு பல ஆக நரை இல ஆகுதல்**
**யாங்கு ஆகியர்?' என வினவுதிர் ஆயின்**
**மாண்ட என் மனைவியோடு, மக்களின் நிரம்பினர்;**
**யான் கண்டனையர் என் இளையரும்; வேந்தனும்**
**அல்லவை செய்யான், காக்கும்; அதன் தலை**
**ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்**
**சான்றோர் பலர், யான் வாழும் ஊரே**

**அ**து நகரத்தின் மையப்பகுதி. பழமையான பெரிய கோவில், எதிரே குளம், நான்கு மாடவீதிகள். தேர், முகப்பு மண்டபம் எல்லாம் உள்ளன. பெரிய கோவிலின் நூலகம் பெரிதாக்கப்பட்டு நேரடியாக அதற்குள்ளேயே (கோவிலுக்குள் வராமலே) செல்ல வசதி செய்யப்பட்டிருப்பது செய்தித்தாளில் வெளிவந்தது. ஒரு நாள் காலை அங்கு சென்றேன். நல்ல காற்றோட்டமான பெரிய அறை. இரண்டு, மூன்று பெரிய மேஜைகள், அவற்றில் அன்றைய செய்தித்தாள்கள். சுற்றிலும் பெரிய பெரிய கண்ணாடி அலமாரிகளில் நிறைய நிறைய புத்தகங்கள். அருகில் சென்றேன். நல்ல நல்ல தலைப்புகளில் அருமையான அரியதான புத்தகங்கள் அழகாக அடுக்கப்பட்டிருந்தன. அலமாரிக் கதவுகள் இழுத்து மூடப்பட்டு, பெரிய பெரிய பூட்டுகள் தொங்கின!

மேசையின் முன் அமர்ந்து சில முதியவர்கள் பேப்பர் படித்துக் கொண்டிருந்தனர். சற்று நேரத்திற்குப்பிறகு, ஒருவர் உள்ளே வந்தார். தனியாகப் போடப்பட்டிருந்த மேசையில் அமர்ந்து பதிவேடுகளைப் புரட்டிக் கொண்டிருந்தார். வழக்கமாகச் சந்திக்காத முகமாகத் தோன்றியதால் என்னிடம் என்ன வேண்டும்? என்றார். 'புத்தகங்களைப் பார்க்க வேண்டும். அலமாரிகளைத் திறக்க முடியுமா? என்றேன்.

'இல்லை, அதற்கு அனுமதி இல்லை'

'படிப்பதற்குத் தானே புத்தகங்கள்

www.TheMagnan.com

வைத்திருக்கிறீர்கள்?

'இல்லை, அவற்றைத் தர முடியாது!'

'வீட்டிற்குத் தர வேண்டாம், இங்கேயே படிக்கிறேன்' என்றேன்.

'இல்லை, அனுமதி இல்லை!

'யாரைப் பார்த்து அனுமதி பெற வேண்டும்?'

'யாரைப் பார்த்தாலும் அனுமதி கிடைக்காது' என்று கோபமாகக் கூறியவர், மேற்கொண்டு பேசவிரும்பாதவராக அங்கிருந்து சென்றுவிட்டார்!

திகைப்படைந்தேன். இந்த பதிலைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. நானே நூலகராக இருந்திருக்கிறேன். அன்று எனக்குக் கிடைத்தது ஒரு வித்தியாசமான அனுபவம். வேறு வழியில்லாமல் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது ஔவையார் பாடல் நினைவுக்கு வந்தது.

அதிகமானின் அவைப் புலவர் ஔவையார். அவனுடைய வீரத்தையும், போர்க்களத்தில் அவன் பெற்ற வெற்றிகளையும் கொடைப் பண்பையும் போற்றிப் பல பாடல்களை இயற்றி உள்ளார். தொண்டைமான் அதிகமானின் உறவினன். ஒருமுறை இவர்களிடையே போர் மூண்டது. தொண்டைமானால் அதிகமானை வெல்ல முடியாது. உறவினர்க்கிடையே சண்டை மூண்டால் ஒரே குலத்தைச் சார்ந்தவரே இறப்பர். இதைத்தடுக்க விரும்பினார் ஔவை. தொண்டைமானிடம் சென்றார். பெரும் புலவராயிற்றே, பகைவனிடமிருந்து வேறு வருகிறார். அதனால் அரசன் தடபுடலாக வரவேற்று உபசரித்துத் தன் படைக்கலன்களை அவர் பார்வையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறான். அவற்றைப் பார்த்துத் திகைத்துப் போய் ஔவையார் திரும்ப அதிகமானிடம் சென்று தன்னுடன் மோத வேண்டாமென்று புத்திமதி கூறுவார்' என்று எண்ணினான். படைக்கலன்களைப் பார்வையிட்டு விட்டுத் திரும்பிய ஔவையின் தைரியமான பேச்சு போர் ஏற்படாமல் தடுத்து விடுகிறது!

'உன்னுடைய ஆயுதங்கள் மயிலிறகு பூண்டுள்ளன. அவற்றில் மாலைகள் சூட்டப்பட்டுள்ளன. நறுமணம் கமழும் நெய் பூசி பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன. ஆனால் அங்கு அதியமானின் ஆயுதங்கள் பகைவர்களைக் குத்திக் கிழித்ததால் நுனி சிதைந்து கூர் மழுங்கி, கொல்லன் உலைக் களத்தில் போடப்பட்டுள்ளன. உண்டென்றால் உணவு கொடுத்து, தன்னிடம் இல்லையென்றால் எல்லோருடன் சேர்ந்து அமர்ந்து உண்ணும் ஏழைகளின் தலைவன். அவனுடைய வேல்களின் திறனைப் போர்க்களத்தில் காணலாம்!

ஆயுதங்களுக்கான தேவை போர்க்களத்தில் தான். அதற்குமாறாக அவற்றுக்கு நறுநெய் பூசி மயில்பீலி சூடி மாலை அணிவித்திருப்பதால் யாருக்கு என்ன பயன்?

**இவ்வே பீலி அணிந்து மாலை சூட்டி,**
**கண் திரள் நோன் காழ் திருத்தி, நெய் அணிந்து**
**கடியுடை வியல் நகரவ்வே, அவ்வே**
**பகைவர்க்குத்திக் கோடு, நுதி, சிதைந்து**
**கொல் துறைக் குற்றிய மாதோ - என்றும்**
**உண்டாயின் பதம் கொடுத்து**
**இல்லாயின் உடன் உண்ணும்**
**இல்லோர் ஒக்கல் தலைவன்**
**அண்ணல் எம் கோமான் வைந்நுதிவேவே!**

**ப**த்து பன்னிரண்டு வருடங்களுக்கு முந்தி நடந்த ஒரு சம்பவம். இந்தியாவிலிருந்து வயதான ஒரு தம்பதி மகனைப் பார்க்க அமெரிக்க சென்றனர். சிரக்யூசிலிருந்து அவர்களை வரவேற்க மகன் விமான நிலையத்திற்குக் காரில் வந்தான். அவன் வரும்போதே மழை விடாமல் பெய்து கொண்டிருந்தது. வரலாறு காணாத மழை கொட்டிக் கொண்டே இருந்தது. 300 ஆண்டுகளாக இத்தகைய மழை பெய்ததில்லை. சாலைகளில் வெள்ளம் கரை புரண்டோடியது. அமெரிக்காவின் கிழக்குப் பகுதி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. தொலை தொடர்பு சாதனங்களும் பயனில்லாமல் போயிற்று.

பயணம் செய்து வந்தவர்களும் வரவேற்க வந்தவர்களும் விமான நிலையத்தில் தங்கியிருந்தனர். நிவாரணப் பணிகள்



> **வீரர்களோடு வீரர்கள் மோதுவது தான் போர். வீரர் அல்லாதவர்கள் தாக்கப்படக் கூடாது. போர் மூளுவதற்கு முன்பே அவர்கள் வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வேண்டும்.**

துரிதகதியில் முடுக்கிவிடப் பட்டிருந்தன. நாடு, மதம், மொழி, இனம் என்ற எதையும் கருத்தில் கொள்ளாமல் பயணிகளில் முதியவர்களையும் அவர்களை வரவேற்க வந்தவர்களையும் முதலில் ராணுவ ஹெலிகாப்டர்களில் ஏற்றிப் பாதுகாப்பான இடங்களுக்கு கூட்டிச் சென்றனர்! இந்த இந்திய தம்பதிக்கும் முதல் பயண வாய்ப்புக் கிடைத்தது. மகனுடன் சென்ற அவர்களுக்கு நல்ல உபசரிப்பும் சகல வசதிகளும் செய்து தரப்பட்டன. ஐந்து நாட்களுக்குப் பிறகு வெள்ளம் வடிந்தது. மகனுடைய காரில் பத்திரமாக வீடு திரும்பினார்கள்!

நம் நாட்டவருக்கு எங்கோ தொலைதூரத்தில், வேற்று நாட்டில் இத்தகைய பரிவும் அக்கறையும் காட்டப்பட்டது.

**முதுகுடுமிப் பெருவழுதி** என்ற பாண்டிய அரசன் எதிரியின் மீது படையெடுத்து வந்துள்ளான். எதிரியின் கோட்டை முற்றுகை இடப்பட்டுள்ளது. நற்பண்புள்ள அந்தப் பாண்டியனின் சேனை கோட்டையினுள் இருப்போருக்கு எச்சரிக்கை விடுப்பதை இப்பாடல் அழகாக விவரிக்கிறது. வீரர்களோடு வீரர்கள் மோதுவது தான் போர். வீரர் அல்லாதவர்கள் தாக்கப்படக் கூடாது. போர் மூளுவதற்கு முன்பே அவர்கள் வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வேண்டும்.

வீரர் அல்லாதவர் யார்? அதற்கு ஒரு லிஸ்டு தரப்பட்டிருக்கிறது. 'பசுக்களும், அவற்றைப் பேணும் அந்தணர்களும், பெண்களும், உடல் நலமில்லாதவர்களும், ஈமக்கடன் செய்ய நல்ல பிள்ளைகளைப் பெறாதவர்களும் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுங்கள். தரும வழியால் செல்லும் எங்கள் அரசன் அம்பு விடுவதற்கு முன் விடுக்கும் எச்சரிக்கை' என்கிறார் புலவர் நெட்டிமையார்.

இந்தக் கருத்து நம் நாட்டுக்கு மட்டும் உரியது அல்ல. உலகளாவிய இக்கருத்தை இந்தத் தமிழ்ப் பாடல் அழகாகப் பதிவு செய்கிறது.

**ஆவும், ஆன் இயற் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடையீடும், பேணித்**
**தென் புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன் போல் புதல்வர்ப் பெறா அதீரும்**
**எம் அம்பு கடிவிடுதும், நும் அரண் சேர்மின்' என**
**அறத்து ஆறு நுவலும் பூட்கை,**

காலத்தை விஞ்சி நிற்கும் கருத்துக்கள் இன்றைய நிகழ்வுகள், சம்பவங்களோடு பொருந்திப் போகின்றன. இலக்கியம் வாழ்வியல் கருத்துக்களை எளிதாக விளக்குகிறது. வரலாற்றைப் படிக்க இலக்கியம் அவசியம். முதல் பாட்டில் தலை முறை இடைவெளியும் குறிப்பிடப்படுகிறது. வயதில் இளையவர்கள் பெரியவர்களுக்கு அளிக்கும் மரியாதையும் பண்பும் இக்காலத்துக்கு அவசியமானதொன்று. நல்லாட்சி எல்லோருக்கும் பொதுவானது. அதே போன்று சிந்தித்துப் பார்த்து அறிவுரை நல்க ஆன்றோர்கள் தேவை. போர் வேண்டாம் என்று **ஔவையார்** சொல்லவில்லை. ஒரே குலத்தவர் வீணாக மடிந்து போக வேண்டாமே என்ற ஆதங்கம் அவர் பாட்டில் வெளிப்படுகிறது. தவிர ஆயுதங்கள் என்றாலும் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தும் வலியுறுத்தப்படுகிறது. சில கடமைகளை முடிக்காதவர், சில தொழில்களைச் செய்பவர், உடல் பலவீனமானவர்கள் ஆகியோர் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். **நெட்டிமையார்** பாடல் இதை அழுத்தமாகப் பதிவு செய்கிறது.

மூன்று சிறிய பாடல்களில் இவ்வளவு சீரிய கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன. மேம்போக்காகப் படிக்கிறவர்களாலும் இவற்றை உணர்ந்து கொள்ள முடிகிறது. ஆழ்ந்து முங்கிக் குளித்தால் அரியவகை முத்துக்களைப் பெறலாம்!

புறநானூறும் புதியதே!
புறம் தள்ள வேண்டாமே! ●



கவிதை

# உன்னை விட உயர்ந்தவள்

- ஆண்டாள் பிரியதர்ஷினி

என் மீது ஏன்
அமிலம் ஊற்றுகிறாய்?
நான்
மெல்லின வார்த்தைக்காரி
என்பதாலா?

என் மீது ஏன்
அமிலம் ஊற்றுகிறாய்?
நான்
அன்பின் அகராதி
என்பதாலா?

என் மீது ஏன்
அமிலம் ஊற்றுகிறாய்?
நான்
புன்னகையின்
இரட்டைப் பிறவி என்பதாலா?

என் மீது ஏன்
அமிலம் ஊற்றுகிறாய்?
நான்
தலைக்கனம் மறந்தவள்
என்பதாலா?

என் மீது ஏன்
அமிலம் ஊற்றுகிறாய்?
நான்
பூக்களுக்கு முத்தம் தருபவள்
என்பதாலா?

www.TheMagnet.com

என் மீது ஏன்
அமிலம் ஊற்றுகிறாய்?
நான்
கவிதை எழுதுபவள்
என்பதாலா?

என் மீது ஏன்
அமிலம் ஊற்றுகிறாய்?
என் முதுகில் குத்திய
உன்னையும்
பலமுறை காப்பாற்றியவள்
என்பதாலா?

சரி. இருக்கட்டும் போ.
என்னை
நிர்வாணப்படுத்துவதே
உனக்குச் சந்தோஷம் எனில்

நான் உயர்ந்தவள்
உன் மனைவியை விட
உன் மகளை விட
உன் அம்மாவை விட
ஆண் என்று திரியும்
உன்னை விட...
ததாஸ்து...!!

# மனத் தூய்மை

முதல் நாள் பல மணி நேரம் கொட்டிய மழையினால் மாலை வேளையில் குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. கொசுவிற்கு பயந்து ஃபேன் போட்டுப் படுத்திருந்ததால் தொண்டை இலேசாக வலித்தது. சூடாக ஹார்லிக்ஸோ, காபியோ, டீயோ குறைந்த பட்சம் வென்னீர் பருகினாலாவது இதமாக இருக்கும் என்று தோன்றியது வசுமதிக்கு. அதனால் "கோவிலுக்கு போய் வருகிறேன் இந்து" என்றபடி இலேசாக இருமினாள்.

'தூய்மையான பாரதம்' பற்றி ப்ராஜெக்ட் ஒர்க் நாளைக்கு கொடுத்தாகணும். இந்த பிராஜெக்ட் குழந்தைகளுக்கா? பெற்றோர்களாகிய எங்களுக்கா என்று தெரியலையே" என்ற இந்து "எழுதுடா தெருக்களில் குப்பையை சேரவிடாது அவ்வப்பொழுது அவைகளை அகற்றி விட்டால் நோய்களின் ஆதிக்கத்திலிருந்து மீளலாம். இது முதல் பாயிண்ட் என்று மகனின் முன் புஸ்தகத்தை போட்டாள்.

www.TheMagnet.com

பாட்டியின் இருமல் மதனிடம் நெருடலை ஏற்படுத்தியது "பாட்டி! நான் வேணா வென்னீரை இன்டக்ஷன் ஸ்ட்வ்வில் போட்டு கொண்டு வரட்டுமா? என்றவனின் தலையில் நக்கென குட்டினாள் இந்து "பாடம் கவனிக்கும் போது கவனத்தை சிதற விடக் கூடாது என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்.

இதற்கு மேல் இந்துவிடமிருந்து இரக்கத்தை வேண்டுவது இயலாத காரியம் என்று உணர்ந்து கொண்ட வசுமதி மெதுவாக கோவிலை நோக்கி நகர்ந்தாள்.

கணவனை இழந்து மகன் வீட்டில் தங்க நேர்ந்த இந்த மூன்று மாதங்களில் இந்துவின் இந்த அலட்சியம் பழகிப் போய் விட்டிருந்தது! காலம் தான் எத்தனை மாற்றங்களை செய்து விடுகிறது? இதே இந்துவை 10 வருடங்களுக்கு முன் எப்படியெல்லாம் வசுமதி ஆட்டுவித்திருக்கிறாள்? இப்பொழுது இந்துவின் கை ஓங்கி இருக்க வசுமதி அவள் சொற்படி எல்லாம் ஆட வேண்டியிருந்தது. இது தான் காலத்தின் கொடுமை போல.

வசுமதி இயற்கையிலேயே அகம்பாவமும் கர்வமும்



கொண்டிருந்தாள். இரண்டு பிள்ளைகளுக்குப் பின் பிறந்த பெண் என்று பெற்றோர் கொண்டாடியதில் அவளது கர்வம் அதிகரித்தது. திருமணம் அவளிடம் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. அவளது புக்ககத்தினர் சாத்வீகமான சுபாவம் கொண்டவர்கள். அவளது குணத்தை புரிந்து கொண்டு ஒதுங்கி விட்டனர். கணவரும் அப்பிராணி. பிள்ளையோ அவர்களின் அடிஒற்றி அம்மா பேச்சைத் தாண்டாமல் வளர்நதான். இதனால் பாதிப்படைந்தவள் இந்துமதிதான். சிறுவயதிலேயே பெற்றோரை இழந்து தமயனின் நிழலில் வளர்ந்த அவளுக்கு பிறந்தகத்தின் பலம் இல்லை. இதனால் மாமியார் என்ற இடத்தில் இருந்து கொண்டு இந்துவை வசுமதி ஆட்டுவித்தாள். இந்த ஆட்டத்தால் இநது துவண்டு தான் போனாள். அவளது நாத்தனாரும் தாயுடைய இந்த ஆட்டத்தில் கலந்து கொண்டு இந்துவைக் கலங்கடித்தாள்.

உள்ளூரிலேயே வாழ்க்கைப் பட்டிருந்ததால் அடிக்கடி பிறந்தகம் வந்து விடும் அவள் மாலை டிபன், இரவு சாப்பாடு என்று அனைத்தையும் முடித்துக் கொண்டு தான் திரும்புவாள். கணவனால் அவளை வீட்டிற்கு அழைத்து செல்ல முடியாத சூழ்நிலை ஏற்படும் சமயங்களில் அவனுக்கும் சேர்த்து சாப்பாட்டை எடுத்துச் செல்வாள். அதுவும் சூலிப் பெண் ஆசைப்படுவது போல் 'மசால் தோசை பண்ணும்மா இன்னிக்கு, பூரி சாரு சாப்பிடணும் போல இருக்கு, உளுந்து சேவையும் தேங்காய் சேவையும் சாப்பிட்டு நாளாச்சாம்மா' என்று பட்டியலிட்டு செய்யச் சொல்வாள். இந்து இவைகளை செய்யச் சமயலறையில் தனியாக அல்லாடிக் கொண்டிருக்க தாயும் மகளும் அரட்டை அடித்துக் கொண்டிருப்பார்கள். ஒரு துரும்பைக் கூடக் கிள்ளிப் போட மாட்டாள். காபி டம்ளர்கள், டிபன் தட்டுகள், பால் டம்ளர்கள் என்று அம்பார பாத்திரங்கள் இரவில் விழும்.

இவற்றை எல்லாம் இந்து எப்படியோ சமாளித்து விட்டாள். ஆனால் கருவுற்ற பின் அவளால் வேலை செய்யவே முடியாமல் போயிற்று. நாத்தனாரின் குரலை வாசலில் கேட்டாளே அரண்டு போவாள். வாயில்லாப் பூச்சியான கணவனிடம் புலம்பி என்ன பலன் என்று அடங்கிவிடுவாள். இது போன்ற சமயங்களில் தன்னைத் தாங்க பிறந்தகம் இல்லாமல் போயிற்றே என்று குமுறுவாள்.

கர்ப்பிணியான இந்துவிற்கு நான்கு மாதங்கள் ஆகியும் வாந்தி வருவது நிற்கவில்லை. அன்று வாயிலெடுத்து எடுத்தது சோர்ந்து போனாள் வசுமதியோ பரிதாபப்பட்டு 'இரவிற்கும் சேர்த்து சமைத்து விட்டு ரெஸ்ட் எடு' என்று கூற முருங்கை சாம்பாரும், உருளை கறியும் செய்துவிட்டு படுத்துவிட்டாள்.

பிள்ளைக்கு பரிமாறி அவனை அலுவலகத்திற்கு அனுப்பிவிட்டு கணவனும் மனைவியுமாய் சேர்ந்து சாப்பிட்டானதும் உணவு வகைகளை மூடி வைத்து விட்டு வசுமதி ஹாலுக்கு வந்த போது பைக் வாசலில் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய நிர்மலாவும் அவள் கணவரும் களைப்புடன் உள்ளே நுழைந்தனர்.

"என்ன மாப்பிள்ளை, திடீரெனு நிர்மலாவுடன் வந்து நிற்கிறீங்க" ஆபீஸ் இல்லையா?

எல்லாம் உங்க மக அடிக்கிற கூத்து மாமி. திடீரென இன்று கார்த்திகை சோமவாரம், அதோடு சஷ்டி வேற. அதனால திருப்பரங்குன்றம் போகணுமென்று ஒற்றைக் காலில் நின்றாள். அதனாலே காபி சாப்பிட்டு கிளம்பினோம். ஒரே கூட்டம் தரிசனம் முடிந்து வெளியே வர இத்தனை நேரமாகி விட்டது. அதான் நிர்மலாவை இங்கே விட்டு விட்டு ஆபீஸுக்கு போகலாம்னு வர்றேன். ராத்திரி நான் வந்து கூட்டிக்கிறேன்.

"நன்னாயிருக்கே? காலையில் வெறும் காபி சாப்பிட்டது வெறும் வயித்தோட ஆபீஸுக்கு எப்படி போவீங்க? நல்ல வேளையா ராத்திரிக்கும் சேர்த்து இந்து சமையல் பண்ணி வெச்சிருக்காள். இரண்டு பேரும் தாராளமாய் சாப்பிடலாம் என்று கூறி தட்டை வைக்க முக்காவாசி சாப்பாட்டை இருவருமே காலி செய்து விட்டனர்.

இந்து எழுந்த போது அவளுக்கு

ராஜலக்ஷ்மி கௌரிசங்கர்

மட்டுமே போதும் போதாதென்பது போல சாப்பாடு இருந்தது. இரவு நாத்தனார் குடும்பத்தினருக்கும் சேர்ந்து டிபன் செய்யணும் என்ற நினைப்பு மேலும் சோர்வை உண்டாக்கியது.

"ஏம்மா! ராத்திரிக்கு என்ன டிபன்?" இந்து கொண்டு வந்து வைத்த காபியை காராபூந்தியுடன் சேர்த்து குடித்துக் கொண்டே கேட்டாள் நிர்மலா.

"தெரியலையே நிர்மலா? இந்து உடம்பு எப்படி இருக்குன்னு தெரியலை. சோர்வா இருக்கிறாள். காலையிலே ரொம்ப வாந்தி எடுத்து விட்டாள்."

"இது என்ன அதிசயமா இருக்கு? முதல் மூணுமாசம் தானே மசக்கை வாந்தி இருக்கும்? ஐந்து முடியப் போறது இல்லையா?

நமக்குன்னு இப்படி ஒரு சம்பந்தம் வாய்ச்சியிருக்கா. இந்த மாதிரி நேரத்திலே பிறந்தகம் போனா உடம்பு தேறும். இவளுக்குத்தான் இந்த கொடுப்பினை இல்லையே? நாம அல்லாட வேண்டியிருக்கு?

நடந்து போனதை பேசி என்ன பிரயோசனம்? சொல்லு? தெரியாமல் கல்யாணம் பண்ணிண்டு வந்தாச்சு. இப்போ ஆக வேண்டியதைப் பார்க்கலாம். அடைக்கு ஊறப் போடறயா? ஆளுக்கு 2 சாப்பிட்டால் கதை முடிந்தது.

இந்துவிற்கு திக்கென்றது. வெங்காய அடை என்றால் கணவனும் மனைவியும் போட்டி போட்டுக் கொண்டு குறைந்தது 4 அடைகளாவது சாப்பிடுவார்கள். அதுவும் இருவருக்கும் மொறு மொறு என்று இருக்க வேண்டும். ஸிம்மில் வைத்து இருவருக்கும் வார்த்து போடுதற்குள் போதும் போதுமென்றாகி விடும். அதுவும் எண்ணெய் வாசனை வந்தாலே குமட்டும். இந்த நேரத்தில் எப்படி வார்ப்பது? வேறு வழி? நிர்மலா நினைத்ததை சாதிப்பவள். அன்று அனைவருக்கும் வார்த்து சாப்பிட வைத்து வெறும் மோரை உட்கொண்டு படுத்தவள் அன்று தான் கர்ப்பிணிப் பெண்ணிற்கு பிறந்தகம் எத்தனை முக்கியம் என்று உணர்ந்து விம்பி விம்பி அழுதாள்.

இது போல எத்தனை சம்பவங்கள். நல்ல வேளையாக இந்துவின் கணவனுக்கு சென்னைக்கு மாற்றலாகி விட மாமியார் - நாத்தனார் தொல்லையிலிருந்து விடுபட்டாலும் அந்த வடு இந்துவின் மனதில் நெருடிக் கொண்டே இருந்தது.

சில மாதங்களுக்கு முன் கணவனை இழந்த போது வசுமதி வேறு வழியின்றி பிள்ளை வீட்டில் நிரந்தரமாக தங்கும்படி ஆயிற்று. இந்த சில ஆண்டுகளில் அவள் மகன் முற்றிலும் மாறி இருந்தான். இந்து வைத்தது தான் சட்டம் என்று இருந்தது. இதை உணர்ந்து கொண்ட வசுமதியும் அடங்கிப் போனாள்.

ஆனால் இந்துவின் ரணம் ஆறவில்லை. தனக்கு போக்கிடமில்லை என்று திரும்ப திரும்ப சுட்டிக் காட்டிய மாமியாருக்கு வேறு போக்கிடம் இல்லை என்று உணர்ந்து கொண்ட இந்துமதி தனது தாக்குதலைத் துவங்கினாள்.

மாமியாரோடு பேசுவதென்பதே இல்லாத ஒன்றாகப் போயிற்று. ம், சரி என்பதைத் தவிர வசுமதியோடு அவள் பேசுவதில்லை. வயதானவள் என்பதை உணர்ந்தும் பாதி வேலைகளை அவள் தலையில் கட்டினாள். இரவு மாமியார் பால் குடிக்கும் வழக்கம் உள்ளவள் என்று தெரிந்தும் எட்டு மணிக்கே பாலை உறைகுத்தி விடுவாள். பூனை வருகிறது என்ற சாக்கைச் சொல்லி இரவில் சமயலறையைப் பூட்டினால் காலை 7 மணிக்குத்தான் எழுந்து திறப்பாள். 5 மணிக்கே எழுந்து காபி சாப்பிடும் வழக்கம் கொண்ட வசுமதி திண்டாடித்தான் போனாள்.

"அம்மா, ஹோம் வொர்க் முடித்து விட்டேனம்மா? விளையாடப் போகட்டுமா?" என்று மகன் கேட்க முக்கால் மணி நேரத்தில் வந்துடணும். அடுத்த வாரம் மன்த்லி டெஸ்ட் ஆரம்பம்" என்று கூறி அனுமதி அளித்தாள்.

அப்பொழுது "தாயி! பூ" என்றபடி வந்த பூக்கார கிழவி, "அப்பாடா," என்று உட்கார்ந்து கொண்டாள். பின் தாய! நேத்து மழை பெஞ்ச போது வீட்டுக்கு போறதுக்குள்ளே நனைஞ் சிட்டேன். அதனாலே ஜல்பு பிடிச்சிடிச்சு. சூடா கொஞ்சம் வென்னீர தரயா? என்று கெஞ்சும் குரலில் கேட்டாள்.

'அதற்கென்ன' என்றபடி உள்ளே போனவளுக்கு அந்த பூக்காரக் கிழவியின் களைப்பான முகம் தெரிய காபியைக்

கலந்து கொண்டு வந்து 'இந்தா கிழவி! காபியே சாப்பிடு' என்று டம்ளரை நீட்டினாள்.

அதை இரு கைகளாலும் ஆர்வத்தோடு வாங்கி குடித்த கிழவி ஜலதோஷம் காரணமா மத்தியானம் சரியாகவே சாப்பிடலே கண்ணு, பசிக்கும் ஜலதோஷத்திற்கும் காபி அமிர்தா இருக்கு. நல்ல மகராசியா இரு தாயி என்று வாழ்த்தி விட்டு எப்பொழுதும் வைக்கும் பூவை விட கூட கொஞ்சம் சேர்த்து கொடுத்து விட்டு கிளம்பினாள்.

அவள் மகிழ்ச்சியோடு போவதை பார்த்துக் கொண்டிருந்த இந்துவின் மனம் நெருடியது. வசுமதியும் இந்த பூக்கார கிழவியைப் போலத்தானே சூடான வென்னீருக்கு ஏங்கினாள்? அவளும் அன்று மத்தியான சாப்பாட்டை தொண்டடை வலி என சரியாக சாப்பிடாதது நினைவில் வந்தது. அவள் இருமிய போது சூடாக ஒரு ஹார்லிக்ஸ் கொடுத்திருந்தால் இந்த கிழவியைப் போல வாய் திறந்து வாழ்த்தா விட்டாலும் அவள் மனம் வாழ்த்தி இருக்குமே? என்றோ நடந்து முடிந்த சம்பவங்களை தூக்கிப் போடாமல் மனதில் இருத்திக் கொண்டு பழி வாங்குவதாக நினைத்து இது போல நடந்து கொண்டிருக்கணுமா? இத்தகைய செயல்கள் ஆறிப் போன ரணத்தை சொறிந்து புண்ணாக்கி கொள்வது போல இல்லையா? காலம் காலமாக தொடரும் இந்த மாமியார் மருமகள் தகராறு இன்னும் தொடரணுமா?

வேண்டாத குப்பைகளை வீட்டிலிருந்து அகற்றுவது போல மனதிலிருந்தும் தேவையில்லாத சம்பவங்களை அகற்றி விட வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் போனதுதானே இதற்கெல்லாம் காரணம்.

தூய்மையான இந்தியா திட்டம் நாட்டை தூய்மையாக்க வேண்டிய திட்டம் என்பது எத்தனை உண்மையோ அத்தனை உண்மை மனதில் சேர்ந்திருக்கும் பழைய கசப்பு உணர்வுகளை அகற்றி விட வேண்டும் என்பதும் என்று புரிந்து கொண்டாள்.

அவள் புது உணர்வுடன் பழையவைகளை மனதிலிருந்து விரட்டி விட்டு கோவிலிருந்து வரும் மாமியாரை அரவணைக்கத் தயாரானாள்! ●

## இரண்டு கேள்வி? ஒரே விடை.

1. அ) பாட்டி குழந்தைகளுக்கு இரவில் சொல்வது.
   ஆ) பீமன் கையில் வைத்திருந்த ஆயுதம்.
2. அ) நேரத்தைக் குறிக்கும்.
   ஆ) கோவிலில் ஒலி எழுப்பும்.
3. அ) ஜுரம் வந்தால் நெற்றியில் போடுவர்.
   ஆ) இது ஒரு எண்.
4. அ) இறந்த பின்னும் பூமியில் அலையும் ஆத்மா.
   ஆ) சுடும் பலகாரத்தின் மேல் பறக்கும்.
5. அ) நாம் உடுத்துவது.
   ஆ) பாலின் மேல் படிவது.
6. அ) தாளத்திற்கு தகுந்தாற் போல் ......
   ஆ) ஒரு விலங்கு.
7. அ) குச்சியின் மறு பெயர்.
   ஆ) ஒரு தானியம்.
8. அ) குழந்தைகள் விளையாட்டாக பறக்க விடுவது.
   ஆ) படித்து வாங்குவது.
9. அ) திருவாதிரையின் போது செய்வது.
   ஆ) மகிழ்ச்சியைக் குறிக்கும்.

விடைகள்: 1. கதை, 2. மணி, 3. பத்து, 4. ஆவி, 5. ஆடை, 6. ஆடு, 7. கம்பு, 8. பட்டம், 9. களி.

- புவனா சங்கர்

மருத்துவமனையில்

# மகத்தான சிரிப்புகள்!

பாக்கியம் ராமசாமி

உடம்பு என ஒன்று இருந்தால் நோவு என்று ஒன்று (ஒன்றா? அஸ்ஸார்ட்டட் வெரைட்டியாக ஒரு டஜன்கூட) வரத்தான் செய்யும்.

பிரபல எழுத்தாளர்கள் அனைவரும் கொஞ்ச காலமாவது தனியார் மருத்துவமனை ஏதாவதொன்றில் சிகிச்சை பெற்றவர்களாகவோ பெற்றுக்கொண்டே இருப்பவர்களாகத்தான் இருந்தார்கள். இருப்பார்கள். (வல்லின'ற்'வும் உண்டு!)



கதை எழுதிப் பிரபலமாக ஆக முடியவில்லையாதலால், நான் ஒரு குறுக்கு வழி கண்டுபிடித்தேன்.

நாமும் ஒரு பிரபல மருத்துவமனையில் அட்மிட் ஆகிக் கொஞ்ச நாள் அங்கிருந்தால் நமக்கும் புகழ் கிடைக்கும் என்று தோன்றி எந்த நோயாவது என்மீது இரக்கப்பட்டு என்னை வந்து தாக்காதா என்று காத்திருந்தேன்.

ஒரு சுபயோக சுபதினத்தில் மூச்சு இரைப்பும், களைப்பும் ஏற்படவே, நான் அவற்றை வரவேற்று என்னிடம் சில நாட்களாவது தங்கியிருக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொண்டதால் அவை என்மீது மனமிரங்கி என்னிடமே தங்கின.

ஆனால் நான் 'சில நாட்கள்' என்றது அவற்றின் காதில் 'பல' என்று விழுந்து விட்டது போலும். 'இங்கேயே சௌக்யமாக இருக்கிறது. போக உத்தேசமில்லை' என்று தெரிவித்துவிட்டு என் மனைவியையும், மகன்களையும், மருமகள்களையும் நன்கு வேலை வாங்கிக்கொண்டு வாடகை கீடகை ஏதும் ஒரு பைசாகூடக் கொடுக்காமல் என்னுள்ளே வசிக்கத் தொடங்கின.

> **படுக்கை விரிப்பும், தலையணை உறைகளும் உங்கள் ஜென்மத்தில் கண்டிராத அளவு வெள்ளை வெளேரென்று சலவை மடிப்புடன் இருந்தால் அதன் பின்னே ஒரு விலையுண்டு.**

www.Themagnet.com

அந்தக் குடித்தனக்காரர்களில் பொல்லாதவர் ஒருத்தர் இருந்தார். அவர் எனது கிட்னி பக்கமாக உலவ ஆரம்பித்தார்.

'அங்கெல்லாம் உங்கள் மூக்கை நீட்டாதீங்க சார்,' என்றாலும் அந்த ஆசாமி கேட்கிறவராக இல்லை. நான் சொன்னதையோ வீட்டிலுள்ளவர்கள் கூறுவதையோ காதில் போட்டுக் கொள்ளாமல் இஷ்டத்துக்கு கிட்னி ஏரியாவில் அலைந்து கொண்டிருந்தார்.

அது மட்டுமல்ல, கிரியாடினின் என்ற கிட்னி சம்பந்தப்பட்ட அயிட்டத்தின் அளவை அதிகரித்துவிட்டார்.

ஒரு பர்சன்ட்தான் அந்த கிரியாடினின் ரத்தத்தில் இருக்க வேண்டுமாம். ஆனால் ஐந்து பர்சன்ட்டுக்கும் அதிகமாக ஆக்கிவிட்டார்.

மனைவியும், மகன்களும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அந்தக் குடித்தனக்காரன் கேட்பதாக இல்லை.

எனக்கு ஒரு டாக்டரை நன்கு தெரியும். என் குடித்தனக்காரனைவிடப் பெரிய வஸ்தாத் அவர்.

எந்தச் சிறிய கடுகூண்டு பிரசினையென்றால்கூடக் குண்டாந்தடியால் ஒரே போடு போட்டுவிட வேண்டும் என்ற கொள்கையுடைய தீவிரவாதி.

அவரைக் கண்டால் எந்த நோயும் நடுங்கும். அவர் அனுப்பும் பில்லைக் கண்டாலோ எந்தப் பணக்காரனும் நடுங்குவான்.

அவரைச் சொல்லிக் குற்றமில்லை. அவர் வேலை பார்த்து வந்த மருத்துவமனை மிகப் பிரம்மாண்டமானது. மந்திரம் கால் மதி முக்கால்போல. அவருக்கு பீஸ் கால், மருத்துவமனைக்கு முக்கால்.

மந்திரவாதியின் பெயரைக் கேட்டாலே சில பேய்கள் ஓடிவிடும் என்பார்கள். அது மாதிரி அந்த மருத்துவமனைக்கு உள்ளே போய்விட்டு வெளியே வந்தால் நோயாளியின் சொத்தில் கணிசமான பகுதி மறைந்துவிடும் என்பார்கள்.

எல்லாவற்றுக்கும் ஒரு விலை உண்டு என்பார்கள். அந்தப் பழமொழியின் முழு அர்த்தமும் பெரிய மருத்துவமனைகளில் படுத்திருந்தால்தான் புரியும்.

படுக்கை விரிப்பும், தலையணை உறைகளும் உங்கள் ஜென்மத்தில் கண்டிராத அளவு வெள்ளை வெளேரென்று சலவை மடிப்புடன் இருந்தால் அதன் பின்னே ஒரு விலையுண்டு.

ஒரு பொட்டுக் காப்பி அதன் மேல் சிந்திவிட்டால் பரபரப்புடன் ஒரு வெள்ளுடைத் தேவதை விரைந்து வந்து அந்த மொத்த விரிப்பையும் அனாயாசமாக இழுத்துச் சுருட்டி அழுக்குக் கூடையில் கடாசிவிடுவாள்.



புதிய விரிப்பு மாற்றப்படும்.

கிரியாடினின் அதிகமாகிவிட்டால் தலையா போய்விடும் என்று அலட்சியமாகத்தான் ஆரம்பத்தில் இருந்தேன்.

ஆனால் தலை போய்விடும் போலிருந்தது. தலை பாரம், உடல் சோர்வு, அவசரச் சிறுநீர் விவகாரமெல்லாம் தலை காட்டி, ஏதாவது மீட்டிங் கீட்டிங்கில் அரை மணி உட்காரக்கூட முடியாமல் அட்டாச்டு பாத்ரூம் அருகே நடக்கும் மீட்டிங்குகளுக்கு மட்டும் தலைமை தாங்கும்படி இருந்தது.

வீட்டில் உள்ளபோது சட்டையை ட்ரை வாஷுக்குப் போட்டால் ஒரு சட்டைக்கு முப்பது ரூபாய். மாட்சிங் வெள்ளையாக இருக்க வேண்டுமென்று வேட்டியையும் போட்டுவிட்டால் அதற்கொரு ஐம்பது. ஆக கௌரவமான ஒரு புறப்பாட்டுக்கு நூறு ரூபாய் உடைக்கு ஆகிறது.

நர்ஸிங் ஹோமில் சகலமும் சலவை வெள்ளையில் ஜொலிக்கிறது. முகம் துடைக்க நாலு குட்டி டவல்கள் தயார் நிலையில் கைக்கெட்டும் தூரத்தில்.

ஒரு துடை துடைத்தால் அதை வெள்ளுடை நர்ஸ் பரக்கெனப் பறித்து கீழே உள்ள கூடையில் போட்டு விடுவாள். சகலமும் சுத்தமோ சுத்தம்.

மிருதுவான ஏதோ ஒரு ஆரோக்கிய நெடி. இருபத்து நாலு மணி நேரமும் ஏஸி. ஒரு பியூட்டி நர்ஸ் - ஸாரி - டியூட்டி நர்ஸ் உங்களது ஒவ்வொரு அசைவையும் கவனித்துக் கணித்துக் கணக்கெழுதி வைக்கிறாள்.

நமது பி.பி. (பிளட் பிரஷர்) யை இருபத்து நாலு மணி நேரமும் ஒரு யந்திரம் எடுத்துக் கொண்டேயிருக்கும். படுக்கையை விட்டு எழுந்து ஓடக்கூடிய அளவு புஜபல, கால் பல பராக்கிரமம் இருந்தாலும் அனைத்து பாத் ரூம் வசதிகளும் படுக்கைக்குள்ளேயே செய்து தரப்படும்.

கம்மோடைத் தூக்கிப் போக வந்த டிப் டாப் ஆசாமிதான் ரவுண்ட்ஸில் வரும் டாக்டராக்கும் என்று நினைத்து, "குட் மார்னிங் டாக்டர். இப்ப எவ்வளவோ தேவலை. யூரின் நன்றாகப் போயிற்று," என்று உற்சாகமாக நான் சொன்னதற்கு அந்த டிப் டாப் 'டாக்டர்' புன்னகைத்தவாறு அனாயாசமாக துப்பட்டிக்குள் கை நுழைத்துக் கம்மோடைத் தூக்கிகொண்டு வெளியேறினார்.

அதற்கெல்லாம் விலை இருக்குமல்லா? எதற்குச் சொன்னேனென்றால் வார்டு பாயே அத்தனை டிப்டாப்பாக இருந்தான்.

சரி. சரி. பில் என்ன வருமோ என்று கவலைப்படுவது நோயை அதிகப்படுத்தும் என்ற தத்துவப்படி அதைப் பற்றி மேலும் பிதற்றாமல் நிறுத்திக் கொள்கிறேன்.

ஆனால் டியூட்டி நர்ஸ்கள் மட்டும் சிறுகதைப் போட்டி - நாவல் போட்டிக்குக் கதை எழுதுகிறவர்கள் போல் அங்குள்ள ஒரு நோட்டில் ஏதோ எழுதிக் கொண்டே இருந்ததுதான் என் நெஞ்சை நெருடியது.

நறுக் நறுக்கென்று செலுத்தப்பட்ட ஊசிகள் எத்தனை, விழுங்கத் தந்த மாத்திரைகள், மாற்றப்பட்ட படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், எத்தனை பெரிய டாக்டர்களின் வருகை போகை என்று என்னென்னவோ எழுதிக் கொண்டிருப்பார்கள் போலும்.

அவர்கள் எழுதியது சரிதானா என்பதைப் படித்துப் பார்க்க அவ்வப்போது யாராவது ஒரு மஃப்டி உடையில் கணக்கு இலாகா சிப்பந்தி வந்து செக் செய்வார்.

எந்தெந்த முகூர்த்தத்தில் நாம் எத்தனை கொட்டாவி விட்டோம், எத்தனை மில்லி நீர் பருகினோம், எத்தனை மில்லி வெளியேற்றினோம், எத்தனை மூச்சு விட்டோம், அதில் (பெரிய வெங்காயம், சிறிய வெங்காயம் என்பது போல) பெருமூச்சு எத்தனை, சாதா மூச்சு எத்தனை என்று எதுவெல்லாமோ எழுதி வைப்பார்கள் போலும் அல்லது ஸ்ரீராமஜெயம் எழுதிவிட்டுப் போகிறார்களோ என்னவோ.

அந்த நோட்டை, தஸ்தாவேஜை ஒரு தரம் காட்டும்படி ஒரு நர்ஸிடம் கேட்டுப் பார்த்தேன். புன்னகையுடன் மறுத்துவிட்டாள்.

என் உடம்பைப் பார்த்துவிட்டு எழுதியவற்றை நான் பார்க்கக் கூடாதாம். ஹூம். பொறுமை. பொறுமை. பல்லைப் (நர்ஸ் காதில் சத்தம் விழாமல்) லேசாகக் கடித்துக் கொண்டேன்.

பல் கடிக்கும் சத்தம் கேட்டால் அதற்கான இலாகாவுக்குத் துரத்தப்பட்டு விடுவோமே

www.TheMagnet.com

என்ற பயமே காரணம்.

எவ்வளவோ முன் ஜாக்கிரதையாக இருந்தும் இன்னொரு கோளாறும் என்னிடம் கண்டுபிடிக்கப்பட்டது. என் ரத்தத்தில் ஹிமோகுளோபின் குறைவாக இருப்பதாக ஒரு கண்டுபிடிப்பு.

வாரம் ஒரு ஹிமோகுளோபின் ஊசி போட்டுக் கொள்ளவேண்டும் என்று எழுதி வைத்துவிட்டுப் போய்விட்டார் குறிப்பிட்ட இலாகா டாக்டர்.

அந்த ஹிமோ ரத்தத்தில் பதினொரு பர்சன்ட் இருந்தால்தான் உடம்பில் களைப்பில்லாமலிருக்குமாம்.

எத்தனை நாள் அதைப் போட்டுக்கொள்ளவேண்டும் என்பதற்கு டாக்டர் 'அடிக்கடி ரத்த பரிசோதனை செய்து கொண்டு வந்து ரிஸல்ட்டைக் காட்டிக் கொண்டிருங்கள். பதினொன்று வந்ததும் நிறுத்திக் கொள்ளலாம்' என்றார். 'தற்சமயம் உங்களுக்கு ஏழு பர்சன்ட்தான் உள்ளது.'

நூறு இருநூறு ரூபாயில் போகிற சமாசாரமில்லை. ஆயிரத்து முன்னூற்று ஐம்பேத்தேழு ரூபாய்! மரண அடி அடித்ததுபோலிருந்தது. அந்த ஹிமோ ஊசி மருந்து ஒரு தடவைக்கு ஆயிரத்து நானூறு ரூபாய்.

ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறிய பின்னும் அதைத் தொடர்ந்து வேறு ஒருத்தர் போட்டுவிட்டதால் எனக்கு இந்த விவரம் தெரிந்தது.

மருந்து விலையெல்லாம் ஒரு நோயாளி கேட்பது அநாகரிகம். அதுவும் பெரிய மருத்துவமனையில் படுத்துக்கொண்டு காய்கறி விலையை அன்றாடம் கேட்பதுபோலெல்லாம் கேட்க முடியுமா?

பிரம்மாண்ட ஆடம்பரக் கப்பல் ஒரு கடற்கரையில் வந்து நின்றதாம். அது விற்கப்படுவதற்காக வந்த கப்பல்.

அந்தந்தப் பிரதேசத்திலுள்ள கோடீஸ்வரர்கள் கப்பலைப் பார்வையிட்டுப் பிரமித்தவாறு போய்க் கொண்டிருந்தனர். மிகக் கர்வமான பெரும் பணக்காரர் ஒருத்தர் வந்து கப்பல் விலை என்ன என்றாராம்.

கப்பல் ஓனர் உடனே, "நீர் கப்பல் வாங்கத் தகுதியில்லாதவர். உம்மிடம் விலை சொல்லத் தயாராக இல்லை. எவ்வளவு விலை என்று கேட்டாலே நீர் ஓரளவுதான் பணக்காரர் என்று தெரிந்துவிட்டது. ஓரளவு பணக்காரராக இருந்தால் இதை வாங்க முடியாது" என்றாராம்.

அந்தக் கதையாக மருந்து விலையெல்லாம் கேட்டால் மருத்துவமனையிலிருந்தே துரத்திவிடுவார்கள்.

குடும்பத்தினருக்கு ஏராளமான செலவு வைக்கிறோமோ என்று உறுத்தலாக இருந்தது.

என் வைத்திய செலவு ஒரு மடங்கு என்றால் என்னைப் பார்க்க வருகிற விசிட்டர்களுக்கு ஒதுக்கிய அறையின் வாடகை - அதுவும் ஏஸியே - பயங்கரக் கட்டணம்.

விசிட்டர்கள் தங்கும் அறைக்கு தினமும் வாடகை ரூபாய் நாலாயிரம். பல வகையான விசிட்டர்களும், உறவினர்களும் வந்து குழுமி மருத்துவமனை கேன்ட்டீனில் சத்தான ருசியான பற்பல அயிட்டங்களை வரவழைத்துச் சாப்பிட்டு, ஒரு திருவிழாவுக்கு வந்த மாதிரி குஷியாக இருந்தனர்.

கேன்ட்டீன் தவிர சிலர் அவரவர் வீட்டிலிருந்தும் பலகாரங்களைத் தூக்கி



ஆண்: ஹலோ! யார் பேசறது?

பெண்: நான் 'செல்லம்மா' பேசறேன்...

ஆண்: நான் மட்டும் என்ன 'கோவமா' பேசறேன்? அட யாருன்னு சொல்லும்மா.

www.TheMagnet.com

வந்து மற்றவர்களுக்கும் கொடுத்துச் சாப்பிடுவர்.

அறைக்குள் அரட்டையான அரட்டை. தமாஷான தமாஷ். (அதையெல்லாம் வாட்ஸ்அப் மூலம் கட்டிலில் கிடந்த எனக்கு ஒளிபரப்பு வேறு).

கூட்டத்தை கலைக்க (அவர்களது கொட்டத்தையும்கூட) நர்ஸுகள் அடிக்கடி முயன்றாலும் தனி அறை என்பதால் ரொம்பவும் கண்டிக்க முடியாது.

பெரிய மருத்துவமனையில் அட்மிட் ஆவதற்கு ஒரு தகுதி, யோக்கியதை வேண்டும். செலவு பற்றி முகாரி பாடுவதை ஒழியுங்கள். வீட்டிலிருந்தால் நீங்கள் சத்தியமாக குணமாகி இருக்க முடியாது. ஒரு சின்ன டாக்டரிடம் போய்க்கூட காத்திருக்க உங்களால் இயலாது.

இங்கே எத்தனை பெரிய பெரிய படிப்பாளிகளும், ஆராய்ச்சியாளர்களுமான டாக்டர்கள்! அவர்களாக வந்து உங்களை வேளை தவறாமல் பார்க்கிறார்கள். உங்களுடன் சில வார்த்தைகள் பேசக்கூடப் பேசுகிறார்கள்.

எத்தனை வகையான கருவிகள் வைத்து எத்தனை விதமாகக் கணக்கிட்டு உங்கள் நோயைக் கண்டுபிடித்துக் குணம் செய்கிறார்கள்.

ஒருகால் அவர்கள் தேடும் நோய் உங்கள் உடம்பில் எங்கும் இல்லையென்றாலும் மனம் சோராமல் ஏறக்குறைய அந்த நோய் மாதிரி வேறு ஒன்றை உங்கள் உடலில் கண்டுபிடிக்கும் வரை ஓயமாட்டார்கள்.

ராவணனின் உடம்பில் சீதையின் எண்ணம் எங்காவது ஒண்டிக்கொண்டிருக்கிறதோ என்று அறிய ராமபாணங்கள் அவன் உடலை சல்லடையாகத் துளைத்துத் தேடினது என்பார் கம்பநாட்டு ஆழ்வார்.

அதைப் போல நோயைத் தேடித் தேடிக் கண்டுபிடித்துக் குணம் செய்கிறார்கள். (அல்லது செய்யாமல் விட்டுவிடுகிறார்கள்.)

மருத்துவமனையிலிருந்து நான் டிஸ்சார்ஜ் ஆகும் சுபதினம் ஒருநாள் வந்தது.

"டாக்டர், நான் கேக் சாப்பிடலாமா?" என்று அப்புசாமித்தனமாகக் கேட்டு வைத்தேன்.

"கேட்க வேணுமா. தாராளமாக நீங்க எதை வேண்டுமானாலும் சாப்பிடலாம். ஆனால் ஒரு நாளைக்கு நாள் முழுவதுமாக அறுநூறு மில்லி தண்ணீர்தான் (டீ, காபி, பால் மற்றும் திரவப் பொருட்கள் உட்பட) குடிக்கவேண்டும்.

முக்கியமாக நோ சால்ட்! உப்பு என்பதே எந்த ரூபத்திலும் உங்களுக்கு சேரலாகாது. அந்த கிரியாடினின் அளவு இன்னும் மூன்று பர்சன்ட்டாவது குறையவேண்டும். வாரத்துக்கு ஒரு முறை ரத்தப் பரிசோதனை செய்துகொண்டு ரிசல்ட்டைக் கொண்டு வந்து காட்டுங்கள்."

"எப்போ டாக்டர் என்னை முழுமையாக டிஸ்சார்ஜ் செய்வீர்கள்?"

"உங்களுக்கு ஒண்ணுமே இல்லை. நாளைக்கே டிஸ்சார்ஜ். நீங்கள் எப்பவும் போல் எல்லாரையும் போல் தாராளமாகச் சாப்பிடலாம். ஆனால் ஞாபகமிருக்கட்டும். நோ உப்பு. நோ எக்ஸஸ் வாட்டர். போகுமுன் டயட்டீஷியனைப் பார்த்துவிட்டுப் போங்கள். அதோ அவர் ரூம்."

இரையைப் பிடிக்கத் தயாராக அங்கே வயதான ஒரு கிழக் கொக்கு காத்திருந்தது. அதை நோக்கி முன்னேறினேன்.

என்னென்ன, எந்தெந்த வேளையில், எவ்வளவு சாப்பிடலாம், எவ்வளவு தண்ணீர் குடிக்கலாம், எவ்வளவு நீரை வெளியேற்றலாம் என்பதற்கெல்லாம் கணக்கெடுத்து வைத்துக்கொள்ளச் சொன்னார்.

அளவு ஜாடி ஒன்றும் அன்பளிப்பாகத் தரப்பட்டது. எல்லாம் சரிதான் ஆனால் குறி பார்த்து பிடித்து வைக்கும் சாமர்த்தியம் இல்லாததால் 'அவுட் புட் கணக்கை' சுமாராகத்தான் தர முடிந்தது.

அவர்கள் அதை வைத்துக்கொண்டு சுமாராக ஆராய்ந்து, சுமாராக சில மருந்துகளை எழுதிக்கொடுத்தார்கள். சுமாராக என் உடம்பும் தேறிவிட்டது.

ஆகவே அவசரப்பட்டு பழங்கள், ஆர்லிக்ஸ், பிஸ்கெட் போன்ற மாமூல் அயிட்டங்களை வாங்கிக்கொண்டு யாரும் வந்துவிடாதீர்கள். நார்மலாகத்தான் இருக்கிறேன். தீபாவளிப் பலகாரங்களை ஜமாய்த்துக்கொண்டிருக்கிறேன். ●





# சிங்கம்பட்டியும் என் வனத்துறை நினைவுகளும்

கட்டுரை, புகைப்படம்:
கலைமாமணி 'யோகா'

"சிங்கம்பட்டி ஜமீன்தாரைப் பார்க்கப்போகிறேன். வருகிறீர்களா?" என்று ஒரு நாள் நல்லி செட்டியாரிடமிருந்து அழைப்பு வந்தது. உடனே நணபர் ஆர். நடராஜனும் நானும் செட்டியாருடன் மதுரையிலிருந்து காரில் புறப்பட்டோம்.

திருநெல்வேலிக்குப் பக்கத்தில் இருக்கிறது இந்த சிங்கம்பட்டி. அந்த நிமிடம் வரை நான் அப்படி ஓர் ஊரைப் பற்றியோ, அந்த ஜமீனைப் பற்றியோ கேள்விப்பட்டிருக்கவில்லை. திருநெல்வேலி ஹோட்டலில் ஜமீன் வீடுகள் எங்கள் வருகையை எதிர்நோக்கி ஜமீன் பங்களாவுக்கு அழைத்துப் போகக் காத்திருந்தார்கள்.

எங்கள் காருக்கு முன்னால் ஜமீன் ஆட்களின் கார் வழிகாட்டிச் செல்ல, நாங்கள் அதைப் பின் தொடர்ந்தோம். 25, 30 கி.மீ. தொலைவு சென்றதும் எங்கள் முன்னால் சென்ற கார் சட்டென்று பிரதான சாலையைவிட்டு விலகி ஒரு காட்டுப் பாதையில் பயணித்தது. அந்த வழியில் சிறித தூரம் சென்ற பிறகு அந்த இடத்துக்கு எப்போதோ வந்தது போலவும், முன்னாலேயே பார்த்தது போலவும் தோன்றியது.

யோசித்துக் கொண்டிருக்கும் போதே ஓர் அறிவிப்புப் பலகை கண்ணில் பட்டது. 'களக்காடு - முண்டந்துறை வனத்துறை சரணாலயம் உங்களை வரவேற்கிறது" எனக்கு ஒரே பிரமிப்பும் வியப்பும்! என்னுடைய நினைவுகள் உடனே நாற்பது ஆண்டுகள் பின்நோக்கிச் சென்றன.

1970 முதல் ஒரு பதினைந்து ஆண்டுகள் தமிழ்நாடு வனத்துறை முழுமைக்குமான ஒரே புகைப்படக்காரனாக நான் பணியாற்றியதும் அப்போது அதிகாரிகளுடனும் தனியாகவும் நான் முக்கியமான வனப்பகுதிகளில் எல்லாம் அலைந்து திரிந்ததும் வரிசையாக நினைவுக்கு வந்தன. வனத்துறையின் மம்மியா காமிரா, நிக்கான் எஃப், எம்.2 தவிர என்னுடைய சொந்தக் காமிராவையும் பயன்படுத்தி நிறையப் படங்களை எடுத்திருக்கிறேன். நான் அப்போது 'ஃப்ரீ லான்ஸ்' புகைப்படக் காரனாகவும் பணியாற்றிக் கொண்டிருந்ததால் என்னிடம் விதம் விமான லென்சுகளும் இருந்தன.

அந்தப் பதினைந்து ஆண்டுக் காலத்தில் தமிழக வனத்துறைப் பகுதிகளில் நான் போகாத இடமே இல்லை எனலாம். விதம் விதமான பிளாண்டேஷன் பகுதிகளையும், காட்டு விலங்குகளையும் படம் எடுக்க, என்னுடைய துறை அதிகாரிகளுடன் நிறையச் சுற்றியிருக்கிறேன்.

அப்பொழுது முதுமலைதான் மிகப் பெரிய காடு. அடுத்தது ஆனைமலைக்காடு. மூன்றாவது பெரிய வனப்பகுதி இந்த முண்டந்துறை-களக்காடு. ஆனாலும் மற்ற இரண்டை விட இது மிகவும் அடர்த்தியான வனப்பகுதி. முண்டந்துறையில் பிரபலமான புலிகளின் சரணாலயம் இருக்கிறது. களக்காட்டில் தான் வேறு எங்கும் காணமுடியாத சிங்கவால் குரங்குகள் வாழ்கின்றன.

என்னுடைய பயணம் பெரும்பாலும் வனத்துறை உயர் அதிகாரிகளுடன்தான் இருக்கும். முன்னாலேயே பயணத்திட்டம் போட்டுத் தந்துவிடுவார்கள். நான் போய் இறங்குகிற இடத்தில் வனத்துறை ஜீப் வந்து காத்திருந்து அழைத்துப் போகும். ஆனைமலை போவதாக இருந்தால் பொள்ளாச்சிலேயே வண்டி தயாராக இருக்கும்.

அப்படி ஒரு முறை களக்காடு முகாமுக்கு வந்தது நினைவுக்கு வந்தது. களக்காடு வனப்பகுதிக்கு உள்ளே வந்துவிட்டால் திக்குத் திசை தெரியாது.

www.TheMagnet.com



வெளி உலகம் என்று ஒன்றிருப்பதே மறந்து போகும். அவ்வளவு அடர்த்தியான காடு. வெண்தேக்கு, யூகலிப்டஸ் என்று விதம்விதமான வனவளங்கள் களக்காட்டில் உண்டு. ஆனால் இங்கே வனவிலங்குகளைப் படம் எடுப்பது மிகவும் சிரமமான வேலை.

எங்கும் சலசலத்து ஓடுகிற நீரோடைகள் நிறைய உண்டு. தாமிரபரணி நதியும் காட்டின் ஒரு பகுதியில் ஓடுகிறது. அதை ஒட்டியே செட்டியாருடன் நாங்கள் பார்க்க வந்த ஜமீன் பங்களாவும் இருக்கிறது.

வனத்துறைப் புகைப்பட அனுபவம் என்னுடைய வாழ்க்கையில் என்றுமே மறக்கமுடியாத பசுமை நினைவாக உள்ளது. கல்லூரிப் படிப்பு முடிகிற வரை மிகவும் போராட்டமான வாழ்க்கைதான் எனக்கு அமைந்தது. கல்லூரிப் படிப்பு முடிந்து வெளியே வந்ததும் என் குருநாதர் சங்கர் அண்ணாவிடம் சேர்ந்து தொழில் பழகினேன். சாப்பாட்டுத் தேவைகளுக்காக ஜெமினி கலர் லேபில் வேலைக்குச் சேர்ந்தேன்.

அதன் பிறகு கொஞ்சகாலம் 'ஸிந்தெடிக் மோல்டர்ஸ்' என்னும் பிளாஸ்டிக் பொருள் உற்பத்தி நிறுவனத்தில் ஒரு நண்பர் என்னை வேலைக்குச் சேர்த்துவிட்டார். அங்கே பணியாற்றியபோது கணக்கு எழுதும் வேலைக்காக சிவசுப்ரமணியம் என்று ஒருவர் வருவார்.

"என்ன தம்பி, டிகிரி படிச்சிட்டு இங்கேயெல்லாம் ஏன் வேலை செய்யணும்? சர்க்கார் வேலைக்கு முயற்சி பண்ணக்கூடாதா?" என்று அக்கறையோடு கேட்பார். அத்துடன் நில்லாமல் சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதவும் துண்டிக்கொண்டிருந்தார். அப்போது அரசுத் தேர்வுக்கான விளம்பரம் வந்திருந்தது. அவரே ஒரு விண்ணப்பம் வாங்கிவந்து அவரே என் விவரங்களைக் கேட்டு நிரப்பி சர்வீஸ் கமிஷன் அலுவலகத்துக்கு அதை அனுப்பியும் விட்டார்.

அரசாங்கத் தேர்வுகள் பற்றியெல்லாம் எனக்கு எதுவுமே தெரியாது. சில நாட்களில்



எனக்கு அந்த சர்வீஸ் கமிஷன் தேர்வுக்கான ஹால் டிக்கெட்டும் வந்துவிட்டது. சென்னை வண்ணாரப்பேட்டைத் தியாகராயா கல்லூரியில் தான் அந்தத் தேர்வு நடைபெற்றது. தேர்வில் என்ன கேட்பார்கள், என்ன மாதிரி பதில் எழுதவேண்டும் என்றெல்லாம் தெரிந்துகொள்ளாமலே தேர்வு அரங்குக்கு ஒன்பதரைக்கே போய்விட்டேன். அங்கே போனால் நிறையப்பேர் ஏதேதோ புத்தகங்களை வைத்துப் படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

ஒரு பையன் வந்து என்னிடம் கேட்டான் "என்னப்பா? பேசாமே உட்கார்ந்திருக்கே. ஏதும் தயார் பண்ணல்லியா?" என்று வேறு கேட்டான். இன்னும் அவன் ஏதேதோ சொன்னான். நானும் தேர்வுத்தாளை வாங்கி எனக்குத் தோன்றியதையெல்லாம் எழுதிக்கொடுத்து விட்டு வந்துவிட்டேன்.

ஒன்றரை வருடம் ஓடிவிட்டது. தேர்வு எழுதியதுகூட எனக்கு மறந்து போய் விட்டது. அந்தப் பிளாஸ்டிக் கம்பெனியிலிருந்து விலகி சங்கர் அண்ணா கூடவே வேலைபார்த்துக் கொண்டிருந்தேன்.

அப்போது ஒரு நாள் எனக்கு சர்வீஸ் கமிஷன் மூலம் வனத்துறை வேலைக்குத் தேர்வாகி வேலைக்கான உத்தரவு தபாலில் வந்திருக்கிறது. தபால்காரர் வருகிறபோது நான் அந்த இடத்தில் இல்லாததால் 'முகவரிதாரர் இல்லை' என்று தபாலைத்

www.TheMagnet.com



சிங்கம்பட்டி ஜமீன்தார், டாக்டர் நல்லி ஆகியோருடன் யோகா.



யோகா குடும்பத்தினர்.

திருப்பி அனுப்பிவிட்டார்கள் போலிருக்கிறது.

அந்த வனத்துறை அலுவலகத்தில் மிகவும் நல்லவர்கள் இருந்திருக்கிறார்கள். ஓர் அதிகாரி, "பாவம் யாரோ வேலைக்குச் சேர வேண்டும். தபாலை விசாரித்துக் நேரில் கொடுத்துவிட்டு வா" என்று அலுவலக ஏவலாள் ஒருவரிடம் அதைக் கொடுத்து அனுப்பியிருந்தார்கள். அந்த ஆள் என்னைத் தேடிக்கொண்டு எங்கெங்கோ விசாரித்து இரவு ஏழுமணி வாக்கில் சங்கர் அண்ணா ஸ்டுடியோவுக்கே வந்து தபாலைக் கொடுத்தார்.

கவரைப் பிரித்துப் பார்த்தால் எனக்கு வனத்துறை அலுவலகத்தில் குமாஸ்தா வேலைக்கு நியமனமாகி உடனே வேலையில் சேர உத்தரவாகியிருந்தது. சம்பளம் மாதம் 220 ரூபாய்! நவம்பர் 20ம் தேதிக்குள் வேலையில் சேர வேண்டும் என்று உத்தரவு. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. விஷயம் தெரிந்த சங்கர் அண்ணா என் மேல் கடுப்பாகிவிட்டார். எனக்கும் அவரை விட்டு வெளியே போக மனம் வரவில்லை. சர்க்கார் வேலையில் சேரவேண்டாம் என்று நான் முடிவு பண்ணியபோது எனது கல்லூரி நண்பர் குப்புசாமிக்குக் கோபம் வந்துவிட்டது.

"தங்கத் தாம்பாளத்தில் தருகிறமாதிரி உனக்கு அரசாங்க வேலை கிடைச்சிருக்கு. அதை வேண்டாம்னு விடப்போறியா?" என்று கடிந்து கொண்டான். "காலை பத்து மணிமுதல் சாயங்காலம் அஞ்சு மணி வரைதானே அலுவலகம்? அதுக்கு அப்புறமா வந்து அண்ணா கூட வேலை பாரேன்" என்று வேப்பிலை அடித்தான். அவன் அப்படிச் சொல்லியிராவிட்டால் நான் அந்த வேலையில் சேர்ந்தே இருக்க மாட்டேன்.

நவம்பர் 20ம் தேதி, சனிக்கிழமை, ராகுகாலம் முடிந்ததும் நேரே கோபாலபுரத்திலிருந்த வனத்துறை அலுவலகத்தில் வேலையில் சேர்ந்தேன். காலை எட்டுமணி முதல் ஒன்பதரை மணி வரை சங்கர் அண்ணாவின் ஸ்டுடியோவில் இருப்பேன். அப்புறம் சைக்கிளில் கோபாலபுரம் அலுவலகம் வந்துவிடுவேன்.

அப்படியே ஆறுமாதம் கடந்திருக்கும். அந்த வனத்துறை அலுவலகத்தில் ஒரு போட்டோகிராபர் பணியிடம் காலியாக இருந்தது. அதில் வேலை பார்த்த ஒருவர் வேலையைவிட்டு விலகியிருந்தார். அந்தப் பணியிடம் தினகரன் என்ற ஐ.எஃப்.எஸ் அதிகாரியின் கீழ் இருந்தது. அவர்தான் விளம்பரத்துறைப் பொறுப்பில் இருந்தார். அவர் என்னுடைய பெயரில் பத்திரிகைகளில் வெளியான புகைப்படங்களைப் பார்த்திருக்கிறார். அவருக்கு என்மேல் ஓர் அபிப்பிராயம் உண்டாகியிருந்தது.

ஒரு நாள் என்னை அவர் கூப்பிட்டு அனுப்பினார். "தம்பி, உன்னோட படங்களை நான் பார்த்திருக்கேன். திறமைசாலியாகத்

www.TheMagnet.com





தெரியறே. தொழில் அனுபவம் உள்ள ரெண்டுபேர் கிட்டேயும் யாராவது ஒரு வி.ஐ.பி.கிட்டேயும் 'சர்ட்டிபிகேட்' வாங்கிட்டுவா. உன்னையே இந்தப் போட்டோகிராபர் இடத்துலே நியமிக்கலாம்னு தோணுது" என்றார்.

அதன்படி இரண்டு புகைப்பட நிறுவனங்களிடமிருந்து சர்ட்டிபிகேட் வாங்கினேன். வி.ஐ.பி- ஜெமினி கணேசன் எனக்கு நல்ல பழக்கம். அவர் கிட்டே போனேன். "இப்படி ஒரு வாய்ப்பு வருது அண்ணே, எனக்கு ஒரு சர்ட்டிபிகேட் வேணும் என்று கேட்டேன். உடனே ஜெமினி ஸார் "உனக்கு இல்லாததா?" என்று சொல்லி எழுதித் தந்தார்.

ஜெமினி அந்த நாளில் மிகவும் பிரபலமானவராயிற்றே! அவருடைய சர்ட்டிபிகெட்டைப் பார்த்ததும் அந்த அதிகாரிக்கு ஒரே பிரமிப்பு. உடனே தன்னுடைய மேலதிகாரிகளுடன் கலந்து பேசி அந்த வனத்துறை போட்டோகிராபர் வேலையை எனக்கு வழங்கி உத்தரவிட்டார்கள்.

இப்படியே எல்லாம், என்னுடைய முயற்சி அதிகம் இல்லாமலேயே தானாக மடியில் வந்து விழுந்தன. எல்லாம் இறைவன் அருளில்லாமல் வேறென்ன?

அந்த அலுவலகத்தில் கடைநிலை ஊழியர் முதல் உயர் அதிகாரிகள் சீஃப் கன்ஸர்வேட்டர் ஆஃப் ஃபாரஸ்ட் உட்பட அனைவரும் என்மீது அளவுகடந்த மதிப்பு வைத்திருந்தார்கள். தொழிலுக்கு உரிய மரியாதை கிடைத்தது.

தலைமை வன அலுவலர் பயணம் போகும் போது என்னையும் உடன் அழைத்தப் போவார். அவர் என்னிடமிருந்த காமிராவை வாங்கிப் படம் எடுத்து மகிழ்ந்ததும் உண்டு. எத்தனையோ அனுபவங்கள்.

புகைப்படக்கலையில் தனிப்பட்ட முறையில் நிறைய சாதிக்க முடியும் என்று நம்பிக்கை வந்த போது, ஒரு நாள் அந்த வனத்துறை அலுவலக வேலையை விட நேர்ந்தது. ஒரு மாதம் விடுப்பு என்று தான் முதலில் வெளியே வந்தேன். பிறகு அந்த வேலையிலிருந்து நிரந்தரமாகவே விலகிக் கொண்டேன்.

"என்ன! அப்படியே பேசாமல் இந்த சூழலில் ஆழ்ந்து விட்டீர்களே" என்று செட்டியார் கேட்டார். வனத்துறை புகைப்பட கலைஞனாக வாழ்ந்து ரசித்தவற்றை சுருக்கமாக அவரிடம் விவரித்துக் கொண்டே வந்தேன். இந்த களக்காடு-முண்டந்து வனப்பகுதியை பற்றி எனக்கு தெரிந்ததை அவரிடம் விவரித்தேன்.

'மேற்குத் தொடர்ச்சி மலையில் திருநெல்வேலி மாவட்டத்தில் இந்த களக்காடு-முண்டந்துறை புலிகள் சரணாலயம் அமைந்திருக்கிறது. இந்தகாட்டுப்பகுதியில் புலி, சிறுத்தை, மான், யானை போன்ற வனவிலங்குகளும்,

www.TheMagnet.com

உலகில் வேறெங்கும் இல்லாத சில அபூர்வ தாவர வகைகளும் இங்கே நிறைந்து காணப்படுகின்றன. சுமார் 800 சதுர கிலோ மீட்டருக்கு மேல் இந்த காட்டுப்பகுதி வியாபித்திருக்கிறது. இந்திய வனப்பகுதிகளில் வேறெங்கும் காணமுடியாத சிங்கவால் குரங்கு என்கிற அறிய வகை குரங்கை இந்த வனப்பகுதியில் காணலாம்.

சிறிது தூரம் சென்றவுடன் காவலர்களும், செக்யூரிட்டிகளும் எங்களை காரை வழிநடத்தி மேலே அழைத்துச் சென்றார்கள். நான் ஆச்சரியமாக பார்த்துக் கொண்டிருக்கையில் செட்டியார் அனைத்தையும் விளக்கினார். ஆடி அமாவாசையான இன்று இந்த சிங்கம்பட்டி ஜமீனில் காலம்காலமாக சிவனுக்கு



விழா எடுத்துக் கொண்டாடுவார்களாம், லட்சக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி பூஜைகள், தீமிதி என்று ஐந்து நாட்கள் கொண்டாட்டம் தான் இதற்காக விரதமிருந்து குடும்பமாக ஒன்று கூடுவார்களாம். இங்கு மது, மாமிசம், பான்பராக், குட்கா போன்ற புகையிலை வஸ்துக்களுக்கு கடுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது. மக்கள் வெள்ளம் மலை முழுவதும் பரவலாக வியாபித்திருப்பதை காணும் போது, எங்கே இருந்து இவ்வளவு பேர்கள் வந்து இணைந்திருக்கிறார்கள் என்ற வியப்பும் நம்முள் ஏற்படுகிறது. இந்த கரடுமுரடான மலைப்பாதையில் இதுவரை ஒரு பாம்போ, பூரானோ யாரையும் கடித்ததில்லையாம்.

இந்த பாதை சென்றடைந்தது ஒரு மண்டபமும் முன்பு, காவலர் புடைசூழ, ராஜ மரியாதையுடன் செட்டியாரையும் உடன் சென்றிருந்த என்னையும் நண்பர் ஆர். நடராஜனையும் வரவேற்று அழைத்துச் சென்று அமரச் செய்தார்கள். சிறிது நேரத்தில் சிங்கம்பட்டி ஜமீன் அவர்கள் வந்து செட்டியாரை ஆரத்தழுவிக் கொண்டு வரவேற்று தன் அருகிலேயே அமரச் செய்தார். பக்கத்திலேயே நாங்களும் அமர்ந்தோம். இதுவரை நான் எந்த ஜமீர்தாரையும் நேரில் கண்டதில்லை. ஜமீன் பதவிக்கே உண்டான பிரத்யேக ராஜ அலங்காரங்களுடன் அந்த முதியவரைக் காண வியப்பாக இருந்தது. மண்டபத்திற்கு அருகே அழகான தாமிரபரணி ஆறு சலசலப்பான ஓசையுடன் ஓடிக்கொண்டிருந்தது. பரம்பரையாக அவர்கள் குடும்பத்தார் வணங்கிக் கொண்டிருக்கும் நதிக்கரையில் அமைந்திருக்கும் சொறி முத்தையன் கோயில் முன்பு நூற்றுக்கணக்கான பக்தர்கள் வியாபித்திருக்கும் காட்சி நம் மனதிலும் பக்தி பரவசத்தை ஏற்படுத்துகிறது. 150 ஆண்டுகால பாரம்பரிய சின்னங்களான பல லட்ச மதிப்புள்ள ஆடை ஆபரணங்கள் அணிந்துக் கொண்டு அபூர்வ ரத்தினங்கள் பதித்த தங்க வாளை கையில் வைத்துக் கொண்டு அங்கிருந்த சிம்மாசனத்தில் எங்கள் எதிரே வந்தமர்கிறார் சிங்கம்பட்டி ஜமீன்தார் திரு. டி. என். எஸ். முருகதாஸ் தீர்த்தபதி மகாராஜா. 1986ல் ஆறுவயது பையனாக இருந்தபோது, மக்களுக்கு ஆசி வழங்கும் அதிகாரத்துடன் ஜமீன் பட்டம் வழங்கி இந்த சிம்மாசனத்தில் உட்கார வைத்திருக்கிறார்கள். சுமார் எண்பது வருடங்களாக தொடர்ந்து இதே காட்டுக் கோயில் முன்பு வருடத்துக்கு ஒரு நாள் வரும் இந்த ஆடி அமாவாசையான நன்நாளில் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து வந்து குழுமியிருக்கும் இந்த அற்புத மக்களுக்கு ஆசி வழங்கிக் கொண்டிருக்கிறார். சில ஏக்கர் பரப்பளவுள்ள அவருடைய சிங்கம்பட்டி ஜமீன் இன்றளவும் பத்திரமாக

பொத்திப் பாதுகாத்து வரப்படுகிறது. "இன்றைக்கு நான் ஒருவன் மட்டுமே நாட்டில் முடி சூட்டப்பட்ட அரசர்" என்று சிறிது பெருமையுடன் கூறிக்கொண்டார். திரு. முருகதாஸ்.

அவருடைய தகப்பனார் டி.என்.எஸ். சங்கர தீர்த்தபதி அப்போது பிரின்ஸ் கல்லூரி என்று அழைக்கப்பட்ட சென்னை பிரசிடென்ஸி கல்லூரியின் முதல்வரை, தன்னுடைய சமூகத்தை குறித்து இழிவாகப் பேசியதற்காகச் சுட்டுக் கொன்று விட்டார். அவர்கள் குடும்பம் ஏற்பாடு செய்த பிரிட்டிஷ் வழக்கறிஞருக்கு ஒரு அமர்வுக்கு ஒரு லட்சம் கொடுக்க வேண்டி வந்தது! அந்த காலத்தில் தங்கத்தின் விலை சவரனுக்கு வெறும் 3 ரூபாய் தான். (ஆனால் நிலத்துக்கு மதிப்பு இருந்தது). இப்போது மாஞ்சோலை எஸ்டேட் என்று அறியப்படும் 8000 ஏக்கர் நிலத்தை பாம்பே டிரேடிங் கம்பெனிக்குக் குத்தகைக்குக் கொடுக்கும் ஒன்றை கையெழுத்திட்டோம்" அவருடைய தந்தை ஜாமினில் வெளியே வந்தார். ஆனால் சில வருடங்களிலேயே காலமானார். மீதி இருக்கிறவற்றை வைத்துக் கொண்டு தன் 'ராஜ்யத்தை' பரிபாலிக்கிறார் திரு. முருகதாஸ்.

வெகுநாட்களாக செட்டியாரை இங்கே வரும்படி ஜமீன்தார் அழைத்ததும் இம்முறை தான் அதற்கு வாய்க்கப் பெற்றிருக்கிறது என்றார் செட்டியார். ஜமீன்தாரையும் செட்டியாரையும் நடைபெற்றுக் கொண்டிருந்த அந்த விழாவில் நிறைய புகைப்படங்கள் எடுத்தேன். செட்டியார் என்னை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். உடனே என் தோளில் அன்பாகக் கைபோட்டு என்னை அணைத்துக் கொண்டு புகைப்படம் எடுத்துக் கொண்டார். உண்மையிலேயே அந்த மகிழ்ச்சியான சூழலை என்னால் வார்த்தைகளால் விளக்க முடியவில்லை. எதிரே திரளான மக்கள் தீமிதியில் பக்தி பரவசத்துடன் கலந்து கொண்டதை காணமுடிந்தது. இதுவரை என் வாழ்நாளில் கண்டிராத வித்தியாசமான பயண அனுபவமாக என் நெஞ்சில் பதிந்து விட்டது. மனதிற்குள் செட்டியாருக்கு நன்றி கூறிக் கொண்டேன்.

சமீபத்தில் சென்னை வந்திருந்த சிங்கம்பட்டி ஜமீன் அவர்கள் எனக்கு போன் செய்து தான் தங்கி இருக்கும் இடத்திற்கு வரும்படி கேட்டுக்கொண்டார். நேரில் சென்று அவரை சந்தித்தேன். "நீங்கள் எடுத்த போட்டோ ஆல்பத்தை செட்டியார் எனக்கு அனுப்பி வைத்திருந்தார். படங்கள் அத்தனையும் அவ்வளவு அருமை. பாராட்ட வார்த்தைகள் இல்லை. என் ஜமீனை சேர்ந்த அவ்வளவு நபர்களும் பார்த்தும் மகிழ்ந்து படம் எடுத்த உங்களை அங்கே பாராட்டினார்கள் என்று கூறிக் கொண்டே எனக்கு பொன்னாடை அணிவித்து



கௌரவித்தார். என்ன பாக்கியம் செய்தேன்.

எல்லாம் இறைவன் சித்தம். நம்மாலே ஆவது ஒன்றுமே இல்லை. எல்லாம் அவன் காட்டுகிற வழியில் தான் பயணம் போய்க் கொண்டிருக்கிறோம். இல்லாவிட்டால் வெகு சாமாணியனான எனக்கு வாழ்க்கையில் இத்தனை பெருமைகள், கௌரவங்கள், நல்லோர் பலரின் தொடர்பு எல்லாம் அமையுமா என்ன? பெருமையாக இருக்கிறது. பணிவோடு இருக்க வேண்டும் அன்போடு பழக வேண்டும் என்கிற ஆழமான உணர்வும் இருக்கிறது. வேறென்ன வேண்டும்? ●



# க → வி → கவி → தை

■ லெமன்

www.TheMagnet.com

■ வெறி நாய்களோ எனக்
கழுத்து வரை எகிறி எகிறித் தாவும் அலை ஆழி
ஏந்திய கைகளில் எறிய ஆயத்தமாய் எலும்புத் தாழி!

■ அழுக்காய் அறுதப் பழசாய்
அந்த பைராகியின் மேலங்கி
அவனது பாதையில்
அப்போது தான் உரித்துப் போட்ட பாம்புச் சட்டை!

■ அழுதழுது தேம்பும் ஆண்சிசு
அதீத களைப்பில் கண்ணயரும் ஆயா.....
அருகேயே புகட்ட ஆயத்தமாய் பால்புட்டி!

■ ஒக்கிட வக்கில்லாத ஓட்டைக் கூரை
உயரே வானில் உலா - முழுநிலா...
உன் குடிசைத் தரையெங்கும் வெள்ளிக் காசுகள்!

■ மாலையும் கழுத்துமாய் கைகோத்தபடி
ஹோம குண்டத்தை வலம் வரும் மணமக்கள்.
அவர்களது அகத்தும் அதே ஹோமாக்கினி -
கட்டாயக் கல்யாணம்....

■ கூட்டுக்குள்ளே பசித்த குஞ்சுகளின் பலத்த கூச்சல்
கூடவே ஒரு குயில் குஞ்சின் மெலிந்த கேவல் -
இரை ஊட்டும் காக்கை காதில் கேட்டதோ இல்லையோ!

■ பற்றி எரியும் பாதையோர மரம்
பரபரப்பாய்ப் புற்றை நீத்துப் புறப்படும் ஈசல்கள்.....
பையப் பையப் படத்தைச் சுருக்கிப்
புற்றினுள் புகும் பாம்பு!



www.TheMagnet.com

# மனைவியை வணங்கும் மாமனிதர்

கோயமுத்தூர் - திண்டுக்கல் ஆர்.வி.எஸ் கல்வி - ஆன்மீகம் - சமூக சேவை - விவசாய சாம்ராஜ்யங்களின் சேர்மன் டாக்டர் கே.வி. குப்புசாமி செட்டியார் தனது அலுவலகத்தில் 2013ஆம் ஆண்டில் மறைந்த தன் மனைவி பத்மாவதிக்கு தங்க நிறத்தில் ஜொலிக்கும் சிலை செய்து வைத்து தினமும் தனது அலுவல்களை துவங்கும் முன்பு மனைவி சிலைக்கு முன் மனம் உருக கை கூப்பி வணங்கி பிராத்தனை செய்த பிறகுதான் தனது அன்றாட பணிகளை துவங்குகிறார். இதனை பார்த்து 'அடடா... மனைவி மறைந்த பிறகு மறக்காமல் மரியாதை செய்யும் இவர் அல்லவா மாமனிதர் என்று பலரும் மெய்சிலர்க்கின்றனர்.

பல ஆண்டுகள் கணவரின் பரபரப்பான கல்வி-விவசாய-ஆன்மீக-சமூகசேவை பணிகளுக்கு உறுதுணையாக செயல்பட்ட பத்மாவதி அம்மையாரின் புகழை என்றும் போற்றி மகிழும் உத்தமர் 'சேர்மன்' டாக்டர் கே.வி. குப்புசாமி செட்டியாரை நாமும் மனதார பாராட்டலாமே?

**- விஜயா கண்ணன்**



# பெரிய புராணத்தில் மூன்றே பெண்கள்

www.Themagnat.com

சைவ சமயத்தின் முக்கியமான நூல்களுள் ஒன்று 'பெரிய புராணம்' என்று அழைக்கப்படும் 'திருத்தொண்டர் புராணம்'. சேக்கிழார் பெருமான் இயற்றிய இந்த நூல் பன்னிரு திருமுறைகளுள் ஒன்றாகத் திகழ்கிறது. இது சிவபெருமானின் அடியார்களான 63 நாயன்மார்களின் வரலாற்றை எடுத்துரைக்கின்றது. அடியார்களின் வாழ்க்கையை சித்தரித்தாலும் **'தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே'** எனும் வாக்கிற்கேற்ப இந்நூல் 'பெரிய புராணம்' என்ற பெயரைப் பெற்றது. அத்தகைய சிறப்புப் பெற்ற இந்த நூலில் குறிப்பிடப்படும் 63 நாயன்மார்களில் **மூன்று பெண்களும்** அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது. **காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார்** மற்றும் **இசைஞானியார்** ஆகிய மூவரே இந்த பெருமைக்குரியவர்கள்.

## காரைக்கால் அம்மையார்

தென்தமிழகத்தின் கடற்கரை நகரங்களுள் ஒன்றான நாகப்பட்டினத்திற்கு அருகில் உள்ள ஊர் காரைக்கால். தற்போது இப்பகுதி பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ளது. இந்த ஊரில் வாழ்ந்து வந்த வைசிய குலத்தைச் சேர்ந்த **தனதத்தன், தர்மவதி** தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்தவர் புனிதவதி. இளவயது முதலே சிவபெருமான் மீது அளவற்ற பக்தி கொண்டு அவரை வழிபட்டு வந்தார்.

இந்நிலையில் புனிதவதி தக்க பருவம் வந்ததும் பெற்றோர் தகுந்த வரனைத் தேடினர். நாகப்பட்டினத்தில் நகைக்கடை வைத்திருந்த பரமதத்தனே தனது மகளுக்கு ஏற்ற கணவன் என்று முடிவு செய்தனர். அவரையே புனிதவதிக்கு திருமணம் செய்து வைத்தனர். திருமணம் முடிந்து இருவரும் நாகப்பட்டினத்திற்கு வந்து இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தனர்.

ஒரு சமயம் பரமதத்தன் கடைக்கு வந்த ஒரு வியாபாரி தான் கொண்டு வந்திருந்த இரண்டு மாங்கனிகளை அவருக்கு மரியாதை நிமித்தமாகக் கொடுத்து விட்டுச் சென்றார். பரமதத்தன் அவைகளை பணியாள் மூலமாக தனது வீட்டிற்குக் கொடுத்தனுப்பி, மதிய உணவிற்கு வைக்குமாறு சொல்லியனுப்பினார். வீட்டில் புனிதவதி மதிய உணவை ஏற்பாடு செய்துக் கொண்டிருந்தபோது, வீட்டு வாசலில் 'சிவாய நம' என்னும் குரல் கேட்டது. வெளியில் வந்து பார்த்தபோது சிவனடியார் ஒருவர் நின்றுக் கொண்டிருந்தார். அவரை அகமகிழ்ந்து வரவேற்ற புனிதவதி, மதிய உணவு வேளையில் அவர் வந்ததால் பசியாறிச் செல்லும்படி வேண்டிக் கொண்டாள்.

அடியாரும் சம்மதிக்க, புனிதவதி அவரை வீட்டிற்குள் அழைத்துச் சென்று ஆசனத்தில் அமர வைத்து அவரது திருப்பாதங்களுக்கு பாதபூசை செய்தார். பின்னர் இலையிட்டு அடியாருக்கு அமுது பரிமாறினாள் புனிதவதி. தனது கணவர் கொடுத்தனுப்பிய இரண்டு மாங்கனியில் இருந்து ஒன்றை அடியாருக்கு வைத்து உபசரித்தார். அடியாரும் உணவு உண்டு மனம் மகிழ்ந்து வாழ்த்திவிட்டுச் சென்றார். சிறிது நேரத்தில் கடையில் இருந்து திரும்பிய பரமதத்தனுக்கு உணவு பரிமாறிய புனிதவதி, இரண்டாவது மாங்கனியை இலையில் வைத்தாள்.

**"மாங்கனியை உண்ட பரமதத்தன் அதன் சுவையில் திளைத்து, மற்றொரு மாங்கனியையும் கொண்டு வரச் சொன்னான். இதைக் கேட்டதும் திகைத்துப் போன புனிதவதி சமையலறைக்குள் சென்று சிவபெருமானை மனமுருகி வேண்டினாள்."**

மாங்கனியை உண்ட பரமதத்தன் அதன் சுவையில் திளைத்து, மற்றொரு மாங்கனியையும் கொண்டு வரச் சொன்னான். இதைக் கேட்டதும் திகைத்துப் போன புனிதவதி சமையலறைக்குள் சென்று சிவபெருமானை மனமுருகி வேண்டினாள். அடியாருக்கு தொண்டு செய்தால் ஆண்டவன் உடனே அருள்தருவான் என்பதற்கேற்ப இறைவனின் கருணையினால் மாங்கனி ஒன்று புனிதவதியின் கையில் வந்து விழுந்தது. ஈசனின் திருவருளை எண்ணி மகிழ்ந்து, கனியைக் கொண்டு வந்து கணவரின் இலையில் வைத்தாள். அதை உண்ட பரமதத்தன், முன்பு உண்ட மாங்கனியைவிட இக்கனி அதிக சுவையுடன் இருப்பதை உணர்ந்து மனைவியிடம் இதுபற்றி வினவினான்.

இதைக் கேட்ட புனிதவதி, என்ன சொல்வது என்று தெரியாது திகைத்து நின்றாள். பின்னர் நடந்தவற்றை தனது கணவனிடம் தெரிவித்தாள். ஆனால் இதை நம்ப மறுத்த பரமதத்தன், 'நீ சொல்வது உண்மையென்றால் இறைவனிடம் கேட்டு இன்னொரு கனியைக் கொண்டு வா!' என்றான். வேறு வழியில்லாமல் புனிதவதி மீண்டும் சமையறைக்குள் சென்று சிவபெருமானிடம் வேண்டினாள். ஈசனும் இன்னொரு கனியை அளித்தார். அதைப் பெற்றுக் கொண்ட புனிதவதி கணவரிடம் வந்து கொடுத்தாள்.

இக்காட்சியைக் கண்ட பரமதத்தன், தனது மனைவி புனிதவதி சாதாரண மானுடப் பெண் அல்ல, இறைவனின் கருணையைப் பூரணமாகப் பெற்றவள் என்பதை உணர்ந்தான். அதனால் அவளுடன் இனி இல்லறம் நடத்துவது தகாது என்று எண்ணி, அவளை விட்டு பிரிந்து செல்ல முடிவு செய்தான். வெளியூர் சென்று பொருள் ஈட்டி வருவதாகச் சொல்லி விட்டு

**ம.நித்யானந்தம்**



கடற்பிரயாணம் மேற்கொண்டான். கணவன் சென்று பலகாலம் கழித்தும் வராததால் புனிதவதி வருந்தினாள். சிவபெருமானைச் சரணடைந்து பூஜை செய்து வந்தாள்.

இதற்கிடையே வணிகம் செய்யச் சென்ற பரமதத்தன், பெரும் பொருள் ஈட்டினான். ஆனால் மீண்டும் நாகப்பட்டினத்திற்குத் திரும்பி வராமல் பாண்டிய நாடான மதுரையம்பதிக்குச் சென்று அங்கேயே ஒரு பெண்ணை திருமணம் செய்துக் கொண்டு வாழ்ந்து வந்தான். அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறக்க, அக்குழந்தைக்கு புனிதவதி என்ற பெயரையேச் சூட்டினான். மற்ற வணிகர்கள் மூலமாக பரமதத்தன் பாண்டிய நாட்டில் இருக்கும் செய்தி புனிதவதியாரின் உறவினர்களுக்குக் கிடைத்தது. அவர்கள் புனிதவதியை அழைத்துக் கொண்ட பாண்டிய நாடு சென்றனர்.

பாண்டிய நாட்டு எல்லையில் தங்கி, பரமதத்தனுக்கு செய்தி அனுப்பினர். உடனே பரமதத்தன் தனது மனைவி மற்றும் குழந்தையுடன் ஓடோடி வந்து புனிதவதியாரின் காலில் விழுந்து வணங்கினான். இதைக் கண்ட அனைவரும் திகைத்து நின்றனர். பரமதத்தனிடம் காரணம் கேட்டனர். அவன் நடந்தவற்றை விவரித்தான். 'தெய்வ அனுக்கிரகம் பெற்ற புனிதவதியாருடன் குடும்பம் நடத்துவது முறையாகாது, அதனால் தான் அவரை வணங்கினேன், நீங்களும் வணங்குங்கள்' என்று மொழிந்தான்.

கணவரின் இந்தச் செயலைக் கண்ட புனிதவதியார், பெரிதும் வேதனை அடைந்தார். இனிமேல் இந்த இளமை எதற்கு என்று எண்ணி, தனது அழகு நீங்கி, பேய் வடிவம் தருமாறு சிவபெருமானை வேண்டி நின்றாள். அவரும் புனிதவதிக்கு பேய் வடிவம் அளித்து அருளினார். அன்று முதல் புனிதவதி **'காரைக்கால் அம்மையார்'** என்று போற்றப்பட்டார். அம்மையார் அங்கிருந்து புறப்பட்டு பல தலங்களை தரிசித்து, இறுதியில் இறைவனைக் காண கயிலாயம் நோக்கிச் சென்றார்.

மலை அடிவாரம் வரை சென்ற அம்மையார் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் கயிலாயம் புனிதமான இடம் என்பதால் தமது பாதம் வைக்க அஞ்சினார். அதனால் தனது தலையால் நடந்து மேலே சென்றார். அம்மையாரின் அருந்தவ நிலையால் கயிலாயம் அதிர்ந்தது. கயிலாயத்தில் இருந்து இக்காட்சியைக் கண்ட உமாமகேஸ்வரர், 'அம்மையே வருக!' என்று அன்போடு அழைத்து, 'வேண்டும் வரம் கேளுங்கள்' என்று மொழிந்தார்.

'இறைவா! பிறவாமை வேண்டும், மீண்டும் பிறந்தால் உனையென்றும் மறவாமை

www.TheMagnet.com



வேண்டும். நீ ஆடும்போது உன் அருகில் இருந்து பார்த்து மகிழ அருள் புரிய வேண்டும்' என்றார். அவ்வாறே அருளிய சிவபெருமான், 'திருவாலங்காட்டிற்கு வந்து எமது திருநடனத்தை தரிசிக்கலாம்' என்று அருளினார். காரைக்கால் அம்மையாரும் திருவாலங்காட்டிற்கு வந்து சிவபெருமான் தனது திருநடனத்தை தரிசித்து மகிழ்ந்து அவரது திருவடியின் கீழ் இருக்கும் பேறு பெற்றார். பங்குனி மாதம் சுவாதி நட்சத்திரத்தன்று காரைக்கால் அம்மையார் திருவாலங்காட்டில் முக்தி பெற்றார்.

www.TheMagnet.com

காரைக்கால் அம்மையார் இறைவனின் மீது பல பாடல்கள் பாடியுள்ளார். 101 பாடல்கள் அடங்கிய **'அற்புதத் திருவந்தாதி'**, மூத்த திருப்பதிகம் என்று வழங்கப்படும் 22 பாடல்கள் அடங்கிய **'திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்'**, 20 பாடல்கள் அடங்கிய **'திருஇரட்டை மணிமாலை'** ஆகியவை இவர் பாடிய பாடல்களின் தொகுப்பு. இவரது பாடல்கள் **பன்னிரு திருமுறைகளில், பதினோராம் திருமுறையில்** இடம் பெற்றுள்ளன.

இவரது காலம் கி.பி. 300-கி.பி 500 என்று கூறப்படுகிறது. இவர் 63 மூன்று நாயன்மார்களில் காலத்தால் முற்பட்டவர். இவர் இறைவனின் மீது பாடிய பதிக முறைகளைப் பின்பற்றியே பிற்காலத்தில் தேவாரப் பதிகங்கள் பாடப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதனால் இவரது பதிகத்திற்கு **'மூத்த திருப்பதிகம்'** என்ற பெயரும் உண்டு.

**ஆதியோ டந்தமில்லான் அருள்நடம் ஆடும்போது**
**கீதமுன் பாடும் அம்மை கிளரொளி மலர்த்தாள் போற்றி!**

என்று திருத்தொண்டர் புராணத்தில் 66 பாடல்களில் அம்மையின் வாழ்க்கைச் சரிதத்தைத் தெய்வச் **சேக்கிழார் பெருமான்** போற்றிப் பரவுகின்றார்.

## மங்கையர்க்கரசியார்

**ப**ழையாறையைச் தலைநகராகக் கொண்டு சோழ தேசத்தை ஆட்சி செய்து வந்த அரசனின் மகளாகப் பிறந்தவர் **மங்கையர்க்கரசி.** இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் **மானி.** சோழர்கள் சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு பெரும் தொண்டு செய்தவர்கள். ஆதலால் மங்கையர்க்கரசியும் இயல்பாகவே சைவ சமயத்தின்பால் மிகுந்த ஈடுபாடு கொண்டார்.

தக்க பருவம் வந்ததும் அரசன் தனது மகளுக்கு ஏற்ற மணாளனைத் தேடினார். பாண்டிய மன்னன் **நின்றசீர் நெடுமாறனுக்கு,** சோழன் தனது மகளான மங்கையர்க்கரசியை திருமணம் செய்து வைத்தான். நின்றசீர் நெடுமாறனுக்கு **கூன்பாண்டியன்** என்ற பெயரும் உண்டு. பாண்டியனுடன் அரசி மதுரை சென்றாள்.

நின்றசீர் நெடுமாறனும், அவரது அமைச்சராக இருந்த குலச்சிறையாரும்

> அவர்களது பக்தி போற்றத்தக்கதாக இருந்தது. சித்தத்தைச் சிவன்மீது வைத்து தமது நிலையில் உயர்ந்து நின்றதால் நாயன்மார்களுள் ஒருவராக திகழும் பேறுபெற்று மக்களால் வணங்கப்படுகின்றனர்.

சைவ சமயத்தின்பால் பக்தி கொண்டவர்கள். ஆனால் காலச்சக்கரத்தின் சுழற்சியால் பாண்டியன் சமண சமயத்தைத் தழுவினான். சிவபெருமான் பல திருவிளையாடல்கள் நிகழ்த்திய மதுரையம்பதி, மக்கள் மாற்றுச் சமயத்தை தழுவ நேர்ந்த திருவிளையாடலையும் பார்த்தது. பலர் சமண சமயத்திற்கு மாறினர். மன்னன் எவ்வழியோ குடிமக்களும் அவ்வழியே.

மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் வருந்தி நின்ற வேளையில், நற்செய்தி ஒன்று வந்து சேர்ந்தது. மேன்மைகொள் சைவநீதியை தழைக்கச் செய்ய உதித்த **திருஞானசம்பந்தப் பெருமான், திருமறைக்காடு** என்னும் தலத்திற்கு எழுந்தருளியிருந்த செய்தி கிடைத்தது. பாண்டிமாதேவி, சம்பந்தரை மதுரைக்கு வருகை தருமாறு அமைச்சரை அனுப்பி வேண்டினார். அரசியின் வேண்டுகோளை ஏற்ற சம்பந்தர் பல தலங்களை தரிசித்துக் கொண்டு அடியார்கள் புடைசூழ மதுரைக்கு வந்தார்.

மங்கையர்க்கரசியார், சம்பந்தப் பெருமானை வரவேற்று, உபசரித்து அரசனின் மனமாற்றத்தைத் தெரிவித்தார். இவைகளையெல்லாம் கேள்விப்பட்ட சமணர்கள், அரசனிடம் சென்று முறையிட்டனர். அன்றிரவு சம்பந்தரும், அடியார்களும் தங்கி இருந்த மடத்திற்கு சமணர்கள் தீ வைத்தனர். **'பையவே சென்று பாண்டியர்க்காகவே'** என்று சம்பந்தர் பதிகம் பாட, இங்கு வைக்கப்பட்ட நெருப்பு, பாண்டிய மன்னனுக்கு வெப்பு நோயாகத் தாக்கியது.

பாண்டியன் வெப்பம் தாங்காமல் துடித்தான். சமணர்கள் தங்களது மருத்துவ சிகிச்சை முறையால் அதைத் தீர்க்க முயன்று தோற்றனர். மங்கையர்க்கரசியார், தனது மணாளனை நோக்கி, சம்பந்தப் பெருமானை அழைத்து வந்து நோய் நீக்க அனுமதி கேட்டார். வேறு வழி இல்லாமல் அரசனும் சம்மதித்தான். ஆளுடையப் பிள்ளையார் அரண்மனைக்கு எழுந்தருளினார்.

சம்பந்தர் திருநீற்றுப் பதிகம் பாடி அரசனின் மீது பூசிய வெண்ணீறு வெப்பு நோயை போக்கியது. அதுமட்டுமல்ல பாண்டியனின் கூன்முதுகும் நிமிர்ந்தது. பாண்டிமாதேவியார் மனம் மகிழ்ந்தார். தனது நம்பிக்கை பொய்த்து விடவில்லை என்று ஆனந்தம் அடைந்தார். ஆனால் சமணர்கள் கோபமடைந்து சம்பந்தரை **அனல் வாதம், புனல் வாதம்** ஆகியவற்றிற்கு அழைத்தனர். அனைத்திலும் வென்ற பரசமயக் கோளரியான பிள்ளை, அரசனுக்கு திருநீறு அளித்து மீண்டும் அவரை சைவ சமயத்திற்கு மாற்றினார்.

சோழ நாட்டில் தல யாத்திரைக்கு கிளம்பிய சம்பந்தப் பெருமானுடன், நின்றசீர் நெடுமாறனும், மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் புறப்பட்டனர். அவர்களைத் தடுத்த சம்பந்தர், பாண்டிய நாட்டில் இருந்து சைவ சமயத்தை தழைக்கச் செய்யுமாறு கூறினார். அவர்களும் மதுரை திரும்பினர். திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாலவாய் பதியை தரிசித்தபொழுது, அரசனும், பாண்டிமாதேவியும் சென்று அவரைப் பணிந்து ஆசி பெற்றனர்.

நீண்ட காலம் நின்றசீர் நெடுமாறனுக்கு துணையாக மங்கையர்க்கரசியார் இருந்து சைவத்தைப் போற்றி வளர்த்து இறைவனடி சேர்ந்தார். சித்திரை மாதம் ரோகிணி நட்சத்திரத்தன்று அவரது குருபூசை நடைபெறுகிறது. சைவ சமயம் தழைக்க தொண்டு செய்த அரசர் நின்றசீர்

நெடுமாறனும், மங்கையர்க்கரசியாரும், அமைச்சரான குலச்சிறையாரும் 63 நாயன்மார்களாகப் போற்றப்பட்டு வழிபடப்படுகின்றனர்.

மங்கையர்க் கரசி வளவர்கோன்
பாவை வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னோடும் அமர்ந்த
ஆலவா யாவதும் இதுவே.

என்று சம்பந்தப் பெருமான் அரசியாரின் பெருமையை தமது ஆலவாய்ப் பதிகத்தில் பாடியுள்ளார் என்றால் அவரது சிறப்பை என்னவென்று கூறுவது ! மேலும் ஞானசம்பந்தர் மற்ற இருவரது பெருமையையும் தமது ஆலவாய்ப் பதிகத்தில் போற்றிப் பாடியுள்ளார்.

## இசைஞானியார்

**தி**ருவாரூரில் **ஞானசிவாச்சாரியார்** என்பவர் வசித்து வந்தார். கௌதம கோத்திரத்தைச் சேர்ந்த இவரது மகளாகப் பிறந்தவர் இசைஞானியார். இவர் தியாகேச பெருமானின் மீது அளவு கடந்த பக்தி கொண்டவர். தக்க பருவம் வந்தவுடன் ஞானசிவாச்சாரியார் தமது மகளுக்கு திருமணம் செய்து வைத்தார்.

திருமுனைப்பாடி நாட்டின் திருநாவலூரில் பிறந்த ஆதிசைவ மரபைச் சேர்ந்த சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் திருமணம் இனிதே நடைபெற்றது. சிவசிந்தையிலே ஒழுகி நின்ற இத்தம்பதிகளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தைக்கு '**நம்பியாரூரன்**' என்று பெயரிட்டு வளர்த்து வந்தனர். இந்த நம்பியாரூரனே பின்னாளில் '**சுந்தரமூர்த்தி சுவாமிகள்**' என்று அழைக்கப்பட்டார்.

தம்பிரான் தோழராக விளங்கிய சுந்தரமூர்த்தி சுவாமிகளை தமது மகனாகப் பெற்றதால் சடையனாரும், இசைஞானியாரும் 63 நாயன்மார்களுள் ஒருவராக திகழும் பாக்கியம் பெற்றனர். இசைஞானியார் சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரத்தன்று சிவபதவி அடைந்தார்.



**சேல்ஸ்மேன்:** புடவை விலை ரொம்ப அதிகம். இதை அடித்து துவைக்கவோ வெயிலில் காயப் போடவோ கூடாது.

**வாங்குபவர்:** பின்னாடி எங்க வீட்டுக்காரர் வராரு பாருங்க. அவரு கிட்ட இதையெல்லாம் சொல்லுங்க.

- சரவெடி ஸ்ரீதர்

ஒழியாப் பெருமைச் சடையனார்
உரிமைச் செல்வத் திருமனையார்
அழியாப் புரங்கள் எய்தழித்தார்
ஆண்ட நம்பி தனைப்பயந்தார்
இழியாக் குலத்தின் இசைஞானிப்
பிராட்டி யாரை என்சிறுபுன்
மொழியாற் புகழ முடியுமோ?
முடியா தெவர்க்கும் முடியாதால்.

என்று சேக்கிழார் பெருமான் தனது திருத்தொண்டர் புராணத்தில் புகழ்கின்றார்.

இல்லறத்தை நல்லறமாக நடத்தி இறைவனது கருணையினால் சிறந்த மகவை ஈன்ற அன்னையாக இசைஞானியார் திகழ்கின்றார். சிவபெருமானின் தோழராகத் திகழ்ந்த சுந்தரரைப் பெற்றதால் வணங்கத்தக்கவராக போற்றப்படுகின்ற இவரது வாழ்க்கை வரலாறும் நாம் உணர வேண்டிய ஒன்று.

**இ**ம்மூன்று பெண்மணிகளும் வெவ்வேறு வாழ்க்கைச் சூழ்நிலைகளில் பிறந்து வாழ்ந்தாலும், சிவபெருமான்மீது மிகுந்த பக்தி கொண்டு வாழ்ந்தனர் என்பது இங்கு கவனிக்கத்தக்க ஒன்றாகும். அவர்களது பக்தி போற்றத்தக்கதாக இருந்தது. சித்தத்தைச் சிவன்மீது வைத்து தமது நிலையில் உயர்ந்து நின்றதால் நாயன்மார்களுள் ஒருவராக திகழும் பேறுபெற்று மக்களால் வணங்கப்படுகின்றனர். பெரிய புராணம் போற்றும் பெருமைமிக்க இந்த மூன்று பெண்களையும் நாமும் போற்றுவோம். ●

# இரு நதிகள் இணைந்தால்

கவிஞர் சாந்தா வரதராஜன்

கங்கைதனைப் பாரதத்தாய் பெற்றெடுத்தாள்
களிப்புடனே வடநிலத்தில் தவழவிட்டாள்!
தங்கை யென காவிரியாள் பின்பு உதித்தாள்
தமிழகமாம் தென்னகத்தைக் காக்க வந்தாள்!

தங்கமான தாய் வயிற்றில் உதித்த பெண்கள்
தரணியினைக் காக்கின்ற பொறுப்பை ஏற்றார்!
பொங்குகின்ற ஆனந்தக் கண்ணீராலே
புறப்பட்டார் நிலமகளை அணைத்துக் கொண்டு!

காவிரியாள் இசையொலிக்க ஆடி வந்தாள்
கரைமருங்கே காவிரித்து மணத்தைத் தந்தாள்!
பாவிசைத்து வண்டமிழைப் பாடி வந்தாள்
பாவலர்கள் நெஞ்சத்தில் குடி புகுந்தாள்!

பூவிரித்த காவிரியாள் பொன்விரித்துப்
பொன்னியென இந்நிலத்தில் பாய்ந்து வந்தாள்!
நாவினிக்க விருந்தினரை ஓம்பவேண்டி
நாடெங்கும் நெல்வயலாய் காட்சி தந்தாள்!

கங்கையவள் கீதையினைப் புவிக்குத் தந்தாள்
காளிதாசன் காவியத்தால் உயர்ந்து நின்றாள்!
வங்கத்தின் பழம்பெருமை விண்ணைமுட்டும்
மராட்டியரின் வீரத்தால் படையொடுங்கும்!

தீந்தமிழர் இருநதிகள் இணைக்க வேண்டி,
திட்டமிடும் திட்டத்தின் நோக்கம் வாழ்க!
அஞ்சாமல் உரிமைக்குக் குரல் கொடுப்போம்
அன்புடனே உறவுக்குக் கைகொடுப்போம்!

www.TheMagnet.com


லேடீஸ் ஸ்பெஷல்
தீபாவளி மலர் 2016
ஸ்ரீ குருவாயூரப்பன்

# ஞானம், கல்வி

அளிக்கும்

# ஸ்ரீலட்சுமி ஹயக்ரீவர்



**நா**ம் ஞானம், கல்வி அறிவு பெற ஹயக்ரீவரை வழிபட வேண்டும். உலக ஞானம் பெறுவதற்காக மகாவிஷ்ணு, குதிரை முகம் கொண்ட ஹயக்ரீவராகத் திருமேனி கொண்டிருக்கிறார். குதிரை முகமும், மனித உடலும் கொண்ட மகாவிஷ்ணுவை ஹயமுகன் என்று புராணம் கூறுகிறது. கல்வியின் சிறப்பை நாம் அனைவரும் அறிந்ததே. அரசனே ஆனாலும், அவனுக்கு அவனது நாட்டில் மட்டுமே மதிப்பு. ஆனால் கல்விமான்களுக்கோ, அவர்கள் எங்கு போனாலும் மதிப்பு கிடைக்கும். கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பது உண்மையானது. தெய்வப் புலவர் திருவள்ளுவர் கல்வியின் சிறப்பைப் பல குறள்கள் மூலம் விளக்கியுள்ளார். நாம் கல்வி கற்பது வெறும் பொருளை ஈட்டுவதற்கோ அல்லது பொழுதுபோக் கவோ அல்ல. கல்வி அறிவு தான் நாம் எப்படி வாழ வேண்டும் என்ற ஞானத்தை அளிக்கிறது. புதியதாக, ஏதாவது விஷயம் கற்றுக் கொண்டால் மனதுக்கு மகிழ்ச்சி உண்டாகும். ஆனால் ஞானம் உண்டாகும் பொழுது ஆனந்தம் ஏற்படுகிறது. ஆனந்தத்தினிலே பல வகைகள் உள்ளன. எல்லாவித ஆனந்தத்திலும் சிறந்தது பிரம்மானந்தம் என்று கூறப்படுகிறது. இந்த பிரம்மானந்த, ஞானந்தமாக, தூய்மையான ஸ்படிகம் போலப் பிரகாசிப்பவர் ஸ்ரீஹயக்ரீவர். எல்லாவிதமான வித்தைகளுக்கும் ஆதாரமாக இருப்பவர் இவரே. ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் நமக்கு அருளும் சகலகலாவல்லியான

சரஸ்வதிக்கும் குருவாக விளங்குபவர் ஹயக்ரீவர். லலிதா சஹஸ்ர நாமத்தை அகஸ்தியருக்கு வெளிப்படுத்தியவர் ஹயக்ரீவர்.

நாம் கற்பது கல்வி, கற்றதை உள்ளத்தில் வைத்து நன்றாக உணர்ந்து, அதன்படி நடந்து, அனுபவத்தில் உண்மையைக் காண்பது ஞானம். அறியாமை என்ற இருளைப் போக்குவது ஞானம், கல்வி இரண்டுமே. இந்த இருளை விலக்கி ஒளி கிடைக் கவும், ஞானம் பிறக் கவும் நமக்கு ஒரு சிறந்த ஞான ஆசார்யர் தேவை. ஈடு இணையற்ற ஞான ஆசார்யராக அவர் விளங்க வேண்டும். மகான்களும், ரிஷிகளும், மஹாவிஷ்ணுவின் மகிமைகளை நன்கு உணர்ந்து அனுபவித்தவர்கள். அவர்கள் காட்டிய ஞான ஆசார்ய வடிவம் தான் ஹயக்ரீவர். மஹாவிஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றான ஹயக்ரீவரை வழிபட்டுக் கலைகளில் திறமை, கல்வியில் உயர்வு, தெளிந்த ஞானம் ஆகியவற்றை விரும்பி அடைந்தவர்கள் பலர்.

பழங்காலத்தில் இருந்தே நமது நாட்டில் ஹயக்ரீவ வழிபாடு இருந்து வருகிறது என்பதையும், அவரின் மகிமையையும் ஹயக்ரீவ உபநிடதம், தல புராணங்கள், மகான்கள் வரலாறு, சிற்ப ஆகம நூல்கள் போன்றவைகள் கூறுகின்றன. மேலும் ஹயக்ரீவ கல்பம், மஹா பாரதம், தேவி பாகவதம் முதலிய இதிகாச புராணங்கள் ஹயக்ரீவரைப் போற்றுகின்றன.

வால்மீகி இராமாயணத்தில் ஹனுமான் சஞ்சீவி மலையைக் கொண்டு வந்த போது அங்கிருந்த ஆலயத்தில் வீற்றிருந்த ஹயக்ரீவரை வணங்கினார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எடுத்த காரியம் நமக்கு எவ்விதத் தடங்கலும் இல்லாமல் பூர்த்தியாக வேண்டுமென்றால் ஹயக்ரீவரை நாம் பூசிக் க வேண்டும்.

இனி, புராணக் கதையை நோக்குவோம். நான்கு வேதங்களையும், மது - கைடபர் என்ற கொடிய அரக் கர்கள், குதிரை வடிவில் வந்து நான்முகனான பிரம்மதேவரிடம் இருந்து, பறித்துச் சென்றனர். தேவதங்களை இழந்ததால் உலகெல்லாம் இருள் சூழ்ந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தார், பிரம்மன். எனவே, மகாவிஷ்ணுவிடம் போய் "ஸ்வாமி! அரும் பெரும் தேவதங்களை அரக் கர்கள் கவர்ந்து கொண்டு போய் விட்டார்கள். அவற்றை மீட்டுக் காத்தருள வேண்டும்." என வேண்டினார் பிரம்மன். அவருக்குத் திருவருள் புரிய நினைத்து மகாவிஷ்ணு ஹயக்ரீவராக வடிவம் கொண்டார். குதிரை முகம், மனித உடம்பு, சூரியனை மிஞ்சக்கூடிய ஒளிக் கண்களாக சந்திர சூரியர்கள், கங்கையும் சரஸ்வதியும் கண் இமைகள், தெய்வ ஒளி வீசும் வடிவம் கொண்ட மகாவிஷ்ணு வேதங்கள் மீட்பதற்காக அரக்கர்களைத் தேடிப் புறப்பட்டார். வேதங்களுடன் மறைந்திருந்த மது கைடபர்களின் இருப்பிடத்தைக் கண்டறிந்தார். பின்பு அவர்களுடன் போரிட்டார். ஒளி வந்தால், இருள் தானாகவே மறைவது போல, ஞானத்தின் முழு வடிவான ஹயக்ரீவரின் எதிரில் இருந்த அகம்பாவத்தின் வடிவங்களான மது கைடபர் அழிந்தனர்.

மஹாவிஷ்ணுவின் இந்தச் செயலை நாலாயிர திவ்யப் பிரபந்தம் வெகு அழகாகக் கூறுகிறது.

*"முன்னிவ்வுலகேழும் இருள் மண்டியுண்ண*
*முனிவரோடு தானவர்கள் திகைப்பவந்து*
*பன்னுகலை நூல் வேதப் பொருளை யெல்லாம்*
*பரிமுக மாயருளிய வெம்பரமன் காண்மான்"*

மது, கைடபர்களை அழித்ததால் மதுசூதனன் என்ற பெயர் பகவானுக்கு ஏற்பட்டது.

எல்லா கலைகளுக்கும் உறைவிடமாகத் திகழ்பவர் ஹயக்ரீவர். ஹயக்ரீவரைப் பிரத்தியட்சமாகத் தரிசித்து, அவரது அருளைப் பெற்ற மகான்கள் வாழ்க்கையில் நடந்த சில நிகழ்ச்சிகளைக் காண்போம். முதலில் நாம் காணப் போவது ஸ்ரீபாதராஜர் என்ற லக்ஷ்மிநாராயண தீர்த்தர். ஒரு சமயம், மத்வ மடாதிபதி ஸ்வர்ண வர்ண பரசுராம தீர்த்தர் என்ற மகான் பல்லக்கில் சென்று கொண்டிருந்த பொழுது ஒரு பசுக் கூட்டத்தை மேய்த்துக் கொண்டிருந்த, அழகும் கம்பீரமும் கொண்ட சிறுவனை நோக்கி, "அப்பூர் கிராமம் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது" என்று கேட்டார். அச்சிறுவன் விடுகதை போல பதிலைச் சொன்னான். என்னைப் பாருங்கள்.

மாட்டு மந்தையைப் பாருங்கள், சூரியனைப் பாருங்கள் என்று பதில் கூறினான். சூரியன் மறையும் வேளையில் சிறுவன் ஒருவன் மாடுகளை மேய்க்கிறான் என்றால், பக் கத்தில் தானே ஊர் இருக் க வேண்டும் என்று நாசுக் காகச் சொன்ன சிறுவனின் சாதுரியம் மகானை வியப்பில் ஆழ்த்தியது. மைசூர், சென்னைப்பட்டினம் தாலுகாவில் இருக்கும் அவ்வூரைச் சார்ந்த சிறுவன் லட்சுமிநாராயணன் வீட்டுக்கு ஒரே பிள்ளை எனவும் அறிந்து கொண்டார். அச்சிறுவனை அழைத்து வரும்படி ஸ்ரீமடத்திலிருந்து ஒருவரை அனுப்பினார். பெற்றோருடன் வந்து சேர்ந்தான் சிறுவன். உங்கள் மகன் உங்களுக்கு மட்டும் மகனாக இருந்தால் போதுமா? உலகமே மகானாகப் போற்றும் தகுதி அவனிடம் இருக்கிறது. துயரக் கடலில் தத்தளிக்கும் பலருக்கும் ஞான தீபமாக அவன் விளங்குவான். இத்தகைய ஞானம் பெற்ற மகனை ஸ்ரீமடத்துக்கு தர முடியுமா? என்றவருக்கு, ஆனந்தக் கண்ணீருடன் பெற்றோர்கள் ஒப்புதல் தெரிவித்தனர்.

பின்னர் லட்சுமிநாராயண தீர்த்தரைச் சில காலம் தன்னுடன் தங்கச் செய்து, அவருக்குச் சாஸ்திரங்களைக் கற்பித்து வந்தார். ஸ்வர்ண வர்ண பரசுராம தீர்த்தர். மேலும், புலமை பெற வேண்டும் என்று எண்ணிய மகான் அவரை ஸ்ரீவிபுதேந்திரர் என்பவரிடம் அனுப்பி வைத்தார். ஸ்ரீவிபுநேத்திரரிடம், அவர் வேத சாஸ்திரங்களைக் கற்று வந்த நேரத்தில் ஸ்ரீ உத்திராதி மடத்தைச் சேர்ந்த ஸ்ரீ ரகுநாதர் அங்கு வந்தார். லட்சுமிநாராயண தீர்த்தர் புலமையைச் சோதிக் நியாய சுதா என்ற நூலில் இருந்து வினா எழுப்பி விளக் கம் கேட்டார். ஆனால் அவரது கேள்விக்குப் பதில் கூற வேண்டிய லட்சுமி நாராயண தீர்த்தர், நியாய சுதாவின் சாரம் முழுவதையும் கூறினார். அதைக் கேட்ட ஸ்ரீ ரகுநாத தீர்த்தர் பிரமித்து, முழுமனத்தோடு பலவாறு பாராட்டி, நாங்கள் வெறும் ஸ்ரீபாதர்கள், ஆனால் தாங்களோ, என்னைப் போன்றவர்களுக்கு எல்லாம் ராஜா, அதாவது, ஸ்ரீபாதராஜர் என்று கூறினார். இது போன்று அவரது அருளைப் பரிபூரணமாகப் பெற்ற மகான்கள் பலர் உள்ளனர். ஸ்ரீஹயக்ரீவரின் அருளைப் பூரணமாகப் பெற்ற 'ஹயவதன' என்ற முத்திரையோடு பலப்பல கீர்த்தனைகள் எழுதிய ஸோதே மடத்தின் பீடாதிபதியாக விளங்கியவர் ஸ்ரீவாதிராஜ தீர்த்தர். ஸ்ரீவாதிராஜர் செய்த 'ஹயக்ரீவ பண்டி' எனும் அந்த நைவேத்தியத்தைத் தயாரித்து ஹயக்ரீவரின் அவதார நாளான ஆவணி மாதத் திருவோணத்தன்று ஹயக்ரீவருக்கு நைவேத்தியம் செய்து வழிபட்டால், ஆயுள், ஆரோக்கியம், கல்வி, செல்வம் ஆகியவற்றைப் பெற்று மேன்மை அடையலாம். மாதந்தோறும் வரும் திருவோணத்தன்று ஹயக்ரீவ பண்டியைத் தயாரித்து அவருக்கு நைவேத்தியம் செய்து வழிபடுபவர்கள் எல்லாப் பலன்களையும் நன்மைகளையும் அடைவார், என்று கூறப்படுகிறது.

**வால்மீகி இராமாயணத்தில் ஹனுமான் சஞ்சீவி மலையைக் கொண்டு வந்த போது அங்கிருந்த ஆலயத்தில் வீற்றிருந்த ஹயக்ரீவரை வணங்கினார்.**

ஸ்ரீவேதாந்த தேசிகன், சகல கலைகளிலும் திறமைசாலி. இவர் ஸ்ரீரங்கநாதனால் வேதாந்தாச்சார்யர் என்ற விருதும், ஸ்ரீரங்கநாச்சியாரால் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் எனும் விருதும் வழங்கப் பெற்றவர். திருவஹீந்திரபுரத்தில் உள்ள ஔஷதாத்ரி மலை மேல் ஸ்ரீநரசிம்ம சந்நிதியில் தியானித்து, கருட பகவானால் ஸ்ரீஹயக்ரீவ மந்திர உபதேசமும் ஸ்ரீஹயக்ரீவ விக்ரகமும் பெற்றவர். ஹயக்ரீவரை நேரில் தரிசித்து அவரது அருளுக்கு முழுப்பாத்திரமானவர். எவராலும் வாதம் செய்து வெல்ல முடியாதவர். இவர் பொருள் மேல் பற்றற்றவர்.

மேலும் சரஸ்வதி தேவியால் ஸ்ரீராமானுஜருக்கு அளிக்கப்பட்ட ஸ்ரீஹயக்ரீவ விக்கிரகம் பெற்று அதைத் தனது பூஜையில் சேர்த்து ஆராதித்துப் போற்றியவர். இவர் 'ந்யாஸதசகம்', 'வரதராஜ பஞ்சாசத்' ஆகிய ஸ்தோத்திரங்களையும் 'அடைக்கலப்பத்து', 'அர்த்த பஞ்சகம்' ஆகிய பிரபந்தங்களையும் இயற்றி அருளினார். மேலும் ஸ்ரீவேதாந்த

www.TheMagnet.com

தேசிகர் எழுதிய ஸ்ரீஹயக்ரீவ ஸ்தோத்திரம், முப்பத்திமூன்று(33) ஸ்லோகங்கள் கொண்டது. இதனைப் பக்தியுடன் பாராயணம் செய்தால் தேர்ந்த அறிவும், வாக்கு வல்லமையும் பெறலாம்.

இதன் முதல் ஸ்லோகத்தையாவது, நாம் குழந்தைகளுக்குச் சொல்லித் தந்தால் அவர்கள் கல்விமானாக விளங்குவது நிச்சயம்.

***"ஜ்ஞானானந்த மயம் தேவம்***
***நிர்மல ஸ்ப்படி காக்ரு தீம்***
***ஆதாரம் ஸர்வ வித்ய நாம்***
***ஹயக்ரீவம் உபாஸ்மஹே"***

பொருள்: ஞானம், ஆனந்தம் ஆகியவற்றின் வடிவமாக, மாசற்ற ஸ்படிக மணி போன்ற திருமேனியுடன், எல்லாக் கலைகளுக்கும் உறைவிடமாக, குதிரை போன்ற திருக்கழுத்தை உடைய என் பெருமாளை வழிபடுகிறோம்.

ஸ்ரீஹயக்ரீவர் அருளை முழுமையாகப் பெற்ற ஸ்ரீதேசிகனது வாழ்வில் நடந்த அரும் செயல்கள் பற்பல.

ஸ்ரீஹயக்ரீவர் திருத்தலங்கள், சென்னையிலும், மற்ற இடங்களிலும் அமைந்துள்ளன. திருவஹிந்திரபுரம் என்ற திருத்தலத்தில் அருள்மிகு தேவநாத ஸ்வாமி திருக்கோயில் எதிரில் உள்ள ஔஷதகிரி மலையில் ஸ்ரீஹயக்ரீவர் காட்சி தருகிறார். ஔஷதகிரி சிறிய குன்று என்ற போதிலும், மேலே விஸ்தாரமான சந்நிதி, மூலவர் லட்சுமி ஹயக்ரீவராக காட்சி தர அங்கே ஸ்ரீவேணுகோபாலன், கருடன் மற்றும் ஸ்ரீநரசிம்மரும் இருக்கிறார்கள். ஹயக்ரீவர் உற்சவமூர்த்தி மேலிரு கரங்களில் சங்கு சக்கரம் தாங்கிக் கீழ் வலக்கை அபய ஹஸ்தமும், கீழ் இடக்கை ஸ்ரீகோசத்துடன் திகழ்கிறது. ஆழ்வார்களால் பாடப்பெற்ற திவ்விய தேசங்களுள் இங்கு மட்டும் ஹயக்ரீவருக்குப் பிரதானமான தனிச் சந்நிதி உள்ளது. மலையடிவாரத்தில் தேவநாதன் சந்நிதியில் ஸ்ரீதேசிகனால் வழிபடப்பட்ட யோக ஹயக்ரீவர் காட்சி அளிக்கிறார்.

திருஇந்தளூர் : பரிமாரங்கநாதன் திருக்கோயில் மாட வீதியில் மிகப் புராதனமான ஹயக்ரீவர் சந்நிதி அமைந்துள்ளது. இங்கு ஸ்வாமி தேசிகனும், லட்சுமி ஹயக்ரீவரும் காட்சி தருகிறார்கள். இது மாயவரத்தில் உள்ளது.

திண்டிவனம் : பாண்டிச்சேரி செல்லும் சாலையில் உள்ள மொரட்டாண்டி கிராமத்தில் மகாபிரத்யாங்கரா ஆலயத்தில் ஹயக்ரீவர் சந்நிதி உண்டு. பாண்டிச்சேரி அருகே ராமகிருஷ்ண நகர் எனும் இடத்திலும் ஹயக்ரீவர் சந்நிதியைத் தரிசிக்கலாம். தஞ்சை புன்னை தேர் மண்டபத்தில் ஹயக்ரீவருக்குத் தனி சந்நிதி அமைந்துள்ளது. சின்ன காஞ்சிபுரம் ஆடிசன்பேட்டை ரங்கசாமி குளம் அருகில் தீபப் பிரகாசர் கோயிலில் ஸ்வாமி தேசிகன் சந்நிதியில், லட்சுமி ஹயக்ரீவர் காட்சி தருகிறார். அதே திருக்கோயிலில் உள்ள பரகால மடத்திலும் லட்சுமி ஹயக்ரீவரைத் தரிசிக்கலாம். காஞ்சி வரதராஜர் சந்நிதியில் அமைந்துள்ள அண்ணாா கோயிலிலும் ஹயக்ரீவர் தரிசனம் கிடைக்கும். செட்டிப் புண்ணியம் என்ற ஊரில் உள்ள தேவநாதவாமி திருக்கோயிலில் யோக ஹயக்ரீவர் தரிசனம் தருகிறார். இந்த ஹயக்ரீவர், தேசிகனால் ஆராதிக்கப்பட்டவர் என்றும், திருவகிந்திபுரத்திலிருந்து கொண்டுவரப்பட்டவர் என்றும் கூறப்படுகிறது. சென்னை - செங்கல்பட்டு மார்க்கத்தில் உள்ளது. சிங்கப்பெருமாள் கோயில், சென்று அங்கிருந்து 6 கி.மீ. பயணித்தால் செட்டிப்புண்ணியத்தை அடையலாம். மேலும் சென்னையில் மேடவாக்கம், வில்லிவாக்கம், திருமயிலை, மேற்கு மாம்பலம், நந்தம்பாக்கம் முதலிய இடங்களில் உள்ள கோயில்களில் 'ஹயக்ரீவர்' காணப்படுகிறார்.

பஞ்சமுக ஹனுமானின் திருமுகத்தில் முன்புறம் ஹனுமானின் திருமுகமும், வலதுபுறம் நரசிம்மமூர்த்தியின் திருவுருவமும் பின்புறத்தில் கருட பகவானின் திருமுக மண்டலமும், இடது புறம் வராஹமூர்த்தியின் திருமுகமும் அமைந்திருக்க, மேல்புறத்தில் ஹயக்ரீவரின் திருமுகம் அமைந்துள்ளது. ஆவணி சிரவணத்தையொட்டி பத்து நாட்கள் ஹயக்ரீவப் பெருமானுக்கு உற்சவங்கள் நடைபெறுவது வழக்கம். நமக்குக் கல்விச் செல்வம் அள்ளித் தரும் ஹயக்ரீவரை வணங்கி வழிபட்டால் சகல நன்மைகளும் கிடைப்பது திண்ணம். ●



இந்த ஆண்டு மார்ச் 24 ஆம் தேதி சென்னையில் இருந்து திப்ருகர் எக்ஸ்பிரஸ் ரயிலில் நான், எனது கணவர், எனது தோழி மூவரும் அஸ்ஸாமின் தலைநகர் **கௌகாத்தி**க்கு முதலில் சென்றோம். அன்று காலை முதலில் பாரத நாட்டின் ஜீவநதிகளின் ஒன்றான பிரம்மாண்டமான பிரம்மபுத்திரா நதியைத் தரிசனம் செய்தோம். பிறகு படகில் ஏறி அந்த நதியின் நடுவே அமைந்துள்ள **உமாநாத் ஆலய**த்திற்குச் சென்றோம். படகில் செல்லும் அனுபவமே தனி தான். இருபுறமும் தண்ணீர், மேலே நீலநிறமான ஆகாயம். மிக ரம்மியமான காட்சி. சுற்றிலும் மேகம் சூழ்ந்திருந்தது. தண்ணீர் கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்தது. அமைதியான

பயணம்

# மலைகள் சூழ்ந்த மேகாலயா

காந்தாமணி நாராயணன்

சூழல். உள்ளே சிவபெருமானைத் தரிசனம் செய்தோம்.

பிறகு 54 சக்திப்பீடங்களில் ஒன்றான **காமாக்யா அம்மன்** கோயிலுக்குச் சென்றோம். **தக்ஷ யக்ஞ**த்திற்குப் பிறகு சதியான அம்பிகையின் உடலின் தொடைப்பகுதி அங்கு விழுந்தது. கோயிலில் கர்ப்பக்கிரகத்தில் மின் விளக்கு கிடையாது. அகல் விளக்கு தான் இருந்த்து. நல்ல கூட்டம். அந்த இடம் மிகவும் பவித்ரமாக இருந்தது. கோயிலைச்சுற்றிலும் பல தரப்பட்ட பறவைகள் கூட்டங்கள். அம்பிகைக்கு அருகே ஒரு பிள்ளையார் சன்னதி உள்ளது. கேரளாவில் உள்ள ஒரு அம்மன் கோயிலைப் போல் இங்கும் மாதம் 3 நாட்கள் கர்ப்பக்கிருகம் மூடியிருக்கும். என்று சொன்னார்கள். அங்கிருந்து விவேகாநந்த கேந்திரா அலுவலகம் சென்றோம். பிறகு புகழ் பெற்ற பாலாஜி ஆலயத்திற்குச் சென்றோம். மிகவும் தூய்மையாக இருக்கிறது. நல்ல முறையில் பராமரிக்கிறார்கள். அங்கு ஒரு ஹனுமான் சன்னதி இருக்கிறது. தத்ரூபமாக அனுமாரே நம்மிடம் பேசுவது போல் அமைந்திருக்கின்றது. சிறிது நேரம் கோயிலில் அமர்ந்துவிட்டு மாலை சரியாக நான்கு மணிக்குக் கிளம்பி **காசிரங்கா** என்ற வனப்பகுதிக்குச் சென்றடைந்தோம். அன்று இரவு காசிரங்காவில் தங்கினோம். சுற்றிலும் மரங்கள். நல்ல குளிர். அங்கெல்லாம் மாலை நான்கு மணிக்கே இருட்டத் தொடங்கிவிடுகின்றது.

மறுநாள் காலை காசிரங்கா பார்க்கக் கிளம்பினோம். அங்கு செல்ல இரண்டு வழிகள் உண்டு. ஒன்று யானை மீது 3 மணி நேரம் சவாரி செய்து காட்டைச் சுற்றிப் பார்க்க வேண்டும். அது நமது விருப்பத்தைப் பொருத்து. இரண்டாவது ஜீப்பில் ஏறி வனப்பகுதியச் சுற்றிப் பார்ப்பது. இதுதான் சுலபம். நிம்மதியாக வனப்பகுதியைச் சுற்றிப் பார்க்க முடியும். நாங்கள் ஜீப்பில் தான் சென்றோம். குற்றாலச்சாரல் போல் தூறல். அங்கு பலதரப்பட்ட மான்கள், யானைகள், காட்டு எருமைகள் போய்க்கொண்டிருந்தன. ஒற்றைக்கொம்பு காண்டாமிருகம் தான் அங்கு புகழ் பெற்ற வனவிலங்கு. குட்டி முதல் நடுத்தர வயது, மற்றும் பெரிய அளவு காண்டா மிருகங்களைப் பார்த்தோம். நாங்கள் ஜீப்பில் செல்லும் போது ஒரு காண்டாமிருகம் எங்களுக்கு





www.TheMagnat.com

தரிசனம் கொடுக்க வந்தது போல் சாலையின் குறுக்கே வந்தது. ஆங்காங்கே பெரிய பெரிய பள்ளங்கள் உள்ளன. விசாரித்ததில் காண்டாமிருகம் நிரந்தரமாக ஒரு மாதம் தங்கியிருக்கும். இடங்களில் இப்படிப்பட்ட பள்ளங்கள் ஏற்படும் என்று கூறினார்கள். பல வர்ணங்களில் பறவைகள் இருந்தன. அதில் கழுகு இருந்தது. வந்த விருந்தினர்களைக் கூர்ந்து பார்ப்பது போல் பார்த்துக்கொண்டிருந்தது. மான் குட்டிகள் இருபுறமும் தலையை ஆட்டிக் கொண்டு நடந்தது எங்களை வரவேற்பது போல் இருந்தது. வெகு தொலைவில் தடுப்பிற்கு அப்பால் காட்டு யானைகள், குட்டிகள் இருந்தன. எத்தனை முறை யானைகளைப் பார்த்தும் அலுப்பு ஏற்படவில்லை. குறைந்தபட்சம் சுற்றிப் பார்க்க 4 மணி நேரங்கள் தேவை. காசிரங்கா செல்லத் தகுந்த காலம் நவம்பர் முதல் ஏப்ரல் வரை. அதன் பிறகு அங்கு அதிக மழை இருக்கும். வெள்ளம் சூழ்ந்திருக்கும்.

மிருகங்கள் அனேகமாக பாதுகாப்பான இடங்களைத் தேடி போயவிடும்.

அன்று மாலை கௌகாத்தியிலிருந்து கிளம்பி மேகாலயா தலைநகர் **ஷில்லாங்** சென்றோம். மேகாலயா ஆளுனர் எங்கள் குடும்ப நண்பர் என்பதால் முதலில் அவரை சந்தித்தோம். அன்று இரவு அவருடன் உணவு அருந்தினோம். மேகாலயா 1972 இல் உருவாக்கப்பட்ட மாநிலம். அதுவரை அது அஸ்ஸாமுடன் சேர்ந்து இருந்தது. ஏழு சகோதரிகள் என அழைக்கப்படும் வடகிழக்கு மாநிலங்களில் மேகாலாயாவும் ஒன்று. மகாதேவரின் இருப்பிடம். மகாலயா, மேகங்களின் கூட்டம் சூழ்ந்து இருப்பதால் இயற்கையோடு இணைந்து மேகாலயா என்றும் அழைக்கப்படுகின்றது. அங்கு சர்மா என்ற நதியின் அருகே சுயம்புவாக 200 அடி உயர சிவலிங்கம் இருக்கின்றது. மூன்று தரப்பட்ட பழங்குடியினர் முறையே **காஸி, ஜெய்ந்தி, காரோ** இனங்கள். அங்கு பேசும் மொழி **காஸி.** இந்த மொழிக்கு எழுத்து வடிவம் கிடையாது. ஆங்கில எழுத்தில் தான் இந்த மொழியை எழுதிப் படிப்பார்கள்.

எங்கும் பசுமை. மேகாலயாவில் மூன்றில் ஒரு பகுதி வனம். சுத்தமான நீர், காற்று, நல்ல சுற்றுச் சூழல். **மக்கள் மிகவும் எளிமையானவர்கள். நேர்மையானவர்கள். பெண்களுக்கு நல்ல மதிப்பு. சொத்தில் பெண்களுக்குத்தான் முதல் உரிமை.** அங்கு பெண் சிசுக் கொலை இல்லை என்றே கூறலாம். அவர்களது பாரம்பரிய கலைகள் நல்ல தரத்துடன் இருக்கும். சில நேரங்களில் அந்த இசை கேட்க, நடனம்பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

ஷில்லாங்கில் முதலில் **ஷில்லாங் பீக்** பார்த்தோம். அதன் உச்சிக்குச் சென்றால் முழு ஷில்லாங் வடிவத்தை நாம் பார்க்க முடியும். அங்கிருந்து. **எலிபண்ட் ஃபால்ஸ்** யானை அருவிக்குச் சென்றோம். குன்றுகளுக்கு நடுவில் இருந்து தண்ணீர் வருகின்றது. நல்ல சுத்தமான தண்ணீர். குன்று பார்ப்பதற்கு யானையைப் போல் இருக்கும் என்பதால் யானை அருவி என்ற பெயர். மதிய உணவை முடித்துக் கொண்டு மேகாலயாவின் புகழ் பெற்ற பெரிய சுத்தமான ஏரிக்குச் சென்றோம். பரிசுத்தமான தண்ணீர். அங்கிருந்து டான்பாஸ்கோ மியூசியம் சென்றோம். பழங்குடிமக்களின் வாழ்க்கைமுறை, அவர்கள் உபயோகித்த ஆயுதங்கள், இசைக்கருவிகள் வைக்கப்பட்டிருந்தன. 18 நூற்றாண்டில் வாழ்ந்த பழங்குடி மக்கள் தற்காப்புக் கலையில் நிபுணர்களாக் இருந்தனர் என்று தெரிகின்றது. ஏழு வடகிழக்கு மாநிலங்களின் வாழ்க்கை முறையும் அதில் நாம் அறிய முடிகின்றது. அங்கிருந்து ஷில்லாங் மார்க்கெட் சென்றோம்.



மறுநாள் ஆசியாவிலேயே மிகவும் சுத்தமான **மாலின்நாங்** (Mawlynnong) என்ற கிராமத்திற்குச் சென்றோம். அங்குள்ள மக்கள் 100% படித்தவர்கள். எங்கும் தூய்மை. அங்குள்ள மக்கள் அனைவரும் காஸி பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள். 2011 இல் இந்த கிராமம் முழு வளர்ச்சி அடைந்தது. நல்ல சாலைகள். வீட்டில் முன்பு செடி கொடிகள். காய்கறிகள், பழங்கள் பயிரிடுகிறார்கள். மிகவும் நேர்மையானவர்கள். அரசாங்கம் ஒரு திட்டத்திற்கு 10 லட்சம் நிதி ஒதுக்கினால் 2 லட்சத்திலே விரைவாக வேலையை முடித்து விட்டார்கள். அதற்கான கல்வெட்டு அங்கு உள்ளது. அங்கிருந்து கிளம்பி ரிவாய் என்ற கிராமத்திற்குச் சென்றோம். அதுவும் சுத்தமாக உள்ளது. சாலையில் ஆங்காங்கே குப்பைத் தொட்டிகள் மிகவும் சுத்தமாக பராமரிக்கிறார்கள். அங்கிருந்து கிளம்பி 200க்கும் மேற்பட்ட படிகளில் இறங்கி இயற்கையாகவே அரசமர வேர்களால் உருவான பாலத்தைப் பார்த்தோம். இரு புறமும் பசுமையான அடர்ந்த மரங்கள், நடுவே பளிங்கு போன்ற நீர் ஓட்டம். மழை காலங்களில் அந்தப் பகுதிக்குச் செல்ல முடியாது என்று சொன்னார்க:ள்.

அதன் பிறகு (DAWKI) **தவ்கி** என்ற நதியை அடைந்தோம். அந்த நதியின் ஒரு கரை பாரதநாடு, மறுகரை பங்களாதேஷ். அதுதான் மேகாலயா மாநிலத்தின் கடைசி எல்லை. நதியின் மறுபுறம் **டாமாபில்** என்ற கிராமம் உள்ளது. அது பங்களாதேசத்தைச் சேர்ந்தது. சாலையில் எதிரும் புதிருமாக பாரதம்வரவேற்கின்றது, பங்களாதேஷ் வரவேற்கின்றது என்ற கருப்பலகையைப் பார்க்க முடிந்தது. பாரத நாட்டின் எல்லைப் பகுதிவரை வந்துவிட்டோம்

www.themagnet.com



என்ற பெருமிதம், முன்பு நம் நாட்டுடன் இருந்த பகுதியைப் பார்த்தோம் என்ற ஆனந்தம். அப்போது ஏற்பட்ட உணர்வை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. ஆசைதீரப் பார்த்துவிட்டு தவ்கி நதியில் இறங்கி கற்களைப் பொறுக்கினோம். இருட்டு நேரம் என்பதால் குளிக்கவில்லை, தண்ணீர் குடிக்க சுவையாக இருந்தது. தலையில் மட்டும் நீரைத் தெளித்துக்கொண்டுக் கிளம்பினோம்.

மறுநாள் உலகிலேயே அதிக மழை பொழியும் **சிரபுஞ்சி** பார்க்கச் சென்றோம். முதலில் பார்த்தது **வாஹ்மா நீர்வீழ்ச்சி**. சுற்றிலும் மேகக்கூட்டங்கள். WAHKHA என்ற கிராமம் அருகே உள்ளது. இந்த கிராமம் தான் சிரபுஞ்சியின் முக்கியப்பகுதி. அங்கு அருகே உள்ள இராமகிருஷ்ணா மடம் நடத்தும் பள்ளிக்குச் சென்றோம். கிட்டத்தட்ட 80 ஆண்டுகளுக்கு முன்பு அந்த மடத்தின் ஸ்வாமிஜி செய்த அரும்பணிகள் இன்றும் ஆலவிருட்சம் போல் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றது என்று தற்சமயம் அங்குள்ள ஸ்வாமிஜி சொன்னார். நன்கு தமிழில் பேசினார். அங்கும் ஒரு மியூசியம் வைத்திருக்கிறார்கள். மேகாலயாவில் உள்ள பழங்குடி மக்கள் இராமகிருஷ்ணா மடத்தின் பணிகளால் இன்றும் தங்கள் பாரம்பரியத்தைக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கிருந்து **நௌகாலிகாய்** என்ற அருவிக்குச் சென்றோம். இந்த அருவி உலக அளவில் 6வது இடத்திலும், பாரத நாட்டைப் பொருத்தவரை 3வது இடத்திலும் இருக்கிறது. சிரபுஞ்சி மூன்று பகுதிகளாக கீழ், நடு, மேல் (LOWER, MIDDLE, UPPER) என்று உள்ளது.

இயற்கையாகவே பல குகைகள் அங்கு இருக்கின்றன. கிட்டத்தட்ட குகையின் நீளம் 2 கிலோ மீட்டர் தூரம் என்றாலும் முடிந்தவரை உள்ளே சென்று பார்த்தோ.ம். மிகவும் குறுகலான, ஏற்ற இறக்கமுள்ள பாதைகள். கொஞ்சம்சிரமம் தான் அங்கு சென்று வருவது. பிறகு தங்க்ரங் (TKAKGRANG) என்ற பூங்காவிற்குச் சென்றோம். வித விதமான செடிகள், பூக்கள். குழந்தைகளுக்கான பார்க்




படம்: யோகா கமெண்ட்: ஜ்வாலா

www.TheMagnat.com

உள்ளது. Walking Garden நடப்பதற்காகவே இருக்கின்றது. ஏழு சகோதரிகளின் நீர்வீழ்ச்சி உள்ளது. நாங்கள் சென்ற சமயம் அதில் தண்ணீர் இல்லை. சிரபுஞ்சியின் ஒரு பகுதி பங்களாதேஷில் உள்ளது. அதனால் அங்குள்ள மக்கள் பெங்காலி மொழி பேசுகிறார்கள். சிரபுஞ்சி இயற்கை எழில் கொண்ட பகுதி. நான்கு புறமும் மலை. மேலே ஆகாயத்தில் எப்பொழுதும் மேகக்கூட்டங்கள். ஆங்காங்கே சிறிய, சிறிய நீர்நிலைகள். எப்பொழுது ம் மழைபெய்யக் காத்திருக்கும் வானம். மீண்டும், மீண்டும் பார்க்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டும்பகுதி தான் சிரபுஞ்சி.

அந்தப் பகுதியில் ஏற்ற இறக்கங்களில் பிரயாணம் செய்வதே அலாதி தான்.

அடுத்த நாள் SPRINGWARM FALLS வெந்நீர் ஊற்றுப் பகுதிக்குச் சென்றோம். எப்பொழுதும் அங்கு வெந்நீர் வரும். நல்ல சூடு. அதில் நாங்கள் குளித்தோம். அதில் குளித்தால் தோல் வியாதிகள் தீரும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. தோல் வியாதிக்கு இந்த நீர் சிறந்த நிவாரணி என்கிறார்கள்.

அங்கிருந்து ஒரு குகைப்பகுதிக்குச் சென்றோம். மேகாலயாவில் இதே போல் நூற்றுக் கணக்கில் குகைகள் இருக்கின்றது என்கிறார்கள். நாங்கள் சென்ற குகையில் ஒரு சிவலிங்கம் இருக்கின்றது. அதற்கு நேர் மேலே நீர் தாரை விழுவது போன்ற அமைப்பு உள்ளது. ஒரு காலத்தில் அதிலிருந்து பால் தாரைதாரையாக வரும் என்றும், தற்சமயம் நல்ல மழை காலங்களில் நீர் தாரை விழும் என்றும் கூறுகிறார்கள். இந்த சிவலிங்க தரிசனத்துடன் எங்களது மேகாலயா சுற்றுப் பயணம் முடிவடைந்தது.

பொதுவாக எந்தச்சுற்றுலாவும் நமக்கு நல்ல சக்தியை அளிக்கும். உடலுக்கு உந்து சக்தியைக் கொடுக்கும். சுற்றுலா சென்று வந்தாலே புத்துணர்வு கிடைக்கும். நாங்களும் அத்தகைய புத்துணர்வு பெற்று மறுநாள் காலை கௌகாத்தி வரை வந்து விமானத்தில் சென்னை வந்து சேர்ந்தோம். ●

தாரணியே போற்றுகிற

# தவப்புதல்வர் அப்துல் கலாம்



**கா**ற்றுவழி வந்ததுவே கலாமவரின் மறைவுச்செய்தி
கதிகலங்கி அழுதோமே கண்ணீரோ வற்றியதே!
ஆற்றுப்படுத்திடவே அறிஞர்கள் அன்று வரவில்லை;
அவர்களே தேம்பி அழுகின்றார் வாய்ச்சொற்கள் வரவில்லை!
சோற்றுக்கென செய்தித்தாள் சுற்றிச்சுற்றி விற்றவரே
சகமுழுக்க செய்தித்தாள் தலைப்புச்செய்தி யாகிட்டார்!
நாற்றானது நம்மிந்திய ராமேசுவரத் தென்கோடி
நமைவிட்டுப் பிரிந்ததுவோ மேகாலயத்து வடகோடி!

அக்கினிச் சிறகுகள் அவ்வுலகம் சென்றதுமேன்?
அங்குவரும் ஏவுகணைக்கு அறிவியலை உரைப்பதற்கா-?
மக்கான மாணவர்கள் மேதைக ளாகிடுவர்;
மகத்தான இந்தியாவை மேனிலையில் கண்டிடுவர்!
தக் கநல் கனவுகண்டு தூக் கத்தில் விழித்திடுவர்;
தரணிமீது பாரதத்தை வல்லரசாய் மாற்றிடுவர்!
சிக்கலின்றி சிறுவயது குழந்தைகளும் வளர்ந்திடுவர்
சீர்சிறப்பு சேர்த்திடுவர், செகமெங்கும் மேதையராய்!

அவனியெங்கும் தேடினாலும் அப்துல்கலாம் போலெவரோ?
அன்பின்வழி அரவணைப்பு அளிப்பவரும் வேறெவரோ?
பவனிவரும் இடமெல்லாம் பந்தபாச மழைபொழிய
பாருக்குள் பாரதத்தை வல்லரசாய் ஆக்கிடவே
நவனிதமார் ஏவுகளை நல்லாய்வு சோதனைகள்
நித்தமும் நிகழ்த்திநாடு நிலையுயர பாடுபட்ட
தவப்புதல்வர் அப்துல்கலாம் தரணிக்கே நல்சொத்து;
தாரணியே போற்றுகிற தலைச்சிறந்த நன்முத்து!

- எம்.ஏ.எம்.தாஜுதீன்



# பக்த மீரா

இந்திய தேசத்தோடு இணை பிரியாது என்றும் சேர்ந்திருப்பது பக்தி. பக்திக் காலம் என்றொரு கால கட்டமே நம் இலக்கிய, பண்பாட்டு வரலாற்றில் உண்டு. ஆழ்வார்களும், நாயன்மார்களும் தமிழ் நாட்டில் பக்தியை வளர்த்து இறைத் தொண்டாற்றியவர்கள். வடநாட்டில் பக்திமான்களில் குறிக்கத் தகுந்த பலருள் முதன்மையானவர் பக்த மீரா - மீரா பாய். பக்த இராமதாஸ் போன்றே பெயரிலேயே பக்தியைக் கொண்டவர். மீரா என்றவுடன் நம் நினைவில் வருவது தம்புரா மீட்டியபடி பஜனை பாடும் கண்ணனின் மீராதான். மீரா, ஆண்டாள் இருவருமே இறைவனுக்குத் தங்களை அர்ப்பணித்தவர்கள். ஆண்டாள் காலத்தால் பல நூற்றாண்டுகள் மீராவிற்கு முற்பட்டவர். பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளான இவர், அரங்கனையே மனதில் வரித்து மானிடர்க்காகப் பேசுப்படின் வாழாதவர்.

16-ம் நூற்றாண்டில் அதிகமாக அறியப்பட்ட போற்றப்பட்ட, பக்திமான்களின் பெயர்களில் மீரா முதன்மையானவர். பக்தி இயக்கத்தின் மைல் கல்லாக மீராவின் வாழ்க்கை அமைந்தது.

## வாழ்க்கை

ரத்தோர் அரச குடும்பத்தில் குக்கியில் (Kuki) பாலி (Pali) மாவட்டத்தில், ராஜஸ்தானில் மீரா பிறந்தார். பெற்றோர்களின் ஒரே மகளாக சீரும் சிறப்புமாக வளர்க்கப்பட்டார்.

சிறுவயதிலே, சாது ஒருவர் கண்ணனின் பொம்மையோடு பஜனைபாடி தெரு வழியே வருவதை குழந்தை மீரா காண்கிறாள். கண்ணனின் பொம்மை வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கிறாள் குழந்தை மீரா. வேறொரு பொம்மை தந்தாலும் மறுத்து அதே வேண்டுமென்கிறார். மீராவின் தாய்

**கோ.வெ.கீதா**

சந்நியாசியிடம் மன்றாடி அதைப் பெற்றுத் தருகிறார். அந்த பொம்மைக் கண்ணன் யார் என்று மீரா தாயிடம் கேட்கிறார். அவளது கணவன் என்று விளையாட்டாக தாய் கூறுகிறாள். குழந்தை மீராவின் மனதில் அது பசுமரத்தாணியாகப் பதிந்து விடுகிறது. ஆண்டாளைப் போலவே மீராவும் இறைவனையே தன் பதியாக எண்ணி வாழத் தொடங்குகிறாள்.

மீராவின் தாய் அவள் சிறு குழந்தையாக இருக்கும் போதே இறந்து விடுகிறார். தாத்தா, பாட்டியால் வளர்க்கப் படுகிறாள் மீரா. இவர்களிருவரும் சிறந்த விஷ்ணு பக்தர்கள் என்பது இங்கு குறிக்கத்தக்கது.

மீரா சமுதாய, குடும்ப மரபுகளை, கட்டுப்பாடுகளை போற்றவுமில்லை. அவற்றைக் கண்டு அஞ்சவுமில்லை. இசை, மதம், அரசியல், அரசாங்கம் என்று பல் துறைகள் குறித்தும் பயின்றார்.

அக்காலத்தில், முகமதிய ஆட்சியாளர்களுக்கும், இந்து அரசர்களுக்குமிடையில் ஓயாது போர் நிகழ்ந்தவாறிருந்தது. ராஜபுத்திர அரசைப் பலப்படுத்த, மேவாரின் பட்டத்து இளவரசன் போஜ்ராஜை விருப்பமில்லாமலே மீரா மணந்து கொள்ள நேரிட்டது. காரைக்கால் அம்மையாரை நினைவூட்டும் வண்ணம் மீராவின் மணவாழ்க்கை அமைந்தது.

1516-ல் டில்லி சுல்தானோடு நிகழ்ந்த போரில் போஜ்ராஜ் காயமடைந்தார். 1521-ல் போர்க் காயங்களால் உயிரிழந்தார். இதற்கு பின் சில ஆண்டுகளிலேயே மீராவின் தந்தையும், மாமனாரும் பாபரோடான போரில் கொல்லப்பட்டனர். மீராவின் மாமனார் இறந்த பின், விக்ரம் சிங் மேவாரின் அரசரானார்.

பிரபலமாக நிலவி வரும் ஒரு கதையின் படி மீரா, அவருடைய நாத்தனார் மற்றும் கணவரின் உறவினர்களால் துன்புறுத்தப்பட்டார். மீராவைக் கொல்வதற்கு முயற்சித்தனர். ஒரு கோப்பையில் விஷம் கலந்து, அதை தேன் என்று கூறி குடிக்கத் தந்தனர் எனினும் மீராவை விஷம் ஒன்றும் செய்யவில்லை. பின்னர் ஒரு கூடையில் மலர்களுக்கு பதிலாக விஷப்பாம்பை அனுப்பினர். அது ஒரு மலர் மாலையாக / கிருஷ்ண விக்கிரமாக மாறிற்று என்று கதைகள் கூறுகின்றன.

இன்னொரு கதைப்படி, விக்ரம்சிங், மீராவை நீருக்குள் மூழ்கும் படி கூறுகிறான். மீராவும் அவ்வாறே செய்கிறாள். ஆனால் மூழ்குவதற்கு மாறாக மிதக்கிறாள். இவை சைவசமய குரவர் திருநாவுக்கரசர் பட்ட பாட்டை நினைவூட்டுகின்றன.



**பாடல்கள்**

மீரா என்றாலே இசை. அவளது மனதை உருக்கும் பாடல்களே அனைவரது மனதிலும் தோன்றும். ஆயிரக்கணக்கான பாடல்கள் மீரா, கிருஷ்ணனின் மீது பாடியதாகக் கூறப்படுகிறது. எனினும் சில நூறு கவிதைகளே உறுதியாக அறிஞர்களால் ஏற்கப்படுகின்றன. இரண்டு கவிதைகளைத் தவிர ஏனையவை 18ம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாக பதிவுகள் தெரிவிக்கின்றன. மீரா பக்தர்களால் ஏனையவை எழுதப்பட்டிருக்கலாம்.

மீராவின் பாடல்கள் பஜன்ஸ் - பஜனைப் பாடல்கள் என்றழைக்கப்பட்டன. இந்தியா முழுவதும் இவை பிரபலமானவை. மீராவின் பாடல்கள் உணர்ச்சி மிக்கவை மீராவின் காலத்து எழுத்துப் படிபவங்கள் கிடைக்கவில்லை. மீராவுடையது என்று நம்பப்படும். இரு பாடல்கள் - கவிதைகள், 18ம் நூற்றாண்டின் முற்பகுதியில் அவர் இறந்து 150 ஆண்டுகளுக்குப் பிறகு கிடைத்தவை. 19-ம் நூற்றாண்டிலும் அவர் எழுதியதாக பல நூறு பாடல்கள் கிடைத்துள்ளன.

அறிஞர்கள் கிடைத்த

www.TheMagnet.com




படம்: யோகா

கமெண்ட்: ஜ்வாலா

www.TheMagnat.com

ஏடுகளின் கவிதைகளை, மீராவைப் பற்றி பிற ஏடுகளில் குறிப்பிடப்பட்டவை, நடை மொழியியல் மற்றும் உருவம் குறித்து ஆராய்ந்து உண்மைத் தன்மையை நிறுவ முயன்று வருகின்றனர்.

ஜான் ஸ்ரால்டன் (John Stralton) "மீராவின் கவிதைகளைக் குறித்து ஒருவர் பேசும் போது, அதில் எப்போதும் ஓர் அதிசயவுணர்வு உள்ளது. நாம் பாடும் அவரது கவிதைகளுக்கும், வரலாற்று மீராவிற்கும் உண்மையாக ஏதேனும் உறவு உள்ளதா என்பது எப்போதும் கேள்விக் குறியாகவே உள்ளது' என எச்சரிக்கிறார்.

கவிதையில் மீரா, கிருஷ்ணனை யோகியாகவும், காதலனாகவும், தன்னை யோகினியாகவும், கிருஷ்ணனுக்கருகில் தனதிடத்தை ஏற்றுக் கொண்டு ஆன்மீக இன்பத்தை துய்க்கத் தயாராகவுள்ளவராகவும் காட்டுகிறார். கிருஷ்ணன் மலையைத் தூக்குபவனாகவும், கார்மேனியனாகவும் காட்டுகிறார். மீராவின் நடை உணர்ச்சிமிக்கதாக, எதிர்ப்பு மனநிலையில், நீண்ட எதிர்பார்ப்பில், ஐக்கியத்தில் இன்பமும் பேரானந்தமும் கொண்டதாக, எப்போதும் கிருஷ்ணனை மையப்படுத்தியே அமைகிறது.

மீராவைக் குறித்து தமிழில் ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலெட்சுமி அவர்கள் மீராவாக நடித்த மீரா திரைப்படம் வெளிவந்தது. பாடல்களும், கதையும் பாமர மக்களைச் சென்றடைந்தது. குல்சார் அவர்களும் மீராவின் கதையை திரைப்படமாக்கினார். விநோத கதைகள், பிரபல இலக்கியங்களும் மீராவைக் குறித்து பேசியுள்ளன. பி.ஸ்ரீ அவர்கள் ஆண்டாளும் மீராவும் என்ற தலைப்பில் வடக்கிலும், தெற்கிலும் வாழ்ந்த கண்ணனது பக்தைகள் குறித்து நூல் எழுதியுள்ளார்.

கண்ணன் உள்ளவரை, இசை உள்ளவரை மீராவின் கண்ணனனோடு மீரா வாழ்ந்து கொண்டிருப்பாள். ●

கவிதை

# நின் தாள் வருட..!

சுப்ர.பாலன்

பொன்னோ மணியோ பொருட்கள் எதுவோ
போதும்அளவு இறைவன் தந்தான்!
தின்னும் வறுமை உழன்ற காலம்
திரும்பாமல்தான் வளமை சேர்த்தான்.

மின்னும் வான ஒளியின் கீற்றாய்
மிளிரும் பெருமை முறைவழி பெற்றேன்.
இன்னும் சிலநாள் வாழ்தல் வேண்டும்
இறைவன் புகழைப் பாடிட வேண்டும்!

நல்லார் நண்பர் தோழமையெல்லாம்
நாளும் வளர அவனருள் செய்தான்.
சொல்லும் வார்த்தை இனிமையிலெல்லாம்
சுகமே சேர்த்து அவனருள் சுரந்தான்.

எல்லாப் புகழும் தனதென உணர்த்த
எளியேன் நானும் இறைநிலை கண்டேன்.
நில்லாப் பயணம் நிரந்தரம் ஆக்கி
நிகழும் காலம் நேர்படச் செய்தான்!

என்னுள் உறைவான் எங்கும் உறைவான்
என்பதை அறியும் ஞானமும் பெறவே
முன்னம் பலநாள் முழுதாய் நெகிழ்ந்தேன்
முடிவே அறியா உவகையில் ஆழ்ந்தேன்!

தன்னை உணர்த்தித் தாயாய்க் காத்து
தவிக்கும் மனத்தை ஆறுதல் படுத்தி
இன்னும் சிலநாள் வாழ்ந்திடல் வேண்டும்
இறைவன்தாளை வருடிடல் வேண்டும்!

www.TheMagnat.com





# செக்

“என்னா முத்து இப்பிடி அலைய விடுற.. எவ்வளவு நாளாச்சு ஒனக்கு கடன் கொடுத்து.. ஒண்ணா ரெண்டா? மூணு லட்சம்.. அதுவும் வேற காரியத்துக்காக நெலத்தை அடமானம் வச்ச காசு...நீ ஏதோ பெரிசா கடன் பட்டு வியாபாரம் நஷ்டமாப் போச்சுன்னு அழுதியேன்னு கொடுத்தேன்..இந்தா அந்தான்னு மூணு வருசமாச்சு.. நம்ம தம்பி மகன் தானேன்னு வட்டியெல்லாம் நான் கேக்கலே.. அசலாச்சும் திருப்பித் தந்துருப்பா..”

என்று உறுதியாகக் கேட்டு விட பிச்சையாவாகிய அவரும்,

“இங்க நிலமை சரியில்ல பெரியப்பா.. இப்போதைக்கு என்னால தரவே முடியாது. ஒரு ஃபோனைப் போட்டுட்டு ஊரிலேருந்து சும்மா வந்து நின்னு தொந்திரவு பண்ணாதீங்க” என்று திட்டவட்டமாக திருப்பி அனுப்பி விட முத்தையா என்ற பெயரை முக்தா என்று மாற்றிக் கொண்ட அவனும், தீர்மானித்திருந்தார்கள்.

ஆனால் இருவர் நினைத்ததும் நடக்க வில்லை.

காரணம்..முத்துசாமியின் “எம். எஸ். சாஃப்ட்டெக்” அலுவலகத்தில் வந்து உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு கோயமுத்தூர் பணக்கார குடும்பம்.

அந்த அலுவலகத்தின் மார்ப்ளெக்ஸ்

பத்மினி பட்டாபிராமன்

தரையும், கண்ணாடி அறைகளும், கம்ப்யூட்டர் திரைகளும் தந்த தயக்கத்தை மீறி அவருக்கு வராக் கடன் பற்றிய கவலை பிரதானமாக இருந்தது.

லிஃப்டில் வரப் பயந்து மூன்று மாடி ஏறி வந்த வரவும், "எம்.எஸ். சாஃப்ட்டெக்" பெயர்ப் பலகையை கண்ணை இடுக்கி படித்த பின்னும் உள்ளே நுழைந்து "இதானே முத்தையாவோட ஆபீசு" என்று வெகுளித்தனமாகக் கேட்ட அப்பாவித் தனமும், கசங்கியிருந்தாலும் விளம்பர வெண்மையில் சுத்தமான வேட்டி சட்டையும், பார்த்த பின் வரவேற்பறைப் பெண், வழக்கம் போல் "யெஸ்" கேட்காமல் டிசைனர் சோஃபாவில் உட்காரச்சொன்னாள்.

"உங்க பேர்?

"பிச்சையா"

கூகுளின் சுந்தர் பிச்சைக்குப் பின் அவரது பெயருக்கு ஒரு மரியாதை இருந்தது.

"எங்கிருந்து வரீங்க"? சொன்னார்.

இண்டர்காமில் அவளுக்கே கேட்காமல் வார்த்தைகளை அனுப்பினாள்.

அழகான பூங்கொத்து படமிட்ட தினசரி காலண்டர். பெரிய சைஸில் தேதி 8 என்றது. அவருக்குள் கவலை அரித்தது.

"இன்னிக்கி வெள்ளிக்கிழமையா..? திங்கக்கிழமை 11ம் தேதிக்குள் சொசைட்டியில் பணம் கட்டியாகணுமே.".

"போன வருசம் வந்தப்ப ஏதோ பழைய ஆபீசுல இருந்தான்.இப்ப எடம் மாறிட்டான் போல இருக்கு. நல்லா இருக்கட்டும். ஆனா நமக்கு தர வேண்டிய கடனைத் தந்துடலாமில்ல.." நினைத்துக் கொண்டார்.

மனசு வாழ்த்தினாலும் உள்ளூர உதறல்.

சென்ற முறை பழைய ஆஃபீஸுக்கு போயிருந்தபோது அவன் சரியாக முகம் கொடுத்துப் பேசவே இல்லை. உள்ளே கூட கூப்பிடவில்லை.

"நான் உங்க பணத்தைத் தராமலா இருப்பேன் பெரியப்பா" என்று மட்டும் சலிப்பாக கோபமாக சொல்லி அலட்சியமாக அனுப்பி விட்டான்.

ஊரில்,லட்சுமியும் அவருக்கு சாமர்த்தியம் இல்லை என்று குத்திக் காட்டினாள்.

மூன்று மாசம் கழித்து மகன் சுப்பையாவை அனுப்பினார். வீட்டில் இருந்து கொண்டே ஊரில் இல்லை என்று மனைவி மூலம் சொல்லி அனுப்பி விட்டான்.

இரண்டு மாசம் முன்னாடி தன் மாப்பிள்ளையை அனுப்பிப் பார்த்தார். அதே அலட்சியம் அனேகமாக விரட்டி விட்டான்.

"இப்போ அவன் கோபத்தை லட்சியம் செய்யாமல் பணத்தை திருப்பி வாங்கியே ஆகணும். ஊரில் எவ்வளவோ செலவு.. காத்திருக்கு. மகளுக்கு பிரசவம்.. விதைப்புக்கு, பம்ப்பு செட்டு ரிப்பேருக்கு, பாசனத்துக்கு என்று எவ்வளவோ வேலைக்கு பணம் வேணும் ..சுப்புவும் எப்படியாச்சும் வாங்கிட்டு வந்திருங்கப்பா என்று சொல்லியிருக்கிறான்."

திடும்மென உள்ளிருந்து அறைக் கதவை வேகமாகத் திறந்து கொண்டு வந்தான் அவரது தம்பி மகன்.

உயர்ந்த ரக உடைகளும் வாசமுமாய் வந்தவன்,

"வாங்க பெரிப்பா வாங்க" என்ற படியே குனிந்து அவரது பாதங்களைத் தொட்டு கும்பிட்டான்.

புரியாமல் அப்படியே திகைத்து பின்னடைந்து நின்றவரை அணைத்த படியே



டீச்சர்: சோப் எடுத்து அதில் சில நீர் துளிகளை தெளித்து ஈரமாக்கிய பின் அதில் நூலிழையின் முனையை முக்கிய பிறகு நூலை ஈசியாகக் கோர்க்கலாம். இதிலிருந்து என்ன தெரிகிறது?

மாணவி: சின்னச் சின்ன விஷயத்துக்குக் கூட சோப்பு போடணும் டீச்சர்.

- சரவெடி ஸ்ரீதர்



www.TheMagnet.com




படம்: **யோகா** கமெண்ட்: **ஜவாலா**

www.TheMagnat.com

"வாங்க என் ரூமுக்குப் போகலாம்."

ஒரு குளிர் ஹாலைத் தாண்டி தன் அறைக்குள் அழைத்துச் சென்றான்.

அறைக்குள், அவனது புது பெரிய ஆஃபீஸ் டேபிள் முன் குஷன் நாற்காலிகளில்,

தங்கமும் வைரமும் உடலில் எங்கெல்லாம் அதிக பட்சம் அணிய முடியுமோ,அங்கு எல்லாம் அணிந்த ஒரு நடுத்தர வயது தம்பதி. சூட் கோட் டை என்று கார்ப்பரேட் சி ஈ ஓ லுக்கில் ஒரு இளைஞன். "வாங்க இப்பிடி உக்காருங்க" இன்னொரு குஷன் நாற்காலியில் அவரை உபசாரமாக உட்கார்த்தி வைத்தான். இப்படி ஒரு சிரிப்பை அவன் முகத்தில் அவர் எதிர்பார்க்கவில்லை.

"பெரிம்மா நல்லா இருக்காங்களா? அவுங்க கண் இப்ப பரவாயில்லையா? கமலாக்கா மாமா, பசங்க சிதம்பரத்துல நல்லா இருக்காங்களா? எங்கே சுப்பு அண்ணன் இந்தப் பக்கம் வரதே இல்லியா?

அன்னைக்கு வந்துட்டு அவசரமா போயிட்டாராமே..முதுகுத்தண்டு ஆபரேஷனுக்கு அப்புறம் அண்ணிக்கு வலி தேவலையா? அவரு பொண்ணு படிக்குதா? பையன் காலேஜுக்குப் போறானாமே?"

இது வரை கேட்கப் படாத பாசமிகு தொடர் கேள்விகள்.

அவர்களிடம் திரும்பி,

"எங்க பெரியப்பா. கிராமத்துல எங்க நிலம் தோப்பு எல்லாம் பார்த்துக்கிட்டிருக்காரு.குடும்பத்துக்கு பெரியவரு. எங்கப்பா என் சின்ன வயசுலியே காலமாயிட்டாரா, எனக்கு எல்லாமே இவருதான்."

எங்க நிலமா? அது நான் வாங்கிப் போட்டதாச்சே.அப்புறம் தோப்பா? நமக்கு ஏது தோப்பு? நம்ம கூட ஒட்டி ஒட்டாமத்தானே இருப்பான்..

பிச்சையா யோசிப்பதை கவனிக்காதவன் போல,

"பெரிப்பா, இவங்க கோயமுத்தூர்லேர்ந்து வந்திருக்காங்க. இவரு ராமமூர்த்தி. அவுங்க அவர் சம்சாரம். அவர் அவங்க மகன் சித்தார்த். அங்க சொந்தமா நிறைய பிசினெஸ் வச்சிருக்காங்க.நம்ம கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர் ப்ராஜக்ட் பத்தி கேள்விப்பட்டு நம்ம கம்பெனி கிளை கோயம்புத்தூரில் ஆரம்பிக்கற விஷயமா வந்திருக்காங்க."

நம்ம கம்பெனி?

குழப்பமாகவே அவர்களை வணங்கி பதில் வணக்கமும் பெற்றுக் கொண்டார்.

"பெரிப்பா. இவன் பழனி.. தெரியுமில்ல. என் ஃப்ரெண்ட் .நம்ம ஊரு வெங்கடசாமி நாயக்கர் பேரன். இங்கே எனக்கு ஒத்தாசையா இருக்கான்."

மேஜை ஓரம் கம்ப்யூட்டரை குடைந்து கொண்டிருந்தவனையும் அறிமுகப் படுத்தினான்.

"நல்லதுப்பா" இப்போது அவருக்கு ஊர் சம்பந்தப்பட்ட ஒரு நபரை பார்த்ததில் கொஞ்சம் நெகிழ்ச்சி.

இவனாச்சும் நமக்கு சாதகமா பேச மாட்டானா?

அப்புறம் அவன் தன் கம்பெனி,அதன் திட்டங்கள் குறித்து வந்தவர்களிடம் பேச ஆரம்பித்தான்.

அவருக்கு எதுவும் புரிய வில்லை.

"இவுங்க கிளம்பிப் போனாத்தானே அடுத்து நான் இவன் கிட்ட பணம் கேக்க முடியும்?" அவருக்கு இதே யோசனை. போவாங்களா?

"பெரிப்பா உங்களைத்தான்.." திடுமென அழைத்தான்.

"காஃபி எடுத்துக்குங்க"

ஒரு பையன் எல்லோருக்கும் பணிவாக காஃபி வைத்துக் கொண்டிருந்தான்.

"என்ன ஊரு ஞாபகமா?"சிரித்தான் முத்துசாமி.

"இன்னைக்கே ஊருக்குப் போகணும்னு ஃபோன்ல சொன்னீங்களே.அதென்ன வந்ததும் வராததுமா? ரெண்டு நாள் தங்கிட்டுப் போகலாமில்ல? வீட்டுல ரமா கூட சொல்லிட்டிருந்தா.. பசங்க தாத்தா எப்போ வருவார்ன்னு கேட்டுட்டு இருந்தாங்க."

சொன்னவன், ஒரு செக் புத்தகத்தை எடுத்தான்.

"பெரிப்பா. உங்களுக்கு பணம் தரேன்னு சொல்லிருந்தேனில்ல..மன்னிச்சுக்குங்க. நானே நேர்ல கொண்டு வந்து கொடுத்திருக்கணும்.. எங்க ஒழியுது?" கோயமுத்தூர் குழுவைப் பார்த்து சிரித்தான்.

நான் ஏதோ கடன் கேட்டாப்போல சொல்றானே..நினைத்துக் கொண்டார் பிச்சையா.

"பரவாயில்ல.. அதான்.." என்று ஆரம்பித்தவரிடம்,

"எவ்வளவு? மூணு லட்சம் தானே.. க்ராஸ் பண்ணி ஒரே செக்காத் தந்துடறேன். கொஞ்சம் லேட் டாயிடிச்சு. பெரிய மனசு பண்ணணும்."

செக்கில் தொகையை எழுதி கையெழுத்துப் போட்டான்.எழுந்து நின்று மிக பணிவாக குனிந்து வணங்கியபடி அவரிடம் செக்கை நீட்டினான்.

வாங்கிக் கொண்டவரால் நம்பவே முடியவில்லை. கெஞ்சிக் கூத்தாடி, காலில் விழுந்து மன்றாடி, மிரட்டி, எப்படியெல்லாமோ கேட்க வேண்டுமென்று வந்ததென்ன. நடப்பதென்ன..

ஆனால் அவர் முகம் மலர்ந்து விட்டது. ஊரில் பணப் பிரச்னை, இவன் தரமாட்டானே என்ற கவலை என இறுகிக் கிடந்த உணர்வுகள் சட்டென இளகி மனம் லேசாகி விட்டது.

ஊரின் வீரபத்ர சாமிக்கு நன்றி சொல்லிக் கொண்டார்.

சிறிது நேரம் கழித்து "நான் கிளம்பட்டா?" எழுந்தார். "மூணு மணி பஸ்சுக்குப் போகணும்"

"வீட்டுக்குப் போய் சாப்பிட்டுட்டுப் போங்க.. ரமா கிட்ட ஃபோன்ல சொல்லிடறேன்" உரிமையாக உத்திரவு போட்டான்.

அவர்கள் எல்லோரையும் வணங்கி விட்டு வெளியே வந்தார்.

"பழனி.. டிரைவரைக் கூப்பிட்டு பெரிப்பாவை வீட்டுல கொண்டு விடச்

www.TheMagnet.com

சொல்லு..நீயும் கூடப் போயிட்டு நான் சொன்ன வேலையெல்லாம் முடிச்சுட்டு வந்திரு."

பெரியவரின் தயக்க மறுப்புக்களை முறியடித்து, வாசல் வரை வந்து வழியனுப்பினான்.

∞

**மா**லை ஆறு மணிக்குதான் பழனி திரும்பி வந்தான். ஃபோனில் மும்முரமாக பேசிக்கொண்டு இருந்தான் முத்தா. பேச்சிலிருந்து புனேயில் யாரோடோ பேசுவது கிட்டத்தட்ட சண்டை போல் தெரிந்தது. பேசிமுடித்து விட்டு,

"நான் உடனே புனே போகணும் பழனி. அங்க நம்ம ப்ராஜெக்ட் சரியில்லேங்கறான். நான் போய்தான் பார்க்கணும். கேகே ட்ராவல்ஸை கூப்பிட்டு ஒரு டிக்கெட் நைட் ஃப்ளைட்டுக்கு புக் பண்ணச் சொல்லு.

நான் வீட்டுக்குப் போய் ரமா கிட்ட சொல்லிட்டு கிளம்பறேன்."

"இரு முத்து.. உங்க பெரியப்பா ஊருக்கு போயிட்டாரா?"

"ஒரு வழியா கிளப்பியாச்சு..

"அவர் கேட்கறதுக்கு முன்னாடி செக்கை தூக்கி கொடுத்திட்டே... எந்த பாங்க் அக்கவுண்ட்?"

சொன்னான். பழனிக்கு ஷாக்.

"அப்பா..முத்து.. அது நம்ம பழைய பாங்க் அக்கவுண்ட். க்ளோஸ் பண்ண வேணாம்னு வச்சிருந்தோம். அதில.ரெண்டாயிரமோ என்னவோதான் இருந்திச்சு..பாஸ் புக்கை கூட வீட்டுல எங்கியோ தூக்கிப் போட்டிருக்கே.."

"எனக்கு தெரியும்" மேஜை ட்ராயர்களைப் பூட்டியபடியே சொன்னான்..

"தெரியுமா?" அப்ப ஏண்டா கொடுத்த? நமக்கு தான் வேற பாங்க்ல பணம் இருக்கே அதில இருந்து கொடுத்திருக்கிறதுதானே.."

"உளராதே..நானே இப்பதான் ஏதோ நாலு காசு பாக்கறேன். அவருக்கு கொடுக்கணும்னு அவசியமே இல்லே.."

"ஏமாத்திட்டியா.. இதை விட வழக்கம் போல இல்லைன்னே சொல்லியிருக்கலாமே"

"அப்படித்தான் விரட்டிடலாம்னு நினைச்சேன்" கம்ப்யூட்டர் திரைக்கு




ஷட்டவுன் கொடுத்துவிட்டு தொடர்ந்தான். "ஆனா சரியான சமயத்துல கோயம்புத்தூர் ஆளுங்க வந்துட்டாங்களே.. முன்னாலேயே தெரிஞ்சிருந்தா பெரியப்பாவை நிறுத்தியிருக்கலாம். அவங்க நம்மகிட்ட இன்வெஸ்ட் பண்ணலாமா வேணாமான்னு யோசனையில இருக்கறவங்க. எவ்வளவு தடவை பேசின பிறகு வந்திருக்காங்க. அதிலும் அந்தம்மா ரொம்ப சூட்சுமமா இருக்கறவங்க.அந்த சமயத்துல அவங்களை இம்ப்ரெஸ் பண்ணணும்னு தோணிச்சு.நம்ம மேல நம்பிக்கை வரணும் இல்ல..நல்ல வேளை அந்த செக் புக் இங்கே கிடந்திச்சா, திடீர்னு ஐடியா வந்திச்சு.."

"அது சரி நாளைக்கே செக் ரியலைஸ் ஆகலேன்னா உங்க பெரியப்பா சும்மா இருப்பாரா?

கம்ப்யூட்டரிடமிருந்து விலகி சோம்பல் முறித்து சொன்னான்.

"பாங்க்லே அவரு போய்க் கேட்ட உடனே பணமில்லேம்பாங்க. பணமில்லேன்னா முதல்ல எனக்குத்தான் ஃபோன் பண்ணுவாரு.அதுவும் என் செல் நம்பர்லாம் கொடுக்கலே. பண்ணினா திங்கக்கிழமை ஆஃபீஸுக்குத்தான் பண்ணுவாரு. நீ

www.TheMagnet.com

என்ன பண்ணறே.. முக்தா ஊர்லெ இல்லே எனக்குதெரியாதுன்னு சொல்லிடு."

"செக் பவுன்ஸ் ஆச்சுன்னா அது பெரிய குற்றம்னு தெரியும் இல்ல"

"அதெல்லாம் நான் நல்லா சமாளிச்சிடுவேன்.சாரி பெரியப்பா தப்பாக் கொடுத்துட்டேன். அதை கிழிச்சுப்போட்டுடுங்க. அடுத்த வாரம் உங்க ஊருக்கு வரேன்.வேற செக் கொண்டு வந்து வீட்டுலேயே தரேன்னு சொன்னாப் போதும். சந்தோஷமாயிடுவாரு.கேஸ் போடறதெல்லாம் தெரியாது அவருக்கு. அவரைப் பத்தி எனக்குத் தெரியும். கவலையே படாதே பழனி"

"சரி, நான் கிளம்பறேன். முதல்லே புனேக்கு டிக்கட் வாங்கு சாமி..எகானமி இல்லேன்னா பிஸினஸ் க்ளாஸ்லே வாங்கு..வீட்டுக்கு ஃபோன் பண்ணு..டிக்கட்டை ஏர்போர்ட்டுக்கே கொண்டு வந்திடு."

∞

**நா**ன்காம் நாள் மதியம். விடாமல் கூப்பிட்டது ஃபோன். எடுத்த பழனி கவலையோடு அவனிடம் ரிசீவரை பொத்தியபடி நீட்டினான்.

"முத்தா.... உங்க பெரியப்பா கிட்டருந்து தான்.. இத்தனை நாளா கூப்பிடலியேன்னு பார்த்தேன். கரெக்டா நீ புனே லேர்ந்து வந்த அன்றைக்குன்னு கூப்பிடறாரு.. என்ன சொல்லி சமாளிக்கப் போற?"

"அவ்வளவு பெரிய ப்ராஜெக்ட் சிக்கலையே சமாளிச்சிட்டு வந்திருக்கேன்.. பாரு என் சாமர்த்தியத்தை" கவலையே படாமல் வாங்கிக் கொண்டான்.

"சொல்லுங்க பெரியப்பா.. ஊருக்கு பத்திரமா போய் சேர்ந்தீங்களா?" கலகலப்பாக ஆரம்பித்தவன், சில நொடிகளில் முகம் மாறி இறுகி ஒரு ஸ்டிஃப் மோடுக்குப் போனான்.

"ம்..ம்ம்" வெறும் ஒற்றைச் சொல்..மட்டுமே உதிர்த்துக் கொண்டு.. பழனி புரியாமல் நின்றான். திட்டி நொறுக்குகிறார் போல.

மூன்று நிமிடங்கள் கழித்து பிரமை பிடித்தாற் போல ஃபோனை வைத்தான்.

"என்னப்பா என்ன ஆச்சு.? கேஸ் போடப் போறாராமா?"

"பணம் எடுத்துட்டேங்கறாருடா. முழுசா மூணையுமே எடுத்தாச்சாம். ரொம்ப நன்றி சமயத்துல கொடுத்திட்டே அப்படி இப்படின்னு சந்தோஷப் படறாரு.. ஒண்ணுமே புரியலே. அந்த அக்கவுண்ட்ல நீ சொன்னாப்ல ரெண்டாயிரமோ என்னவோதானே இருந்திச்சு. கொஞ்ச நாளாச்சு அதை எண்ட்ரி போட்டு.." எப்படி பாஸாச்சு?" என்று குழம்பியவன் திடீரென்று நினைத்தவனாக, "பழனி நீ ஏதாச்சும் திரிசமன் பண்ணினியா?" "பாரு இப்படி நீ சந்தேகப் படறதானா சொல்லு நான் இப்பவே ஊருக்கு கிளம்பறேன்.."

கையில் இருந்த பேனாவை மேஜை மேல் எறிந்தான்."சம்பளம்னு நீ கொடுக்கிற பைசா தவிர எங்கிட்ட ஏதுரா பணம்?"

"அந்த ராமமூர்த்தி ஏதாச்சும்.."

"அவருக்கும் இவருக்கும் என்ன சம்பந்தம்.. தவிர அவர் அன்றைக்கு நாலு மணி வரைக்கும் நம்ம கூடத்தானே இருந்தாரு."

மனைவியை மொபைலில் அழைத்துக் கேட்டான்..

"ஒரு புடவை வாங்க பணத்துக்கு கணக்கு பார்த்து எண்ணி எண்ணித் தரீங்க.. நான் ஏன் உங்க வழிக்கு வரேன்? என்னது? பாஸ் புக்கா? என்னாலே பாஸ்புக்கெல்லாம் தேட முடியாது நான் வெளியே லேடீஸ் க்ளப்லே இருக்கேன்."

அவனது செல்ஃபோனில் ஒரு க்ளிங். மெயிலுக்கான அறிவிப்பு.

மெயிலை திறந்து பார்த்தான்.

பணம் எடுத்துட்டேங்கறாருடா. முழுசா மூணையுமே எடுத்தாச்சாம். ரொம்ப நன்றி சமயத்துல கொடுத்திட்டே அப்படி இப்படின்னு சந்தோஷப் படறாரு.. ஒண்ணுமே புரியலே.

www.TheMagnet.com




படம்: யோகா கமெண்ட்: ஜ்வாலா

www.TheMagnat.com

பல வருடத்திய நண்பன் அனுப்பியிருக்கிறான்.

"கதிரேசன்14 அட் ஜி மெயில் டாட் காம்" ஐடியிலிருந்து வந்த மெயில் இப்படிப் போயிற்று.

"உனக்கு வருத்தத்தோடு நான் அனுப்பும் மெயில். மூன்றே மாதத்தில் தருவதாக சொல்லி அவசரத்துக்கு உன்னிடம் கடன் வாங்கினேன். பல காலம் பழகின நண்பனாச்சேன்னு தான், நீ நிறைய வட்டி கேட்டாலும் பரவாயில்லேன்னு வாங்கினேன். புரட்ட முடியலே. கூட ஒரு மாசம் ஆகிவிட்டது.. பிஸினஸ் விஷயமாக நான் ரெண்டு வாரமா மலேஷியாவில இருக்கேன். போன வாரம்தான் எனக்கு வர வேண்டிய பணம் வந்தது. நான் சென்னைக்கு அடுத்த வாரம் வந்து உன் கணக்கை செட்டில் பண்ணலாம்னு இருந்தேன்.அதற்குள்ளே நீ பாட்டுக்கு போன வாரம் என் வீட்டுக்குப் போய் என் மனைவி கிட்ட சத்தம் போட்டிருக்கே... முதல்ல உன் பணத்தை கொடுக்க சொல்லி அவ ஒரே அழுகை. வட்டியும் முதலுமா கணக்கு பண்ணி சரியா மூன்று லட்சம் நாப்பதாயிரம் ரூபாயை உன்னோட பாங்க் அக்கவுண்ட்டுக்கு திங்கக் கிழமை காலையிலே எங்க ஜாயிண்ட் அக்கவுண்ட்லேருந்து அவளை போடச் சொல்லிட்டேன். பாங்க்லேருந்து உனக்கு இண்டிமேஷன் அனுப்பினாங்களா, வந்ததா, நீ பார்க்கலியான்னு எனக்கு தெரியலே.. நீயா பணம் வந்ததுன்னு சொல்லுவேன்னு எதிர்பார்த்தேன். சொல்லலே. சரின்னு இப்ப நானே மெயில் அனுப்பிட்டேன். இனிமே எங்கிட்டேயும் சல்யூஷன், சஜ்ஜெஷன்னு வந்து நிக்காதே. உனக்கு நிரந்தர குட் பை.."

அடப் பாவி! அவனுக்கு எப்பவோ அந்த அக்கவுண்ட் நம்பரைக் கொடுத்தது இப்படி ஆச்சா!

தலையில் கை வைத்துக் கொண்டான். ●

# திருமணத் தடைகள் நீக்கும்

## திருப்புலிவனம் வியாக்ரபுரீஸ்வரர்



சிவனின் பெருமையைச் சொல்லச் சொல்ல நா இனிக்கும். சிவத்தொண்டு செய்யச் செய்ய உயிர் புனிதமாகும் சிவபக்தியால் தீமைகள் விலகி நன்மை உண்டாகும். சிவநெறியில் வாழ்ந்தால் முக்தி செல்லும் வழி தெரியும். சிவாலயங்களில் தொடர்ந்து தரிசனம் செய்தால் பல பிறவிகளில் செய்த பாவம் விலகும்.

மனிதப் பிறப்பு எடுத்த அனைவரும் நல்வழி நடக்கவும் மனதை ஒரு நிலைப்படுத்தவும். இறைவழிபாடு அவசியம் என்று முன்னோர்கள் நமக்கு சொல்லியிருக்கிறார்கள். ஆலயத்தில் மட்டுமே இறைவனின் அருள்மழை பொழிந்து கொண்டேயிருக்கும். வாழ்வில் ஏற்படும் அனைத்து பிரச்சனைகளையும் சோதனைகளையும் மனமுருகி வணங்கும் பக்தர்களுக்கும் தக்க பரிகாரங்கள் செய்யும் அன்பர்களுக்கு நல்வழி காட்டவே இறைவன் உள்ளார்.

www.TheMagnat.com

ஆலயங்களின் அமைப்பைக் கொண்டு பெருங்கோயில், கரக்கோயில், ஞாழற்கோயில் கொகுடிக் கோயில் இளங்கோயில், ஆலக் கோயில், மாடக் கோயில் என்று ஏழு வகைகள் உள்ளன. இறைவனது திருவடியை சரணம் அடைவர்களுக்கு முன்பிறவி பாவங்களும், சாபங்களும் விரைவில் விலகிவிடும்.

**திரும்புலிவன ஈசன்** இருக்குமிடம் உத்திரமேரூரிலிருந்து வடக்கே காஞ்சிபுரம் செல்லும் வழியில் 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. காஞ்சிபுரத்திலிருந்து உத்திரமேரூர் செல்லும் வழியில்



23 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. உத்திரமேரூர் வந்து சென்றால் விரைவில் ஆலயத்தை அடையலாம். இந்த ஆலய இறைவன் வியாக்ரபுரீஸ்வரர் என்ற திருநாமத்தில் ஜொலிக்கிறார். இந்த ஆலயம் புராண காலத்தில் வில்வவனமாக இருந்தது.

புலியாக மாற சாபம் பெற்ற **மிருகண்டு முனிவர்** இந்த ஆலய சிவனை பூஜை வழிபாடுகள் செய்து சாப விமோசனம் பெற்று முக்தி அடைந்தார். அதனால் இந்த ஊர் **திருப்புலிவனம்** என்று சொல்லப்படுகிறது. **வியாக்ரபாத முனிவர்** இந்த ஆலயத்திற்கு வந்து இறைவனை வணங்கி அருள் பெற்று முக்தி அடைந்ததால் இந்த ஆலய மூலவருக்கு வியாக்ரபுரீஸ்வரர் என்று பெயர் வந்தது.

**வியாக்ரபாத முனிவரின் சிவபூஜை:-** தில்லையம்பதியில் ஒரு காலத்தில் **மாத்யந்தினர்** என்பவர் திருமூல நாதரை தினமும் வணங்கி பூஜைகள் தொடர்ந்து செய்து வந்தார். காலையில் வண்டுகள் தேனை உறிஞ்சி சேதப்படுத்தும் முன்பே எழுந்து நந்தவனம் சென்று மலர்களை பக்தியுடன் பறித்துக் கொண்டு வந்து சிவபெருமானை வழிபாடு செய்தார்.

ஒருமுறை பனி அதிகமாகப் பொழிந்ததால் நேரம் கடந்து மலர் பறிக்க சென்றபோது வண்டுகள் மலர்களை சேதப்படுத்தியதைக் கண்டு மிகவும் வருந்தி இறைவன் சன்னதியை அடைந்து கண்ணீர் மல்க நின்றார். அப்போது "மாத்யந்தினா! ஏன் இந்த அழுகை" என்று அசரீரியாக கேட்க, உடனே "இறைவா பூஜைக்கு தேவையான தூய்மையான மலர்கள் கிடைக்கவில்லை. காலையில் மலர்கள் பறிக்கத் செல்லும் போது கண்களும் சரியாக தெரியவில்லை. பொழுது விடிந்ததுமே மலர்களை வண்டு சேதப்படுத்துகிறது. அதனால் வருத்தம் அடைகிறேன்" என்று கூறினார். உடனே திருமூலப் பெருமான் "இனிமேல் வருத்தம் அடைய வேண்டாம். இருளிலும் கண்கள் நன்றாகத் தெரியும். செடி மரங்களில் ஏறுவதற்கு வசதியாக புலியினுடைய கால்களை உமக்கு அளிக்கிறேன்" என்று கூறி "வியாக்ரபாதன் என்ற பெயரில் இனி நீ அழைக்கப் படுவாய்" என்று அருள் புரிந்தார்.

உடனே மாத்யந்தினர் ஒளிவீசும் கண்களையும் புலியினுடைய கால்களையும் பெற்றார். உடனே இறைவனிடம் 'எனக்கு மகன் பிறக்க வரமளிக்க வேண்டுமென்று' கேட்க! "உன் விருப்பம் நிறைவேற இங்கிருந்து வடபாலிருக்கும் **புலிவலம்** செல்வாய். அங்கு அம்மை வணங்கி நீ கேட்ட புத்திரப் பேறு அடைவாய்" என்று இறைவன் அசரீரியாக சொன்னார்.

இறைவன் ஆணையை ஏற்று வியாக்ரபாதர் தன் மனைவியுடன் பலதலங்களை வழிபட்டு



பிறகு திருப்புலிவனத்தை அடைந்தார். அங்கு எழுந்தருளி இருக்கும் புலிவனப் பெருமானை நறுமணம் கொண்ட மலர்களால் சில காலம் வழிபாடு செய்து வருகையில் இறைவன் அருளால் இவருக்கு **உபமன்யு** என்ற மகன் பிறந்தான். பிறகு இறைவன் வியாக்ரபாதருக்கு ஞானத்தை அருளும் ஆலமர் செல்வராக காட்சி தந்து யோகத்தின் சிறப்பை உணர்த்தியருளினார்.

**இறைவன் நம்பிக்கையான பக்தனைக் காத்த விதம்:-** ஒரு காலத்தில் வியாக்ரபுரீஸ்வரர் ஆலயத்தில் **பிரம்ம நேசன்** என்பவன் அர்ச்சகராக பணிபுரிந்து வந்த சமயத்தில் அவன் இறைவனுக்கு சூட்டிய மலர் மாலையை நாளும் சோழ

**நித்தியா**

அரசனுக்கு அனுப்பி வைப்பதை வழக்கமாக வைத்திருந்தான். ஒருநாள் அர்ச்சகர் பக்தியை சோதிக்க எண்ணிய இறைவன் மலர் மாலையில் தலைமுடி இருக்குமாறு செய்தார்.

சோழ மன்னன் தனக்கு அனுப்பப்பட்ட மாலையில் தலைமுடி இருப்பதைக் கண்டு மிகவும் சினம் கொண்டு பிரம்மநேசனை அழைத்து வரச் சொன்னான். அதன்படி காவலர்களும் அரசவைக்கு அழைத்து வந்த போது அரசன் "இந்த மாலையை சூடியது யார்? லிங்க வடிவில் இருக்கும் சிவனுக்கு என்ன குடுமியா இருக்கிறது? சொல்! இல்லையென்றால் உன்னை சிறையில் வைப்பேன்" என்றான்.

இதைக் கேட்ட அர்ச்சகர் அரசன் தண்டனையிலிருந்து தப்பிக்க, "நான் பூஜை செய்யும் சிவனுக்கு குடுமி உள்ளது" என்றான். அதனைக் கேட்டதும் அரசன் அர்ச்சகளுடன் ஆலயத்தை அடைந்தான். அப்போது அர்ச்சகர் 'நான் செய்த தவறை மன்னிக்க வேண்டும் வேறு வழியின்றி பொய் சொல்லிவிட்டேன்' என்று இறைவனிடம் வேண்டினான்.

அனைவரும் ஆலயத்தை அடைந்து சிவனை வணங்கிய பின் லிங்கத் திருமேனியை கண்டவுடன் அதில் லிங்கத்தின் தரிசனம் உச்சிக் குடுமியுடன் கிடைத்தது. இதனைக் கண்ட அரசன் மனமகிழ்ந்து தன் தவறுக்கு மிகவும் வருந்தினான். இறைவன் அருள் எண்ணி வியந்து வியாக்ரபுரீசருக்கு எண்ணற்ற விழாக்கள் நடத்தி மகிழ்ந்தான். இறைவன் கருணையை எண்ணி அர்ச்சகர் **பிரம்மநேசன்** எண்ணற்ற மலர்களால் சிவனை அர்ச்சனை செய்து வணங்கி வாழ்வில் எல்லா நலமும் பெற்றான்.

ஆலயத்திற்கு செல்லும் முன்பு நந்தி மண்டபமும் பலி பீடமும் உள்ளன. அருகில் குளமும் நூற்றுக்கால் மண்டபமும் உள்ளது. இது பழுதுபட்ட நிலையில் இருப்பதால் இதனை புதுப்பிக்க தக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. ஆலயம் மூன்று நிலை ராஜகோபுரத்துடன் காட்சி அளிக்கிறது. முதலில் காட்சி அளிப்பது 16 கால் மண்டபம் இதில் ஆலய வரலாற்றை விவரிக்கும் வகையில் புலி லிங்க பூஜை செய்யும் சிற்பமும் வியாக்ரபாதர் லிங்க பூஜை செய்யும் சிற்பமும் மற்றும் எண்ணற்ற சிற்பங்களும் செதுக்கப்பட்டுள்ளன. காணும் போது மெய் சிலிர்க்கும் மூலவர் சன்னதிக்கு செல்லும் முன்பு விக்னேஸவரன், பாலமுருகன் உள்ளார்கள் இறைவன் இறைவிக்கு தனிக் கோபுரம் உள்ளது.

இந்த ஆலயம் 2000 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆலய இறைவன் சுயம்புவாக தோன்றியவர். இது தங்கானை மாடக் கோயில் வகையை சேர்ந்தது. இராஜ கோபுரத்திலிருந்து ஒவ்வொரு நுழைவு வாயிலும் சற்று உயரமாக அமைந்து ஏழாவது நுழைவு வாயில் அடைந்தால் மூலவரை தரிசிக்கலாம். தரையிலிருந்து 15 அடி உயரத்தில் இறைவன் சன்னதி உள்ளது.

வியாக்ரபுரீசர் சதுர வடிவ ஆவுடையார் மேலே லிங்கத் திருமேனியுடன் கிழக்கு முகமாக காட்சியளிக்கிறார். புலிவழிபடும் போது, லிங்கத்தில் புலிநகம் பட்ட அடையாளம் இருக்கிறது. லிங்கத் திருமேனியில் குடுமியுடன் சதாசிவ மூர்த்தியாக காட்சியளிக்கிறார். கருவறைக்கு முன்பு உள்ளே மண்டபத்தில் சுரங்கம் இருக்கிறது. அது தற்போது மூடப்பட்டுள்ளது. அடுத்து நடராஜர் சன்னதியை தரிசிக்கலாம்.

வெளியே வரும் வழியில் சிம்மத் தூண்கள் உள்ளன. ஆலயப் பிரகாரத்தை சுற்றி வரும் வழியில் மஹாகணபதி சன்னதி தெற்கு பார்த்த, வண்ணம் தட்சிணாமூர்த்திக்கு தனி மண்டபம் இந்த ஆலயத்தில் அமைக்கப்பட்டிருப்பது மிகவும் சிறப்பாகும். ஆதிகுருவான சிவன் இந்த தலத்தில் உத்குடிகாசன நிலையில் அமர்ந்தவாறு யோக நிலையில் எழுந்தருளி வியாக்ரபாத முனிவருக்கு யோகத்தின் சிறப்பை உணர்த்தியுள்ளார். தட்சிணாமூர்த்தி வலது திருவடி முயலகன் மீதும் இடது திருவடி சிம்மத்தின் மீதும் பொருந்தியுள்ளன. அதனால் இங்கு சிம்மத்தை அடக்கியாளும்

www.TheMagnet.com

தட்சிணாமூர்த்தியாகத் திகழ்கிறார்.

இந்த சிம்ம தட்சிணாமூர்த்தியை சிம்ம இராசியில் பிறந்தவர்கள் வியாக்கிழமை தோறும் தொடர்ந்து வணங்கினால் வாழ்வில் ராஜயோகம் உண்டாகும். மற்ற இராசிக்காரர்களும் வழிப்பட்டால் நன்மைகள் நடக்கும். இங்கு குருபெயர்ச்சி விழா மிகவும் சிறப்பாக நடைபெறும். தட்சிணாமூர்த்தி சன்னதி அருகே அருள் தன்மை வாய்ந்த சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அதில் வியாக்ரபாத முனிவர். மனைவியுடன் இருக்கும் ஒரு சிற்பம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அடுத்து திருமால் சன்னதி. அதில் அருகே ஒரு தூணில் நரசிங்க உருவம் கொண்ட சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது பாலமுருகன். பிரம்மன், துர்க்கை, சண்டிகேஸ்வரர் இவர்களுக்கு சன்னதிகள் உள்ளன. அடுத்து தெற்கு பார்த்த வண்ணம் விஷ்ணு துர்க்கை பைரவர். சிலைகளும் நடுவில் நவக்கிரக சன்னதி உள்ளன. மேற்குப் பார்த்த வண்ணம் சூரியன். நால்வர் சன்னதிகளும் உள்ளது.

> **இந்த ஆலய இறைவனை ஒருமுறை தரிசனம் செய்தால் வாழ்வில் நமக்கு நல்ல திருப்பங்கள் உண்டாகும்.**

ஆலயம் கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தை சுற்றிவரும் வழியில் அழகிய பூந்தோட்டம் உள்ளது. ஆலயத்தில் வியாக்ரபாத முனிவர் **முத்தீஸ்வரர்** என்ற பெயரால் லிங்கம் அமைத்து வழிபட்டு முக்தி அடைந்தார். இதனை வியாக்ரபாத சித்தர் சமாதி என்று கூறுகிறார்கள். இந்த சன்னதி வடக்கு பிரகாரத்தில் உள்ளது. இங்கு பல சித்தர்கள் வந்து வணங்கி எண்ணற்ற சித்திகளைப் பெற்றுள்ளார்கள்.

ஆலயத்தில் அம்பாள் தெற்கு முகமாக **அமிர்தகுஜாம்பாள்** என்ற திருநாமத்தோடு எழுந்தருளியுள்ளாள். இந்த அம்மனைத் தொடர்ந்து வணங்கினால் **உடலில் உள்ள நோய்கள் விலகும்.** அம்பாள் சன்னதியில் முன்பு திருப்பணிகள் செய்த மூவேந்தர்கள் ஸ்தாபித்து வணங்கிய **சோழீஸ்வரர். பாண்டியரேஸ்வரர் சேரலேஸ்வரர்** என்ற மூன்று லிங்கங்கள் உள்ளன.

ஆலயத்தில் **பிரதோஷம், பௌர்ணமி, மகாசிவராத்திரி** மற்றும் அனைத்து பண்டிகை நாட்களும் விசேஷமாக கொண்டாடப்படுகின்றன. காலை 7.00 மணி முதல் பகல் 12.00 மணி வரை. மாலை 4.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை திறந்திருக்கும் ஆலயத்தின் அர்ச்சகராக ஸ்ரீ. குணசேகர குருக்கள் இருந்து சிவத்தொண்டு செய்து வருகிறார்.

**வியாக்ரபாத முனிவர், பிரம்மன், தேவேந்திரன், நந்திதேவர், பதஞ்சலி, முனிவர்** இங்கு வந்து பூஜை செய்துள்ளார்கள். புலி வந்து வணங்கி சாபம் நீங்கி முக்தி பெற்றது. இன்னும் எண்ணற்ற ஞானிகளும் இங்கு வந்து அருள் பெற்றுள்ளார்கள். இந்த ஆலயம் 2000 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக இருந்தாலும் 1400 ஆண்டு கால வரலாற்றை விவரிக்கும் வகையில் பல்லவர் காலம் தொடங்கி, சோழர், பாண்டியர், விஜயநகர மன்னர்கள் பல்வேறு அரசர்களின் கொடைகளைத் தாங்கிய கல்வெட்டுக்கள் இந்த தலத்தில் உள்ளது.

கி.பி. 780 ஆண்டு இரண்டாம் நந்திவர்ம பல்லவன் இந்த ஆலயத்தை கட்டித் தந்தார். சோழ மன்னர் முதலாம் இராஜேந்திரன் கி.பி. 1015ஆம் ஆண்டு முதல் பிரகாரத்தைக் கட்டியுள்ளார். கி.பி. 1073ஆம் ஆண்டு முதலாம் குலோத்துங்கச் சோழன் இதைக கஜப் பிருஷ்டிக் கற்றளியாக்கியுள்ளார். இன்னும் நிறைய அரசர்கள் இந்த சிவனின் திருப்பணி செய்து உயர்ந்துள்ளார்கள்.

சிவன் சன்னதியை தரிசித்து வரும்போது அர்ச்சகர் திராட்சையை பிரசாதமாக அளிக்கிறார். அம்மன் சன்னதியை தரிசிக்கும் போது கற்கண்டு பிரசாதமாக அளிக்கிறார். இந்த ஆலய இறைவனை ஒருமுறை தரிசனம் செய்தால் வாழ்வில் நமக்கு நல்ல திருப்பங்கள் உண்டாகும். ●







www.TheMagnet.com

சினிமா



# அந்தக் காலத்து

மேஜர்தாசன்







நமது தமிழ்த் திரையுலகில் அன்று நடித்த நடிகர், நடிகைகளில் பெரும்பாலானோர் நாடக உலகில் நடித்து நல்ல குருகுலவாசம் பெற்று திரையுலகில் நுழைந்தார்கள். கதைகளையும் - கதாபாத்திரங்களையும் மனதில் உள்வாங்கிச் கொண்டு மிகவும் உணர்ச்சி பூர்வமாக - கதாபாத்திரங்களாகவே மாறி ரசிகர்களை மெய்மறக்கச் செய்து வந்தார்கள். நடை - உடை - பாவனைகள் எல்லாம் அற்புதமாக இருக்கும். திரையில் அவர்களின் முகங்களைப் பார்க்கும் போது

www.TheMagnat.com

# அழகு தேவதைகள்...!

லட்சணமாகவே காட்சி தருவார்கள். ஒவ்வொரு கலைஞர்களும் தங்களின் ஒப்பனைகளில் மிகவும் கவனமாக இருந்தார்கள். குறிப்பாக நடிகைகள் அனைவருமே தங்களின் உடையலங்காரம், சிகை அலங்காரம் ஒப்பனைகளில் மிக மிக மிக கவனமாகவே இருந்தார்கள்.

நடிகை கண்ணாம்பா, அஞ்சலிதேவி, பானுமதி, சாரதா, தேவிகா, எம்.வி. ராஜம்மா, ராஜஸ்ரீ, ஜமுனா, வாணிஸ்ரீ, ராஜசுலோசனா.... இப்படி பல தெலுங்குதேச நடிகைகளும், பண்டரிபாய், சௌகார்ஜானகி, சரோஜா தேவி, காஞ்சனா, பாரதி.... இப்படி பல கன்னட தேச நடிகைகளும், லலிதா-ராகினி-பத்மினி, கே.ஆர். விஜயா என்று பல கேரள தேசத்து நடிகைகளும் மற்றும் பி.எஸ். சரோஜா,







குமாரி கமலா, குசலகுமாரி, ஈ.வி. சரோஜா, வைஜயந்தி மாலா, டி.ஆர். ராஜகுமாரி, மனோரமா, சச்சு விஜயகுமாரி, வெண்ணிற ஆடை நிர்மலா, எல் விஜயலட்சுமி, வி.என். ஜானகி, குறிப்பாக நமது தமிழக முதல்வர் செல்வி. ஜெ. ஜெயலலிதா, லதா, மஞ்சுளா, குட்டி பத்மினி, ஸ்ரீதேவி.... என்று இங்கே நமது தமிழ்நாட்டு நடிகைகளும் அவ்வளவு அழகாக இருந்தார்கள். இன்றைய 50, 60, 70 வயது இளைஞர்களின் கனவு தேவதைகளா இவர்கள் எல்லோரும் இருந்தார்கள். இங்கே வெளியிடப்பட்டிருக்கும் அந்த அழகு தேவதைகளின் புகைப்படங்களை ஒரு முறை மீண்டும் பாருங்கள்.... அடடா.... எவ்வளவு அழகாக... லட்சணமாக இருக்கிறார்கள் பார்த்தீர்களா...

அந்தக் காலத்து நடிகர்களும் சரி, நடிகைகளும் சரி படப்பிடிப்பு முடிந்து வீட்டிற்குள் நுழைந்து விட்டால் மேக்கப்பை





www.Cinemagnat.com

கலைத்து சாதாரணமாக காட்சி தருவார்கள். ஆனால் வெளியில் கிளம்பினால் படப்பிடிப்புகளைத் தவிர விழாக்களுக்கோ, கோயில்களுக்கோ, ஏதேனும் நல்லது கெட்டது நிகழ்ச்சிகளுக்கோ கலந்து கொள்ளச் சென்றால் சிறிது ஒப்பனையுடன் தான் வெளியே வருவார்கள். திரையில் தங்களைக் கண்டு ரசித்த ரசிகர்கள் நேரில் தங்களைக் காணும் போதும் அதே லட்சணத்துடன் காட்சியளிக்க வேண்டும் என்று நினைத்து தங்களுக்கு எவ்வளவு கஷ்டங்கள் உடல் உபாதைகள் இருந்தாலும் இன்முகத்தோடு கலந்துகொண்டு காட்சி தருவார்கள். அவர்களில் பலர் பேரன், பேத்திகள் எடுத்திருந்தாலும் இன்றும் ஏதேனும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவோ, கோயில் குளங்கள் என்று சென்றாலோ அழகான ஒப்பனையுடன் தான் வெளியே வருகிறார்கள். ஆனால், இன்றைய

இளம் கதாநாயக, நாயகிகளில் பெரும்பாலோர் திரையிலும் சரி, வெளியிலும் சரி நடை - உடை பாவனை ஒப்பனைகளில் சிறிதும் அக்கறைகாட்டுவதில்லை. தொழிலிலும் சரி... ரசிகர்களையும் சரி... அவர்கள் துளியும் மதிப்பதில்லை. ஏதோ ஒரு ரூபத்தில்.... எப்படியோ திரையுலகில் நுழைந்து விடுகிறார்கள். நடிப்பைப் பற்றியோ, ஒப்பனைகள் பற்றியோ, துளியும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. ஒரே குறிக்கோள் குறுகிய காலத்தில் இந்தத் திரையுலகின் மூலம் கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்து விட வேண்டும் என்று தான் நினைக்கிறார்கள்..... செயல்படுகிறார்கள். அந்த காலத்தில் நடிகைகளைத் தேர்ந்தெடுக்கும் போதே அவர்கள் -முகலட்சணம் கண்கள், உடல் உமைப்பு இவற்றைக் கருத்தில் கொண்டுதான் தேர்ந்தெடுப்பார்கள். குறிப்பாக அவர்கள் பலருக்கும் அழகான கண்கள் இருக்கும் பேசும் அந்தக் கண்களே பல கதைகள் சொல்லிவிடும். அதற்கு மேல் அந்தக் கண்களுக்கும் முகத்திற்கும் அவ்வளவு ஒப்பனைகளும் செய்வார்கள் Closeup Shot களில் அவர்களின் கண்ணும் மூக்கும் வாயும் போட்டி போட்டுக் கொண்டு நடிக்கும். இப்போதுள்ள நடிகைகளுக்கு இயக்குனர்கள் பெரும்பாலும் குளோசப் ஷாட்களே வைப்பதில்லை.

அந்தக் காலத்தில் நடிகைகள் கவர்ச்சியாக நடித்தாலும் அவர்களின் உடையலங்காரத்தில் அவ்வளவு ஆபாசம் இருக்காது.... தெரியவும் தெரியாது. பெரும்பாலான நடிகைகள் இன்று கவர்ச்சிக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுத்து நடிக்கிறார்கள். இதில் பெரும்பங்கு இயக்குனர்களையும் - ஒளிப்பதிவாளர்களையும் சேரும். அதே போல் நடிகைகள் போல் நடிகர்களும் அந்தக் காலத்தில் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு விதமாக அழகாக-லட்சணமாக இருந்தார்கள். அவர்களும் நடிப்பு விஷயங்களிலும், ஒப்பனை விஷயங்களிலும் மிகவும் சிரத்தையெடுத்துக் கொண்டு செயல்பட்டார்கள். இன்றைய நடிகர்கள் பலரைப் பார்த்தாலே நமக்கு பயமாக இருக்கிறது. அவலட்சணமாக, அடர்ந்த தாடியும் மீசையும் பிச்சைக்காரர்கள் போல் இருக்கிறார்கள். சினிமா என்றால் என்னவென்று தெரியாத - திரையுலகில் சாதித்த ஜாம்பவான்களைப் பற்றிய விவரங்கள் எதுவும் தெரியாத - தெரிந்து கொள்ள விரும்பாத பலரைப் பார்க்கும் போது நமக்கு வியப்பதாகவும் - எரிச்சலாகவும் இருக்கிறது. பொது நிகழ்ச்சிகளில், திரையுலக விழாக்களில் கலந்து கொள்ள வரும் போது பல நடிகர்கள் தாடி, மீசையுடனும் அரை டிராயருடனும் வருகிறார்கள். அதே போல் நடிகைகள் அரைகுறை ஆடையுடன் தலைவிரி கோலத்துடன் அவலட்சணமாக வருகிறார்கள். அந்தக் காலத்து அழகு தேவதைகள் போல நீங்கள் செயல்படுங்கள் என்று இந்தக் காலத்து நடிகைகளுக்கு அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்! ●





# நல்லோர் வணங்கும் நந்தாஜி!

ஓர் கூரிய பார்வை மூக்கு கண்ணாடிக்குள் இருந்து என்னை குத்திக்கொண்டு பார்க்கின்றது. உடைகளுக்குள் ஒளிந்திருக்கும் ஒரு மெல்லிய உருவத்தின் பார்வைதான் அது! நான் அவரிடம் அறிமுகப்படுத்தப் படுகிறேன். இவர்தான், "மகாத்மாவின்" முதன்மையான சீடர் என்று எண்ணி வியக்கிறேன். எளியநிலை, கூர்ந்த காந்தப் பார்வை, உறுதி கொண்ட எண்ணங்கள், கால்களை மடக்கி நாற் காலியில் அமர்ந்திருப்பதை பார்க்கும் போது அவர் நெஞ்சுரம் கொண்ட தவக்கோலம் பூண்ட "ராஜ ரிஷி" என்பது ஒளி விடுகின்றது.

நான் சற்று தள்ளி நமது பாரத் சேவக் சமாஜ்தின் கூட்டம் எங்கே நடைப்பெறுகின்றது என நண்பர்களிடம் வினவுகிறேன். அவர் எழுந்து முன்னே வந்து நான்காவது மாடியில் தான், வாருங்கள்! போகலாம் என்று என் தோள் மீது கைப்போட்டு உரிமையோடு நடந்து வருகிறார், அந்த '96' வயது இளைஞர்!

இவர் தான் இந்த இந்திய துணைக் கண்டம் இருமுறை இருளை அடைத்தப் போது "நந்தா" விளக்காக வழிக்காட்டிய குல்சால்ரிலால் நந்தாஜி!

**இளம்சிங்கம்!**

பள்ளி ஆசிரியரான புலகிராம்நந்தா, ஈஸ்வரி தேவிக்கு 1908 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4-ஆம் தேதி "சியால்கோர்ட்" ஊரில் பிறந்தார். புலிகரர்ம பன்மொழி புலவரும், ஆங்கிலம், பெர்ஷிய மொழியில் மிக நன்றாக தேர்ச்சிப் பெற்றவர். மிகவும் கண்டிப்பானவரும் கூட! நந்தாவுக்கு எந்த நேரத்திலும் தனிச்சலுகை காட்டியதில்லை.

தாயார் ஈஸ்வரி தேவி பக்தி மிக்கவர். அதனால் நேர்மையும் பொறுமையும் அவர் அணிகலன்களாக இருந்தன. நந்தாவின் பக்தி ஈடுபாட்டிற்கு ஏற்பட காரணமானவரும் கூட.

பதினைந்து வயதில் மெட்ரிகுலேஷன் எழுத வேண்ய நாளில் பதிமூன்று வயதிலே எழுத முற்பட்டார். அதற்காக தனது

**வேணு. ராச நாராயணன்**

**நம்மை நிமிர வைக்கும் அவர் வாழ்க்கையில் சில நிகழ்வுகள்:**

- மதுவிலக்கு போராட்டத்தில் கலந்து கொண்டு எலும்புகள் நொறுங்கிய நிலையில் அடிப்பட்டு விழுந்த போதும், மறுநாள் காயங்களுக்கு கட்டுப்போட்டு கலந்துக் கொண்ட "தீரர்" அவர்.
- ஜெனீவா நாட்டில் இருந்தபோது, குளிரால் தாக்கப்பட்ட போது 'விஸ்கி' சாப்பிட்டால் உயிர் பிழைக்க முடியும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தியபோதும் "மது அருந்தி உயிர் வாழ்வதைவிட அ(ம)து இல்லாமலேயே உயிர் துறப்பது சிறந்தது என்றார்.
- பிரதமர் தேவகௌடாவே முன்வந்து வீடுத் தருகிறேன் என்று முன்வந்தப் போதும் எம்.பி. பென்ஷன், மந்திரி பென்ஷன், தியாகி பென்ஷன் எதையும் ஏற்க மறுத்த வள்ளல் இவர்!
- தன் பேரக்குழந்தை அலுவலக் பேப்பர்களில் படம் வரைந்து காட்டியபோது மகிழ்ந்த நந்தா, தன் உதவியாளரை அழைத்து இப்படி அரசாங்க பொருட்களை பாழாவதை நான் ஏற்க மாட்டேன். இனி இப்படி நடந்தால் உங்களை பணிநீக்கம் செய்ய வேண்டிவரும் என்றார்.
- அன்னை இந்திரா மரணமடைந்த போது குடிமகனாக வரிசையில் நின்று அஞ்சலி செலுத்திய இவருக்கு பாரத அரசு "பாரத ரத்னாவை" காலம் தாழ்த்தியே தந்தது. ஆனால் 'பாரத தேசத்தின் தந்தையான' அண்ணல் இவரைப் பற்றி குறிப்பிட்டதை விடவா, 'பாரத ரத்னா' பெரியது?

வயதையும் விண்ணப்பத்தையும் திருத்திக் கொண்டார். ஆனால் தோல்வியை தழுவினார். தான் அப்படி தவறான வயதை கொடுத்ததால் தான் தோல்வியுற்றேன் என்று மனஉளைச்சலில் பலநாட்கள் இருந்தார்.

கல்லூரி பயிலும் போது டி. சிவப்பிரகாசம் என்ற பேராசிரியரால் மிகவும் ஈர்க்கப்பட்டார். பேராசிரியருக்கு 'டைப்பாய்டு' நோய் கண்ட போது ஒரு மகனைப்போல் அவருடன் இருந்து எல்லா வித உதவிகளையும், சிகிச்சையும் அளித்தார். கல்லூரியில் இருந்த காலத்தில் 'கார்வால்' பகுதியில் கடும் பஞ்சம் ஏற்பட்டது. உணவின்றி மக்கள் அவதிப்பட்டனர்.

"ஆரிய சமாஜத்தின்" தொண்டர் படையில் முதன்மையாக திகழ்ந்தார். அப்படி அவர் பணியாற்றும் போது அவரது தாய் மிகவும் கவலைக்கிடமாக உடல்நலம் குன்றி இருந்தார். தன் தாயைப் பார்ப்பதற்காக பல மைல்கள் காட்டுப் பகுதியில் நடந்து சென்றார். தன் தாய்க்கு பணிவிடைச் செய்தார்.

**"நாட்டிற்கு தொண்டு செய்ய காலம் கிடைப்பது அரிது, அது கிடைத்திருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தை விட்டு விட்டால் சரித்திரத்தில் சாபம் பெற்றவனாக ஆவேன்..."**

'அலகாபாத் பல்கலைகழகத்தில்' சட்டப்படிப்பையும் முதுகலை பொருளாதார படிப்பையும் ஒரே சமயத்தில் படித்து சிறந்த முறையில் தேர்வும் பெற்றார். நூலகத்திலேயே தன் காலத்தை கழித்தவர்.

**இல்வாழ்க்கை**

கல்லூரியில் படிக்கும் போது நந்தாவிற்கும் இலட்சுமி அம்மையாருக்கும் திருமணம் நடைபெற்றது. திருமதி இலட்சுமி தன் கணவருக்கான மனைவியாக திகழ்ந்தவர். இல்லறப் பிரச்சனைகள் எதுவுமே தெரியாத வகையில் குடும்பத்தை நடத்தினார். இவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தையும், ஒரு பெண் குழந்தையும் உண்டு. அவருடைய மகளான புஷ்பா பிற்காலத்தில் மருத்துவராக விளங்கி, தன் தந்தையை மிகவும் பாசத்துடன் அவர் இறுதி காலத்தில் கவனித்துக் கொண்டார்.

www.Themagnet.com

விடுதலைப் போராட்டத்தில் சிறைக்குச் செல்லவும், விடுதலையானதும் மீண்டும் சிறைக்குச் செல்வதையும் வழக்கமான வாழ்ககையாக வாழ்ந்து இருந்தார். மகள் புஷ்பா மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து பயின்று கொண்டிருந்தார். நந்தாவிற்கோ அவர் கல்விக் கட்டணத்திற்கு கூட காசு இல்லை. புஷ்பாவிற்கு கல்லூரி கட்டணம் செலுத்த முடியாமல் கல்லூரியை விட்டு நீக்கும் நிலைக்கே வந்துவிட்டது. நந்தாவின் நண்பர்கள் ஒவ்வொருவரும் சிறு சிறு தொகையாக சேர்த்து கல்லூரி கட்டணத்தை கட்டிவிட்டார்கள். இந்தக் காலகட்டத்தில் நந்தாவோ சிறைச்சாலையில்!


எளிமையாக வாழ வேண்டும் என்பதில் நந்தாவிற்கு சற்றும் சளைக்காதவளாக வாழ்க்கை துணைநலமாக வாழ்ந்தவர் இலட்சுமி. கணவர்கள் பலர் தடம்புரல்வதற்கு மனைவிகளின் ஆடம்பர 'மோகமே' ஒரு முக்கிய காரணம்! ஆடம்பரத்தில் ஈடுபாடு இல்லாத மனைவி அமைவது மிகப்பெறும் பேறு.

துணிமணிகள், நகைகள் போன்றவற்றில் பெண்களுக்கு நாட்டம் இருப்பது இயற்கைத் தவறு என்றும் சொல்ல முடியாது. ஆனால் கொள்கைத் திறனுடன் அறவாழ்வு வாழ்பவருக்கு ஆடம்பரத் துணிகளும், பளபளக்கும் அணிகலன்களும் தேவையில்லை!

இதற்கெல்லாம் எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டியவர்தான் 'இலட்சுமி' நந்தாஜி. நந்தாவின் சொல் முக குறிப்புகளை கொண்டு குடும்ப பாரமே என்னவென்று தெரியாமல் நந்தாவிற்கு துணையாக செயல்பட்டார். இவர் இருந்த வரையில் நந்தாவின் 'இல்லற விளக்கு' ஒளிவிட்டு கொண்டிருந்தது. இவர் இறந்த பிறகு நந்தாவின் இல்லறம் இருண்டு விட்டதென்றே சொல்லலாம்.

**விடுதலை வேட்கை**

நாட்டில் நடக்கும் அவலங்கள் நந்தாவை பெரிதும் பாதித்தது. அந்நியர் ஆட்சியில் அனைவரும் அடிமையாய் இருப்பது அவர் அடிமனதை ஆட்டிப்படைத்தது. மன அலைகளில் ஆட்பட்டிருந்தார். சௌபாத்தி கடற்கரையில் ஓர் இரவு முழுவதும் ஆழமாக



யோசித்தார். உறங்கவில்லை, ஏன் உணவும் உட்கொள்ளவில்லை! விடுதலை வேள்வியில் தன்னை அர்ப்பணித்து கொள்வதேன்று தீர்மானித்தார். அவர் மனம் அமைதி கொண்டது. இது குறித்து அவர் தம் வார்த்தைகளில்....

ஆற்றல் மிக்க உந்து சக்தி என்னை ஆட்கொண்டது. அதன் ஆதிக்கத்திற்கு கட்டுப்பட்டேன். உள் மனதின் பேராசையைக் கேட்ட பின் அமைதியானது. பேராசை என்றால் ஒலிக் குவியல் மட்டும் அல்ல. அது உள் மனசிந்தனையின் குவிமையமும் ஆகும்.

முடிவுக்கு வரும்முன் முரண்பாடான சிந்தனைகள் முட்டி மோதின! 'திக்குத் தெரியாத காட்டில் தவிப்பதுப் போல நான் தடுமாறினேன். மனைவி மற்றும் மக்கள் வாழ்க்கைக்கு வழி செய்யாததால் தயக்கம் தலைவிரித்தது!' ஆனால் மக்கள் நலமே வென்றது...!

நாட்டிற்குத் தொண்டு செய்ய காலம் கிடைப்பது அரிது, அது கிடைத்திருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தை விட்டு விட்டால் சரித்திரத்தில் சாபம் பெற்றவனாக ஆவேன், என்று உணர்ந்தேன்.

www.TheMagnet.com




நிர்மலமான விடியல்வேளையில் என் உள்ளத்திலும் விடியல் ஏற்பட்டது. சந்தேகங்கள் கரைந்து போக, கேள்விகள் அழிந்து போக, அவநம்பிக்கை வீழ்ச்சியை அடைந்தது. குழப்பம் முடிவான தீர்மானமாக முடிச்சூடி கொண்டது!

காந்திய வழியில் வாழ்க்கை பயணத்தை தொடர முடிவெடுத்தேன்.....

**பன்முகப்பார்வையாளர்**

ஓர் தலைசிறந்த சிற்பி என்ற நிலையில் அவர் எண்ணாத எண்ணங்களே இல்லை! அவர் கைப்படாத துறைகளே இல்லை! தீர்க்கதரிசனம் என்னும் முன்பார்வை அவரின் முத்தாய சிறப்பு....!

தொழிலாளர் முன்னேற்றத்திற்காக அவர் வித்திட்டது தான் ஐ.என்.டி.யூ.சி இதை முழு மூச்சாக செயலற்றுவதற்காக தன் முழு முயற்ச்சியையும் செலவழித்தார். "திட்டமிடல்" அவருக்கு தெவிட்டாத தேன்! நாடு இன்று என்பதை விட நாளை என்பது அவர் முழு மூச்சு. ஆனால் இன்றோ நாட்டில் இது பற்றியது இல்லை பேச்சு! "பற்றாக்குறை தான்" இன்று பார்க்கும் இடமெல்லாம். திட்டமிடுதல் என்னும் எண்ணத்தையே இழந்து நிற்கிறோம். மின்சாரம், எரிசக்தி, நீர், கனிமங்கள், சுற்றுச்சூழல் போக்குவரத்து, மருத்துவம், கல்வி இப்படி எந்த துறையில் திரும்பினாலும் பற்றாக்குறை தான் ஒரே குறையாக தெரிகிறது. இதை தவிர்க்கத்தான் நந்தா "திட்ட ஆணையம்" தீர்மானித்திருந்தார்.

நந்தா மக்களுக்கு நாட்டுணர்வும், தொண்டு மனப்பான்மையும் கொண்டு அரசின் கொள்கைகளை மக்களுக்கு சேர்க்க வேண்டும் என்று முழு மூச்சாய் உருவாக்கியது தான் "பாரத் சேவக் சமாஜ்".

எழுத்தாளராக அவர் ஆற்றிய பணிகள் சிறப்பு மிக்கதாகும். சீக்கியர்களின் குருவான 'தேஜ் பகதூரின்' வாழ்க்கை வரலாறு நூலும், கதரின் சிறப்பையும் ஒரு நூலில் வடிவமைத்துள்ளார். நாம் எல்லாம் ஒருநாள் குறிப்பிற்கே தாளம் போடும் இன்னாளில் ஒவ்வொரு அறைக்கும் ஒரு நாட் குறிப்பை கொண்டிருந்தார்!

மதுவிலக்கு, அதிகாரப் பரவுதல், இந்துமத ஈடுபாடு, கூட்டுறவு பதுக்கல் அழித்தல், ஊழல் ஒழிப்பு, தேர்தல் சீர்திருத்தம், குடும்பக் கட்டுபாடு, சமூக நல்லிணக்கம், விவசாயம், பசுவதை தடுப்பு, கலைசார் வளர்ச்சி, கீதையில் ஈர்ப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு இப்படி இவர் கைப்பட்டு விளங்கிய துறைகள் ஏராளம்! ஏராளம்!!

போராட்டங்கள் அவரை பக்குவப்படுத்தியது. எந்நிலையிலும் நிதானம் இழக்காமல் வாழ்ந்திருந்தார்.

குல்சாரிலால் நந்தாவின் செம்மையான செயல்பாட்டை நான் நன்கறிவேன். குறுகிய ஆதாயத்துக்காக குழப்பம் விளைவிப்பதை போல தவறான தகவல்களைத் தருவதையோ அவர் விரும்பமாட்டார். நல்ல காரியத்தை நல்வழியிலேயே நிறைவேற்ற வேண்டும் என்பதில் அவருக்கு முழுநம்பிக்கை உள்ளது. புள்ளி விவரங்களை அவர் திரித்து வெளியிடுகிறது என்பதை ஏற்க முடியாது. அறவழியில் இருந்து சற்றும் பிறழாமல் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அவர் மீது அள்ளி வீசப்படும் அவதூறு விரைவிலேயே காணாமல் போய்விடும் என்பது உறுதி! இப்படி அண்ணலின் 'வைர வரிகள்' நந்தாஜிக்கு முடிச்சூட்டின. ●

# இராமாயண மேளா

நாம் வாழ்க்கையில் ஒரே இடத்தில், ஒரே மாதிரியான மக்களுடன் மட்டும் வாழ்ந்தால் நல்ல அனுபவங்கள் ஏற்பட வாய்ப்பில்லை. அதனால் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் பயணம் செய்யப் பழகினால் வெவ்வேறு இடங்களிலுள்ள மக்களைக் காணும் வாய்ப்பு ஏற்படும்.

2003ம் ஆண்டு நாங்கள் சென்ற தேசிய, கலாசார பயணத்தை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகிறேன். நீங்களனைவரும் சோஷலிஸ்ட் கட்சியின் பெருந்தலைவராயிருந்த திரு. ராம்மனோகர் லோஹியா பற்றி அறிந்திருப்பீர்கள். அவருக்கு திடீரென ஓர் அருமையான யோசனை தோன்றியதாம். ஆண்டுதோறும் சிவராத்திரியை ஒட்டி ஐந்து தினங்கள் ஒரு மேளா நடத்த நினைத்தார். நம் நாட்டில் பல மொழிகள் பேசுவோர் இருந்தாலும் எல்லா மொழியிலுமே இராமாயணம் எழுதப்பட்டுள்ளது. அனைவருமே இவற்றிலுள்ள அடிப்படை கருத்துகளில் நம்பிக்கை வைத்துப் போற்றி வருகின்றனர். அதனால் "சித்திர கூடத்தில்" இராமாயண மேளா நடத்தி அதன் மூலம் அனைத்து மாநில மக்களையும் ஒருங்கிணைக்க அவர் எண்ணினார். எத்தனை அருமையான யோசனை!

அதனால் அவர் வாழ்ந்த காலத்திலேயே அதற்கு செயல் வடிவம் கொடுத்தார். இதற்காகும் செலவுகளைப் பொதுமக்களும் மத்திய பிரதேச உத்திரபிரதேச அரசாங்கமும் மேற்கொள்கின்றன.

அவ்விழாவிற்கு ஏற்பாடு செய்தவர் தென் மாநிலத்தலைவர் வைணவக்கல்லூரி இந்தி விரிவுரையாளராயிருந்த **திரு. சேஷன்** அவர்கள். அவரோடு 13 பேர் அடங்கிய எங்கள் குழு சென்னையிலிருந்து 29.03.2003 அன்று மதியம் சங்கமித்திரா எக்ஸ்பிரஸில் புறப்பட்டது. இரவு 9.30 மணிக்கு சதனா அடைந்து அங்கிருந்து 11.00 மணியளவில் சித்ரகூடம் செல்லும் வண்டியைப் பிடித்தோம். இடார்சிபோய், பின் மறுநாள் இரவு 2.30 மணிக்கு சித்ரகூடம் சென்றடைந்தோம். புகைவண்டி நிலையத்திலிருந்து எங்களை அழைத்துச் செல்ல வண்டி வந்திருந்தது. நாங்கள் தங்கிய சீதாபுர் பயண விடுதி மிகவும் வசதியாயிருந்தது.



பா. பாலதிரிபுரசுந்தரி

சிவராத்திரி அன்று நாங்கள் அன்னை சீதா நீராடியதாகக் கூறப்படும் ஜானகி குண்டத்தில் நீராடினோம். மந்தாகினி நதியில் இரவு நேரத்தில் படகில் சென்றோம். வழியில் கரையிலிருந்த சிவலிங்கத்திற்கு பாலாபிஷேகம் செய்து மலரிட்டு வணங்கினோம். பாடிக் கொண்டே படகில் பயணித்தோம். தீபமேற்றி நதியில் விட்டு, நித்ய சுகம் வேண்டினோம்.

அவ்விடத்தில் இயற்கைச் சூழ்நிலை மிகவும் அருமை. சில இடங்களில் பாறைகளிலிருந்து நீர் வீழ்வது கண்ணுக்கு இனிய காட்சியாயிருந்தது. நதியின் இருபுறமும் பச்சைப்பசேலென்று தாவர இனங்கள் கண்களுக்கு விருந்தாயிருந்தன. எங்கும் எதிலும் இயற்கை அன்னையின் எழில்.

நாங்கள் சென்றது 30வது ஆண்டு இராமாயண விழா. **'வால்மீகி நுழைவாயில்'** தான் முக்கியமான வாயில். பரம நாஸ்திகரான திரு. ராம்மனோகர் லோஹியா **"துளசி இராமாயணம்"** படித்த பின் தான் இவ்விழாவை நடத்த ஆரம்பித்தாராம். ஊரே விழாக் கோலம் பூண்டிருந்தது.

ஆண்களும், பெண்களும் மணிக்கணக்காய் அமர்ந்து நிகழ்ச்சிகளை கவனிக்கிறார்கள். இராம காதையில் தான் மக்களுக்கெத்தனை ஈர்ப்பு! மேடை முழுதும் சாது மகாத்மாக்கள். விழாத் தலைவர்கள், எங்களைப் போன்றோர் அனைவரும் அமர்ந்திருந்தோம். இங்கிருந்து சென்ற நாங்கள் கம்ப இராமாயணம் பற்றி இந்தியில் பேசப் போயிருந்தோம். நான் இராமாயணத்தில் பெண் பாத்திரங்கள் பற்றிப் பேசினேன். தெற்கிலுள்ள இலக்கியங்கள், இசை பற்றி கேட்க அவர்கள் விரும்பியதால் நான் 'பச்சை மாமலை போல் மேனி', தேவாரம் 'மாசில் வீணையும்', 'தோடுடைய செவியன்' இன்னும் இந்தி பஜன்ஸ் பாடினேன். எல்லோரும் விரும்பிக் கேட்டார்கள்.

பல பதிப்பாளர்கள், பத்திரிக்கையாளர், பற்பல பிரதேச மக்கள் வந்திருந்தனர். உத்தரபிரதேச கவர்னர் தலைமை தாங்கினார். இரவு இந்தியாவின் பற்பல மாநிலங்களிலிருந்து வந்த கலைஞர்கள் கிருஷ்ண, ராம லீலைகள், நாடகங்கள், நடனங்கள் இரவு 2.00 மணி வரை சிறப்பாகச் செய்த வண்ணமிருந்தனர். எல்லோருக்கும் ஐந்து நாட்களும் அங்கேயே உணவு வசதி செய்யப்பட்டிருந்தது.

2.03.03 அன்று காலை நீராடி, காலையுணவு உட்கொண்ட பின் ஊர் சுற்றிப் பார்க்கக் கிளம்பினோம். "ராம் காட்" என்பது மந்தாகினி நதியின் ஒரு படித்துறை. இங்கு இராமர் நீராடி தசரதருக்குத் தர்ப்பணம் செய்ததாய் கூறப்படுகிறது. சித்ரகூடப் படித்துறையில் சாது துளசிதாஸ் சந்தனம் அரைக்கையில்

www.TheMagnet.com







இரண்டு சிறுவர்கள் வந்து, அவரிடம் சந்தனம் இட்டுக்கொண்டனர். அப்பொழுது ஆஞ்சநேயர் கிளி வடிவில் வந்து அவர்கள் இருவரும் இராம - லக்ஷமணர் என்று கூற, துளசி தாஸர் அவர்கள் பாதங்களில் விழுந்து வணங்கியதாகக் கூறப்படுகிறது. அங்கு துளசிதாஸர் சிலை வைக்கப்பட்டுள்ள ஒரு சதுக்கம் உள்ளது. இராமரும் பரதனும் சந்தித்த 'பரத் மிலாப்' என்ற இடம் உள்ளது. இது பரதன் தன் தாய்மார்களுடனும் மந்திரி - பிரதானிகளுடனும் வந்து இராமனை நாடு திரும்புமாறு அழைக்க வந்த இடம்.

இங்கு 'காமத்கிரி' என்ற மலை உள்ளது. இராமன் நாடு துறந்த துயரம் தாங்காது அம்மலை பாறைகள் கூட உருகினவாம். அவை இன்றும் அவ்வுருகிய நிலையிலே உள்ளது. இதை தரிசித்து வலம் வரும் பக்திமான்களின் மனவிருப்பங்கள் நிறைவேறுவதாய் கூறப்படுகிறது. இங்குள்ள இறைவனின் பெயர் காமத்நாதர், காமதேனுவின் கணவராயிருந்து அனைத்துயிர்களின் வேண்டுகோளையும் நிறைவேற்றுபவர் காமத்நாதர்.

ஜானகி குண்டத்திலிருந்து சுமார் 10 கி. மீட்டர் தூரத்தில் 'ஸ்படிக சிலா' அமைந்துள்ளது. இக்கல்லின் மேல் ராமருடன் சீதை அமர்ந்திருந்தபோது தான் இந்திரனின் புதல்வன் ஐயந்தன் காக்கை வடிவில் வந்து சீதையைக் கொத்தியதாகக் கூறப்படுகிறது.

சதி அனுசூயா சீதையைக் கண்டு அளவளாவிய இடம் கண்டோம், மலைமேலுள்ள குகை யொன்றிலிருந்து இராமனின் பாதங்களைத் தழுவி புனிதமடைய கோதாவரி நீர் மலைமேல் இராமன் அமர்ந்திருந்த இடத்திற்கு வந்திருக்கிறது. இதை "குப்த கோதாவரி" என்று கூறுகிறார்கள். இங்கு இராமர் வந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. ஒரு குகை வில் வடிவிலுள்ளது. இடுப்பு வரை நீரில் குனிந்தவாரே உள்ளே சென்று பார்க்க வேண்டியுள்ளது. மூன்று வாயில்களில் முதலாவது வில் வடிவிலும் இரண்டாவது சர்ப்ப வடிவிலும் மூன்றாவது தர்பார் நடத்துவதற்கேற்றபடியும் அமைந்துள்ளன. இங்கு சதி அனுசூயாவின் சகோதரி தபசு செய்தாளாம். இங்கேயே இராமகுண்டம், லட்சுமண குண்டங்களும் உள்ளன. இந்த நீரோட்டம் அருகிலுள்ள அரச மரத்தடியில் மறைந்து விடுவதால் 'குப்த கோதாவரி' (மறைந்துள்ள கோதாவரி) எனப்படுகிறது.

இவ்விடம் கண்ணுக்கெட்டிய தூரம் குன்றுகளாலும் மலைகளாலும் பசிய வயல்களாலும் சூழப்பட்டுள்ளது. இன்னிசை லயம் மாறாதோடும் மந்தாகினி, நதியில் படகிலமர்ந்து பெண் மகளிர் ஏற்றி நீரில் விடும் தீபவரிசை, மனம் நிறைய மங்கள வேண்டுதல்கள். அசைந்தாடி நீரில் செல்லும் தீபவரிசையும் இயற்கைக் காட்சிகளும் அள்ளிப்பருகத் திகட்டாதவை.

3ந் தேதி மதியம் அவ்விடத்திலிருந்து பிரியா விடைபெற்று சென்னை நோக்கி பயணமானோம்.

***'உள்ளமெல்லாம் உன் நினைவே சுமந்து***
***ஊர் செல்ல வேண்டுமே என்று நினைந்து***
***ஒன்றுக்கும் உதவா இவ்வுடல் சுமந்து***
***ஓடோடி வந்தேன் மனம் மகிழ்ந்து'***


www.TheMagnet.com

# புனர்ஜென்மம்

மேம்பாலத்தில் பயணிப்பதென்பது சந்திரனுக்கு என்றைக்குமே அலுக்காத விஷயம். கீழே இரு மருங்கும் கூடவே வரும் சாலைகளும் மனிதர்களும் கடைகளும் கட்டிடங்களும் சக வாகனங்களும் சலிக்கவே சலிக்காத சுவாரசியக் காட்சிகள்! ரயில் பயணங்களின் ஜன்னலோர அனுபவம் தரும் பரவசத்துக்குச் சற்றும் சளைக்காத ரசனை அது. அன்றாடம் நடப்பதுதானென்றாலும்..! அன்றும் அவன் வண்டி பாலம் ஏறியதும் அதே மன நிலை தான்.!. வண்டியைச் சற்று மெதுவாகவே செலுத்த வேண்டியிருந்தது. ஞாயிறன்று கூட வீதிகளில் சாரி சாரியாய் வாகன அணிவகுப்புகள் விளைவித்த நெரிசல்!

" வீட்டில் இருப்பது வாரத்தில் ஒரு நாள்..விடிந்ததுமே கிளம்பிடணுமா..ஆற அமர சாயங்காலமா போனா என்ன.. உங்க பிரெண்டுக்கு காலையிலேயே அப்பாயின்ட்மெண்ட் குடுத்தாகணுமா..?"

" அலாரம் வைத்து ஐந்து மணிக்கே கிளம்பிட்டாப்பல இல்ல இருக்கு நீ பேசறது. மணி பத்தாச்சு.. தெரியுமா? தனசேகருக்கு சாயங்காலம் வேற ஏதோ வேலையிருக்காம். அதுவுமில்லாம அந்த நேரத்தில் ரோட்ல



www.TheMagnat.com

வண்டி ஓட்டறதுங்கறது... அம்மாடியோவ்! தினம்தான் இருக்கவே இருக்கு அந்த அவஸ்தை. இதோ வந்துடறேன்.. பிள்ளைங்க இன்னிக்கு ஒரு நாள் டிவி பார்க்கட்டும..விடு. அதுகளைத் திட்டாதே பாவம்."

"சரி.. கிளம்புங்க! சீக்கிரமா வந்துடுங்க.. எவ்வளவு சொன்னாலும் கேக்காம அப்பா வரட்டுன்னு அதுங்க பசியோட காத்துக் கிடக்கும். நானுந்தான்!.. விசுவநாத பாகவதரிடம் நைச்சியமாய் ஏதோ பேசி காரியத்தைச் சாதிச்சிடுவீங்கன்னு உங்க பிரெண்ட் நம்பிட்டிருக்காப்பல.அது எப்படியோ. நம்ம அசலியை அவரிடம் பாட்டு கத்துக்க சேர்த்து விட்டிருக்கலாம்"

"என்ன திடீர்னு பொண்ணு பாட்டு கத்துக்கணும் ஆசைல்லாம்..?.." இல்ல..எந்த வழியிலாவது அவருக்கு நம்மாலான சின்ன உதவி செய்யலாமேன்னா....அதனால் பெரிசா என்ன ஆகப் போறது அந்தப் பெரியவருக்கு பாவம்... சரிநேரமாச்சு."

அது வரை நத்தையாய் இருந்த வாகன நகர்வு இப்போது சுத்தமாய் நின்றே விட்டது. மாலை நேர நெரிசல் குறித்து கங்காவிடம் வாய் கிழியப் பேசியது நினைவில் நகையாடியது. தனசேகர் தனக்காகக் காத்திருப்பான். நம்பிக்கையுடன் காத்திருப்பான். அவனுக்கு தன்னால் எவ்விதத்தில் உதவ முடியும்? விசுவனாதன் சாரின் மென் வன்முறையை எவ்வாறு எந்த ஆயுதத்தால் முறியடிக்கலாம். தனா ஏகத்துக்கு நம்பிக் கொண்டிருக்கிறானே.. அவன் பக்க நியாயத்தை விரிவாய் எடுத்துச் சொல்லி அவருக்குப் புரிய வைக்க.. சற்று வன்மையாகவும் உரையாட இவ் விஷயத்தில் சம்பந்தமேயற்ற மூன்றாம் மனிதத் த்லையீடு பயன்படக் கூடும் எனும் அவன் முட்டாள்தனமான எண்ணம்..!

இவ்வளவு மனிதர்கள். பேராச்சரியமாய் பெரு நிசப்தம். பூ புரண்டால் கூடக் கேட்குமளவில்..!

" என்னால் முடிந்த வரை போராடிப் பார்த்துட்டேன். நயமாகவும்.பயமாகவும்..இன்னும் என்னென்னவோவாகவும்.! கெசறார் மனுஷன். என் பிரச்னையை அவர் புரிந்து கொள்ளவே முயற்சிக்காத பிடிவாதம்.."

"அது விம்போ முரட்டுத்தனமோ கிடையாதுடா..அவர் நிலைமை.."

"டேய்.டேய்.வந்து உதவுடான்னா நீ காரியத்தையே கெடுத்துடுவே போலிருக்கே."---------

" ஹலோ..சார்வண்டி ஓட்டும்போது போன் பேசினா ஃபைன் கட்டணும்னு ஞாபகம் இல்லையா ".கைப் பேசியைப் பிடுங்காத குறையாய் பாய்ந்தார் காக்கிச் சட்டைக்காரர்.

"ஓட்டும் போதுதானே.. பதினைந்து நிமிஷத்துக்கும் மேலாய் நடு ரோட்டில் வண்டி நின்னுட்டுதானே சார் இருக்கு"

".அந்தக் கதைல்லாம் வேண்டாம்... எந்த நேரத்திலும் டிராஃபிக் க்ளியராயிடும்.. ரெடியா இருங்க.."

www.TheMagnet.com

இப்போதைக்கு அது நடக்குமெனத் தெரியவில்லை. சாலையின் இப் பக்கத்திலும் எதிர் திசையிலும் எண்ணிக்கை கூடியிருந்த வாகனங்களுடன் இப்போது மனிதர்களும்..! சரேலென ஒரு எண்ணப் பாய்ச்சல் அவனிடம்... இத்தனை வாகனங்கள்.. இவ்வளவு மனிதர்கள். பேராச்சரியமாய் பெரு நிசப்தம். பூ புரண்டால் கூடக் கேட்குமளவில்..! சாரையாய் நீண்டிருந்த முன் வாகனங்கள் காத்த மௌனம் ஒட்டுவாரொட்டி போல் பின்னால் நிற்பவைகளிடமும் தொற்றிக் கொண்டாற் போல்!... ஏதோ விபரீதமாய்..என்ன அது..? விபத்தாஅப்படித்தான் இருக்க வேண்டும்நட்ட நடுச் சாலையில வேறு என்னவாக இருக்கவியலும் அதுதான்அதேதான்.குடும்பமா..

**சாந்தா தத்**

ஒற்றை ஆளா.மொபைல் பேசிக் கொண்டிருந்திருப்பாரா? அவன் சுபாவமான மேம்பால ரசிப்பும் விசுவனாத பாகவதரும் அவன் நினைவுகளினின்று முற்றாய் தொலைந்து போய்விட்டிருக்க.

வாகன வரிசை ஒரு மில்லி மீட்டர் போல் நகரகுறுக்கும் நெடுக்குமாய் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் போலீசின் நடமாட்டம் மட்டும் அதி வேகமாக.அவனும் வண்டியை நடத்தி.நகர்த்தி..நகர்த்தி கொச தூரம் வரை முன்னேறிய அங்கான வண்டிகள் சட்டென நின்று போய்மூச்சு விடக் கூட மறக்கும் தன்மையிலான ஸ்தம்பிப்பு.!.. மேம்பாலச் சுவரை ஒட்டினாற் போல்...ஒரு நாகம்..படம் விரித்த நிலையில்..ஆடாமமல் அசையாமல்விரிந்த .படம் விரிந்தபடியே! சன்னமான சத்தம் எழுந்தாலும் தவம் கலையும் மோனத்தில்! ஒஅதனால் தான் அப் பரபரப்புச் சூழலிலும் இயல்புக்கு மாறாய் மௌனம் காக்கும் ஜனம்..!.. பிள்ளைகளை "ஸ்டாச்சு" சொல்லி அப்படியே நிற்க வைப்பது போன்ற கோணத்தில் இருந்த அந்த நாகம் மௌனம் குலைக்கப்பட்டு கொத்தி விடுமோ அனும் ஆளைக் கொல்லும் பீதி! அவ்வளவு அச்சம் எனில் அங்கிருந்து கிளம்ப வேண்டியது தானே.நினைத்தவனும் அங்கேயே நின்றபடி!

இது எப்படி இந்த மேம்பாலத்தில்? புதர் புற்றுஇப்படி ஏதுமில்லாத உயரம்கீழே விழுந்து கிடக்கும் சாலைகளிலேனும் வீடுகள். கடைகள்கட்டாந்தரைகள் செடிகள்..கொடிகள் ..தொட்டிகள்தழைகள்....சமவெளிகள் .பாம்பு உயரம் ஏறுமா..ஏறும் போலத் தான் தெரிகிறது இதை இங்கு இப்படிப் பார்க்கையில்இல்லை.அப்படி இருக்காது.. அப்படியெனில் இங்கு யார் கொண்டு வந்து போட்டிருப்பார்கள்பாம்பாட்டியாபாம்பு பிடிப்பவனா. அதனருகில் அப்படி எவரும் தென்படவில்லையே? இக் காட்சி .இது போல் எங்கெங்கோ எத்தனையோ நிகழ்வு கண்டிருக்கலாம். ஆனால் அவனுக்கு இது புதிது.அதிர்ச்சியும் விந்தையும் பிரமிப்புமாய்..! பாம்பு படம் விரித்த போஸ்.. நகருங்க நகருங்க எனும் போலீசின் குரல் எழும்பாத கெடுபிடி.. மற்றவர்களைப் போன்றே அவனும் மனமில்லாது நகர்ந்தபடி. பயந்தபடி.வண்டியை அதி மெல்ல ஸ்டார்ட் செய்தாலும் துளியாவது சத்தம் வராமலிருக்காதே எனும் பதட்டத்துடன்முடிச்சு அவிழாக் குறுகுறுப்புடன்.

" ஏண்டா இவ்வளவு லேட்..?'காப்பி குடிமேலே போகலாம்.." தனசேகரன் துரிதப்படுத்தினான்

அவன் அவசரம் அவனுக்கு. தாமததத்தின் காரணம் அறிய விழைவற்றவனை வலுக்கட்டாயமாக உட்கார வைத்து " மேம்பாலத்தில் ஒரு பாம்பு " கதையைச் சொன்னான். இவ்வளவு பதட்டத்தில் இருப்பவனை அவசரப் படுத்தியிருக்க வேண்டாமென நொந்து கொண்டான் தனசேகர்

"..இத்தனை நாள் நடக்காதது ஒரு அரை மணி ஒரு மணி நேரத் தாமதத்தினால் குடி முழுகிப் போகாது. கொசம் ரிலாக்ஸ் செசுக்க" .

அவன் நினைவுகள் மேம்பாலத்து நாகத்தினின்று இடம் பெயர்ந்து இப்போது விசுவனாத பாகவதரிடம்..! " வாழ்ந்து கெட்ட" எனும் வழக்குக்கு ஏறக்குறைய தகுதியானவர் தான் பாகவதர். வளமுற வாழ்ந்த காலத்தில் அப்படியொன்றும் கொடி கட்டியெல்லாம் பறக்கவில்லையெனும் ஓரளவுக்கு வசதியும் செல்வாக்கும் அனுபவித்தவர். வாரிசுகளற்ற அவர் பிழைப்புக்கு அவர் வித்தை தான் கை கொடுத்தது. ஓரிரு பள்ளிகளில் பாட்டு வாத்தியாராக இருந்துகால வளர்ச்சியில் அதுவும் மறுக்கப்பட.வீட்டிலேயே சங்கீத வகுப்பு.இசை மீது இன்னும் ஆர்வம் குறையாத பெறறோரின் பிள்ளைகளுக்கு... கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாய் படிப்படியாய் அம் மாணவர்களின் எண்ணிக்கையும் குறைந்து..வீடு கொள்ளாச் சீடர்கள் இருந்தது போய் இப்போது விரல் விட்டு எண்ணக் கூடிய அளவில் மட்டுமே..! இந் நிலையில் தான் தனசேகருக்கும் அவருக்குமான டக் அப் வார் போன்ற பிரச்னை. தனசேகரின்

மூத்த சகோதரன் மகன்.ஊரில் பிளஸ் டு முடித்தவனுக்கு சென்னையில் பொறியியல் கல்லூரியில் அடுத்த கட்டக் கல்விக்கான பெரு வாய்ப்புஅவன் திறமையினால்!... அப் பையன் தனசேகர் வீட்டில் தங்கிப் படிப்பதாய் ஏற்பாடும் முடிவும். அதுதான் மூலவேர்மாடிப் போர்ஷனை விட்டுத் தருமாறு விசுவனாதத் தம்பதிகளிடம் முறையீடுவேண்டு கோள்!...இன்ன பிற. அவ்வளவு குறைந்த வாடகைக்கு நகரில் வீடு கிடைக்காதுவாடகை வீடாயினும் வாஸ்து நல்லபடி அமைந்துள்ள இடம்அதனால் தான் இந்த அளவுக்காவது வாழ்க்கை வண்டி விழுந்து எழுந்தாவது ஓடிக் கொண்டிருக்கிறது.

இதெல்லாம் பாகவதரின் பதில் முறையீடு! நாட்கள் தான் நகர்ந்தனவேயன்றி.. அவர் அந்த வீட்டை விட்டு நகர்வதற்கான அறிகுறியே இல்லைஅதனால் சாமான்களை எடுத்து வீதியில் எறிய முடியுமா. வயதில் பெரியவர்..மனைவி தவிர வேறு ஆதரவற்றவர்.! அண்ணனுக்கு சம்மதம் தெரிவித்தாயிற்று.இதோ அடுத்த மாதம் அவர் பையன் வந்தே விடுவான். அவன் வீட்டிலேயே எப்படியோ சமாளித்துக் கொள்ளவும் இயலாது.

நண்பனிடம்
கண்ணில்
நீர் வராத
குறையாய்
புலம்பித்
தள்ளிய போது...

வளர்ந்த பிள்ளைகள் மூவருடன் அவனும் மனைவியும்..! நண்பனிடம் கண்ணில் நீர் வராத குறையாய் புலம்பித் தள்ளிய போது பெரிய கிருஷ்ண பரமாத்மா போல் அவனுக்கு ஆறுதல் வார்த்தைகளால் அபயம்."''' நான் பேசிப் பார்க்கிறேன்" !--- ..இரண்டு மூன்று நாட்களாய் சோறே கண்ணில் படாதவனுக்கு ஒரு ரொட்டித் துண்டு கிடைத்தாற் போன்ற ஆசுவாசம்....அந் நிமிடத்தனின்று நச்சரித்துஇதோ வந்திருக்கிறான் ஆபத் பாந்தவனாய்.!இது அப்படியொன்றும் பெரிய உபாயமில்லைதான். முரட்டுத்தனம் இயலாத இடத்தில் வெறும் வார்த்தைகள் வர்ண ஜாலங்கள் காட்டி வலிய ஆயுதங்களாகவுமாகி சாதிக்கலாம்பார்க்கலாம் ..

----" அள்ளி அணைக்கையிலே என் ஆவி சிலிர்க்குதடி." இரு சிறுமிகளின் ஒரு குரலில் இனிமையாய் இணைந்த பாரதியின் வரிகள் மாடிப் படிகள் ஏறுகையில் அவர்கள் செவியை. மனதையும் நிறைத்தபடி

" வாங்க வாங்க. .." பாட்டு கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்த விசுவனாதன் இருக்கையை விட்டு எழுந்து வரவேற்றார்.

" அடடாஎன்ன சார் இதுஉக்காருங்க. இவன் என் ஃபிரெண்ட் சந்திரன்."

' அப்படியா..வாங்க தம்பி. உங்களைப் பற்றி இவர் நிறையச் சொல்லியிருக்கார். உங்களைப் போல் உண்மையான சிநேகம் இந்தக் காலத்தில் எங்க கிடைக்கறது.. உக்காருங்க"------அச் சிநேகத்துக்காகத் தானே உங்களைத் தொல்லைப் படுத்த வந்திருக்கிறேன்.சங்கடத்துடன் மனதில் நெளிந்தான் சந்திரன்.. எளிமையான வரவேற்பறையின் சுவரோர மூலையில் போர்த்தி வைக்கப்பட்டிருந்த தம்பூரா.. அவர் முன் சின்னதாய் சுருதிப் பெட்டி. சுற்றிலும் அலமாரிகளில் வரிசையாய் கேடயங்கள். சதுரச் .சட்டங்களில் சிறை பட்ட சான்றிதழ்கள்.விருதுச் சின்னங்கள்பெருங்காய டப்பா மணமாய் எசிய திறமை ஆங்கீகாரங்கள்!! அவை அனைத்தும் அவரின் ஒரு காலக் கீர்த்திக்கான அடையாளங்களாய்..அப் பெருமிதம் அவரை விட்டு நீங்காததுபோல் அவர் முகத்துக் கம்பீரம்.வயோதிகச் சிங்கம் போல்..!

"சின்னசிறு கிளியே."..சிறுமிகள் நிறுத்தாமல் பாடியபடியே..இப்போது சற்று சன்னக் குரலில்.

" நல்லாத் தான் காலம் போய்ட்டிருந்தது நான் தான். முட்டாளா இருந்துட்டேன். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்னு சொல்வாங்களே அதனோட தாத்பரியம் கூட மனதில் உறைக்கலே. இல்லன்னா சொந்தமா ஒரு வீடு கூட இல்லாம இப்படி நின்னிருப்போமா.. அடடா.இப்பவும்

முட்டாளாத்தான் இருக்கேன் பாருங்க. முன் பின் தெரியாத உங்களிடம் என் புராணத்தைப் புலம்பிட்டிருக்கேனங்கறதால் இல்லே. அதெல்லாம் உங்களிடம் இவர் சொல்லாமலா இருந்திருப்பார்.. வீடு தேடி வந்தவங்களிடம் குடிக்க தண்ணி வேணுமான்னு கூட இன்னும் கேட்கலே பாருங்க. ராஜிம்மா..! " அவர் அத்தனை அருமையாய் அழைத்த அவர் மனைவி மோரும் நீருமாய் வந்தார். அவர் முகத்திலும் அதே கம்பீரம்தேஜஸ்

அப் பாட்டு முடிந்து சிறுமிகள் அவர் முகத்தைப் பார்க்க..

" நாங்க போகட்டுமா சார்னு தானேஉங்க டைம் இன்னும் முடியல நேற்று சொல்லிக் கொடுத்த பல்லவியை வீட்டில் பிராக்டிஸ் பண்ணச் சொல்லியிருந்தேனே..எங்க பாடுங்க பார்க்கலாம்"

வந்த வேலையைப் பாருடா எனும் விதமாய் தனசேகரன் அவன் கையைப் பிடித்து அழுத்தி சமிக்ஞை கொடுக்க...எப்படி ஆரம்பிப்பது எந்தப் புள்ளியிலிருந்து என இவன் குழம்ப

" நாதர் முடி மேலிருக்கும் நல்ல பாம்பேஉனக்கு நல்ல"

சிறுமிகளின் சேர்ந்திசை குரலில் குழைந்த புன்னாகவரளி ராகம் செவியைத் தீண்ட கீழே விழ்ந்து விடாத குறையாய் தூக்கிவாரிப் போட்டது அவனுக்கு. மனப் படுகையில் அந்தப் படம் விரித்த மேம்பாலத்துப் பாம்பு விழிகளை அடைதது்க் கொண்டு.. தன்னையுமறியாது சுற்றிலும் பார்வையைச் சுழல விட்டபடி. அது வரை நினைவுகளினின்று சுத்தமாய் மறைந்திருந்த நாகம் மீண்டும் தலை தூக்கி.....இது தற் செயல்தானென்றாலும் ஏன் இப்படி அது தன்னை விடப்பிடியாகத் துரத்தியபடி. அவன் அங்கு வந்த காரணத்திற்கும் இதற்கும் எத் தொடர்பும் இல்லையே.

"ஆடு பாம்பேவிளையாடு பாம்பே.!-" ..தம் பாட்டுக்குப் பாடிக் கொண்டிருந்த அப் பெண்களை நோக்கி போதும் நிறுத்துங்கள் எனக் கத்த வேண்டும் போல் ஒரு அர்த்தமற்ற ஆத்திரம். அப்போது விசுவனாதனே சொல்லிவிட்டார்அன்றைக்கு அது போதும்வீட்டில் பாடிப் பார்த்துக்கங்க என.

**அவளை ஆச்சரியமாய் பெருமிதமாய் நோக்கினான் அவன். எதுவும் பேசாது அவள்...**

தனசேகரன் மறுபடி மௌனக் குரல் கொடுக்கு முன்.. மனக் குழப்பங்களை மூலையில் தள்ளி மெள்ளப் பேச்செடுத்தான்..

"..சார்அது வந்து.. இவன்..தனா."

" ஒரு நிமிஷம் தம்பி.. நான் சொல்லிடறேன். இவருடன் நீங்க வந்த போதே இதுவாகத்தான் இருக்கும்னு..எதனாலன்னு தெரியலே.. எனக்குள் ஒரு யூகம்.! என்னிடம் பேச உங்க ஃபிரெண்ட் எவ்வளவு சங்கடப்பட்டிருந்தா உங்களை இங்க கூட்டிட்டு வந்திருக்கணும். அவ்வளவு அவசியம் ஏற்பட்டிருக்கு அவருக்கு.! போடா வெளியேன்னு சாமாங்களைத் தூக்கி வீதியில் எறிய இல்ல வேற ஏதாவது வழியை அவர் முயற்சிக்கறதெல்லாம் விட்டு.. உங்களுடன் வந்திருக்கார். என் சிரமத்தையெல்லாம் எடுத்துச் சொன்னேன். முக்கியமா பெரும் தொகையா அட்வான்ஸ் கேட்பாங்க. சரிஎன் கஷ்டங்கள் இருக்கட்டும்..மேற் கொண்டு.. நீங்களும் என்னிடம் மன்றாட வேண்டாம் அடுத்த மாசத்துக்குள்ள வேற வீடு பார்த்துக்கறேன்.. பையனை அனுப்பச் சொல்லி உங்க அண்ணனிடம் உறுதியாச் சொல்லிடுங்க.நான் பேச்சு தட்ட மாட்டேன்.." அவர் தீர்மானம் முகத்திலும் தெறித்தாலும் கம்பீரமும் கனிவும் அப்படியே

" தேங்க்ஸ்டா.."வண்டியை ஸ்டார்ட் செய்த போது மறுபடியும் சொன்னான் தனசேகரன்.

" இதோட மூன்றாவது தடவை நான் எதுவுமே செய்யலயேடா.ஒரு வார்த்தை கூடப் பேசல ..சரி...அதுக்குள்ள அந்தப் போர்ஷனில் ஏதாவது ரிப்பேர் இருந்தா பண்ணிடு.."

அந்த மேம்பாலத்தில் எப்போதும் போல் சுறுசுறுப்பான இயக்கம்.ஓரிரு மணி முன்பு அங்கு ஓர் அரவம் வெகு கம்பீரமாய் காட்சிப் பொருளாய் கிடந்த சுவடே இன்றி,,..! அது என்னானதுஏதானது.யாரைக் கேட்பதுஎப்படித்தெரிந்து கொள்வதுஅந் நாகம் இப்போது பார்வையில் இல்லாவிடினும் அதற்குப் பிடித்த..பாகவதர் வீட்டில் கேட்க நேர்ந்த அந்தப் புன்னாகவரளி ராகம் மட்டும் செவிகளில் ரீங்காரித்தபடியே..

வீடு வந்து சேர்ந்தது தான் தாமதம்.

" என்ன நடந்து தெரியுமா கங்கா."

" என்ன நடந்திருந்தாலும் முதலில் சாப்பாடு. அப்புறம் தான் மற்றதெல்லாம். பிள்ளைங்க காத்திட்டிருக்காங்க பாவம்"

" நீயும் தான்னு சொல்லறது.."

டுசரிநானுந்தான்வந்து ட்காருங்க'

சாப்பாட்டுக் கடையும் பாம்புக் கதையுமாய் முக்கால் மணி நேரம் போல் கடந்து சற்று படுக்கலாமெனக் கட்டிலில் சரிந்த போது எதிரில் சுவர் காலண்டர் பரமசிவன் கழுத்து நாகம்..சரேலென எழுந்து உட்கார்ந்தான்.

விஷயத்தை ஊகிப்பது அப்படியொன்றும் சிரமமானதாக இல்லை கங்காவுக்கு. " சர்வ சாதரணமான ஒரு சின்ன விஷயம்இதுக்குப் போய் இப்படி அப்செட் ஆயிட்டா எப்படி..?"

"அதில்ல கங்கா ஒண்ணுகொண்ணு சம்பந்தமில்லன்னாலும் மனசு குழம்பிக் கிடக்கு. அந்தப் பெரியவர் முகம் கண்ணை விட்டு அகல மறுக்குது ..எந்த ஆதரவுமற்ற மனிதர். வீடு காலி செய்யக் காரணமா இருந்தட்டனேன்னு உறுத்தலா இருக்கு.. இந்தப் பாம்பு வேற என்னைத் துரத்திட்டே.."

"அட.என்ன நீங்க ..தெரிந்து தான் பேசறீங்களா..உங்க ஃபிரெண்ட் கேட்டுக் கொண்டதால்தானேஅதுவும் நீங்க ஒரு வார்த்தைன்னா ஒரு வார்த்தை பேசலன்னும் சொல்றீங்க வேற..மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடாமல் பேசாம ரெஸ்ட் எடுங்க நாக பசமி பண்டிகை நெருங்கிட்டிருக்கில்ல அதானலதான் இப்படி.பாம்புத் துரத்தலா இருக்கு.."

" .. என்ன நீ அதெல்லாம் உன்னோட நம்பிக்கை எங்கிட்ட கொண்டு வராதேஎன்



ஆசிரியை: நான் மிகவும் அழகாக இருந்தேன். இது என்ன காலம்?

மாணவி: இது கடந்த காலம் டீச்சர்.

- சரவெடி ஸ்ரீதர்

பிரமையெல்லாம் சைக்காலஜி சம்பந்தப்பட்டது"

" ஆமாம்பெரிய சைக்காலஜி என்னங்கஉங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா.யானை போல் பாம்பும் பகை பிடித்தால் சும்மா இருக்காதாம்ஆனால் நீங்க தான்அந்தப் பாம்பை எதுவும் செய்யலயே?" அவளே கேள்வியும் பதிலுமானாள்

"இப்ப உன் நான்ஸென்ஸை நிறுத்தப் போறயா இல்லையாஉன் கோணத்திலயே நச்சரிச்சுக்கிட்டிருக்கே"


சில கணங்கள் போல் சும்மா கங்கா..

" என்னங்க.ஒரு யோசனை. என்னோட நம்பிக்கையோ. உங்க வாதமோ..மாடிப் போர்ஷன் இப்ப காலியாத்தானே கிடக்கு. ஊரில் நிலம் நீச்சு சொந்த பந்தம்னு உங்க அப்பா அம்மா இங்க வர்றதுக்கே கஷ்டப்பட்டு எப்பவோ ரெண்டு மூணு வருஷத்துக்கொரு தடவை வந்து தலை காட்டறாங்க. அப்ப பார்த்துக்கலாம்.. அந்தப் பெரியவரை நம்ம வீட்டில் குடி வைக்கலாமா? அட்வான்ஸ் எதுவும் வேண்டாம்.. கொடுக்கற வாடகை கொடுக்கட்டும்என்ன சொறீங்க..?"

அவளை ஆச்சரியமாய்பெருமிதமாய் நோக்கினான் அவன். எதுவும் பேசாது அவள் கையைப் பிடித்துக் கொண்ட அழுத்தத்தில் நன்றிகளைக் கொட்டினான்.. விசுவனாத பாகவதர் மாடியில் குடியேறிய பின் அப் பெண்கள் பாடிய அந்த ராகத்தை அவரே பாடிக் கேட்கும் சசாரத்தில் அக் கணங்களில் அவன். ●

www.TheMagnar.com

# நினைவு நல்லது வேண்டும்



பாரதியார் பராசக்தியிடம் வேண்டுகிறார்.

*எண்ணிய முடிதல் வேண்டும்*
*நல்லவை எண்ணல் வேண்டும்*
*திண்ணிய நெஞ்சம் வேண்டும்*
*தெளிந்த நல் அறிவு வேண்டும்*

பாரதியார் நம்பிக்கையுடனும், நல்ல அன்புடனும் பராசக்தியை வேண்டிக் கொண்ட பிறகு அம்பிகை இஃற்றை அருளாமல் இருப்பாளா

காளிதேவி கடைக்கண் வைத்தாள். கவியரசருக்கு கேட்டது எல்லாம் கிடைத்தது. அதன் பிறகு அவர் என்ன பாடுகிறார் தெரியுமா?

*எடுத்த காரியம் யாவினும் வெற்றி*
*எங்கு நோக்கினும் வெற்றி மற்றாங்கே*
*விடுத்த வாய்மொழிக்கு எங்கனும் வெற்றி*
*வேண்டினேனுக்கு அருளினள் காளி*

இதிலிருந்து என்ன தெரிகிறது! நாம் கேட்பது, சிந்திப்பது அனைத்தும் நல்லனவாக இருத்தல் வேண்டும்.

நாம் கேட்பது எங்கே கிடைக்கப் போகிறது? நமக்கெல்லாம் அந்த உயர் பதவி எப்படிக் கிடைக்கும்? நம்மால் இந்தக் காரியத்தை எப்படிச் செய்ய முடியும்? நம் தலையில் கஷ்டப்பட வேண்டும் என்று எழுதி இருக்கிறது என்று நொந்து கொள்வதும், விரக்தியில் வெந்து போவதும், அடியோடு நம்மிடமிருந்து அகல வேண்டும்.

*எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்*
*திண்ணிய ராகாப் பெறின்*

என்கிறார் திருவள்ளுவர்.

என்னால் இதைச் சாதித்துக் காட்ட முடியும் இந்தக் காரியத்தை இந்த கால கட்டத்திற்குள் கட்டாயம் நான் முடிப்பேன் என்று நாம் நினைப்பவை எல்லாம் அதிக பூர்வ சிந்தனைகளாக இருந்தாலே நம் இலட்சியப் பயணம் பாதி முடிந்தது என்று பொருள்

பலர் ஆசைப்படுகிறார்கள் ஆனால் அதற்கான

செயலில் ஒரு சிறு முயற்சியும் செய்யாமல் எத்தகைய முனைப்பும் காட்டாமல் இருந்தால் இலட்சியம் எப்படி ஈடேறும்?

என்னால் இதை வெற்றிகரமாக செய்ய இயலும் என்ற முனைப்பும், வேகமும் கொண்டு நீ செயலில் இறங்கி விட்டால் ஆடையை நன்றாக இறுக்கிக் கட்டிக் கொண்டு ஆண்டவனே உனக்குத் துணை நிற்பான் என்று அழுத்தம் திருத்தமாக உரைக்கிறார் வள்ளுவர்.

***குடி செய்வல் என்றும் ஒருவற்குத் தெய்வம்***
***மடி தற்றுத் தான் முந்துறும்.***

என்னால் முடியாது என்பது கோழைத்தனம்.

என்னால் முடியுமா என்பது அவநம்பிக்கை.

என்னால் முடியும் என்பது நம்பிக்கை.

என்னால் தான் முடியும் என்பது ஆணவம்.

நம்முடைய ஆழ்மனம் ஒரு வளமான நிலம் போன்றது. வெற்றிகரமான நல்ல எண்ணங்களை நம்பிக்கையுடன், எதிர்பார்ப்புடன் பதிக்கும் போது எண்ண மாகிய விதை முளைத்துச் செடியாகி மரமாகி நம் நல்ல நினைவுகளுக்கு ஏற்ப கனிகளைத் தந்தே தீரும் என்பது உளவியல் நிபுணர்கள் தருகின்ற உத்தரவாதம்.

கவிஞர் ஒருவர் பாடுகிறார்.

***எண்ணம் தான் உன் எதிரே தெரிகிறது நெஞ்சின்***
***வண்ணம் தான் உன் வாழ்வே விரிகிறது.***

எதிர் மறைச் சிந்தனைகளிலேயே இருண்டு போகாமல் முடியாது என்பதே கிடையாது என்னும் உடன் பாட்டு எண்ணங்களுடன் நம் உள்ளம் எப்போதுமே இயங்க வேண்டும்.

எண்ணம் தான் செயல் ஆகிறது. செயல் பழக்கம் ஆகிறது. பழக்கம் வழக்கம் ஆகிறது. வழக்கம் நம் வாழ்க்கையை உருவாக்குகிறது.

நாளை அதிகாலை நாலரை மணிக்கு நான் படுக்கையை விட்டு எழுந்து விடுவேன் என்று உறுதியாக உங்களுக்கு நீங்களே கட்டளை இட்டுக் கொண்டுப் படுத்துப் பாருங்கள். அடுத்த நாள் அலாரம் அடிப்பதற்கு முன்பே நீங்கள் எழுந்து விடுவீர்கள். அதற்குப் பிறகு தினசரி நாலரை மணிக்கு மேல் உறக்கம் வராது. தினசரி அதி காலைத் துயில் எழுதல் பழக்கம் ஆகி அதுவே உங்கள் வழக்கம்

ஆகும். வாழ்க்கையை நிர்ணயிக்கும்.

நினைவு நல்லதாக இருந்தால் பார்க்கும் அனைத்துமே அதற்கேற்ப பரி பூரணமாகவே காட்சி தரும்.

நம் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தன் சொற் பொழிவு ஒன்றில் குறிப்பிடுகிறார்.

நண்பர்களே ஒரே பொருளைப் பார்ப்பதற்கு தனித் தனி பார்வைகள் இருக்கின்றன. ஒரு பாத்திரத்தில் பாதி அளவு நீர் இருந்தால் உடன்பாடான எண்ணம் உள்ளவர்கள் பாதி அளவு நீர் உள்ளது என்பார்கள். எதிர் மறை எண்ணம் உடையவர்களோ பாதி பாத்திரம் காலி என்பார்கள். நான் இந்த இரண்டிலிருந்தும் வேறு பட்டவன். என்னுடையது மூன்றாவது வகையான சிந்தனை. அதாவது இந்தப் பாத்திரம் பாதி நீரினாலும், பாதி காற்றாலும் நிரம்பியுள்ளது என்பேன். நம் மனத்தின் எண்ணங்கள் தான் புற உலகின் காட்சிகளை நிகழ்ச்சிகளை நிர்ணயிக்கின்றன.

ஜென் ஞானியிடம் வந்த ஒருவர் சொன்னார்

தாங்களைக் காண வந்த நான் ஒன்றுமே கொண்டு வரவில்லை.

அதை வெளியில் எறி.

எதை?

ஒன்றுமே கொண்டு வரவில்லை என்ற எண்ணத்தை

நினைவுகளின் கனம் இப்போது நிருபணம் ஆகியிருக்குமே

ஒருவருடைய வாழ்வு அவருடைய மனத்தின் நினைவு நலத்திற்குத் தக்கவாறு தான் அமையும்.

மனம் ஒரு கத்தி போன்றது. மாம்பழம் அறுக்கவும் உதவும். பிறரைக் காயப்படுத்தவும் கத்தியால் இயலும். தேவதையின் இருப்பிடமாகவும்,

**திருப்புகழ் திலகம் மதிவண்ணன்**

www.TheMagzai.com






சாத்தானின் குடியிருப்பாகவும் அதை ஆக்குவது நம்மிடமே உள்ளது.

தூய எண்ணங்களால் மனதை நிரப்பிக் கொள்ள வேண்டும். நம் எண்ணங்களே நம் முகத்தில் எதிரொலிக்கின்றன.

www.TheMagnet.com

ஒரு நகரில் சந்தனக் கட்டை விற்கும் வியாபாரி ஒருவர் இருந்தார். அந்நகரத்தை ஆளும் அரசர் மாலை வேளைகளில் உலா வருவது வழக்கம். உலா வரும் மன்னரைத் தினசரி சந்தன வியாபாரி இரு கரம் குவித்து வணங்குவார். பதிலுக்கு அரசரும் புன்னகை பூத்தவாறே அவர் வந்தனத்தை ஏற்பார். இப்படி பல நாட்கள் வியாபாரி வணங்குவதும், அரசர் மகிழ்வதும் தொடர்ந்தது.

ஒரு நாள் வழக்கம் போல் மன்னர் சென்றார். சந்தன வியாபாரி கைகளைக் கூப்பியவாறு பணிவுடன் கும்பிட்டார். ஆனால் அரசருக்கு அன்று என்னவோ அவருக்கு பதில் வணக்கம் செய்ய மனம் இடம் தர வில்லை. இனம் புரியாத ஒரு உணர்ச்சி அரசர்க்கு ஏற்பட்டதால் முகத்தைத் திருப்பியவாறு மன்னர் அரண்மனைக்குச் சென்றார்.

மன்னர் தன் குரு நாதரிடம் சென்று நடந்ததைக் கூறினார். தொடர்ந்து சந்தன வியாபாரியை பதிலுக்கு வணங்கி வந்த நான் இன்று மட்டும் ஏன் வணங்கவில்லை. என் மனம் அவரை ஏன் புறக்கணித்தது என்று எனக்கே புலப்படவில்லை. தாங்கள் தான் காரணம் என்ன என்று கூற வேண்டும் என்றார்.

குருநாதர் மூன்று நாட்களுக்கு பிறகு உங்களுக்கு பதில் அளிக்கிறேன் என்றார். அடுத்த இரண்டு நாட்களும் மன்னர் உலா சென்றார். அந்த இரு நாட்களும் மன்னரால் சந்தன வியாபாரியை ஏனோ வணங்க முடியவில்லை. குருநாதரை வணங்கி, 'அந்த ஆள் மீது ஏனோ ஒரு வெறுப்பு ஏற்படுவதால் இப்போதெல்லாம் பதில் வணக்கம் செய்ய முடிவதில்லை' என்றார்.

நல்லது என்று கூறிய குருநாதர் மூன்றாவது நாள் மாலை உலாச் சென்று வந்த பின் உங்கள் அனுபவத்தைக் கூறுங்கள் என்றார். என்ன அதிசயம் மூன்றாம் நாள் மாலை சந்தன வியாபாரி வணங்க பதிலுக்கு மன்னரும் மகிழ்ச்சியுடன் வணங்கினார்.

குருநாதர் விவரம் அறிந்து புன்னகை பூத்தார். அரசரே சந்தன வியாபாரியின் வணிகத்தில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டது. எப்போதும் உங்களை வணங்கும் அவருக்கு கடந்த மூன்று நாட்களாக என்ன எண்ணம் தெரியுமா? உங்கள் குடும்பத்தில் யாரேனும் ஒருவரோ, தாங்களோ இறந்தால் ஆவது நம் சந்தனக் கட்டைகள் விற்குமே சந்தனக் கட்டையில் தகனம் செய்வது தானே அரசர் குல வழக்கம். அரச குடும்பத்தில் யாரேனும் இறக்க வேண்டும் எண்ணமே மேலோங்கியிருந்தது. அத் தீய நினைவே உங்களை அவன் மீது வெறுப்பு கொள்ள வைத்தது. நேற்று காலை நான் சென்று சந்தனக் கட்டைகள் அனைத்தையும் அவனிடமிருந்து கொள்முதல் செய்து விட்டேன். அதனால் உங்களுக்கு இன்று அருவெறுப்பு அவனிடம் ஏற்படவில்லை.

குருநாதரின் விளக்கம் நம் அனைவரின் நெஞ்சிலும் விளக்கை எற்றி வெளிச்சம் தருகிறது அல்லவா. ●


லேடீஸ் ஸ்பெஷல்
தீபாவளி மலர் 2016
ஸ்ரீ இருக்கன்குடி மாரியம்மன்



# கூரத்தாழ்வார்

ஆன்மிகம்

ஆயிரம் ஆண்டு கொண்டாடும் ராமானுஜரின் பவித்ரமாக இருக்கும் கூரேசன் என்கிற **கூரத்தாழ்வார்** வரலாற்றைப் பார்ப்போம்.

காஞ்சிபுரத்திலிருந்து 7 மைல் தொலைவில் இருக்கும் ஊர் **கூரம்.** இது பெரிய ஊராக இருந்த போது, சுக்ல வருஷம் தை மாத, ஹஸ்த நக்ஷத்திரத்தில் நானிலம் பெற்ற நற்பயனாய் - **ஸ்ரீராமஸோமயாஜி** என்பவருக்கு ஆழ்வான் திருக்குமாரராக அவதரித்தார். நற்பண்புகளின் உறைவிடமாகிய ஆழ்வான் ஸ்ரீ ராமானுஜரின் திருவடி சம்பந்தத்தை பெற்ற பிறகு ஸ்ரீ வைஷ்ணவத்திற்கே பெருங்காவலாக விளங்கினார். இவர் பெரிய பணக்காரர், கூரம் நாட்டை ஆண்டு வந்தார்.

பொய்கை ஆழ்வார் தொடங்கி திருமங்கை ஆழ்வார் வரை அவர்களை ஆழ்வார்கள் என்று கூறுகிறோம். பெருமானிடம் பக்தி கொண்டவர்கள் ஆழ்வார்கள். ராமானுஜரிடம் மட்டும் பக்தி கொண்டதால் 'ஆழ்வான்' என்று தனிச்சிறப்புடை பெயரைக்

**லெக்ஷ்மி ஸந்தானம்**

கொண்டார்.

கூர ராஜ்ஜியத்தில் அரசாட்சி செய்யும் கூரேசன், நகர சோதனைக்காக மாறு வேடத்தில் ஊர் சுற்றி வரும் போது ஒரு வீட்டில் அழுகுரல் கேட்டு நின்றார். அங்கு ஒரு மகள் இருப்பதாகவும், அவள் தோஷமுடையவள். ஆதலால் அவளுக்கு கல்யாணம் ஆனால் அவள் கணவன் இறப்பான் என்பதால் யாரும் மணக்க முன்வராததால் அப்பெண்ணை கொன்று விடுவதே நல்லது என்றும் பேசிக் கொண்டிருந்தார்கள். அதைக் கேட்ட கூரேசன் தான் அப்பெண்ணை மணக்க விரும்புவதாகக் கூறி, அப்படியே மனைவியாக ஏற்றார். தோஷம் இருப்பதால் தாம்பத்யம் இல்லை. சிற்றின்பங்களில் மனதை செலுத்தாலமல் ஞானம், பக்தியில் சிறந்து ஆண்டாளும், கூரேசனும் வாழ்ந்து வந்தார்கள்.

சில ஆண்டுகள் கழித்து, பொருட் செல்வங்களை பரமனின் அடியார்களுக்கு வழங்கி விட்டு, ஸ்ரீ ராமானுஜரைத் தேடி ஸ்ரீரங்கம் வந்தார். வரும் வழியில் காவேரிக்கு வடக்கில் காடாக இருந்ததால் ஆண்டாள் பயந்து, 'கள்வர் பயம் உண்டோ' எனக் கேட்டாள். நம்மிடம் ஒன்றுமில்லையே? ஏன் பயம் என கூரேசன் கேட்க அமுது செய்ய ஒரு தங்க வட்டில் மட்டும் எடுத்து வந்ததாக ஆண்டாள் தெரிவித்தாள். உடனே கூரேசன் அந்த வட்டிலை பிடுங்கி தூர எறிந்துவிட்டு, நிம்மதியாக ஸ்ரீ ரங்கம் வந்து ராமானுஜரின் சிஷ்யனாக சேர்ந்து, பல விதத்திலும் ராமானுஜரைக் காப்பாற்றினார். இன்றும் கீழ சித்திரை வீதியில் கூரத்தாழ்வான் திருமாளிகை இருக்கிறது.

ஆளவந்தாரின் விருப்பபடி **'பிரும்மஸூத்ரம்'** என்ற ஸ்ரீபாஷ்யத்திற்கு உரை எழுத ராமானுஜர் விரும்பினார். அது காஷ்மீரிலுள்ள 'சாரதா பீடம் நூலகத்தில்' தான் உள்ளது. உடனே ராமானுஜர் கூரேசனுடன் சென்று அந்த உரையை வாங்கி படிக்கும் போது, காஷ்மீர் மன்னன் பாதியில் எடுத்து வைத்துக் கொண்டு கொடுக்க மறுத்துவிட்டார். வருத்தத்துடன் ஊர் திரும்பிய ராமானுஜரிடம் கூரேசன், 'நான் முழுதும் படித்து விட்டேன் நான் சொல்கிறேன்' என்று கூறி ராமானுஜரை அந்த நூல் முழுவதையும் எழுத உதவினார்.

குலோத்துங்க சோழ மன்னன் 'சைவம் தான் பெரிசு, சிவனைக் காட்டிலும் மேம் பொருளில்லை' என எழுதி அனைவரையும் கையொப்பம் இடச் செய்தான். அனைவரும் குலோத்துங்க சோழனுக்கு பயந்து கையொப்பம் இட்டனர். **நாலூரான்** என்பவன், அரசனிடம், ராமானுஜர் கையொப்பம் இட்டால் அரசனது விருப்பம் வெற்றி பெற்றதாக ஆகும் என்று தூண்டினான் அரசன். ஏவலர்களை அனுப்பினான். அவர்கள் மடத்திற்கு வந்து ராமானுஜரை ராஜசபைக்கு அழைத்தனர். அப்பொழுது ராமானுஜர் நீராடச் சென்றிருந்தார். உடனே கூரேசன் த்ரிதண்ட காஷாயங்களை தரித்துக் கொண்டு அரச சபை சென்றார். **'சிவாத் பரதரம் நாஸ்தி'** என்று எழுதி கையொப்பம் இடச் சொன்னார். கூரேசன் மறுக்கவே அவன் கண்களை பறிக்க கட்டளை இட்டான். "மகா பாவியாகிய உன்னைக் கண்ட கண்கள் இனி எனக்கு வேண்டாம்" என்று கூறி கூரேசன் தன் கண்களைத் தானே பிடுங்கி எறிந்தார். ராமானுஜருக்காக தன் கண்களையே கொடுத்தவர் கூரேசன். இதுவல்லவா ஆசார்ய பக்தி!

நீராடி திரும்பி வந்த ராமானுஜர், தன் வஸ்திரங்களைத் தேடிய போது, முதலியாண்டார் நடந்ததைக் கூறினார். இனி கொடுங்கோல் மன்னன் ஊரில் இருக்க வேண்டாம் என்று வஸ்திரங்களைத் தரித்து திரு நாராயண புரத்திற்கு சென்று விட்டார். ராமானுஜரின் அவதார ஸ்தலமான ஸ்ரீபெரும்புதூரில் இந்நிகழ்ச்சியை உடையவரின் உற்சவத்தில் 6ம் நாள் உற்சவமாக 'கூரேசவிஜயம்' என்று பெயரிட்டு நடத்துகிறார்கள்.

மீண்டும் கண் பெறுவதற்காக கண் கொடுக்கும் பெருமாளாகிய வரதராஜனைக் குறித்து ஒரு ஸ்தோத்திரம் பாடுமாறு ராமானுஜர் சொல்ல, கூரேசனும் வரதராஜஸ்த்வத்தை அருளி செய்தார். ஆனால் கூரேசன் தனக்கு ஊனக் கண் வேண்டாம் ஞானக் கண் தான் வேண்டும் எனக் கேட்டுப் பெற்றதோடு தனக்கு தீங்கு இழைத்த நாலூரானுக்கும்




படம்: யோகா கமெண்ட்: ஜ்வாலா

www.TheMagnat.com

வேண்டிக் கொண்டார்.

கண்களைப் பறித்த சோழன் திடீரென்று கழுத்தில் நோய் தோன்றி துடிதுடித்து இறந்தான்.

கூரேசன் என்கிற கூரத்தாழ்வானுக்கு பெற்றோர் இட்ட பெயர் **'திருமறுமார்பன்'**. தவிர ஸ்ரீவத்ஸசிக்ன மிச்ரர், திருமறுமார்பன், கூரநாதர், மஹாதாதா என்று பல பெயர்கள் உண்டு. இவர் இயற்றிய **'பஞ்சஸ்தவம்'** சிறப்புடையது.

அரங்கனை வேண்டி ராமானுஜருக்கு முன்பே பரமபதம் சென்று விட்டார்.

கண் ஸம்பந்தமான வியாதிகள் விலக பக்தியுடனும், நம்பிக்கையுடனும் கூரம் சென்று ஆழ்வானையும், திவ்ய தம்பதிகளையும் ஸேவித்துப் பிறகு, காஞ்சிபுரம் வந்து பெருந்தேவி நாயிகா ஸமேத பேரருளான பெருமாளை ஸேவித்தால் கண் வியாதிகள் நீங்கும். வரதராஜஸ்தவம் படித்தால் கண் பார்வை கிடைக்கும்.

கூரத்தாழ்வான் திருமாளிகையில் தங்கியிருக்கும் போது, தினம் உஞ்ச விருத்தி செய்து ஜீவித்து வந்தார். ஒரு நாள் பெருமழை, உஞ்ச விருத்திக்கு போக முடியவில்லை. ரங்கநாதர் அமுது செய்யும் மணியோசை கேட்டு ஆண்டாள், 'உன் அடியார் பட்டினி கிடக்க நீர் அமுது செய்கின்றரோ' என்று மனத்தால் நினைத்தாள். உடனே தான் அமுது செய்த அக்கார வடிசலை ஆழ்வான் திருமாளிகைக்கு உத்தம நம்பி என்பவர் மூலம் கொடுத்தனுப்பினார் அரங்கன். கூரேசன் வரவேற்று பகவானின் கருணையை நினைத்துக் கொண்டே பிரஸாதத்தை உண்டார். மிகுதியை தன் மனைவி ஆண்டாளுக்கு கொடுத்தார். ஆண்டாளும் அதனைப் பெற்று, இரண்டு திருக்குமாரர்களை பெற்றெடுத்தார். அவ்விரண்டு குமாரர்களுக்கும் ராமானுஜர் - **பராசரபட்டர், வேத வியாச பட்டர்** என்று பெயர் சூட்டினார். சகல நன்மைகளும் பெற கூரத்தாழ்வானை வணங்குகள். ●





பயணம்



ஐக்கிய அரபு கூட்டமைப்பு அதாவது யுனைடெட் அராப் எமிரேட்ஸ் (UAE) அமைப்பில் துபாய், அபுதாபி, ஷார்ஜா, அஜ்மான், ப்யோஜிரா, ரஸ்-கல்-கைமா, உம்-அல்-கைய்வான் ஆகிய ஏழு எமிரேட்டுகள் உள்ளன.

துபாய், அபுதாபி என்றாலே பரந்த மணல்வெளி, வறண்ட பாலைவனக்காடுகள், நடுவே உயரமான ஒட்டகங்களின் மெத்தனமான நடை என்பது போன்ற கற்பனைகள் விரியத் தொடங்கும். ஆனால்

www.TheMagna.com



# பாலைவனச் சோலைவனம்

துபாய்







உண்மை அதுவல்ல. மன்னர் ஆட்சியில் எங்கெங்கு நோக்கினும் செழுமை, வளமை. உலகின் பல நாடுகளின் திறமையாளர்கள் பல்வேறு தொழில் ரீதியாக தத்தம் பங்களிப்பை அளிக்கின்றனர்.

துபாய் விமானநிலையத்தில் இறங்கியவுடன் மயன் மாளிகையாக தோற்றம், ஒளிமயமான கடைகள், விளக்கு மாலைகளை சாற்றிக் கொண்ட மரங்கள், இருள் ஏதுமில்லா ஒளிமயம் தான் எங்கும். கழிவறைகள் அத்தனை சுத்தம். கைகளை சுத்தப்படுத்தும் லிக்விட் (Anti bacterial) கழுவிய கைகளை சூடேற்றும் ஹேண்ட் டிரையர் (Hand dryer) என்று



**பூமா கஸ்தூரி**

சுகாதாரச் சுத்தம். சிறுகுழந்தைகள் கூட ஈரக்கைகளை துடைத்த டிஷ்யூ பேப்பர்களை அதற்கான தொட்டிகளின் உள்ளே போடும் பாங்கு - இவை வெளிநாடுகளில் பலரும் கண்டறிந்தது. இன்றைக்கும் துபாய் போன்ற அரபு நாடுகளில் பல வேலைகளுக்கு பலநாட்டு மக்கள் தேடிவருவதன் முக்கிய காரணம் வருமான வரிவிலக்கு. ஆம், கிடைக்கும் சம்பளத்தில் எந்தவித வரி பிடிப்பும் கிடையாது. ஆசிய, ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் வருமான வரியின் விழுக்காடு, சம்பாதிப்பதில் கணிசமான பகுதியாக எடுக்கப்பட்டுவிடுகின்றது. ஆகையால்தான், அரபு நாடுகளில் சாதாரண



வேலை செய்பவர்கள் கூட ஓரளவுக்கு பணம் சேமிப்பதை நாம் காணமுடிகிறது.

மகிழ்ச்சியான ஒரு செய்தி. துபாயில் குற்றவிகிதம் 0% என்பதால் குடும்பத்துடன் வசிக்க பாதுகாப்பான நகரம். தரமான கல்விக்கூடங்கள் அமைந்த Knowledge village ஆக சேமிப்பு, பாதுகாப்பு, முன்னேற்றம் இவை அனைத்திற்குமான ஒரு நகரம்.

மற்றுமோர் செய்தி. உலகின் மொத்த கிரேன்களில் (cranes) இருபது சத விகிதம் கிரேன்கள் துபாயில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றால் அதற்கான காரணம் அந்த அளவிற்கு ரியல்டி (அ) ரியல் எஸ்டேட் என்னும் கட்டிடத் தொழிலின் பிரம்மாண்டமான இயக்கங்கள். ஸ்கை ஸ்கராப்பர்ஸ் என்னும் வானைத் தொடும் அதி உயரமான தீப்பெட்டிகளை அழகாய் அடுக்கி செதுக்கினாற்போல் நவீன கட்டிடங்கள், குறைந்த பட்சம் 12 மாடியிலிருந்து 30 மாடி வரை மற்றும் அதற்கு மேலான அடுக்குமாடி கட்டிடங்கள். தற்காலத்திய அடிப்படை வசதிகள் (??) லிப்ட், ஜிம், நீச்சல் குளம், ஆண் பெண் இருபாலருக்குமான தனித்தனி நீராவிக் குளியல் அறைகள், ஆக எத்தனயோ வசதிகள். இதற்கான மெயின்டெனன்ஸ் கட்டணங்கள் வீட்டின் விலையிலோ, வாடகையிலோ, சேர்க்கப்பட்டு விடுகின்றன. (ஒரு வருட வாடகை அட்வான்ஸ் ஆக தரவேண்டும்).

முக்கியமானது நடைபாதைகள் நடப்பதற்கே (ம்ஹீம், நம் ஊர் நடைபாதை நடப்பதற்கானதா?) எல்லோரும் அவரவர்கான வேலைகளில் இயங்கிக் கொண்டு இருப்பார்கள். நிற்க நேரம் எது? நின்று பேச பொழுதேது? நம் ஊரில் அடுத்தவர் வீட்டில் எட்டிப் பார்ப்பது மிக சகஜம். அது நட்புணர்வுடன் இருந்தால் சரி, உதடு மட்டும் பூச்சொரிந்து, தேனாய் வழியும், உள்ளத்திலும் அது இருக்குமா, என்பதற்கு விடை இல்லை.

அடுத்ததாக, துபாயில் எல்லோரும் வியந்து பார்ப்பது, உலகின் மிகச்சிறந்த வடிவமைப்பில் வெளிவரும் ஹைஎண்ட் கார்கள். நான்கு சக்கர வாகனங்களின் வளர்ச்சி மிக அதிகம். சுமார் நாற்பது வருடங்களுக்குள் குறைந்த பட்சம் 3, 4 லேன்கள் உள்ள சாலைகள், அதற்கான வேகக் கட்டுப்பாடுகள், கண்காணிப்பு காமிராக்கள், என்று சரியான திட்டமிடுதலில் மிக மிக பக்குவமாக அமைக்கப்பட்டுள்ளது.

அரபு நாட்டு பெண்கள் உயரமான ஹைஎண்ட் கார்களில் தாங்களே டிரைவிங் செய்து பவனிவருவது சகஜம். அரபு நாட்டு பெண்களின் கூர்மையான மை தீட்டிய கருவிழிகள் அவர்களின் முகத்திரையினையும் மீறி பளிச்சிடும். இளம் பெண்கள் பர்தா உடைக்குள், மாடர்ன்

உடைகள், மற்றும் உயரமான காலணிகளை அணிகின்றனர். அரபு நாடுகளில் ஐந்து வேளை தொழுகைக்கான வசதிகள், மால்கள் எனப்படும் பேரங்காடிகளில் உண்டு. பெண்களுக்கான தொழுகை அறை தனியாகவும், பாலூட்டும் பெண்களுக்கு அதற்கான வசதிகளும் உள்ளன. துபாயின் ஜனத்தொகையில் சுமார் 17 சதவீதம் எமிராட்டிஸ் எனப்படும் மண்ணின் மைந்தர்கள். இவர்கள் தவிர்த்து மீதும் சுமார் எண்பத்தி மூன்று சதவீதம் வேறுநாட்டினர். குறிப்பாக இந்தியர்கள் அதிகம். பல்வேறு துறைகளில் இந்தியர்களின் பங்களிப்பு மிக மிக அதிகம். உலகின் மிக உயரமான கட்டிடம் புர்ஜ் கலிபா (2717 அடி உயரம்), உயரமான மசூதிகள், ஐந்து, ஆறு, ஏழு நட்சத்திர ஹோட்டல்கள், அதி உயரத்தில் அமைந்த இரவு விடுதிகள் என்று ஏராளமான ஆச்சரியங்கள்.

புர்ஜ் அல் அராப் என்னும் அதிநவீன ஹோட்டல் உலகின் நான்காவது உயரமான கட்டிடமாக அமைக்கப்பட்டுள்ளது. ஜீமைரா கடற்கரையிலிருந்து 280 அடி உயரத்தில் அமைந்துள்ளது. அல் மஹாரா என்னும் ஹோட்டலில், கடல்நீர் மீன் காட்சியகம் (Aquarium) பிரசித்தி பெற்றது. ஆழ்கடல் பயணம் குறிப்பாக இளைஞர்களால் எதிர்நோக்கப்படுவது. அமெரிக்காவின் சுதந்திர தேவி சிலையினை விட உயரமானது இந்த ஹோட்டலின் லாபி (Lobby) ஆகும்.

22500 சதுர மீட்டரில் அமைந்த நீர் விளையாட்டு இடத்தில் பனிப்பூங்கா மட்டுமே 3000 சதுர மீட்டர்களில். நீர் விளையாட்டில் தான் இளைஞர் பட்டாளமே.

உலகின் மிக நீளமான தங்கச் சங்கிலி துபாய் ஷாப்பிங் பெஸ்டிவெல் 1999-ல் உருவாக்கப்பட்டது. 4.2 கி.மி. நீளமான இந்த சங்கிலியை பங்கிட்டு வாங்கிச் சென்றவர்கள் 9600 பேர். காய்கறி மார்கெட் போல், தங்க மார்கெட் (Gold Shouk) என்ற இடத்தில் முழுதும் தங்கக்கடைகள் பளீரிடும். துபாயின் ஷாப்பிங் பெஸ்டிவல் மிகவும் பிரசித்தம். மாபெரும் விலைக்குறைப்பில், தரமான பொருட்கள் கிடைக்கும். விமான கம்பெனிகள் கூட அந்த சமயத்தில் குறைந்த கட்டணத்தில் சேவைகளை வழங்குகின்றனர்.

அது மட்டுமல்ல, Desert safari என்னும் பாலைவனப் பயணம் அனைவரும் பயணிக்க வேண்டிய ஒன்று. பாலைவனத்தின் உள்ளே, அதற்கான பிரத்யேக டயர்களைக் கொண்ட ஜிப்பில் பிரயாணம். ஆஹா, மணல் மேடு பள்ளங்களில் குதித்து குதித்து பயணிப்பது பயம் கலந்த ஒரு உல்லாச பயணம். நம்மை அதற்காக ஆரோக்கிய படுத்திக் கொள்ளுதல் நலம்.

ஓட்டுநர் இல்லாத மெட்ரோ இரயில்



பயணம், மேலிருந்து பார்த்தால் மரங்களின் இலையாக தோற்றம் அணிக்கும் வீடுகள். பாம் ஜீமைரா என்னும் கடற்கரையில் கட்டப்பட்ட வில்லாக்களின் அழகு மிக சுவாரசியம்.

ஏழு எமெரெட்டுகளிலும் அமைந்துள்ள ஹைபர் மார்க்கெட் "லுல்லு" - அரேபிய உதவியுடன் நிறுவியர் நமது கேரள சகோதரர்கள். அனைத்தும் ஒரே க(கு)டையில்! என்ன ரெடியா? இந்தியாவிற்கு மிக அருகில் மூன்றரைமணி நேர விமான பயணத்தில் துபாய் என்னும் இந்த சோலைவனம். குறிப்பாக துபாய் ஷாப்பிங் விழாவினை ஒட்டி பயணித்து நம்மை உற்சாகப்படுத்தி ரீ-சார்ஜ் செய்து கொள்ளலாமே. ●

# நவதிருப்பதிகள்

பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்

காவிரி வளம் சேர்த்த சோழ நாட்டில் ஒன்பது கோள்களுக்கு உரிய சிவத்தலங்கள் உள்ளன. அவற்றை நவக்கிரகத் தலங்கள் என்று கூறுவர். அதுபோல், தாமிரபரணி வற்றாமல் ஜீவநதியாய் வளம் சேர்க்கும் பாண்டிய நாட்டில், நவகோள்கள் வழிபட்ட திவ்ய தேசங்கள் (திருமால் தலங்கள்) உள்ளன. அவற்றை நவதிருப்பதிகள் என்று சிறப்பித்துப் போற்றுகின்றனர். அதே பகுதியில் நவகயிலாயத் தலங்களும் உள்ளன.

தற்காலத்தில் நவதிருப்பதிகளும் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் அடங்கியுள்ளன. நவதிருப்பதிகளை, இரு வேறு விதமாக வரிசைப்படுத்தியுள்ளனர். நாம் கோள்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்கள். ஆகவே, சூரியன் வழிபட்ட தலத்திலிருந்து தரிசனத்திற்குத் தொடங்குபோம்.

## ஸ்ரீவைகுண்டம்

திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் செல்லும் வழித்தடத்தில் 30 கி.மீ தொலைவில் **ஸ்ரீவைகுண்டம்** அமைந்துள்ளது.

நவதிருப்பதிகளில் ஒன்றான ஸ்ரீவைகுண்டம், நவகயிலாயங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது. குமரகுருபர சுவாமிகள் இத்தலத்தில்தான் அவதரித்தார். அவர் நிறுவிய காசிமடத்தின் கிளை, ஸ்ரீவைகுண்டத்தில் செயற்பட்டு வருகிறது.

வைகுண்டநாதரைத் தரிசிக்க, பிராகாரங்களையும், மண்டபங்களையும் கடந்து செல்ல வேண்டும். மூலவர் வைகுண்டநாதப் பெருமாள் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். அவருடைய தலைக்கு மேல் ஆதிசேஷன் குடை போல் விரிந்திருப்பது ஓர் அரிய காட்சியாகும்.

படைப்புக்கடவுளான பிரமனின் உலகத்தில் ஒருமுறை பிரளயம் ஏற்பட்டது. அப்போது, கோமுகன் என்ற அசுரன், படைப்புத் தொழிலுக்கு ஆதாரமாக





இருந்த இரகசிய நூலைக் கவர்ந்து சென்றுவிட்டான். இதனால் பிரமனின் படைப்புத் தொழில் தடைப்பட்டது. அவர் பூவுலகம் வந்து இத்தலத்தில் பெருமாளை நோக்கித் தவம் புரிந்தார். பெருமாள் கோமுகனை வதைத்து, இரகசிய நூலை மீட்டுத் தந்தருளினார். பிரமன் வைகுண்டநாதரின் மூலத்திருமேனியைப் பிரதிஷ்டை செய்தார். சித்திரை மாதத்து ஆண்டுப் பெருவிழாவையும் தொடங்கி வைத்தார்.

பிரமனுக்குக் காட்சியளித்த இடத்திலேயே பெருமாள் நிலைத்து விட்டார். காலப்போக்கில் அவருடைய மூர்த்தத்தைப் புற்றுமண் மூடிவிட்டது. அப்பகுதியில் மேய்ச்சலுக்குச் சென்ற சில பசுக்கள் தாமாகவே புற்றின் மீது பாலைப் பொழிந்தன. அந்த விவரத்தை அறிந்த அரசர், புற்றைத் தோண்டிப் புதைந்திருந்த பெருமாள் விக்கிரகத்தைக் கண்டெடுத்தார். திருக்கோயில் கட்டிப் பிரதிஷ்டை செய்தார். வைகுண்டநாதப் பெருமாளுக்குப் பாலாபிஷேகம் மிகவும் உகந்ததாக ஆயிற்று.

திறம்படச் செயலாற்றுபவர்களை, 'பாண்டியன்' என்று நெல்லைப் பகுதியினர் அழைப்பர். **மகாகவி பாரதியார்,** அத்தகையோரை, **'பலே பாண்டியா!'** என்று பாராட்டுவார். வைகுண்டநாதர் பாலாபிஷேகத்தை விரும்புவதால், அவரை, **'பால் பாண்டியன்'** என்று அன்புடன் அழைத்தனர்.

கள்வன் ஒருவன் வைகுண்டநாதரிடம் பக்தி கொண்டிருந்தான். அவன் களவாடி ஈட்டிய பொருளில் பாதியைப் பெருமாளுக்குக் கொடுத்துவிடுவான். பலநாள் திருடன் ஒருநாள் அகப்பட்டான். அரசர் முன்னால் நிறுத்தியபொழுது அக்கள்வன் வைகுண்டநாதப் பெருமாளைத் தியானித்தான். பெருமாளும் ஒரு கள்வனைப் போல் உருவம் தாங்கிச் சென்று அரசன் முன்னால் நின்றார். அரசன் தண்டிக்க முற்பட்டபொழுது, பெருமாள் உண்மை வடிவத்தைக் காட்டியருளினார். நிறையப் பொருளைச் சேர்த்திருந்த அவ்வரசன் சிறிதும் தருமம் செய்யாமல் இருந்தான். அவனை, தருமச் செயலில் ஈடுபடுத்தும் நோக்கத்துடன் தான் கள்வராக வந்தாகப் பெருமாள் கூறினார். அதனால், ஸ்ரீவைகுண்டம் உற்சவருக்கு, 'கள்ளபிரான்' என்ற திருப்பெயரும் தோன்றியது.

கள்ளப்பிரானின் உற்சவமூர்த்தத்தை வார்த்தெடுத்த ஸ்தபதியே அவருடைய அழகில் மயங்கினார்! கள்ளப்பிரானின் கன்னத்தை அன்புடன் கிள்ளினார். அதனால், கள்ளப்பிரானின் கன்னத்தில் குழிவிழுந்தது! அது அவருடைய



அழகிற்கு மேலும் சிறப்புச் சேர்த்தது. கள்ளப் பிரானின் துணைவியும் கள்ளப் பிராட்டி (சோரநாயகி) என்று பெயர் பெற்றார். கள்ளப்பிரானோடு, சோரநாச்சியாரும், வைகுண்ட நாயகியும் மகாமண்டபத்தில் எழுந்தருளியுள்ளனர். இவ்விரு பிராட்டிகளும் தனித்தனி சன்னதியில் மூலவராகவும் அருட்காட்சி அளிக்கின்றனர்.

நம்மாழ்வார் போற்றிப் பாடிய ஸ்ரீவைகுண்டநாதரின் வழிபாடு, **சூரிய பகவானின்** நற்பலனையும் சேர்க்கும்.

## திருவரகுணமங்கை

**தி**ருவரகுணமங்கை தற்காலத்தில் நத்தம் என்று வழங்கி வருகிறது. இத்தலம், ஸ்ரீவைகுண்டத்திலிருந்து 3 கி.மீ தொலைவில் உள்ளது.

ஐந்து நிலைகள் கொண்ட இராஜகோபுரம் உயர்ந்து நிற்கிறது. வைகானஸ ஆகம முறைப்படி வழிபாடுகள் நடைபெறுகின்றன. ஹேம புஷ்கரணி, அக்னி தீர்த்தம் என்று

> **"தாய்க்குலத்தைத் தவறாகப் பார்க்கும் ஆண்களுக்கு, அத்தண்டனை, ஓர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று தேவி, கருதினாள் போலும்!**

இரண்டு தீர்த்தங்கள் உள்ளன. விஜயகோடி விமானம் என்ற விமானத்தின் கீழ் மூலவர் விஜயாஸனப் பெருமாள், ஆதிசேஷன் மீது அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார். இரண்டு கரங்களில் சங்கு, சக்கரம் ஏந்தி, இரண்டு கரங்களால் அபயம், வரதம் காட்டிய நிலையில் எழுந்தருளியுள்ளார். தாயார் வரகுணமங்கையும், வரகுணவல்லியும் அருகில் அமர்ந்திருக்கிறனர்.

வரகுணமங்கை உற்சவருக்கும், **'எம் இடர் களைவார்'** என்ற சிறப்புப் பெயர் உள்ளது. இவருடன் ஸ்ரீதேவியும் பூதேவியும் காட்சி தருகின்றனர். இக்கோயிலில் தாயாருக்கென்று தனியே சன்னதி இல்லை.

சுற்றுப் பிராகாரங்களில் **ஆழ்வார்கள், விஷ்வக்ஸேனர், யோக நரசிம்மர், இராமானுஜர்** ஆகியோரையும் தரிசிக்கலாம். இத்தலத்தில் உயிர் நீப்பவர்கள் முக்தி அடைவார்கள் என்று **உரோமேச முனிவர்** கூறியுள்ளார்.

**வேதவித்து** என்ற பக்தர் ஆஸனத் மந்திரம் என்ற மந்திரத்தை ஜபித்து, பெருமாளின் திருவருளைப் பெற்று, முக்தியடைந்தார் என்று தலவரலாறு உரைக்கிறது. வேதவித்தின் முயற்சி வெற்றியடையச் செய்ததால், இந்தப் பெருமாளுக்கு, **'விஜயாஸனர்'** என்ற பெயர் ஏற்பட்டது. உரோமேச முனிவர், அக்னி பகவான், சத்தியவான் சாவித்திரி தம்பதியர் ஆகியோருக்கு விஜயாஸனப் பெருமாள் திருவருள் புரிந்துள்ளார்.

சந்திரன் வழிபட்ட இப்பெருமாளை வழிபடுவோருக்கு, சந்திரன் நற்பயன்களைத் தருவார்.

## திருக்கோளூர்


**ந**ம்மாழ்வார் பாடிய சிறப்பைப் பெற்ற இத்தலம், மதுரகவி ஆழ்வாரின் அவதாரத் தலமும் ஆகும். கல்வெட்டுகள், **'வழுதிவளநாட்டுத் திருக்கோளூர்'** என்று குறிப்பிடும் இத்தலத்தில், சிவன் கோயிலும் உள்ளது. சமணமும் பரவியிருந்ததாகவும், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், இப்பகுதி இடுகாடாக இருந்தது என்றும் கூறுகின்றனர்.

திருக்கோளூர், தாமிரபரணி ஆற்றின் தெற்குக் கரையில், திருப்பேரையிலிருந்து ஆழ்வார்திருநகரி செல்லும் வழியில் 2 கி.மீ தெற்கே அமைந்துள்ளது.

சிவபெருமான், தன் பக்தனான குபேரனைத் தன் தோழன் என்று போற்றினார்! ஆனால், குபேரன் உலகமாதாவாகிய பார்வதி தேவியைக் கெட்ட எண்ணத்துடன் பார்த்தான். அதனைக் கண்ட தேவிக்கு, கடுஞ்சினம் ஏற்பட்டது. நவநிதிகள் என்ற குபேரனின் செல்வங்கள் அனைத்தும் மறையும்படி, பார்வதி சாபம் கொடுத்தாள். அத்துடன் குபேரன் ஒரு கண்ணை இழக்கவும் சாபம் கொடுத்தாள்.

குபேரன் தன் குற்றத்தை உணர்ந்தான். ஈசனிடம், தன்னை மன்னிக்கவும், சாபவிமோசனம் அளிக்கவும் வேண்டினான். ஈசன், தேவியிடமே முறையிட்டு, சாபவிமோசனம் பெற அறிவுறுத்தினான்.

குபேரன் அம்பிகையின் திருவடியில்



விழுந்து, வணங்கி, சாபவிமோசம் வேண்டினான். பூவுலகம் சென்று, தவமியற்றித் தன்னுடைய அண்ணன் திருமாலிடமிருந்து, இழந்த செல்வங்களை மீட்டுக் கொள்ளலாம் என்று தேவி கூறினாள்.

எனினும், குபேரன் இழந்த ஒரு கண்ணில் பார்வை மீளாது என்றும் அம்பிகை கண்டிப்பாகக் கூறி விட்டாள்! தாய்க்குலத்தைத் தவறாகப் பார்க்கும் ஆண்களுக்கு, அத்தண்டனை, ஓர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று தேவி, கருதினாள் போலும்!

குபேரன் பூவுலகம் வந்தான். தன்னுடைய செல்வங்கள் இருக்கும் இடத்தைத் தேடி அலைந்தான். இறுதியில் தாமிரபரணிக் கரையை அடைந்தான். அவ்வூரைச் சேர்ந்த அதர்மன் என்பவனிடம் செல்வக் குவியல் இருக்கும் இடத்தைப் பற்றி விசாரித்தான்.

அதர்மன், 'வைத்த மாநிதிப் பெருமாளிடம்' அச்செல்வங்கள் இருப்பதாகக் கூறினான். அத்துடன், கடுந்தவம் இயற்றினால் மட்டுமே, செல்வத்தை மீட்க இயலும் என்றும் கூறினான். பெருமாள் வைத்திருந்த செல்வத்தைக் குறித்து, அதர்மன், குபேரனிடம் கோள் மூட்டிய இடமே திருக்கோளூர் என்று பெயர் பெற்றது. குபேரனின் நவநிதிகளுக்கும் அறங்காவலராக இருந்த திருக்கோளூர்ப் பெருமாளை, கடுந்தவம் இயற்றி, இப்பெருமாளிடமிருந்து குபேரன் நவநிதிகளையும் மீண்டும் பெற்றான். தர்மகுப்தன் என்பவர் வறுமையால் வாடினார். பரத்வாஜ முனிவரின் ஆலோசனைப்படி, திருக்கோளூர் வந்தார். பெருஞ்செல்வத்தைப் பெற்றார் என்றும் தல வரலாறு உரைக்கிறது.

இத்தலத்து மூலவர், 'வைத்த மாநிதிப் பெருமாள்' கிடந்த (சயன) கோலத்தில் கம்பீரமாகக் காட்சி அளிக்கிறார். இடப்பக்க உள்ளங்கையை மேலே உயர்த்தி, அதனை உற்றுப் பார்த்த நிலையில் பெருமாள் பள்ளி கொண்டுள்ளார்.

"அடியார்களின் இன்னல்கள் யாவற்றையும் போக்கிய களைப்பு நீங்க, திருக்கோளூரிலும் புளியங்குடியிலும் சயனித்துள்ளீரோ?" என்று நம்மாழ்வார் பாடுகிறார். அப்பாசுரம் 'ஏன் பள்ளி கொண்டீர் ஐயா?'" என்ற பிரபலமான இசைப் பாடலுக்கு முன்னோடி போல் உள்ளது!

குமுதவல்லித் தாயார், கோளூர்வல்லித் தாயார் என்ற இரண்டு தேவியருடன் பெருமாள் தரிசனம் தருகிறார். **செவ்வாய் தோஷம், திருமணத்தடை** ஆகியவை நீங்கி, நல்வாழ்வு பெற்றிட பக்தர்கள் திருக்கோளூர் வைத்த மாநிதிப் பெருமாளை வேண்டி வழிபடுகின்றனர்.

### திருப்புளியங்குடி

திருநெல்வேலி தூத்துக்குடி வழித்தடத்தில் உள்ளது திருப்புளியங்குடி. சற்றே பெரிய ஊராகிய இத்தலத்தில் பெருமாள் 12 அடி நீளத்துடன் பாம்பணை மேல் பள்ளிகொண்ட (கிடந்த) கோலத்தில் காட்சி தருகிறார். பெருமாளின் நாபிக்கமலத்திலிருந்து முளைத்தெழுந்த தாமரை மலரின் மீது பிரமன் அமர்ந்திருக்கிறார். ஸ்ரீதேவியும்

பூதேவியும் பெருமாளின் பாதத்தில் முறுவல் தவழும் முகத்துடன் அமர்ந்துள்ளனர். புளியங்குடிப் பெருமாள் **நன்மக்கட்பேறு அருளுபவர்** என்பது பக்தர்களின் அனுபவம்.

ஒருமுறை பூவுலகம் வந்த பெருமாள் தாமிரபரணிக் கரையில் ஸ்ரீதேவியுடன் இனிதே வீற்றிருந்தார். பூதேவி, பெருமாள் தன்னை விலக்கியதாக்க கருதி, சினந்து, பாதாள உலகத்திற்குச் சென்றுவிட்டாள். அதனால், உலகம் இருளில் மூழ்கியது. பெருமாள், தேவர்களின் வேண்டுகோளை ஏற்று ஸ்ரீதேவியுடன் பாதாளம் சென்றார். பூதேவியைச் சமாதானப்படுத்தி இத்தலத்திற்கு அழைத்து வந்தார். தனக்கு தேவியர் இருவரும் சமமானவர்களே என்பதை அறிவிக்கும் வகையில் இங்கு அவ்விருவருடன் இனிதே காட்சியருளினார். அதனால், இங்குத் தனியே தாயார் சன்னதி இல்லை.

இந்திரனின் பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்கியருளிய புளியங்குடிப் பெருமாள் **புஜங்கசயனர்** என்று போற்றப்படுகிறார். வெளிப் பிராகராத்தைச் சுற்றிவரும் பொழுது, ஒரு சாளரத்தின் வழியே பள்ளிகொண்ட பெருமாளின் பாததரிசனம் கிடைக்கிறது.

**வித்தியாக காரகன்** என்று சோதிட நூல்கள் குறிப்பிடும் புதபகவான் போற்றும் புளியங்குடிப் பெருமாள் கல்வியில் மேன்மையை அருளுபவர் ஆவார்.

## ஆழ்வார்திருநகரி

ஆழ்வார்திருநகரியும் நெல்லை திருச்செந்தூர் வழித்தடத்தில் உள்ளது. இத்தலத்திற்கு **திருக்குருகூர், ஆதிக்ஷேத்ரம், வராக க்ஷேத்ரம், சேஷ க்ஷேத்ரம், தீர்த்த க்ஷேத்ரம்** போன்ற பல பெயர்கள் வழங்குகின்றன.

பிரமன் தவமியற்ற விரும்பினான். பெருமாளிடம் அதற்குத் தகுந்த இடத்தைக் காட்டியருளிட வேண்டினார். பெருமாள், "நாம் உன்னைப் படைப்பதற்கு முன்னரே தாமிரபரணி நதிக்கரையில் எழுந்தருளியுள்ளோம்! அங்கே சென்று தவமியற்றுக!" என்றார். பிரமனும் அவ்வாறே தவமியற்றி, பெருமாளின் திருவருளைப் பெற்றார். பிரமனின் தோற்றத்திற்கு முன்பே எழுந்தருளியதால் இத்தலத்துப் பெருமாளுக்கு **ஆதிநாதர்** என்று பெயர் ஏற்பட்டது. **ஆதிபிரான்** என்றும் கூறுவர்.

பெருமாள் பிரமனுக்கு, குருவாக இருந்து வழிகாட்டியதால் இத்தலத்தைக் **குருகூர்** என அழைத்தனர். குருகன் ஆண்ட நிலப்பகுதி குருகூர் ஆயிற்று என்றும் கூறுவர். குருகு என்ற **நாரைகள்** வாழும் தடாகங்கள் உள்ள தலம், குருகு என்ற **கோழிகள்** நிறைந்த இடம், குருகு என்ற **குருக்கத்தி** மரங்கள் நிறைந்த இடம் என்றெல்லாம் பலவாறு பொருள் கொள்ளலாம்.

ஒரு சாபத்தினால் பூமியில் பிறந்து ஆதிநாதனை வழிபட்ட **தாத்தன்** என்ற துப்பரவுத் தொழிலாளிக்குக் காட்சியளித்தார். அதனால், இத்தலத்தைத் **தாத்தா க்ஷேத்திரம்** என்றும் அழைத்தனர்.

எனினும், நம்மாழ்வாரின் அவதாரத்திற்குப் பிறகு, **ஆழ்வார் திருநகரி** என்ற பெயரே நிலைத்துவிட்டது.

ஆழ்வார்திருநகரி திருக்கோயில் மிகவும் விசாலமானது. மாடவீதிகள் தோறும் வைணவ அடியார்கள் வாழ்கின்றனர். இராஜகோபுரம், பிராகாரங்கள், மண்டபங்களைக் கடந்து சென்று ஆதிநாதர் சன்னதியை அடைய வேண்டும். வடக்குத் திசையில் வைகுண்ட வாசலும், திருமாமணி மண்டபமும் உள்ளது. தென்கிழக்கே **கருடாழ்வார்** காட்சியளிக்கிறார்.

பெருமாள் ஆதிநாதர் நாச்சியார்களுடன்







நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறார். இம்மூர்த்தம் தானே தோன்றிய சுவயம்பு மூர்த்தம் ஆகும். மதுரகவியாழ்வார், தாமிரபரணி நீரைக் காய்ச்சி உருவாக்கிய நம்மாழ்வாரின் விக்கிரகத்தையும் ஆழ்வார் திருநகரியில் தரிசிக்கிறோம்.

ஆதிசேஷன் இராமாவதார காலத்தில் இலட்சுமணராக அவதரித்தார். அவரே திருக்குருகூரில் நம்மாழ்வாராக அவதரித்தார் என்று ஆழ்வார்கள் சரித்திரம் உரைக்கிறது. நம்மாழ்வார் மோனத்தவத்தில் ஆழ்ந்திருந்த புளியமரம் ஒன்று இன்றளவும் ஆழ்வார்திருநகரியில் உள்ளது. பொதுவாக, புளியமரத்து இலைகள் இரவில் மூடி கொள்ளும். அந்த இயற்கைக்கு மாறாக இப்புளிய மரம் இரவிலும் உறங்காமல் இருப்பதால் இதனை உறங்காப்புளி என்று போற்றுகின்றனர். இம்மரத்தில் ஒரு குழந்தையின் உருவம் காணப்படுகிறது.

ஆதிநாதவல்லி, குருகூர் வல்லி என்ற இரண்டு நாச்சியார்களும் தனித்தனி கோயிலில் எழுந்தருளியுள்ளனர். பெருமாளின் மூலவர் ஆதிநாதர் என்றும், உற்சவர் பொலிந்த பிரான் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

பிரமனுக்கு, பெருமாளே குருவாக வந்த இத்தலம் வியாழன் என்ற குருபகவானுக்கு உரியது.

### தென்திருப்பேரை

இந்தத்தலமும் நெல்லை - திருச்செந்தூர் சாலையில் உள்ளது. ஆழ்வார் திருநகரியிலிருந்து 5 கி.மீ. தொலைவில் தென் திருப்பேரை உள்ளது.

ஒருமுறை திருமகள், பெருமாள் தன்னைவிட, பூமாதேவியிடம் அதிக அன்பும் ஈடுபாடும் கொண்டுள்ளதாக எண்ணினாள். அந்த வருத்தத்தைத் திருமகள் துர்வாச முனிவரிடம் கூறினாள். பெருமாளுடன் நெருக்கமாக அமர்ந்திருந்த நேரத்தில் பூமாதேவி அங்கு வந்த துர்வாசரைக் கவனிக்காமல் இருந்து விட்டாள். அதனைக் காரணமாகக் கொண்ட துர்வாசர் பூமாதேவிக்கு சுயஉருவம் நீங்கித் திருமகளின் வடிவம் வருமாறு சபித்துவிட்டார். பூமாதேவி தன்னுடைய உருவத்தைப் பெற இங்குத் தவம் செய்தாள். இங்குள்ள புஷ்கரணியில் நீராடும் போது, இரண்டு மகரகுண்டலங்கள் கிடைத்தன. அவற்றைப் பெருமாள் அணிந்து கொண்டால் பொருத்தமாக இருக்கும் என்று பூமாதேவி எண்ணியபொழுது, பெருமாள் அங்குத் தோன்றினார். தனக்குக் கிடைத்த மகரகுண்டலங்களைப் பெருமாளுக்கு அணிவித்தாள். அப்போது, பூமாதேவிக்கு அவளுடைய உண்மை உருவம் மீண்டது. பூமாதேவி, திருவின் பெயரைத் தாங்கித்தவம் செய்த இத்தலம் திருப்பேரை என்று அழைக்கப்பட்டது. பெருமாளுக்கு மகர நெடுங்குழைக்காதன் என்று பெயர் ஏற்பட்டது.

மகரநெடுங்குழைக்காதன் வீற்றிருந்த திருக்கோலத்தில் கிழக்கு நோக்கி தரிசனம் தருகிறார். மகரநெடுங்குழைக்காது நாச்சியார், பேரை நாச்சியார் என்ற பிராட்டியர் இருவரும் தனித்தனி சன்னதியில் எழுந்தருளியுள்ளனர். பெருமாளின் மகரநெடுங்குழைக் காதுகள் வெள்ளிக் கவசத்தில் பளிச்சென்று திகழ்கின்றன.

திருப்புன்கூர் என்ற தலத்துச் சிவபெருமான், நந்தனார் தன்னை எளிதில் தரிசிக்கும் வகையில் நந்திதேவரை, 'சற்றே விலகியிரும் பிள்ளாய்!" என்று பணித்தார். அதே வகையில் திருப்பேரை பெருமாளும், கருடபகவானை அவ்வாறு விலகியிருக்கச் செய்துள்ளார். எட்டியிருந்து







சேவிக்கும் வேதவித்துக்களையும், ஆடியோடி விளையாடும் குழந்தைகளின் அழகையும் நேரில் காண விரும்பி பெருமாள், கருட பகவானை சற்றே விலகியிருக்கப் பணித்தார் என்று கூறுகின்றனர்.

மகரநெடுங்குழைக்காதன் மீதும் நம்மாழ்வார் மீதும் பெரும் பக்தி கொண்டிருந்த **நாராயண தீட்சிதர்** என்ற தமிழ்ப்புலவர் இத்தலத்தில் வாழ்ந்திருந்தார். திருப்பேரைப் பகுதியில் வாழ்ந்துவந்த வைணவர்களுக்கு, அரசாங்கத்திற்கு உரிய நிலவரியைச் செலுத்த இயலாத நிலை ஏற்பட்டது. அரசாங்க அதிகாரிகள் அவர்களைக் கைது செய்து, சிறையில் அடைத்து விட்டனர். சிறைப்பட்டவர்களில் நாராயண தீட்சிதரும் ஒருவர்.

அப்போது, **வடமலையப்பிள்ளை** என்பவர் **சொக்கநாத நாயக்கர்** என்ற அரசரின் பிரதிநிதியாகப் பணியாற்றி வந்தார். அவர் பல்வேறு அறப்பணிகளைச் செய்தவர். தமிழ்ப்புலவர்களை ஆதரித்தவர். சிறைப்பட்டிருந்த நாராயண தீட்சிதர் மிகவும் வருந்தியவராய் ஒரு பாடலை உரக்கப் பாடினார்.

"மகரநெடுங்குழைக் காதனின் பக்தர்களாகிய நாங்கள் சிறைப்படுவதா? நாங்கள் சிறைப்பட்ட செய்தியை வடமலைப்பிள்ளைக்கு அறிவிப்பாரும் இல்லையோ?" என்ற பொருளமைந்த பாடலை உரக்கப்பாடினார். அப்பாடலைக் கேட்ட சிறைக் காவலர் ஒருவர் விரைந்து சென்று வடமலைப்பரிடம் கூறினார். "ஒரு தமிழ்ப்புலவர் சிறைப்பட்டுவிட்டாரா? பெருந் தவறு அல்லவா?" என்று எண்ணி வடமலையப்பர் உள்ளம் பதைத்தார். விரைந்தோடி வந்து நாராயண தீட்சிதரையும் மற்ற வைணவர்களையும் விடுதலை செய்தார். அடியார்களின் காலில் விழுந்து வணங்கிய வடமலையப்பர், நாராயண தீட்சிதரை அரண்மனைக்கு அழைத்துச் சென்று கௌரவித்தார். அரசாங்க மரியாதைகள் பெற்றுத் திரும்பிய நாராயண தீட்சிதர்,

**ஆடகச் சேவடியாயல் எமது**
**ஆவியளித்தனை கார்க்கோடகப்**
**பாவிகள்வாராமற் காத்தனை**

என்று பெருமாளைப் புகழ்ந்து பாடினார். ஆழ்வார் பாசுரங்களுடன் நாராயண தீட்சிதரின் பாடல்களையும் பாடும் வழக்கம் திருப்பேரையில் உள்ளது.

வருணன் வழிப்பட்ட திருப்பேரைப் பெருமாள் **நீர்வளத்தையும் நிலவளத்தையும்** அருளுவார். திருப்பேரை **சுக்கிரன் தலம்.** அதனால், இப்பெருமாள் **செல்வவளமும்** சேர்ப்பார்.

## திருப்பெருங்குளம்

திருப்பெருங்குளமும் நெல்லை - திருச்செந்தூர் வழித்தடத்தில் உள்ளது. பெரிய குளம் உள்ள ஊர் என்ற பொருளில் முற்காலத்தில் இத்தலத்தைக் **குளந்தை** என்று அழைத்தனர்.

**வேங்கடவாணன்** என்ற திருநாமத்துடன் பெருமாள் இங்குக் காட்சி தருகிறார். தாயாரும் மூலஸ்தானப் பெருமாளுடன் இருப்பதால் அவருக்குத் தனி சன்னதி இல்லை. ஆனந்த விமானத்தின் கீழ் பெருமாள் காட்சியளிக்கிறார்.

உற்சவமூர்த்திப் பெருமாளுக்கு **மாயக் கூத்தன்** என்ற சிறப்புப் பெயர் உள்ளது. **கமலாவதி, வேதசாரண் - குமுதவல்லி** தம்பதியரின் பெண்ணாவாள். கோதையைப் போல், கமலாவதியும் நாராயணனையே மணம் செய்து கொள்ளும் இலட்சியத்தைக் கொண்டிருந்தாள். பெருமாள் கமலாவதியை மணியாக மாற்றி, தன் மார்பில் அணிந்து கொண்டான்.

கமலாவதியின் தாய் குமுதவல்லியை, **அஸ்மாசாரண்** என்ற அசுரன் கடத்திச் சென்று இமயத்தில் சிறைவைத்தான். வேதசாரண் பெருமாளிடம் முறையிட்டார். அவர், குமுதவல்லியை மீட்டு வந்து கணவனுடன் சேர்த்து வைத்தார். பெருமாளிடம் சினம் கொண்ட அஸ்மாசாரண் அவரை எதிர்த்துப் போரிட்டான். பெருமாள் அவனை வதைத்தார். அவனுடைய உடல் மீது கூத்தாடினார். அதனால், பெருங்குளப் பெருமாளுக்கு **மாயக்கூத்தன்** என்ற பெயரும் வழங்கலாயிற்று.

பெருங்குளப் பெருமாள் அஸ்மாசாரனுடன் போர் செய்த பொழுது, கருடபகவான் அவருக்கு உதவியாக இருந்தார். அதனால், இத்தலத்துப் பெருமாள், கருடனுக்குத்

www.TheMagnet.com





தன்னுடன் சரியாசனம் அளித்து அமரச் செய்துள்ளார். உற்சவ மூர்த்தத்தின் பீடத்தில் இந்த சரியாசனக் கோலத்தைத் தரிசிக்கலாம்.

நம்மாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ள திருப்பெருங்குளம் **சனிபகவானுக்கு** உரிய திருத்தலமாகும்.

## இரட்டைத் திருப்பதி

திருநெல்வேலி திருச்செந்தூர் வழித்தடத்தில் **மங்களக்குறிச்சி** என்ற கிராமம் உள்ளது. அங்கிருந்து நான்கு கி.மீ தொலைவில் உள்ளது **திருத்தொலைவில்லி மங்கலம்** என்னும் திருமால் திருத்தலம். இத்தலத்திலுள்ள இரண்டு விஷ்ணு ஆலயங்களே இரட்டைத் திருப்பதியாகும். அவை முறையே, **தெற்குத் திருக்கோயில், வடக்குத் திருக்கோயில்** என்று அழைக்கப்படுகின்றன. அதிக மக்கள் நடமாட்டம் இல்லாத வனப்பகுதியில் இத்தலங்கள் உள்ளன. அதனால் மாலை ஐந்து மணிக்கே திருக்கோயில்களின் நடைசாத்தப்பட்டுவிடும்.

**ஆத்ரேய சுப்ரபர்** என்ற முனிவர் **வேள்விச்சாலை** அமைக்க விரும்பி இத்தலத்தில் பூமியைத் தோண்டும் பொழுது, ஒரு வில்லும் தராசும் கிடைத்தது. முனிவர் அவற்றைத் தொட்டு எடுத்தவுடன், வில், ஓர் ஆணாக உருப்பெற்றது. தராசு, பெண்ணாக உருவெடுத்தது. இந்திரனின் சாபத்தால் தாங்கள் வில்லாகவும், தராசாகவும் புதையுண்டு கிடந்ததாகக் கூறிய அத்தம்பதியினர், முனிவரை வணங்கித் தங்கள் உலகத்திற்குச் சென்றனர். இது. தொலைவில்லி மங்கலத்தின் தலவரலாறு.

சுப்ரபர் வேள்வியைச் சிறப்பாக நடத்தி தேவர்கள் அனைவருக்கும் ஆகுதிகள் கொடுத்தார். அதனால் மகிழ்ந்த தேவர்கள் இத்தலத்துக்கு வந்து, பெருமாளைப் போற்றினர். பெருமாள் தேவர்களுக்கு இத்தலத்தில் திருக்காட்சி அளித்தார். அதனால், தெற்குக் கோயில் பெருமாள், **தேவர்பிரான்** என்ற பெயருடன் கிழக்கு, நோக்கி, நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். தேவர்பிரான், ஸ்ரீநிவாசன் என்ற மற்றொருபெயருடன் அலர்மேல்மங்கைத் தாயாருடன் விளங்குகிறார். தாயாருக்குத்தனி சன்னதி இல்லை.

**வருணதீர்த்தம்** என்ற தீர்த்தத்தை உடைய இத்தலம் **இராகு பகவானுக்கு** உரிய தலமாகும்.

வேள்வி நிறைவேறிய பின்பும் ஆத்ரேய சுப்ரயர், தொலைவில்லி மங்கலத்திலேயே தங்கிவிட்டார். அவர் நாள்தோறும் அழகான தாமரை மலர்களைக் கொணர்ந்து பெருமாளுக்கு அர்ச்சனை செய்து வந்தார். சுப்ரபர், தாமரை மலர்களை எங்கிருந்து கொணர்கிறார் என்று அறிய முற்பட்டார் பெருமாள். ஒருநாள் வடக்கு நோக்கிச் சென்று சுப்ரபர் மலர் எடுத்து வந்த தடாகத்தைக் கண்டார். தாமரைப் பிரியரான பெருமாள் அங்கு, சுப்ரருக்குக் காட்சி அருளினார், சுப்ரபர் மகிழ்ந்தார்.

பெருமாள் அந்த இடத்திலும் கோயில்கொள்ளத் திருவுள்ளம் கொண்டதாகக் கூறினார். அந்த மலர் அர்ச்சனையால் மகிழ்ந்து, காட்சியருளிய பெருமாளுக்கு, சுப்ரபர் அந்த இடத்தில் கோயில் கட்டி, பெருமாளை எழுந்தருளச் செய்தார். அதன்பிறகு, தொலைவில்லிமங்கலத்தில், தெற்குக் கோயில், வடக்குக் கோயில் என்ற இரட்டைத் திருப்பதிகள் இடம் பெற்றன.

தாமரைமலரை விரும்பும் தாமரைக் கண்ணனாகிய பெருமாள், வடக்குக் கோயிலில் **அரவிந்த லோசனன்** என்ற பெயருடன் வீற்றிருந்த கோலத்தில் எழுந்தருளியுள்ளார். உற்சவரைத் **தாமரைக்கண்ணன்** என்ற தமிழ்ப் பெயரால் குறிப்பிடுகின்றனர். இத்தலத்துத் தாயார், **கருந்தடங்கண்ணி** என்ற நாமத்துடன் காட்சியருளுகிறார்.

**தாமிரபரணி, வருண தீர்த்தம்** என்ற இரண்டும் இரட்டைத் திருப்பதிகளின் தீர்த்தங்களாக விளங்குகின்றன. **விபீஷகன்** என்பவர் வருண தீர்த்தத்தில் நீராடி, இப்பெருமாளைத் தாமரை மலர்களால் அர்ச்சித்து, தன்னுடைய தொழுநோய் நீங்கப் பெற்றார் என்றும் தலவரலாறு கூறுகிறது.

வடக்குத் திருக்கோயில் **கேது பகவானுக்கு** உரிய திருத்தலம் ஆகும்.

நவகோள்களும் நலமே நல்கிட, நாம் நவதிருப்பதி தரிசனம் செய்வோம்! நாராயணனின் திருவருளும் பெறுவோம். ●

# கோயில்கள்

**கோ**யில்களில் ஐந்து வகை நமஸ்காரங்கள் செய்கின்றோம். அவைகள், **ஏகாங்க, திரியாங்க, பஞ்சாங்க, அஷ்டாங்க** மற்றும் **சாஷ்டாங்க** என்பன. **ஏகாங்க** சிரசை மட்டும் தாழ்த்துதல். **திரியாங்க** சிரசை தாழ்த்தி இரண்டு கைகளையும் கூப்பி நமஸ்காரம் செய்வது. **பஞ்சாங்க** இரண்டு பாதங்களும், இரண்டு கரங்களும், தலை ஆக இவை ஐந்தும் நிலத்தில் படும்படி வணங்குவது. (பெண்கள் இவ்வாறு தான் வணங்க வேண்டும்.) **அஷ்டாங்க** இரண்டு கரங்களும், இரண்டு பாதங்களும், இரண்டு புஜங்களும், மார்பும், தலை இவை எட்டும் நிலத்தில் அழுந்த நமஸ்காரம் செய்வது. (ஆண்கள் இப்படித்தான் வணங்க வேண்டும்). **சாஷ்டாங்க** தடி போல தலையில் விழுந்து வணங்குவது. இடை தண்டனிடுதல் என்பார்கள். ஆதாரமில்லாத ஒரு தடி எப்படி கீழே விழுமோ அதைப் போல விழுந்து பகவானிடம் தன்னை முழுமையாக அர்ப்பணிப்பது. இதை ஆடவர்கள் மட்டும் செய்ய வேண்டும்.

கோயிலுக்கு வெறுங்கையுடன் செல்லலாகாது. கற்பூரமோ, பூவோ, ஊதுபத்தியோ (சந்தனதிரி), எண்ணையோ



கொண்டு செல்ல வேண்டும். வெற்றிலை, பாக்கு, தேங்காய், பழம் முதலியவற்றையும் கொண்டு செல்லவும். பச்சை நிறமான வெற்றிலை **புதன் பகவானுக்கு** உரியது. வெற்றிலை வெற்றியை தரும். அவர் நம்மை நல்ல வழியில் நடத்த வைப்பார். பாக்கு **செவ்வாய்க்கு** உகந்ததாகும். பாக்கு அரக்கு நிறம். பிறரிடம் நாம் கை ஏந்தாமல் வாழ வைப்பார். பழம் கொண்டு செல்கிறோம். இந்தப்பழம் **குரு**வுக் கான மஞ்சள் நிறம். படிப்பு, வேலை, குடும்ப வாழ்க்கை எல்லாம் மிகவும் சிறப்பாக இருக் க அருள் புரிவார். வாழையடி வாழையாக என் குலத்தை ஒரு குறையும் இல்லாமல் வாழ வைக்கும் என்பதைக் குறிக்கிறது. தேங்காய் வெண்மையாக இருக்கும். வெண்மை **சுக்கிரனுக்கு** உரியது. எல்லா சந்தோஷமும் கிடைக்கும். நம்முடைய உள்ளத்தில் ஏற்படும் சங்கடங்களை போக்குவதற்கு பிரச்சனைகள் மறைய தேங்காயை சாமிக்கு உடைக்கின்றோம். தேங்காயைப் போல, மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

கோயில்களில் விக்ரகங்களில் **பால்** அபிஷேகம் செய்வது நம்முடைய குழந்தைப் பருவத்தை காட்டுகிறது. பகவானின் அருளை பெறுவதற்கு உறுதி மொழி எடுத்துக் கொள் என்று உணர்த்துகிறது. **தயிர்** அபிஷேகம் செய்யும் போது, குழந்தைப் பருவத்தில் இருந்து வளர்ந்து விட்டாய். பால், தயிராகி விட்டது என்பதை உள்ளத்தால் உணர்வாய் என்பதை விளக்குகிறது. பஞ்சாமிர்த அபிஷேகம் மனம் என்ற தேர் ஐந்து பூதங்களால் இழுத்துச் செல்லப்படுகிறது. ஆகவே நீ எப்போதும் ஐம்புலன்களையும் அடக்கி வாழப் பழகிக் கொள் என்று கூறுகிறது.

**சந்தன** அபிஷேகம் நாம் சந்தனம் போல பிறருக் காக உழைத்து, **பன்னீர்** போல பிறர் மகிழ நாம் மணம் வீசலாம் என்பதை உணர்த்த சந்தனத்தோடு பன்னீர் அபிஷேகம் செய்கின்றோம். **விபூதி** அபிஷேகம் செய்வது நாம் வளர்கிறோம், நமக்கு வாழ்க்கையில் பலவித ஆசைகள், பணம், பதவி, வசதி என்று மனம் எப்போதும், எதையாவது எதிர்பார்க்கின்றது. ஆனால் கடைசியில் நாம் ஒரு பிடி சாம்பல் ஆவோம் என்பதை விபூதி அபிஷேகம் நமக்கு உணர்த்துகிறது.



ஆலப்புழை உமாஹரிஹரன்

தீபாராதனையில் வரிசையாக **அலங்கார தீபம், ஐந்து தீபம், மூன்று தீபம், ஒரு தீபம்** என்று காட்டுவார்கள். கடைசியில் **கற்பூர தீபம்** என்று காட்டுவார்கள். பல வகையாக காணப்படுகின்ற இந்த உலகம் ஐம்பூதங்களில் ஒடுங்கி, அது முக்குணங்களில் ஒடுங்கி, அதுவும் ஒன்றுபட்டு, முடிவில் திரியின் கரியான அகங்காரமும் அழிந்து, கற்பூரம் போல நிர்குணமான பரம் பொருளில் மறைகிறது என்பதை நமக்கு புரிய வைக்கிறது. கற்பூரம் எரிகிறது. அது கரியோ, சாம்பலோ இல்லாமல் மறையும். ஆன்மாவானது பகவானுடைய அருட்ஜோதியில் கரைந்து ஒன்றாகும். இதை தாயுமானவர் கூறும் போது,

***தீதணையாக கற்பூர தீபமென நான் கண்ட ஜோதியுடன் ஒன்றித் துரிசறுப்பது எந்நாளோ***

என்று கூறுகிறார்.

> **பெருமாள் கோயிலில் சடாரி வைப்பதன் தத்துவம்... சடாரி மூலம் தான் பகவானின் திருவடிகளில் நம் தலையை சமர்ப்பிப்பது சாத்தியம்.**

**அபிஷேகம்** செய்வதால் நம்முடைய பாபம் அகலும். **பீட பூஜை** அரசாட்சியை தரும். **புஷ்பம்** சௌக்கியத்தை தரும். **ஹோமம்** செய்வதால் ஸர்வகாம ஸமிருத் தரும். **ஜெபம்** செய்வதால் அஷ்டைஸ்வர்யமும் அளிக்கும். **நமஸ்காரம்** செய்வதால் நான்கு புருஷார்த்தங்களையும் கொடுக்கும். **தாம்பூலம்** லக்ஷ்மிகடாக்ஷத்தை தரும். **நைவேத்தியம்** செய்வதால் மஹா போகத்தை தரும். **தீபம்** ஏற்றுவதால் உடலுக்கு புத்துணர்ச்சி கிடைக்கும்.

கோயில்களில் உள்ள படிகள் நமக்கு பல அர்த்தங்களை உணர்த்துகிறது. 4 படிகள் என்பது நான்கு வித **வேதங்களை** குறிக்கிறது. 5 படிகள் என்பது நமச்சிவாயா என்ற **பஞ்சாட்சரங்களை** குறிக்கிறது. 6 படிகள் என்பது **வேதங்களின் அங்கங்கள்** 6 என்பதைக் குறிக்கும். 8 படிகள் என்பது **ஓம் நமோ நாராயணாய** என்ற எட்டெழுத்தைக்குறிக்கும். 12 படிகள் என்பது **12 ராசிகளைக்** குறிக்கிறது. 18 படிகள் என்பது **18 புராணத்தையும்,** பகவத் கீதையின் **18 அத்தியாயங்களையும்** குறிக்கும். 24 படிகள் **காயத்ரி மந்திர எழுத்துக்கள்** 24யும் குறிக்கும். 36 படிகள் **36 தத்துவங்களை** குறிக்கும். 60 படிகள் என்பது **60 தமிழ் ஆண்டுகளைக்** குறிக்கும்.

கோயிலில் பிரதக்ஷிணம் செய்வது நமக்கு புண்ணியத்தை தரும். 3 பிரதக்ஷிணம் செய்தால் **இஷ்ட சித்தி** தரும். 5 பிரதக்ஷிணம் செய்தால் **வெற்றி** கிடைக்கும். 7 பிரதக்ஷிணம் செய்தால் **விரோதிகள்** அழிவர். 9 முறை பிரதக்ஷிணம் செய்தால் **சந்தான பாக் யம்** கிடைக்கும். 11 முறை பிரதக்ஷிணம் செய்தால் **ஆயுள் விருத்தி** உண்டாகும். 13 முறை பிரதக்ஷிணம் செய்தால் பிரார்த்தனை **வெற்றி** அடையும். 15 முறை பிரதக்ஷிணம் செய்தால் **தனப்ராப்தி** கிடைக்கும். 17 முறை பிரதக்ஷிணம் செய்தால் **தன, தான்ய விருத்தி** உண்டாகும். 19 முறை பிரதக்ஷிணம் செய்தால் **ரோக நிவர்த்தி**யாகும். 21 முறை பிரதக்ஷிணம் செய்தால் **வித்யா விருத்தி**யாகும். 23, 25 முறை பிரதக்ஷிணம் செய்தால் **சுக சௌபாக்கியம்** கிடைக்கும். 108 முறை பிரதக்ஷிணம் **இஷ்டத்தை அளிக்கும்.** 208 முறை பிரதக்ஷிணம் செய்தால் **அதிராத்ர யாகம் செய்த பலன்** கிடைக்கும். 308 முறை பிரதக்ஷிணம் செய்தால் **அப்தோர்யாம யாகம் செய்த பலன்** கிடைக்கும். 408 முறை பிரதக்ஷிணம் செய்தால் **கோமேதயாகம் செய்த பலன்** கிடைக்கும். 508 முறை பிரதக்ஷிணம் செய்தால் **ராஜஸூர்ய யாகம் செய்த பலன்** கிடைக்கும். 608 முறை பிரதக்ஷிணம் செய்தால் **அஸ்வமேதயாகம் செய்த பலன்** கிடைக்கும். 708 முறை பிரதக்ஷிணம் செய்தால் **நரமேத யாகம் செய்த பலன்** கிடைக்கும். 808 முறை பிரதக்ஷிணம் செய்தால் **கோடி பசு தானம் செய்த பலன்** கிடைக்கும். 908 முறை பிரதக்ஷிணம் செய்தால் **பௌண்டரீக யாகம் செய்த பலன்** கிடைக்கும். 1008 முறை பிரதக்ஷிணம்

செய்தால் **1 வருடம் தீக்ஷையுடன் யாகம் செய்த பலன்** கிடைக்கும்.

தேவர்கள், அசுரர்கள் இருவரும் போரிட்ட போது, அவரவர் பாணங்களில் தேவதைகளின் நாமங்களையும், சித்திரங்களையும் எழுதி வந்தனர். மேலும் தங்களுடைய இஷ்ட தேவதையின் உருவத்தை துணிகளில் வரைந்து, தேரின் உச்சியிலேயே கொடியாக கட்டி, பறக்க விட்டனர். அதுவே பிறகு எப்போதும் நிரந்தரமானது. எல்லா கோயில்களிலும் துவஜஸ்தம்பம் அதாவது கொடி மரம் அவசியம் இருக் க வேண்டும் என்று எல்லோரும் நிச்சயித்தனர். அதற்கு தேவையான மரம் பார்த்து, பழுது இல்லாமல் சாஸ்திர விதிப்படி வாங்கப்பட்டது. மேல் மாடம் வரை அதன் உயரம் இருக் க வேண்டும். அந்த கொடியில் அந்தந்த கோயிலுக்கு உள்ள தெய்வத்தின் வாகனம் வரைபடமாக காணப்படும். கொடி மரம் இருக்கும் கோயிலுக்கே தேவதைகள் வாசம் செய்ய வருவார்கள். எல்லா தேவதைகளின் சான்னித்தியமும், கொடி மரத்தில் இருக்கும். அவர்கள் பக்தர்களுக்கு நன்மையை செய்வார்கள்.

கொடி மரம் என்பது சூட்சம லிங்கம். அசுரர்களை அகற்றும் பொருட்டும் கணங்களையும், தேவர்களையும் அழைக்கும் பொருட்டும், பக்தர்களை பாதுகாக்க, ஒவ்வொரு ஆலயத்திலும் கொடி மரம் வைக்கிறார்கள். கொடி மரத்தில் 33 கணுக்கள் இருப்பது சிறந்தது. கொடி மரத்தின் நீளம், ஆலயத்துக்கு ஏற்றப்படி காணப்படும். அதாவது கொடி மரத்தை சாய்த்து வைத்தால் கொடி மரத்தின் மற்ற பாகம் மூல சன்னதியின் படி வரை இருக்கும். கொடி மரம் என்பது **சந்தனம், தேவதாரு, செண்பகம், வில்வம், மகிழம்** போன்ற மரத்தின் தடியால் செய்வார்கள். கொடி மரத்தில் 5ல் ஒரு பாகம் பூமிக்கு அடியில் இருக்கும்.

அடியிலிருந்து உச்சி வரை ஏழு பாகமாக வகுப்பார்கள். அதாவது, **சதுர, கோண, விருத்த** வடிவத்தில் இருக்கும். சதுரம் பிரம்மா பாகம். அதற்கு மேல் எண்கோண வடிவம் விஷ்ணு பாகம். அதற்கு மேல் ருத்ர



பாகம். இதனுடைய பீடத்தை பத்ர பீடம் என்பார்கள். கொடி மரத்தை கயிற்றால் சுற்றி இருப்பார்கள். ஆன்மாவை பாசக் கயிறு சுற்றியிருப்பதை இது நினைவுப் படுத்தும். நாம் நம்முடைய பாசக்கட்டு அறுபடுமாறு பகவானிடம் மனதை பலியிட வேண்டும் என்பதை இந்தக் கயிறு உணர்த்துகிறது.

கொடி மரத்தின் மேல் நந்தி இருந்தால் சிவன் கோயில். கருடன் இருந்தால் பெருமாள் கோயில். சிங்கம் இருந்தால் சக்தி கோயில். மூஷிகம் இருந்தால் கணபதி கோயில். மயில் இருந்தால் முருகன் கோயில் ஆகும்.

ஒவ்வொரு கோயிலிலும், அங்குள்ள மூர்த்திக்கும் யந்திர, மந்திர முறைகள் உள்ளது. இந்த மந்திர சக்தியால் கோயில்களின் பெருமையை தெரிந்து கொள்ள முடியும். கோபுரம் சுவர்களின் பரிணாம விளக்கம் ஆகும். கோயிலுள்ள கொடி மரம் யோக சக்தியை விளக்குகிறது. பலி பீடம் நம்முடைய தேவையற்ற ஆசைகளை உடலில் இருந்து அகற்றுகிறது.

கோயில் கோபுரத்தில் உள்ள பொம்மைகள், இந்த இந்த இடத்தில் இன்ன இன்ன பொம்மைகளை வைக் க

www.TheMagnet.com

வேண்டும் என்ற நியதி உண்டு. அடி பாகத்தில் பிரம்மதேவர், சம்பந்தப்பட்ட பொம்மைகள். மேலே சிவபெருமான் சம்பந்தப்பட்ட பொம்மைகள், நடுவில் மஹாவிஷ்ணு சம்பந்தப்பட்ட பொம்மைகள் என்று வைப்பார்கள். இதுவே பொது விதி. கோபுரத்தின் பக்கங்களில் ரிஷிகள், பக்தர்கள், பூத கணங்கள், முதலிய உருவங்கள் அமைக் கப்பட்டிருக்கும். கோயிலில் உள்ள மற்ற கோபுரங்களை விட உயர்ந்ததாக இருப்பது **ராஜ கோபுரம்**. இதை **ஸ்தூலலிங்கம்** என்பர். வெகு தூரத்தில் இருப்பவரும் கை கூப்பி வணங்குவதற்கு ஏற்ப தூரத்தில் இருந்து பார்த்தாலும் தெரியும். 3, 5, 7, 9, 11 என்ற



எண்ணிக்கையில் அமைந்த வாயில்களை உடையதாக காணப்படும்.

கோயில் கட்டும் போது, பலவித சாஸ்திர முறையில் கட்டப்படுகிறது. நாம் நினைப்பது போல அவ்வளவு சுலபமல்ல. ஒவ்வொரு பாகமும், பார்த்து, ஆலோசித்து, பல பூஜைகளுடனும், சாஸ்திரத்துக்கு பங்கம் விளைவிக்காமலும் கட்டப்படுவது ஆகும். உதாரணமாக **சிதம்பரத்தில்** உள்ள **சிற்ப சபையும், கனக சபையும்** சேர்ந்ததே **ஞான சபையாகும்**. இதை **பொன்னம்பலம்** என்றும் கூறுவார்கள். இங்குள்ள 9 கலசமும், 9 சக்திகளையும் உணர்த்துகிறது. இங்குள்ள 64 கைம்மரங்கள், 64 கலைகளை உணர்த்துகிறது. மனிதனுடைய சுவாச சஞ்சார நாடிகள் 72000 ஆகும். இங்கு ஆணிகள் 72000 அடிக்கப்பட்டு உள்ளது. ஒவ்வொரு நாளும் மனிதன் விடும் சுவாசக் காற்று 21600. இதன்படி இங்கு 21600 பொன் ஓடுகள் வேயப்பட்டுள்ளன. இங்குள்ள **5 படிகள்** ஐந்து எழுத்து மந்திரத்தை உணர்த்துகிறது. **18 தூண்கள் பதினென் புராணத்தை உணர்த்துகிறது.**

கோயிலில் தெய்வ உருவங்களை பிரதிஷ்டை செய்வதற்கும், வேள்வியும், விழாவும் செய்வதற்கும், ஏற்பட்ட நூலே **ஆகமங்கள்**. பகவானின் முகத்தில் இருந்து உண்டான **காமீகம்** முதலான 28 ஆகமங்களும், **சிரியாபாதம், கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம்** என்ற நான்கு பிரிவை உடையதாகும்.

சிவன் கோயிலில் அபிஷேக தீர்த்தம் வெளியே விழும் கோ முகத்தில் **வாமா, ஜயேஷ்டா, ரௌத்ரி, காளி, களவி, கரணி, பலவிகரணி, பலப்பதனி, ஸரந்வபூமி, மனோன்மணி** என்ற 9 நவ கன்னிகைகள் வாசம் செய்கிறார்கள். நவசக்தி கன்னி **திப்யோ நம** என்று சொல்லி கோ முகத்தின் மீது பூவை போடுவார்கள்.

மாலறநேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே
என்பது சிவஞான போதம்.

தேவர்களாலும், முனிவர்களாலும், ஆழ்வார்களாலும், ஆன்றோர்களாலும் நிறுவப்பட்டு வழிபட்ட காரணத்தால் மேன்மை அடைந்துள்ளது ஆலயம். ஆலயம் சென்று வழிபடுங்கள். கோபுர தரிசனம் செய்வதாலும், மாலையில் கருட தரிசனம் செய்வதாலும் சிறப்பான பலன் கிடைக்கும்.

மனிதனை தெய்வமாக்கும் திருப்பணிக்காக கோயில்கள் கட்டப்பட்டதால், கோயிலின் அமைப்பும் மனித உடம்பின் உருவமாகவே அமைந்துள்ளது என்பதை ஆகமங்கள் உணர்த்துகிறது. மனிதனின் **தலை** பாகம் **கருவறை, கழுத்து** பாகம் **அருத்த மண்டபம்**, இரண்டு **தோள்கள்**, இரண்டு **காவல் தெய்வங்கள், வயிற்றுப்பகுதி.**

**மகா மண்டபம், கைகளும் பிற உறுப்புகளும் திருச்சுற்று. முதுகு தண்டு கொடி மரம், கால்கள்** மற்றும் **கோபுரம்.** அதாவது மனிதன் மேற்கில் தலை வைத்து, கிழக்கில் கால் நீட்டி மல்லாந்து படுத்திருப்பதைப் போல, கோயிலின் அமைப்பு காணப்படுகிறது.

இதம், சரீரம் கௌந்தேய, க்ஷேத்ரமிதி அபிதீயதே என்று பகவான் கீதையில், நம் உடலை கோயிலாக கூறுகிறார். கோயில் என்பது மனித உடலின் சின்னம் என்கிறார்.

கோயில்களில் உள்ள சிலைகள் மந்திர சித்தி பெற்று உயரிய நிலையை அடைந்த ஆசார்ய புருஷர்களின் ஆத்ம சக்தியினால் பிராணப் பிரதிஷ்டை செய்யப்பட்ட தெய்வ உருவம் ஆகும். நம் உடலையே கோயிலாக அமைத்து முன்னோர்கள் வழிபட்டனர். **அன்மைய கோசம்** என்கின்ற உணவு உடம்பு. **பிராணமய கோசம்** என்கின்ற மூச்சு உடம்பு. **மனோமய கோசம்** என்கின்ற மன உடம்பு. **விந்நானமய கோசம்** என்கின்ற அறிவு உடம்பு. **ஆனந்தமய கோசம்** என்கின்ற இன்ப உடம்பு. இவை ஐந்துமே உடம்புகள். இந்த ஐந்தின் அடையாளமாகத்தான் ஆலயத்தில் ஐந்து பிரகாரங்கள் உள்ளது. கோயிலின் மேலே உள்ள ஏழு அடுக்கு பாதம், அடி வயிறு, மேல் வயிறு, தொப்புள், இதயம், தொண்டை, புருவ மத்தி ஆகியவைகள் ஆகும்.

www.TheMagnat.com

பெருமாள் கோயிலில் சடாரி வைப்பதன் தத்துவம், திருவடி நிலையே பாதுகை. பாதுகையே சடாரி. சடாரியே ஆழ்வார். சடகோபன் என்ற பாதுகை. அதாவது சடாரி மூலம் தான் பகவானின் திருவடிகளில் நம் தலையை சமர்ப்பிப்பது சாத்தியம். உடையவர் என்று வைணவர்கள் கூறுவர். கோயில்களில் கல்வெட்டில், திருச்சிற்றம்பலமுடையார் என்று காணப்படும். உடையார் என்ற சொல் எல்லாவற்றிலும் சேர்ந்து காணப்படும். உடையார் என்பது பகவானை குறிக்கும். குருவும், பகவானும் ஒன்று என்பதை வைணவர்கள் உணரத்தத்தான் ஸ்ரீ ராமனுஜரை உடையவர் என்று கூறுகிறார்கள்.

சிவன் கோயிலில் 5 பிரகாரங்கள் காணப்படும். இவை **அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம்.** இவை ஐந்தும் பஞ்ச கோசங்கள் ஆகும். பெருமாள் கோயிலில் 7 பிரகாரங்கள் காணப்படும். இவை **சாமம், மாமிசம், இரத்தம், மேதை, நரம்பு, எலும்பு, சுக்கிலம்** என்பன. இவைகள் ஸப்த தாதுக் களை குறிப்பவையாகும். பஞ்ச கோசங்களுடன், பிரணவத்தை கூட்டினால், **ஓம் நமசிவாயா** என்று ஸப்த தாதுக் களுடன் பிரணவம் சேர்ந்தால் ஓம் நமோ நாராயணா என்றாகும்.

கோயில்களில் 10 நாட்கள் உற்சவம் நடக்கும்.

**முதல் நாள் உற்சவம்** : தூல நீக்கத்தை உணர்த்துகிறது.

**இரண்டாம் நாள் உற்சவம்** : ஸ்தூல சூட்சும நீக்கத்தை உணர்த்துகிறது.

**மூன்றாம் நாள் உற்சவம்** : மூவினை



முக்குற்றம், மும்மலம், முக்குணம், முப்பிறப்பு முதலானவற்றை நீக்கும் தன்மையை அறிவிக்கிறது.

**நான்காம் நாள் உற்சவம்** : திருவிழா, அந்தக் கரணம் நான்கையும், நால் வகை தோற்றத்தையும் நீக்குவதாகும்.

**ஐந்தாம் நாள் உற்சவம்** : ஐம்பொறி, ஐந்து அவஸ்தைகள், ஐந்து மல நீக் கத்தையும் குறிக்கும்.

**ஆறாம் நாள் உற்சவம்** : காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சர்யம் என்ற ஆறும் ஆறு அத்துவா, ஆறு கண்மலங்கள்,

பதமுக்தி ஆறு என்ற ஆறு வகைகளை நீக்குவதை உணர்த்துகிறது.

**ஏழாம் நாள் உற்சவம் :** ஏழு வகை பிறப்புகள். காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை என்கின்ற வித்தியா தத்துவங்கள் ஏழு. அந்நானம் பொய், அயர்வு, மோகம், சூனியம், மாச்சர்யம், பயம் என்ற மாயையின் மலம் என்ற ஏழும் நீக்குவதாகும்.

**எட்டாம் நாள் உற்சவம் :** பரமசிவனுடைய எட்டு குணங்களையும் விளக்குகிறது.

**ஒன்பதாம் நாள் உற்சவம் :** நவபேதத்தை விளக்குகிறது.

**பத்தாம் நாள் உற்சவம் :** முடிவில்லாத சிவானந்தக் கடலில் மூழ்கியிருக்கும் தன்மையை குறிக்கிறது.

முதல் ஐந்து உற்சவ நாட்கள் விருத்திக் கிரம தொழிலையும், பின்னால் உள்ள இந்து நாட்கள் லயக்கிரம ஐந்தொழில் நடைபெறுவதையும் விளக்குகிறது-. பத்து நாட்கள் உற்சவமும், இதற்கு தகுந்தாற் போல வாகனங்களும் அமைக்கப்படும்.

கோயில் நிர்மாணம் நான்கு வகைப்படும். **ஆவர்த்தனம், அநாவர்த்தம், புனராவர்த்தம், அந்தரிதம்** என்பனவாகும்.

**ஆவர்த்தம் :** புதியதாக ஆலயம் கட்டி விக் ரக பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்வது ஆகும்.

**அநாவர்த்தம் :** ஆற்று வெள்ளம், பூமி அதிர்ச்சி, பூகம்பம், மழை, மணல் மூடுவது, இவைகளால் கோயில் சாத்தப்பட்டால், அதை மீண்டும் கட்டி விக்ரகங்களை புதுப்பிப்பது.

**புனராவர்த்தம் :** பல காலங்களுக்கு முன்னால் கட்டப்பட்ட கோயிலுக்கு தேவைப்படும் திருப்பணிகளை செய்து, அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் செய்வது ஆகும்.

**அந்தரிதம் :** திருட்டு, அசம்பாவிதம் போன்றவை நடந்து கோயில் கெட்டு விட்டால் அவைகளை சரி செய்வது ஆகும்.

கோயிலில் தினசரி நடக்கும் பூஜையை நித்தியம் என்று சொல்வார்கள். அதாவது தினமும் நடைபெறும் ஆறு கால பூஜை. **உஷத் காலம், கால சந்தி, உச்சி காலம், சாயரட்சை, பிரதோஷம், அர்த்த சாமம்** என்பவையே ஆறு கால பூஜை. சிறப்பு பூஜைகள் நடப்பதை **நைமித்திகம்** என்பர். வேண்டுதல், விருப்பம், முதலியவைகள் நடைபெறும் பூஜையை **காமியம்** என்பார்கள். தினசரி நடக்கும் ஆறு கால பூஜைகள், பல வித காரணங்களால், சில சமயம் முழுமையாக செய்ய முடிவதில்லை. அதை நிவர்த்தி செய்ய ஆண்டுக்கு ஒரு முறை உற்சவம் போல நடத்தி நித்ய பூஜையில் ஏற்பட்ட குறைகளை நீக்குகிறோம். பிரம்மோற்சவங்களிலும் ஏற்படக் கூடிய குறைகளை நீக்குவதற்கு பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை கும்பாபிஷேகம் செய்கின்றோம்.

இப்படி கோயில்களில் நடக்கும் திருவிழாவை எல்லா மக்களும் காண வேண்டும் என்பதை

***மண்ணிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்***
***அண்ணல் அடியார் தமையமுது செய்வித்தல்***
***கண்ணினால் அவர் நல விழாப்பொலிவு கண்டார்த்தல்***
***உண்மையா மெனிலுலகர் முன்வருகென வுரைப்பார்.***

என்று பெரியபுராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருக்கோயில் மூடி இருக்கும் போதும், திருவிழாவின் போது ஸ்வாமி உலா வரும் போதும், **திருமஞ்ஜனம் பூஜை செய்யும் போதும்,** திரையிட்டிருக்கும் போதும், கோயிலுக்குள் வலம் வந்து தரிசனம் செய்யக் கூடாது.

யத்ர தேவாலயோ நாஸ்திதத்ர வாஸம் நகாரயேத என்றனர் முன்னோர். கோயில்கள் இல்லாத ஊர்களில் குடியிருக்க வேண்டாம் என்பார்கள். நாம் மனம், சஞ்சலப்படும் போது கோயிலுக்கு சென்றால் மனதிற்கு சாந்தி கிடைக்கும். இங்கு நடத்தப்படும் பூஜைகள், மந்திர ஒலிகள் எல்லாம் சக்தியை கொடுக்கும் கதிர் வீச்சுகள். இதனால் நம்முடைய மனம் பக்குவ நிலைக்கு மாற்றப்படுகிறது. தினமும் கோயிலுக்கு சென்று, மன நிம்மதியை அடைவீர்களாக! ●

# நாளை பொற்காலம்

இயந்திர வாழ்க்கையில் நிதம் ஆடுகிறோம்,
இன்பத்தை தேடியே நாம் ஓடுகிறோம்,
உழைப்பை மறந்து ஏதோ தேடுகிறோம்,
உணர்வின்றி பூமியிலே தினம் வாழுகின்றோம்!

சோதனை என்பதே வாழ்க்கை – அதில்
சோர்ந்து விடாமல் இருப்பதே இயற்கை.
துணிவே வெற்றி வாய்ப்பின் கனவு,
துள்ளி வரவேண்டும் நம்மிடம் பணிவு!

பணிந்து போனவன் என்றும் வீழ்வதில்லை,
பள்ளத்திற்கு நீர் ஓட என்றும் தடையில்லை.
அளவுக்கு அதிகமாய் எழும் ஆசை,
அதுவே துன்பத்திற்கு வழிவகுக்கும் ஓசை!

இயற்கை மானுட சமுதாயத்தின் வரம்,
இயன்றவரை அதற்கு போடு நீ உரம்.
சொல்லில் வெளிவரும் நல்ல தரம்,
சொர்க்கம் மண்ணில் படைக்க அதுவே களம்!

அழுக்கை நீக்கினால் தூய்மை புலப்படும்,
ஆனந்தம் என்பதே இறைவனின் இருப்பிடம்.
அன்பு செய் கிடைக்கும் உயர்விடம்,
அரசின் வழி தொண்டே சிறப்புறும்!

நதிகளை போல் தினம் ஓடு,
நட்புடன் சுற்றத்தின் உதவியை நீ நாடு.
நம்பிக்கையுடன் சத்தியத்தில் வழி தேடு,
நாளை பொற்காலம் என்று தினம் பாடு !

**- இதயகீதம் ராமானுஜம்**

www.theMagnat.com

# இதயம் பேத்துகிறது!





இதயம் பேசுகிறது என்கிற தலைப்பு சற்று அசாதாரணமாகத் தெரியலாம்.

காரணம் இருக்கிறது. வெளிநாட்டுப் பயணக் கட்டுரைகளின் தில்லாலங்கடி என்று அறியப்படும் மணியன் தன்னுடைய கட்டுரைகளுக்கு இதயம் பேசுகிறது என்று பெயர் வைத்திருந்தார். நான் அப்படி ஒன்றும் அவரளவு அப்பா டக்கர் இல்லை என்கிறதால் என் வெளிநாட்டுப் பயண அனுபவங்களுக்கு இப்படிப் பெயர் வைக்கிறேன்!

"அடுத்த மாசம் நீ ஜப்பான் போக வேண்டியிருக்கும்" என்று என் பாஸ் சொன்ன போது என் காதில் கேட்டது சரிதானா என்கிற சந்தேகம் ஏற்பட்டது.

ஜப்பான் என்றா சொன்னார்? அல்லது ஜட்காவில் போக வேண்டியிருக்கும் என்றாரோ?

யமுனா நகரில் இருக்கும் சப்ளையர் ஒருத்தரைப் பார்க்க கார், போட், சைக்கிள் என்று பலதரப்பட்ட வாகனங்களில் போக வேண்டியிருந்தது. இப்போது ஃபரிதாபாத்தில் எவனையாவது ஜட்காவில் போய்ப் பார்க்க வேண்டுமோ?

"ஜப்பான்னா சொன்னீங்க?" என்று இன்னொருதரம் கேட்டு நிச்சயித்துக் கொண்டேன்.

அந்த நிமிஷத்திலிருந்து தீபாவளிக்குக் காத்திருக்கும் குழந்தை மாதிரி கவுண்ட் டவுனை ஆரம்பித்தேன்.

'கொன்னி சிவா', 'தொ மரியாத்தோ' என்று ஜப்பானிய மொழியை தப்பும் தவறுமாகக் கற்க ஆரம்பித்தேன். நான் வாங்க விரும்பும் எலேக்ரானிக் பொருட்கள் இந்தியா, இலங்கை, மலேஷியா, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளில் என்ன விலை விற்கிறது என்று ஆய்வு செய்தேன். ஜப்பானின் சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம், பொருளாதாரம் எல்லாவற்றையும் படித்தேன்.

விசாவுக்காக ஆறு மாச சம்பளத் தாள், வங்கி அறிக்கை, வருமான வரி பாரங்கள் என்று ஏதேதோ கேட்டிருந்தார்கள். சிலரிடம் வங்கி அறிக்கை A4 சைசில் இல்லை, சிலரிடம் பாரம் 16 இல்லை. ஆனால் டிராவல்ஸ் மனிதர் எது இல்லை என்றாலும் 'ப்ச் இட்ஸ் ஓக்கே' என்றார். பாஸ்போர்ட்டே இல்லை என்றால் கூட விசா வாங்கி விடுவார் போல ஓவர் கான்ஃபிடண்ட்டாக இருந்தார்.

**சி**ங்கப்பூர் விமான நிலையத்தில் பல மணி நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. கையில் சிங்கப்பூர் டாலர் இல்லாததால் காபி குடிக்கிறவர்களை சவலைக் குழந்தை போலப் பார்த்துக் கொண்டிருந்தோம். அமெரிக்க டாலரும் தரலாம் என்றதும் உற்சாகமாகக் காபி வாங்கிக் குடித்தோம். அமெரிக்க டாலர் கொடுத்து சிங்கப்பூர் டாலர் மீதம் வாங்குகையில் பணப் பரிமாற்றம் போலவே இல்லாமல் டிரேடு விளையாடுவது போல இருந்தது. அதற்கு முன் வெளிநாட்டுப்

**கே.ஜி.ஜவர்லால்**

TheMagnet.com

பணம் கையாண்டதே இல்லை. விமான நிலையத்தில் பொழுதைக் கழிப்பது எப்படி என்று இலவச புத்தகம் வைத்திருந்தார்கள். எங்கெங்கே என்னென்ன இருக்கிறது என்று படம் வரைந்து பாகங்களைக் குறித்திருந்தார்கள்.

சின்ன ஃபாஸ்ட் ஃபுட் கடையில் மலாய்ப் பெண் வியாபாரம் செய்து கொண்டிருந்தாள்.

"வாங்க சார், மீன் கறி தொட்டுக்கிட்டு நூடுல்ஸ் சாப்பிடலாம்" என்று நண்பன் அழைத்தான்.

"மீன் கறி தொட்டுக்க, தப்பித்தவறி மீன்காரியைத் தொட்டுடாதே" என்று எச்சரித்தேன்.

ஜப்பான் ஏர்லைன்ஸின் டபிள் டெக்கர் விமானத்தில் மாடியில் இடம் கிடைத்தது. சௌக்யமாகத் தூங்க முடிந்தது. ஆனால் ஏர் ஹோஸ்ட்டஸ் ஊர்க்காவலன் படத்தில் ராதிகா போல நடு ராத்திரி ஒன்றரை மணிக்கு எழுப்பி உப்புமா கொடுத்தாள். காரணம் அப்போது ஜப்பான் நேரம் காலை ஐந்து. ஜன்னல் வழியாகப் பார்த்தால் பளிச்சென்று வெய்யில்!

ஜப்பானியர்கள் பொது இடங்களில் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்கிறதே இல்லை. ஒரே குடும்பத்தவர்கள் என்றாலும் தலைக்கொரு புத்தகமோ, மொபைலோ வைத்துக் கொண்டு ஆழ்ந்து விடுகிறார்கள்.

சூட்கேஸில் இருந்த பருப்புப் பொடியை சந்தேகித்து ஒரு சிட்டிகை வாயில் போட்டுப் பார்த்தார் ஒரு சுங்க அதிகாரி. அவ்வளவு காரம் அவர்களுக்குப் பழக்கம் இல்லாததால் சட்டென்று விக்கல் எடுத்தது அவருக்கு.

"விக்கறார் சார்" என்றான் உடன் வந்திருந்த நண்பன்.

"என்னோடதுதானே? அதை எப்படி என் கிட்டேயே விக்க முடியும்?" என்றேன்.

விமான நிலைய வாசலில் அடுத்த பஸ் ஆறு ஐம்பத்தேழுக்கு வரும் என்று போட்டிருந்தார்கள், சகாமி ஓனோ போகிற பஸ் மிகச் சரியாக ஆறு ஐம்பத்தேழுக்கு வந்தது. தனியார் பஸ்தான் என்றாலும், நம்மூர் போல் ஒரு ஆள் 'சகாமி ஓனோ.. சகாமி ஓனோ' என்று பஸ்ஸைச் சுற்றி வந்து கட்டைத் தொண்டையில் கத்தவில்லை. டோல்களில் வண்டிகள் நிற்காமல் போய்க் கொண்டே இருக்கின்றன. ஆட்டோ ஸ்வைப்பில் டோல் வசூலிக்கிறார்கள்.

ஜப்பானில் ஜே ஆர் எனப்படும் ஜப்பான் ரயில்வேஸ், ஓ ஆர் எனப்படும் ஓடாக்யு ரயில்வேஸ் இரண்டும் இருக்கின்றன. அப்போது நம்மூரில் மெட்ரோ ரயில் வந்திருக்காததால் அதைக் கொஞ்சம் வாய்பிளந்து பார்த்தோம். அதிவேக ரயிலில் பயணம் செய்து பார்த்தோம். மூன்றரை மணி நேரம் பஸ்ஸில் போன தூரத்தை அந்த வண்டி இருபது நிமிடங்களில் போகிறது.

ஜப்பானியர்கள் பொது இடங்களில் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்கிறதே இல்லை. ஒரே குடும்பத்தவர்கள் என்றாலும் தலைக்கொரு புத்தகமோ, மொபைலோ வைத்துக் கொண்டு ஆழ்ந்து விடுகிறார்கள். பஸ்கள், ரயில்கள் சர்வ நிசப்தமாக இருக்கும். ஜப்பானியப் பெண்கள் உடை அணியும் விதத்துக்கும் அவர்களின் ஆட்டிட்யூடுக்கும் சம்பந்தமே இல்லை. ஒரு குட்டைப் பாவாடையோ அல்லது குட்டை கவுனோ அல்லது ஒட்டுச் சல்லடம் போல ஒரு நிக்கரோதான் போடுகிறார்கள். கழுத்து அபாயமாய் இறங்கிய சட்டைகள். ஆனால் ஆண்கள் யாராவது போய்ப் பேசினாலே,

'வெட்கம் அவளைப் பிடுங்கித் தின்றது' என்று கதாசிரியர்கள் எழுதுவது போல் நடந்து கொள்கிறார்கள்!

ஜப்பானின் Life Expectancy ரொம்ப ஜாஸ்தி. எண்பது அல்லது அதற்கு மிகுதியானவர்கள் பலரைக் காண முடிகிறது. அவர்களின் உணவில் கொலஸ்ட்ரால் இல்லை. கடுகெண்ணெய் உபயோகிக்கிறார்கள். கடல்வாழ் உயிரினங்கள்தான் நிறைய சாப்பிடுகிறார்கள். மட்டன், போர்க், கோழி எல்லாம் ரொம்ப அபூர்வம்.

www.TheMagnet.com

# தீபாவளி வாணங்கள்

- எஸ்.ஆர்.ஜி.சுந்தரம்

கைக்கெட்டும் தாரகைகள்
பிடிபடாத ஒளிப்பூக்கள்
கம்பி வாணம்!

வண்ண ஒளிப்பந்துகள்
விண்ணில் பெருங்குடையாய்!
ஆகாயப் பூவாணம்!

கருநாகப் பாம்பு!
கண்முன்னே அடக்கமாய்!
பாம்பு வாணம்!

இடைவெளியில்லா இடியொலி!
மேகமில்லை, மழையில்லை!
பத்தாயிரச் சரவெடி!



நான் பெரும்பாலும் பழங்கள், பழரசம், கீரை, பச்சைக் காய்கறி அவ்வளவுதான் சாப்பிட்டேன். கறி ரைஸு என்றொரு ஐட்டம் காலையுணவில் இருக்கிறது. திருவாதிரைக் கூட்டை எரிச்ச குழம்பாக கண்ட வைத்தது போன்ற ஒரு சமாச்சாரத்தை சாதத்தில் போட்டுக் கொண்டு சாப்பிடுவதுதான் கறி ரைஸு. ஆனால் அந்த திருவாதிரைக் கூட்டு உப்பு, உரைப்பு, புளிப்பு எதுவுமே இல்லாமல் பிரசவம் ஆனவர்களுக்குச் செய்த பத்திய சமையல் போல இருந்தது.

நாமெல்லாம் விசிட்டிங் கார்டை பொட்டிக் கடையில் பீடி வாங்குவது போல இரண்டு விரல்களுக்கு இடையில் பிடித்துத் தருவது போல அவர்கள் தருவதில்லை. கார்டை இரண்டு கைகளாலும் பிடித்து அரேபிய அடிமை போல இடுப்பை வளைத்து நீட்டுகிறார்கள். எங்களை வரவேற்க வந்திருந்த ஆசாமி அப்படித்தான் நீட்டினார்.

"சார்.. கராத்தேல கூட இப்படிப் பணிஞ்சி வணங்கிட்டுத்தான் கழுத்துல உதைப்பாங்க. ஜாக்கிரதை" என்றான் நண்பன்.

"இந்தாள் இருக்கிற உசரத்துக்கு என் கழுத்து அவன் காலுக்கு எட்டவே எட்டாது. ஒருக்கால் அவ்வளவு உசரம் தூக்க டிரை பண்ணினா மல்லாக்க விழுந்துடுவான்" என்றேன்.

ஜப்பான் ஹோட்டல் அறைகளில் இருக்கும் கார்ட் ஸ்வைப்பிங் கதவுகள் இப்போது நம் நாட்டிலும் வந்தாகிவிட்டன. ஆனால் அங்கே பைப் பிடித்தபடி சினிமா அப்பாக்கள் போட்டிருப்பார்களே அது மாதிரி இரவு உடைகள், பாத்ரூம் செருப்பு, ஹேர் டிரையர், ஷேவிங் செட், டூத் பிரஷ், பேஸ்ட், சோப்பு, ஷாம்ப்பூ, சீப்பு சாரி, சீப்பு எல்லாம் இருக்கின்றன. காஃபி மேக்கர், காபிப் பொடி, பால் எல்லாம் இருக்கிறது. ஃப்ரிஜ்ஜில் சரக்கு இருக்கிறது. வெளியில் காரிடாரில் ஐஸ் டிஸ்பென்ஸிங் மெஷின் ஓசிக்கு ஐஸ் தருகிறது. குடிக்கிற தண்ணீர் விலைக்குத்தான் வாங்க வேண்டும்!

டிவியில் பெரும்பாலும் செய்தி, மருத்துவ, ஸ்போர்ட்ஸ் சேனல்கள்தான். 'கடவுளே.. கடவுளே' சேனல்கள் கொஞ்சூண்டு சாம்ப்பிள் காட்டி நானூறு யென்னுக்குக் கார்டு வாங்கு என்கிறார்கள்.

டாய்லெட்டில் கூட டெக்னாலஜி புகுந்து விளையாடுகிறது. ஃபெதர் டச் பொத்தான்களுடன் தண்ணீரின் சூடு, பிரஷர், ஃப்ளோ, ஆங்கிள் மாற்றும் வசதிகள்! ஆள் உட்கார்ந்தால்தான் அதற்கு பவர் வருகிறது.

ஜப்பானிய யென்னின் மதிப்பு (எண்ணிக்கையில்) மிகக் குறைவு. ஒரு யென் வெறும் நாற்பத்திரெண்டு பைசாதான். அதனால் பர்ஸ் நிறைய பத்தாயிரம் யென்கள் நிறைய வைத்திருந்தோம். டாலர் ஷாப்புகள் போல ஹண்ட்ரட் யென் ஷாப்புகள் நிறைய இருக்கின்றன. அவைகளில் நிறைய பரிசுப் பொருட்கள் வாங்கினோம். ●



### இந்திரா சிவசைலம் விருது பெற்ற

# இசை இரட்டையர்

**ந**வராத்திரி சமயத்தில் கர்நாடக இசைத் துறையில் பெயரும் புகழும் பெற்று விளங்கும் ஓர் இசைக் கலைஞருக்கு, சென்னை **இந்திரா சிவசைலம் ஃபவுன்டேஷன்,** ஏழு ஆண்டுகளாக அவர் பெயரால் விருதும் தங்கப் பதக்கமும் அளித்து கௌரவித்து வருகிறது. இந்திரா சிவசைலம் இந்திய கலாசாரத்திலும், சம்ஸ்கிருத இலக்கியத்திலும், ராமாயணத்திலும், முக்கியமாக கர்நாடக இசையிலும் அதீத நாட்டம் உள்ளவர். மியூசிக் அகடமியில் டிசம்பர் இசை விழா நாட்களில் முன் வரிசையில் ஓர் ஓரத்தில் உட்கார்ந்துகொண்டு ரசிப்பார். உடல் நலம் குன்றி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சமயத்தில்கூட, இசையைக் கேட்டு மனம் நெகிழ்ந்தவர். இசைக் கலைஞர் **டி.கே. ஜெயராமன்** அவர்களிடம் முறையாக இசை பயின்றவர். அமால்கமேஷன்ஸ் அதிபர் சிவசைலத்தின் மனைவி.

அவர் காலமான பிறகு, அவர் பெயரால், 2010 முதல்மியூசிக் அகடமியின்

www.TheMagnat.com





ஆலோசனையோடு இளம் தலைமுறை இசைக் கலைஞர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்குப் பரிசும் பாராட்டும் வழங்குகிறது இந்திரா சிவசைலம் அறக்கட்டளை. முதியோர் நலன், மகளிர் மேம்பாடு, அன்னதானம் என்று பிற துறைகளிலும் இந்த அறக்கட்டளை அக்கறை செலுத்தி வருகிறது.

இதை நிறுவியவர், இந்திரா-சிவசைலம் தம்பதியின் மகளும், டாஃபே நிறுவனத்தின் அதிபருமான மல்லிகா சீனிவாசன் அவர்கள். தாயின் மனத்தை நன்கு அறிந்தவர். அவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவது போல, வருடம் தோறும் ஓர் இளம் இசைக்கலைஞரைத் தேர்ந்தெடுத்து மியூசிக் அகடமி அரங்கில் விழா எடுத்து அவர்களை கௌரவிக்கிறது.

முதல் ஆண்டு **2010ல், சுதா ரகுநாதனுக்கும், 2011ல் சஞ்சய் சுப்பிரமணியனுக்கும், 2012ல் பாம்பே ஜெயஸ்ரீக்கும், 2013ல் அருணா சாயிராமுக்கும், 2014ல் டி.எம். கிருஷ்ணாவுக்கும், 2015ல் மல்லாடி சகோதரர்களுக்கும் இந்த ஆண்டு ரஞ்சனி-காயத்ரி சகோதரிகளுக்கும்** இந்த கௌரவம் வழங்கப்பட்டது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக **அன்வேஷா** என்ற நிகழ்ச்சி மூலம் பரிசு பெறும் கலைஞர்கள் தங்கள் ரசிகர்களுடன் நடத்தும் உரையாடல் மிகப் பிரபலமாகி வருகிறது.

இந்த ஆண்டு பரிசு பெற்ற ரஞ்சனி-காயத்ரி சகோதரிகள் முதலில் வயலின் இரட்டையராகத்தான் அறிமுகமானார்கள். மும்பையில் இவர்கள் குரு டி.எஸ். கிருஷ்ணசாமி அவர்களின் திறமைக்குப் பட்டை தீட்டினார். சென்னைக்கு வந்து இரட்டையர்களாகவே வயலின் வாசித்ததோடு, பக்க வாத்யக் கலைஞர்களாகவும் சக்கைப்போடு போட்டார்கள். சென்னையில் குரு பத்மபூஷண் **பி.எஸ். நாராயணசாமியிடம்** வாய்ப்பாட்டுக் கற்றுக் கொள்ளத் தொடங்கிய பிறகு, அவர்கள் குரல் வளத்தைக் கவனித்த குரு பி.எஸ்.என்., 'நீங்கள் ஏன் வாய்ப்பாட்டுக்கு மாறக்கூடாது?' என்று அவர்கள் திறமையை மடை திருப்பி விட்டார்.

**சாருகேசி**

www.TheMagzet.com

> ரஞ்சனி-காயத்ரியை மும்பை சண்முகானந்த சபா, சென்னை தியாகப்பிரம்ம கான சபா, கல்கி கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளை போன்ற பல அமைப்புகள் பட்டமும் விருதும் அளித்து கௌரவித்திருக்கின்றன.

அதற்குப் பிறகு இருவரும் தங்கள் குரல் இனிமையால் இந்தியாவிலுள்ள ரசிகர்களை மட்டுமல்ல, உலகில் எங்கெல்லாம் அவர்கள் இசையைக் கேட்க விரும்பினார்களோ அங்கெல்லாம் சென்று கர்நாடக இசையைக் காது குளிர அனுபவிக்க வைத்துவிட்டு வருகிறார்கள். அவர்களுடைய பெரிய பலம் அவர்கள் குரல் வளம். இனிமை என்றால் அப்படி ஓர் இனிமை. இரண்டு பேருமே சேர்ந்து பாடும்போது அதன் இனிமை இரட்டிப்பாகிவிடுகிறது. அதிலும் ரஞ்சனி நிரவலில் ஒரு நகாசு வேலை செய்தால், காயத்ரி அதற்கு மேலும் மெருகூட்டுவார். அது கேட்பவரைச் சும்மா இருக்கவிடாது. கையைச் சேர்த்து கரகோஷம் போட வைத்துவிடும். ஒருவர் இருவர் கரகோஷம் அல்ல! ஒட்டுமொத்த கரகோஷம். ஆரம்பத்தில் கற்றுக்கொண்டது எல்லாம் தாயார் **மீனாட்சி பாலசுப்பிரமணியன்** மற்றும் தந்தை **பாலசுப்பிரமணியன்** இருவரிடமும்தான். ஆனால் அதைப் பளிச்சிடச் செய்து வெளிக்கொண்டு வந்தவர் குரு பி.எஸ். நாராயணசாமி.

ரஞ்சனி-காயத்ரி சகோதரிகளிடம் ரசிகர்கள் பெரிதும் ரசிக்கும் ஒரு பண்பு, பாடலைப் பாடுவதற்கு முன்னரோ, பின்னரோ, என்ன ராகம், என்ன தாளம், யார் இயற்றிய கிருதி என்று அறிவித்துவிடுவார்கள். ரசிகர் உடனே அந்தப் பாடலுடன் தன்னை ஒப்படுத்திக்கொள்ள இது நல்ல உத்தி. இந்த இரட்டையரின் இன்னோர் அரிய திறன், கச்சேரி நிறைவடையும் தருணத்தில் மராத்தி அபங் ஒன்றைப் பாடுவது. அவர்களே மெட்டமைத்துப் பாடுகிறார்கள் என்பது இன்னும் குறிப்பிடத்தக்கது. மராத்தி பாடகர்கள்கூட இத்தனை சொல் சுத்தமாகப் பாடுவார்களா என்பது தெரியாது. சில பஜன் பாடல்களையும் துக்கடா பகுதியில் இவர்களே மெட்டமைத்துப் பாடுவது உண்டு. விருத்தம் பாடுவதில் விற்பன்னர்கள். நிரவலில் குழைவும், செழுமையும் வெளிப்படும். விருத்தத்தில் விழிகளில் நீரை வரவழைத்துவிடும்.

அகடமியில் இசை நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள ஆரம்பித்து சரியாக ஒரு வெள்ளிவிழாக் காலம் ஆனதைக் கொண்டாடுவது போல் இருந்தது ரஞ் சனி காயத்ரி வழங்கிய இசை நிகழ்ச்சி. இவர்கள் கச்சேரி மனதுக்கு இதமாகவும், நிறைவாகவும் இருக்கிறது என்றால்,



**மனைவி:** நமக்கு கல்யாணம் பண்ணி வெச்ச புரோகிதர் மண்டையப் போட்டுட்டாராம்.

**கணவன்:** ஹூம்ஞ் செஞ்ச பாவம் சும்மா விடுமா? தெய்வம்னு ஒண்ணு இருக்குல்லே.

# மரமா மனிதனா?

பஞ்சாப்பை ஆண்டு வந்த அரசன் ரஞ்ஜித் சிங் ஒரு நாள் தன் பரிவாரங்களுடன் குதிரையில் ஏறிப் போய் கொண்டிருந்தான். திடீரென்று கல்லொன்று வந்து அவன் தோளின் மேல் விழுந்தது. உடனே அங்க ரக்ஷகர்கள் நாலா பக்கம் தேடினார்கள்.

கிழவி ஒருத்தி கையில் கல்லுடன் பிடிபட்டாள். காவலர்கள் உடனே அவளைக் கைது செய்தனர். "அரச சபையில் விசாரணை செய்யலாம்" என்று சொல்லி ரஞ்ஜித் சிங் தன் நகர்வலத்தைத் தொடர்ந்தான்.

பிற்பாடு பயந்து கொண்டே அரசவைக்கு வந்த கிழவியைப் பார்த்து, "என்னால் ஏதாவது குற்றம் நடந்து விட்டதா?" என்று கேட்டான் அரசன். "உன் போன்ற நல்லவனிடம் தேடினாலும் குற்றம் கிடைக்காது. நான் ரொம்ப ஏழை. பசியால் வாடுகிறேன். என் பிள்ளையும் பசி தாங்காமல் வீட்டில் முடங்கி இருக்கிறான். வழியில் இருந்த இலந்தை மரத்திலிருந்து பழங்களை உதிர்த்து அவனுக்கு கொடுக்கலாமென்று கல்லெறிந்து கொண்டிருந்தேன். குறி தவறி உங்கள் மேல் பட்டு விட்டது. எனக்கு என்ன தண்டனை அளித்தாலும் ஏற்றுக் கொள்கிறேன் பிரபுவே!" என்று தாழ்மையுடன் கேட்டுக் கொண்டாள்.

"ஆகட்டும், உனக்கு தக்க சிட்சை அளிக்கிறேன்!" என்ற அரசன் மந்திரியிடம் கிழவிக்கு ஆயிரம் காசுகளைக் கொடுத்து, அவளை வீட்டில் மரியாதையுடன் கொண்டு விடச் சொன்னான்.

"என்னது! கல்லெறிந்தவளுக்குச் சன்மானமா?" என்று அனைவரும் வியந்தனர். கடைசியில் ஒருவன் கேட்டே விட்டான். "உங்கள் கட்டளையை நாங்கள் நிறைவேற்றுகிறோம். ஆனால் தண்டிக்க வேண்டிய இவளுக்கு சம்பாவனை ஏன் கொடுக்க வேண்டும் என்று கேட்கலாமா?" என்றான்

அதற்கு ரணஜித் சிங், "அறிவில்லாத தாவரம் கல்லடி பட்டதற்குப் பதிலாக இனிய பழங்களைக் கொடுக்கிறது என்றால் மனிதனாகிய நான் மூதாட்டியை வெறும் கையிலா அனுப்புவது? அது என்ன நியாயம்?" என்று பதில் கேள்வி கேட்டான். சபையோரெல்லாம் பாடம் கற்றனர்.

துளசி தாசர் சுபாஷிதம் ஒன்றில், "சாதுக்கள் இனிப்பு மாமரம் போன்றவர்கள். ஒரு பக்கம் கல் எறிந்தால் மறு பக்கம் சுவையான கனிகளைக் கொடுக்கின்றனர்" என்று கூறியுள்ளார்.

**- கே.நிருபமா, பெங்களூரு**

அதற்குக் காரணம் இவர்கள் தேர்ந்தெடுக்கும் பாடல்கள்.

இந்திரா சிவசைலம் அவர்களுக்கு இவர்களுடைய நிறையப் பாடல்கள் பிடிக்குமாம். அதிலும் பாபநாசம் சிவன் இயற்றிய நம்பிக்கெட்டவர் எவரையா என்ற ஹிந்தோள ராக கீர்த்தனை மிகவும் பிடிக்குமாம். அதை மறவாமல் பாடிய சகோதரிகள், அதற்கு ஒரு மகுடம் வைக்கிற மாதிரி பாடிய விருத்தம் உருக்கத்தின் உச்சம். கிருஷ்ணா நீ பேகனே பாட வேண்டும் என்று வந்த வேண்டு கோளையும் உடனே நிறைவேற்றினார்கள்.

ரஞ்சனி-காயத்ரியை மும்பை சண்முகானந்த சபா, சென்னை தியாகப்பிரம்ம கான சபா, கல்கி கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளை போன்ற பல அமைப்புகள் பட்டமும் விருதும் அளித்து கௌரவித்திருக்கின்றன. இந்திரா சிவசைலம் விருது அவர்களின் இருபத்தைந்து ஆண்டுகள் உழைப்புக்குக் கிடைத்த அங்கீகாரம்! ●



# கல்வி கற்க வைத்த கணவன்

பட்டிமன்ற நடுவர் - சிறப்பு சொற்பொழிவாளர் - திரைப்பட நடிகர் - டிவி. சீரியல் நடிகர் என்று பல துறைகளில் பல ஆண்டுகளாக கலக்கி புகழ்பெற்ற பேராசிரியர் கு. ஞானசம்பந்தன் தன் மனைவி அமுதா பெயரில் 'அமுதகம்' என்று வீட்டின் பெயரை வைத்து மனைவிக்கு மரியாதை கொடுத்துள்ளார். இதுதவிர இந்த தகவலை நம்மிடம் பெருமையாக கூறினார்... "எங்களுக்கு திருமணம் ஆகி எங்கள் இல்லற வாழ்க்கை இனிதே துவங்கிய போது என் மனைவி அமுதா 'ப்ளஸ்டூ' படிப்பு மட்டுமே படித்து முடித்திருந்தார். நான் அமுதாவிடம் உனக்கு படிக்க ஆசை உண்டா? என்றேன். ஆர்வமுடன் ஆமாம் என்றார். ஹிந்தி படிக்க வைத்தேன். முதியற்கலை படிக்க வைத்தேன். அஞ்சல் வழி கல்வி மூலம் எம்.ஏ.பி.எட், எம்.பில். முடிக்க வைத்தேன். வைரமுத்து கவிதைகளை ஆராய்ந்து எம்.பில் பட்டம் பெற்றார். அம்மாவை படிக்க வைத்த அப்பா உங்களை பாராட்டுகிறோம் என்று என் மகள், மகன் கூறுவதுண்டு. எனக்கும் மனதிருப்தியாக உள்ளது. என் மனைவிக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறது".

கட்டிய மனைவிக்கு கல்விச் செல்வம் அளித்து களிப்படைத்த, கல்வி ஞானம் தந்து பூரித்த கு. ஞான சம்பந்தன் அவர்களை நாமும் பாராட்டலாமே?

- **விஜயா கண்ணன்**

சிறுகதை

# கணவனுக்கோர் கடிதம்



என் அருமைக் கணவருக்கு, கோடானுகோடி நமஸ்காரங்கள்.

இதுவரை உங்களை நினைத்ததுபோல் இப்போதும் அன்புக் கணவராகத்தான் நினைக்கிறேன். ஆனால் நமஸ்காரத்தை இனி எதிரில் வந்து செய்ய முடியாது. அதை மனதில் தான் செய்து கொள்ள வேண்டும். ஏனெனில் இனி உங்கள் எதிரே வரும் உத்தேசம் எனக்கு இல்லை.

எப்படி இருக்கிறீர்கள்? எனக்குத் தெரியும் நீங்கள் என்னைப் பிரிந்து கஷ்டம்தான் படுவீர்கள் என்று, ஏனென்றால் நீங்கள் என்றுமே என்பால் மிகுந்த அன்பு செலுத்தி, கண் போல் பாதுகாத்து வந்துள்ளீர்கள். நானாகவே முடிவெடுத்துத்தான் உங்களைப் பிரிந்திருக்கிறேன். ஆனாலும் எனக்கும் இந்தப் பிரிவு மிகுந்த துயரத்தைத்தான் கொடுக்கிறது. என்ன செய்வது? எல்லாம் காலத்தின் கோலம். விதி செய்யும் சதி. ஆனால், விதி கெட்டு வரும் முன் மதி கெட்டதால் வந்ததுதானே இந்த நிலை!

நீங்கள் சிறு வயதில் கழித்த பரிதாபமான தினங்களைப் பற்றி நிறைய சொல்லியிருக்கிறீர்கள். படிப்பு வராததால் அப்பாவிடம் எப்போதும் திட்டு, அடி என்று வாங்கி, ஒரு வேகத்தில் சென்னைக்கு ஓடி வந்ததில் ஆரம்பித்து எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். சென்னையில் டீக்கடையில் வேலை, பெட்ரோல் பங்கில் வேலை, கூரியர் பாய் வேலை என்று கஷ்டப்பட்டது எல்லாவற்றையுமே

**திருமதி. மைதிலி சம்பத்**

பகிர்ந்து கொண்டிருக்கிறீர்கள். அந்த கூரியர் கம்பெனியில் தானே பின்னால் குமாஸ்தாவாக ஆனீர்கள்? அப்போது கூரியரில் அனுப்பும் கவர்களில் பணம் அனுப்பக் கூடாது என்று ரூல் இருந்தும் யாரோ அதில் பத்தாயிரம் அனுப்பப் போக, அது காணாமல் போய் உங்கள் தலையில் அந்தப் பழி விழுந்ததையும், எல்லோரும் உங்களை அடி பின்னியெடுத்துவிட்டதையும், பிறகு ரோட்டிலேயே மயக்கமாய் விழுந்து கிடந்ததையும் நீங்கள் சொல்லும்போது கேட்டுக் கொண்டிருந்த நான் எவ்வளவு அழுதிருக்கிறேன்.

அப்போதுதானே கணேச மூர்த்தி உங்களைப் பார்த்து தன்னுடன் அழைத்துப் போனார்? முன்பின் தெரியாத உங்களை அவர் எப்படியெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறார்! கட்டிடக் காண்ட்ராக்டரான அவர் உங்களை நம்பி, தன் ஆபீஸ் வேலைகள் அத்தனையும் கற்றுக் கொடுத்து மகன் போல வைத்திருந்தாரே! அவர் ரொம்பவே நல்லவர் தான். கூடவே வல்லவர், சாமர்த்தியசாலி, இந்த இரண்டு வார்த்தைகளுக்கும் கொஞ்சம் வேண்டாத வேலைகளும் செய்து பணம் சம்பாதிக்கத் தெரிந்தவர் என்றும் பொருள் அல்லவா? அவரிடம் நீங்கள் கட்டிடம் கட்டும் கலையுடன் இதையெல்லாமும் சேர்த்துத்தான் கற்றுக் கொண்டீர்கள் என்று தோன்றுகிறது. அவரிடம் நீங்கள் பரம விசுவாசியாக இருந்து, போட்டி காண்ட்ராக்டர்கள் நிறைய சம்பளத்திற்குக் கூப்பிட்ட போதும் கூட போகாமல் இருந்ததால்தான் அவருக்கும் உங்கள் மீது பிரியம். தெரிந்தவர்களிடம் சொல்லி என்னை உங்களுக்கு கல்யாணம் பண்ணி வைத்ததும் அவர்தானே!

கல்யாணம் பண்ணி வைத்த கையோடு, "இந்தா, நாராயணா! உன்னை இத்தனை நாள் பார்த்துக் கொண்டேனே தவிர, சம்பளமாகக் கொடுத்தது, ரொம்பவும் குறைவுதான். அதனால் இந்தா, இந்தத் தொகையை வைத்து நீ ஒரு கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி ஆரம்பித்து முன்னுக்கு வா. எனக்கு வயசாயிடிச்சி, நான் இனிமே கட்டிடம் கட்டுவதாய் இல்லை" என்று கொடுத்ததனால் தானே நீங்களும் சுயமாக காண்ட்ராக்ட் எடுக்க முடிந்தது--!

முதல் இரண்டு, மூன்று வேலைகளை ரொம்பவும் நியாயமாகச் செய்த நீங்கள், அதன் பிறகு பணம் சேர்க்கும் ஆசையில் கட்டிடம் கட்டும்போது தரமற்ற சாமான்களைப் பயன்படுத்துவது, கலப்பட சிமெண்டைப் போடுவது என்று ஆரம்பித்தீர்கள். அதுகூட பரவாயில்லை. ஏரிகளைத் தூர்த்த இடங்களில் எல்லாம் அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்ட ஆரம்பித்தீர்கள். என் அருமைக் கணவரே! அங்கு தான் கெட்ட காலம் ஆரம்பித்தது. நினைத்துப் பாருங்கள், முதல் ஏழு, எட்டு வருடங்கள் நீங்கள் கட்டியவை தரமான கட்டிடங்கள். அப்போது மட்டும் உங்களுக்குப் பணம் கிட்டவில்லையா? நல்ல லாபம் தானே வந்தது? நமக்கு மதுமிதா, ராஜீவ் இரண்டு குழந்தைகளும் அப்போதுதானே பிறந்தார்கள்? அவர்களை சௌகரியமாகத் தானே வளர்த்தோம்?

தனியாக கலப்பட சாமான் போட்டு வீடுகட்ட தயங்கிக் கொண்டிருந்த நீங்கள் சிவகுமாரை பார்ட்னர் என்று சேர்த்துக் கொண்ட பிறகு அநியாயத்திற்கு கட்டிடம் கட்டும் சாமான்களில் கலப்படம் செய்ய ஆரம்பித்தீர்கள். இத்தனைக்கும் சிவகுமார் சற்று பயந்தவர்தான். இப்படியெல்லாம் பண்ணத் தயங்கத்தான் செய்தார். ஆனால் உங்களுக்கு அப்பாவியான அவருடைய சேர்க்கையும், விசுவாசமும் அலாதியான தைரியத்தைத் தந்தது.

அந்த நிலையில்தான் எப்படியோ விஷயத்தைத் தெரிந்து கொண்ட கணேசமூர்த்தி உங்களைக் கூப்பிட்டு உரிமையோடு கடிந்து கொண்டபோது அது உங்களுக்குப் பிடிக்கவில்லை. ஏதோ பதில் சொல்லி சமாளித்துவிட்டு வீட்டுக்கு வந்து பொருமித் தீர்த்தீர்கள். "இப்ப என்ன ஆச்சு? அவர் கொஞ்சமா செய்த கலப்படத்தை நான் கொஞ்சம்கூட செய்யறேன். இவருகிட்ட கத்துகிட்ட பாடம்தானே? என்னவோ பெரிசா பேச வந்துட்டாரு. இவருமட்டும்தான் சம்பாதிக்கலாமா?" என்றெல்லாம் புலம்பினீர்கள்.

"பெரிய மனுஷன், உங்களுக்கு நல்லது செய்தவர், நல்லதைத்தானே சொன்னார்?" என்று நான் பேச ஆரம்பித்ததும், "இதிலெல்லாம் நீ தலையிடாதே, உனக்கு

www.Tamilmagazines.com

ஒண்ணும் தெரியாது" என்று என்னையும் என் பேச்சையும் ஒரேயடியாக அடக்கிவிட்டீர்கள். ஆங்! சொல்ல மறந்துவிட்டேனே! நீங்கள் செய்யும் தில்லுமுல்லுகள் பார்ட்னர் வந்தபின் அதிகரிக்கக் காரணம் எதிலும் மாட்டிக் கொள்ளாமல், பேப்பர்களிலெல்லாம் அவர் பெயரைக் கம்பெனி சொந்தக்காரர் எனப் போட்டுக் கொள்ள அவர் உங்களை அனுமதித்ததுதான். அவருக்கும்தான் நிறைய பணம் கொடுத்து வந்தீர்களே! உங்கள் எண்ணம் அழகாக அதை சாதித்தது. வறுமைப்பின்னணியிலிருந்து வந்த அவருக்கும் அது பிடித்திருந்தது. அவருடைய அந்த பலவீனம் உங்களுக்கு தைரியம் கொடுத்தது.

ஆயிற்று, நம் குழந்தைகள் வசதியாகவே வளர்ந்தார்கள். நன்றாகப் படிக்க வைத்து, பணக்கார இடங்களில் கல்யாணமும் செய்து விட்டீர்கள். மகனும், மருமகனும் நன்றாக சம்பாதிக்கிறார்கள். இருவருக்கும் இரண்டு இரண்டு குழந்தைகள் பிறந்தாயிற்று. பெண்ணுக்கு பிரசவம் பார்க்கும் கடமைக்காகத்தான் நிறைய நாட்களாக யோசித்து வந்தேன்.

www.TheMagnet.com

நான்கு வருடங்கள் முன்பு ஊரப்பாக்கத்தில் ஒரு அடுக்கு மாடிக் கட்டிடம் பூமியின் உள்ளே அப்படியே புதைந்துவிட்டது. அதை அப்படியே டி.வி.யில் காண்பித்தார்கள். நான் அதைப் பார்த்த அந்த விடியற்காலையில் பதைபதைத்து உங்களை எழுப்பினேன். நீங்களும் எழுந்து பார்க்கத்தான் செய்தீர்கள். பார்த்துவிட்டு, "அது நம்ம கம்பெனி கட்டியது இல்லை" என்று சொல்லிவிட்டு திரும்பிப் படுத்துக் கொண்டு தூங்கிவிட்டீர்கள். எனக்கானால் அன்றிலிருந்தே தூக்கம் தொலைந்துவிட்டது.

அடுத்தாற்போல் வந்த மழைக்காலத்தில் அதே இடத்தில் இன்னுமொரு நான்கு மாடிக்கட்டிடம் பூமிக்குள்ளே புதைந்ததே, அது நீங்கள் கட்டிய கட்டிடமேதான். ஆனால், உங்களுக்குத் தெரியும் பழி உங்கள் மேல் விழாது, சட்டம் உங்களைத் தண்டிக்காது, எல்லாம் உங்கள் சிநேகிதர் பெயரில் தான் இருக்கிறது என்று. எப்படி அந்த தில்லுமுல்லுகளைச் செய்தீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. தெரிந்து




கொள்ள விரும்பவும் இல்லை. ஆனால், அன்று அந்த கட்டிடம் விழுந்ததால், தான் ஜெயிலுக்குப் போவோம் என்று தெரிந்த மாத்திரத்தில் உங்கள் நண்பருக்கு ஹார்ட் அட்டாக் வந்துவிட்டது. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகக்கூட நேரம் கொடுக்காமல் அது அவர் உயிரைப் பறித்துவிட்டது. அவருடைய குடும்பத்திற்கு யார் மூலமோ ஒரு பெரிய தொகை அனுப்பினீர்கள். அவர்களும் அதை எடுத்துக் கொண்டு உங்கள் ஆலோசனைப்படி நியூசிலாந்தில் அப்போதுதான் வேலைக்குச் சேர்ந்திருந்த அவருடைய பெரிய பிள்ளையிடம் போய்ச் சேர்ந்துவிட்டார்கள். உங்களைப் பொறுத்தவரை தொந்திரவு விட்டது.

எனக்கு மட்டும், நீங்கள் என்னதான் பணம் கொடுத்தாலும், அது அவர் மனைவிக்கு புருஷனாகுமா?- பிள்ளைகளுக்குத் தகப்பனாகுமா? என்று தோன்றிக் கொண்டே இருந்தது. போன ஒரு மாதமாகவே சென்னையில் பலமான மழை, கன மழை, அடை மழை என்பதெல்லாம் தாண்டி தொடர்ச்சியான பேய் மழை. நான் ரொம்ப நாட்களாகவே பயந்து கொண்டிருந்த அந்த விபரீதம் நடந்துவிட்டது. இது போரூர் ஏரியை ஒட்டியே கட்டியிருந்த இடம்,

இந்தக் கட்டிடம் இடிந்து விழுந்த போதும் விடியற்காலை வேளைதான், சிலர் மட்டும் பால வாங்க, கறிகாய் வாங்க என்று வெளியே போயிருந்திருக்கிறார்கள். தூங்கிக் கொண்டிருக்கும்போது எல்லோருமாகச் சாவது எத்தனையோ மேல். வெளியே போயிருந்தவர்கள் திரும்பி வந்து பார்த்தபோது கட்டிடமே காணாமல் போயிருந்தது. அதைக் கண்டு அவர்கள் எப்படி பதறியிருப்பார்கள். தங்கள் உற்றார், உறவினர் எல்லோரையும் இழந்து எப்படி துடிதுடித்திருப்பார்கள்? அந்த இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கான அனுமதிக்கையெழுத்து போட சம்பந்தப்பட்ட பெரிய அதிகாரி மறுத்துவிட்டதும், நீங்கள் சாம, தான, பேத, தண்டம் என்று எல்லா வழிகளையும் பயன் படுத்தி அந்தக் காரியத்தை நடத்திக் கொண்டதும் எனக்கும் தெரிந்ததுதான். அப்போதே அதற்காக நான் உங்களோடு எத்தனை வாதாடினேன்? நீங்கள், 'தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்று பிடிவாதமாக இருந்தபோது உங்களோடு பேசாமல் இருந்து பார்த்தேன். அதற்கு நீங்கள் மசியாத போது பெரியதாக சண்டையும் போட்டேன்.

"இதோ பார், ராஜி! நான் கொண்டு வரும் பணத்தை வாங்கி உள்ளே வைத்துக் கொண்டு, நான் வாங்கித்தரும் ஏராளமான நகைகளைப் பூட்டிக் கொண்டு நான்கு பேர் முன்னால் என் மனைவியாக கௌரவமாக பவனி வருவதோடு உன் வேலை முடிந்துவிட்டது. அப்படி நடந்து கொள்ள உனக்கு சம்மதம் இல்லாவிட்டால், நான் அதற்கு வேறு ஆள் பார்க்க வேண்டி வரும்" என்று நீங்கள் கடுமையாக சண்டைக்கு ஒரு முத்தாய்ப்பு வைத்த போது அப்போதைக்கு நான் வாயை மூடிக் கொண்டேன்.

உங்களை சட்டம் பிடிக்காது என்ற தைரியம், நீங்கள் மாத்திரம் ஏதும் நடக்காதது போல் இருந்தீர்கள். 'தன் நெஞ்சறிவது பொய்யற்க, பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னைச் சுடும்' என்பது உங்கள் விஷயத்தில் பொய்யாகிவிட்ட நிலை. ஆனால், என்னால் அப்படியிருக்கமுடியவில்லை. சட்டம் தவிர, பாபம், புண்ணியம் என்பதெல்லாம் இருக்கிறதல்லவா? நாம் செய்யும் பாப பலனோ, புண்ணிய பலனோ நம் குழந்தைகளைத்தானே சேரும்?

ஒரு புராணக் கதை படித்திருக்கிறேன். ஒருவன் பாப காரியங்களெல்லாம் செய்து பணம் சம்பாதிக்கிறான். நாரதர் அவனிடம் வந்து "யாருக்காக இதெல்லாம் சேர்க்கிறாயோ, அந்த மனைவி மக்கள் இந்த பாவத்திலும் பங்கு போட்டுக் கொள்ள முன்வருவார்களா என்று கேள்" என்கிறார். அவனும் தன் மனைவி மக்களைக் கேட்க, செல்வத்தைப் பங்கு போட்டுக் கொண்ட அவர்கள் யாரும் பாவத்தைப் பங்கேற்க முன்வரவில்லை. ஆனால், நான் அதுபோல் இருக்க விரும்பவில்லை. இத்தனை நாள் உங்கள் சம்பாத்தியத்தில் சமூகத்தில் பெரிய பணக்காரி என்ற அந்தஸ்தோடு பவனி வந்திருக்கிறேன்; பரம சுகமான ஜீவனமும் செய்திருக்கிறேனே!

மனது கேட்காமல், விழுந்த கட்டிடத்தைப் போய்ப் பார்த்தேன். குழந்தைகளை இழந்த பெரியவர்கள், பெற்றோரை இழந்த குழந்தைகள் இன்னும் எத்தனையோ விதமாக துயரங்கள். மரண ஓலங்கள், உற்றாரையும், உடமைகளையும் இழந்து அவர்கள் கதறிய கதறல் மனதைவிட்டுப் போக மறுத்துவிட்டது. இவர்கள் துக்கத்திற்கு என் கணவர் காரணம், நானும் அந்த பாவப்பட்ட பணத்தை அனுபவித்திருக்கிறேன் என்ற எண்ணம் என்னை தற்கொலைக்குத் தூண்டியது. ஆனால் உயிரை விடுவது பாவத்தின் பலனை அனுபவிப்பதல்ல. அது ஒரு வகையில் விடுதலை. அதனால் உயிரோடு இருந்து மற்றவர்களின் துயரத்தை முடிந்தவரை துடைப்பது என்ற முடிவுக்கு வந்தேன். என் நகைகளையும், என்னிடம் இருந்த ரொக்கத்தையும் எடுத்துக் கொண்டு இங்கு வந்துவிட்டேன். "இங்கு" என்றால் "எங்கு" என்று உங்களால் நிச்சயமாகக் கண்டுபிடிக்க முடியாது.

நீங்கள் திருந்துவீர்கள், மாறுவீர்கள் என்றெல்லாம் எனக்குத் தோன்றவில்லை. செய்தது தவறு என்று உணர்வதும், குற்ற உணர்ச்சியும்தானே மாற்றம் கொண்டுவரும்? அந்த உர்வுதான் உங்களிடம் இல்லையே! தேவையானவர்களுக்கு தொண்டு செய்வதென்பது மனதுக்கு நிம்மதி அளித்தாலும் குடும்பத்தைவிட்டுப்




படம்: யோகா கமெண்ட்: ஜவாலா

www.TheMagnati.com

பிரிந்திருப்பது எந்தப் பெண்ணுக்கும் பெரிய தண்டனைதான். ஆனால் அதுதான் நம் பாவங்களுக்கு பரிகாரம் என்று நினைத்ததால்தான் இந்த முடிவு.

நான் நினைப்பதுண்டு. சிறையில் போடுகிறார்களே, அவர்களுக்கும்தான் வேளா வேளைக்கு சாப்பாடு கிடைக்கிறது. பத்திரமான ஒரு இடத்தில் இருக்கிறார்கள். மருத்துவ வசதி எல்லாமும் கிடைக்கிறது. இதில் தண்டனை எங்கு வந்தது என்று. அவரவர் மனிதர்களை விட்டுப் பிரிவதும், நம் எண்ணங்களை பகிர்ந்து கொள்ள வேண்டியவர்கள் அருகில் இல்லாததும் தான் அதில் தண்டனை என்று இந்தக் கொஞ்ச நாட்களிலேயே புரிந்துவிட்டது.

மூன்று நாட்களுக்கு முன்னால் உங்களிடம், 'என் அண்ணாவிற்கு உடம்பு சரியில்லை, அவசரமாக புனே போகிறேன்' என்று தான் சொன்னேன். 'போய்ச் சேர்ந்துவிட்டேன், அண்ணாவிற்குத் தேவலை' என்று உங்களுக்கு நேற்று போன் செய்துவிட்டேன். ஆனால், நான் நம் பரந்த பாரத தேசத்தின் வேறொரு கோடியில் உள்ள ஒரு தொண்டு நிறுவனத்தில் சேர்ந்துவிட்டேன். யாருக்கு உதவி தேவையோ செய்யப் போகிறேன். உதவியை நம்மூரில் செய்தால்தானா?

எங்கிருந்தாலும் உங்கள் பெயருக்குக் கேடு வரும்படி எதுவும் செய்யமாட்டேன். பயப்படாதீர்கள். நிச்சயமாக என்னைத் தேடும் முயற்சியில் ஈடுபடவேண்டாம். உங்களுக்கு வேண்டியது பணம் தானே! அதுதான் நிறைய இருக்கிறதே! நிம்மதியாக இருங்கள்.

கடிதம் நீண்டு விட்டது. இனி எழுதப் போவதில்லையல்லவா? இந்தத் தவறைப் பொருட்படுத்த வேண்டாம். இத்தனை வருடங்கள் தாங்கள் என் மீது காட்டிய அன்பிற்கு நன்றி.

இப்படிக்கு,

உங்களின் பாவத்தையும் சேர்த்து துடைக்க முயலும்

உங்கள் மனைவி. ●

குரல் கேட்டதும் ஓடிப் போய் கதவைத் திறந்தார் அண்ணாசாமி.

"மணிகண்டன்'னு யாராச்சும் இருக்காங்களா?"

"ஆமாம்! எதிர் ஃப்ளாட்! வீடு பூட்டியிருக்கே? அவரு சனி ஞாயிறு தான் வீட்டில் இருப்பாரு!"

"நீங்க மிஸ்டர் அண்ணாசாமியா? ஒங்க கிட்ட குடுக்க சொல்லி சொன்னாங்க!"

"சரி குடுங்க! ராத்திரி அவரைப் பார்த்து குடுத்துடறேன்!" என்று அந்த பெரிய பார்சலை வாங்கிக் கொண்டு போய் உள்ளே வைத்ததும் மொபைல் ஒலித்தது.

"அப்பா! வீட்டில தானே இருக்கீங்க?" மருமகள் தான். அலுவலகத்திலிருந்து கூப்பிடுகிறாள்.

"ஆமாம்மா! என்ன விஷயம்? சொல்லு!" என்றார்.

"ஒண்ணுமில்ல. என் பேருக்கு ஒரு கொரியர் வரும். ஒங்க கிட்ட சொல்ல மறந்திட்டேன்!"

"அதுக்கென்னம்மா? வந்தா வாங்கி வைக்கிறேன்!"

"தேங்க்யூப்பா!" என்று லைன் ஆஃப் ஆனது.

உடனே வாசலில் அழைப்பு மணி ஒலித்தது.

"சார்! ஸ்ருதி இந்த வீடுங்களா? ஒரு கொரியர் இருக்கு!"

மருமகளுக்கு வந்த கொரியரை கையெழுத்திட்டு வாங்கினார். இதுவும் கிட்டத்தட்ட எதிர் வீட்டுக்கு வந்த கொரியரைப் போலவே பெரிய பார்சலாக இருந்தது.

கொரியர் மாறிப் போய்விடப்போகிறதே என்று எதிர் வீட்டு கொரியரை ஹாலில் சோஃபாவிற்கு அடியில் வைத்தார். ஸ்ருதிக்கு வந்த கொரியரை பெட்ரூமில் கட்டிலில் வைத்தார்.

திரும்ப மொபைல் ஒலித்தது. கீழ் ப்ளாட்டில் குடியிருக்கும் ரமேஷ்.

"அங்கிள்! வீட்டில இருக்கீங்களா?"

"ஆமாம்ப்பா! என்ன வேணும் சொல்லு"




# ஆன்லைன் வர்த்தகம்

www.TheMagnet.com




படம்: யோகா கமெண்ட்: ஜ்வாலா

www.TheMagnet.com

"பானு கொழந்தையை கூட்டி வர ஸ்கூலுக்குப் போயிருக்கா. எனக்கு ஒரு கொரியர் வந்திருக்கலாம். கீழேயிருந்து கொரியர் பையன் ஃபோன் பண்ணினான். அதான் நீங்க மேல இருந்தா வாங்கி வைக்க முடியுமான்னு கேக்கலாம்னு தான் அங்கிள்!"

"வரச் சொல்லுப்பா! வாங்கிக்கிறேன்!"

"ரொம்ப தேங்க்ஸ் அங்கிள்! நீங்க கீழே போக வேணாம். பானு வந்ததும் மேலே வந்து வாங்கிக்க சொல்றேன். ஸாரி ஃபார் தி ட்ரபிள் அங்கிள்!"

எல்லாம் ஒரே மாதிரி பார்சலாக இருக்கவே ரமேஷுக்கு வந்த கொரியரை அடையாளமாக ஃப்ரிட்ஜ் மேல் வைத்தார். மணியைப் பார்த்தார்.

'மணி ஒன்றாகி விட்டதே? சாப்பிடணுமே?'

மருமகள் வங்கியில் வேலை பார்க்கிறாள். தனக்கும் ஐடி கம்பெனியில் வேலை பார்க்கும் கணவனுக்கும் பகல் உணவு டிபன் பாக்ஸில் கட்டி வைத்து மாமனாருக்கான உணவை சாப்பாட்டு மேஜை மேல் வைத்து, "நேரத்துக்கு சாப்பிடுங்க!" என்று அக்கறையாக சொல்லிவிட்டு. தான் போகிறாள் தினமும். வீட்டில் பகல் வேளையில் தனியாக இருப்பதால் தானே மணியைப் பார்த்து 'சாப்பாட்டு நேரம் வந்திடிச்சே!' என்று தட்டையெடுத்து வைத்துக் கொள்வதாக இருக்கிறது.

தனியாக சாப்பிடுவது எவ்வளவு கொடுமைன்னு அவருக்குத் தான் தெரியும். மனைவி உயிரோடு இருந்தவரை இருவரும் தினமும் காப்பி கூட ஒன்றாகத் தான் குடிப்பார்கள். இப்போது எல்லாம் மாறி விட்டது. மகனும் மருமகளும் உட்கார்ந்து சாப்பிடக் கூட நேரமில்லாமல் நின்றபடியே காலையில் இரண்டு இட்லிகளை விழுங்கி

**ரேவதி பாலு**

விட்டு ஓடுகிறார்கள். பகல் உணவு டப்பாவில் அடைத்து எடுத்துப் போகிறார்கள். இரவு நேரமானால் வரும்போதே மருமகள் மெஸ்ஸிலிருந்து சப்பாத்தி வாங்கி வந்து விடுவாள். அதை அவரவருக்கு பசிக்கும் போது தின்று கொள்ள வேண்டியதுதான்.

வயதானதால் பகல் உணவுக்குப் பிறகு சற்றே கண்ணை அசத்தும். நிச்சயமாக கொஞ்ச நேரம் உடம்பைக் கிடத்தியெடுக்கணும். ஆனால் அந்த நேரந்தான் அழைப்பு மணி ஒலிக்கும். "ஆசிரமத்திலிருந்து வறோம். ஒங்களாலானது ஏதாச்சும் நன்கொடை குடுக்கிறீங்களா?" என்பதிலிருந்து "சூடிதார் வேணுமா?', பாய் வேணுமா?", "சிடி வாங்கிக்கிறீங்களா? கொழந்தைங்க 'ரைம்ஸ்' இருக்கு!" என்று விதவிதமாக அழைப்புகள். சமீபகாலமாக ஆன் லைன் வர்த்தகம் அதிகரித்து ஜட்டி, பனியன், புடவை, பாத்திரம், ஷெல்ஃப், பெட்ஷீட் என்று எல்லாம் வீட்டுக்கே கொரியர் மூலமாக வருகிறதே?

கீழே ரமேஷ் வீட்டில் குழந்தைக்கு பால் பாட்டில், நிப்பிள், நாப்கின், ட்ரெஸ் என்று சகலமும் கொரியர் மூலந்தான். பாதி நேரம் பானு கைக்குழந்தையை தூக்கிக் கொண்டு கடை, கண்ணி அல்லது மூத்த குழந்தையை கூட்டி வர பக்கத்துத் தெரு பள்ளிக்கோ சென்று விடுகிறாள். சரியாக அவள் அந்தப் பக்கம் போய்விட்டாளா என்று பார்த்துக் கொண்டு வருவது போல அந்த நேரத்தில் தான் கொரியர் பையன் வருவான். வர வர, ரமேஷ் வீட்டுக்கு கொரியர் வந்தால் அண்ணாசாமி வாங்கி வைத்து விடுவார் என்ற அசாத்திய நம்பிக்கை கொரியர் பையன்களுக்கு வந்து விட்டது. நேரே படியேறி வந்து விடுகிறார்கள்.

**மா**லை ஐந்து மணிக்கு மற்றொரு கொரியர் மணிகண்டனுக்கு, வாங்கி மறக்காமல் ஹாலில் சோஃபாவிற்கு அடியில் (மணிகண்டனுக்கு வரும் கொரியருக்கான இடம்) வைத்தார். இப்போது தான் புதிதாக எதிரே குடி வந்திருக்கிறான். அடுத்த மாதம் கல்யாணம் ஆகப் போகிறது. வீட்டுக்கான சாமான்கள் எல்லாமே ஆன்லைனில் தான் வாங்குகிறான்.

அன்று காலை மணிகண்டனுக்கு முதல் நாள் வந்த கொரியர் பாக்கெட்டெல்லாம் கொடுத்த போது, அவன் தயங்கித் தயங்கி ஒரு பாக்கெட்டை அவரிடம் கொடுத்தான். "அங்கிள்! ஷூ ஆன்லைன்ல வாங்கினேன். சைஸ் சரியா இல்ல. ரிடர்ன் கொரியர்னு ஒரு கொரியர் பையன் வந்து இதை வாங்கிட்டு போவான். கொஞ்சம் குடுத்திடறீங்களா?" என்றான்.

'அடப் பாவி!' கடைக்குப் போய் கால்ல போட்டுப் பார்த்து வாங்க வேண்டிய ஷூவை இப்படியா ஆன்லைன்ல வாங்குவாங்க? பக்கத்து வீட்டுக்காரங்களை எப்படித்தான் படுத்துவது என்று ஒரு முறையேயில்லையா' கொதித்துப் போனார் அண்ணாசாமி.

**இ**ரண்டு நாட்களாக மூன்று வீட்டுக்கும் கொரியர் வாங்கி வாங்கி கை காலெல்லாம் அசந்து விட்டது அண்ணாசாமிக்கு. ராத்திரி மகனும் மருமகளும் பேசிக் கொண்டிருந்ததிலிருந்து தான் விஷயம் விளங்கிற்று அவருக்கு. ஆன் லைன் கம்பெனிக்காரர்கள் 'ஆடித் தள்ளுபடி' விற்பனை அறிவித்திருக்கிறார்களாம். அதான் எல்லாரும் போட்டி போட்டுக்



## பணம்

சீடர்களுடன் சென்று கொண்டிருந்த குருநாதருக்கு நேரமாகிப் போனதால் பசியெடுக்க ஆரம்பித்தது. வழியில் எதிர்பட்டவரிடம், "இந்த ஊரில் தர்ம சத்திரம், எங்கிருக்கிறது?" என்று கேட்டார்.

அதற்கு அவர் "சுவாமி! தானம் செய்ய இங்கு ஆள் இல்லை. ஆனால், இங்கு உணவகம் ஒன்று இருக்கிறது. பணம் கொடுத்தால் தரமான சாப்பாடு கிடைக்கும்." என்றார்.

சீடரில் ஒருவர் குருவிடம், "சுவாமி! உங்களை நேரில் பார்க்கும் போது எப்படிப்பட்டவரின் மனமும் மாறி விடும். நிச்சயம் அனைவருக்கும் இலவச சாப்பாடு கிடைக்கும்." என்றார்.

எல்லோரும் உணவகத்தில் சாப்பிட்டனர். சீடர் எதிர்பார்த்ததற்கு மாறாக, உரிமையாளர் பணம் கேட்டார். மறுப்பேதும் சொல்லாமல் கேட்டதை கொடுத்து விட்டு குருநாதர் நடக்க ஆரம்பித்தார்.

"எத்தனை பெரியவர் நீங்கள். உங்கள் முகத்தைப் பார்த்தும் கூட அவருக்கு தர்மம் செய்ய மனம் இல்லையே? அவர் பணத்தாசை பிடித்தவர் போல இருக்கிறது." என்று படபடத்தார் சீடர்.

துறவியோ சிரித்தபடி, "நீ கோபிப்பதில் நியாயம் இல்லை. உணவகம் நடத்துபவர் ஒரு வியாபாரி. வியாபாரம் நடத்துவதே லாபம் அடைவதற்குத் தான். அந்த நியதியை நமக்காக அவர் மாற்றிக் கொள்ள வேண்டுமென நினைப்பது நியாயமில்லை. தொழில் என்று வந்து விட்டால் அதற்குரிய தர்மத்தை கடைப்பிடிப்பது தான் முறை. காசு கொடுக்க மனமில்லாத உன்னை வேண்டுமானால் பணத்தாசை பிடித்தவன் எனச் சொல்லலாம்." என்றார்.

**- எஸ்.ஆறுமுகம், தேனி.**

www.TheMagnet.com

கொண்டு அந்த சலுகையைப் பயன் படுத்தி வாங்குகிறார்களாம். மருமகளுக்கு சலுகை விலையில் 'ஹேண்ட் பேக்', சூடிதார் எல்லாம் வந்தது கொரியரில், மகனுக்கு எலக்ட்ரிக ஷேவிங் செட், புதுவிதமான டிசைனில் 'டீ ஷர்ட்'!

கண் பார்வையில் சிறிது தடுமாற்றம் இருப்பதால் இருட்டியதற்கப்புறம் அண்ணாசாமி வெளியே போவதில்லை. போவதென்றால் மாலை ஐந்து மணிக்குள்ளாக சென்று வருவார். 'வாக்கிங்' எல்லாம் காலையிலேயே முடித்துக் கொள்வார். என்ன ஒன்று, அவருக்கு 'மூக்குப் பொடி' போடாமல் முடியாது. பொடி டப்பா காலியானால் உடனே கடைக்கு ஓட வேண்டும். ஒரு எட்டுக் கடைக்குப் போய் விட்டு வந்து விடுவோம் என்று வீட்டைப் பூட்ட பூட்டைக் கையிலெடுக்கும் போதே அடுத்த கொரியர் வந்து விடுகிறது. அவர் காலையில் வாக்கிங் போகும் போது 'மூக்குப் பொடி' விற்கும் கடை திறந்திருக்காது. அது தான் கஷ்டம். இன்று சுத்தமாக பொடி இல்லை. தவித்துப் போனார்.

மாலை ஐந்து மணிக்கு வீட்டைப் பூட்டி விட்டு மெதுவாக படியிறங்கி வாசலுக்கு வந்தபோது அங்கேயே அவரை எதிர் கொண்டான் வழக்கமாக வரும் கொரியர் பையன். அவன் கையில் கனக்கும் பாக்கெட்டுகள்.

"சார்! வெளியிலேயா போறீங்க?" எல்லா வீட்டுக்கும் கொரியர் இருக்குங்களே?" என்றான்.

வாயே திறக்காமல் படியேறி மேலே போன அண்ணாசாமி கையெழுத்திட்டு எல்லா பார்சல்களையும் வாங்கி வைத்துவிட்டு அவனைப் பார்த்து பரிதாபமாகக் கேட்டார்.

"ஏன் தம்பி? ஆன்லைன்ல மூக்குப்பொடி ஆர்டர் செய்ய முடியுமா? கொண்டு வந்து குடுப்பீங்களா?"

ஒரு கணம் ஒன்றும் புரியாமல் கண்கள் அகல அவரை விழித்துப் பார்த்த கொரியர் பையன் அடுத்த நிமிடம், "என்ன சார் இது? இப்படி தமாஷ் பண்றீங்களே?" என்று வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரிக்கத் தொடங்கினான். ●



# அம்மாவைத் தேடி

சிறுகதை

**கா**லையில் எழுந்து, வந்து பார்த்தால், வாசல் கதவு திறந்து கிடந்தது-. கேட்டில் பூட்டு, சாவியுடன் தொங்கிக் கொண்டிருந்தது. இந்த வேளையில் பூட்டை திறந்து, எங்கே போனாள் அம்மா-? கமலாவும் இன்னும் எழுந்திருக்கவில்லை. தனியாகவும் வெளியே போக மாட்டாளே! பூட்டைத் திறக்கத் தெரியுமா என்ன? கணேசன் குழம்பினான்.

அம்மாவை அறைகளில், பாத்ரூம்களில், கொல்லைப்புறத்தில், வாசலில், தெருவின் இரு புறமும் தேடினான் காணவில்லை.

கொஞ்ச நாட்களாகவே அம்மாவுக்கு மறதி. சின்னச் சின்ன விஷயங்களை மறந்து விடுவாள். சில சமயங்களில், நாள், கிழமை கூட மறந்து விடும். காலையில் குளித்து சாப்பிட்டு விட்டு, அரை மணியில் திரும்பவும் சென்று குளித்து, புடவை மாற்றிக் கொண்டு, கையில் தட்டை வைத்துக் கொண்டு, "இன்னிக்கு என்ன சமையல்" என்பாள். இருபத்தி ஐந்து வருடமாய்ப் பக்கத்து வீட்டில் இருந்த லட்சுமிப் பாட்டி இறந்த போது, "யாரிந்த லட்சுமிப் பாட்டி-?" என்றாள்.

இந்த உலகில் தான் இருப்பதே தெரியாதது போல, எங்கோ பார்த்தபடி, விட்டேத்தியாக உட்கார்ந்திருப்பாள். தினப்படித் தன் தேவைகளைக் கூட செய்து கொள்ள முடியாமல், ஒரு குழந்தையாக மாறிக் கொண்டு வரும் தன் மாமியாரைப் பார்த்து கமலா வருந்தினாள்.

"கமலா இன்னிக்கு சுள்ளுன்னு வெயில் அடிக்குது, மாவு கிளறி வடாம்

போட்டுடலாம்."

"வெள்ளிக்கிழமையாயிருக்கு, குழந்தைக்கு எண்ணை தேய்ச்சுக் குளிப்பாட்டி, தலைக்குச் சாம்பிராணி போட்டுடலாம்."

"சாயங்காலம் பிரதோஷம். பால் காய்ச்சி, தயிருக்குத் தோய்ந்து வை. கோயில்ல கொண்டு கொடுத்துடலாம்."

"பாவம்டீ லட்சுமி, நம்ம வீட்ல எவ்வற வேலை செய்யறா. அவளுக்கு ஒரு புதுப் புடவை இந்த நவராத்திரிக்கு எடுத்துக் கொடுத்திடலாம்."

சுறுசுறுப்பாய்ச் சுற்றி வந்த மாமியார், இப்படிப் பரப்பிரம்மமாய் ஒன்றுமே தெரியாமல் உட்கார்ந்து விட்டாளே என்று மனது குமுறியது.

"பாமிலி டாக்டர், இது டிமென்ஷியாவின் ஆரம்ப நிலை. போகப் போக அதிகமாகத் தான் ஆகும். நாள், கிழமை, தேதி இன்றைக்கு சாப்பிட்டது என எதுவுமே நினைவுக்கு வராது. இருக்கிற இடம், அட்ரஸ் வருவோர் போவோர் எல்லாம் மறந்து விடும். தனியாக வெளியே போனால், வழி மறந்து, தொலைந்து விடும் அபாயம் அதிகம். இத்தனை வருடங்கள் சேகரித்து வைத்திருந்த அத்தனை நினைவு விபரங்களையும் கொஞ்சம் கொஞ்சமாக மூளை இழந்து விடும். தான் யார் என்பதே கூட சில சமயங்களில் மறந்து விடும். இந்த வியாதி உள்ளவர்களை விட, அவர்களைப் பார்த்துக் கொள்பவர்களே பரிதாபத்திற்குரியவர்கள்." என்று கூறியது நினைவுக்கு வந்தது.

"டாக்டர் சொன்ன மாதிரி காணாமல் போய் விட்டால், எங்கேன்னு போய்த் தேடுவது?" என்று கவலைப்பட்டாள் கமலா.

ஒரு சட்டையை மாட்டிக் கொண்டு, அடுத்த தெருவில் இருந்த ராமதுரை வீட்டுக்குப் போனான் கணேசன். அவன் அம்மாவுக்கு இவன் அம்மா சிநேகிதி. அங்கே எங்கேயாவது போயிருப்பாளோ?

"இல்லையே கணேசா, அம்மா இங்கே வரலியே!" என்றான் கை வைத்த பனியனில் ராமதுரை.

"இப்போ என்ன செய்யறது?"

"கவலைப்படாதே, இங்கே தான் எங்கேயாவது பக்கத்துல போயிருப்பா, வந்துடுவா."

"அதுக்கில்லே ராமதுரை, அம்மாவுக்குத் திரும்பி வர வழி தெரியலைன்னா எங்கேயாவது போயிடுவா. எப்படிக் கண்டுபிடிக்கறது?"

"சிரமம் தான். முதல்ல, அம்மாவோட போட்டோ எடுத்துட்டு போய் பக்கத்துப் போலீஸ் ஸ்டேஷன்ல ஒரு கம்ப்ளைண்ட் கொடுத்திடலாம். அப்புறம் தினப்பத்திரிகையில் அம்மா படத்தோட, 'காணவில்லை' விளம்பரம் ஒன்றும் போட்டுடலாம். பேஸ்புக், வாட்ஸ் அப்லேயும் போஸ்ட் பண்ணிடலாம்."

**"சிரமம் தான். முதல்ல, அம்மாவோட போட்டோ எடுத்துட்டு போய் பக்கத்துப் போலீஸ் ஸ்டேஷன்ல ஒரு கம்ப்ளைண்ட் கொடுத்திடலாம். அப்புறம்..."**

கணேசனுக்கு வயிற்றைப் பிசைந்தது. 'அம்மா நீ எங்கே இருக்கே?'

**கா**லையில் தூங்கி வழிந்து கொண்டிருந்தது அந்தப் போலீஸ் ஸ்டேஷன். வாசல் ஸ்டூலில் அரைத் தூக்கத்தில் ஒரு போலீஸ். தூசு படிந்த ரைபிள் ஸ்டாண்ட். பெரிய மேஜையின் பின்னால் தொப்பி கழற்றி வைத்திருந்த ஒரு வழுக்கைத் தலைப் போலீஸ் ரைட்டராக இருக்கலாம். கணேசன் சென்ற போது, காப்பிக்காகக் காத்திருந்த கான்ஸ்டபிள் தலையைச் சொறிந்து கொண்டிருந்தார்.

"காலைலேந்து எங்க அம்மாவைக்

www.TheMagnet.com

காணவில்லை சார், அது தான் கம்ப்ளைண்ட் கொடுக்க வந்திருக்கேன்."

"என்ன ஆச்சு? வீட்ல ஏதாச்சும் சண்டையா?"

"அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லே சார். அவங்களுக்கு டிமென்ஷியா."

"ஓ, மனநிலை சரியில்லாதவங்களா?"

"இல்லை சார், அது ஒரு வகை மறதி வியாதி. அவங்க போட்டோவுடன் கம்ப்ளைண்ட் கொண்டு வந்திருக்கேன் சார்."

"தெரிஞ்சவங்க, உறவுக்காரங்க வீட்லே விசாரிச்சிட்டீங்களா? வீட்டிலேயே நல்லா தேடிப் பார்த்தீங்களா? இப்படித் தான் ஒரு தபா, மாடிப்படிக்கட்டுக்குக் கீளயே ஒரு அம்மா தூங்கிக்கிட்டிருந்தாங்க."

"தெரிஞ்ச இடமெல்லாம் பார்த்து, விசாரிச்சிட்டேன் சார். அம்மாவைக் காணவில்லை."

இரும்புக் கம்பி ட்ரேயில், டீ வந்தது. "டீ சாப்பிடறீங்களா?"

"வேணாங்க"

கையில் போட்டோவையும், பேப்பரையும் வாங்கிக் கொண்டு, "நாங்க டெய்லி ரெளண்ட்ஸ் லைன்ல இருக்கிறவங்ககிட்ட இன்ஃபார்ம் பண்ணிடறோம். நீங்களும் தேடுங்க. எதுக்கும் ஒரு நடை ஜி.எச், ராயப்பேட்டை, ஈஎஸ்ஐ 'கேசுவாலிடி'லெ ஒரு தடவை விசாரிச்சிடுங்க." என்றார்.

கணேசனுக்கு 'திடுக்'கென்றது. அப்படியெல்லாம் இருக்கக் கூடாது என்று மனம் வேண்டிக் கொண்டது. ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு அருகில் இருந்த மார்க்கெட், கோயில், பார்க் எனச் சுற்றினான்.

எண்ணை தடவி, தலை வாரி, பள்ளிக்கூடம் அனுப்பிய அம்மா, புதுச்சட்டை போட்டு அழகு பார்த்த அம்மா, உடம்பு சரியில்லை என்று, குல தெய்வத்துக்கு காசு முடிந்து வைத்த அம்மா, அப்பாவின் கண்டிப்புக்கு முன் அப்பாவியாய் வலம் வந்து குழந்தைகளுக்காகவே வாழ்ந்த அம்மா, இன்று காணவில்லை. கணேசனின் கண்களில் நீர் நிறைந்தது.

"அந்தப் பூக்காரி ஏழைடா, அவகிட்டயே பூ வாங்கு."

"ப்ளாட்பாரம்ல வியாபாரம் பண்றவங்ககிட்டே ரொம்ப பேரம் பேசாதடா. அவங்களுக்கு என்ன பெரிய லாபம் வந்துடப் போறது? சூப்பர் மார்கெட்டுலெ சத்தம் போடாமே, வாயை மூடிக்கிட்டு வாங்கிட்டு வருவீங்க."

"பார்க்குல நடக்கிறத்துக்குப் பாதையெல்லாம் போட்டு, உட்கார பெஞ்சு, குடிக்கத் தண்ணீர் எல்லாம் நல்லாத் தான் இருக்கு. ரேடியோ தான் மிஸ்ஸிங்."

"அந்த ஏரியாவிலேயே ஓர் அழுத்தமும், மரண அமைதியும் விரவி யிருந்தது. பரட்டைத் தலையும், புகையிலைக் கறைப் பற்களுமாய் இரண்டு பேர் அழுதபடிக் குந்தியிருந்தனர்..."

எங்கும் அம்மாவே தெரிந்தாள். கணேசனுக்கு வேதனையாயிருந்தது. வானம் கருத்து, மேக மூட்டமாய் இருந்தது. அம்மா குடை எடுத்துண்டு போயிருக்காளோ என்றது மனம். எங்கே போனாள் அம்மா-? தெரிந்தவர்கள், உறவினர்கள் எல்லார் வீட்டிலிருந்தும், இங்கே வர வில்லையே என்ற பதிலே எதிரொலித்தது. 11 மணி சுமாருக்கு போலீஸ் ஸ்டேஷனிலிருந்து போன். "ராயப்பேட்டை அரசு மார்ச்சுவரியில நீங்க சொன்ன வயசிலே ஒரு பாடி வந்திருக்குதாம். நம்ப ஏரியாவிலேர்ந்து தான். ஹிட் அண்ட் ரன் கேசு. நீங்க போய் ஒரு நடை பார்த்துருங்க." ஒரு கிளிக்குடன் அடங்கிப் போனது போன்.

"அம்மா!" வாய் விட்டு அலறினான் கணேசன்.

அந்த ஏரியாவிலேயே ஓர் அழுத்தமும், மரண அமைதியும் விரவியிருந்தது. பரட்டைத் தலையும், புகையிலைக் கறைப் பற்களுமாய் இரண்டு பேர் அழுதபடிக் குந்தியிருந்தனர். ஓரமாய் ஒரு கரை வேட்டி, ஆஸ்பத்திரி சிப்பந்தியுடன் பேசிக் கொண்டிருந்தது. போலீஸ் ஒருவர் மூக்கைப்

www.themagnet.com

## அறிய தகவல்கள்

- ஸ்ரீ ராமர் கி.மு. 4493ம் ஆண்டு சித்திரை - சுக்கில நவமி புதன் கிழமை, புனர்பூச நட்சத்திரத்தில் பிறந்தார்.
- ராமர் கி.மு 4414ம் ஆண்டு - சித்திரை - சப்தமியன்று அவருடைய 25ம் வயதில் தொடங்கியது.
- அனுமான் இலங்கையில் பிரவேசித்தது கி.மு. 4400ல் மகா பௌர்ணமியன்று.
- ராமரின் பட்டாபிஷேகம் நடந்தது கி.மு. 4400 சித்திரை சப்தமி ராமர் இந்த பூவுலகிலிருந்து மறைந்தது கி.மு. 4377, சித்திரை மாதம் 23 ஆண்டுகள் அரசாண்டு தமது 62ம் வயதில் மறைந்தார் (ஸரயூ நதியில் மூழ்கி)
- கிருஷ்ணர் கி.மு. 3112 ஆண்டு ஆவணி மாதம் ரோகிணி நட்சத்திரம் - வெள்ளிக்கிழமை இரவு 11.40 மணிக்கு பிறந்தார்.
- கி.மு. 3067 அக்டோபர் மாதம் 14ஆம் தேதி முதல் நவம்பர் 11ம் தேதி வரை, மகா பாரத போருக்கான ஆயத்தங்கள் நடைபெற்றன. நவராத்திரி கழித்து விஜய தசமிக்கு மறுநாள் சுக்கில ஏகாதசியன்று - 43 வயதான ஸ்ரீகிருஷ்ணர் - அர்ஜுனனுக்கு கீதோபதேசம் செய்தார்.
- ஸ்ரீ கிருஷ்ணன் கி.மு. 3031 ஏப்ரல் 13ல் தம் 81 வயதில் மறைந்தார்.
- மகா பாரத யுத்தம் நடந்த வருடம் கி.மு. 3139 மகாபாரத யுத்தம் இன்றிலிருந்து 5, 143 வருடங்களுக்கு முன்பு மார்கழி மாதம் நடந்தது.
- மகாபாரத வியூகங்கள் - அவை கிரவுஞ்ச வியூகம், கருட வியூகம், மகர வியூகம், சியேன வியூகம், மண்டல வியூகம், வஜ்ர வியூகம், அர்த்த சாஸ்திர வியூகம், பத்ம வியூகம், சக்ர வியூகம், சகட வியூகம், அர்த்த சந்திர வியூகம்.
- தீபாவளியை முதன் முதலாக கொண்டாட ஆரம்பித்தவன் நரகாசுரனின் மகன் "பகதத்தன்" இவனுடைய தீபாவளி விழாவிற்கு கிருஷ்ணர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.
- சத்யபாமா தன் மகன் நரகாசுரனை கொன்றதால், இந்த நாளில் அனைவரும் தைல ஸ்நானம் செய்து புத்தாடை உடுத்தி, இனிப்புக்கள் உண்டு மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும். என்னை போல் யாரும் துக்கப்பட வேண்டாம் என வேண்டினாள்.

**- லக்ஷ்மி ஸந்தானம்**

www.TheMagnat.com

பொத்தியபடி அந்தக் கிடங்கிலிருந்து வெளியே வந்துக் கொண்டிருந்தார். பிண வாடையை விட அதிக நெடியுடன் சாராய வாடை வீச, நீல யூனிபார்மிலிருந்த அவன் பேசினான். "என்னா, ஆக்ஸிடண்ட் கேசு பார்க்க வந்துக்கிறீங்களா? இடது கையால் கர்சீப்பில் மூக்கை மூடியபடி, தலையாட்டினான் கணேசன். நெடியைத் தொடர்ந்து கிடங்கின் உள்ளே சென்றான். கதவைத் திறந்தவுடன் சில்லென்ற காற்று பிணவாடையுடன் முகத்தில் அறைந்தது. சலவைக் கல் மேசை மீது, வெள்ளைத் துணியில் சுற்றி வைக்கப்பட்ட, மனித சைஸ் மரப்பாச்சி பொம்மைகளாய் உடல்கள். கடைசி மேசையில் கிடந்த உடலின் முகம் தெரியத் துணியை விலக்கியது சாராய நெடி.

"நல்லா பாரு சாரு."

கணேசனுக்கு தலை சுற்றுவதைப் போல் இருந்தது. வயிற்றை குமட்டியது. சற்று மெதுவாய் அருகில் சென்று பார்த்தான். நெற்றியில் பச்சை குத்தியிருந்தது. பற்களில் இரண்டு தெற்றியபடி, உதடு விரிஞ்சி, கன்னத்தில் தோல் தேய்ந்து, ஒரு கண்ணில் கரு ரத்தம் கட்டி வீங்கி,

"இல்லீங்க." தலையை ஆட்டியபடி, "இது என் அம்மா இல்லை" என்றபடியே ஓட்டமும் நடையுமாய் வெளியே வந்தான். பின்னாலேயே வந்த சாராய நெடிக்கு வணக்கம் சொல்லி, கையில் டீக்குப் பணமும் கொடுத்து விட்டுக் கிளம்பினான். அழுவதா? சிரிப்பதா? அம்மா நீ எங்கே இருக்கிறாய்? தினமும் வீட்டுக்கு வருவோரும் போவோரும் ஏதோ அம்மா இறந்து விட்டதைப் போல துக்கம் கேட்ட வண்ணம் இருந்தனர். கணேசனுக்கே மனதில் அந்த சந்தேகம் மெதுவாகத் தலை தூக்க ஆரம்பித்து விட்டது.

"பாவம் உங்கம்மா, புத்தி சுவாதீனம் வேற இல்லே, கவனமாப் பார்த்துக்கக் கூடாதா?" என்றார் தூரத்துச் சொந்த மாமா. புத்தி சுவாதீனமில்லாததும், டிமென்ஷியாவும் ஒண்ணு தானோ? புரியாமல் குழம்பினான் கணேசன்.

"இல்லே, இது ஏதோ மூளை சம்பந்தமான மறதி வியாதி. அம்மாவுக்கே தெரியாமல் எங்கேயோ காணாமல் போய்ட்டா."

பதில் சொல்லியே ஓய்ந்து போனான் கணேசன். கமலாவுக்கும் வீட்டில் வேலையே ஓடவில்லை. இவ்வளவு பெரிய உலகத்தில் எந்த மூலைலே இருப்பா? இப்போ என்ன செய்து கொண்டிருப்பா? இருக்காளா இல்லையா? ஒன்றும் புரியாமல் ஏதோ இயந்திரம் போல் சுற்றி வந்தாள். ஒரு வாரம் ஓடி விட்டது. அம்மாவின் அறையில் கணேசன் அழுது கொண்டிருந்தான். புடவை, ரவிக்கை எல்லாம் நேர்த்தியாக அடுக்கி வைத்திருந்தாள். தேங்காய் எண்ணை பாட்டில், சிடுக்குவாரி, சீப்பு எல்லாம் நிலைக் கண்ணாடிக்கு முன்னால் இருந்தன. சுவரில் மாட்டி இருந்த போட்டோ அந்தக் கால உடையில், கருப்புத் தொப்பியுடன் அப்பா, போர்த்திய முந்தானையுடன் அம்மா, கொம்பு வைத்த அரை நிஜாருடன் கணேசன், காதில் டோலக்குடன், பட்டுப்பாவாடையில் அருணா கணேசனின் தங்கை.

> **அம்மாவுக்கு அருணாவின் நினைவு தான் எப்போதும். கவலையுடன் அருகில் வந்து நின்ற கமலாவைப் பார்த்தான் கணேசன். என்ன செய்வதென்று புரியாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு கலங்கினர்.**

அம்மாவுக்கு அருணாவைப் பற்றித் தான் கவலை. எவ்வளவு ஆசையாய் வளர்த்தாள்? இருபது வருட சொந்தத்தையும், பாசத்தையும் ஒரு நொடியில் உதறி விட்டு எதிர் வீட்டுக் கோபாலுவுடன் ஓடி விட்டாள். போட்டோவை வெறித்தபடி அம்மா, அருணாவின் நினைவில் உருக்குலைந்தாள். இழப்பை விட, அவளை இழந்த விதத்தில் தான் வருத்தம் அதிகமாக இருந்தது அம்மாவுக்கு. அம்மாவுக்கு அருணாவின் நினைவு தான் எப்போதும். கவலையுடன் அருகில் வந்து நின்ற கமலாவைப் பார்த்தான் கணேசன். என்ன செய்வதென்று புரியாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு கலங்கினர்.

கமலா தான் சொன்னாள். "நம்ப திருநீர்மலைக் கோயிலுக்குப் போய் ரொம்ப நாளாயிடுச்சு. எப்போ, எந்தக் கஷ்டம் வந்தாலும் அவன் தான் நமக்குத் துணை. ஒரு தடவை போய் வருவோமா?" ஏதாவது நல்ல செய்தி கிடைக்காதா என்ற ஆதங்கத்தில் சொன்னாள். வீட்டிலேயே அடைந்து கிடக்கும் கணேசனுக்கு மாறுதலாகவும், ஆறுதலாகவும் இருக்குமே என்று நினைத்தாள்.

"நம்மைப் போன்றவர்களுக்கு தெய்வத்தைத் தவிர வேறு யார் துணை, போகலாம்." என்றான் கணேசன்.

**அ**ந்தச் சனிக்கிழமை காலையிலேயே வாடகைக் கார் ஒன்றில், கமலாவுடன் திருநீர்மலைக்குக் கிளம்பினான். நான்கைந்து வருடங்களுக்கு முன் அம்மாவுடன் அந்தக் கோயிலுக்குச் சென்றது மனதில் நிழலாடியது. பல்லாவரம் சிக்னலில் நின்று, ஊர்ந்து பின் வலது புறம் திரும்பி, திருநீர்மலை செல்லும் வளைந்த சாலையில் சில ஓட்டு வீடுகள், பெட்டிக் கடைகள் தாண்டி மலையடிவாரத்தில் கார் நின்றது. இடது புறம் கோயில் குளமும், வலது புறம் தென்னங்கீற்றுத் தொப்பியுடன் கோயில் தேரும் வரவேற்றன. காரிலிருந்து இறங்கிக் கையில் அர்ச்சனைத் தட்டுடன் கீழேயிருந்த ராமர் சன்னதி நோக்கிச் சென்றான். 'நின்றான், இருந்தான், கிடந்தான்' என மூன்று நிலைகளிலும் இங்கு தான் பெருமாள் இருக்கிறார் அம்மா என்றோ சொன்னது நினைவுக்கு வந்தது. கோயில் வாசலில் சின்ன மரப் பெட்டியின்

மேல், மல்லி, முல்லை, இருவாட்சி, துளசி மாலை எல்லாம் அழகாக அன்றைய வியாபாரத்துக்கு வைக்கப் பட்டிருந்தன. அருகில் அமர்ந்து குனிந்த தலையுடன் துளசி தொடுத்துக் கொண்டிருந்தவளைப் பார்த்து திகைத்து, "அம்மா" என்றலறியபடி ஓடினான் கணேசன். பின்னாலேயே கமலாவும்!

நிமிர்ந்து பார்த்தவள், முகத்தில் ஒரு சலனமுமின்றி, "வா கணேசா, வா. எங்கே இத்தனை நாளும் காணாமப் போய்ட்டே? தேடித் தேடி ஓஞ்சு போய்ட்டேண்டா. எங்கே போனே நீ? நல்ல வேளை அருணா என்னைத் தன் வீட்டில் கொண்டு வெச்சுண்டா" என்றாள்.

"என்னம்மா சொல்றே நீ, அருணாவா? நீ எப்படிம்மா இங்கே வந்தே?"

"அம்மா, என்னைத் தெரியலையா?" கமலா கண்ணில் நீருடன்.

"நல்லா இருக்கு. நாளுங்கிழமையுமா கேக்கற கேள்வியும், கண்ணுல நீருமா. அருணா இப்போ வந்துடுவா. இந்தக் கடை அவளுது தான்." ஒரு பழைய சுங்குடிப் புடவை, லூசாக ஒரு ரவிக்கை, நெற்றியில் துளிக் குங்குமம், காதிலும், மூக்கிலும் இருந்த வைரங்களைக் காணவில்லை. அம்மாவைப் பரிதாபமாகப் பார்த்தபடி நின்றான் கணேசன்.

"என்னா சாமி, இன்னா வேணும்-? மல்லியாக கதம்பமா?" என்ற குரல் கேட்டுத் திரும்பினான் கணேசன். 'நீ யார்?' என்பது போல் பார்த்தான்.

முழங்கால் வரை தூக்கிச் சொருகிய சேலை, இடுப்பில் ஒரு பக்கம் சுருக்குப்பை, மறு பக்கம் கூடையில் துடைப்பம், வெற்றிலைக் கறை ஏறிய பற்களுடன், கோரிய செம்பட்டைத் தலை முடியுடன் நின்றிருந்த அந்தப் பெண்மயியிடம், "இந்த அம்மா... என்று ஆரம்பித்தான்.

கமலாவும் அம்மாவும் இவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். "தெனமும் கோயில் பெருக்கி, சுத்தம் செய்யறது என் வேலை. கொஞ்சம் பூ வியாபாரமும் செய்வேன் சார். போன வாரம், ஒரு நா




வங்கி மேலாளர்: மாட்டுக்கு லோன் வாங்கியிருந்தீங்க எப்படி கட்டுவீங்க?

கிராமத்தான்: கயிற்றாலே தான்.

காலீல கோயில் வாசப்படியாண்ட வுயுந்து கிடந்தது இந்தம்மா. என்னமோ ஏதோன்னு, எளுப்பி ஒக்கார வெச்சா, 'இன்னா அருணா, நெல்லா இருக்கிறியா? கொஞ்சம் காப்பி குடேன்'னுது. பேஜாராய்ட்டேன். எத்த கேட்டாலும் ஒண்ணும் தெரிலே, முளிக்குது. 'அருணா, உன் கையாலே காப்பி குடு'ன்னு மட்டும் கேட்டுக்கினே இருக்குது. சரி, கொஞ்சம் டைம் வுட்டு கேக்கலாம்ன்னுட்டு, காப்பித் தண்ணி வாங்கிக் குடுத்தேன். வேற ஒண்ணியும் சொல்ல மாட்டேங்குது. கோயிலய்யிரும் பாத்துட்டு, வசதியான குடும்பத்திலேர்ந்து வந்த மாமியாட்டம் இருக்குது. கொஞ்சம் மைண்ட் சரியில்லெ போல. பாக்கலாம் ஒரு வாரம்ன்னிட்டாரு. என் கூடவே குடிசையிலே கஞ்சியும், கடை இட்லியும் துண்ணுக்கினு, பூக்கடையிலேயே குந்திக்கினு இருக்குது சார். ஆனா, தொளசி சும்மா சூப்பரா தொடுக்குது சார்!"

"அம்மா நீங்க யாருன்னு எனக்குத் தெரியாது." கணேசன் குரல் உடைந்தது "ஆனால் இது எங்கம்மா" என்றான். சந்தேகமாகப் பார்த்தாள் அவள். 'பின்னே ஏன்யா தனியா ரோடுலே வுட்டே?' என்று கேட்பதைப் போல இருந்தது.

அண்ணங்கூட வூட்டுக்குப் போ. நான் வேலையெல்லாம் முடிச்சிட்டு பொறவு வரேன்." என்றாள்.

"சரி மறக்காம வந்துடு" என்றபடி கணேசனுடன் கிளம்பினாள் அம்மா.

மலை ஏறி, பெருமாளுக்கு நன்றி கூறித் திரும்பினார்கள். கோயில் குருக்களும், பூக்காரம்மாவின் உதவியை மிகவும் பாராட்டினார். கீழே இறங்கிய அம்மா சுற்றும் முற்றும் தேடினாள். "அருணா எங்கே-?" என்றாள். அவளைக் காணவில்லை. அம்மா கிடைத்த சந்தோஷத்தில், அவளுக்குக் கூட ஒன்றும் கொடுக்கவில்லையே என்று கணேசனும், கமலாவும் உடன் தேடினார்கள்.

மூச்சிரைக்க ஓடி வந்த அந்தப் பெண்மணி, கையில் இட்டிலிப் பொட்டலமும், சின்ன சொம்பில் காப்பியும் கொண்டு வந்து கொடுத்து, "துன்னுட்டுப்போம்மா" என்றாள்.

"அருணா உனக்கு?" என்றாள் அம்மா! கணேசன் வாயடைத்துப் போனான். கமலா அப்பெண்மணியின் கைகளைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

கொடுக்க வந்த பணத்தையும் வேண்டாம் என்றாள் அந்தப் பூக்காரி அம்மாவுடன் கணேசன் புறப்பட, கார்க் கண்ணாடியில், பின்னால் அவள் ஓடி வருவது தெரிந்தது. காரை நிறுத்தி இறங்கினான்.

"இந்தா சார், மறந்தே போய்ட்டேன். அம்மா காதுல போட்டிருந்த தோடு, மூக்குத்தி. இங்கே சேப்டி கெடையாதுன்னு களட்டி வீட்டு உள்ளே வெச்சிருந்தேன்." அம்மாவையும் நகைகளையும் மாறி மாறிப் பார்த்தான் கணேசன். கணவனின் மனமறிந்த கமலா, "எங்க வீட்டுக்கு நீங்க எப்பவும் வரலாம். எந்த உதவியும் உங்களுக்குச் செய்ய தயாரா இருக்கோம்." என்று சொல்லி, அம்மாவிடம் நகைகளைக் கொடுத்து, "அருணாவுக்கு கொடுத்து விடுங்கள்." என்றாள்.

அம்மா முதன் முறையாகச் சிரித்தாள்! மலைக் கோயில் மணியோசை கீழே கேட்டது! ●




"அவங்களுக்கு ஒரு மறதி வியாதி. தானே வீட்டை விட்டு வந்துட்டாங்க. திரும்பிப் போற வழி மறந்து, இங்கே வந்து விழுந்திருக்காங்க. நல்ல வேளை நீங்க அவங்களைப் பத்திரமாப் பார்த்துக்கிட்டிருக்கீங்க. ரொம்ப நன்றிம்மா. ஒரு வாரமா தேடித் தேடி எங்கேயும் கிடைக்காம நரகமாயிருந்தது வாழ்க்கை." என்றபடித் தன் பர்சில் வைத்திருந்த அம்மாவின் போட்டோவைக் காண்பித்தான்.

"ஐயோ பாவம். சாக்கிரதையா பாத்துக்க மவராசா. பெத்தவங்க தான்யா நடமாடற தெய்வங்க. எனக்கு இந்த ஒரு வாரத்துல இவங்க மேலெ ரொம்ப பாசமாயிடிச்சிய்யா" என்றாள் கண்ணின் ஈரத்தைத் துடைத்தவாறே. இப்படிக் கூட இந்தக் காலத்தில் மனிதர்களா? அதிசயமாயிருந்தது கணேசனுக்கு.

"அம்மா, வீட்டுக்குப் போகலாமா?"

"அருணா?"

கணேசனும், கமலாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அந்தப் பூக்காரப் பெண்மணி, "யார் சார் அந்த அருணா? என்றாள். "பழைய கதை கேட்டு விட்டு, யம்மா, இப்பொ

www.TheMagnet.com



# நூற்றாண்டு அனுபவங்கள்!

**பி.வெங்கட்ராமன்**

"நூறாண்டுகாலம் வாழ்க - நோய் நொடி இல்லாமல் வளர்க" - உங்களைப் போலவே எனக்கும் இந்த திரைப்படப் பாடல் பிடிக்கும்!

இருந்தாலும் 'நூற்றாண்டு' என்பது ஒரு மைல்கல். சாதனை நிகழ்வுகளை அனைவரும் போற்றி மகிழ்ந்திட ஒரு நல்வாய்ப்பு!

1954ல் 'டிங்டாங்' இதழில் வெளியிட்டு ஊக்குவித்த என் தந்தையார் **கண்ணபிரான் அச்சக அதிபர் - 'டிங்டாங்' ஆசிரியர் எஸ். பரசுராம்** அவர்களின் நூற்றாண்டு விழாவை மிக நன்றிப் பெருக்குடன் 2003ல் சென்னை மயிலை சீனிவாச சாஸ்திரி அரங்கில் மிகச் சிறப்பாக நடத்தினார். குடும்பத்தினரும் அனைவரும் நெகிழ்ந்தோம், பெரிதும் மகிழ்ந்தோம், மிக நேர்த்தியான நூற்றாண்டு விழா!

அப்போதிருந்தே எனக்குள் ஒரு யோசனை. இது போன்றே நான் பிறந்து வளர்ந்து - வாழ்ந்த புதுக்கோட்டையைச் சார்ந்த - இலக்கிய திரைப்பிரபலர்களின் நூற்றாண்டினை நாமே முன்வந்து கொண்டாடினால் என்ன என்று தோன்றியது.

அந்த வகையில் திரைப்பட பாடலாசிரியர் **கு.சா. கிருஷ்ணமூர்த்தி**

www.TheMagNet.com



- தலைவனாக பூபதி **பி.யூ. சின்னப்பா,** எம்.ஜி.ஆரின் அதிகமான படங்களை இயக்கிய **ப.நீலகண்டன்** ஆகியோரின் நூற்றாண்டை நினைவுபடுத்தி - முன்னதாகவே சிறப்புக்கட்டுரைகள் வடிவில் 'புதுகைத் தென்றல்' இதழில் எழுதியமை அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது.

**கு.சா.கி** அவர்களுக்கு நானே சொந்தப் பொறுப்பில் நூற்றாண்டு விழா நடத்தியதை அறிந்த சாகித்ய அகாதமியும், ஞானாலயா அமைப்பும் புதுக்கோட்டையில் சிறப்பாக விழா நடத்தினர்.

சென்னை ஒய்.எம்.சி.ஏ இலக்கிய வட்டம், விண்டேஜ், ஹெரிடேஜ், கிரேட் லேக்ஸ் அமைப்பு நடத்திய குசா.கி மற்றும் பி.யூ. சின்னப்பா விழாக்களில் முதன்மையாக பங்கேற்றது மறக்க முடியாதவை.

இந்த மூவருக்கும் விழாக்கள் எடுத்தது மட்டுமல்லாமல் சிறப்பு வெளியீடுகள் வெளியிட்டமை எனக்கு திருப்தியாயிருந்தது.

இம்மூவர் பற்றி நான் தொகுத்தளித்து **"நூற்றாண்டு கண்ட திரைக் கலைஞர்கள்"** நூல் குறித்து அனைத்து இதழ்களும் பாராட்டிக் குறிப்பிட்டன. "திரையுலகினரே நினைவில் வைத்து கொண்டாடத் தவறியவர்களை ஒரு தனிமனிதர் கொண்டாடியிருக்கிறார் என்பதே இந்நூலுக்கு பெருமை சேர்க்கிறது" எனும் பாராட்டு மன நிறைவைத் தருகிறது.

'நூற்றாண்டு' எனக்குறிப்பிடப்படும் போது நான் நடத்திய விழாக்களும், வெளியிட்ட சிறப்பு மடல்களும் அனைவரையும் கவர்ந்தவை. அது போன்ற நூற்றாண்டு பிரபலங்கள் எம்.ஜி.ஆர், எம்.எஸ். சாவி ஆகியோருடனும் சந்திப்புகள் நெஞ்சில் நீங்கா இடம் பெற்றவை.

**எம்.ஜி.ஆர்**

தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரின் எர்ணாகுளம் வருகையின் போது, முத்தமிழ்ச் சங்கம் சார்பில் வரவேற்கும் நல்வாய்ப்பு எனக்கு மறக்க முடியாதது.

எர்ணாகுளம் நகரிலிருந்து தமிழக நகர்களுக்கு பேருந்து வசதி ஏற்படுத்தி தர முத்தமிழ்ச்சங்க வாயிலாக நான் வைத்த கோரிக்கை முதல்வரால் உடனடியாக ஏற்கப்பட்டது.

**எம்.எஸ்.**

ஆறு வயதே இருக்கையில் 'குஞ்சம்மா'

எனும் குழந்தை, பின்னாட்களில் பெற்ற புகழ் **'கொஞ்சமா - நஞ்சமா'** என அனைவரையும் வியக்க வைத்த எம்.எஸ். எனும் ஈரெழுத்து மந்திரம் - இசைப் பேரரசி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள்.

1966ல் ஐ.நா. சபையில் பாடிய முதல் பெண்மணி. 2016ல் அதே ஐ.நா. சபையில் அவருக்குச் சிறப்பு தபால் தலை வெளியிட்டுள்ளது பாரதத்திற்கே தலையாய பெருமை!

அற்புதமான இசை அர்ப்பணிப்புகளால் அறப்பணிகளுக்கு அள்ளித்தந்த அருள்கொடையாளர். ஆன்மீக - இசை நிகழ்ச்சிகளுக்காக புதுக்கோட்டை வரும்போதெல்லாம் கீழ ராஜ வீதியில் ரிடையர்டு கம்யூனிகேஷன்ஸ் என்ஜினியர் ஜகதீசய்யர் வீட்டில் தான் சதாசிவம் தம்பதியினர் தங்கும் சந்தர்ப்பங்களில் அவர்களைக் காணும் வாய்ப்பு கிடைத்தது.

சென்னையில் குடும்ப வைபவமொன்றில் மீண்டும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

www.TheMagnet.com

எம்.எஸ். அவர்கள் - பாரதத்தின் ரத்னம். பாரத ரத்னா

**சாவி**



1961ல் ஆனந்த விகடன் இதழில் 'தெற்கு வளர்கிறது' பகுதிகாக தமிழகத்தின் பல தொழிற்சாலைகளுக்கு வருகை புரிந்து விரிவான கட்டுரைகள் எழுதி வந்தார் **சாவி.** மதுரை டி.வி.எஸ். தொழிற்சாலையை பார்வையிட்டு விட்டு புதுக்கோட்டை டி.வி.எஸ். தொழிற்சாலைக்கு வருகை புரிந்த அவரை கிளை நிர்வாகியுடன் உடனிருந்து சுற்றிக் காண்பித்து விளக்கியதால் என் மேல் மிகுந்த ஈடுபாடு

சில ஆண்டுகளுக்குப் பின்னர் தினமணி இதழில் அவர் பணியாற்றிக் கொண்டிருந்த போது அவரை சந்திக்கையில் என்னைப் புரிந்து கொண்டார்.

"டி.வி.எஸ். நிறுவனம் மிகப் பிரம்மாண்டமான மோட்டார் தொழில் சாம்ராஜ்யம். அதன் நிர்வாக இயக்குநர் திரு. ஆர். ராமச்சந்திரன் (ஆர் ஆர்) அவர்களின் விருந்தோம்பும் பண்பு என்னை பெரிதும் வியக்க வைத்தது" என பாராட்டினார்.

எழுத்தாளர்களை உருவாக்கிய எழுத்தாளர் 'இதழியல் துரோணாச்சாரியார்' என போற்றப்படுகிற சாவி அவர்களின் ஊக்குவிப்பினால் வளர்ந்த பலர். இன்று சமூகத்தில் பிரபலங்களாக உலவி வருவது குறிப்பிடத்தக்கது.

1940களில் பனையப்பச் செட்டியார் நடத்திய 'சந்திரோதயம்' இதழில் (60, தம்புச் செட்டி தெரு) சாவி அவர்கள் பணியாற்றில் கொண்டிருந்தபோது எனது தாய்மாமா குருமூர்த்தி அய்யா சர்க்குலேஷன் மானேஜராக பணியாற்றியுள்ளார்.

அவர்கள் வாழும் காலத்தில் போற்றப்படுபவர்களை விட அவர்கள் மறைந்தபின் அவர்களுக்காக எடுக்கப்படும் நூற்றாண்டு விழாவில் கௌரவம் பெறுபவர்கள் பலர்...! ●



விழுப்புரம் ராமசாமி **படையாச்சி** மாவட்டம், **முதலியார்** சத்திரம் ஊராட்சி **செட்டி**குறிச்சி கிராமம் **சீனிநாயக்கர்** தெருவில் கிருஷ்ணசாமி **ரெட்டியார்** நினைவுப் பள்ளியில் ஆசிரியர் நெல்லையப்ப **பிள்ளை** பாடம் நடத்தினார் "ஜாதிகள் இல்லையடி பாப்பா".

- சரவெடி ஸ்ரீதர்





சிறுகதை

# மஹா மகளிர் மன்றம்

அகில இந்திய மஹா மஹிள சமாஜம் பிரஸிடென்ட் குந்தளா மேடம். அங்கத்தினர் 25 பேர். லலிதா, கோமளா, சுஜா, பிரபா, ரேவதி, குந்தளாவின் வலது கை. இடது கை சாரிகள் அனுபமா, சாரதா, சௌம்யா, பேகம், உஷா, மேரி, கௌசல்யா. இன்னும் சில அங்கத்தினர்கள் உப்புக்குச் சப்பாணி.

பின்னாலே அலட்டல், பில்டப், ஸ்டைல் என மேடத்தைப் பற்றிப் பேசினாலும் குந்தளா முன்னாலே மூச் பேச் நோ. அன்று மூன்று மணிக்கு மீட்டிங். சில முக்கிய நபர்களை கூப்பிட்டுச் சொல்லி மற்றவர்களுக்கும் தெரிவிக்கச் சொன்னாள்.

டாண் 3 மணி. குந்தளாவின் வீட்டின் பெரிய ஹாலிலேயே அங்கத்தினர் கூடினர்.

"ஹலோ, குட் மார்னிங். இன்று நாம் கூடிய முக்கியத்துவம் நம் தீபாவளி ஸெலிபிரேஷன் பற்றித் தான். அடுத்த வாரம் நம் குடும்பங்களுக்கு வேண்டிய பட்சணங்கள் தீர்மானம் பண்ணினும். அவரவர் என்ன செய்யலாம் என்பதைப் பற்றி சொல்லுங்கள். சிலர் மைசூர்பாகு, லட்டு, சிலர் பாதாம் அல்வா, பாதுஷா" என்றனர். "அமைதி, அமைதி" என்றாள்.

"எப்போதுமே நாம் செய்யும் பாரம்பரிய பட்சணங்கள் தான் இவை. எனவே, நான் ஒரு புதிய

www.TheMagnet.com

> அடுத்த நாள் குந்தளா மேடம் ஹாலில் எல்லோரும் கூடினர். "குந்தளா நஷ்டப்படாத" என 50 ரூபாய் கொடுத்தனர். நவரத்னா அல்வா, பக்கோடா ருசி பார்த்தனர். மேடம், நம்ப அல்வா நன்னாவே இருக்கே, முதல் நாள் பண்ணி அடுத்த நாள் தான் சாப்பிடணும் போல.

வகை அல்வா, காரம் பற்றி சொல்கிறேன். சம்மதம் என்றால் ஓட்டு எடுக்கலாம்" என்றாள் குந்தளா. "அதானே பார்த்தேன்." பின் வரிசையில் முணுமுணுப்பு. "பாதி இங்கீலிஷும் தமிழுமா இங்கிலீஷ் விங்கிலீஷ் ஸ்ரீதேவின்னு நினைப்பு. நம்பகிட்ட கேட்டாளே!" நமுட்டு சிரிப்பு சிரித்தனர்.

வலது சாரிகள் எழுந்தனர். "சரி, சரி, ஐடியாவை சீக்கிரம் சொல்லுங்க மேடம். குழந்தைகள் வந்து விடுவார்கள்." "கேளுங்கள். அதாவது இப்போ எல்லா பத்திரிக்கைகளிலும் டி.வி.யிலும் நவரத்னா, சாரி, சாரி, நவதான்யங்கள் பற்றி வருது. அதனால், நவதான்ய அல்வாவும், நவதான்ய பக்கோடாவும் பண்ணலாமா? சரியாக வந்தால் விஜய் டி.வி.யிலும், சன் டி.வி.யிலும், ஜெயா டி.வி.யிலும் சான்ஸ் கிடைக்கும். எப்படி?"

"சரி. ஓ.கே. டபுள் ஓ.கே."

"அடுத்த வாரம் புதன் கிழமை 11 மணிக்கு வந்து விடுங்கள். நானே நவதான்யங்களை வாங்கி வைக்கிறேன். சர்க்கரை, நெய் எல்லாமே சுந்தரம் மளிகையிலே வாங்கி வைக்கிறேன். வரும் போது மெம்பர்கள் ஒவ்வொருவரும் 100 ரூபாயும் வெளி ஆட்கள் யாராவது வர விரும்பினால் 150 ரூபாயும் தரணும். சிறிய கால் கிலோ கொள்ளும்படியான இரண்டு டப்பாக்கள் கொண்டு வாருங்கள். மெம்பர்ஸ் சீக்கிரம் வந்தால் உதவியாக இருக்கும்." கூட்டம் கலைந்தது.

எல்லோரும் வெளியே வந்து சலசலத்தனர், "தீபாவளியும் அதுவுமா நல்ல பாதாம், கேரட் அல்வா, முந்திரி பக்கோடா பண்ணாம, ஆடு மாடுகளுக்கு வைக்கிற மாதிரி நவதான்யமாம். மண்ணாங்கட்டி. நவதான்ய அடை கூட சரியா வரதில்லை."

**பு**தனும் வந்தது. மெம்பர்ஸ் ஒவ்வொருத்தர் வீட்டிலும் ஒரே பரபரப்பு. லலிதா சமையலை முடித்து குழந்தைகளை ஸ்கூலுக்கு அனுப்பினாள். ராகவனும் ஆபீஸ் கிளம்பினார். மாமியார் மங்களம். "என்னடி ஒரே பரபரப்பாயிருக்கே தீபாவளி வரது. பட்சணமெல்லாம் பண்ண வேண்டாமா." "அதாம்மா எங்க கிளப்பிலே புது மாதிரி அல்வா பண்ணப் போறோம். போயிட்டு வந்து சொல்றேனம்மா." கிளம்பினாள்.

**கு**ந்தளா பின் கை தட்டி "பேஷ்! பேஷ்!" என சுற்றி உற்சாகப் படுத்தினாள். லலிதாவும் வனஜாவும் உருளியிலே தண்ணீர் அளந்து ஊற்றினர். சர்க்கரையை அளந்து போட்டனர். பெரிய மரத்துடுப்பு போட்டு கிளறினர். கம்பி பாகு வந்தது. முந்திரி திராட்சையை நெய்யிலே பொன் நிறமாக வறுத்தனர். ஒரு பக்கம் நெய் உருகியது. கமகமவென மணம் ஊரையே தூக்கியது. எல்லா மெம்பர்களும் கூடி நின்றனர். கம்பி பாகிலே நம் மேடம் முதலிலே நவதான்ய பவுடரை ஒரு பிடி தூவ ஆரம்பிக்க எல்லோரும் கொஞ்சம் கொஞ்சமாக தூவினர். சிலர் காயும் நெய்யை கரண்டி கரண்டியாக ஊற்றினர். பாலிலே சிறிது குங்குமப்பூ கரைத்து ஊற்றினர். வாசனை என்னமோ கமகம தான். ஆனால் அல்வாவோ பாத்திரத்திலே ஒட்டாமே ஜுஸ்

**சரோஜா வாஞ்சி**



பாட்டி!
இந்த பலூனை
ஊதிக்குடு.

போடா
எனக்கு
வயசாயிடுச்சு
அதெல்லாம்
ஊத முடியாது.

அப்போ
காலையிலே அம்மா சொன்னாளே...
உங்க பாட்டி சின்ன சின்ன விஷயத்தை
கூட ஊதி ஊதி பெரிசு பண்ணிடுவான்னு!

- சரவெடி ஸ்ரீதர்

மாதிரி குதித்தது. கை சுட்டது. பலரும் ஒதுங்கினர். கடைசியாக குந்தளாவின் வேலைக்காரி வேலம்மா பொறுப்பு ஏற்றாள். "சரி போதும். மற்றதை பார்ப்போமா", என மேடம் சொல்ல "இன்னொன்றா" என கோரஸாக குரல் கொடுத்தனர். பெரிய எவர்ஸில்வர் பேஸினில் அரைத்த நவரத்ன மாவை கொட்டினர். 2 கப் நெய் ஊற்றினர். அளவாக உப்பு, மிளகாய் தூள், பெருங்காயத் தூள், மெலிதாக அரிந்த ப.மிளகாய், இஞ்சி, கருவேப்பிலை, கொத்தமல்லி அரிந்து போட்டனர். சிறிது கடலை மாவு சேர்த்து பிசைந்தனர். சிலர் பிரட் கிரம்ஸ், முந்திரி பருப்பு சேர்த்தனர். தண்ணீர் தெளித்து பிசைந்தனர்.

கேஸிலே, வாணலி வைத்து எண்ணை ஊற்றி பற்ற வைத்தனர். சிம்மில் வைத்து மெம்பர்கள் ஆளுக்கொருவராக 3,4 உருண்டைகளைப் போட்டனர். சிவந்ததும் அள்ளி வடிதட்டிலே போட்டனர். தீபாவளி தானே என்று டேஸ்ட் பார்த்தனர். கர கர இல்லாவிட்டாலும் மெது பக்கோடா போல இருந்தது. ம்... பரவாயில்லை.

அல்வா மெம்பர்களை பார்த்து பரிதாபப்பட்டு சிறிது பதம் ஆனதும் ருசி பார்த்தனர். நெய், சர்க்கரை, எஸன்ஸ் சேர்ந்து கசப்பு மறைஞ்சது. ஒ.கே. ஆனது. "மேடம்! ரொம்ப லேட், வீட்டிலே போனா செம டோஸ் தான். நாளை வந்து அல்வா, பக்கோடாவை எடுத்துக்கறோம்." விட்டாப் போதும். கிளம்பி விட்டனர்.

சூர்யா ஸ்வீட்ஸ் கடை. ஸ்டாலிலே ஏகக் கூட்டம். மெம்பர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து அசடு வழிந்தனர். 200 கிராம் பாதாம் அல்வா, கால் கிலோ முந்திரி பக்கோடா பேக் பண்ணி பண்ணி கடை சிப்பந்திகள் கையே வலித்து விட்டது.

ஆம், கடையை மொய்த்தது நம்ப அகில இந்திய மஹிளா சமாஜ் கிரேட் மெம்பர்கள் தான். "லலிதாம்மா! என்னம்மா நம்ப குந்தளா மேடம் போன் பண்ணினாங்க. 25 கிலோ டிரை ப்ரூட்ஸ் அல்வாவும், 25 கிலோ முந்திரி பக்கோடாவும் ஆர்டர் கொடுத்தாங்க. என்ன விசேஷம்மா?" என்றார் சேட்டு. "அதுவா சேட்டு, இலவசமா தீபாவளி ஸ்வீட் தரப் போறாங்க", சிரித்தபடி கிளம்பினாள்.

அடுத்த நாள் குந்தளா மேடம் ஹாலில் எல்லோரும் கூடினர். "குந்தளா நஷ்டப்படாதே" என 50 ரூபாய் கொடுத்தனர். நவரத்னா அல்வா, பக்கோடா ருசி பார்த்தனர். மேடம், நம்ப அல்வா நன்னாவே இருக்கே. முதல் நாள் பண்ணி அடுத்த நாள் தான் சாப்பிடணும் போல. ஹால் சிரிப்பாலே நிறைந்தது. எல்லோர் டப்பாவும் அல்வா, பக்கோடாவாலே நிறைந்தது. சிரித்தபடி கிள்ம்பினர். எல்லார் வீட்டிலும் ஒரே புகழோ புகழ். "பரவாயில்லையே, உங்கள் சமாஜ் சூப்பர்!" என்றனர்.

லலிதா வீடு. எல்லோருக்கும் கொடுத்தாள். எல்லோரும் "பென்டாஸ்டிக்!" "நம்ப ராயர் கடை அல்வா தோத்துப் போகும்" என மாமியார் புகழ்ந்தாள். "ஏண்டி லலிதா, நானும் ஜாயின் பண்ணினா, நானே நன்னா சொல்லித் தருவேனே. நன்னா பண்ணுவேனே" என்றாள். "அம்மா, அடுத்த முறை கண்டிப்பா அழைச்சிண்டு போறேன்" என்றாள். இரவு ராகவன், "ஹலோ மேடம்! என்னை ஏமாற்ற முடியாது. உன்னை ஏன் உங்கள் எல்லோரையும் சூர்யா ஸ்வீட் ராயல் கடையிலே பார்த்தேன்." என்றார். இருவரும் சிரித்தனர். ●

வடபழனி முருகன் எப்போதும் போல் புன்னகைத்துக் கொண்டிருந்தான். அன்று ராஜ அலங்காரத்தில் ஜொலித்துக் கொண்டிருந்தான். வழக்கம் போல் கூட்டம். எங்கும் விபூதியின் மணம்.

தேவகி, மனம் சஞ்சலப்படும் போதெல்லாம் தனியாக இங்கே வந்து உட்கார்ந்து விடுவாள். இந்தக் கோவிலின் படியைத் தாண்டி காலை வைக்கும் போதே ஆழ் மனதுக்குள் புதைந்து கிடக்கும் குற்ற உணர்வு குபு குபு என்று நுரைத்துக் கொண்டு மேலெழும்பும். கண்கள் யாரையோ தேடும். மனம் படபடக்கும். வேண்டாம் வேண்டாம் போய்விடு என்று மூளை கட்டளையிடும். ஒருவேளை, ஒருவேளை அவனைப் பார்த்துவிட்டால்? 'வேண்டாம் தேவகி, உனக்கென்ன பிரச்சினை இப்போது, ஏன் இப்பிடி தவிக்கிறாய், கிளம்பு.... போ...' என்று உள் மனது விரட்டியடிக்கும். தேவகி கடைசியாக முருகனின் முகத்தை ஒரு பார்வை பார்த்துவிட்டு, 'எங்கே இருந்தாலும் நல்லபடியா இருக்கட்டும்பா.' என்று முணுமுணுத்துவிட்டு கிளம்பிவிடுவாள். இது இன்று நேற்று அல்ல.. வருடக் கணக்காய் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அன்றும் அப்படியே தேவகி கனத்த இருதயத்துடன் கோவிலை விட்டு வெளியே வந்தாள். கைப் பையிலிருந்து கைபேசியை எடுத்து, கணவன் பிரசாத்திற்கு போன் செய்தாள். கார் நிற்குமிடத்தை சொல்லி அங்கே வந்து விடு என்றான். தேவகி நடக்கத்தொடங்கினாள்.

அவள் மனம் அவள் வசம் இல்லை.

அவன் குரல் அவளுக்கு இன்னும் அருகிலேயே கேட்டுக் கொண்டிருந்தது.

"உங்களுக்கு கந்த சஷ்டிக்கவசம் தெரியுமா ஆண்ட்டி?"

"ஹூம்.... தெரியும். .." என்று இழுத்தாள் தேவகி.

' ஆறு கவசமும் தெரியுமா?" அவன் கேட்டான்.

அவள் தடுமாறினாள். ' ஆறா? ஆறு ஏது? ஒரு கவசம் தான். "

www.TheMagnat.com

# அவன்

Dr. ஷ்யாமா சுவாமிநாதன்



"இல்லை ஆண்ட்டி. ஆறு கவசம் இருக்கு."

"நான் உங்களுக்கு சொல்லிக் காட்டவா?" என்றவன், "எனக்காக வர்ற வெள்ளிக்கிழமை சாயந்திரம் ஆறுமணிக்கு சுஜாவை அழைச்சிண்டு நீங்க கண்டிப்பா வடபழனி முருகன் கோவிலுக்கு வந்திடுங்க. முருகன் உங்களுக்காக காத்திருப்பார்.' என்று சொல்லிவிட்டு பதிலுக்குக் காத்திராமல் கிளம்பிப் போய் விட்டான்.

தேவகி மலைத்து நின்றாள். இந்தப் பையனிடம் ஏதோ ஒரு ஈர்ப்பு சக்தி இருக்கிறது. அவன் சொல்லாமலே சில விஷயங்களை புரியவைத்து விடுகிறான். ஆனால் அவளுக்கு புரியும் விஷயங்கள் பிரசாத்திற்குப் புரியாது, புரிந்தாலும் பிடிக்காது என்று அவளுக்குத் தெரியும்.

"ஏய், ஏய் தேவகி.... எங்க போற... நீ பாட்டுக்கு. நான் நிக்கறது கூட உன் கண்ணுக்கு தெரியலையா? இவ்வளவு ட்ராபிக்ல நீ பாட்டு ஏதோ மந்திரிச்சுவிட்ட மாதிரி நடக்கிற? ஏறு வண்டில." பிரசாத் கொஞ்சம் கோபமாகப் பேசியது போலிருந்தது அவளுக்கு.

"என்ன முருகனை பாத்தாச்சா?" பிரசாத்தின் குரலில் கொஞ்சம் கிண்டல் இருந்தது. தேவகி பதில் சொல்லவில்லை.

"என்ன திடீர்னு வடபழனி கோவில்? நம்ம ரெண்டு பேருக்கும் பர்த்டே இல்லை, வெட்டிங் டே யுமில்ல. வேற என்ன விசேஷம்?"

"விசேஷம் ஒண்ணுமில்லை. மனசுக்கு தோணித்து முருகனைப் பாக்கணம்னு."

"அதுக்கு இவ்வளவு தூரம் வருவானேன். நம்ம வீட்டு பக்கத்திலேயே முருகன் கோவில் இருக்கே." என்றான் பிரவீன்.

"உங்களுக்கு புரியாது. புரியவும் வேண்டாம். விட்டுடுங்க." என்று அலுத்துக் கொண்டாள் தேவகி.

"சுஜா போன் பண்ணினாளா?"

"ஹூம் "

"என்ன சொன்னா? இந்த அமெரிக்கா டைம் எனக்கு ஒத்து வரமாட்டேங்குது."

"ஒண்ணும் சொல்லை."

"ஒண்ணும் சொல்லாததுக்கு ஒரு போனா?"

"விடுங்களேன். அம்மாவும் பெண்ணும் ஆயிரம் பேசிப்போம். எல்லாத்தையும் உங்ககிட்ட சொல்ல முடியுமா?"

"மாப்பிள்ள நல்லா இருக்காரா, ஆவணி அவிட்டம். வந்ததே. பண்ணினாரா?"

"அவ அதெல்லாம் எங்கிட்ட ஒண்ணும் சொல்லலை." எரிச்சலாக பதில் சொன்னாள் தேவகி.

"பண்ணிருப்பார். பாவம், முப்பது கிலோமீட்டர் தூரத்துல இருக்கு நம்ம கோவில். அங்க போய் போட்டுக்கணும். ஒரு நாள் லீவாயிடும். இந்த அமெரிக்கா வாழ்க்கையே ஒரு மாயா ஜாலம்!

சந்தியா, இந்தக் கேள்வியை சுஜாவிடம் கேட்டாள்தான். ஆனால் கிடைத்த பதில்தான் வெளியே சொல்லும்படி இல்லை. அதுவும் பிரவீனுக்கு சொல்லும்படி இல்லை.இதைத் தொடர்ந்த சுஜாவின் பேச்சு தேவகியை குற்ற உணர்வில் தள்ளியது. தப்பு செய்துவிட்டோம் என்று உறுத்தியது.

கார் போய்க்கொண்டிருந்தது. சந்தியா மீண்டும் தன் உள் மனதோடு ஊர்வலம் போனாள்.

**ஆ**ண்டுகள் ஓடிவிட்டன. அவன் என்ற ஒரு மனிதனை சற்றே மறந்திருந்தாள் சந்தியா. விளையாட்டுப் போல் சுஜாவுக்கு கல்யாணம், குழந்தைகள் என்று வாழ்க்கை வேறு ஒரு பாதையில் போய்க் கொண்டிருந்தது. ஒன்று

> **விளையாட்டுப் போல் சுஜாவுக்கு கல்யாணம், குழந்தைகள் என்று வாழ்க்கை வேறு ஒரு பாதையில் போய்க் கொண்டிருந்தது...**

www.TheMagnet.com

மட்டும் புரிந்தது. சுஜா என்ற பட்டாம்பூச்சி, பட்டுப் போன இதயத்துடன் சுமைதாங்கியாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள் என்று. அவள் பாதையில் பூக்கள் இல்லை.முட்கள் மட்டுமே இருந்தன என்று சொல்லவும் முடியவில்ல. அவ்வப்போது வலிகளை ஏற்படுத்திய முட்களோடும் அவள் சிநேகம் கொள்வதற்கு கற்றுக் கொண்டுவிட்டாள் என்றே தோன்றுகிறது. சில சமயங்களில் சந்தியா சுஜாவின் நடைமுறை பிரச்சினைகளை பிராசாத்தின் காதுகளில் போட்டு விடுவது உண்டு. ஆனால் அது எந்தவித பலனையும் அளித்துவிடுவதில்லை. அவனைப் பொறுத்தவரை அவன் கௌரவம் காப்பாற்றப்பட்டுவிட்டது. உயிரினும் முக்கியமானது இல்லையா கௌரவம்? பிரசாத்தின் இந்த மன நிலையில் சமீப காலங்களாக மாற்றம் தெரிந்தது. சுஜாவின் வலிகள் பிரசாதத்தையும் பாதிக்க ஆரம்பித்தி ருந்ததை சந்தியாவால் புரிந்து கொள்ள முடிந்தது.

கார் சாலை நெரிசலில் நீந்திக் கொண்டிருக்க, அவள் மனப் பயணம் தொடர்ந்தது.

அவன் அழைத்த வெள்ளிக்கிழமையை அவளால் மறக்க முடியாது. அவள் மட்டும் போயிருந்தாள். சுஜா வர மறுத்துவிட்டாள்.

அவன் துவஜஸ்தம்பத்தின் அருகே நின்றுகொண்டிருந்தான். அவன் விழிகள் சுஜாவை எதிர்பார்த்து ஏமாந்து நின்றதை அவள் கவனிக்கவே செய்தாள். சட்டென்றுசுதாரித்து,"ஆண்ட்டி,பிறப்பும் இறப்பும் நம்ம கைல இல்லைங்கிறதுக்கு உங்களால விளக்கம் கொடுக்க முடியுமா?" என்று கேட்டான்.

சந்தியா ஏதோ சொல்லி சமாளித்தாள்.

அவன் பஜகோவிந்தத்திலிருந்து அற்புதமான விளக்கம் கொடுத்தான். என்னமாய்த்தான் பாடினான்!

"சரி ஆண்ட்டி. இன்னிக்கு எனக்கு பிறந்த நாள். உங்க வழக்கப்படி எனக்கு ஆசீர்வாதம் பண்ணுங்கோ." என்ற அவனின் உச்சரிப்பு அக்ரஹார நடையில் இருந்தது.



டாக்டர்! நான்தான் பிழைத்து விட்டேனே? பின்ன எதுக்கு ஸ்கேன் எடுக்க சொல்றீங்க?

நீங்க பிழைச்சா போதுமா? ஸ்கேன் செண்டெர் வச்சிருக்கிற என் மச்சான் பிழைக்க வேண்டாமா?

"அதென்ன எங்க வழக்கம்?"

"தீர்காயுஷ்மான் பவ என்பேளே" என்றான். சந்தியா சிரித்துவிட்டாள். ஆனால் அப்படியே ஆசீர்வதித்தாள்.

www.TheMagnet.com

அவன் கணீரென்று சஷ்டி கவசம் சொல்ல ஆரம்பித்தான். சுற்றியிருந்தவர்கள் தாங்களாகவே அமைதிப் பட்டுப் போனார்கள். ஆறு கவசமும் அவன் சொல்லி முடிப்பதற்கு ஒரு மணி நேரம் ஆகிவிட்டிருந்தது. சந்தியா அவளை அறியாமல் அவனைக் கையெடுத்து கும்பிட்டாள். அவன் கண் கலங்கினான். "நான் உங்களவாளா பொறந்திருக்கணும். அதுதான் முடியலை. வாழ்ந்தாவது பாக்கலாமேன்னு ஆசைப்படறேன். முருகன் அருள் பண்ணுவான்." என்றான்.

வீடு வந்துவிட்டிருந்தது."தூங்கிட்டியா, இறங்கு." என்ற பிரசாத்தின் குரலில் அவளது மனப் பயணம் தடைபட்டுத் தொடர்ந்தது.

சுஜா, பட்டாம்பூச்சிபோல் திரிந்து கொண்டிருந்த காலம்.

பிரசாத் ஒரு மாதம் அலுவலக விஷயமாய் ஐரோப்பா போயிருந்தான். இது புதுசில்லை. அவன் அடிக்கடி போகிறவன்தான்.

அம்மாவும் பெண்ணுமாய் தனிக்

குடித்தனம். அத்தகைய நாட்களில் வீட்டில் இரண்டு பட்டம் பூச்சிகள் பறந்து மகிழும்.

ஒரு நாள் மாலை ஆறு மணியிருக்கும். சுஜா, காலேஜ்ல ஏதோ டெஸ்ட் இருக்குன்னு அவள் அறைக்குள் இருந்தாள். சந்தியாவுக்கு தொலைக்காட்சி சீரியல்கள் பார்க்கும் பழக்கமில்லை. வயசு கெட்ட வயசில், நிறைவேறாத தன் இளமைக்கால கனவான படிப்பைத் தொடர்ந்து கொண்டிருந்தாள்.

வாசலில் அவன்.! பளிச்சென்று நின்று கொண்டிருந்தான். நெற்றியில் சின்னதாய் விபுதி குங்குமம். அழகாகத்தான் இருந்தான்.

அவனை'வாப்பா' என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை சந்தியாவால்.

வரவேற்பு அறையில் அமைதியாக உட்கார்ந்தான். 'சாரை பாக்கணும்.' என்றான். சந்தியா உள்ளுக்குள் அதிர்ந்தாள். 'அவர் வர லேட்டாகும்.' என்றாள். 'பரவாயில்லை. இன்னிக்கு எனக்கு நாள், நேரம் எல்லாம் நன்னா இருக்கு... சாரைப் பார்த்துப்பேசச் சொல்லி என் குரு எனக்கு உத்திரவு போட்டிருக்கார்.' என்றான்.

> **நீ எதுக்கோ பயப்படறா மாதிரி இருக்கு. அவனுக்கும் எனக்கும் எதாவது இருக்குமோன்னு உனக்கு பயமா இருக்கு. இல்லியா?**

'யார் உன் குரு? அவர் கிட்ட என்ன பேசணும்?' சந்தியா தடுமாறினாள். இது வயது வந்த பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டிருக்கும் தாய்மார்களுக்கே உரிய தடுமாற்றம்.

"இவர் தான் என் குரு." என்று அவன் எடுத்துக் காட்டிய சிறிய படத்தில் முருகன் சிரித்துக் கொண்டிருந்தான். என் எதிர்காலம் விஷயமாத்தான் ஆண்ட்டி." என்றவன் பால் போல் தெளிவாக இருந்தான்.

"அம்மா, இன்னிக்கு என்னம்மா டின்னர்?" என்று கேட்டபடி வெளியே வந்த சுஜா, அவனைப் பார்த்ததும், பிரமித்து, "ஹேய், நீ எங்க இந்த நேரத்துல இங்க? இன்னிக்கு கிளாசுக்கு கூட வரலை போலிருக்கு. கட் அடிச்சிட்டு சினிமா போயிட்டியா? தனுஷா? விஜய் யா?' என்று படபடத்து அம்மாவின் அருகே அவனுக்கு எதிரே அமர்ந்தாள். சந்தியா நெளிந்தாள். 'கிச்சன்ல எல்லாம் ரெடியா இருக்கு, நீ சாப்பிட்டுவிட்டு படி போ.' என்று விரட்டினாள்.

'சுஜா, நான் உங்கப்பா வரவரைக்கும் இருந்து பார்த்துட்டுதான் போகப் போறேன். நீ போய் சாப்பிடு." என்று அவன் சொன்னவுடன் அவள் கலகலவென்று சிரித்தாள். 'ஒரு மாசமா இந்த நாற்காலியோட நாற்காலியா உக்காந்திருக்க போறியா? உனக்கு செமஸ்டர் இல்லியா? போடா வேலைய பாத்திண்டு."

அவன் அப்போதும் அமைதியாகக் கேட்டான். "எங்க போயிருக்கார்?"

"அம்மா சொல்லலியா, யுரோப்... கிளம்பு." என்று அலட்சியமாக சொல்லிவிட்டு உள்ளே போனாள்.

இங்க என்ன நடக்கிறது என்று புரியாமல் சந்தியா முழித்தாள். ஆனால் ஏதோ விபரீதத்திற்கான பிள்ளையார் சுழி என்று மட்டும் புரிந்தது.

அவன் சந்தியாவிடம் மரியாதையாக விடை பெற்று சென்று விட்டான்.

இரவு சாப்பாட்டை முடித்துக் கொண்டு படுக்கைக்கு வந்த போது, பிரசாத் போன் செய்தான்.

ரொம்பவும் அலுவலக விஷயமாகப் பேசிவிட்டு,' யாராவது வந்தார்களா? ' என்றான். சந்தியா முதல் முறையாகப் பொய் சொன்னாள். 'சரி. ஜாக்கிரதையா பூட்டிண்டு படுத்துக் கோங்க." என்றுவிட்டு வைத்துவிட்டான்.

சந்தியாவுக்கு தூக்கம் வரவில்லை. மனசு ரொம்பவும் படபடத்தது. சுஜாவிடம் கேட்டுவிடலாம் என்று முடிவெடுத்து, கதவுகளை சாத்தி, பூட்டிவிட்டு, ஹால் முழுவதும் இரவு விளக்கை ஒளிரச்

www.TheMagnet




படம்: யோகா கமெண்ட்: ஜ்வாலா

www.TheMagnat.com

செய்துவிட்டு, சுஜாவின் அறை கதவை மெல்லத் திறந்தாள். அவள் ரொம்பவும் மும்முரமாகப் படித்துக்கொண்டிருந்தாள். ' சீ, பாவம், குழந்தை, நிச்சலனமாய் படித்துக் கொண்டிருக்கிறாள். அவளைக் குழப்புவானேன்.' என்று நினைத்து படுக்கைக்கு சென்று விட்டாள்.சுஜா எப்போது வந்து படுத்துக் கொண்டாள் என்று தெரியவில்லை. காலையில் கண்விழித்ததும் தன் இடுப்பை கெட்டியாகப் பற்றிக் கொண்டிருக்கும் அவள் கைகளை விலக்கும் போது வேதனையாக இருந்தது. வண்ணப்பறவையாக வலம்வரும் இவள் வாழ்க்கைப் பாதையின் சிக்கல்களுக்குள் சிக்கிக்கொண்டு விடப் போகிறாளே என்ற பயம் வந்தது. தன் மனதிற்குள் சின்னப் புள்ளியாக விழுந்திருக்கும் சந்தேகத்தை இப்போதே அழுந்தத் துடைத்துவிட வேண்டும் என்று நினைத்தவளாக அன்றைய தினத்தை துவக்கினாள்.

சுஜா கல்லூரிக்கு கிளம்பிப்போய்விட்டாள். பிரசாத் வீட்டில் இல்லாததால் சமையல் வேலை குறைவாக இருந்தது. இரவு'கிரீம் சென்டர்' போலாம்.சமைக்காதே என்று சொல்லி விட்டாள் சுஜா.

கிரீம் சென்டரில் உடனே மேஜை கிடைத்தது. சுஜா ஆசையாய் ஆர்டர் செய்தாள். எப்போதும் கொப்பளிக்கும் குதூகலம் அவள். அவள் முகம் வாடும் படி ஒரு வார்த்தை கூட சந்தியாவால் பேச முடியாது.

"அம்மா ஆர் யூ ஆல்ரைட்?"

"ஹும். ஏன் கேக்கற?"

"நீ எதுக்கோ பயப்படறா மாதிரி இருக்கு. அவனுக்கும் எனக்கும் எதாவது இருக்குமோன்னு உனக்கு பயமா இருக்கு. இல்லியா? உண்மையிலே உனக்கு அதுக்கு கூட பயமில்லை. அப்பாவை நினைச்சா பயமா இருக்கு. நான் சொல்றது சரிதானே?"

சந்தியா பேசவில்லை. கண்கள் கலங்கியது.

"எதுவும் இல்லை. எதுவும் நடக்காது. எனக்கு என் அப்பா ரொம்ப முக்கியம். அவர் எப்பிடின்னு எனக்கு நன்னாவே தெரியும். உன்னால எதையும் ஏத்துக்க முடியும். அவரால முடியாது. அவர் விருப்பத்துக்கு எதிரா, நீயோ நானோ ஒரு சின்ன துரும்பை அசைத்தால் கூட, அவர் ஒரேயடியா உடைஞ்சு போயிடுவார். அவர் வெளில இரும்பு உள்ள இளநீர். அவர் உடைஞ்சு போறா மாதிரி என்னால எதுவும் செய்ய முடியாது. செய்ய மாட்டேன். எல்லாத்தையும் மறந்துட்டு என்ஜாய் தி டின்னர் கம் ஆன் மை டியர்" என்று கொஞ்சினாள்.

சந்தியாவால் நம்பவே முடியலை. 'சுஜாவா? என் சுஜாவா? குழந்தைன்னு நினைச்சா இவ ஞானி மாதிரி பேசறா?'

"அவனுக்கு வாழ்க்கைல ஒரு லட்சியம் இருக்கும்மா. அவன் குடும்பத்துல அவன் தப்பிப் பிறந்தவன். சேற்றில் முளைத்த செந்தாமரை. அவன். அவனுக்கு அமைந்த குடும்பம் அவனுடைய லட்சியங்களுக்கு அப்பாற்பட்டது. அவன் கங்கையோட கலக்கணும்னு ஆசைப்படறான். அதுக்குஒரு குறிப்பிட்ட இடம் தான் வேணும்னு இல்லை,காசி இருக்கு,கயா இருக்கு, அலகாபாத் இருக்கு, பிரயாகை இருக்கு, பாகிரதி இருக்கு, ஜானவி இருக்கு, யமுனா இருக்கு. இப்பிடி நிறைய இருக்குன்னு அவனுக்கு புரிய வச்சிருக்கேன்."

சந்தியா சுஜாவை சூழ்நிலை மறந்து கட்டிக்கொண்டாள். இவள் படபடக்கும் பட்டாம்பூச்சி கட்டத்தைக் கடந்து கொண்டிருக்கிறாள் என்று புரிந்தது. ஆனால் சுஜா திடீரென்று வெடித்து அழுதாள். 'என்னம்மா... என்ன ஆச்சு? என்று சந்தியா தொடரும் முன் 'ப்ளீஸ் அம்மா. அவனை இந்த நிமிடத்தோடு மறந்து விடுவோம். அதுதான் உனக்கும் எனக்கும் நல்லது."

இதன் பிறகு ஒரு புதிய சுஜா தெரிந்தாள். அவள் கண்டிப்பாகப் பட்டாம்பூச்சி இல்லை.

பிரசாத், ஐரோப்பாவிலிருந்து திரும்பி வரும் போது, ஒரு மாப்பிள்ளையைக் கையோடு கூட்டிக்கொண்டு வந்தான். ஆகாய சந்திப்பு. பெண் பார்க்கத்தான் இந்தியா வந்து கொண்டிருந்தானாம். கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது என்று சந்தோஷப்பட்டான் பிரசாத். ஆச்சாரமான அவன் குடும்பத்தைப்பற்றி வானளவு புகழ்ந்தான். "ரொம்ப கொடுத்து வச்சிருக்கணும் இப்படிப்பட்ட குடும்பத்திலிருந்து பிள்ளை கிடைக்க" என்றான். குலம், கோத்திரம், அழகு,அந்தஸ்த்து, வீடு வாசல், பணம்,காசு, சொந்தம், பந்தம் என்று எதையும் குறை சொல்ல முடியவில்லை.

**"இவ அப்பா வட பழனி முருகன் கோவில் குருக்கள். ரொம்பதைரியமா எனக்கு இவளைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தார். இப்ப நான் சுத்தமா உங்களவா. அவசியம் எங்காத்துக்கு சாப்பிடவாங்கோ."**

சுஜாவின் திருமணத்தை தன் சக்திக்கும் மீறி ஆர்ப்பாட்டமாய் செய்து முடித்தான் பிரசாத்.. சுஜா ஐரோப்பா கிளம்பிப் போன சில தினங்களில், ஒரு மாலைப் பொழுதில் மீண்டும் அவன் வந்தான்.

"உங்களுக்கு சொல்லிப் புரியவைக்க முடியாதுன்னு சொல்லாம புரியவைக்க நினைச்சேன். உங்களுக்கும் அது புரிஞ்சது ஆண்ட்டி. ஆனா நான் எதிர்பார்த்த அளவுக்கு உங்களுக்கு தைரியம் இல்லை. அதான் நேர்லயே வந்து சுஜா அப்பாகிட்ட பேசலாம்னு வந்தேன். என் விதி விளையாடிடுச்சு. இதுவும் முருகன் விளையாட்டுன்னு நான் எடுத்துக்கறேன். ஆனா சுஜா வோட ஒரு வார்த்தை எனக்கு இப்ப புரியறது "கங்கை வேணும்னா காசிக்குத்தான் போகணும்னு இல்ல.'

www.TheMagnat.com

என்றாள். அப்ப புரியலை. இப்ப புரியுறது. வரேன்."

அவன் அன்றோடு மறைந்துவிட்டான். மறக்கப்பட்டும்விட்டான்.

சுஜாவின் தொலைபேசி உரையாடலில் சந்தியா சமாதியாகிப் போனாள்.

"அம்மா, நம்மளவாளா பிறக்கிறது முக்கியமில்ல. வாழறதுதான் முக்கியம் ன்னு அப்பாவுக்கு எப்பவாவது புரியவை. அவர் கணக்குல புலி. என் வாழ்க்கைக்கு அவர் போட்ட கணக்கு தப்பா போச்சு. எனக்கு எத்தனை செலவழிச்சிருப்பார். காலணா பிரயோஜனமில்லாம நான் இருக்கேனேன்னு நினைச்சுப்பேன். ஒண்ணே ஒண்ணுக்கு நான் பிரயோஜனப்பட்டேன். அவர் கௌரவத்தை அவர் காப்பாத்திக்க நான் அவருக்கு பிரயோஜனப்பட்டேன். சரிதானே அம்மா?"

சந்தியாவால் அழத்தான் முடிஞ்சுது.

நாட்கள் கடந்தன. அன்று ஞாயிற்றுக்கிழமை. மாலை ஆறு மணிக்கு கிளம்பு என்றான் பிரசாத். 'எங்கே?' என்ற அவள் கேள்விக்கு 'கழுதை கெட்டா குட்டிச் சுவர். சுவாமிமலை முருகனைப் பாக்கணம்னு இருக்கு. கிளம்பு."

"கும்பகோணத்துக்கா? "

"பெசன்ட்நகருக்கு! அறுபடை வீடு போகலாம் வா."

திருப்பரங்குன்றம் முருகனின் சன்னதியில் சந்தியா அவனைப் பார்த்தாள். அதே அழகு. அதே பளிச். பக்கத்தில் யார் இந்த குத்துவிளக்கு?

"ஹலோ ஆண்ட்டி, ரொம்ப நாளாச்சு பார்த்து. இவ என்னோட மனைவி கங்கா. எனக்கு கங்கையே கிடைச்சிடுத்து. இவ அப்பா வட பழனி முருகன் கோவில் குருக்கள். ரொம்பதைரியமா எனக்கு இவளைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தார். இப்ப நான் சுத்தமா உங்களவா. அவசியம் எங்காத்துக்கு சாப்பிடவாங்கோ. கங்கா, கூப்பிடு மாமியை. மாமாவை நான் கூப்பிடறேன். இந்தாங்கோ மாமி என் விலாசம். மாமா, நீங்க அவசியம் ஒரு நாள்




சாப்பிடவரணும். எனக்கு நீங்க கொடுக்கிற மிகப்பெரிய கௌரவம். அது. கண்டிப்பா வருவேள்னு நினைக்கிறேன். மடி, ஆச்சாரம் எதுலயுமே உங்களுக்கு குறை இருக்காது. மாமா, எனக்கு நீங்கதான் இன்ஸ்பிரேஷன் ரோல் மாடல் படிப்பு, உத்தியோகம். எல்லாத்திலேயும். ரெண்டு வாரம் சுவிஸ் போறேன். வந்ததும் உங்களுக்கு நினைவு படுத்தறேன். அதே ஆத்துலதானே இருக்கேள்?"

அவனும் அந்த குத்துவிளக்கும் அழகாகக் கும்பிட்டு நகர்ந்தனர்.

சந்தியா தன் கண்களில் வழிந்த கண்ணீரை பிரசாத் அறியாமல் துடைத்துக் கொண்டாள்.

திடீரென்று ஒரு நாள் பிரசாத், "சந்தியா, அவன் அப்பிடிக் கூப்பிட்டாளே, ஒருநாள் அவாத்துக்கு போயிட்டு வரலாம்."

"அவன்...." சந்தியா இழுத்தாள்.

"நான் புரிஞ்சுண்டுட்டேன்."

சந்தியா அவனை தீர்க்கமாக ஒரு பார்வை பார்த்தாள். "என்ன பிரயோஜனம்?" என்றுகேட்டது அது. ●

www.TheMagnet.com

# மதுரகவியின் தத்தை விடு தூது!



இந்தப் பிறவியின் நோக்கமே இறைவனை அடைவதுதான். மற்றவை எல்லாம் பின்னரே. இதையே வள்ளுவரும்

***பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்***
***இறைவனடி சேரா தவர்***

என்று கூறி இறைவனை அடைய வேண்டிய அவசியத்தை உணர்த்துகிறார். இறைவனை அடைவதற்கு பல வழிகள் இருப்பதை உணர்ந்து மகான்கள் அவரவர்க்கு ஏற்ற வழியைத் தேர்ந்தெடுக்க வழி செய்துள்ளார்கள். ஸ்ரீ கிருஷ்ணரும் ஸ்ரீமத் பகவத் கீதையில் இதனை உணர்த்துகிறார்.

இறைவன் மீது அதி காதல் கொண்டு மற்ற எதையும் நினைக்காமல் காணும் பொருட்களிலெல்லாம் இறைவனைக் கண்டு மயங்கும் பக்தர்கள் மிக விரைவில் இறைவனை அடைகிறார்கள். இதற்கு மிகச் சிறந்த உதாரணம் **இராதையும், ஸ்ரீ ஆண்டாளும்** கடவுள் மீது காதல் கொண்டு மகிழ்வது மிகச் சிறப்பான நிலை. அந்நிலையை அடைந்தவர்களில் ஒருவர் **மதுரகவி ஸ்ரீநிவாச ஐயங்கார்.**

ஒவ்வொரு நொடிப் பொழுதும் இறைவனை நினைத்து உருகி காதல் கொண்டு வாழ்ந்தவர் **மதுரகவி.** நரகவி பாடாமல் இறைவனை மட்டுமே எண்ணி பல்லாயிரம் பாடல்களைப் பாடியுள்ளார்.

மதுரகவியின் பல நூல்களும் இறைவனைப் பாடுவதில் சிறந்து விளங்குகின்றன. அவ்வகையில் ஸ்ரீரங்கநாதனைத் தலைவனாகக் கொண்டு அவர் பாடியுள்ள **'தத்தை விடு தூது'** எனும், நூல் அவரின் புலமையை நன்கு பறைசாற்றுவனவாக உள்ளது. இந்நூல் 239 கண்ணிகள் கொண்டது. திருவரங்கன் மீது அழியாகத் காதல் பாடிய நூலிலிருந்து சில கண்ணிகளைக் காண்போம்.

***பூமகளும் செல்வப் புஷமகளும் நிளையெகும்***
***மாமகளும் பைந்தாள் மலர் வருடப்-பாமருவும்***
***வண்ண மணிக்கடிகை வாளரப் பாயலின் மேல்***
***எண்ணுந்துயில் புரியும் எம்பிரான்.***

இலக்குமியும், பூமிதேவியும், நீலா தேவியும் பசுமையான மலர் போன்ற திருவடிகளை வருட ஒளிவீசும் பலவண்ண மணிகள் பதித்த தோலுடன் ஒளி வீசும் நாகத்தின் மேல் துயில் கொண்டுள்ளார் என்று கண் முன் காட்சி விரிவது போல் வர்ணிக்கிறார். அழகான பூஞ்சோலைகளும் இனிமையாய்ப் பேசும் அழகுப் பெண்களும் உள்ள நகரம் என்றும் மேலும் பல பெருமைகள் கூறி திருவரங்கத்தை வர்ணிக்கிறார் மதுரகவி. தூது செல்லப் போகும் கிளியின் பெருமைகளைக் கூறி திருவரங்கனைக் காணாத பொழுது எப்படிப்பட்டதாய் இருக்கிறது என்பதை படிப்போரும் கவலை கொள்ளும் வகையில்

அஞ்சுகமே ஓரிரவும் அஞ்சுகமா ஆதரவாய் அஞ்சுகமே காணல் அரிதாமே...

என்று குறிப்பிடும் மதுரகவி கொடுமையான இந்த மனிதப் பிறவி எனும் சிறையிலிருந்து நீக்கும் பொருட்டு திருஅரங்கனிடம் தூது செல்ல மாட்டாயா கிளியே என உள்ளம் உருகுகிறார். கிளியைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணங்களையும் அழகுறச் சொல்லும் மதுரகவி முடிவாக நீ மட்டும் தான் சொன்னதை மட்டும் செய்வாய் என முடிக்கிறார்.

பெரிய இடத்திற்கு தூது செல்கிறோமே ஏதாவது அசம்பாவிதம் நடந்து விடுமோ என்று பயப்பட வேண்டாம். என் இறைவன் ஏற்கனவே தூது சென்றவன் தான் அதனால் அவன் தூதர்களை மிகவும் மதிப்பான் என்பதை மறைமுகமாக உணர்த்துகிறார். மேலும் தூது சென்றவர்களுக்கெல்லாம் பெருமை கிடைத்துள்ளது என்பதையும் **அனுமன், அன்னம், பரமசிவன்** எனப் பட்டியலிட்டு தூது செல்வதற்கு கிளியைத் தயார் செய்கிறார்.

கிளியே நீ தூது செல்லப் போகும் அரங்கன் யார் தெரியுமா? அவன் தான் நான்முகன், சிவன், இந்திரன், தேவர்கள், திக் பாலகர்கள் மற்றும் உயிர்கள் யாவற்றையும் படைத்தவன் என்று திருவரங்கன் பெருமையை பல பாடல்களில் சொல்கிறார். திருவரங்கத்தில் இருக்கும் அரங்கன் எங்கிருந்து வந்தவன் தெரியுமா? என வினா எழுப்பி இஷ்வாகு வம்சத்தவர்களால் பூஜிக்கப்பட்டு ஏகபத்னி விரதன் இராமனால் பக்தன் விபீஷணனுக்கு வழங்கப்பட்டு சோழ அரசனின் வேண்டுதலை ஏற்று இங்கே பள்ளி கொண்டவன் என் அரங்கன் என்று வரலாற்றையும் எடுத்துரைக்கிறார்.

***சோழன் விரும்பியதே...***

***மணாட்டு துங்க மணிமுடியான் வாய்ந்தவளச் சோணாட்டு வேந்தன் தொழுவந்தவத்தால்....***

நாரதர் விபீஷணன் ஆழ்வார்கள் என திருவரங்கனை பூஜித்த பெருமக்களின் பட்டியலிட்டு திருவரங்கன் பெருமையைப் பேசுகிறார். திருவரங்கன் புகழைப் பேசிய மதுரகவி திருவரங்கனின் அழகையும் பல கண்ணிகளில் பாராட்டுகிறார்.

ஏழு மலைகள் ஈரேழு உலகம், என அண்டம் அனைத்தையும் தன் வயிற்றில் கொண்டவன் என பலவாறு பாடும் மதுரகவி திருவரங்கனை எப்போது சந்தித்து தூது சொல்ல வேண்டும் என்பதைச் சொல்லி அனுப்புகிறார்.

திருவரங்கனைக் கண்டவுடன் அவன் அழகில் மயங்கிவிடாதே அவன் திருமகளுடன் இருக்கும் போது அந்தணர்கள் தமிழ் மறையாம் திவ்யப்பிரபந்தம் ஓதும் போதும் தூது சொல்லிடாதே மந்திரங்கள் ஓதும் போதும், நித்ய கடன்கள் செய்யும் போதும் சொல்லிவிடாதே! நேரம் பார்த்து அரங்கனையே எண்ணி எழில் தொலைத்து வேறு யாரையும் எதையும் சிந்திக்காது மன்மத பாணத்தால் வாழத் தவித்திருக்கும் என் நிலை கூறு. இந்நிலை மாற அவன் திருக்கரத்தால் தரப்பட்ட துளசி மாலையைப் பெற்றுவா என்று கூறி தத்தை விடு தூது நூலை முடிக்கிறார் மதுரகவி. புராணச் செய்திகளையும் வரலாற்று தகவல்களையும் திருமால் அழகையும், பெருமையையும் அறிய உதவும் சிறந்த நூல் இந்நூல். முழுவதையும் படித்து இன்புறுவர் பெரும் பாக்கியம் பெற்றவரே!

மதுரகவி ஸ்ரீநிவாச ஐயங்கார் 18ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். ●

**குச்சனூர் கோவிந்தராஜ்**



# ஆடும் குதிரை

குழந்தை ரவிக்கு ஜுரம் அதிகமாகி விட்டது. கார்ப்பரேஷன் ஆஸ்பத்திரியில் இரண்டு தினங்கள் மருந்து வாங்கிக் கொடுத்தும் ஜுரம் குறையவில்லை. ரவி கண்ணைத் திறக்காமல் ஏதேதோ முனகிக் கொண்டு கிடக்கவே வேதனையுடன் குழந்தையின் அருகிலேயே உட்கார்ந்திருந்தேன். பிரைவேட் டாக்டர் யாரையாவது வீட்டிற்கு அழைத்து வந்து காண்பிக்கலாமென்றாலோ அதற்கான பணவசதி இல்லையே என நினைக்கும் போது என கண்கள் கலங்கின. அவ்வளவு வசதி என்னிடம் இருந்தால் ஏன் இந்தக் குடிசை வீட்டில் குடியிருக்க வேண்டுமென்று எண்ணிக்கொண்டு, குழந்தையை மறுபடி தொட்டுப் பார்த்தேன். உடம்பு அனலாக்க கொதித்தது. "மாமி.... மாமி...டாக்... டாக்" என்று ஏதோ பிதற்றினான் ரவி. "ஐயோ ரவி இதென்னடா சதா குதிரை நினைவா? இந்த பாழாய்ப்போன வீட்டுக்கார மாமியால் வந்தது தானே இந்தப் பழக்கம்? ஏன் இந்த வீட்டிற்குக் குடி வந்தோம்?" என வீட்டுக்கார மாமியைச் சபித்தேன்.

இதுவரை வீட்டுக்கார மாமியைப்பற்றி எந்த விதக் குறையும் சொல்லியறியாதவள்; பல வேளைகளில் மாமியின் உயர்ந்த குணத்தை மனத்திலே பாராட்டியிருக்கிறேன். ஒரு சாதாரண ஹோட்டல் ஒன்றில் வேலை செய்து ஐம்பது ரூபாய் சம்பளம் கொண்டு வரும் என் கணவரால் ஐந்து ரூபாய்க்கு மேல் எப்படி வாடகை கொடுக்க முடியும்? அந்த நிலையில் அந்தச் சிறு குடிசை கிடைக்காமல் வேறெந்த இடம் கிடைக்கும்? வீட்டுக்காரர்கள் வீடும் பெரிய பங்களா இல்லை.

www.TheMagnet.com

**"அவனைச் சமாதானம் செய்வதே எனக்குப் போதும் போதுமென்றாகி விட்டது. மாமி ஊருக்குப் போய் ஒரு மாதமாகி விட்டது. அப்படியும் அவன் மாமியையும், குதிரையையும் மறக்க வில்லை.**

சிறிய சிறிய வீடுதான். இருந்தாலும் ஒரு பேச்சுத் துணைக்கு இருக்கட்டும் என்று கிணற்றங்கரை அருகே சிறிதாக ஒரு குடிசைகட்டி ஐந்து ரூபாய்க்கு வாடகைக்கு விட்டார்கள். வீட்டுக்காக அலைந்த சமயம் இந்தக் குடிசை குறைந்த வாடகைக்குக் கிடைத்ததே என எண்ணி அவர்களை வாழ்த்தி உடனே குடிவந்து விட்டோம். வீட்டுக்காரர்கள் ரொம்பவும் நல்ல மனிதர்கள். கணவனும், மனைவியும் அந்தத் தனி வீட்டில் வசித்து வந்தனர். குடித்தனம் வந்து சில நாள்கள் வரை நான் அவர்கள் வீட்டுப் பக்கமே திரும்பிப் பார்க்கவில்லை. குழந்தை ரவி ஒருநாள் அவர்கள் வீட்டிலே ஆடும் குதிரையைப் பார்த்து விட்டான். சுண்ணாம்பு அடிப்பதற்காக வீட்டின் ஒழுங்குபடுத்தியவர்கள் அந்த மரக் குதிரையை வெளியே எடுத்திருக்கிறார்கள். ரவி அதன் மீது ஏறி உட்கார்ந்து கொண்டு ஆட முனைந்தான். அவனை அழைக்கப் போனதன் மூலம் அந்த மாமியுடன் பேசத் தொடங்கினேன். ரவி அங்கே போகும் போதெல்லாம் அதன் மேல் ஏறிச் சிறிது நேரம் ஆடிவிட்டுத்தான் வருவான். ஆடும் குதிரையின் நட்பு அவனுக்குக் கிடைத்த பிறகு எப்பொழுது அவர்கள் வீட்டிலேயே இருக்க விரும்பினான். சாப்பிடக் கூப்பிட்டுக் கொண்டு வரவே போதும் போதுமென்று ஆகிவிடும். அந்த வீட்டுக்கார மாமியும் மாமாவும் இவன் ஆடுவதைப் பார்த்து மகிழ்வார்கள்.

"குதிரை எப்படியடா போகிறது?" என்று கேட்பார் மாமா.

"டாக்... டாக்... டாக்... எனப் போகிறது" என்று அவன் மழலைச் சொற்களால் பேசும்போது அவரென்ன, யார் தான் களிப்படைந்து அவனை வாரி அணைக்காமல் இருக்க முடியும்! ரவிக்குக் குதிரை கிடைத்தது போல் எனக்கும் அந்த மாமியின் நட்பு கிடைத்தது. எவ்வளவோ சௌகரியமாக இருந்தது. நானும் பகல் சாப்பாடானதும் தினமும் சிறிது நேரம் அவர்கள் வீட்டிற்குள் நுழைந்து அவளிடம் பேசி விட்டு வராமல் இருக்க மாட்டேன். ஒரு நாள் போகா விட்டால்கூட, "ஏண்டி சீதா இன்று வரவில்லை? மாமி மேல் உனக்குத் திடீரென என்ன கோபம்? என்னவோ நீ வராவிட்டால் கூட உன் பிள்ளை உன்னைப் போல் இருக்கமாட்டான்" என்று சிரித்தவாறு கூறுவாள்.

குதிரையின் நட்புடன் மாமியின் அன்பும் கிடைத்ததால் ரவிக்கு அம்மா அப்பா என்ற நினைப்பே இல்லை. மாமி மாமி என்று எங்கே சென்றாலும் மாமியுடன் கூடவே போய் வரலானான். அந்த மாமிக்குக் குழந்தைப் பேறில்லை. அந்த ஏக்கம் அவருக்கு இருந்தது என்று எனக்குப் புரிந்து கொள்ள அதிக நேரம் ஆகவில்லை. தனக்குக் குழந்தை இல்லாத குறையைத் தீர்த்துக் கொள்ளவே மாமி ரவியுடன் ஆசையாயிருக்கிறாள். அதை ஏன் தடுக்க வேண்டும் என்று நானும் ரவி அங்கேயே இருப்பதைத் தடுக்கவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் கேட்க வேண்டுமென்று வெகுநாள்களாக நினைத்து வந்தேன். அதற்கும் சந்தர்ப்பம் கிடைக்க வேண்டாமா? அந்தச் சந்தர்ப்பமும் வந்தது. ஒரு நாள் பேச்சு சுவாரஸ்யத்தில், "ஏன் மாமி, நாங்கள் இங்குக் குடிவரப் போகிறோம் என்று எங்கள் ரவிக்காக முன்னாடியே குதிரை வாங்கி வைத்து விட்டீர்களா என்ன?" என்றேன்.

மாமியோ 'டாக் டாக் டாக்' என்று சொல்லிக் கொண்டே வேகமாகக் குதிரை ஆடும் காட்சியைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தவள், "என்ன, என்ன சொல்லுகிறாய் சீதா?" என மறுபடி கேட்டாள்.

**ராஜலட்சுமி விக்கிரமன்,**
(அமரர் எழுத்தாளர் **விக்கிரமனின்** துணைவியார்)

www.TheMagnet.com

"ஒன்றுமில்லை மாமி! எங்கள் ரவி உங்கள் வீட்டிற்குக் குடிவரப் போகிறான் என்று முன்பாகவே தெரிந்து குதிரை வாங்கி வைத்து விட்டீர்களா? எனக் கேட்ட போது மாமியின் முகம் மாறியது. அதைச் சமாளித்துக் கொண்டு, "இல்லை சீதா! என் அண்ணா தன் மனைவி குழந்தையுடன் ஒரு மாதம் இங்கு இருந்து விட்டுப் போனான். அப்போது இவர் அவன் குழந்தைக்காக இதை வாங்கிக் கொடுத்தார். ஊருக்குத் திரும்பிப் போகும் போது இதை ரயிலில் எடுத்துக் கொண்டு போக சௌகரியப்படாது என இங்கேயே வைத்து விட்டுப் போய் விட்டார்கள்" என்று கூறினாள்.

அப்படியும் நான் விடவில்லை. "ஏன் மாமி, உங்கள் முகம் வாட்டமாகத் தெரிகிறது? உங்கள் அண்ணா பிள்ளையை நினைத்துக் கொண்டீர்களாக்கும்? பிறர் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுக்கும் வரைதான் சொந்தம். அதனால் தான் நமக்கென்று ஒன்று பிறக்க வேண்டும்" என்றேன். மாமியின் மனமறியாது ஏதோ சொல்லி வைத்தேன். அதன் பின்பும் வழக்கம் போல் அவர்கள் வீட்டிற்குப் போய் வந்து கொண்டுதான் இருந்தேன்.

ஒரு நாள், "ஏன் மாமி, இந்தக் குதிரையை எங்களுக்கே பாதி விலைக்குக் கொடுத்து விடுங்களேன். புதிதாக வாங்குவதென்றால் எட்டு ரூபாயாகிறதாம். பாதிவிலை என்றால் கூட இரண்டு மாதமாகத்தான் கொடுக்க முடியும்" என்றேன்.

என்ன நினைத்துக் கொண்டாளோ என்னவோ "இல்லை, சீதா! உன் வீட்டில் இருந்தால் என்ன, இங்கு இருந்தால் என்ன? நீ ஒன்றும் விலை கொடுக்க வேண்டாம். நான் இந்த வீட்டில் இருக்கும் வரை அவன் இங்கு வந்தே ஆடட்டும். எனக்கும் அதனால சற்றுப் பொழுது போகிறது. இன்னும் ஒரு மாதத்தில் அவருக்கு வெளியூர் சுற்றுப் பிரயாணம் போக வேண்டிய வேலை இருக்கிறதாம். போனால் இரண்டு மாதங்களாகும். அதனால் இங்கு தனியாக இருப்பானேன்? பிறந்த வீட்டில் போய் இருக்கச் சொல்லுகிறார். அப்போது போகும் போது கொடுத்து விட்டுப் போகிறேன் என்றாள்.

எனக்கும் அப்போது மாமி சொன்னது சரியென்றே பட்டது. மேலும் என் கஷ்டத்தில் அந்த நாலு ரூபாய் கூட கொடுத்து வாங்குவது முடியாத காரியம். ரூபாயே இல்லாமல் கொடுப்பதென்றால்... என்ணம் இப்படி சென்றதே தவிர மாமியின் மனம் எனக்குப் புரியவில்லை.

மாமி ஊருக்குப் போகும் தினமும் வந்தது. பெட்டியில் துணிகளை அடுக்கிச் சரிப்படுத்திக் கொண்டிருந்தாள். அப்போது பெட்டியின் அடியிலிருந்த புடவைகளை கீழே எடுத்தப் போட்டபோது பெட்டியில் ஆடும் குதிரையின் மேல் குழந்தை ஒன்று இருக்கிற போட்டோவைப் பார்த்த நான், "ஏன் மாமி இதுதான் உங்கள் அண்ணா பிள்ளையின் போட்டோவா?" என்று கேட்டு சுவாதீனமாக அந்தப் போட்டோவைக் கையில் எடுத்துப் பார்த்தேன். அப்போது மாமியின் கண்கள் கலங்கின. நெஞ்சடைக்க, "இல்லை சீதா! அது அது என் குழந்தையின் போட்டோதான்" என்றாள்.

"ம்... உங்களுக்கும் குழந்தை ஒன்று பிறந்ததா? பின் ஏன் இத்தனை நாள்களாக என்னிடம் மறைக்க வேண்டும்?" என்று கேட்டேன்.



**"ரவி தூங்கி விட்டானா சீதா? விழித்துக் கொண்டிருந்தால் என்னுடன் கூட வருகிறேன் என்று அழுவான். என்ன செய்வது? எனக்கும் குழந்தையை விட்டுப் பிரிந்து போகவே மனம் வரவில்லை.**

"ஆமாம் சீதா! இதுவரை உன்னிடம் எனக்குத் குழந்தையே பிறக்கவில்லையென்று மறைத்துத் தான் சொன்னேன். இன்று என் கண்மணி போட்டோவைப் பார்த்து 'அண்ணா பிள்ளையா?' எனக் கேட்ட போது என் செல்வத்தை என் குழந்தையில்லை எனச் சொல்ல எப்படி மனம் வரும்? அதனால் இன்று மறைக்க முடியவில்லை" என்று பெருமூச்சு விட்டு விட்டு, மேலும் தொடர்ந்தாள்.

"பிறக்கும் போது அவன் நன்றாகத்தான் பிறந்தான். இரண்டு வயது வரை நன்றாகத்தான் வளர்ந்தான். நாங்களும் அவனைச் செல்லமாக வளர்த்தோம். ஒரு நாள் நாங்கள் குழந்தையுடன் கடைப்பக்கம் போனபோது கடை வாசலில் இருந்த குதிரைமேல் உட்கார்ந்து கொண்டு வரவே மாட்டேன் என்றான். இறங்கமாட்டேனென்று பிடிவாதம் பிடித்ததால், என் கணவருக்குக் குழந்தையின் மேலுள்ள பாசத்தால் உடனே அந்தக் குதிரையை வாங்கி விட்டார். குதிரை வந்த வேளை - ஒருநாள் தான், ஒரே ஒரு முறை தான், அதன் மேல் உட்கார்ந்து ஆடியிருப்பான் - அன்று மாலையே திடீரென்று ஜுரம் வந்தது. இரவுக்குள் அதிகமாகி மறுநாள் பொழுது விடிந்ததும் எங்களை விட்டுப் பிரிந்து போய்விட்டான். இதைச் சொல்லும் போது மாமிக்குத் துக்கம் பீரிட்டதால் விசும்பி விசும்பி அழுதாள்.

எனக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. தேற்ற வழி தெரியாமல், "இப்போது நினைத்தும் பயன் என்ன? பிராப்தம் அவ்வளவுதான். வருத்தப்படாதீர்கள்" என்றேன்.

கண்களைத் துடைத்துக் கொண்ட மாமி "இந்தக் குதிரை, வாங்கினதும் அவன் போய் விட்டதால் 'ஆகிவராத குதிரை' என இதைப் பார்க்கும் போதெல்லாம் சொல்லுவார். அதனால் குதிரையைக் கண்ணில் படாமல் இருக்கப் பரண் மேலேயே போட்டிருந்தேன். சுண்ணாம்பு அடித்த அன்று பரணிலிருந்து சாமான்களெல்லாம் இறக்கியபோது குதிரையைப் பார்த்துத் தான் ரவி ஓடி வந்தான். இதில் ரவி ஏற வேண்டாம் மறுபடி குதிரையை பரண்மேல் போட்டுவிடு என்றார் மாமா. நான் தான் 'குழந்தை ஆசையுடன் அதனருகில் வந்து நிற்கும் போது அவன் ஆசையைக் கெடுக்க வேண்டாம். நாம் என்னவோ கொடுத்து வைக்கவில்லை, நம் குழந்தை ஆட வேறெந்தக் குழந்தையாவது ஆடட்டுமே. கண்குளிரவாவது பார்க்கலாமென்றேன். அதன் பிறகுதான் அவரும் சம்மதித்தார். உன்னிடம் இந்த விஷயத்தைக் கூறினால் நீயும் வித்தியாசமாக ஏதாவது எண்ணிக் குழந்தையை இங்கு வரவிடாமல் செய்து விட்டால்... இப்போது அவன் வந்து போய்க் கொண்டிருப்பதால் தான் நானும் அவரும் மனம் மகிழ்ச்சியாக இருக்கிறோம்" என்றாள்.

மாமியின் மனத்திலிருந்ததைக் 'கட கட' வெனக் கொட்டிவிட்டாள். ஆனால் அது என் மனத்தில் போய் குடி கொண்டு விட்டது. இதுவரை மாமி அந்த ஆகிவராத குதிரையை அவனுக்கு ஆடக் கொடுத்து பற்றி வேதனையடைந்தேன். இத்தனை நாட்களாக மாமி சொல்லாததை அறிந்ததும் மாமியிம் வெறுப்பு கொண்டேன். நல்லவேளை இப்போதாவது சொன்னாளே. இனியாவது அவனை இங்கு வராமல் தடுக்க வேண்டுமென்று எண்ணினேன். அதற்கேற்றாற் போல் மாமி இன்று ஊருக்குப் போய் விடுவதும் ஒரு விதத்தில் நன்மைதான் என்று நினைத்தேன். திரும்பி வந்ததும் குதிரை மீது ஏறி ஆடாமல் இவனைப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்தேன்.

பேசி முடிந்த பிறகு என் இடத்திற்கு நான் போய் விட்டேன். மாமியும் ஊருக்குப் போக வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்து கொண்டிருந்தாள். இரவு ஏழு மணியானதும்

பூக்கடையில் வேலை பார்த்த பையனை பட்டாசுக் கடையில் வேலைக்கு சேர்த்தது தப்பாப் போச்சு. ஏன்?

பின்ன என்னய்யா பையன் பழக்க தோஷத்தில் தண்ணீரை தெளிச்சுட்டான்.



- சரவெடி ஸ்ரீதர்

ஊருக்குக் கிளம்பின மாமி என்னிடம் சொல்லிக் கொண்டு போக வந்தாள்.

"ரவி தூங்கி விட்டானா சீதா? விழித்துக் கொண்டிருந்தால் என்னுடன் கூட வருகிறேன் என்று அழுவான். என்ன செய்வது? எனக்கும் குழந்தையை விட்டுப் பிரிந்து போகவே மனம் வரவில்லை. 'டாக் டாக் டாக்' என்று குதிரை ஆடுவதை மறக்கவே முடியாது. வீட்டைப் பூட்டிக் கொள்ளணும். குதிரையை எடுத்து வைத்துக் கொள்" என்றாள்.

"வேண்டாம் மாமி! நீங்கள் வந்த பிறகே அவன் அங்கு வந்து ஆடட்டும். இந்தச் சின்ன இடத்தில் அதையும் எப்படி கொண்டு வைத்துக் கொள்வது?" என்று மேலுக்காக சொல்லி வைத்தேன்.

என் மனத்தில் தோன்றிய சஞ்சலத்தைப் புரிந்து கொண்டு விட்ட மாமி மேலும் வற்புறுத்திச் சொல்லாமல் விடை பெற்றுக் கொண்டு ஊருக்குப் போய் விட்டாள்.

மாமி ஊருக்குப் போனதிலிருந்து எனக்கும் பொழுது போகவில்லை. என்னைவிட ரவிக்கு... பாவம் குதிரை ஆடாமல் மாமியும் இல்லாமல் ஏங்கி விட்டான். சுறு சுறுப்பாக இருந்த அவன் சிறு குடிசை வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்து சோர்ந்து சோர்ந்து போனான்.

"மாமி எங்கே, மாமி எங்கே?" என்பான்.

அவனைச் சமாதானம் செய்வதே எனக்குப் போதும் போதுமென்றாகி விட்டது. மாமி ஊருக்குப் போய் ஒரு மாதமாகி விட்டது. அப்படியும் அவன் மாமியையும், குதிரையையும் மறக்க வில்லை.

ஒரு நாள் மாலை மிகவும் சோர்ந்து படுத்திருந்தான் ரவி. உடம்பைத் தொட்டுப் பார்த்தாள் ஜுரமடித்துக் கொண்டிருந்தது. அந்தக் குதிரையினால் தான் இவனுக்கும் ஜுரம் வந்து விட்டது என எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணத் தொடங்கினேன். இரண்டு தினங்களாக ஆஸ்பத்திரி மருந்திலும் குணமில்லாமல் போகவே வேதனை அதிகமாகியது. அதற்கேற்றாற்போல் அவனும் ஜுரவேகத்தில் "டாக் டாக் டாக்" என்றும் "மாமி மாமி" என்றும் பிதற்றுவதைக் கேட்டதும் மாமியின் மேல் வெறுப்பு ஏற்படாமல் எப்படி இருக்க முடியும்? ஒரு யோசனை தோன்றியது. எப்படியாவது புதிதாக ஒரு குதிரை வாங்கித் தந்து விட்டால்? டாக்டரை அழைத்துக்காட்டவே பணமில்லாமல் இருக்கும் போது குதிரை வாங்க எப்படி முடியும்-? மாமிக்கே கடிதமெழுதிப் பணம் கேட்டால்.... குழந்தைக்கு உடம்பு என்றால் பணம் அனுப்புவாள். ஆனால் பணம் அனுப்பாமல் உடனே வந்து விட்டால்.... என்று ஒன்றும் புரியாத நிலையில் இருக்கும் போது வாசலில் காரின் ஹாரன் சப்த் கேட்டு எட்டிப் பார்த்தேன். மாமியும் மாமாவும் இறங்கினார்கள். இறங்கியவர்கள் அவர்கள் வீட்டைத் திறந்து கொண்டு போகாமல் நேராக ரவி என்று கூப்பிட்டுக் கொண்டே வந்தார்கள். ரவி கயிற்றுக் கட்டிலில் படுத்திருப்பதைப் பார்த்ததும், "என்ன சீதா குழந்தைக்கு உடம்பு?" என்று கேட்டவாறு அவன் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். மாமாவும் அவனருகிலேயே நின்று கொண்டிருந்தார். "மாமி... டாக்.... டாக்" என அவன் பிதற்றிக் கொண்டிருந்தான்.

மாமியும் மாமாவும் அவன் ஏக்கத்தைப் புரிந்து கொண்டார்கள். மாமியின் கண்கள் கலங்கின. பிரமை பிடித்தாற்போன்று ஒரு நிமிஷம் அவனையே உற்றுப் பார்த்தவள் விடுவிடு என்று தங்கள் வீட்டுப் பக்கம் போனாள். கதவைத் திறந்து, தூக்க முடியாமல் அந்தக் குதிரையைத் தூக்கிக்

www.TheMagnet.com

கொண்டு வந்தாள்.

"ரவி! இதோ பாரடா உன் மாமி வந்து விட்டேனடா. உன் குதிரையும் இதோ இருக்கிறது பார்" என்று அவனைத் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொண்டாள். மடியில் படுத்ததும் ஏதோ இன்ஜக்ஷன் கொடுத்து உடம்பைக குணப்படுத்துவது போன்று ரவி கண்களைத் திறந்து பார்த்தான். 'மாமி' என்றான் மெதுவான குரலில் ரவி கண்ணைத் திறந்து பேசியதைத் கேட்டு மகிழ்ச்சியடைந்தவளாய் 'மாமி! நீங்கள் உங்கள் குழந்தையைப் பற்றிக் கூறியிதிலிருந்து உங்களைத் தவறாக நினைத்துவிட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள்' என்றேன்.

"அதனால் தான் முதலிலேயே உன்னிடம் என் குழந்தையின் விஷயத்தைக் கூறவில்லை சீதா! என்னுடைய விதி. குழந்தை தங்கக் கூடாது என்று போய்விட்டது. அதற்கும் குதிரைக்கும் என்ன சம்பந்தம்? அப்படியே இருந்தாலும் என் குழந்தையைப் போக்கடித்த குதிரை உன் குழந்தையைக் காப்பாற்றுகிறது என நினைத்துக் கொள்" என்று சொல்லிக் கொண்டு போகும் போது மடியில் படுத்திருந்த ரவி குதிரையைக் கண்டவுடன் மெதுவாக எழுந்து குதிரை மேல் உட்கார்ந்து கொண்டான். அவன் கீழே விழாமல் இருக்க அவனை மாமி அணைத்துக் கொண்டாள். அவள் வாய் 'டாக் டாக்' எனச் சொல்லியது. மாமாவும் மாமியும் அவன் ஆடுவதைக் கண்டு களிப்படைந்தார்கள். மாமியின் அன்பான பேச்சும், குணமும் என் மனத்தில் தோன்றிய சிறு சஞ்சலத்தையும் மாற்றியது. அன்றிரவு என் கணவர் வந்ததும் குதிரையைப் பார்த்துவிட்டு "என்ன மாமா, மாமி வந்து விட்டார்களா? எனக்குத் தெரியும். கடிதம் கிடைத்ததும் வந்து விடுவார்களென்று, ரவிக்கு உடம்பு குணமாகியிருக்குமே" என்று சொல்லிக் கொண்டு குழந்தையினருகில் உட்கார்ந்து கொண்டார்.

அப்போது தான் அவர்கள் ஒரு மாதத்தில் திரும்பி வந்து விட்ட ரகசியம் எனக்குத் தெரிய வந்தது. மாமியின் உயர்ந்த குணத்தை எண்ணி வியப்படைந்தேன். ●

## இரண்டு சொல் - சேர்த்தால் ஒரு ஊர்

1. தெய்வத்தின் இருப்பிடம்.
*ஆடுகளின் இருப்பிடம்.*

2. வெண்ணையை உருக்கினால் கிடைப்பது.
*தோட்டத்தை பாதுகாக்கும்.*

3. இதை அடுக்கி வீடு கட்டலாம்.
*காஞ்சிபுரத்தில் உற்பத்தி செய்யப்படுவது.*

4. மொய்க்கும் ஒரு பூச்சி.
*பாதைக்கு ஆங்கில வார்த்தை.*

5. முக்கண் மூர்த்தி.
*வடக்கில் ஓடும் புனித நதி.*

6. பழசல்ல அதற்கு எதிர்.
*அகழி சூழ்ந்த அரசனின் ராஜ்ஜியம்.*

7. முருகன் என்றால் ..........
*நாம் வழிபடும் இடத்தைக் குறிக்கும்.*

8. சீதை விரும்பிய .......... மான்.
*தவம் இருந்தால் கிடைக்கும்.*

9. சுவர் பழையதானால் பெயர்ந்து விழும்.
*நடைப்பயிற்சி மற்றும் ஆரோக்கியத்துக்கு உதவுவது.*

விடைகள்: 1. கோவில்பட்டி, 2. நெய்வேலி, 3. செங்கல்பட்டு, 4. ஈரோடு, 5. சிவகங்கை, 6. புதுக்கோட்டை, 7. அழகர்கோவில், 8. மாயவரம், 9. காரைக்கால்.

- புவனா சங்கர்



www.TheMagnat.com



**சே**துராமன் என்று ஒரு நண்பன் என்று தான் துவங்க நினைத்தேன். ஆனால் அவன் சுபாவம், அவன் என்னிடம் பழகிய விதம் பற்றியெல்லாம் நினைத்த போது அவனை நண்பன் என்று சொல்லிக் கொள்ள வெறுப்பாக இருந்தது. பொதுவாக, மனிதன் என்று போட்டு விடலாம் என்றாலும் மனிதாபிமானமேயில்லாத ஒருவனை மனிதன் என்று எப்படி அழைப்பது? அதனால் தான் இரண்டு புள்ளி வைத்து உங்கள் யூகத்துக்கே விட்டு விட்டேன்! பூராவும் படித்த பிறகு பூர்த்தி செய்து கொள்ளுங்கள்.

சேதுராமனை எங்கள் குரூப்பில் சேர்த்துக் கொண்டதில் யாருக்கும் விருப்பமில்லை என்று புரிந்தது. ஆனால், என்னை எதிர்த்துப் பேச இயலாமல் மௌனமாக இருந்தார்கள். மூத்த உறுப்பினர் ராகவன் மட்டும் கடுமையாக விமர்சித்தார். “அவன் எதற்கும் லாயக்கில்லாதவன். வெறும் வாய் சவடால் பேர்வழி. நன்றி கெட்டவன். வேலியில் போகிற ஓணானை எடுத்து மடியில் கட்டிக் கொண்டு 'குடைகிறது, குடைகிறது' என்றானாம். அது போல சங்கடப்படப் போகிறாய் பார்!” என்றார்.

“பாவம் சார், சின்ன வயசு தான். சாப்பாட்டுக்கே கஷ்டப்படுகிறான் போல் இருக்கிறது. ஆதரவு காட்டினால்

சிறுகதை

# சேதுராமன் என்று ஒரு...

நாய் போல நன்றியுடன் இருப்பான். சொல்வதையெல்லாம் செய்வான் என்று தான்..."

ராகவன் என்னைப் பேசவிடவில்லை. "நாய் இல்லைப்பா அவன். நரி. நன்றி கெட்டவன். வெறும் சந்தர்ப்பவாதி. சுயநலவாதி. போகப் போக புரிந்து கொள்வாய்" என்று சொல்லி விட்டு போனார்.

சேதுராமனிடம் எனக்கு அதிகம் பரிச்சயமில்லை. அலுவலகத்தில் இரண்டொரு முறை பார்த்திருக்கிறேன். அவ்வளவு தான். லீவ் ரிசர்வாக வேலை செய்கிறான் போலிருக்கிறது. சமீபத்தில் ஒரு கவியரங்கத்தில் பார்த்தேன். அவனுக்கும் கவிதை எழுத வரும் என்று தெரிந்ததும் ஒரு ஈடுபாடு ஏற்பட்டது. சின்ன வயது தான். இருபத்தாறு அல்லது இருபத்தெட்டு இருக்கும். என்னை விட நான்கைந்து வயது சின்னவனாக இருப்பான். நம்ம குருப்பில் சேர்த்துக் கொண்டால் ஏதாவது புராஜக்ட் கிடைக்கும். வெளிநாடு செல்ல வாய்ப்பு உண்டாகுமோயென்று தான் என் குருப்பில் சேர்த்துக் கொண்டேன். யாரோ தூரத்து உறவினர் வீட்டில் தங்கியிருப்பதாகச் சொன்னான். ஒரு வேளை சாப்பாடு கிடைக்குமாம். கையில் லஞ்ச் ஏதும் கொண்டு வருவதில்லை. இரவிலாவது சாப்பிடுவானோ மாட்டானோ. பாவமாக இருந்தது. அவனுக்கும் சேர்த்து நான் லஞ்ச் கொண்டு வர ஆரம்பித்தேன்.

www.TheMagnat.com


"நீங்க ரெண்டு சப்பாத்தி அல்லது ரெண்டு தோசை மேலே சாப்பிட மாட்டீங்களே. இப்பல்லாம் எதுக்கு ஆறு வை, எட்டு வைன்னு கேட்கறீங்க?.. ஆபீசிலே யாருக்கேனும் கொடுக்கறீங்களா? மிஸ்டரா அல்லது மிஸ்ஸா?" ஒரு நமட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டே கேட்டாள் கல்யாணி. ஒரு முறை அவசரம், அவசியம் முன்னிட்டு ஒரு பெண் ஊழியரை என் ஸ்கூட்டரில் ஏற்றிக் கொண்டு ஏர்போர்ட்டில் டிராப் செய்து விட்டு வந்தேன். இவளிடம் சொல்லவில்லை. ஆனால் தெரிந்து விட்டது. அதிலிருந்து வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் என்னை இடித்துக் காட்டுவது இவளுக்கு வழக்கமாகி விட்டது.

"அம்மா, தாயே... மிஸ்ஸும் இல்லை மிசஸ்ஸும் இல்லை. சேதுராமன் என்று ஒரு நண்பன். மன்னார்குடிக்காரன்(இவளும் மன்னார்குடி தான்!). எங்கள் குருப்பில் புதிதாகச் சேர்ந்திருக்கிறான். வீட்டிலே வசதி போதவில்லை. ஒரு நாள் கூட்டிண்டு வரேன் பாரு!"

"யார் யாரோ புதிதாக வந்து சேருகிறாங்க. என் தம்பி சங்கரனைப் பற்றி சொல்லியிருந்தேனே. அவனையும் உங்க கம்பெனியில் இழுத்து விடறது தானே?"

**மாயூரன்**

மற்றவர்களுடைய மேஜை டிராயரையோ, கைப் பையையோ திறந்து அவர்கள் உடைமைகளைக் குடைவான். பர்சனல் கடிதங்களை சுவாரசியமாகப் படிப்பான்...





"அவன் தான் பெங்களூரிலோ மங்களூரிலோ வேலை பார்ப்பதாகச் சொன்னியே... கல்யாணத்துக்குத் தானே பெண் தேடுவதாகச் சொன்னாய்!"

"அதுவும் தான். இங்கே உங்க கம்பெனியிலேயே வேலை கிடைத்தால் சென்னைக்கே வந்திடலாமே?"

"அப்படியா? எதற்கும் அவனை ஒரு 'ரெஸ்யூம்' அனுப்பு வைக்கச் சொல்லு!"

**இ**ப்போதெல்லாம் சேதுராமன் என் கேபினுக்கே வந்து என்னுடைய டிபனைப் பகிர்ந்து கொள்வது வழக்கமாகி விட்டது. நான் ஏதேனும் வேலையில் மும்முரமாக இருந்தாலும் அல்லது சீப் அறைக்குச் சென்றிருந்தாலும் எனக்காகக் காத்திருக்க மாட்டான். அவனாகவே பையைத் திறந்து டிபன் பாக்சை எடுத்துச் சாப்பிட்டு விட்டு என் பங்கை வைத்து விட்டுப் போய் விடுவான். (அவன் சாப்பிட்டு விட்டு என்ன மீதம் வைக்கிறானோ அது தான் என் பங்கு) டிபன் பாக்சையும் மூட மாட்டான். சாப்பிட்ட இடத்தையும் சுத்தம் செய்ய மாட்டான். அப்படியே போட்டு விட்டுப் போய் விடுவான். நான் வீட்டிலிருந்து டிபன் ஏதும் கொண்டு வராத நாட்களில் ஓட்டலுக்கோ கேண்டீனுக்கோ போகலாம் என்பான். ஆனால் பில் பணம் நான் தான் கட்ட வேண்டும்



"சும்மா சாப்பிடப்பா... இன்னும் ரெண்டு தோசை சாப்பிடு. தம்பி, பூரி இருந்தால் கொண்டு வா! சூடாக வேணும். இல்லாட்டி பொங்கல் கொண்டு வா..." என்று ஏதோ அவன் எனக்கு வாங்கிக் கொடுப்பது மாதிரி இரைந்து ஆர்டர் கொடுத்து இஷ்டத்திற்கு கண்டதை எல்லாம் வாங்கிச் சாப்பிடுவான். என்னிடம் மட்டும் என்றில்லை. குரூப்பில் இதர பணியாளர்கள் பாக்சைத் திறந்து, கையை விட்டு எடுத்து வாயில் போட்டு கொண்டு சப்பு கொட்டுவான். 'சதக் சதக்' என்று சப்தம் வரும்படி அவன் சாப்பிடுவதே பார்க்க அருவருப்பாக இருக்கும். அவர்களைக் கேட்காமலேயே மற்றவர்களுடைய மேஜை டிராயரையோ, கைப் பையையோ திறந்து அவர்கள் உடைமைகளைக் குடைவான். பர்சனல் கடிதங்களை சுவாரசியமாகப் படிப்பான். அவர்களுடைய மொபைல் போனை எடுத்து வாட்ஸ் அப் இதர மெசேஜ்களை ஒன்று விடாமல் படிப்பான். "அது யாருப்பா கௌரி? நாள் தவறாமல் 'குட் மார்னிங்', 'குட் நைட், ஸ்வீட் டிரீம்ஸ்' மெசேஜ் அனுப்பிக் கொண்டிருக்கிறாளே?" என்று மற்றவர்கள் இருக்கிறார்களே என்று கூடப் பார்க் காமல் குமாரிடம் உரக்கக் கேட்டு விட்டான். குமாருக்கோ தர்ம சங்கடமாகி விட்டது. இவன் அதோடு விடவில்லை. "அவளுடைய புரொபைல் படத்தைக் கூட உன் காலரியில் சேவ் செய்து வைத்திருக்கிறாயே!" என்று குட்டை போட்டு உடைத்து விட்டான். குமார் எரிச்சலுடன் மொபைல் போனை பிடுங்கிக்

கொண்டு பதிலேதும் சொல்லாமல் என் அறைக்கு வந்து புகார் செய்தான்.

நான் சேதுராமனை எச்சரித்தேன். "மற்றவர்கள் போனை எடுப்பது, அவர்களுடைய பர்சனல் விவகாரங்களில் தலையிடுவதெல்லாம் அநாகரீகம்" என்று அறிவுரை எல்லாம் சொல்லிப் பார்த்தேன். எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கு தான்! என் அறிவுரையும், எச்சரிக்கையையும் அவன் ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை. "என் போனில் சார்ஜ் இல்லை. நான் சார்ஜர் கொண்டு வரவில்லை. சார்ஜரில் இருந்த அவன் போனை எடுத்து விட்டு என் போனை பொருத்தினேன். ஏதேச்சையாக அப்போது அவனுடைய போனில் மெசேஜ் பார்த்தேன். விளையாட்டாகத் தான் கேட்டேன். அவன் சீரியசாக எடுத்துக் கொண்டு விட்டான் போலிருக்கு" என்று நொண்டிச் சமாதானம் சொன்னான். "அந்த கௌரி அவனுடைய உறவுக்காரப் பெண்ணாகவோ அல்லது மிகவும் தெரிந்தவளாக இருந்தால் அதை சொல்லி விட்டுப் போவது தானே? கோபப்படுவானேன்?" என்று தன் செய்கைக்கு நியாயம் கற்பித்தான் அவன்.

**ஆ**பிசில் புதிதாக வேலைக்கு சேர்ந்த உஷா என்ற ஒரு பெண்ணைப் பயிற்சிக்காக என்னிடம் அனுப்பியிருந்தார்கள். காலேஜ் கேம்பஸ் இன்டர்வியூவில் தேர்வு செய்யப்பட்ட பெண். மேல் படிப்பு படித்திருந்தால் பயிற்சி முடிந்ததும் அவளுக்கு உயர் பதவி கொடுத்து விடுவார்கள். அதனால் என் அறையிலேயே உட்கார்ந்து பைல்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். என் அறைக்கு வந்த சேதுராமன் அவளுடைய டிபன் பாக்சைத் திறந்து அதில் இருந்த மாவடுவை எடுத்து, "ஆஹா! மாவடு" என்று கூறி வாயில் போட்டுக் கொண்டு விட்டான். இதை அவள் எதிர்பார்க்கவில்லை. நானும் தான். அந்த சாதத்தை அவள் சாப்பிடாமல் அப்படியே கூடையில் கொட்டி விட்டு பட்டினியாகவே இருந்தாள். எனக்கு என்னவோ போலிருந்தது. சேதுராமனைக் கூப்பிட்டு கடிந்து கொண்டேன். அன்று பூராவும் அவனிடம் பேசவில்லை.

**ம**று நாள் அவன் என் வீட்டிற்குப் போயிருக்கிறான். முன்பே இரண்டொரு முறை வந்திருந்ததால் கல்யாணிக்கு அவனைத் தெரியும். அவனை அவ்வளவாகப் பிடிக்காதே ஒழிய மரியாதைக்காக இரண்டொரு வார்த்தை பேசவாள். இவன் போன சமயம் இரண்டாம் வகுப்பு படிக்கும் என் பையன் பாடம் படித்துக் கொண்டிருக்கிறான். அவன் வாயைக் கிளறியவன், "உன் சிநேகிதன் பெயர் என்ன?" என்று கேட்டிருக்கிறான். பையனுக்குச் சொல்லத் தெரியவில்லை. "பள்ளிக்கூடத்தில் உன் பக்கத்தில் யார் உட்கார்வார்கள்?" என்று கேட்க, பையன் பளிச்சென்று, "உஷா!" என்று சொல்லி இருக்கிறான். "போடு சக்கை, ஆபீசில் உங்க அப்பனுக்கு

எப்படி இருக்கிறான் உன் பெட் டாக் சேதுராமன்? என்று கிண்டலாக விசாரித்தார். சேதுராமன் பற்றி நான் கொட்டித் தீர்த்தேன். அவர் சிரித்தார்...

www.themagnat.com

ஒரு உஷா, ஸ்கூலில் உனக்கு ஒரு உஷாவா?" என்று கேட்டு விட்டுப் போய் விட்டான். வெறும் வாயை மெல்பவளுக்கு அவல் கிடைத்தாற் போலாகி விட்டது.

**மா**லையில் நான் வீடு திரும்பியதும், காப்பியைக் கொடுத்து விட்டு விசாரணையைத் துவக்கினாள்.

"உங்க ஆபிசிலே உஷான்னு ஒரு பெண் இருக்கிறாளா?" என்று ஆரம்பித்தாள்.

"இருக்கிறாளே, உனக்கு யார் சொன்னது? புதிதாக வேலைக்குச் சேர்ந்திருக்கிறாள்." என்றேன்.

"எப்படி இருப்பாள்?" 'தன் தம்பி சங்கரன் கல்யாண விஷயமாகக் கேட்கிறாள் போலிருக்கிறது' என்று நினைத்துக் கொண்டு, "மிகவும் அழகாக இருப்பாள். ஒல்லி தான். சூட்டிகையான பெண். புத்திசாலி. படித்தவள். நல்ல மேனர்ஸ் தெரிந்தவள்..." என்று நான் அடுக்கிக் கொண்டு போனேன்.

"நிறுத்துங்க வர்ணனையை" என்று அவள் வெடித்ததும் தான் விஷயம் ஏதோ விபரீதம் என்று புரிந்தது. உங்க சினேகிதர் சேதுராமன் சொன்ன போது "ஏதோ விளையாட்டாகத் தான் சொல்கிறார்" என்று தான் நினைத்தேன். "நெருப்பில்லாமல் புகையுமா? ஒல்லியாம், சூட்டிகையாம், படு அழகாம், மேனர்ஸ் தெரிந்தவளாம் எல்லாம் என்கிட்டேயே வந்து வர்ணிக்கி றீங்களான்னு" இவள் புலம்ப ஆரம்பித்ததும் தான் சேதுராமன் வந்து ஏதோ வத்தி வைத்து விட்டுப் போயிருக்கிறான் என்று புரிந்தது. "நீ சங்கரனுக்காக விசாரிக்கிறாய் என்று நினைத்தேன். அந்த உஷா புதிதாக வேலைக்குச் சேர்ந்து ஒரு வாரம் தான் ஆகிறது. பயிற்சிக்காக என்னிடம் அனுப்பி இருக்கிறார்கள். அடுத்த வாரம் வேறு குரூப்புக்கு அனுப்பி விடுவார்கள்." என்று இவளுக்குப் புரிய வைப்பதற்குற் போதும் போதும் என்றாகி விட்டது

www.TheMagnet.com



**அ**லுவலக மீட்டிங் ஒன்றில் சீனியர் ராகவனைச் சந்திக்க நேரிட்டது. "எப்படி இருக்கிறான் உன் பெட் டாக் சேதுராமன்?" என்று கிண்டலாக விசாரித்தார். சேதுராமன் பற்றி நான் கொட்டித் தீர்த்தேன். அவர் சிரித்தார். "நான் தான் அப்போதே சொன்னேனே அவன் நாய் அல்ல. நரி என்று. நாய் நன்றி மறவாத பிராணி. சோறு போட்டவன் அடித்துத் துரத்தினாலும் வாலைக் குழைத்துக் கொண்டு ஓடி வரும். நரி அப்படியல்ல. அதற்கு உணவு போடுபவன் முக்கியமல்ல. உணவு தான் முக்கியம். தந்திரமாகவோ அல்லது வஞ்சகமாகவோத் தன் வேலையை முடித்துக் கொண்டு அடுத்த வேளைக்கு வேறிடத்தைத் தேடிக் கொண்டு போய் விடும்" என்றார்.

உண்மை தான். சேதுராமன் இப்போது அந்த உஷாவோடு உணவைப் பகிர்ந்து கொள்கிறானாம். அது எத்தனை நாளைக்கோ.

●



ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவா

# சரணம்

உலகம் முழுவதும் க்ஷேமமாக வாழ வேண்டும் என்பதே வேதங்களின் சாரம். வேதங்களில் சொல்லப்படாத உலக விஷயங்கள் ஏதும் இல்லை. வேதங்களை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இன்று வரை ப்ராம்மண ஸமூகம் காப்பாற்றிக் கொண்டும் வருகிறது. ராஜாக்கள் காலம் முதல் (ராமராஜ்யம் முதல்) தேச ஆளுனர்கள் வரை வேதங்களை காப்பாற்றுவதில் பங்கு வகித்தனர் என்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. அந்தண ஸமூகம் கொடர்ந்து ஓதுதல், ஓதுவித்தல் தொழிலை செய்ய அரசர்கள் உதவி செய்தார்கள். ஆனால் கால வர்த்தமான மாறுதல்களில், உலக அரசியல் மாற்றங்களில் வேதங்களை நடுவில் பல நூற்றாண்டுகள் காப்பாற்றாமல் நின்று தடுமாறி, பல ஸாகைகள் அப்யாஸம் இல்லாமல் மறைந்து போயின. சென்ற நூற்றாண்டில் பாரதத்தாயின் தவப்புதல்வர் **ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவர்** தோன்றி வாழ்நாள் முழுவதும் வேதங்களை புனருத்தாரணம் செய்து தழைத்தோங்க விரதம் பூண்டு, தவம் செய்து வாழ்ந்து, இன்று காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை புத்துணர்ச்சி பெற்று வேதங்களை அப்யாஸம் செய்து, வாழும் பல ரித்வித்குகள், அக்னி ஹோத்ரிகள் உருவாக வழிவகை செய்து உள்ளார்கள்.

**வேதபாரதி வெங்கட்ராமன்**

'வேதம் உயிருடன் செழிப்பாக உள்ளது.'

வேதங்களை ப்ராம்மண ஸமூகம் ஓதுதலும் ஓதுவித்தலும் எனும் இரண்டு வழியின் மூலமாக கொண்டு வந்து சேர்த்துள்ளது. மிகப்பெருமையான விஷயம். மற்ற ஸமூகத்தார் வேதங்களுக்கு கொடுத்துள்ள மரியாதை அளப்பரியது. குறிப்பாக நாட்டுக்கோட்டை நகரத்தார் செய்துள்ள பணி மிகப்பெருமை வாய்ந்தது. வேதங்கள் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள மக்கள் மனதில் நின்று, வாழ்ந்து கொண்டும் உள்ளது.

அவ்வளவு பெருமை வாய்ந்த ஸமூகம் பிரிட்டிஷ் காலத்தில் ஆங்கில மோகத்திலும், பிழைப்பிற்காகவும், ப்ராம்மணத்துவத்தை இழந்தது மிக உண்மை. இன்று நம் ஸமூகத்தில் உள்ள பெண் குழந்தைகள் சுதந்திரக்காற்றை சுவாசிக்க வேண்டும் எனும் எண்ணம் கொண்டு இருப்பது யதார்த்தம்.

ஆனால் திருமண விஷயங்களில் அவசரத் திருமணங்களால், பள்ளி, கல்லூரிகளில் ஆணும் பெண்ணும் சேர்ந்து கொடுக்கப்படும் அவசர வாக்குறுதிகளால் வாழ்க்கை தடம் மாறி பல்லாண்டு கால பாரம்பர்ய பொறுப்பு மிக்க ஸமூக வாழ்க்கையை உதறிப் புறந்தள்ளி விட்டு, மனம் போன போக்கில் திருமணம் செய்து கொண்டு, பிறப்பின் பொருளை உணராமல் வேத ரக்ஷணம் என்கிற வேரை அறுத்துவிட்டு வாழ்வதைக் கண்டு அவமானம் தாளாமல் நடைபிணமாய் வாழும் பல பெற்றோர்களின் மனம் படும்பாடு நாம் அறிவோம்.

எனவே எந்த சுயநலமும் இல்லாமல், வேதங்களைக் காப்பாற்றுவது இந்த உலகத்திற்கே செய்யும் மிகப்பெரும் தொண்டு, அது நம் கடமை. அதற்காக நம் குழந்தைகளுக்கு ஸமூக பொறுப்பு. குடும்ப பொறுப்பு. சமுதாயக் கடமைகளை புரிய வைக்கும் வேலையை **வேதபாரதி யுவஶ்ரீ வாழ்வியல் பயிலகங்கள்** மூலம் ஆயிரக்கணக்கான யுவஶ்ரீக்களுக்கும், பெற்றோர்களுக்கும் வேதபாரதியின் வல்லுனர் குழுக்கள் சொல்லிக் கொடுத்து நட்புக்கும், உறவுக்கும் ஆன சரியான புரிதல்களை அளிக்கின்றார்கள். பல குடும்பங்கள் வேதபாரதியை பாராட்டி கடிதங்கள் கொடுக்கிறார்கள். பல குழந்தைகள் தடுமாற்றம் விலகி வாழ்க்கை நோக்கத்தை நிறைவேற்றுவதில் வெற்றி பெற்று வருவதை கண்கூடாக காண்கிறோம்.

தான் ஏமாறாமல் வாழவும், பெற்றோருக்கு நன்மதிப்பை பெற்றுத்தரவும் இந்த பயிற்சி ஒரு வாழ்வியல் பயிலரங்கமாக அளிக்கப்படுகின்றது.

### ஸந்தியா வந்தன பயிலரங்கங்கள்

பிரதி மாதம் ஓர் ஞாயிறு காலையில் அந்தண ஸமூக குழந்தைகள், பெரியவர்கள் கூடி நித்ய அனுஷ்டானம் செய்தல், பயிற்சி அளித்தல், வருடம் இரண்டு முறை உறைவிடத்துடன் கூடிய ஸந்தியா வந்தன கேம்ப் தொடர்ந்து பல ஆண்டுகளாக நடந்து வருகிறது.

பிரதி வருடம் நூற்றுக்கணக்கான இளைஞர்கள், பெரியவர்கள் பங்கு பெற்று பயன் அடைந்து உள்ளனர். இரண்டு நாட்கள் முகாமில் குடும்பத்துடன் தங்கியிருந்து நித்ய அனுஷ்டானங்கள். பெண்களுக்கு பாரம்பர்ய பழக்கங்களை நினைவூட்டல் ஆகியவை மிகப்பெரிய வித்வான்கள், பண்டிதர்கள் வழிகாட்டுதலுடன் நடந்து வருகிறது.

### ஸு்தர்மஶ்ரீ வகுப்புகள்

புதிதாக திருமணமான தம்பதியர் மற்றும் இளம் தலைமுறையினருக்கு நம் ஸம்ப்ரதாயங்களை நினைவூட்டும் விதமாகவும், வாழ்க்கைக் கல்வி பெறவும் வகுப்புகள் நடைபெறுகின்றன. மேலும் சிறந்த பெற்றோர்களாகத் திகழ்வது எப்படி என்று நம் ஹிந்து தர்மத்தின் அடிப்படையில் வகுப்புகள் நடைபெறுகின்றன.

### வீடுகள் தோறும் வேதபாராயணம்

நம் இல்லங்களில் வேத ஸப்தங்கள் ஒலிக்க வேதபாரதி வேதபண்டிதர்கள், கனபாடிகளை ஏற்பாடு செய்து பல வீடுகளில் அவர்கள் குறித்துக் கொடுக்கும் நாட்களில் **கனபாராயணம்** நிகழ்ச்சி நடந்து கொண்டே உள்ளது. ஏகோபித்த ஆதரவுடன்

நடந்து வருகிறது. நண்பர்கள், உறவினர்கள் முன்னிலையில் ஓர் வைபவமாய் வேதபாராயண நிகழ்ச்சி நடந்து வருகின்றது.

வசதி குறைவான அந்தண குடும்பங்களுக்கு உதவி செய்தல்

நிதி வசதியும், நல்ல மனமும் உள்ள நல் உள்ளங்களைக் கொண்டு வசதி குறைவாக வாழும் குடும்பங்களுக்கு தர்ம உபநயனம். திருமணங்களுக்கும், மற்றும் கல்விக்கும் உதவி செய்து வருகிறது.

பூஜ்யஸ்ரீ பரமானந்தபாரதி ஸ்வாமிகளின் வழிகாட்டுதலில், தமிழ்நாட்டில் முதன்முறையாக **1460 அந்தண கிருஹஸ்தர்கள்,** வைதீக பெருமக்கள் சேர்ந்து **ஏக தின** (ஒரு நாளில்) **அதிருத்ரம்** செய்து பெரும் உற்சாகத்தை அந்தணர்கள் பெற்றனர்.

பெண்களுக்கு ப்ரத்யேக நிகழ்ச்சியினை 108 நாட்கள் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் செய்து லலிதாம்பிகை விக்ரஹம் பூர்த்தி அன்று 3000 அந்தண ஸமூக பெண்கள் ஸ்ரீ லலிதாம்பிகை பூஜை செய்து பெரும் ஆன்மீக அனுபவம் பெற்றார்கள்.

தற்போது 1500 அந்தண பொதுமக்கள் 6 மாத காலம் விரதமாக இருந்து தினமும் சராசரியாக 648 ஸ்ரீ காயத்ரீ ஜபம் செய்து வருகிறார்கள். 23.4.2017 அன்று 1500 பேரும் உட்கார்ந்து காயத்ரீ ஹோமம் செய்திட ஏற்பாடுகளை வேதபாரதி அமைப்பு செய்து வருகிறது.

தீபாவளியன்று பாடசாலை குழந்தைகளுடன் கிரஹஸ்த குடும்பத்தினர் ஒன்று சேர்ந்து, மகளிர் தங்கள் வீடுகளில் பட்சணங்கள் செய்து, பாடசாலை குழந்தைகளுக்கு எண்ணை ஸ்நானம் செய்வித்து பட்சண விநியோகம் செய்து மகிழ்ந்திருக்கிறார்கள்.

வேதபாரதியில் உள்ள நல்ல உள்ளங்களில் பலர் அனாதை ப்ரேத ஸம்ஸ்காரம் செய்யும் அமைப்புடன் சேர்ந்து புனிதப்பணியில் தொடர்ந்து பங்கு பெறுகிறார்கள். இந்த அமைப்பைப் பற்றி 'லேடீஸ் ஸ்பெஷல்' பத்திரிக்கை வெளியிட்டுள்ளது.

வேதபாரதி உறுப்பினர்கள் மூலம்,

## முடிவில் ஆரம்பம்

**வரிசையாக சில வார்த்தைகளுக்குண்டான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கண்டுபிடிக்க ஒரு க்ளூ. முதல் வார்த்தையின் கடைசி எழுத்தில் தான் அடுத்த வார்த்தை ஆரம்பிக்கும்.**

**கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்...**

**உதாரணம்:**

வந்தவர்களை அழைக்கிறோம் – **வருக**

இதற்கு பொய் அழகு – **கவிதை**

பெண்ணின் மறு பெயர் – **தையல்**

1. பள்ளியில் போதிப்பது.
2. சாதித்தவர்களுக்கு இதை கொடுத்து கௌரவிப்பர்.
3. ஒரு மூலிகைச் செடி.
4. சின்னப் பெண்.
5. வெண் பொங்கலின் சுவை கூட்டும்.
6. பாட்டிலின் மூடி.
7. பேயின் இன்னொரு பெயர்.
8. பாடுவதற்கு இது முக்கியம்.
9. தப்பு செய்யும் குழந்தைகள் பெற்றோரிடம் வாங்குவது.
10. FB போல் ஒரு வலைத்தளம்.

**விடைகள்**: 1. கல்வி, 2. விருது, 3. துளசி, 4. சிறுமி, 5. மிளகு, 6. குப்பி, 7. பிசாசு, 8. சுருதி, 9. திட்டு, 10. டுவிட்டர்.

**- புவனா சங்கர்**

திருமண ஏற்பாடுகள் செய்து கொடுக்கிறோம். இதில் மிகுந்த மனநிம்மதி பெறுகிறோம். பாரம்பர்யம் காப்பாற்றப்படுகின்றது.

வேதபாரதியின் நோக்கம் அந்தண குடும்பங்களை ஒருங்கிணைப்பது. இந்த ஸமூகத்தில் பிறந்ததால் உயர்வான, ஸமூக அந்தஸ்து உள்ளவர்கள் என்பதற்காக அல்ல. நமக்கு இந்த வாழ்க்கையில் உள்ள ஸமூக பொறுப்பு. எல்லா ஸமூகத்தினரும் நம் ஸமூகத்தினர் மீது வைத்திருக்கும் நம்பிக்கை ஆகியவற்றிற்காக வாழும் நெறியினை நம் ஸமூக மக்களுக்கு புரிவித்தல் ஓா முக்கியமான செயல்பாடு. மறைந்து போன, தொலைத்துவிட்ட பல நுணுக்கமான விஷயங்களை மீண்டும் உயிர்பிக்கிறோம்.

வேதபாரதியின் குழு தென் சென்னையில் உள்ள 75 பள்ளிகளில் உள்ள குழந்தைகளுக்கு, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, விநாயகர் அகவல், திருப்பாவை, திருவெம்பாவை பயிற்று வைக்க, பள்ளிகள் ஆதரவுடன் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கி வருகிறது. குழந்தைகளின் பெற்றோர்கள் உணர்வு பூர்வமாக தாங்களும் பங்கு கொண்டு வருகிறார்கள். பெற்றோர்களுக்கும், பாரத பண்பாடு குறித்த விஷயங்கள் வல்லுனர்களை கொண்டு பயிற்றுவிக்கப்படுகிறது.

பசுமாட்டின் சாணத்தின் மூலம் தயார் செய்யப்படும் தூய பசுஞ்சாண விபூதி தயார் செய்பவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், நமது பழைய சிவாலயங்களுக்கு பசுஞ்சாண திருநீறு வழங்குவதுடன், சேவார்த்திகளை பசுஞ்சாண விபூதி பயன்படுத்த விழிப்புணர்வு உண்டு பண்ணுதல் மற்றும் அத்தகைய விபூதி கிடைத்திட ஏற்பாடு செய்து வருகிறோம்.

வேதபாரதி உறுப்பினர்களுக்கு பிரதி மாதம் நடக்க உள்ள, நடந்த நிகழ்ச்சிகளை தொகுத்து **'வேத பாரதி செய்தி'** பத்திரிக்கை மூலம் அனுப்பிக் கொண்டு உள்ளோம். இதற்கான ஆசிரியர் குழு அரும் பணியாற்றி வருகின்றது.

இதில் **பூஜ்ய ஸ்ரீ மஹா பெரியவர் அருளுரை, பூஜ்ய ஸ்ரீ மஹா ஸன்னிதானம் சிருங்கேரி, பூஜ்ய ஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்** ஆகியோரின் பரிபூர்ண ஆசியை பெறுகின்றோம். யோகாச்சாரியார் திரு. **திருச்சி சந்திரசேகரர் திரு. ஆர்.பி.வி.எஸ். மணியன், திரு. ஜகன்னாதன்ஜி** மற்றும் முன்னிலை எழுத்தாளர்கள் **டாக்டர் ஷ்யாமா,** திருமதி. **காந்தலக்ஷ்மி சந்திரமௌலி,** திருமதி. **காந்தாமணி நாராயணன்** மற்றும் மனநிலை நிபுணர் **உஷா** போன்றவர்களின் வழிகாட்டுதலுடன் சிறப்பாக நடந்து வருகின்றது. இதற்கு உறுதுணையாக பல்வேறு பொறுப்புகளையேற்று தேனீ போன்று சுறுசுறுப்பாக செயல்படும் திரு. **சௌந்தரராஜனை** எத்தனை பாராட்டினாலும் தகும்.

## மற்ற பணிகள்

- எல்லா வீடுகளிலும் ஸந்தியா வந்தனம் அனுஷ்டானம் ஏற்பாடு
- குலதெய்வ வழிபாடு.
- அவரவர்கள் ஸம்பிரதாயத்தில் திருமண ஏற்பாடு
- முதியோர் பாதுகாப்பு
- பசு பாதுகாப்பு
- நல்லொழுக்கம் வகுப்புகள், நன்னெறி வகுப்புகள்
- பழைய சிவாலயங்களில் தீபம் ஏற்றுதல்
- ப்ரம்மோத்ஸவம் - வேதபாராயணம் - விடுபடாமல் குழு அமைப்பது
- உற்சவ காலங்களில் அன்னதானம்

இப்படி பல பணிகளின் பொறுப்பை ஏற்று வழிநடத்தும் **திரு. டி.ஆர். ராமநாதன், திரு வேதபாரதி வெங்கட்ராமன்** போன்றவர்களை எத்தனை பாராட்டினாலும் தகும்.

மேன்மை பொருந்திய இப்பிறப்பில் நமது செயல்கள் மூலமாக மனஅமைதி பெற்று எல்லோரும் நலமுடன் வாழ இறைவனை பிரார்த்திக்கும் **வேதபாரதி, கைப்பேசி: 94434 95950, மின்னஞ்சல்:** vedhabharathichennai@gmail.com ●

செந்தூரில்

# ஸ்கந்த ஷஷ்டி

முருகன் எழுந்தருளியிருக்கும் ஸ்தலம் எதுவாயினுமே ஸ்கந்த ஷஷ்டி அங்கு கொண்டாடப்படுவது உறுதி. அறுபடை வீடுகளில் ஸ்கந்த ஷஷ்டி விழாக் கொண்டாட்டம் பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

அறுபடை வீடுகளிலும் திருச்செந்தூரில் கொண்டாடப்படும் ஸ்கந்த ஷஷ்டி விழாதான் சிலாக்கியமானது. கிருத்திகை விழா என்றால் திருத்தணி என்பது போல, தைப்பூசம் என்றாலே பழனி என்பது போல, ஸ்கந்த ஷஷ்டி என்று சொன்னவுடனேயே நமக்கு நினைவு வருவது திருச்செந்தூர்தான்.

அலை வந்து மோதும் திருச் சீரலைவாய் என்ற ஸ்தலத்தைப் பற்றி சங்க இலக்கியம் புறநானூறு கூறுகிறது.

**செண்டலைப் புணரி அலைக்கும் செந்தில்**
**நெடுவேள் நிலையாகிய காமர் வியன்துறை**

என்பது புறநானூற்று வர்ணனை.

**சீர்கெழு செந்திலும் செங்கோடும்**
**வெண்குன்றும் ஏரகமும் நீங்கா இறைவன்**

என்று இந்த ஸ்தலத்தின் முருகன் சிலப்பதிகாரத்தில் பாடப்பட்டிருக்கிறான். நக்கீரரது திருமுருகாற்றுப்படையில் கூறப்பட்ட ஆறுபடை வீடுகளில் இரண்டாவது படைவீடு இது. இங்குள்ள பாலசுப்ரமணியன் பெருமையெல்லாம் அவன் சூர ஸம்ஹாரம் செய்து தேவர் இடுக்கண் தீர்த்ததுதான்.

## வடமலையப்பன் மண்டபம்

ஸ்கந்த ஷஷ்டி விழாவில் மற்ற ஊர்த் திருவிழாக்களில் இல்லாத ஒரு சிறப்பு உண்டு. இந்த ஆறு நாட்களிலும் வள்ளி தெய்வயானை கோயில்களுக்கிடையேயுள்ள வேள்விக் கூடத்தில் காலையிலும் மாலையிலும் வேள்வி நடை பெறுவதாகும்.

1648ல் டச்சு வர்த்தகர்கள் சிலர் இந்த ஆலயத்தில் இருந்த ஷண்முகப் பெருமான் விக்ரஹத்தைக் களவாடிச் சென்றிருக்கிறார்கள்.




ஆர்.பி.வி.எஸ்.மணியன்




கப்பலில் விக்ரஹத்தை ஏற்றிச் செல்கையில் புயல் தாக்கியதால் விக்ரஹத்தை கடலில் எறிந்து விட்டிருக்கிறார்கள்.

ஷண்முக விக்ரஹம் காணாமல் போன செய்தியை நாயக்க மன்னரின் பிரதிநிதியான வடமலையப்பப்பிள்ளை அறிந்து கடலிலிருந்து விக்ரஹத்தை மீட்டு வந்து பிரதிஷ்டை செய்து இருக்கிறார். அதனாலேயே இன்றும் ஆறுமுகன் கோயில் கொண்டிருக்கும் மண்டபம் வடமலையப்பன் மண்டபம் எனப்படுகிறது.

1648ல் கடலுள் சென்ற செந்தில் ஆண்டவன் 1653ல் வடமலையப்பப் பிள்ளையின் மூலம் வெளி வந்திருக்கிறான். இந்தக் காலகட்டத்தில் விக்ரஹம் இல்லாததால், கும்பஸ்தாபனம் செய்து "ஓம் சரவணபவ" என்ற யந்திரப் ப்ரதிஷ்டை செய்து யாக யக்ஞாதிகள் நடந்திருக்கலாம். அதுவே பின்னாளில் விழாவின் முக்கிய அங்கமாகியிருக்கும்.

ஸ்கந்த ஷஷ்டித் திருவிழா முருகன் சூரனை ஸம்ஹரித்த சம்பவத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிற விழா. இதுதான் இந்த ஆலய விழாக்களிலேயே அதி உன்னதமான திருவிழா. ஐப்பசியில் தீபாவளியை ஒட்டி வரும் அமாவாசைக்குப் பின் சுக்ல பக்ஷத்தின் முதல் ஆறு நாட்களும் இவ்விழா நடைபெறுகிறது.

தினசரி யக்ஞத்தில் பூர்ணாஹூதி நடைபெற்றதும், செந்தில் நாயகர், வள்ளி தெய்வயானை திருமேனிகளைச் சிறிய தங்கச் சப்பரத்தில் வைத்து அலங்கரித்து நண்பகல் 12 மணிக்கு முதல் சுற்று தொடங்கும். சண்முக விலாச மேடையை அடைந்தவுடன் அங்கு தீபாராதனை நடைபெறும்.

தங்கச் சப்பரத்தில் திருவீதி உலா வரும் போது முருகன் திருமுன்னர் அடியார்கள் திருப்புகழில் வீரவாள் வகுப்பும், வேல் வகுப்பும் பாடிச் செல்வர். ஒவ்வொரு நாள் இரவும் இந்த விக்ரஹங்களுக்குத் திருவாவடுதுறையாதீன ஷஷ்டி மண்டபத்தில் வைத்து அபிஷேக ஆராதனைகள் நடந்த பின்னால் தங்கத் தேரில் ஏறி வீதி வலம் வரச் செய்கின்றனர்.

ஆறாம் நாள்தான் ஷஷ்டித் திதியன்று சூரஸம்ஹாரத் திருவிழா நடைபெறுகிறது.

**சூரனை வதைக்க**

**காச்யப** முனிவருக்கும், மாயா என்னும் அரக்கிக்கும் புதல்வர்களாய்ப் பிறந்த **சூரன், சிங்கமுகன், தாரகன்** என்னும் அசுரர்கள் சிவபெருமானை நோக்கித் தவமிருந்து பெறற்கரிய வரங்களைப் பெற்று **வீரமஹேந்திரம் அஸுரபுரி, மாயாபுரி** என்னும் நகரங்களில் வாழ்ந்து தேவர்களுக்குச் சொல்லொணாத் துன்பங்களைத் தந்தனர். அதனால் தேவர்கள் எல்லோரும் சென்று சிவபெருமானிடம் முறையிட்டனர். அவரும் அவர்கள் துன்பத்தைத் தீர்க்க ஒரு குமாரனைத் தருவதாக வரம் அளிக்கிறார். அதன்படியே தன்னுடைய ஐந்து திருமுகங்களோடு ஆறாவது முகம் கொள்கிறார். ஆறு திருமுகங்களில் உள்ள ஆறு நெற்றிக் கண்களிலிருந்தும் ஆறுபொறிகள் கிளம்புகின்றன.

அந்தப் பொறிகளை வாயு ஏந்திச் சென்று அக்னியிடம் கொடுக்க அக்னியும் அந்தப் பொறிகளது வெம்மை தாங்காது இப்பூமியிலே விட்டு விடுகிறான். கங்கை அந்தப் பொறிகளைச் சரவணப்

பொய்கையில் கொண்டு சேர்க்கிறாள்.

அங்கு ஆறு பொறிகளும் ஆறு திருக்குழந்தைகளாக மாறுகின்றன. இந்த ஆறு குழந்தைகளையும் கார்த்திகைப் பெண்கள் அறுவர் பாலூட்டி வளர்க்கின்றனர். இந்தக் கார்திகேயனைப் பார்க்கச் சிவபெருமான் உமையம்மையோடு சரவணப் பொய்கைக்கு வருகிறார். அங்கு அம்மை குழந்தைகள் அறுவரையும் சேர்ந்து எடுத்து மார்போடு அணைக்கிறாள்.

ஆறு குழந்தைகளும் சேர்ந்து ஆறுமுகத்தோடு கூடிய ஒரே பிள்ளையாக மாறுகிறார்கள். அவனே ஸ்கந்தன் எனப் பெயர் பெறுகிறான். ஆறுமுகன் என்றே எல்லோராலும் அழைக்கப்படுகிறான். அவன் வளர்கிறபோதே சூரபத்மனது கொடுமைகள் அதிகம் ஆகின்றன.

உடனே தந்தையின் வாக்கைப் பரிபாலிக்க நவ வீரர்களை உடன் அழைத்துக் கொண்டு போருக்குப் புறப்படுகிறான். அன்னையும் பாலகனுக்குச் சக்திவேல் கொடுத்து அனுப்புகிறாள்.

முருகப் பெருமான் தனது தந்தையையும், தாயையும் 3 முறை வணங்கி, தேவர்களுடன் பூவுலகுக்கு எழுந்தருளினார்.

www.TheMagnar.com

பூவுலகில் தென்கிழக்கிலே வீரமஹேந்திரபுரிக்கு அருகில் கடல் அலைகள் முத்துக்களையும் ரத்தினங்களையும் கரை சேர்க்கும் **திருச்சீரலைவாய்** நகரைப் போருக்குத் தேர்வு செய்து அங்கு முகாம் செய்து கொண்டு வீரபாகுவைத் தூதனுப்புகிறான்.

### வீரபாகு

வீரபாகுத் தேவர் சூரன் சபையில் முருகன் தந்த பொன்மயமான ஆசனத்தில் அமர்ந்து சூரனிடம் தூது செய்தியைக் கூறுகிறார்.

"நீ சிவபெருமானிடம் வாங்கிய வரத்தின் படி 108 சதுர்யுகம் பூவுலகம் ஆண்டாய். அதுமட்டுமன்றி நீ தேவர்களைச் சிறையில் இட்டாய். நீ தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்து முருகன் திருவடியை வணங்கி வாழ்வாயாக. இல்லையேல் செந்தில் நகரில் படைவீடு அமைத்து இருக்கும் முருகப் பெருமான் உன்னையும் உன் சுற்றத்தாரையும் அழித்து வீரமஹேந்திர புரியையும் அழிப்பார் என்று கூறினார். வீரபாகு தேவரின் அறிவுரைகளை ஏற்காது போருக்கு ஆயத்தமாகிறான் சூரபதுமன்.

முருகன் சினந்து **தாரகனையும், க்ரௌஞ்ச மலையையும்** தூள் தூளாக்கி அழிக்கிறான். சூரன் தன் மகன் **பானுகோபனை** அனுப்புகிறான். அவனும் போரிட்டு மடிகிறான். இன்னொரு மகன் **இரணியன்** என்பான் முருகனோடு போரிட விரும்பாமல் மீனாய் மறைகிறான்.

அடுத்து சூரன், தம்பி **சிங்கமுகாசுரனை** ஏவுகிறான். போர்க்களத்தில் சிங்கமுகாசுரன் வீழ்ந்துவிட்டான் என்று கேட்டு வெகுண்டு எழுகிறான் சூரபத்மன். இறுதியில் போரில் ஆணவம் அழிந்தது. மாமரமாய் மாறி நின்ற சூரனை வேலாயுதம் இருகூறாக்கியது. சூரபத்மன் மயிலும் சேவலுமானான். சேவலைக் கொடியாகவும், மயிலை வாகனமாகவும் கொண்டான் முருகன்.

இந்த நிகழ்ச்சிதான் ஒவ்வொரு ஆண்டும் ஸ்கந்த ஷஷ்டி விழாவாகத் திருச்செந்தூரில் அரங்கேற்றப்படுகிறது. இந்தப் போர் ஆறுநாட்கள் நடைபெற்றதால் ஆறுநாள் திருவிழா.

முருகனின் விசுவரூப தரிசனம் கண்ட சூரபத்மன், தன் ஆணவம் அழிந்து

***கோலமாமஞ்ஞை தன்னில்***
***குலவிய குமரன் தன்னைப்***
***பாலன் என்றிருந்தேன் அந்நாள்***
***பரிசுஇவை உணர்ந்திலேன் யான்***
***மால் அயன் தனக்கும், ஏனை***
***வானவர் தமக்கும், யார்க்கும்***
***மூலகாரணமாய் நின்ற***
***மூர்த்தி இம்மூர்த்தி அன்றோ***

என்று துதிக்கிறான்.

சூரன் கண்ட வடிவே செந்தில் ஆண்டவனாக எழுந்தருளியிருக்கிறான்.

### விரதம்

சூரனோடு செந்திலாண்டவன் அமர் புரிந்த அந்த ஆறு நாட்களும் அமரர்கள் யாவரும் உணவு அருந்தாமல் விரதம் இருந்து முருகனைத் தியானித்தனராம். அதனாலேயே இப்போதும் செந்திலாண்டவன் சந்நிதியில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் விரதமிருந்து வழிபடுகின்றனர்.

விரதமிருப்பவர்கள் யாவரும் கோயில் எல்லையைத் தாண்டிச் செல்லுவதில்லை என உறுதி பூணுகின்றனர். கோயிலுக்கு வடக்கெல்லை **வள்ளியம்மன் குகை;** தெற்கெல்லை **நாழிக்கிணறு;** மேற்கெல்லை **துண்டி விநாயகர் கோயில்;** கிழக்கு எல்லை **கடல்.**

விரதமிருப்பதற்காகத் திருச்செந்தூர் வரும் பக்தர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. அனைவருக்கும் வசதியான அறைகள் கிடைக்காததால் இரண்டாம் ப்ராகாரத்தில் கட்டித் துணிகளால் மறைத்து அறைகளாக்கித் தங்குகின்றனர்.

ஐப்பசி மாதம் அமாவாசை மாலையில் விரதத்தைத் தொடங்குகின்றனர். ஆறு நாட்களும் உமிழ்நீர் கூட விழுங்காமல் விரதம் இருப்பவர்களும் உண்டு. இவ்வாறு செய்ய இயலாதவர்கள் நண்பகலில் குறுமிளகையும் ஆறு கை நீரையும் அருந்தலாம்.

> **“ஜீவர்கள் ஆணவ மலம், கன்ம மலம், மாயா மலம் இவற்றில் அழுந்தி, இறைவனை உணராது, உலகாயத வெற்றிக் களிப்பில இறுமாந்து கிடக்கிறார்கள்.**

நடைமுறையில் நோன்பு இருப்பவர்களைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

1. உமிழ் நீரும் விழுங்காது உண்ணாவிரதம் இருப்பவர்.
2. உண்ணா நோன்புடன் வாய் பேசா நோன்பும் இருப்பவர்.
3. பழச்சாறு மட்டும் பருகுபவர்.
4. பிற்பகலில் ஒரு மணிக்கு மட்டும் பச்சரிசிச்சோறு உண்பவர்.
5. திருச் சீரலைவாய்ப் பெருமானின் ப்ரஸாதம் வாங்கி உண்பவர்.

குழந்தைப் பேறு வேண்டி சஷ்டி விரதம் அனுசரிப்போர் ஏராளம். அதனாலேயே சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்ற இருபொருள் பழமொழி தோன்றிற்று.

இந்தப் பழமொழியின் ஒரு பொருள், சஷ்டியில் விரதம் இருந்தால், கருப்பையில் குழந்தை பிறப்பதற்காகக் கர்ப்பம் தரிக்கும் என்பதே.

திருச்செந்தூரில் விரதம் இருப்பவர்கள் சூர சம்ஹாரம் முடிந்தவுடன் கடலில் நீராடி பால் பழம் அருந்தி விரதத்தை நிறைவு செய்வார்கள். திருச்செந்தூர் செல்ல இயலாதவர்களும் தங்கள் இல்லங்களிலேயே இந்த ஆறு நாட்களிலும் அதிகாலையில் எழுந்து நீராடி, தோய்த்துக் காயவைத்த மடி வஸ்த்ரம் தரித்து கும்பத்தில் முருகனை ஆவாஹனம் செய்து சரவணபவ யந்திரமும் வைத்து பூஜை செய்து தேனும் தினைமாவும் சேர்த்துப் பிசைந்து அதனை முருகனுக்கு நிவேதனம் செய்து, திருப்புகழ் முற்றோதுதல் செய்து, கந்தபுராணம் பாராயணம் செய்து அவரவர் உடல் சௌகர்யப்படி உபவாசம் இருந்து, ஆறாம் நாளில் அருகிலுள்ள முருகன் ஆலயத்தில் சூரஸம்ஹாரக் காட்சியைத் தரிசித்து விரதத்தை முடிக்கலாம்.

ஷஷ்டி அன்று திருச்செந்தூரில் மாலை 6 மணிக்குக் கடற்கரையில் சூரசம்ஹாரத்திருவிழா நடைபெறும். ஜனத்திரள் கடலுக்கு நிகரானதாக ஆர்ப்பரித்து நிற்கும். சூரன் மூன்று உருவங்கள் எடுத்து முருகனை எதிர் கொள்கிறான். முதலில் யானை முகத்துடன் வருகிறான். யானைமுகன் வலமிடமாக சுவாமியைச் சுற்றி வருகிறான். தலையில் பட்டுக்கட்டிய பட்டர் வேலால் அச்சூரன் நெற்றியில் குத்தி வீழ்த்துகிறார்.

அதே உடலில் சிங்கமுகாசுரன் தலை பொருத்தப் படுகிறது. முற்றுகைப் போராட்டம் முன்போல நடைபெறுகிறது. பட்டர் சிங்கமுகன் நெற்றியிலும் வேலால் குத்தி வீழ்த்துகிறார்.

அடுத்து சூரபத்மன் தலை அதே உடலில் பொருத்தப்படுகிறது. முன்போலவே போர், அதன்பின் வீழ்ச்சி. நான்காவதாக மாமரமும் சேவலும் அவ்வுடலில் பொருத்தப்படுகின்றன. மாமரம் வெட்டுண்டதும் சேவல் பறக்கிறது.

முதலில் தோன்றும் யானைமுக சூரனை முருகன் வெல்வது மாயையை அழிப்பதாகும். இரண்டாவதாக உருப்பெரும் சிங்கமுகாசுரனை முருகன் வெல்வது கன்மத்தை அழிப்பதாகும். மூன்றாவதாக சுய ரூபமான சூரபத்மனை வெல்வது ஆணவமாகிய நான், எனது என்று அஹங்காரத்தை அழிப்பதாகும். அஹங்காரம்



அழிய விரதம் இருந்து, கந்தனை வழிபடுவதே நலமாகும். ஸம்ஹாரத்தோடு திருவிழா முடியக் கூடாது என்பதால், முருகப் பெருமானின் திருக்கல்யாண வைபவத்தோடு விழா நிறைவு பெறுகிறது.

**கல்யாணம்**

சூரனை வென்ற **முருகனை** மகிழ்விக்க கௌரவிக்க **தேவேந்திரன்** தன் மகள் **தெய்வானையை** மணமுடித்துத் தந்த ஐதீகமே திருச்செந்தூரிலும் ஆண்டுதோறும் உத்ஸவமாக நடத்தப்படுகிறது.

ஷஷ்டிக்கு மறுநாள் தெய்வானையம்மன் காலை 6 மணிக்குப் புறப்பட்டு பூச்சப்பரத்தில் பவனி வந்து ஊருக்கு மேற்கே தெப்பக்குளத்தருகிலுள்ள நட்டாத்திப் பண்ணையார் மண்டபத்தை வந்தடைகிறாள். மாலை வரை அம்மன் இங்கு வீற்றிருந்து அருள் பாலிப்பதை அம்மன் முருகனை மணக்கத் தவம் இருப்பதாகக் கூறுவர்.

மாலையில் 3 மணிக்கு **குமரவிடங்கப் பெருமான்** பூச்சப்பரத்தில் பவனி வந்து இந்த மண்டபத்தை அடைகிறார்.

தெற்கு ரத வீதியின் மேற்குக்கோடியில் மாலை மாற்றும் நிகழ்ச்சி நடைபெறும். சிவாச்சாரியார் மூலம் தோள் மாலையை அம்மனுக்குக் கொடுத்தனுப்புவார் குமரவிடங்கர். திரும்ப அம்மன் பட்டர் சுவாமியிடம் மாலையைத் தருவார். இங்ஙனம் மூன்று முறை மாலை மாற்றும் நிகழ்ச்சி நடைபெறும்.

பின்னர் தாம்பூலம் மாற்றிக் கொள்ளும் காட்சி. பின்னர் மேலக்கோபுர வாயில் முன்புள்ள திருமண மண்டபத்தில் தெய்வானை திருமணம் இரவில் நடைபெறும். திருமண நிகழ்ச்சிகள் ஐந்து நாட்கள் தொடரும். எட்டாம் நாள் அன்று ஊர்வலம். 9,10,11 நாட்களில் ஊஞ்சல் காட்சி 12ம் நாள் திருவிழாவன்று மாலையில் மஞ்சள் நீராட்டு விழா நடைபெறும்.

ஜீவர்கள் **ஆணவ மலம், கன்ம மலம், மாயா மலம்** இவற்றில் அழுந்தி, இறைவனை உணராது, உலகாயத வெற்றிக் களிப்பில் இறுமாந்து கிடக்கிறார்கள். இறைவன் ஜீவர்களிடத்துக் கொண்ட கருணையால், இந்த மூன்று மலங்களையும் அழித்து தன்னிடத்தே இணைத்துக் கொள்கிறான். இதனை உணர்த்தவே ஆண்டுதோறும் ஸ்கந்த ஷஷ்டி விழா அரங்கேற்றப்படுகிறது.

***முன்னம் நின் அன்னை அமுதூட்டி***
***மையிட்டு முத்தமிட்டுக்***
***கன்னமும் கிள்ளிய நாளல்லவே,***
***என்னைக் காத்தளிக்க***
***அன்னமும் மஞ்ஞையும் போல் இரு***
***பெண் கொண்ட ஆண் பிள்ளை***
***இன்னமும் சின்னவன் தானோ***
***செந்தூரில் இருப்பவனே***

என்று அன்று படிக்காசுப் புலவர் கேட்டது போல "இன்னுமா நீ சின்னப்பிள்ளை? என் குறைகளை எல்லாம் நான் முறையிடாமலேயே அறிந்து கொள்ளும் வயது உனக்கு ஆகவில்லையா? இல்லை ஆற்றல்தான் இல்லையா? ஏன் நீ என் துயர் துடைக்கக் கூடாது? என்று சினந்துதான் கேட்போமே அந்தச் செந்தூரவேலவனிடம். ●



"ரம்யா, நான் கிளம்பறேன். அப்பாவுக்கு என்ன வேணுமோ அதைப் பார்த்து செய்" என்றபடி காஞ்சனா கிளம்பினாள்.

"என்ன செய்யணும்? நீ எப்போது திரும்பி வருவே?" சற்றே சிடுசிடுப்பு கேட்டாள் ரம்யா.

லேசாக புன்னகைத்தபடி "அப்பாவையே கேளு. எது கேட்கிறாரோ அதை தந்துவிடு" என்று செருப்பை மாட்டினாள்.

ரம்யா பெருமூச்சுடன் அம்மா செல்வதை பால்கனியிலிருந்து கவனித்தாள்.

பாவம்! அம்மாவிற்கும் வயசாகி விட்டது. தளர்ந்த நடையில் தெரிகிறது, இருந்தாலும் மனதளவில் அம்மா ரொம்ப மாறிவிட்டாள்!

போட்டதை போட்டபடி அடிக்கடி வெளியே செல்வதும். அப்பாவை மிரட்டுவதும், விரட்டுவதுமாக, இதென்ன நான்கு வருடங்கள் முன்பு பார்த்த அம்மா இல்லை தான்!

அண்ணன் ரகு கூறியது சரிதான். அமெரிக்காவிலிருந்து மூன்று ஆண்டுகள் கழித்து வந்த ரகு, இந்தியா வந்த ஒரு வாரத்தில் லண்டனில் இருக்கும் தங்கை ரம்யாவிற்கு வாட்ஸ்-அப் இல் பேசினான்.

"இங்கே நிலைமையே சரியாகயில்லை. அம்மா ரொம்ப மாறிட்டா. காலையில் எழுந்ததிலிருந்து அப்பாவை விரட்டி, விரட்டி குளிக்க வைக்கிறாள். காயத்ரி பண்ணித்தான் ஆகணும்னு அப்பாவை அடிக்காத குறையாக கத்தறாள். அப்பா பாவம். சொல்லறதுக்கெல்லாம் தலையாட்டிக் கொண்டேயிருக்கார். "என்னை கேட்காம பீரோவை தொடக்கூடாதுன்னு" இன்றைக்கு ஒரே கத்தல்! ஏதோ க்ருப்புல இணைஞ்சிருக்காளாம். அங்கே மீட்டிங்க், இங்கே மீட்டிங்க்னு சுத்தறா! நாங்க வெளியில போகணும்னா 'அப்பாவுக்கு எல்லாம் கொடுத்துட்டு வீட்டை பூட்டிட்டு போ' என்கிறாள். என்ன கொடுமை! நீயும் வந்து பாரு வீ ஹேவ் டு டூ சம்திங்!" என்றான்.

அப்பொழுது கூட ரம்யா இது ஏதோ மாமியார் - மருமகள் பிரச்சனை. தானாகவே சரியாகி விடும் என்று தான் எண்ணினாள்!

மனதெல்லாம் குழப்பமாக இருந்தாலும் எப்பொழுதும் போல லண்டனிலிருந்து தினமும் இரவு தொலைபேசியில் அழைத்து பேசினாள். ஆனால் அம்மா சரியாக




# அம்மா மாறிவிட்டாள்

பேசுவதில்லை. "வெச்சுடட்டுமா, அப்பா கூப்பிடறார். யாரே கதவை தட்டறா" என்று லைனை 'கட்' செய்தாள்.

அப்பாவை அழைத்து பேசினால் "ஆமாம், இல்லை ஓ அப்படியா! என்பதும் பலத்த குரலில் அர்த்தமில்லாமல் சிரிப்பதுமாக இருப்பதை கேட்டு ஏதோ குழப்பம் உள்ளது என்று அவள் உள்மனம் கூறத்துவங்கியது.

"போயிட்டு வாயேன்! இட் ஈஸ் நியர்லி த்ரீ இயர்ஸ் நௌ!" என்று மூன்று வருடங்களாக அவள் பெற்றோரை பார்க்கவில்லையே என்று கணவன் சுட்டிக்காட்டியதும் உருகிவிட்டாள் ரம்யா. எவ்வளவு கொடுத்து வைத்தவள்! அம்மாவிடம் இதை கூறி மகிழ வேண்டும். இப்படித்தான் அவள் மனம் கூறியது.

ஆனால் இங்கு வந்துப் பார்த்தால் அம்மாவும் அப்பாவும் திடீரென்று மிகவும் வயதானவர்கள் போலத் தோன்றினார்கள். "ராம்ஜியும் ரக்ஷிதாவும் எப்படியிருக்கா" என்று ஒரு கேள்வியுடன் அம்மா முடித்துக்கொண்டது சற்றே உறுத்தியது.

தன் கணவனின் அன்பையும், புரிதலையும் பற்றி கூறி ரம்யா பெருமைப்படும் பொழுது ஒரு சிறு புன்னகையுடன் பார்த்தாள் காஞ்சனா எதுவும் பேசவில்லை.

"நீ சொன்னது சரிதான் ரகு. அம்மா ஏதோ ரொம்ப மாறிவிட்டாள் என்றுதான் தெரியறது. அதே சமயம் அப்பாவுக்கு ஏதோ பிரச்சனையிருக்கு. தினமும் காலை, மாலை இரண்டு வேளையும் பத்து மாத்திரைகளை அம்மா கொடுக்கறா. என்னன்னு கேட்டா "அதான் மூணு வருஷம் முன்னாடி எல்லா விவரங்களையும் சொன்னேனே"ன்னு மூஞ்சியில அடிச்சாப் போல பதில் சொல்லிட்டா. "மறந்துடுத்தும்மா, மறுபடியும் சொல்லு என்று கேட்டால் இதோ, அதோ என்று இழுத்தடிக்கிறாள்" ரம்யா நீளமாக பேசினாள்.

**கா**லையில் எழுந்ததிலிருந்து அப்பாவை எழுப்புவதும், அவர் ஷேவ் செய்து குளித்து முடித்து ஸ்லோகங்கள் சொல்லி, காம்பவுண்டுக்குள் இருக்கும் கோயிலுக்கு கூடவே சென்று வந்த பிறகு அம்மா ஓய்ந்து விடுவதை கவனித்தாள். நிமிடத்திற்கு ஒருமுறை அப்பாவை ஏதோ போலீஸ் கஸ்டடியில் இருப்பவர் போல அம்மா கண்காணித்துக் கொண்டேயிருப்பது ரம்யாவிற்கு எரிச்சலூட்டியது.

அப்பாவும் முன்பு போல இல்லை தான்! எப்படி கம்பீரமான இருந்தவர்! இன்று வேஷ்டியை இழுத்துக்கூட கட்டுவதில்லை. யாருடனும் பேசுவதில்லை. டென்னிஸ் சாம்பியனமாக வலம் வந்த அப்பாவைப் பார்க்க பரிதாபமாகயிருந்தது. இன்று அம்மா விரட்டினால் ஓடுகிறார். எல்லாமே அம்மாவின் கட்டளைப் படி தான் நடக்கிறது.

**"எப்படிம்மா உன்னால இப்படி இருக்க முடியறது? அப்பா சீரியஸாக இருக்கிறார். உட்கார்ந்து இட்லி சாப்பிடறே உங்க இரண்டு பேருக்கும் என்ன பிரச்சனை?"**

இரண்டு குழந்தைகள் பிரசவத்திற்கும் வந்த பொழுது அம்மாவிடம் பச்சிளம் குழந்தையை விட்டு விட்டு, அப்பாவுடன் லண்டன் நகரை சுற்றியது நினைவிலாடியது.

அன்று அம்மா சென்றவுடன், அப்பாவிடம் பேச வேண்டும் என்று தோன்ற, "அப்பா, காபி கலக்கட்டுமா?" என்று கேட்டாள் ரம்யா. "குடிச்சுட்டேனே, என்று 'பளிச்' என்று பதில் வந்தது. எப்பொழுது குடித்தார்? ஒரு வேளை அம்மா காபி அளித்துவிட்டு சென்றாளோ?

"வாங்கோப்பா டி.வி. பார்க்கலாம்" என்ற ரம்யாவைப் பார்த்து சரி, என்றார். ஆனால் டி.வி.க்கு முன்பு உட்கார்ந்து கொண்டு பேப்பர் படித்தார். சிறிது நேரத்தில் "நான் படுத்துக்கறேன்" என்றார். "ஏதாவது ஸ்நாக்ஸ் சாப்பிடறேளாப்பா?" என்றாள். "சாப்பிட்டாச்சே" என்று முன்பு போலவே வேகமான, 'ப்ளிச்' என்ற பதில்!

"ஏதாவது பேசலாமேப்பா" என்றாள் ரம்யா. "சரி" என்று கூறியபடி அவளைப் பார்த்தார். அப்பாவிற்கு சரித்திரம் ரொம்ப பிடிக்கும் என்பதால் லண்டன் நகர சரித்திர புகழ்பெற்ற இடங்களைப் பற்றி பேசினாள். ஆனால் அப்பா எதிலும் சரியாக கவனம்

**காந்தலக்ஷ்மி சந்திரமௌலி**

செலுத்தவில்லை என்று புரிந்தது.

கணவனிடம் பேசுகையில் "வயதானால் இருப்பது தானே, 'செனிலிட்டி' என்று இங்கேயெல்லாம் சொல்றாங்களே அதுதான்" என்று கணவன் கூற சமாதானமடைந்து குழந்தைகளுடன் பேசத் துவங்கினாள் ரம்யா.

ஐந்து நிமிடத்தில் 'தடார்' என்று சத்தமும், 'ஐயோ' என்று அப்பாவின் குரலும், அம்மா உள்ளே வருவதும் ஒன்றாக நடந்தது.

**வா**ட்ச்மேன் உதவியுடன் அருகில் உள்ள ஆஸ்பத்திரியில் அப்பா அட்மிட் ஆகி விட்டார்.

"அவர் சாப்பிட்டு எவ்வளவு நேரமாகிறது?" என்று டாக்டர் கேட்க, "அவர் எதுவும் சாப்பிட்டிருக்க மாட்டார்" என்றாள் காஞ்சனா.

"இல்லைம்மா, நான் கேட்டேன். எல்லாம் சாப்பிட்டேன் என்றாரே. நீதான் கொடுத்துட்டு போனியே" ரம்யா சற்றே குழப்பத்துடன் கேட்டாள்.

"இல்லை, நான் எதுவுமே கொடுக்கவில்லை. கேட்டால் "ரம்யா கையால காபி குடிக்கணும்போல இருக்கு என்றார்" என்று காஞ்சனா எவ்வித உணர்ச்சியுமின்றி கூறுவதைக் கேட்டு ரம்யாவிற்கு கோபம் வந்தது.

"காஞ்சனாம்மா, நீங்க பயந்தது நடந்து போச்சு. எதுவும் சாப்பிடாததுனால தலையை சுற்றி கீழே விழுந்து விட்டார். மண்டையின் பின்புறம் பெரிய அடி பார்க்கலாம்" என்றார் டாக்டர்.

ரம்யாவிற்கு அழுகை வந்தது அம்மா சிறிதும் கலங்கவில்லை. "வா கேண்டீன்ல சாப்பிடலாம்" என்றாள்.

"எப்படிம்மா உன்னால இப்படி இருக்க முடியறது? அப்பா சீரியஸாக இருக்கிறார். உட்கார்ந்து இட்லி சாப்பிடறே உங்க இரண்டு பேருக்கும் என்ன பிரச்சனை? நீ ரொம்ப மாறிட்டே" என்று படபடத்த ரம்யாவிற்கு 'சட்' என்று வெளிநாட்டில் வயது தாண்டியும் புது ஆண் சிநேகிதங்களும், விவாகரத்தும் சகஜம் தானே! அப்படி ஏதாவது....! வயிறு கலங்கியது.

"ஓ, என்னை கவனிச்சு பார்க்க உனக்கு நேரங்கிடைச்சுதா? பரவாயில்லையே நீ கூட மாறிட்டியே" என்ற அம்மாவை திக்பிரமையுடன் பார்த்தாள் ரம்யா.

"பேசாதே" என்று கையமர்த்திய காஞ்சனா காபியை ருசித்து குடித்தாள்.

"நான் பேசலாமா?" என்றாள்.

தலையாட்டிய ரம்யாவிடம் "நான் பேசறச்சே குறுக்கே பேசாதே. உன் வாழ்க்கையில் முதல் தடவை அம்மா பேசி கேட்கப் போகிறே" என்றாள் காஞ்சனா.

"உங்கள் இருவரையும் வளர்த்து, படிக்க வைத்து நீங்க வெளிநாடு போகணும்னு தீர்மானித்த பொழுது உங்கள் விருப்பத்திற்கு இசைந்தவர்கள் நாங்கள். அங்கேயே வாழும் பெண்ணை ரகுவுக்காக மேட்ரிமோனியலில் தேடி, அதுபோலவே உனக்கும் லண்டனில் தேடி திருமணம் செய்து வைத்தவர்கள். அப்பொழுது நானும், அப்பாவும் எங்கள் அருகில் நீங்கள் இருக்கமாட்டீர்கள் என்றுணர்ந்ததும் ஒரு கணம் கூட தயங்கவில்லை. அடுத்தடுத்து பிரசவங்கள். அதற்காக நானும், அப்பாவும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து 6 மாதங்கள் ஓடுவதே அறியாமல், உங்கள் வீடுகளின் நான்கு சுவர்களுக்குள் ஓயாது உழைத்தோம்".

"என் ஃபிரண்ட்ஸ் 10 பேருக்கு வத்தல் குழம்பு, உருளை ரோஸ்ட், பருப்பு துவையல் பண்ணிடும்மா" என்று ஆபிஸிலிருந்து நீயோ, உன் கணவரோ, ரகுவோ, அவன் மனைவி சுவாதியோ சொல்கிற பொழுது கைக்குழந்தையும் ஓடி விளையாடும் குழந்தையையும் ஒன்றாக சமாளித்து அன்போடும், பாசத்தோடும் 'என் மெனோபாஸ்' சிரமத்தை மீறி செய்தேன். அப்பொழுது உங்கள் புரிதல் எங்கு போயிற்று.

இனி எங்கள் உதவித் தேவையில்லை எனும் பொழுது நீங்கள் குடும்பத்தோடு 2 மாத 'டேரா' போடுவதும், ஊர் சுற்றுவதுமாக இருக்கும் பொழுது கடமைக்காக மட்டுமே சமைத்தேன்.

ஒரு நாளாவது "இதுவரை நீங்கள் இருவருவம் உழைத்தீர்கள். இனி உங்களுக்கு பொறுப்பு எதுவுமில்லை. என்னோடு வந்து ஒரு மாசம் தங்கி 'ரெஸ்ட்' எடுத்துக்கோங்கோன்னு உனக்கு சொல்லத் தோன்றவில்லை.

சரி அதைவிடு, நான் அப்பாவை விட்டு வரும் பொழுதெல்லாம் திணறிவிட்டார் பாவம். அம்மாவின் அரவணைப்பில் பிறந்து,

www.TheMagnet.com

வளர்ந்து என் அரவணைப்பில் வாழ்ந்தவர். எந்த பொறுப்பும் அவருக்கு நாங்கள் கொடுத்ததில்லை. குழம்பிப் போய் மனமும், மூளையும் அடிபட்டு விட்டது.

"உங்களுக்கான உதவிகளை முடித்துவிட்டுப் பார்க்கும் பொழுது அப்பாவிற்கு 'டிமென்ஷியா' என்றனர். எதுவும் ஞாபகத்திலில்லாமல் நழுவிப் போகத் துவங்கியது. இது சரி செய்ய முடியாத வியாதி என்று தெரிந்த பொழுது அதிர்ந்து போனேன். ஆனால் இவர்களை எப்படி பார்த்துக் கொள்வது என்று கற்றுத்தரும் இயக்கத்திற்கு டாக்டர் அனுப்பினார். அந்த மீட்டிங்கிற்கு தான் அடிக்கடி போகிறேன். நீ நினைப்பது போல நான் தப்பான வழியில் போகவில்லை" என்று சிரித்தாள் காஞ்சனா.

"அம்மா... நான்... உன்னை..." ரம்யா திணறினாள்.

"உன்னைப் பெற்றவள். உன் ஒவ்வொரு அசைவையும் உணர்வேன். உன்னிடம் நான் அப்பாவைப் பற்றி பேச வரும் பொழுது, வெளிநாட்டுல வயசானவங்க எப்படியிருக்கா தெரியுமா? ஏம்மா வயசாச்சன்னு சொல்றேன், அதெல்லாம் ஒன்றும் வயசாகவில்லை" என்று அடித்து பேசினே. நான் உன்னிடம் பகிர்ந்து கொள்வதை நிறுத்தி விட்டேன்.

60 வயது முடிந்த உடனேயே 5% பேங்கில் கிடைக்கும் அதிக வட்டி வேண்டும். இரயில் பயணச்சீட்டில் கிடைக்கும் சலுகை வேண்டும். வருமான வரியில் கிடைக்கும் சலுகை வேண்டும். அனால் வயதான மாதிரி உணரக்கூடாது. எப்படி சாத்தியம்?

இப்பொழுது நடக்கும் விஷயத்திற்கு வருவோம். அப்பாவுக்கு மூளைக்கு போகும் இரத்தத்தில் அடைப்பு இருக்கிறது. ஞாபகமறதியும், கீழே விழுவதுமாகத் தான் வாழ்க்கை ஓடுகிறது. நான் விரட்டவில்லையென்றால் அவர் ஒரு பரபிரம்மமாகத் தான் உட்கார்ந்திப்பார். எங்கள் இருவருக்கும் எந்தவித பிரச்சனையுமில்லை. அன்பாக பேசி ஒவ்வொரு பணியையும் அப்பாவை செய்ய வைக்க நான் நர்ஸு இல்லை. ஆள் போட ஏற்படும் செலவு மிக அதிகமாக இருக்கு. நான் தான் பொறுப்பேற்றிருக்கிறேன். எனக்கு தெரிஞ்ச வகையில் செய்கிறேன்.

இனி நான் சொல்வது உனக்கு அதிர்ச்சியை அளிக்கக்கூடும். என்னை பிடிக்காமலும் போகலாம். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. இனி அப்பாவிற்கு இந்த உலகில் வேலையில்லை. இறைவன் அழைப்பிற்காக காத்து இருக்கிறார். உனக்கும் எனக்கும் தெரியாமல் அவர் ஒரு உள்ளார்ந்த ஆன்மீக பயணம் மேற்கொண்டிருக்கிறார். இன்று சதா ஒரு தியானத்தில் இருக்கிறார் என்று தான் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. எனக்கு ஒரே ஒரு பிரார்த்தினை தான். நான் உயிருடன் இருந்து என் கணவரை நல்லபடியாக இந்த உலகை விட்டு அனுப்பிட வேண்டும். அவ்வளவு தான்!" என்று கூறிய காஞ்சனா "இனி நீ பேசு" என்றாள்.

> **உங்கள் இரண்டு பேர் மீதும் எந்த கோபமுமில்லை, வருத்தமுமில்லை. மிக நல்ல குழந்தைகளாக உருவாகியிருப்பது. நீங்கள் சுதந்திரமான முடிவுகளை எடுப்பதும் எனக்கு ரொம்ப பெருமை.**

தொண்டையடைக்க, கண்கள் பனிக்க இந்த அம்மாவையும், அப்பாவையும் ஏன் புரிந்து கொள்ளாமல் இருந்துவிட்டோம் என்று வலியும், குற்ற உணர்ச்சியும் ஒரு சேர தாக்க பேச இயலாமல் தவித்தாள் ரம்யா.

"இன்னொரு விஷயம் ரம்யா. அப்பா திடீரென்று போய்விட்டால் நான் இந்த வீட்டை விற்று, நல்ல மூத்தோர் இல்லத்திற்கு செல்ல ஏற்பாடுகள் செய்துவிட்டேன். எனக்கு உங்கள் இரண்டு பேர் மீதும் எந்த கோபமுமில்லை, வருத்தமுமில்லை. மிக நல்ல குழந்தைகளாக உருவாகியிருப்பது. நீங்கள் சுதந்திரமான முடிவுகளை எடுப்பதும் எனக்கு ரொம்ப பெருமை. அதே மாதிரி நானும் என்னுடைய சுதந்திரமான முடிவுகளை எடுக்க தடுக்காதீர்கள்" என்ற காஞ்சனாவிற்கு டாக்டரின் அழைப்பு வர சென்றாள்.

தளர்ந்த நடையிலும் கம்பீரமாக, உயர்ந்து நிற்கும் அம்மாவைக் காணக் காண அந்த மனவலியிலும் பெருமை தலை தூக்கியதை உணர்ந்தாள் ரம்யா. ●

www.tamilvagnai.com




www.TheMagnat.com

## அன்றும், இன்றும், என்றும்

# பெண்!

ஒரு வீட்டில் பெண்குழந்தை இருந்தாலே அழகுதான். வீடே மங்களகரமாய் இருக்கும். அதையும்தாண்டி, வீட்டில் உள்ள ஆண் குழந்தைகளை சரியாக வளர்ப்பதற்கும், வளர்வதற்கும் பெண் குழந்தைகள் காரணமாய் இருப்பதுதான் பேருண்மை.

என் நண்பர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அவர்கள் மகனுக்கு இருபது இருபத்தோரு வயதிருக்கும். ஐடி நிறுவனம் ஒன்றில் வேலை. எங்கோ வெளியில் கிளம்பிக்கொண்டிருந்தவனிடம் 'எங்கே, வீக் எண்ட் புரோகிராமா?' என்று கேட்டேன். அவன் சிரித்துக்கொண்டே வெளியே சென்றுவிட, நெருங்கிய நண்பர் என்பதால் அவன் பெற்றொரிடம் 'எங்கே செல்கிறான்?' என்று சாதாரணமாகக் கேட்டேன். அதற்கு அவர்கள் 'அவன் எங்கே போறான், என்ன செய்கிறான் என்று எங்களுக்குத் தெரியாது' என்று பெருமையாகச் சொன்னார்கள்.

அதுவே அவர்கள் வீட்டில் ஒரு பெண் குழந்தையும் இருந்திருந்தால் அவள் 'அவனை மட்டும் எதுவும் கேட்காமல் வெளியில் அனுப்புகிறீர்கள், என்னை மட்டும் ஏன் கேட்கிறீர்கள்?' என்று கேள்விக்கணைகளால் துளைத்திருப்பாள் தானே? அதற்காகவாவது அவர்கள் தங்கள் மகனை எங்கே செல்கிறாய், என்ன புரோகிராம், எப்போது திரும்பி வருவாய் என்று பொறுப்பாக கேட்டிருப்பார்கள்.

அப்படி இப்படி என சில கெட்ட பழக்க வழக்கங்களையும்கொண்ட ஒரு தந்தை, திருந்த ஆரம்பிக்கிறான் என்றால் அவர் மகள் வளர்ந்து வருகிறாள் என்று பொருள். மனிதாபிமானமுள்ள ஒரு தந்தை மாறுவது நிச்சயம்.

இப்படி நேரடியாகவும், மறைமுகமாகவும் ஒரு பெண் குழந்தை நல்ல பெற்றோரை உருவாக்குவதுடன் வீட்டில் ஓர் ஒழுக்கத்தை கடைபிடிக்க அவளே காரணமாகிறாள்.

**இயலாமையின் வெளிப்பாடே அதிகாரம்!**

தூரத்து உறவினர் ஒருவர் இறந்துவிட்டார். துக்கம் விசாரிக்க சென்றிருந்தோம். அவர் மனைவி ஹாலில் ஒரு சேரில் உட்கார்ந்திருந்தார். நாங்கள் சென்றதும் அவரது மகன் மற்றும் மகள் குடும்பத்தார் எங்களுடன் பேசுவதற்காக கூடினர். சிறிது நேர மவுனத்துக்குப் பிறகு, அவர் மகள் அப்பாவைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார்.

'அப்பாவுக்கு வயது 81 ஆகிறது. டாமினேட்டிங் பர்சனாலிட்டி. உட்கார்ந்த இடத்தில் இருந்து

வேலை வாங்கிப் பழகியவர். இரண்டு மாதம் முன்பு அம்மாவுக்கு ஒரு சின்ன ஆப்பரேஷன். 10 நாட்கள் படுக்கையில் இருந்தார். அப்போதுதான் அப்பா டவுன் ஆக ஆரம்பித்தார். தன்னை இனி யார் கவனித்துக்கொள்வார்கள் என்ற மன உளைச்சலில் அம்மா ரெஸ்ட்டில் இருக்கும்போதே அவருக்கு உடம்புக்கு முடியாமல் போய் கொஞ்சம் கொஞ்சமாக படுத்த படுக்கையாகி விட்டார்ஞ்'

டாமினேடட் பர்சனாலிடி என்றால் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு, புரிந்துகொண்டு அனைத்தையும் கடந்து அல்லவா சென்றிருக்க வேண்டும்? நேர் எதிராக மனைவியின் சின்ன ஆப்பரேஷனுக்கே ஆடிப் போய் ஒடிந்துவிட்டாரே மனிதன்?

'கடைசி 10 நாட்கள் யாரையுமே அடையாளம் தெரியாத அளவுக்கு மறதிக்கு ஆளாகிவிட்டார். எங்களையும், அம்மாவையும்கூட அடையாளம் தெரியவில்லை. 'யார் நீ' என்று கேட்கும் நிலைக்கு வந்துவிட்டார். ஆனால் அம்மாவின் குரலை மட்டும் நன்கு புரிந்துகொண்டார். அம்மா பேசினால் 'யாரு மங்களம் தானே?' என்று கேட்டார்' என்று அவர் மகன் சொல்லிக்கொண்டே போனார்.

அப்படியானால் அவர் தன் எல்லா தேவைகளுக்கும் தன் மனைவியின் கைகளையே எதிர்நோக்கி வாழ்ந்திருக்கிறார். தண்ணீர் குடிக்க, காபி சாப்பிட, குளிக்க வெந்நீர் எடுத்து தயார் செய்ய, அலுவலகத்துக்கு ஆடைகளை இஸ்திரி போட்டு வைக்க இப்படி தன் சின்ன சின்னத் தேவைக்கும் மனைவியை அழைத்து, அவரும் 'இதோ வரேன்', 'இங்கே இருக்கு', 'வெந்நீர் ரெடியா இருக்கு' இப்படி பதில் சொல்லிச் சொல்லி குரல் மட்டும் மனதுக்குள் நன்கு பதிவாகிவிட்டது.இதைச் சொன்னது இறந்துபோனவரின் மனைவி.

ஆண்களின் இந்த அதிகார குணம் ஆளுமையின் வெளிப்பாடு அல்ல. அவர்களின் பலவீனத்தின் வெளிப்பாடாகும்.

**இதுபோன்ற தனித்துவ சுபாவம் உள்ளவர்கள் எந்த சூழலையும் வாழ்க்கையில் கடந்து வந்துவிடுவார்கள்...**

**உண்மையில் ஆண்கள்தான் வீக்கர் செக்ஸ். அதை ஒத்துக்கொள்ள முடியாமல் பெண்களை 'வீக்கர் செக்ஸ்' என்று முத்திரை குத்தி அடக்கி ஆண்டு கொண்டிருந்தார்கள்.**

இப்போதுகூட நாம் பார்க்கலாம், இளம் வயதில் மனைவியை இழந்த ஆண்கள் வேறு திருமணத்துக்குத் தயாராகிவிடுகிறார்கள். முதிர்ந்த வயதில் மனைவியை இழந்த ஆண்கள் நீண்ட நாட்கள் உயிருடன் இருப்பதில்லை. ஆனால் கணவனை இழந்த பெண்கள் நீண்ட நாட்கள் தனித்து வாழ்கிறார்கள். அது இளம் வயதில் ஏற்பட்ட இழப்பானாலும் சரி, முதிர்ந்த வயதில் உண்டான இழப்பானாலும் சரி.

தன்னுடைய வேலைகளைச் செய்ய அடுத்தவர்களை எதிர்பார்க்காத ஆண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஏன் மனைவியின் பெயரைச் சொல்லிக்கூட அழைக்காத ஆண்களும் இருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்குள் அந்நியோன்யம் இல்லை என்று அர்த்தமில்லை.

ஒருசிலர் தன் மனைவியை பெயர்சொல்லி அழைத்து 'இதை எடுத்து வா', 'அதை கொண்டு வா' என்றெல்லாம் பேசுவது கிடையாது. இதுபோன்ற குணாதிசயம் கொண்ட என் தந்தையிடம் 'அப்படியானால் ஏதேனும் தேவை என்றால் என்னதான் சொல்லி அழைப்பீர்கள்?' என கேட்டதற்கு, எல்லா வேலைகளையுமே நாங்கள் இருவருமே செய்வதால் அப்படி ஒரு சூழல் இதுவரை வந்ததே இல்லை என்றார்.

இதுபோன்ற தனித்துவ சுபாவம் உள்ளவர்கள் எந்த சூழலையும்

**காம்ப்கேர் புவனேஸ்வரி**

வாழ்க்கையில் கடந்து வந்துவிடுவார்கள்.

விவாகரத்து என்பதெல்லாம் எல்லோருக்கும் அத்தனை சுலபம் அல்ல என்றிருந்த காலத்தில், கணவனை இழந்த பெண்கள் உண்மையில் மனதளவில் சந்தோஷமாக இருந்திருக்கிறார்கள் என்கிறது உளவியல். திருமணம் செய்துகொண்டுவிட்டதால் கணவன் குடிகாரனோ, கொள்ளைக்காரனோ, கொலைகாரனோ, ஒத்துப் போகிறதோ இல்லையோ சேர்ந்தே வாழ வேண்டிய கட்டாய பந்தத்தில் இருந்து வெளியேறிய நிம்மதி அவர்களுக்குள் ஏற்படுகிறதாம். அதனால்தான் கணவனை இழந்த பெண்கள் நீண்டநாட்கள் மனநிம்மதியுடன் உயிர்வாழ்வதாகச் சொல்கிறார்கள்.

காரணம் குழந்தைத்தனம் குறையும்முன்பே பூப்பெய்தி விடுவதால் ஏற்படும் பாதுகாப்பு உணர்வு, மறு ஜனனபிரசவ அனுபம், ஓர் இடத்தில் இருந்து பெயர்த்து எடுத்து வேறொரு இடத்தில் நடப்படும் திருமண பந்தம், எந்த நேரத்திலும் தன்னை மறந்துகூட அயர்ச்சியில் தூங்க முடியாத அளவுக்கு பாதுகாப்பற்ற சமுதாயச் சூழல் இப்படி ஒரு பெண் ஜனித்த நொடிமுதல் அவளைக் கட்டிப்போட இயற்கை என்ற பெயரிலும், பந்தம் என்ற போர்வையிலும் ஆயிரம் கயிறுகள். இதனால் பொதுவாகவே பெண்கள் தனித்துவமானவர்களாகவும், தன்னம்பிக்கைமிக்கவர்களாகவும், தைரியமானவர்களாகவும் திகழ்கிறார்கள். அதனால்தான் அவர்களால் வாழ்க்கையில் எல்லா சோதனைகளையும் கடந்து வர முடிகிறது.

பொதுவாக ஆண்கள் சிறுவயது முதலே பெண்களைச் சார்ந்து வாழப் பழ(க்)கிவிடுவதால் எந்த சின்ன இழப்பையும், சரிவையும் அவர்களால் எதிர்கொள்ள முடிவதில்லை. தனித்து செயல்பட முடிவதில்லை. சட்டென உடைந்து தூள்தூளாகி விடுகிறார்கள்.

இதில் விதிவிலக்குகளும் உண்டு.

பெண்கள் தூள்தூளானாலும் அத்தனையையும் ஒருங்கிணைத்துக்கொண்டு வீரியத்துடன் முன்னைவிட அதிக பலத்துடன் செயல்படுகிறார்கள்.

தியாகம் என்ற பெயரில் பெண்கள் அடக்கி வைத்திருக்கும் ஆளுமை, தனித்து விடும்போது அவர்களையும் அறியாமல் அதிக வேகத்துடன் வெளிப்படுகிறது என்பதுதான் உண்மை.

நேற்று டெல்லி மருத்துவ மாணவி நிர்பயா, இன்றைய கேரளத்து சட்டக்கல்லூரி மாணவிஞ் இதில் சாதி, அரசியல் இன்னபிற காரணங்களை எல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு ஒரு உயிர் அவமானப்படுத்தப்பட்டு துடிக்கத் துடிக்க சாகடிக்கப்படுவதை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்வோம்.

சிங்கம், புலி, பாம்பு, வெறிபிடித்த நாய் என ஐந்தறிவு விலங்குகளுக்கு பயப்படலாம் ஒதுங்கிச் செல்லலாம் உயிரைப் பாதுகாத்துக்கொள்ள தேவைப்பட்டால் அடித்தும் கொல்லலாம்.

ஆனால் இன்று ஆறறிவுள்ள சக மனிதனைப் பார்த்தே பயந்து வாழும் சூழல் அசிங்கம்.

www.thevagnar.com

எந்த தவறானாலும்/குற்றமானாலும் இரண்டு வழிகளில் குறைக்கலாம். ஒன்று மனிதநேயம். மற்றொன்று தண்டனை.

**முதலாவதாக மனிதநேயம்**

மனிதநேயத்தால் குற்றங்களைக் குறைக்கும் முயற்சி என்பது ஓரிரு நாட்களில் நடந்துவிடக்கூடியதல்ல. ஒட்டுமொத்த சமுதாயமே மாற வேண்டும். பிறந்து இந்த மண்ணில் விழுந்த நாளில் இருந்தே இருபாலருக்குள்ளும் ஒருவரை ஒருவர் மதிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும். வீட்டுக்குள் இருந்தே தொடங்க வேண்டிய மாற்றம்.

இந்த மாற்றத்தை இப்போது(தாவது) ஏற்படுத்தத் தொடங்கினால், இனி வரும் காலத்தில் கொஞ்சம் சமுதாய மறுமலர்ச்சியைக் காணலாம்.

**இரண்டாவதாக கடுமையான தண்டனை**

தண்டனை கடுமையாக இருந்தால் அதற்கு பயந்தாவது குற்றங்கள் குறைய



வாய்ப்புள்ளது. ஆனால் இங்குதான் கடுமையான தண்டனையே கொடுக்கக் கூடாது. 'குற்றத்துக்குக் குற்றம் தீர்வாகாது' என்ற ஒரு புது நியாயத்தை சொல்லி முழங்குகிறார்களே?

'குற்றம் செய்தால் கடுமையான தண்டனை நிச்சயம்' என்ற அதீத பயம் இருந்தால் நிச்சயம் குற்றங்கள் பெருவாரியாகக் குறையும். இன்றைய சமுதாய சூழலில் குற்றங்களுக்கு கடுமையான தண்டனை ஒன்றே சரியான தீர்வாக இருக்க முடியும்.

**ஓர் உண்மை நிகழ்வு.**

**ப**தினைந்து வருடங்களுக்கு முன்பு என்னிடம் பணிபுரிந்த ஒருவர் சில நாட்களுக்கு முன் போன் செய்து தன்னை நினைவிருக்கிறதா என கேட்டு உறுதி செய்துகொண்டார். தற்போது சவுதியில் பணிபுரிவதாகச் சொன்னார். பரஸ்பர சம்பிரதாய நலம் விசாரித்தலுக்குப் பிறகு என்னிடம் உடைந்த குரலில் மன்னிப்புக் கேட்டார். ஒரு நிமிடம் என்ன ஏது என்று ஒன்றுமே புரியவில்லை. பிறகு சுதாகரித்துக்கொண்டு என்ன விஷயம் என்று கேட்டதற்கு, அவர் சொன்ன விவரத்தை எந்த சலனமும் இல்லாமல் கேட்டுக்கொண்டேன்.

அவர் என்னிடம் பணி புரிந்த காலத்தில் ஆஃபீஸுக்காக வாங்கிய ஸ்டேஷனரி ஐட்டம் முதல் ஸ்டாஃப்களுக்கு வாங்கிய மதிய உணவுவரை அத்தனையிலும் அவர் கமிஷன் அடித்ததாகவும் அதை நினைத்தால் இப்போது அவருக்கே அவமானமாக இருப்பதாகச் சொன்னார்.

எப்போதோ நடந்த விஷயத்துக்கு இப்போது அவர் மன்னிப்புக்கேட்டது ஒருபுறம் ஆச்சர்யமாக இருந்தாலும் உளவியல் ரீதியாக ஆராய்ந்ததில் ஒருவிஷயம் புரிந்தது.

அவர் சவுதியில் பணி புரிகிறார். அங்குள்ள மனிதர்கள், சமுதாய அமைப்பு, சட்ட திட்டங்கள், குற்றங்களுக்கான தண்டனைகள் போன்றவை அவருக்குள் இருந்த மனிதனைப் பட்டை தீட்டி இருக்க வேண்டும். அதனால்தான் என்றோ நடந்த நிகழ்ச்சிக்கு இன்று மனம் வருந்தி

**பெண்களுக்கு புத்திசாலித்தனம் மட்டும் போதாது. சாமர்த்தியமும் சேர்ந்து இருந்தால்தான் இந்த சமுதாயத்தை எதிர்கொள்ள முடியும்...**

மன்னிப்புக் கேட்க வைத்துள்ளது.

ஒருவேளை இங்கேயே பணிபுரிந்துகொண்டிருந்தால் இந்த அளவுக்கு செய்த தவறை உணர்ந்திருப்பாரா என்பது சந்தேகம்தான். அவர் தற்போது வசிக்கும் நாடு அவருக்குக் கற்றுக்கொடுத்த பாடமாகவே இதை உணர வேண்டும்.

யோசிப்போம்!

**பெண்ணாய் இருப்பது**

**ஒ**ரு பெண்ணாய் இருப்பதாலேயே எல்லாவற்றிலும் சரியாகவும் சிறப்பாகவும் செயல்பட்டால்தான் நாம் நம்மை காப்பாற்றிக்கொள்ள முடியும் என்ற யதார்த்தத்தை, நம்மைச் சுற்றி இயங்கிவரும் ஆதிக்க மனோபாவம் கொண்ட ஆண்கள்தான் உண்டாக்கினார்கள்.

1992-ல் சென்னைக்கு இடம் பெயர்ந்த புதிது, உடனே காம்கேர் நிறுவனத்துக்கும் பூஜை போட்டாயிற்று.

தொடக்கத்தில், அலுவலகம் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கு கிளையண்ட்டுகளை சந்திப்பதற்கு இரயில்வே ஸ்டேஷன் அருகில் சைக்கிளை வைத்துவிட்டு ரயில், பஸ் பயணம்.

பஸ்ஸில் வரும்போதெல்லாம் அந்த காலத்தில் அபூர்வமாக பைக்கில் செல்லும் பெண்களை அதிசயமாய் பார்த்திருக்கிறேன்.

அதன் பின் ஒரே வருடத்தில் டி.வி.எஸ்-50 வாங்கினேன். சுதந்திரமாய் மவுண்ட்ரோடில் பைக் பயணம். அடுத்த ஐந்தாவது வருடம் கைனடிக் ஹோண்டா.அலுவலக வேலை முழுவதும் பைக்கில்தான். சென்னை முழுவதும் பைக்கிலேயே சென்று வந்திருக்கிறேன்.

1999-ல் Maruti 800 கார். வெள்ளை நிற

www.linemagz.com




கார். அப்பா, நான், தம்பி, தங்கை என குடும்பமாக கார் ஓட்டக் கற்றுக்கொண்டோம். வெள்ளை நிறமானாலும் ஒருநாளும் அதில் அழுக்குத் தெரியாவண்ணம் துடைத்து காப்பாற்றிய பெருமை அப்பாவுக்கே.

சென்னை to கும்பகோணம், மயிலாடுதுறை என காரிலேயே சென்றிருக்கிறோம். Self Drive. அப்பாவும், நாங்களும் மாற்றி மாற்றி ஓட்டிச் செல்வோம். ஹைவேயில் செல்லும்போதும் ஒரு துளி பயமும் இருந்ததில்லை. அடுத்து இரண்டு கார்கள் மாற்றிவிட்டேன்.

சென்னை வந்ததில் இருந்தே 20 வருடங்களுக்கும் மேலாக பைக்கும், 15 வருடங்களுக்கும்மேலாக காரும் ஓட்டிக் கொண்டிருக்கிறேன். இரண்டையுமே வேகமாகவும் ஓட்டுவேன், அதே சமயம் வண்டியும், சாலையும் என் கன்ட்ரோலில் இருக்கும் அளவுக்கு விவேகத்துடன் ஓட்டுவேன்.

ஆனாலும் இப்போதும், எங்காவது ரிவர்ஸ் எடுக்கும்போது 'கொஞ்சம்' தடுமாறினாலும், 'பொம்பளைங்க சரியா ஓட்டத் தெரியாம வண்டிய எடுத்துட்டு வந்துடறாங்க’, 'எடும்மா, எடும்மா வண்டி ஓட்டத் தெரியாம ஏம்மா வண்டிய எடுக்கறீங்க', 'கொஞ்சம் இறங்கறீங்களா. நான் ரிவர்ஸ் எடுத்துத்தரேன்' என்ற விமர்சனங்களை தவிர்க்க முடிவதில்லை.

இதுவே ஒரு ஆண் ரிவர்ஸ் எடுக்கும்போது தடுமாறினால், 'கொஞ்சம் பேலன்ஸ் செய்து எடுங்க' என்பது போன்ற வார்த்தைகளால் டெக்னிகலாக பேசி அவர்களுக்கு ஒத்துழைப்புக்கொடுத்து உதவுவார்கள்.

ஒருமுறை என் அலுவலக ஸ்டாஃப் வண்டியை ரிவர்ஸ் எடுக்கும்போது சுவரில் இடித்து பின்பக்கம் சற்று நசுங்கி விட்டது. ஒரு சமயம் என் கிளையின்ட் ஒருவர் அதைப் பார்த்துவிட்டு 'என்ன மேடம், நீங்கள் ரிவர்ஸ் எடுக்கும்போது நசுங்கி விட்டதா?' என்று சற்று நக்கலாகக் கேட்டார். 'காரில் ஏதும் டேமேஜ், விபத்து என்றால் அது பெண்கள் ஓட்டும் போது மட்டும்தானா? சமீபத்தில் அண்ணா சாலையில் தலைகுப்புற விழுந்ததே ஒரு அரசுப் பேருந்து அதை ஒரு பெண் டிரைவரா ஓட்டினார்?' என்று சற்று கோபமாகவேக் கேட்டேன். அவர் வாயைத் திறக்கவில்லை.

ஒருமுறை பைக்கில் சென்றபோது வேகமாக பின்னால் வந்த பைக் என் பைக் மீது மோதிவிட, கூட்டம் கூடியது. என் வண்டி மீது மோதியவருக்கு ஹெல்மெட் போடாததால் அடிபட்டு இரத்தம் கொட்டத் தொடங்கியது. அனைவரின் ஒட்டு மொத்த பார்வையும், கேள்வியும் என் மேல்தான்.

'என்ன மேடம் குறுக்க வந்துட்டீங்களா?', 'என்ன சடன் பிரேக் போட்டுட்டீங்களா?', 'கவனிக்காம வண்டியைத் திருப்பிட்டீங்களா?'

இதற்குள் அடிபட்டவர் தன்மீதுதான் தவறு என்பதை உணர்ந்து, 'சாரி மேடம்..' என்று சொல்ல, கூட்டம் அமைதியானது.

நாமும் சரியாக இருக்க வேண்டும். நம்மைச் சுற்றி இருப்பவர்களையும் சரியாக செயல்பட வைக்க வேண்டும். இதுதான் பெண்களின் வாழ்க்கைஇயல்பு.

எனவே பெண்களுக்கு புத்திசாலித்தனம் மட்டும் போதாது. சாமர்த்தியமும் சேர்ந்து இருந்தால்தான் இந்த சமுதாயத்தை எதிர்கொள்ள முடியும். ●

www.TheMagnat.com





# அரிய நிகழ்ச்சி

சிறுகதை

"என்ன?" என்றார் ராமையா சாஸ்திரி முன்னால் வைக்கப் பட்டிருந்த சட்டியில் இருந்த சோற்றை அளைந்து கொண்டே.

கதவுக்குப் பின் நின்று கொண்டிருந்த லட்சுமி இன்னும் இழுத்துப் போர்த்தியவாறு "மகாளயமா இருக்கு. இந்தப் பழையதை இப்பவாவது சாப்பிடாம இருக்கலாமா?" என்றாள் பயத்துடன்.

"அதெல்லாம் பரவாயில்லை..." என்றார் ராமையா சாஸ்திரி முகம் பார்த்துப் பேச மாட்டார். வெட்கமா, மனைவிக்கு இடம் கொடுத்து விட்டால் பின்னால் மிகவும் கஷ்டமாக ஆகி விடும் என்றா தெரியாது. பல நாட்களுக்குப் பேச்சே கிடையாது. 'இன்றைக்கு சுப தினம். ஒரு வார்த்தை உதிர்ந்திருக்கிறது' என்று நினைத்துக் கொண்டு நகர்ந்தாள் லட்சுமி. ஒரு குழந்தை இருந்திருந்தாலாவது அதைச் சாக்காக வைத்து ஏதாவது பேசிக் கொள்ளலாம். அதற்கும் கொடுப்பினை இல்லாது போய் விட்டது.

ராமையா சோற்றை அள்ளி வாயில் போட்டார். தொட்டுக் கொள்ள சின்ன வெங்காயம் சுரீரென்று தலைக்கு ஏறியது. தண்ணீரை எடுத்து விழுங்கினார். மகாளயமாவது ஒன்றாவது? நாற்பது வருடங்களாக இந்த ஊளைச் சோறு தான். பஞ்ச பட்ச பரிமாணம் எல்லாம் அப்பா வைசூரியில் போனவுடன் போய் விட்டது. பத்தாம் நாள் காரியம் ஆனவுடனேயே

**அஸ்வத்**

TheMagnar.com

அம்மா மாமா வீட்டிற்கு அழைத்துப் போய் விட்டாள். வாத்திம ராஜபுரத்தில் மாமா நிலம் நீச்சு என்று செயலாக இருந்தார். யார் செயலாக இருந்தால் தான் என்ன? உழைக்கிற மாடு உழைத்தால் தான் உண்டு. அம்மாவும் பிள்ளையும் சம்பளமில்லாத வேலைக்காரர்களாக மாமா வீட்டில் காலந்தள்ளி வந்தார்கள். ஒரு நாள் கிடையாது. கிழமை கிடையாது. ஜலதோஷமா ஜுரமா ஒன்றும் பேசக் கூடாது. பழைய சோறும் வெங்காயமும் தான்.

கையை உதறிக் கொண்டு சிரமத்துடன் எழுந்திருந்தார் ராமையா. தொப்பையைக் குறைக்க முடியவில்லை. உட்கார்ந்தால் எழுந்திருக்க முடியவில்லை. எழுந்திருந்தால் உட்கார முடிவதில்லை. என்னவோ தேகாப்பியாசம் செய்ய வேண்டுமென்கிறார்கள். யாரால் ஆகிறது? உள்ள வேலைக்கே நேரம் போத மாட்டேன்கிறது. ராஜ உத்யோகம் என்றால் எல்லாவற்றையும் கண் கொத்திப் பாம்பாகக் கவனிக்க வேண்டியிருக்கிறது. வெள்ளைக்காரன் வசூல் போதவில்லை 'கொண்டா கொண்டா' என்கிறான். பைரவத் தேவனுக்கு ஒரு மரியாதையுமில்லை. என்றாலும் நல்லூர் ராஜா என்கிற வீம்பு. அவனையும் 'ஹைன ஹைன' என்று அநுசரித்துச் செல்ல வேண்டி இருக்கிறது.

வாயைக் கொப்பளித்து அங்கவஸ்திரத்தில் கையைத் துடைத்துக் கொண்ட போது மாமா வீட்டில் மாடு மாதிரி வேலை பார்த்துக் கொண்டே படிப்பிலும் கவனம் பிசகாமல் இருந்ததில் நன்மை தான் விளைந்தது என்று நினைத்துக் கொண்டார். என்ன கெட்டு விட்டது? மலையாள தேசத்தில் மாதவன் சிபார்சில் வேலை பார்த்த போதும் எல்லோரும் பயப்பட்டான்கள். பின்னர் மாகாணக் கௌன்ஸில் மெம்பராக இரண்டு வருடம். நல்லூர் திவான் பதவி மடியில் வந்து விழுந்தது. வெள்ளைக்காரன் மரியாதையுடன் இருக்கிறான். நல்லூர் ராஜா இளம் பிராயத்துப் பையன். பயப்படுகிறான். மறுபடியும் மாமாவை நினைத்துக் கொண்டார். மாமாவிடம் பட்ட நன்றிக் கடனுக்காக அவர் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டார். மாமாவுக்கு அப்போதெல்லாம் க்ஷீண தசையாதலால் வேறு வழியிருக்கவில்லை.

காரியஸ்தன் சிகாமணிப் பிள்ளை தயாராக ரேழியில் நின்று கொண்டிருந்தார் கையைக் கட்டிக் கொண்டு, "என்ன வண்டி தயாரா?" என்றார் சாஸ்திரி.

"தயாராக இருக்கு சாமி. பத்து மணிக்குத் தான் ரெஸிடென்சியிலே மீட்டிங். இன்னும் மணி ஆவலிங்களே...?"

பதில் பேசாமல் சாரட்டில் போய் ஏறிக் கொண்டு "மூக்கா! விடு வண்டியை" என்றார். போகிற இடத்தைச் சொல்லக் கூடாது என்பது பால பாடம். போவதற்குள் அங்கு செய்தி போய் விடும். உஷாராகி விடுவான்கள். படித்துப் படித்துச் 'சொன்னேன் மாதவனிடம். கேட்கவேயில்லை' என்று நினைத்துக் கொண்டார். மலையாள ராஜ்யத்தில் கலவரம் ஏற்பட்ட போது மாதவன் இப்படித் தான் ஒளிவு மறைவு இல்லாமல் போய் மாட்டிக் கொண்டான். தப்பித்தது தம்பிரான் புண்ணியம் என்று ஆகி விட்டது.

"நேரே மன்னவன் குளத்துக்குப் போ" என்றார் மூக்கனிடம். அவன் நாணயஸ்தன். ராஜாங்க விசுவாசி. அதுவும் திவான் என்றால் தெய்வம் மாதிரி அவனுக்கு. 'தேவைப்படும் போது அரவணைத்தும் கடுமை காட்டியும் குதிரைகளை எவ்வளவு அழகாக நிர்வாகம் செய்கிறான். நான் நல்லூரை நிர்வாகம் பண்ணுகிற மாதிரி.' ராமையா தனக்குள் புன்னகைத்துக் கொண்டார். வழியில் மனிதர்கள் நின்று கொண்டு முகமன் செய்வதை ஆளுக்குத் தகுந்த மாதிரி அங்கீகரித்துக் கொண்டு வந்தார். ஆட்டு மந்தைக் கூட்டம். அதனால் தான் வெள்ளைக்காரன் ஐந்நூறு பேர் கோடிக் கணக்கான ஜனங்களைக் கட்டி ஆளுகிறான்கள்.

வண்டி நின்றதும் நிதானமாக இறங்கினார். மேலக்கரை காவல்காரன் ஓடோடி வந்து சலாம் வைத்தான். "என்னப்பா வேலையெல்லாம் நடக்கிறதா? நடக்கக்

கல்லு பரவச் சொல்லி இருந்தேனே" என்று கேட்டு விட்டு, "உன் பிள்ளை எப்படி இருக்கிறான்?" என்றார் அருங்குளவனிடம்.

"வேலை ஆரம்பிச்சாச்சுங்க சாமி. பையன் உங்க புண்ணியத்துல நல்லாயிருக்கான் சாமி" என்றான் அருங்குளவன். மூன்றாம் வருடம் ஊர் பூரா வைசூரி வாரிக் கொட்டியிருந்தது. ராமையா எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் ஊர் ஜனங்களுக்கு ஊசி போடப்பட்டு கொள்ளை நோய் பரவாமல் தடுக்கப்பட்டது. அதற்காக வெள்ளைக்கார ராஜ்யம் சாஸ்திரிக்கு பாராட்டுப் பத்திரம் கொடுத்திருந்தார்கள்.

நிதானமாகப் படிகளில் ஏறி சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டார். காற்று மேலோட்டமாக அடித்துக் குளத்தில் சிறு அலைகளை உண்டாக்கிய வண்ணம் இருந்தது. தண்ணென்று ஒரு குளிர்ச்சி பரவியது. கண்களைக் குளம் பூரா ஓட விட்டார். கொஞ்சம் பெருமிதத்தால் மார்பு விம்மித் தாழ்ந்தது. ஒரு கரை முக்கால் மைல். ஒரு சுற்று வந்தால் மூன்று மைல். சமுத்திரம் என்று கூடச் சொல்லலாம். நடுவில் நீராழி மண்டபம். ஆறே மாதத்தில் வெட்டிக் கட்டி முடிக்கப்பட்டது. அத்துடன் நல்லூரின் குடிநீர்ப் பிரச்சினையும் தீர்ந்தது.

மெல்ல நடை போட்டார். எத்தனை பேரைக் கரைத்திருப்பேன். சமணப் பள்ளியிலிருந்து வந்த போதே ரீஜண்டிடம் தனக்கு சர்வ சுதந்திரம் கொடுத்தால் தான் வேலை செய்ய முடியும் என்கிற நிபந்தனையுடன் தான் வந்தார். ரீஜண்ட் அநுபவஸ்தர். சாஸ்திரியைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறார். "வெள்ளைக்கார ராஜாங்கத்துக்கு வரும்படி குறைந்தால் தான் கேட்போம். மற்றபடி தலையிட மாட்டோம்." என்று தெளிவாகச் சொல்லி விட்டார். அதை இன்று வரை கடைபிடித்து வருகிறார்.

இரைத்தது. சற்று நின்றார். முதலில் சிறு சிறு வாய்க்கால்களை அந்தந்த இடங்களின் குளங்களுடன் இணைக்க வேண்டி இருந்தது. அந்தந்தக் குளங்களின் உபரி நீரை வேறு வாய்க்கால்கள் வழியாக அடுத்துடுத்து பெரிய குளங்களில் இணைத்து அவற்றின்

சம்பத்: டீச்சர் நான் ஒரு பழமொழி சொல்லட்டுமா?

டீச்சர்: சொல்லு பார்க்கலாம்.

சம்பத்: ஆறுவது சினம். ஏறுவது B.P. இறங்குவது பேங்க் பாலன்ஸ்.



- சரவெடி ஸ்ரீதர்

உபரியை காட்டு வாய்க்கால் மூலமாக மன்னவன் குளத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது. எவ்வளவு தடைகள்! நாள் சரியில்லை; சாமி குத்தம்; உத்தரவு ஆகவில்லை; உதைப்பேன். எங்க ஜாதி குளத்தை நீ தோண்ட விட மாட்டோம்; திவான் என்ன பிராமணனா! சுத்த பாஷாண்னாக இருக்கிறானே! இத்யாதி இத்யாதி... நாளாவது கிழமையாவது சாமியாவது பூதமாவது! மாமா வீட்டில் சோற்றுக்குச் சிங்கி அடித்துக் கொண்டிருந்த போது எந்த சாமி வந்து சோறு போட்டது? எல்லாம் என் முனைப்பும் உழைப்பும் தான்.

அம்மா மட்டும் கடைசி வரை மனசாட்சி மாதிரி இடித்துக் கொண்டேயிருப்பாள். கல் பெஞ்சில் சற்று சாவகாசமாக உட்கார்ந்து கொண்டார். அதென்னவோ வாழ்க்கையில் அடிபட்டதினாலோ என்னவோ ஒன்றின் மீதும் பிடிப்பு இல்லாமல் போய் விட்டது. சந்ததி கிடையாது. பூஜை கிடையாது. புனஸ்காரம் கிடையாது. வேலை வேலை வேலை என்று இருந்தாகி விட்டது. வேலையென்றால் கட்டி மேய்க்கிற வேலை தான். ஆடுகிற மாட்டை ஆடிக் கறப்பது பாடுகிற மாட்டை பாடிக் கறப்பது. சாம பேத தான தண்டம் தான். எல்லோருக்கும் பலஹீனம் இருக்கிறது. அது புரிந்து விட்டால் போதும்.

ஒரு கணம் அம்மாவின் முகம் கண்ணில் நிழலாடியது. "அத்து வேணும்டா ராமையா" என்பாள் அடிக்கடி. நல்லூர் வேலை வந்த

www.TheMagnet.com

போது துள்ளிக் குதித்தாள். "உனக்கு அஞ்சு வயசு வரையிலும் பேச்சு வரவில்லை. யாரோ சொன்னான்னு அந்த நாள்ல வாத்திம ராஜ புரத்திலேருந்து வண்டி கட்டிண்டு வந்தேன். நல்லூர் அரியநாச்சி கோயில்ல வேண்டிண்டு பிரசாதத்தை உன் வாயில போட்ட அப்புறம் தான் உனக்குப் பேச்சு வர ஆரம்பிச்சது. இது ஏதோ பூர்வ ஜென்ம சுகிர்தம்டா ராமையா. உடனே சரின்னு சொல்லிடு" என்றாள். கூடவே இருந்தாள். இரண்டாம் வருடம் "மாரை வலிக்கிறதுடா ராமையா! ராமையா!" என்றாள். பிராணன் போய் விட்டது. அநாயச மரணம். "கண் வழியா உயிர் போயிருக்கு. மறு ஜன்மா கிடையாது" என்றார் சர்ம லோகத்திற்கு வந்திருந்த கல்யாண சுந்தர ஜடாவல்லபர்.

மெதுவாக எழுந்திருந்தார். என் சுபாவமே பேசாமல் இருப்பது தான். அதற்குப் போய் கவலைப்பட்டுக் கொண்டு வேண்டாத சாமிக்கு எல்லாம் நேர்ந்து கொண்டு... மெல்ல நடந்து படிகளில் இறங்கினார். அரிய நாச்சியாவது ஒன்றாவது... அந்தக் கோயில் சம்பந்தமான வியாஜ்யத்துக்குத் தான் இன்று ரெஸிடென்ஸியில் மீட்டிங் என்பது அவருக்கு நினைவுக்கு வந்ததில் முகத்தைச் சுளித்துக் கொண்டார்.

குளம் கட்டுகிற போது இப்படித் தான் சாமியாடினான்கள். வீட்டிற்கு முன் ஒரு பூசாரி வந்து உண்மையிலேயே சாமி ஆடினான். லட்சுமி தான் பயந்து போனாள். சாபம் விடாத குறை. முனியன்குடி கிராமத்தில் சட்டி பானை செய்கிறவன். பரம்பரையாய் அவர்கள் தான் கோயிலுக்குப் பூசாரி. மௌனமாகக் கவனித்துக் கொண்டிருந்தார் ராமையா. வாய்க்கால் வரத்துக்காக ஒரு மரத்தை வெட்ட வேண்டி இருந்தது. ஊர்க்காரர்கள் பிராது பண்ணிக் கொண்டிருந்தார்கள். பரிகாரம் என்ன? என்று கேட்டார் சாஸ்திரி. அவன் சாமியாடி முடிந்த பிறகு முழ நீளத்துக்குப் பரிகாரம் சொன்னான். அனைத்தையும் ஒப்புக் கொண்டு பில்லைப் போட்டு பணத்தைக் கொடுத்து விட்டார். தீர்ந்தது பிரச்னை.

அதே மாதிரி போன மாதம் நடந்ததை நினைத்துக் கொண்டார். வீதிகளுக்கு இடைஞ்சலாய் இருந்த கோயில்களை இட மாற்றம் செய்ய வேண்டியிருந்தது. மொத்தமாக ஐம்பது கோயில் இருக்கும். எங்குப் போனாலும் எதிர்ப்பு. கம்பு கடப்பாறை என்று தூக்கிக் கொண்டு வந்து நின்றான்கள். ஜெயில் வார்டன் கணபதி சேர்வை தான் தலைமை. அவனை ஒன்றும் செய்ய முடியாது. ஆள் கட்டுமானம் ஜாஸ்தி. அவன் பழக்க வழக்கங்களை துப்பு அறிந்ததில் வேலை சுளவாக முடிந்தது.

கணபதி சேர்வை தாசி சொர்ணத்திடம் தொடர்பு என்று தெரிந்தது. சொர்ணத்துக்கு ஆள் அனுப்பி சேர்வை மேல் பிராது கொடுக்கச் செய்தார். கதறிக் கொண்டு வந்து சேர்ந்தான் கணபதி. கோயிலாவது குளமாவது! எல்லா கோயிலும் அந்த சாமியின் பெயரைக் குறிப்பிட்டு "நாங்கள் வீதியை அகலப்படுத்த வேண்டி இக்கோயிலை எதிர் வரும் ...... தேதியன்று இடிக்கப் போகிறோம். எனவே இங்கு குடியிருக்கும் நீங்கள் நாங்கள் ஏற்கெனவே தீர்மானித்த இந்த இடத்தில் குடிபுக வேண்டியது - திவான்." என்று நோட்டீஸ் அடித்து ஒட்டினார்கள் நகராட்சி ஆட்கள். அந்த ஏற்பாட்டின்படி எல்லா சாமிகளும் இடம் மாற்றம் செய்யப்பட்டது. பாக்கி அரிய நாச்சி கோயில் தான்.

"வண்டியில் ஏறிக் கொண்டார். வீட்டுக்குத் தானே சாமிகளே!" என்றான் மூக்கன். "வேண்டாம். நேரே ஆபீஸ"க்குப் போய் விடு. என்னை விட்டுட்டு அம்மாவிடம் போய் மத்யான சாப்பாடு அனுப்ப வேண்டாம். வீட்டிற்கே வந்து விடுகிறேன் என்று சொல்லி விடு" என்றார்.

அரிய நாச்சி கோயிலைப் பெயர்ப்பது அவ்வளவு சுலபமாக இல்லை. அந்தக் கோயிலைப் பேட்டையார்கள் பராமரித்து வந்தார்கள். தலைவர் வெங்கட்ராமன் செட்டிக் காசுக் கடை வைத்து இருந்தார். பெரிய தனவந்தர். நவராத்திரி வந்து விட்டால் அரிய நாச்சியின் உற்சவத்தை பெரிய அளவில் செய்வார். ஒன்பது நாளும் வருகிறவர்களுக்கு

**ராமையா குழம்பிப் போனார். ஆட்களைக் கூப்பிட வாயைத் திறந்தார். பேச்சு எழும்பவில்லை. எழுந்திருக்க முயன்றார். முடிய வில்லை. இது கனவா?...**

இல்லையென்று சொல்லாமல் சாப்பாடு, வேஷ்டி, அங்கவஸ்திரம்; தவிர வருகிற பிராமணர்களுக்கு ஒரு பவுனில் அம்மன் காசு என்று அமர்க்களப்படும். அவர் தன் வரை கோயிலை இடிக்கக் கூடாது என்று முயற்சிகள் எடுத்துப் பார்த்தார். ராமையா சாஸ்திரி அசைந்து கொடுக்கவில்லை. கல்யாண சுந்தர ஜடா வல்லபரை வேறு ராமையாவிடம் தூது அனுப்பினார். ஒன்றும் நடக்க வில்லை. நேரே பைரவத் தேவனிடம் போய் பிராது வைத்து விட்டார். அதற்குத் தான் இன்று பஞ்சாயத்துக்கு ரீஜண்ட் வரச் சொல்லி இருக்கிறார்.

அலுவலகத்தில் இறங்கிக் கொண்டார். சலாம் இட்டவர்களை அங்கீகரித்தவாறே அறைக்குள் சென்று உட்கார்ந்து கொண்டு கேதரினைக் கூப்பிட்டார். நல்ல வேளை! சற்று சீக்கிரமாகவே வந்து விட்டாள். நோட்டும் பென்ஸிலுமாக முன் நின்றாள். படபடவென்று ஆங்கிலத்தில் வாசகத்தைச் சொன்னார். அவள் முகத்தில் வியப்புக் குறியும் கேள்விக் குறியும் தொக்கி நின்றன. என்றாலும் ஒன்றும் கேட்கவில்லை. அவள் சுபாவம்.

லெட்டரை டைப் செய்து கொண்டு வந்து கொடுத்தவுடன் வாங்கி மடித்து சட்டைப் பையில் வைத்துக் கொண்டே "நான் கிளம்புகிறேன். மத்யானம் வர மாட்டேன். ஏதாவது அவசர அலுவல் இருந்தால் மட்டும் ஆளனுப்பு" என்று சொல்லி விட்டு போய் சாரட்டில் ஏறிக் கொண்டு நேரே ரெஸிடென்ஸிக்கு விடச் சொன்னார்.

போய்க் காத்திருந்தார். ரீஜண்ட் வரவில்லை. பைரவத் தேவன் வந்து உர்ரென்று உட்கார்ந்திருந்தது. வந்த போது எழுந்திருக்கிற மாதிரி பாவலா பண்ணி விட்டு முகமன் கூறி விட்டு உட்கார்ந்து விட்டார் ராமையா சாஸ்திரி. நீ ராஜா என்றால் நான் திவான். நீ என்ன ராஜா? பல்லுப் போன ராஜா... இனி மேல் வெள்ளைக்காரன் தான் ராஜா.

காரசாரமாக விவாதம் ரீஜண்ட் வந்த பிறகு. பைரவனால் சேர்ந்தாற் போல் நாலு வார்த்தை பேச முடியாது. அதற்காகத் தான் த்விபாஷ் நாராயணனைக் கூட்டி வந்திருக்கிறார். என்றாலும் தன் வாதங்களை, ஏன் கோயிலை இடிக்கக் கூடாது என்கிற காரணங்களை நன்றாக எடுத்து வைத்தான். ரீஜண்ட் ஸ்வாரஸ்யமாக கவனித்துக் கொண்டிருந்தார். அவருக்கு ராமையாவிற்கும் பைரவனுக்கும் பேதம் இல்லை. எல்லாம் சுதேசி அடிமைகள்.

ஒரு கட்டத்தில் ராமையா தன் பிரம்மாஸ்திரத்தை எடுத்து வீசினார். பையில் வைத்திருந்த கடிதத்தை எடுத்து ரீஜண்டிடம் கொடுத்து, "இந்த ஏற்பாட்டுக்கு நீங்களோ, ராஜாவோ சம்மதிக்க வில்லை என்றால் நான் ராஜினாமா செய்வதைத் தவிர வேறு வழி இல்லை" என்று சொல்லி விட்டு திகைத்த இருவரிடமும் அவசரமாய் விடை பெற்றுக் கொண்டு கிளம்பிவிட்டார்.

மலையாள ராஜ்யத்திலும் இது தான் நடந்தது. வண்டியில் ஏறும் போது தன் பிடிவாதத்தைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளலாமோ என்று தோன்றியது. ஒரு கணம் தான். மறுபடி வீம்பு தலை தூக்கியது. எவ்வளவு செய்திருக்கிறேன். மலையாள ராஜ்யத்திலும் நிறைய செய்தேன். பங்காளி சண்டையில் மாட்டிக் கொண்டேன். ஒரு உறவுக்காரன் ராஜாவைக் கொலை செய்ய ஏற்பாடு செய்யச் சொல்வதாக அவன் கையெழுத்தில் போலிக் கடிதம் தயாரித்து அதை அந்த ஊர் ராஜா கையில் கிடைக்கும்படிச் செய்த பின் தான் அங்கிருந்து தப்ப முடிந்தது.

நேரே வீட்டுக்குப் போனார். "லட்சுமி! இலையைப் போடு." என்றார். லட்சுமி ஆச்சரியமாக அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். இன்றைய இரண்டாவது அதிர்ஷ்டம். பெயர் சொல்லிக் கூப்பிடுகிறதே பிராமணன்! வழக்கத்தை விடக் கொஞ்சம்



அதிகமாகவே சாப்பிட்டார். நல்ல திருப்தியாக உட்கார்ந்த போது ரெஸிடென்ஸியிலிருந்து ஆள் வந்து விட்டது. அவர் கிளம்பிய பின் ரீஜண்டும் ராஜாவும் மறுபடி பிரச்னையை அலசியதாகவும் திவானின் முடிவுக்குச் சம்மதிப்பதாகவும் ராஜினாமாவைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும்படிக்கும் தகவல் வந்து விட்டது. எதிர்பார்த்தது தான்.

சட்டையைக் கழற்றி விட்டு மேல் அங்கவஸ்திரத்தைத் தோளில் போட்டுக் கொண்டு பாக்கை மென்றார். நாத விந்து கலாதி ..... சற்று உல்லாசமாகக் கூட இருந்தது. இந்தப் பிடிவாதம் இல்லை என்றால் கிளார்க்காக இருந்து தாசில்தாராக உயர்ந்து திவானாக ஆகியிருக்க முடியுமா? வெள்ளைக் காரனிடம் நற்சான்று தான் வாங்கியிருக்க முடியுமா?

கண்ணைச் சொக்கிக் கொண்டு வந்தது. போய்க் கட்டிலில் படுத்துக் கொண்டார். எண்ணத்தில் அப்படியே அமிழ்ந்து அமிழ்ந்து உறங்கிப் போனார்.

மாமா சிவப்புக்கல் கடுக்கனுடன் விழித்துப் பார்த்தார். 'தோலை உரிச்சுப்பிடுவேன் படவா' மாமி நிஷ்டூரமாய்ப் பார்த்துக் கொண்டு இருந்தாள். அம்மா பயத்துடன் "நம்ம லட்சுமியை..." அதை விட பயத்துடன் லட்சுமி நின்று கொண்டிருந்தாள். சின்ன பெண். பாவாடை சட்டை போட்டுக் கொண்டு.

"அய்யா ராமையா!" யாரோ கட்டிலை உலுக்கினார் போல் திடுக்கிட்டு எழுந்திருந்தார் ராமையா. சின்னப் பெண். அரக்குக் கலரில் பாவாடை சட்டை. காதில் ஜிமிக்கி. காலில் கொலுசு. முகம் பூரா மஞ்சள் பூசிக் கொண்டு நெற்றிக்கு இட்டுக் கொண்டு தக தக என்று நின்று கொண்டிருந்தாள் சிரித்தவாறே. லட்சுமி கனவில் வந்ததனால் ஏதோ பிரமை போலிருக்கிறது என்று மறுபடி கண்ணைக் கசக்கியவாறே உற்றுப் பார்த்தார் ராமையா. இது லட்சுமி இல்லை. வேறு யாரோ. நவராத்திரியின் போது லட்சுமி இது மாதிரி ருதுவாகாத குட்டிகளை வைத்துக் கொண்டு கன்யா பூஜை என்று ஏதோ செய்வாள்.. குழந்தை இல்லாத ஏக்கம். அந்த மாதிரி ஏதோ ஒரு பெண் வந்திருக்கிறதோ? நவராத்திரிக்கு இன்னும் நாளிருக்கிறதே? மறுபடி மறுபடி உறுத்துப் பார்த்தார். கனவுமில்லை. பிரத்யட்சமாக ஒரு பெண் நின்று கொண்டிருக்கிறது.

கை வளையல்களை வைத்து ஓசை செய்து விட்டு கல கல என்று சிரித்து, காலில் கொலுசு சத்தத்துடன் பாண்டி ஆடுகிற மாதிரி மேலேயும் கீழேயும் நடந்து விட்டுக் கெக்கலி கொட்டிச் சிரித்தது.

"ராமையா! நான் அரியவள் வந்திருக்கேண்டா. நீ என் குஞ்சுடா என் எச்சலை உன் வாயில துப்பினேன்டா. அதுல தான் இந்த மட்டில வந்திருக்க. என்னை என் இடத்தை விட்டு உன்னால கிளப்ப முடியாதுடா. அதை இத்தோட விட்டுடு."

ராமையா குழம்பிப் போனார். ஆட்களைக் கூப்பிட வாயைத் திறந்தார். பேச்சு எழும்பவில்லை. எழுந்திருக்க முயன்றார். முடிய வில்லை. இது கனவா? செப்பனாவஸ்தை என்கிறார்களே அதுவா?

"இப்பவும் நம்பிக்கைப் பட மாட்டேங்கறியே. நிறுத்துடா உன் தந்திரத்தையெல்லாம். உன் பெண்டாட்டி வயத்தில அப்ப தான் நான் வருவேன். தத்தித் தரிகிட தித்தித் திரிகிட தித்தித் திரிகிட தித்தோம்..." என்று பாடிக் கொண்டே மீண்டும் கலகலவென்று சிரித்தது குழந்தை.

எழுந்திருக்க முயன்று தடாலென்று கட்டிலில் இருந்து கீழே விழுந்தார் ராமையா சாஸ்திரி. லட்சுமி உக்ரதை அறையிலிருந்து ஓடி வந்தாள். "அய்யோ! என்னன்னா ஆச்சு?" என்று பதறினாள். ராமையாவால் பேச முடியவில்லை. மலங்க மலங்க விழித்துக் கொண்டே தண்ணீர் வேண்டுமென்று சைகை செய்தார். ஒரு மடக்கு குடித்து விட்டு சற்று ஆசுவாசப் படுத்திக் கொண்டு ஒன்றுமில்லை கவலைப்பட என்று சைகை காண்பித்தார்.

அன்றைக்கே கோயில் அதே இடத்தில் இருக்கலாம். மாற்றம் செய்ய வேண்டியதில்லை என்று ரீஜண்டுக்கும் ராஜாவிற்கும் அலுவலர்களுக்கும் தாக்கீது அனுப்பி விட்டார். ●

ஆய கலைகளின்

# அதிபதி!

ஆரூர். ஆர்.சுப்பிரமணியன்

***ஹ்ரீல் லேகா தேவி***
***வித்யா சக்தி***
***பிரதிஷ்டா சக்தி***
***நிவர்த்தி சக்தி***

என பலவாறு தனது 'தக்கயாக பரணி நூலில் மகாகவி ஒட்டக் கூத்தராய் வர்ணிக்கப்பட்டவளும்,

***தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்***
***தீமை காட்டி விலக்கிடும் தெய்வம்***
***உய்வமென்ற கருத்துடை யோர்கள்***
***உயிருனுக்குயிராகிய தெய்வம்***
***செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்***
***செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்***
***கைவருந்தி உழைப்பவர் தெய்வம்***
***கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம்***

என்று மகாகவி பாரதியாரால் தன் கவிதைகளால் போற்றப்பட்டவளும்,

எல்லாக் கவிஞர்களின் நாக்கிலும் வீற்றிருப்பவள் என கந்த புராணத்தில் பெருமைப்படுத்தப்பட்டவளும் ஆன தெய்வம் யார்?

ஆய கலைகள் 64க்கும் அதிபதியான **சாட் சாத்** சரஸ்வதி தேவியே அவள்!

கல்வி, வாக்கு, சொல் இவற்றுக்கு அதி தேவதையான சரஸ்வதியை

**கலைமகள், பாரதி, வேணி, வாக்கிறைவி சொற்கலையான், ஞானக்கொடி, ஞான அமலி நாமடந்தை, வித்யா, சின்மயீ** இன்னும் இப்படி எத்தனையோ பண்டையத் தமிழ் நூற்கள் புகழ்ந்துரைக்கும் அந்த ஞானப்பிராட்டி **அறிவு, தூய்மை,** இவற்றின் உறைவிடம், வெண்ணிற ஆடை உடுத்தும் இந்த தேவி வெண்தாமரையில் வீற்றிருப்பவள்! இதனால் காரணப் பெயராக **கமலவல்லி, கமலா சனக்காரிகை, வெண்கமலநாயகி** என்றும் அழைக்கப்படுபவள்!

இவளின் பொதுவான தோற்றம் இப்படி அமையும்.

வெண்உடை பூண்டு, தன் வலக்கரங்களில் வியாக்கின முத்திரை, அட்சமாலையுடனும் இடக் கரங்களில், வெண்தாமரை ஏந்தி, சுவடியை ஏந்தியும், கமண்டலம், வீணை இவற்றுடன் நான்கு கரங்களுடன் அழகிய தோற்றம் தருவாள்!



சரஸ்வதி பிரம்ம தேவனுடன் இணைந்து காணப்படுகையில் தேவி கொண்ட வாகனம் ஹம்சமெனும் அன்னப்பறவை அல்லது மயிலாக அமைந்திருக்கும்

குரு தட்சிணாமூர்த்தி போன்றே ஞானம் அருள்வதால், தேவி ஜபமாலை, ஏட்டுச் சுவடி இவற்றுடன் காட்சி தருகிறாள் என புராணங்கள் மூலம் அறிய முடிகிறது.

**வாகீஸ்வரி, சித்ரேஸ்வரி, துளஜா, கீர்த்தீஸ்வரி, அந்தரிட்ச சரஸ்வதி, கட சரஸ்வதி, நீல சரஸ்வதி** என கலைமகள் எட்டு வகைப்படுத்தப்படுகிறாள்.

தாராவான சரஸ்வதியை பரம் பொருளாகப் பாவித்து, **ஸ்ரீதாரோப நிஷத் பிரபஞ்சார தந்திரம், மந்த்ர மகார்ணவம், ருத்ர யாமளம், மந்திர மகோததி** போன்ற தொன்மையான நூல்கள் தேவியை ஆராதித்த வேண்டிய பல முறைகளைப் பற்றி விரிவாக எடுத்துரைத்துள்ளன.

> **புலவர் கூத்தரின் தவத்தால் மனம் கனிந்த அன்னை சரஸ்வதி, அவருக்கு காட்சி தந்து "நீ இனி சிறந்த வரகவியாக திகழ்வாயாக"! என வரமளித்து...**

**ஸ்ரீ மத் தேவி பாகவத** நூலின் ஒரு அத்தியாயத்தில், சரஸ்வதியைப் போற்றும் துதிகள், பூஜை, கவச மந்திரங்கள் இடம் பெற்றுள்ளன.

சியாமளா தேவி என்ற சிறப்பு பெயர் கொண்ட தேவி சரஸ்வதியின் அவதாரம் குறித்த வரலாறுகள், ஒவ்வொரு தொன்மையான புராணத்திலும் ஒவ்வொரு சம்பவம் என வித்தியாசமாகக் காணப்படுகிறது.

**தேவி பாகவத்தில் இடம் பெற்ற சம்பவம்**

பகவான் கண்ணனின் தேவியான ராதையின் முகத்திலிருந்து சரஸ்வதி உதயமானாள் எனவும், ஏதோவொரு சாபத்தின் விளைவாக தேவி நதியானாள் என்றும், பிறகு சாபவிமோசனம் கிடைக்கப்பெற்று பிரம்ம தேவனை மணந்து சத்யலோகத்தில் குடிகொண்டாள் எனவும், பிரம்மனின் துணைவி ஆனபிறகு **'பிராம்மணி'** என வழங்கப்படுகிறாள் என்றும் அதில் கூறப்பட மச்ச புராணம் மூலம் அறியப்படுவது என்னவென்றால், நான்முகன் பிரம்மனின் உடலிலிருந்து சாதரூபம், சரஸ்வதி, காயத்ரீ, பிராமணி என புகழப்படும் ஒரு பேரழகி வெளிப்பட அவளே கலைமகள் ஆனாள் என்று.

**சரஸ்வதி தேவியைக்குறித்தான ஒரு சுவையான சம்பவம்**

தேவர்களின் அதிபதி இந்திரன் தனது பகைவனாகத் திகழும் அரக்கன் விருத்தாசுரனை அழிக்க லட்சியம் கொள்கிறான். சர்வ வல்லமை படைத்த அந்த அசுரனை வீழ்த்த இந்திரன் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வீணாகி விடுகின்றன. அப்போது அவன் மீது அக்கறை கொண்ட மகரிஷி கொடுத்த ஆலோசனையின்படி, இந்திரன் தவயோகி ததீசி ரிஷியின் முதுகெலும்பைப் பயன்படுத்தி அசுரனை அழிக்க முடிவெடுத்து, அதற்காக ரிஷியைக் கொன்று, அவளுடைய முதுகெலும்பை வஜ்ஜிராயுத கருவியாக்கிக் கொள்கிறான்.

ததீசி ரிஷி அசந்திருந்த தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டு, புதிய கருவி கொண்டு சுலபமாக இந்திரன் விருத்தாசுரனைக் கொன்று விட முடிகிறது.

இச்செய்தி ததீசியின் புதல்வன் பிப்பலாதனை எட்டி விடுகிறது. கொதித்து எழுந்த அவன் இந்திரனைப் பழிக்குப் பழிவாங்க திட்டமிடுகிறான். அதனால் அவன் கடுந்தவம் மேற்கொள்கிறான். அதன் விளைவாக இறைவனிடமிருந்து பெற்ற வரம் மூலம் பிப்பலாதன் தன் தொடையைத் தட்டி அதிலிருந்து தவத்தீயை வரவழைக்கிறாள்.

இந்திரனை வீழ்த்தும் பொருட்டு ததீசியின் பிள்ளை ஏவி விடும் தவத்தீ தேவலோகம் நோக்கிச் சீறிப்பாய்ந்து தன்

www.TheMagzt.com

இலக்கினைத் தேட, இந்திரன் உள்ளிட்ட அனைத்து தேவர்களும் பயந்து போய், சத்யலோகத்திற்கு ஓடிப்பேய் பிரம்ம தேவனைச் சரண்புகுகின்றனர். அவர்களை ஆறுதல் படுத்திய அவர், சில நிமிடங்கள் தியானித்துவிட்டு தன் துணைவி சரஸ்வதியை அழைத்து, அந்த தவத்தீயை சக்தி இழக்கும் செயலை செய்து முடிக்க உன்னால் மட்டுமே இயலும்" என ஆக்ஞையிடுகிறார்.

அப்போது கலைமகள் "தங்கள் சித்தப்படியே அதனைச் செய்கின்றேன்" என வணங்கிக் கூறிவிட்டு கணவரிடம் "ஐயனே! இப்பணியை துவங்கும் முன்பாக தாங்கள் எனக்கு ஒரு வரம் அளிக்க வேண்டும். அது என்னவெனில், தேவர்கள் மீது ஏவி விடப்பட்ட தவத் தீ அக்னித் தேவனின் அம்சம். நான் நதி ரூபம் எடுத்து அக்னி ஜுவாலையை நீக்கும் சூழ்நிலை ஏற்படும். அதனால் எனக்கு தோஷம் உண்டாகும். அது மட்டுமல்ல, நான் நதியாக ஓடுகையில் அதில் ஸ்நானம் புரிய பல்வேறு பாவகாரியங்கள் புரிந்தோர் வரும் வாய்ப்பு உள்ளதால், அவர்களுடைய பாவங்களையும் சுமக்க நேரிடும். எனவே நான் நதியாக உருவெடுத்து ஓடுகையில் மானிடர்களின் கண்களுக்குப் புலப்படும். நதியாக நான் அமையால் பல இடங்களில் பூமிக்கு அடியில் ஓடும் வகையில் வரமளிக்க வேண்டும்" எனப் பணிவுடன் கேட்டுக் கொள்ள, "இவ்வளவு தானே அப்படியே தந்தேன்" என்று பிரமன் வரம் அருள உடனே சரஸ்வதி நதி ரூபாமெடுத்து தேவலோகத்தில் சீறி வந்து கொண்டிருந்த தவத்தீயை எதிர்கொண்டு, அதனைச் சுமந்து சமுத்திரத்தில் விட்டு அழித்துவிட, தேவர்கள் அமைதி பெறுகின்றனர்.

தான் பெற்ற வரத்தால் தான் கலைவாணி **அந்தர் வாஹினியாகி** இன்றளவும் நாட்டில் பல இடங்களில் மனிதர்கள் அறியா வண்ணம், பிரயாகையிலும் கண்களுக்கு புலப்படாது கங்கை, யமுனையுடன் கலக்கிறாள்.

சரஸ்வதி தேவிக்கும், தமிழ்ப்பெரும் **புலவர் ஒட்டக் கூத்தர்** வாழ்க்கைக்கும் பெருந்




தொடர்பு உண்டு. புலவர் கூத்தர் சிறந்த சிவபக்தராயும், அதே சமயம் அன்னை வாணி தேவியின் பெரும் பக்தராகவும் திகழ்ந்தார். அவர் கொண்ட நெடுநாளைய விருப்பம் **தான் ஒரு வரகவியாக** வேண்டுமென்பது. கல்விக்கடவுளின் அருள் பெரும் பொருட்டு புலவர் தவம் புரிய சித்தம் கொண்டு **ஹரி** நதிக்கரையை நாடிச் சென்றார். அதுவே தஞ்சை மாவட்டத்தில் ஓடிக் கொண்டிருக்கும் இன்றைய **அரசலாறு** நதியோரத்தில் அவர் நடக்கையில், அவர் கண்ணில் பட்ட **அரிநா தேஸ்வரம்,** (இன்றைய கும்பகோணம் சமீபமுள்ள கூத்தவர் தலம்) தனக்கு உகந்ததாகத் தோன்றவே கலைமகளைத் துதித்து கூத்தர் அங்கேயே அமர்ந்து கடுந்தவமிருந்தார்.

புலவர் கூத்தரின் தவத்தால் மனம் கனிந்த அன்னை சரஸ்வதி, அவருக்கு காட்சி தந்து "நீ இனி சிறந்த வரகவியாக திகழ்வாயாக"! என வரமளித்து மறைந்து போனாள். அன்று முதல் வரகவியான கூத்தரின் கவி பாடும் திறன் மேம்பட்டதோடு, அவரது புகழ் எங்கும் பரவத் தொடங்கியது.

தன்னிடம் ஒட்டக்கூத்தர் கேட்ட மற்றொரு வரத்தின்படி சரஸ்வதி ஹரிநாத புரத்திலேயே குடிகொள்ள இசைந்தாள். **"ஆற்றங்கரை**

**"சொற் கிழத்தி"** என கூத்தரால் அவர் பாடிய 'தத்தையாக பரணியில்' வர்ணிக்கப்பட்ட அன்னை சரஸ்வதி கொண்ட ஒரே தனிக் கோயிலே இன்றைய கூத்தனூரில் அமைந்துள்ளது. ஒட்டக் கூத்தரை சிறப்பிக்கும் வகையிலேயே அப்பெயர் அவ்வூருக்கு இடப்பட்டது என்பது பழைய நூற்கள் மூலம் தெரியவருகிறது.

கூத்தனூருக்கு சிறப்பு சேர்க்கும் வகையில் ஒரு சுவாரசிய சம்பவம் உள்ளது.

புருஷோத்தமன் என்பவர் பிறவியிலிருந்த வாய் பேசும் சக்தியற்றவராக இருந்தார். இதனால் மனம் வருந்திய அவருடைய பெற்றோர்கள் வேண்டாத தெய்வமில்லை. அப்போது வாலிபனாக இருந்த புருஷோத்தமன் கை சைகைகள் மூலம் அவர்களிடம் தான் பேசும் சக்தி பெற, தவம் மேற்கொள்ள அனுமதிக்கும்படி கேட்டு,

**“சியாமளா தேவியை போற்றிப் பூஜித்த சாதாரண குடிமகனான காளிதாசன் பல காவியங்களை படைக்கும் திறனைப் பெற்ற மகாகவியானார்.**

www.TheMagnet.com

பெற்றோர்கள் இசைவுடன், தன் தவத்தை மகாவிஷ்ணுவைத் துதித்துத் தொடங்கி விட்டார்

பல நாள் புருஷோத்தமன் செய்த தவத்தால், மகாவிஷ்ணு மனம் குளிர்ந்து அசரீரியாக அவருக்கு இப்படி ஆணையிட்டார். "நீ கொண்ட லட்சியத்தை அடைய, இனி உன் தவம் கூத்தனூரில் குடி கொண்ட சரஸ்வதியை நோக்கி அமையட்டும்!" என. அதன்படி புருஷோத்தமன் தன் தவத்தை மீண்டும் ஆரம்பித்தார். அவர் செய்த தவம், சரஸ்வதியைத் திருப்தி செய்துவிடவே தேவி ஒரு நவராத்திரி விஜயதசமி புண்ணியத் தினத்தன்று அவர் முன்பு திருக்காட்சியளித்து "இன்று முதல் நீ பேசும் சக்தியைப் பெறுவதுடன், உனக்கு கவி பாடும் திறனையும் அளிக்கிறேன்" என்று வரம் தந்து மாயமானாள். அன்று முதல் புருஷோத்தமன் நாடறிந்த கவிஞனாக திகழ ஆரம்பித்தார். கலைவாணி மீது அவர் இயற்றிய பாடல்கள் ஏராளம். அதனால் மக்கள் அன்புடன் அவரை **'புருஷோத்தம பாரதி'** என அழைக்கத் தொடங்கினர்.

இப்படி பிரசித்தியான கூத்தனூரில் **திருச்சுற்று, முகமண்டபம், அந்தரானம், கருவறை** ஆகியவற்றைக் கொண்ட ஆலயத்தில் சரஸ்வதி தேவி தவக் கோலத்தில் வெள்ளைத் தாமரையில் பத்மாசனம் பூண்டு அமர்ந்திருக்கிறாள். தேவி நான்கு கரங்களுடன் விளங்க, பின் இருகரங்களில் **அக்க மாலை** எனும் **ஜெபமாலை, கமண்டலம்** அழகு செய்ய முன் இரு கரங்களில் **ஓலைச் சுவடி, சின் முத்திரை** அலங்காரமாக காட்சியளிக்கிறது. கந்த புராணத்தில் சரஸ்வதி வர்ணிக்கப்பட்டவாறு அவள் சர்வ ஆபரணங்கள் ஜடாமகுடம் இவற்றுடன் முக்கனி, கருணை முகம் பூண்டு அளிக்கும் திருக்காட்சி எவர் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளும்.

இவ்வாலய சிறப்பாக, மற்றொரு சிறப்பை ஆண்டுதோறும் இங்கு கொண்டாடப்படும் விஜயதசமி பூஜையன்று காணமுடியும்.

அந்த புண்ணிய தினத்தில் தேவி சரஸ்வதியின் பாதங்களுக்கு பக்தர்கள் தாமே பூஜை செய்யும் வாய்ப்பை அளிக்கும் வகையில், அம்பாளின் பாதங்களில் ஆரம்பித்து அர்த்த மண்டபம் வரை ஆலயத்தில் அப்பாதங்கள் நீண்டாற் போல 'மலர்ப்பாதை' அமைத்து விடுவார்கள்.

புதிதாக கல்வி பயில உள்ள சிறுவர், சிறுமியர் ஒன்று கூடி பூஜை செய்து படிக்கத் தொடங்கும் நிகழ்ச்சியும் கூத்தனூர் சரஸ்வதி கோயிலில் அமைந்து பெருமை சேர்க்கின்றன.

கிராமப் புறங்களிலும் கலைமகள் வழிபாடு முக்கியத்துவம் பெறுகிறது. கிராமவாசிகள் தேவியை **பேச்சியம்மன், பேச்சாயி** என்ற பெயர்களில், கோயில் அமைத்து பூஜிக்கிறார்கள். மந்திர

சாஸ்திரங்கள் வாணியை **ருத்ரவாஹீஸ்வரி, விஷ்ணு வாகீஸ்வரி, நகுலி, வாக்தேவி, பரா சரஸ்வதி, தாரண சரஸ்வதி, நீல சரஸ்வதி, நித்ய சரஸ்வதி, வாக் வாதீனி நர்த்தன சரஸ்வதி** எனக் குறிப்பிட்டு அழைக்கின்றன.

**அ**ன்னை சரஸ்வதிக்கு உகந்த தினங்கள் இவைகள் என்பதை பல புராண நூல்கள் எடுத்துரைக்கின்றன.

அவை, புரட்டாசி, சித்திரை மாதங்களில் இடம் பெறும் நவராத்திரி தினங்கள், பௌர்ணமி, சோம வார விரதம், அநந்த திருதியை விரதம், செவ்வாய் வெள்ளி விரத நாட்கள், ரச கல்யாணி அநந்த திருதி யோடு கூடிய நாள், ஆருத்திரா திருவாதிரை நட்சத்திரத்துடன் இணைந்த திருதியை கூடிய நாள் ஆகியவைகள்.

**ம**காகவி ஒட்டக் கூத்தர், புருஷோத்த பாரதி இவர்கள் தவிர மகாசரஸ்வதியை வழிபட்ட, நோக்கித்தவம் இருந்த எத்தனையோ பேர்கள் தேவி அருள் பெற்று சிறப்புகள் பெற்றுள்ளனர். அவர்களில் ஒரு சிலர் இவர்கள்.

அன்னை சரஸ்வதியைத் துதித்து போற்றியதால் தான், படைப்புக் கடவுள் **பிரம்ம தேவன்,** பதிஞானத்தின் உட் பொருளை சனத் குமாரர்க்கு உபதேசிக்க முடிந்தது.

**வால்மீகி முனிவர்** புராண சூத்திரங்களை வியாச முனிவரிடம் எடுத்து இயம்பவும், **பிரகஸ்பதி** சப்த சாஸ்திர நூலை தேவர்களின் அதிபதி இந்திரனுக்கு கற்பிக்கவும், மகாபாரதம், பிரும்ம சூத்திரம், பதினென் புராணங்களை மகான் **வியாசர்** படைக்கவும், கல்வி ஞானமேயற்ற **காளிதாசர்** சிறந்த கவியாக ஆனதும், எல்லாம் வல்ல அன்னை சரஸ்வதி கடாட்சத்தால் தான்!

**அ**டுத்து அன்னையின் அருளாசி கிடைக்கப்பெற்றவர்களின் வரிசையில், பிரபல **யாக்ஞவல்கிய மகரிஷி,** அமர கோசம் எனும் சமஸ்கிருத அகராதியை உருவாக்கித் தந்த **அமரசிம்மன்,** மன்னன் **போஜன்,** மகான் **ராமானுஜர்,** காப்பிய நாயகி **மணிமேலை,** பாமதி நூல் படைப்பாளர் **வாசஸ்பதி மிச்ரர்,** திருவாமாத்தூர் **இரட்டைப்புலவர்கள், கவிகாளமேகம், கவிச் சக்கரவர்த்தி கம்பர், குமரகுரு** அவர்கள், **அஸ்வ கோஷா, பாரவி, மாகா, ஸ்ரீவர்ஷா தாந்தின், சுபந்து, பாணபட்டா, ராஜ சேகரா பர்த்ருஹரி, மகாகவி பில்ஹணா, ஹல்கனா,** தமிழக வரகவி **சுப்பிரமணிய பாரதி, யோகி சுத்தானந்த பாரதியார்** இவர்களும் அடங்க, அந்த பட்டியில் இன்னும் முடிவடையவில்லை.

**"வாணிக் கலைத் தெய்வம் மணிவர்க்குதவிடுவாள்**
**ஆணி முத்தைப் போலே அறிவு முத்து மாலையினாள்**
**காணுகின்ற காட்சியைக் காண்பதெல்லாம் காட்டுவதாய்**
**மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே"**

என்று மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பாடி மகிழ்ந்த வாணி தேவியை புராண நூல் ஒன்றின் மூலம் எட்டு வகைப்படுத்தப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

வாகீஸ்வரி சித்ரேஸ்வரி, துளஜா, கீர்த்தீஸ்வரி, அந்தரிட்ச சரஸ்வதி, கட சரஸ்வதி, நீல சரஸ்வதி, கிளி சரஸ்வதி என்பவைகளே அவை.

www.TheMagnet.com



தாரா வித்தையின் அங்கமானவள் **கட சரஸ்வதி.** இத்தேவியை உபாசனை செய்துதான் சாதாரண கவிஞராக இருந்த தண்டி மகாகவியானார்.

மன்னன் சாலிவாகனன் சகலவித்திலும் பராக்கிரமசாலியாகத் திகழ்ந்த அரசன் விக்ரமாதித்தனை வெல்ல முடிந்தது. அவர் தேவி சித்ரேஸ்வரியை ஆராத்தித்தால்தான்.

**தா**ராவான சரஸ்வதி தேவியை பரம்பொருளாகப்பாவித்து, ஸ்ரீ தாரோபநிஷத் **பிரபஞ்சசார தந்திரம், மந்த்ர மாகார்ணவம், ருத்ரயாமளம், மந்திர மகோததி** போன்ற வரலாற்றுகால நூல்கள் பல்வேறு விதமாக ஆராதிக்கும் முறைகளை செவ்வனே விவரித்துள்ளன.

இவைகளில் மட்டுமின்றி ஸ்ரீமத் பாகவத நூலில், ஒரு அத்தியாயத்தில் சரஸ்வதி தேவி குறித்தான துதிகள், பூஜை கவசங்கள் குறித்து விளக்கப்பட்டுள்ளது.

அன்னை சரஸ்வதியை எவ்வகையில் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்பதையும், அதற்கான இடங்களையும் பற்றியும் **அஜிதாகமம்** என்ற நூலில் அழகாக இப்படி கூறப்பட்டுள்ளது.

தேவி கலைமகளை, அது கிராமமெனில் அவ்வூரின் உறைவிடங்கள் நடுவில் அல்லது கிராம கிழக்கு மேற்கு எல்லைகளிலோ, கிராமத்தை நோக்கியவாறு நிறுவ வேண்டுமெனவும், சிவாலய தென்கிழக்கு, மேற்று, வடமேற்குத் திசை மூலைகளில் தேவி பிரதிஷ்டை நடைபெற வேண்டுமெனவும், நிறுவ வேண்டிய இடம் கிராம எல்லையெனில் கிழக்கு நோக்கியும், சிவாலயங்களில் பிரதிஷ்டையாகும் கோணத்திற்கு ஏற்ப நோக்கு முகமாக அது அமைத்தல் வேண்டுமெனவும், கட்டப்படுவது தனித்தனியாக விருந்தால் நாகர, திராவிட வகை விமானங்களாக தேவிக்கு கட்டப்பட வேண்டுமெனவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள சிவலாயங்களில் ஏன் சில வைணவ ஆயலங்களிலும் கூட, தேவி சரஸ்வதி தனிச் சந்நிதி கொண்டும் கோயில் மண்டபத்தூண்களிலும் உருவச்சிலையாகவோ புடைப்புச் சிற்பமாகவோ காட்சி தருவாள்.

தஞ்சை - திருவையாறு சாலைமார்க்கத்தில் உள்ள **கண்டியூர்** சிவத்தலத்தில் குடி கொண்டுள்ள அ/மி. பிரம சிரக்கண்டீசர் திருக்கோயிலில் மூலஸ்தானம் சமீபத்தில் தேவி சரஸ்வதியின் சிலாரூபம் அமைந்துள்ளது.

கவிச் சக்கரவர்த்தி கம்பர் வணங்கிப் போற்றி வாணி தேவி தென்குமரி பத்மநாபபுரம் கோட்டையில் அருள்காட்சி அளிக்கிறாள். கேரள மக்கள் நவராத்திரி தினத்தில் பத்மநாபபுரம் கோட்டைக்கு வந்து அங்குள்ள தேவி சரஸ்வதியை திருவனந்தபுர ஆலயமொன்றுக்கு ஊர்வலமாக எடுத்துச் சென்று ஆனந்தமாக வழிபாடு நடத்தி, அது முடிவடைந்தவுடன் பழைய இடத்திற்கு கொண்டு சேர்க்கும் வைபவம் அக்காலம் தொட்டு இது வரை நடைபெறுகிறது.

தஞ்சாவூர் பெரிய கோயில், ஸ்ரீ வில்லிப்புத்தூர் ஆலயங்களில் வாணி குடி கொண்டுள்ளாள். தஞ்சை சிவாலயத்தில் தேவி இரு கரத்தோடு மட்டும் தோன்றி அருள்கிறாள்.

காஞ்சிபுரத்தில் பல்லவன் இராஜசிம்மன் கட்டிய கைலாசநாதர் கோயிலில் நான்கு கரங்களுடன் மூன்று இடத்தில் கலைமகளை காணலாம்.

புனித தலங்களில் ஒன்றான இராமேசுவர ஆலயத்தில் பத்ரபீடத்தில் சுகாசனத்தில் சதுர்புஜங்களுடன் கல்விக் கடவுளின் தரிசனம் கிட்டும்.

நாகப்பட்டின மாவட்டத்தில் அமைந்த கடலங்குடி கிராமத்தில் உள்ள திருமேனியர் திருக்கோயிலில், அன்னை சரஸ்வதி பத்ர பீடத்தில் தன் இடக்காலை தொங்க விட்டும், அதன் மேல் வலக்காலை போட்டும் ஆபரணங்களுடன் சிறந்து விளங்குகிறாள்.

நாகூர் நாத ராஜா சிவன் கோயில், திருபழந்துருத்தி சிவலாயம், காஞ்சிபுரம்

காமாட்சியம்மன், கச்சபேசர் கோயில்கள், தஞ்சைப் பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரம், உத்திரமேரூர் சுந்தர வரதப் பெருமாள் கோயில், லால்குடி ஸ்ரீ சப்தரிஷீஸ்வரர் திருக்கோயில் இவைகளுடன் தமிழகத்தின் பல ஆலயங்களில் அன்னை சரஸ்வதி தேவி குடி கொண்டு பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்து வருகிறாள்.

**ந**ம் நாட்டின் வேறு மாநிலங்களில் அமைந்துள்ள பல திருக்கோயில்களிலும் சரஸ்வதி தேவியின் திருஉருக்கள் அமைக்கப்பட்டு பக்தர்களால் ஆராதிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

வட இந்தியாவின் **மவுண்ட் அபு** எனுமிடத்தில் உள்ள **பார்சுவநாத சுவாமி** கோயிலில் **16 தேவியர்களாக** தேவி வட்ட வடிவ அமைப்பில் உள்ளாள்.

**கர்நாடக மாநில** பலகோயில்களில் நாட்டியபாணியில் தேவி நிறுவப்பட்டுள்ளது காணத்தகுந்தது.

திரிபங்கநிலை காட்சி தரும் வாணிச் சிற்பம் **மராட்டி மாநில எல்லோராவில்** உள்ளது.

www.TheMagnet.com

சமண சமயத்தாரும் கலை மகள் வழிபாட்டை கைக் கொண்டுள்ளது கவனிக்கதக்க ஒன்றாகிறது.

சமண ஆகமங்களுக்கு **"சுருது"** என்ற பெயர் விளங்க, சமணர்கள் சரஸ்வதியை **சுருத தேவி, வாக்தேவி** எனவும் **ஜீனஜஸ்வர்யா** என்று அழைக்கிறார்கள். அவர்கள் தேவியை உலோகத் திருமேனிகளில் வடிவமைத்து பூஜித்தார்கள். சமண சமயத்தில் இத்தேவியை எப்படி வடியமைக்க வேண்டும் என்பதை **பிரதிஷ்டா நூல்** என்ற ஆகம நூலில் உள்ளபடி செய்கிறார்கள்.

சமணரைப் போலவே, பௌத்தமதத்தினரும் தேவி சரஸ்வதியை இசைக்கும், கலைகள் அனைத்துக்கும் அதிபதியாக வைத்து பூஜிக்கிறார்கள். இவர்கள் இத் தேவியை **மகாசரஸ்வதி, வஜ்ர வீணா சரஸ்வதி, வஜ்ர சரஸ்வதி, வஜ்ர சாரதா, ஆர்ய சரஸ்வதி** என ஐந்து வகைகளாகப் பிரித்துக் கொண்டாடுகிறார்கள்.




இந்தியா கடந்த வெளிநாடுகளிலும் சரஸ்வதி தேவி வழிபாடு உள்ளது நமக்கு பெருமையைத் தருவதாக உள்ளது.

திபெத்தியர் **'யங்-சனம்'** என்ற பெயரிலும், ஜப்பானியர்கள் **பென்-டென்** என்ற பெயரிலும கலைமகளை வணங்கி வர, ஜாவா, பாலித் தீவுகளிலும் மக்களால் வெவ்வேறு பெயரில் பூஜிக்கப்பட்டு வருகிறாள்.


"தவளமலர்க் கமலமிசை வீற்றிருக்கும் அம்மனையைச் சாந்தம் பூத்த

குவளை மலர்க் கண்ணாளைப் பெண்ணாறும் பெண்ணமுதைத் கோதிலாத

பவள இதழ்ப் பசுங்கொடியை நான்முகனார் நாலுங்கும் பாவை தன்னைக்

தவளமத கயக்கொம்பின் முலையாளைக் கலைமாதைக் கருதுவோமே"

என வள்ளலார் வடலூர் **இராமலிங்க சுவாமிகள்** திருவருட்பாவில் அருளிய கலை தேவி சரஸ்வதியின் திருப்பாதங்களைப் போற்றி அனைத்துக் கலைகளிலும் சிகரம் தொடுவோம்! ●




# குலவிளக்கும், குத்துவிளக்கும்!

"இருந்தானா? இருக்காமா? "காலை வாக்கிங் போய் விட்டு உள்ளே நுழைந்து ஷு" காலிலிருந்து விடுபடுவதற்குள் பிருந்தா கவலையுடன் கேட்டாள்.

"இருந்தான், ஆனா இல்லைன்னு சொல்லிட்டான் நல்லா தேடி பாத்துட்டானாம் இல்லையாம்" என்றேன்.

"எங்க போயிருக்கும்? எல்லாம் பாத்து பாத்து எடுத்து வைச்சும் இப்படி ஆயிடுத்து. போறாத காலம்தான்"

> “ஏண்டா பாச்சு அதை அன்னிக்கே சொல்லித் தொலைக்கறதுக்கு என்ன? என்று எரிந்து விழுந்த போது பாச்சுவுக்கு பாவம் ஒன்றும் புரியவில்லை..”

என்றபடி எனக்கு காபி எடுத்து வர அடுக்களைக்குப் போனாள் பிருந்தா.

விஷயம் இதுதான். இரண்டு நாளைக்கு முன் வீடு அமர்க்களப்பட்டது. போன வாரம்பிருந்தாவின் அண்ணா ரவி, பிள்ளைக்குப் பூணல். பாம்பேயிலிருந்து இங்கு வந்து பண்ணினான். அயோத்யா மண்டபத்துக்கு பக்கத்தில் V.M.A ஹாலில் நடந்தது.

என் மாமியார் சேலையூரில் இருப்பதாலும், மாமனாருக்கு உடம்பு முடியாததாலும் பாச்சு அடிக்கடி வேலை விஷயமாய் (என்ன வேலையில் இப்போது இருக்கிறான் என்பது அவனுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம்) வெளியூர் போவதாலும் பிருந்தாவிடம் பொறுப்பை ஒப்படைக்க, பிருந்தாவுக்கு தலைகால் தெரியவில்லை.

ஒரு வாரமாக ஒரே அலைச்சல் எனக்கு. ஒரு பத்து தடவை மண்டபத்துக்கு போய் வந்தேன். வாட்ச் மேன் ரொம்ப ஃப்ரண்ட் ஆகிவிட்டான். வாழை மரத்துக்கு ஒரு தடவை, நேம் போர்டுக்கு ஒரு தடவை, அப்பளம் பொரிக்க கேஸ் வைத்துக்கொள்ளலாமா என்று கேட்க ஒரு தரம் இப்படி.

வாத்யார் மாமா வைதீக சாமான் லிஸ்ட் மற்றும் கலச பாத்திரங்கள் எழுதி கொடுத்து விட்டார். பிருந்தா எல்லாவற்றையும் தயார் செய்து விட்டாள். ஒரு ஜோடி குத்து விளக்கு மட்டும் கிடைக்கவில்லை.

பிருந்தாவிடம் இரண்டு குத்து விளக்கு இருந்தாலும் இரண்டும் வேறு வேறு சைஸில் என்னையும் அவளையும் போல் இருந்தது. எங்கள் பிளாட் மேல் ஃபிளாட்டில் இருக்கும் கோமளா மாமியிடம் பேச்சு வாக்கில் பிருந்தா சொல்ல “அதுக்கென்ன நம்மாத்துல இருக்கு. பேஷா எடுத்துக்கோ. நம்மாத்து ஃபங்க்ஷன்” என்றாள். பூணலுக்கு கூப்பிடும் லிஸ்ட்டில் கோமளா மாமியும் சேர்க்கப்பட்டார்.

பாச்சு அடிக்கடி வந்து பிருந்தாவுக்கு உதவி செய்வதாக காபி குடித்துக் கொண்டிருந்தான். சாதாரணமாக நாலு பாக்கெட்டில் பிருந்தா மூணு போதும் என்பவள் இப்பொழுது இன்னும் மூணு பாக்கெட் அதிகம் வாங்கினாள்.

ரவி பிருந்தாவுக்கு பட்டுப் புடவை வாங்கி வைத்திருந்தான். எனக்கு லினன் ஷர்ட் , ராம்ராஜ் வேஷ்டி, பூர்வஜாவுக்கு புடவை, ஆத்ரேயா வில் தைத்த பிளவுஸ். பூணல் அன்று மண்டபத்திற்கு, கமலா, அத்திம்பேர் வந்தவுடன் பிருந்தா அவர்களை வரவேற்று “பூர்வஜா ரவி மாமா வாங்கி கொடுத்த டிரஸ்ஸெல்லாம் அத்தைக்கு காட்டு” என்றாள். விஷயம் விபரீதமாகாமல் இருக்க வேண்டுமே என்று பிளாட் பிள்ளையாருக்கு பத்து ரூபாய் போடுவதாக வேண்டிக் கொண்டேன்.

**பா**ச்சுவும் பூர்வஜாவும் போகவர ஐஸ்கீரிமை வெளுத்து வாங்க கடைசி பந்திக்கு இல்லாமல் போக நான் ஒரு 500 கொடுத்து பக்கத்து கடையில் கப் ஐஸ்கீரீம் வாங்கி வைக்கச் சொன்னேன். பாச்சு அதைப் பார்த்து விட்டு “அத்திம்பேர் நீங்க என்ன இந்த ஐஸ் கிரீம் சாப்பிட்டுண்டிருக்கேள். நாங்க ஸ்ட்ராபெரி சாப்பிட்டோம்” என்றான்.

அதனால் தான் நான் இதை சாப்பிட வேண்டியிருக்கு என்று சொல்ல வந்தவன் சொல்லாமல் சிரித்து மழுப்பினேன். எல்லாம் செட்டில் பண்ணி நாடார் கடை குட்டி யானையில் எல்லா சாமானையும் பேக் பண்ணி எடுத்து வந்து பாச்சு எல்லாவற்றையும் ஹாலில் பரப்பி விட்டு ரவியுடன் புறப்பட்டு விட்டான்.

**குருகுலம் மூர்த்தி**



www.TheMagnet.com

நானும் பூர்வஜாவும் முடிந்தவரை எடுத்து வைத்தோம். கோமளா மாமி பூணலுக்கு வந்தவள் அன்று மத்யானமே சொந்தக்காரர் கல்யாணம் என்று கும்பகோணம் புறப்பட்டு விட்டாள்.

அன்று இரவு கேட்டரிங் மீந்த மோர்க்குழம்பு, புளி இஞ்சி, வடாம்,ரஸம் எல்லாம் வைத்து டின்னர் முடித்து படுத்து விட்டோம்.

காலை நான் எழுந்த போது பிருந்தா ஹாலில் தனக்குத்தானே பேசிக்கொண்டு எதையோ தேடிக்கொண்டிருந்தாள்.

கரிசனமாக "என்ன பிருந்தா?" என்றேன்.

"குத்து விளக்கு எந்த மூட்டையில இருக்குன்னு தெரியலை. பிரிச்ச வரைக்கும் காணும். நம்ம பாத்திரம் எல்லாம் இந்த கட்டை பையில பத்ரமா இருக்கு. அது மட்டும் எங்க இருக்குன்னு தெரியலை."

நானும் தேடினேன். இல்லை. எல்லா மூட்டையும் பிரித்தாயிற்று. கடைசியில் தாம்பூல கவர் உர சாக்கு மட்டும் பாக்கி அதிலாவது இருக்கும் என்ற நம்பிக்கையோடு பிரித்தேன். இருபத்தைந்து தேங்காய் கவர் மட்டும் இருந்தது.

பிருந்தாவுக்கு தலை சுற்றியது." நீங்க கடைசியா வந்த போது மேடையில ஏதாவது இருந்துதா. நன்னா ஞாபகப்படுத்திண்டு சொல்லுங்கோ."

நன்றாக நினைவுபடுத்திப் பார்த்தேன். எதுவும் நினைவுக்கு வரவில்லை.

காபி சாப்பிட்டால் ஒரு வேளை மூளை சுறுசுறுப்படைந்து ஏதாவது ஞாபகத்திற்கு வரலாம். பிருந்தாவுக்கு இருக்கிற கவலையில் என் காபி அவளுக்கு நினைவில் வரவில்லை.

பிருந்தாவின் கவலையெல்லாம் கோமளம் மாமியை எப்படி எதிர் கொள்வது என்பது தான். நம் வீட்டுப் பொருள் எதுவாவது காணாமல் போனால் கூட கொஞ்சம் வருத்தமாக இருக்கும் பிறகு மனசு சமாதானமாகிவிடும்.

இப்படித்தான் 37ஆம் நம்பர் லதா அவர்கள் வீட்டு விஷேஷத்திற்கு கலசம் வாங்கி அது தொலைந்து போக மாமியிடம் "மாமி அந்த கலசம் காணாபோயிடுத்து வேற வாங்கி கொடுத்துடறேன்" என்றதற்கு "பிறத்தியார் ஆத்து சாமான் ஆச்சேங்கற பொறுப்பு இருக்கணும். அது எங்க மாமியார் எனக்கு வரலஷ்மி கலசம் வைக்க கொடுத்த சொம்பு அவா ஞாபகமா இத்தனை வருஷம் பத்ரமா வைச்சிண்டிருந்தேன். இந்த வருஷம் அது இல்லேன்னா அபசகுனமா இருக்கு. யாருக்கும் ஒடம்புக்கு ஒண்ணும் வராம இருக்கணும்" என்று சொல்லிக் கொண்டிருந்தாள். லதாவுக்கு ஏன் வாங்கினோம் என்று ஆகிவிட்டது.

கோமளம் மாமி வியாக்கிழமை வந்து விடுவாள். எப்படி சமாளிப்பது-? பிருந்தா அம்மாவுக்கு போன் பண்ணி ஒரு வேளை தவறுதலாக அங்கு வந்திருக்குமோ என்று கேட்டாள். அங்கும் இல்லை.

மண்டபத்துக்குப் போன் பண்ணினாள். என்னை அனுப்பினாள். நான் பத்தோடு பன்னிரன்டாக இன்னும் இரண்டு நடை போனேன். வாட்ச் மேன் இன்றுதான் இருந்தான். அவனும் கையை விரித்து விட்டான்.

"என்ன பண்ணலாம் என்றாள்" பிருந்தா.

"பிருந்தா கவலைப் படாதே. இன்னிக்கு சாயங்காலம் மயிலாப்பூர்ல ஒரு கும்ப கோணம் பாத்திர கடை இருக்கு. அங்க போய் அதே சைஸ்ல ஒரு ஜோடி புது குத்து விளக்கு வாங்கி வந்துடலாம்" என்று சொன்னவுடன் பிருந்தா கொஞ்சம் பிரகாசமானாள்.

"மாமி என்ன சொல்லுவாளோ ? லதாவுக்கு ஆன மாதிரி எங்க அம்மா கொடுத்த குத்து விளக்கு ஆகி வந்தது. புதுசுன்னாலும் அது மாதிரி ஆகுமான்னு சொன்னா என்ன பண்றது.?"

"பகவான் மேல பாரத்தைப் போடு" .என்று சமாதானப் படுத்தினேன். காபி கொடுத்தாள். சாயங்காலம் மயிலாப்பூர் போய் செல்போனில் பூர்வஜா பிடித்த போட்டோவில் இருந்த குத்துவிளக்கை பார்த்து வாங்கலாமென்றால் கடையில் நிறைய இருந்ததில் எது என்று குழப்பம். ஒரு வழியாக வாங்கி வந்து விட்டோம்.

மறு நாள் கோமளம் மாமி ஊருக்கு வந்து விட்டாள். ஏழு மணிக்கு மேல் பட்சணம் கொடுக்கிற சாக்கில் நானும் பிருந்தாவும் புது குத்து விளக்கு பட்சணத்துடன் போனோம்.

www.TheMagnet.com





கோமளம் மாமி மாமாவை பையை ஜிப் கிழித்ததற்காக திட்டிக்கொண்டிருந்தாள். மாமா நாக்கைத் துருத்திக் கொண்டு எப்படியாவது ஜிப்பை சரியாக்கி விடலாம் என்று சரி பார்த்துக் கொண்டிருந்த சுப வேளையில் போய் சேர்ந்தோம்.

மாமி எங்களைப் பார்த்ததும் "ரொம்ப சந்தோஷம் நன்னா இருந்தது ஃபங்க்ஷன் வாங்கோ" என்றாள். ஹாலில் மேஜை மீது நாங்கள் அவரிடம் இரவல் வாங்கின குத்து விளக்கு சமர்த்தாக நின்று கொண்டிருந்தது.

நான் பிருந்தாவைப் பார்க்க பிருந்தா என்னைப் பார்த்தாள். மாமி எங்கள் கையில் இருந்த குத்து விளக்கைப் பார்த்தாள்.

"நன்னா இருக்கே நம்மாத்து மாதிரியே இருக்கே எங்க வாங்கினேள்?. நானே இப்ப கும்பகோணம் போனபோது நாச்சியார் கோவிலேர்ந்து உனக்கு ஒரு ஜோடி வாங்கிண்டு வரலாம்னு இருந்தேன். நீயே வாங்கிட்டே. நல்லது தான் இதெல்லாம் ஆத்துல இருக்கணும். நாளும் கிழமையும் வரும்போது இதை ஏத்தி வைச்சா லஷ்மி கரமா இருக்கும் "என்றாள்.

"ஆமா. அதான் இவரும் சொன்னார் வாங்கிண்டு வந்தோம்" என்று பிருந்தா சிரித்து மழுப்பினாள். குத்து விளக்கு எப்படி இறக்கை முளைத்து இங்கு வந்தது என்று தெரிந்து கொள்ள ஆசை. நல்ல வேளை கோமளம் மாமியே சொல்லி விட்டாள்.

"அன்னிக்கு புறப்படும் போது நான் ரவி ஒய்ஃப் கிட்ட "ஏம்மா, நான் ஆத்துக்குப் போறேன் ஏதாவது எடுத்துண்டு போகணுமா"ன்னு கேட்டேன். அவ தான் "இந்த தாம்பாளத்தையும் குத்து விளக்கையும் முடிஞ்சா எடுத்துண்டு போயிடுங்கோன்னா. உன்னை காணல பாச்சு எதிர்ல வந்தான் பிருந்தா கிட்ட நான் குத்து விளக்கு எடுத்துண்டு போயிட்டேன்னு சொல்லிடுன்னு சொன்னேன். இந்தா உங்காத்து தாம்பாளம்" என்று நாங்கள் தேடாத தாம்பாளத்தை கொடுத்தாள்.

மாமாவிடம் நான் விடை பெற்றுக்கொண்டு பிளாட்டுக்கு நிம்மதிப் பெருமூச்சுடன் வந்து குத்து விளக்கை பத்திரமாக ஹாலில் வைத்தோம். சிறிது நேரத்தில் கோமளம் மாமி வந்து," பிருந்தா கும்பகோணம் முராரி ஸ்வீட்லேர்ந்து பூர்வஜாவுக்குப் பிடிக்கும்னு சோன் பாப்டியும் மணிக்காரா பூந்தியும் வாங்கிண்டு வந்தேன் கொடுக்க மறந்து போச்சுன்னு" கொடுத்து விட்டுப் புறப்படுவதற்கும் பாச்சு உள்ளே வருவதற்கும் சரியாக இருந்தது.




"அப்படி போடுன்னான் முராரி பார்சலா?" என்று பிரித்து ஒரு வாய் போட்டுக் கொண்டு " பிருந்தா அடுத்த ஞாயிற்றுக்கிழமை ரவி சோக்கிதானி போகலாம்னு சொல்றான். ரெடியாயிரு. அப்பறம் சொல்ல மறந்துட்டேன் கோமளம் மாமி அவாத்து குத்து விளக்கை எடுத்துண்டு போயிட்டேன்னு உங்கிட்ட சொல்ல சொன்னா. ஸாரி மறந்து போயிடுத்து."

"ஏண்டா பாச்சு அதை அன்னிக்கே சொல்லித் தொலைக்கறதுக்கு என்ன?" என்று எரிந்து விழுந்த போது பாச்சுவுக்கு பாவம் ஒன்றும் புரியவில்லை.

இந்த முறை நவராத்திரிக்கு கொலுவுக்கு வரும்போது எங்கள் வீட்டு கொலுவுக்கு முன் புது குத்துவிளக்குகள் பளிச்சென்று எரியும். தயவு செய்து அந்த குத்து விளக்கு இதுதானா என்று கேட்டுத் தொலைக்காதீர்கள். ●



கவிதை

# மோதகம்

கணநாதன் இடக்கரத்தில்
இனித்த மோதகம் – உமை
அளித்த மோதகம்.
குணநாதன் அனைவர்க்கும்
நல்கு மோதகம் – ஞானம்
மல்கு மோதகம்.....

அண்டம் பேரண்டம் – அது
பிரம்ம மோதகம் – பரப்
பிரம்ம மோதகம்.
பிண்டம் சிறு பிண்டம் – இது
பூத மோதகம் – பஞ்ச
பூத மோதகம்.....

பிரம்ம பூரணத்தின் உள்ளே
ஆத்ம பூரணம் – பர
மாத்ம பூரணம்.
பூத மோதகத்தின் உள்ளும்
ஆத்ம பூரணம் – ஜீ
வாத்ம பூரணம்.....


பூரணமும் பூரணமும்
ஐக்யமாகணும் – ஒன்றி
ஐக்கியமாகணும்.
வாரணவன் அனைவர் கீதம்
பாக்யம் – ஸவ்
பாக்யம் அருளணும்!

- ஸவ்மித்ரி

www.TheMagnat.com

காரல் டாக்ஸியின் பின் ஸீட்டில் இருந்த அப்பா, வழக்கம் போல எதுவுமே பேசவில்லை. வெறுமனே, வேகமாகக் கடந்து போகும் தெருக்களையும், மற்ற காட்சிகளையும், பார்த்தவாறே இருந்தார். என்னையும், சுஜாவையும் அவர் தவிர்ப்பது நன்றாகவே புரிந்தது.

அப்பா, இப்படி திடீரென்று, முதியோர் இல்லத்திலிருந்து வீட்டுக்குத் திரும்பி வரும் முடிவுக்கு எப்படி வந்தார்? இன்ப அதிர்ச்சியாக இருந்தாலும், முடிவுக்கான காரணம் புரியவில்லை. டிரைவர் பக்கத்தில் அமர்ந்திருந்த நான் அவரைத் திரும்பிப்




www.TheMagnat.com

# அப்பா

சுதேவன்

பார்த்தேன். சரி, அப்புறம் அவரிடம் கேட்டுக் கொள்ளலாம் என்றெண்ணி, சுஜாவின் பக்கம் திரும்பினேன். அவளும் இப்போது வேண்டாமென கண்களாலேயே சொன்னாள்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு, ஒரு நாள் திடீரென்று, "டேய் ஜகன், என்னை ஏதாவது முதியோர் இல்லத்தில் சேர்த்து விட்டுடு..." என்றார்.

எனக்கு பேரதிர்ச்சியாக இருந்தது. என்ன இவர் திடீரென்று இப்படி சொல்கிறாரே? நானும், சுஜாவும் அவருக்கு எந்தக் குறையும் வைத்தது இல்லையே. அப்பா இயற்கையாகவே ரொம்ப சாதுவானவர். நாங்கள் கூட எப்போதுமே அவரிடம் இரைந்து பேசியதில்லை. அவர் எதையுமே கேட்க மாட்டார். நாங்களாகவே அவர் தேவைகளை அறிந்து பூர்த்தி செய்து விடுவோம். அவருக்குக் குறை என்று எதுவுமேயில்லை என்று தான் தோன்றியது. அதே அன்பு தவழும் புன்னகை, மாற்றமே இல்லாமல் இருந்தது.

அரசாங்க உத்தியோகத்தில் இருந்த போதும் சரி, ரிடையர் ஆன பின்பும் சரி, எதற்காகவும் ஆசைப்பட மாட்டார் அப்பா. என்னை நன்றாகப் படிக்க வைக்க வேண்டுமென்றெண்ணி, பட்டப்படிப்பு முடித்ததும், வேலை தேடக் கூட சந்தர்ப்பம் கொடுக்காமல் முதுநிலைப் படிப்பில் சேர்த்து விட்டார். பணத்துக்கு சமாளிப்பதைப் பற்றி எங்களிடம் ஒரு



மகன்: அப்பா அம்மா என்னை அடிக்கறாங்க.

அப்பா: என்ன பண்றதுப்பா. நீ சொல்லிட்டே. நான் சொல்ல முடியாம 10 வருடமா தவிக்கறேன்.

- சரவெடி ஸ்ரீதர்

வார்த்தை கூட பேசியதில்லை. எப்போதும் மாறாத புன்னகை.

அம்மா, இது இல்லை, அது இல்லை, இது வேணும், அது வேணும், என்று சொல்லும் சந்தர்ப்பமே இருந்ததில்லை. அத்தனை தேவைகளையும் குறிப்பறிந்து தானாகவே நிறைவேற்றி விடுவார். பண்டிகைக் காலங்களில், நச்சரிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. தீபாவளி, பொங்கல், புது வருடப் பிறப்பு எதுவாயிருந்தாலும், துணிமணியிலிருந்து, ஸ்வீட், பட்சணங்கள் வரை, எல்லாம் சரியான நேரத்தில், தேவையான அளவில் வீட்டை வந்தடைந்து விடும்.

சர்வீஸில் சம்பளம் வாங்கிய போதும், ரிடையர் ஆகி பென்ஷன் வாங்கும் போதும், அப்பா எவ்வளவு, எதற்கு செலவழிக்கிறார் என்றே தெரியாது. பல நாட்களுக்குப் பின் யார், யாரோ, பார்க்கும் போதெல்லாம், உங்கப்பா தான் ஸ்கூல் ஃபீஸ் கட்டினார். அவர் தான் ஆஸ்பத்திரியில் ஆபரேஷனுக்கு பணம் கட்டினார். என் பெண் கல்யாணத்துக்கு பணம் கொடுத்து உதவினார், என்றெல்லாம் சொல்வார்கள். அதையெல்லாம் கேட்கும் போது அப்பாவை நினைத்துப் பெருமை கொள்வேன்.

பிறகு, இதைப் பற்றி அவரிடம் குறிப்பிட்டாலும், பெரிதாகக் காதில் வாங்கிக் கொள்ள மாட்டார். சிறிதாக புன்னகைத்து விடுவார். அம்மா, இதய நோயில் விழுந்து, சாகும் போது, என் கையை பிடித்துக் கொண்டு, "ஜகன், அப்பா ரொம்ப நல்லவர்டா. எதுவும் பேச மாட்டார். அவர் மனம் நோகாதபடி நடந்துக்க. அவருக்கு எந்தக் கவலையையும் கொடுத்திடாதே. குறையேதும் வராத மாதிரி இருந்துக்கோ..." என்று சொல்லி விட்டுத் தான் கண்களை மூடினாள்.

அப்பாவிடமிருந்து தான் நிறைய நல்ல விஷயங்களைக் கற்றுக் கொண்டேன். பணிவு, எளிமை, நேர்மை யாரிடமும் குறை காணாத பண்பு, பிறர்க்கு தானாகவே செய்யும் உதவி, அதைப் பற்றி வெளியே காட்டிக் கொள்ளாத பெருந்தன்மை,

**“அப்பாவிடமிருந்து தான் நிறைய நல்ல விஷயங்களைக் கற்றுக் கொண்டேன். பணிவு, எளிமை, நேர்மை யாரிடமும் குறை காணாத பண்பு, பிறர்க்கு தானாகவே செய்யும் உதவி...”**

இவையெல்லாம் அப்பாவுக்கு ரத்தத்திலேயே ஊறிய குணாதிசியங்கள். அம்மா கேட்டுக் கொண்ட மாதிரியே, அப்பாவுக்கு எந்தக் குறையும் வராத மாதிரி தான் பார்த்துக் கொண்டேன்.

நான், சுஜாவை மணந்த சம்பவம் கூட, அப்பாவின் பெருந்தன்மைக்கான ஒரு உதாரணம் தான். எப்போதோ உடன் பணியாற்றிய நண்பரின் மரணத்தைப் பற்றி, இன்னொரு நண்பரின் மூலம் கேட்டறிந்து, விசாரிக்கச் சென்றவர், தாய், தந்தை இருவரையும் இழந்து, மற்ற உறவினர்களின் அரவணைப்பில் வாடி நின்ற சுஜாவை, ஆறு மாதத்துக்குள் பணச் செலவே இல்லாமல், மிக எளிமையாக, ஒரு கோவிலில், தாலி கட்டச் செய்து, என் கையை அவளோடு இணைத்து, மருமகளாக்கிக் கொண்டார். பலர், அவரின் இந்தப் பெருந்தன்மையைப் பாராட்டிப் பேசினாலும், பதில் பேச மாட்டார். புன்னகைப்பார்.

சுஜாவும், அப்பாவைத் தன் தந்தையாகவே பாவித்து, "அப்பா", "அப்பா", என அன்பைப் பொழிவாள். தான் நன்றிக் கடன் பட்டவௌன்று எப்போதும் நினைப்பாள்.

இப்படியெல்லாம், எந்த விதமான மனக் கசப்பும் இல்லாமல் இருந்தும், அப்பா, திடீரென்று முதியோர் இல்லத்தில் தன்னைச் சேர்த்து விடச் சொன்னது, எனக்கு இடி விழுந்தாற் போல இருந்தது. நான் என்ன தவறு செய்தேனோ என்று மனம் பதபதைத்தது. அவருடைய இந்த முடிவுக்குக் காரணம் தான் என்ன?

நானும், சுஜாவும் இரண்டு நாட்களுக்கு உண்ணாவிரதம் இருந்து பார்த்தோம். அழுதோம், கெஞ்சினோம். அப்பா அசைந்து கொடுக்கவே இல்லை. "என்னை முதியோர் இல்லத்தில் கொண்டு போய் விடு" திரும்பவும் சொன்னார். வேறு வழியேயில்லை.

நண்பர் ஒருவர் மூலமாக, அந்த முதியோர் இல்லத்தைத் தேர்ந்து எடுத்தேன். சகல வசதிகளும் நிறைந்த, பாதுகாப்பான முதியோர் இல்லம் அது. நல்ல மருத்துவ வசதி, சிறந்த சூழ்நிலை, நல்ல கவனிப்பு, தரமான உணவு...

இருவரும் அப்பாவை, அங்கு கொண்டு போய் விட்டு விட்டு திரும்பி வந்த போது மனம் கனத்தது. அப்பா, ஏன் இப்படியொரு முடிவெடுத்தார்? புரியவில்லை. ஆனாலும், அவருக்கு எங்கள் மீது அதிருப்தி என்பதற்கான அறிகுறி சிறிதளவும் இல்லை. அதே அன்பு கலந்த புன்னகை. என்ன செய்வது? சோகம் கப்பிய, தோல்வியால் துவண்ட, வேறென்ன, சிரமப்படாத சாவு வேண்டுமென்ற எதிர்பார்ப்போடு ஏங்கித் தவிக்கும், அந்த முதியோர்க் கூட்டத்தில், வலியப் போய் சேர்ந்து கொண்டார் அப்பா.

அவர் இல்லை என்ற போது, எங்களுக்கு வீடே வெறிச்சோடிக் கிடப்பதாய் பட்டது. எதிலும் மனம் லயிக் கவில்லை. இரண்டு நாளைக்கு ஒரு தடவை அப்பாவிடம், கை பேசியில் பேசுவோம். வாராவாரம், ஞாயிற்றுக் கிழமைகளில், வீட்டில் இருப்புக் கொள்ளாமல், முதியோர் இல்லம் சென்று அப்பாவைப் பார்த்து பேசி விட்டு வருவோம். அப்பாவிடம் எந்த மாற்றமும் இல்லை, அதே பழைய ஸ்நேகம் கலந்த புன்னகை. எப்படித் தான் அவரால் எந்த சூழ்நிலையிலும் மாறாமல் இருக்க முடிகிறதோ? மற்ற

முதியவர்கள், இனம் புரியாத எண்ணத்தோடு, எங்களையும், அப்பாவையும் அதிசயமாக பார்த்தார்கள்.

இப்படியே, இரண்டாண்டுகள் ஓடி முடிந்திருக்கும். ஒரு ஞாயிற்றுக் கிழமை, காலை, பழங்கள் நிரம்பிய பையுடன், அப்பாவைக் காண முதியோர் இல்லம் சென்றோம்.

அப்பா, தன் அறையில், சலவை செய்த வெள்ளை வெளேர் வேட்டிச் சட்டையுடன் கட்டிலில் உட்கார்ந்திருந்தார். அவருடைய பெட்டி தயாராக இருந்தது. எங்களை எதிர்பார்த்து காத்திருந்தாற் போல "ஜகன் சீக்கிரம் பணத்தை செட்டில் பண்ணிட்டு வா. இன்னைக்கே இங்கிருந்து நான் வீட்டுக்கு வந்துடறேன்." என்ன இது? எனக்கு அதிர்ச்சியாயிருந்தாலும், மகிழ்ச்சியாகத் தான் இருந்தது. இரண்டு வருடங்களாக, ஏதோ பெரும் குற்ற உணர்ச்சியில் வாழ்ந்து வந்த எங்கள் இருவருக்குமே, பெரியதாக தீர்வு கிடைத்து விட்ட மாதிரியான மனத் திருப்தி ஏற்பட்டது.

இரண்டு வருட இடைவெளி, அப்பாவை பாதித்ததாகவே தெரியவில்லை. ஒன்றும் நடக்காதது போலவே, வழக்கமாகச் செய்யும் தன் பணிகளைத் தொடர்ந்தார். இவருக்கு இதெல்லாம் எப்படி சாத்தியமாகிறது. எனக்கு வியப்பாகவே இருந்தது.

சாப்பிட்டு, சிறிது இளைப்பாற, ஈஸி சேரில் சாய்ந்த அப்பாவின் இரு பக்கத்திலும், நானும், சுஜாவும் அமர்ந்தோம்.

"அப்பா, இப்பவாது சொல்லுங்கப்பா. நீங்க எதுக்காக முதியோர் இல்லம் போனீங்க? ரெண்டு வருஷம் கழிச்சு வீட்டுக்குத் திரும்பி வந்தீங்க? எங்க மேலே ஏதாவது குறை..." நான் முடிக்கவில்லை.

சாய்ந்திருந்த அப்பா, மெதுவாக என் தோள்களைத் தொட்டார். சுஜாவையும் ஒரு முறைப் பார்த்துக் கொண்டார், தொடர்ந்தார்...

"உங்க ரெண்டு பேர் மேலயும் ஒரு தப்புமில்லப்பா, நான் தான் தப்புப் பண்ணிட்டேன்... அதுக்காகத் தான் பிராயச்சித்தம் தேடப் போனேன்... உனக்கு எதுவும் தெரியாது. நீ பொறக்கறதுக்கு முன்னாலே நடந்த விஷயங்கள். எங்கப்பாவை இழந்த கொஞ்ச நாளிலேயே எங்கம்மாவையும் இழந்துட்டேன். சிறு வயதிலேயே விதவையாயிட்ட என் அக்கா தான் என்னை வளர்த்தாங்க. நான் வேலைக்குப் போய் உங்கம்மாவைக் கல்யாணம் செய்து கிட்டதும், யாரோ நண்பன் சொன்னதைக் கேட்டு, புத்திக் கெட்டுப் போய், என் கல்யாண வாழ்க்கை, தோல்வியான வாழ்க்கை வாழும் என்னுடைய அக்காவினாலே பாதிப்புக்குள்ளாகுமோ என்று வீணான கவலையாலே, அக்காவை, அந்தக் காலத்திலேயே, முதியோர் இல்லமா இயங்கிக்கிட்டிருந்த ஒரு சத்தரத்திலே கொண்டு போய் சேர்த்து விட்டேன்."

அப்பா முகத்தைத் திருப்பிக் கொண்டார். அவர் கண்களில் கண்ணீர் வழிவதையும், அதை அவர் துடைத்துக் கொள்வதையும் பார்த்தேன்.

"அப்போதெல்லாம் ரொம்ப கம்மி சம்பளம். இரண்டு பேர் வாழ்க்கையை நடத்துறதே சிரமம். அக்காவைத் துட்டு செலவு செஞ்சி போய் பார்க்கக் கூட முடியலை. மூணு வருஷம் கழிந்தது. அக்காவுக்கு நான் செஞ்ச கொடுமை



> எவ்வளவு உசத்தியானவர் என் அப்பா. சிறு வயதில் ஏதோ ஒரு சூழ்நிலையில், தன் அக்காவுக்கு செய்த தவறுக்காக, வாழ்நாள் முழுதும் ஏங்குகிறார். தன்னைத் தானே தண்டித்து, பரிகாரம் தேடப் பார்க்கிறார்.

என் நெஞ்சை அரிச்சிக்கிட்டே இருந்தது. இந்த நினைப்பு, என் நெஞ்சை வெடிக்கும் அளவுக்கு பூதாகாரமாச்சு. அக்காவைப் போய் பார்த்தேன். சரியான சாப்பாடு இல்லாம, அங்கேயே உழைச்சு, உழைச்சு, வாடிப் போய், நாறாய்க் கிடந்தா அக்கா. தப்புப் பண்ணிட்டோமென்று தோணிச்சு. உடனே அக்காவை அழைச்சுட்டு வந்தேன். வைத்தியர்கிட்ட அழைச்சுட்டுப் போனேன். ஆனால் காலம் கடந்து போச்சு. எந்த பலன் இல்லை. சில நாட்களிலேயே அக்கா காலமாயிட்டா..."

அப்பாவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. சுஜா, ஓடிப் போய்த் தண்ணீர் கொண்டு வந்தாள். குடித்து விட்டுத் தொடர்ந்தார்.

"அக்கா இறந்தப்புறம், எப்பவும் எனக்குள்ள நான் செய்த தவறு உறுத்திக் கொண்டே இருந்தது. நீ பெரியவனானே... அம்மா இறந்தாள்... சுஜாவும், நீயும் என்னை ரொம்ப நல்லா பார்த்துக்கிட்டீங்க. ஆனாலும், என் மனம் நிம்மதி அடையலே. அதனால தான், ஒரு கட்டத்தில், அக்கா அனுபவிச்ச அந்த வலியையும், வேதனையையும், நானும் அனுபவிக்கனும்னு தோணிச்சு. அது தான் சரியான பரிகாரம்னு தோணிச்சு. அதனால தான் என்னை முதியோர் இல்லத்துல சேர்க்கச் சொல்லி வற்புறுத்தினேன்."

அப்பா என் கண்களைப் பார்த்தார்...

"ஆனாலும் ஜகன், நீ சேர்த்து விட்ட முதியோர் இல்லத்துல எந்தக் கஷ்டமும் இல்லே. நல்ல சௌகர்யம் இருந்தது. நீங்களும் தொடர்ந்து, வாரா வாரம் வந்து அன்பா பார்த்துக்கிட்டீங்க... என் அக்கா அனுபவிச்ச சிரமங்களில் ஒரு சதவீதம் கூட நான் அனுபவிக்கல. இது எப்படி பிராயச்சித்தம் ஆகும்? அதுவுமில்லாம, கூட இருந்த மத்தவங்ககிட்ட நானா வந்து தான் முதியோர் இல்லத்தில் சேர்ந்தேன்னு சொன்னாலும், மருமகள் கொடுமையா, இல்லே மகன் சரியாக கவனிக்கறதில்லையான்னு கேட்குறாங்க. நல்லவங்களான உங்க பேரும் கெட்டு, உங்களுக்கு மனக் கஷ்டம் வந்துடுமேங்கிற கவலையும் வந்திடுச்சு. அதனால தான் வீட்டுக்கே வந்துட்டேன்." தான் ஏதோ தவறுக்கு மேல் தவறு செய்து விட்ட மாதிரி, கண் கலங்கி, அழும் நிலைக்கே வந்து விட்டார் அப்பா.

அப்பாவின் கைகளை ஆறுதலோடு இருக்கிப் பிடித்தேன் நான்.

"நான் என்னுடைய தவறுக்கான தண்டனையை இந்தப் பிறவியிலே அனுபவிக்க முடியாது போலிருக்கு... ஹூம்... அடுத்த பிறவியிலாவது, அக்கா மாதிரி வலியை அனுபவிச்சா தான், பரிகாரமா அமையும்..." அப்பா தனக்குத் தானே பேசிக் கொண்டு கண்களை மூடிக் கொண்டார். மன உளைச்சலால் ஏற்பட்ட அசதியாக இருந்திருக்கும். நான் நினைத்துக் கொண்டேன்...

எவ்வளவு உசத்தியானவர் என் அப்பா. சிறு வயதில் ஏதோ ஒரு சூழ்நிலையில், தன் அக்காவுக்கு செய்த தவறுக்காக, வாழ்நாள் முழுதும் ஏங்குகிறார். தன்னைத் தானே தண்டித்து, பரிகாரம் தேடப் பார்க்கிறார்.

அப்பாவைப் பார்த்தேன். என் கண்கள் கலங்கின. எத்தனை பிறவி எடுத்தாலும் நான் உங்களுக்கே மகனாகப் பிறக்க வேண்டுமப்பா. ●

# அக்ஷதை

## மங்கல அரிசி



அட்சதை என்பது மங்கல அரிசி; மந்திராட்சதை, அதுவே மங்களாட்சதை.

நெல்லின் தோடு கழிந்த, முனை முறியாத முழு அரிசி மஞ்சள் பொடியுடன் சேர்ந்து, அது கலந்து மங்கல அரிசியாகி, அட்சதையாக உருவாகிறது.

அரிசிதான் அட்சதையாகி தெய்வ அருள்கூடி ஆசி தருகிறது.

ஆண்டவனின் அருட்பிரசாதம் மங்களாட்சதை. குருவருள் கூடியது மந்திராட்சதை, சடங்குகளிலும் புண்ணிய நாட்களிலும் பெரியவர்களும், பெற்றோர்களும், அகவை முதிர்ந்த சான்றோர்களும் நல்லாசி நல்கும் மங்கல அரிசியே அட்சதையாகிறது.

அட்சதை மிக உயர்வானது. அதனாலேயே அட்சதையை மானுடரின் உயரமான இடமான சிரத்தின் மீது (தலைமீது) தூவி ஆசி நல்குவது மரபு. "அட்சதையை வாங்கித் தலையில் போட்டுக்கோ" என்று கூடப் பெரியவர்களும் புரோகிதர்களும் சொல்வது வழக்கம். அட்சதையை மறந்தும் மிதிக்கக்கூடாது.

மேல் வஸ்திரத்தை தோளில் சார்த்திக்கொண்டு, இரு நுனிகளை இருகரங்களில் பிடித்துக்கொண்டு, நடுவே தொய்யவிட்டு, ஹோமங்கள் நிறைந்ததும், புரோகிதர்கள் மந்திரங்கள் ஓதி மங்கல அரிசியை, கரத்தில் உள்ள வஸ்திரத்திற்குள் தூவி, அட்சதையைத் தாம்பாளத்தில் வடித்தெடுத்து, வழங்குகிற கீர்த்தியும் நேர்த்தியும் தெய்வீகம் நிறைந்ததாகும்.

தாம்பாளத்தில் அட்சதையை ஏந்தியவண்ணம் பெரியவர்களை நமஸ்கரித்து பெரியோர் கரங்களால் அட்சதையை நம் தலைமீது பெற்று ஆசி பெறுவது, நீண்ட கால பாரம்பரியமான மரபு.

அட்சதை வெறும் அரிசி மட்டுமல்ல. வெறும் மஞ்சளின் பூச்சு மட்டுமல்ல. மங்கல அட்சதை மகத்துவமானது. ஆம். அட்சயன் என்றால் கடவுள். அழிவற்றவன் என்று பொருள்.

அட்சயம் என்றால் கேடின்மை என்று பொருள். அட்சய பாத்திரம் நினைவுக்கு வரும். எடுக்க எடுக்கக் குறையாத கலம் அது. அள்ள அள்ள அளிக்கும் பாத்திரமே, அட்சய பாத்திரம் அமுதசுரபி. அட்சதை வளர்ச்சி, மங்களம், அழிவற்ற அமரத்தன்மை இவற்றின் அடையாளச் சின்னம்.

அட்சதையில் வண்ணங்களைக் காணலாம். அரிசி மஞ்சளுடன் சேர்கிற தத்துவம் இதில் இணைந்தது. மஞ்சள் குங்குமம் என்று சேர்த்தே கூறி, வழங்குவர். குங்குமத்துடன் மஞ்சள் சேர்ந்துதான் குங்குமத்திற்குச் சிறப்பு.

மஞ்சள் பொடி அதிகமாக எடுத்து எலுமிச்சை சாறு, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், பசுநெய் கலந்தொன்றிப் பக்குவமாக உருவாவதே குங்குமமாகும். குங்குமத்தில் மஞ்சள் மிகுதி மஞ்சள்

www.TheMagnet.com

குங்குமம் வாங்கிக் கொள்ள மாதர்களை அழைப்பது வழக்கம். குங்குமம் கோதகன்ற திலகம். அதனுடன் மஞ்சள் சேர்கிறபோது மஞ்சள் - குங்குமம் இணைபிரியாத இரட்டையர்கள். அந்த மஞ்சள் அரிசியுடன் கலந்து மங்கல அரிசியாகி அட்சதையின் வடிவமாகிற அருமை பெரிதாகும்.

மங்கலம் என்ற சொல் மஞ்சளின் பிரதிமை மஞ்சளின் வெளிப்பாடு மங்களம். அத்தகைய மஞ்சள், அரிசியுடன் ஒன்றி மங்கல அரிசியாகி அட்சதையாகிற வண்ணங்கள் பலவாகப் பெருகும்.

மஞ்சள் செடி வகை, கிழங்குப் பயிர் வகையைச் சேர்ந்தது. சமமான சீதோஷ்ண பகுதியில் செழிப்பு. சுமார் மூன்று அடி உயரம் வளரக்கூடியது மஞ்சள் செடி.

மஞ்சளில் பல வகைகள் உண்டு. கறி மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், மரமஞ்சள், காட்டு மஞ்சள், பொன் குரட்டு மஞ்சள், கடுக்காய் மஞ்சள் மற்றும் பலா மஞ்சள் எனப் பல்வேறு வகைகளை, மஞ்சள் பயிரிடுவோர்கள் சொல்வார்கள்.

www.TheMagNet.com

குளிர்ச்சி தரும் தன்மை மஞ்சளுக்கு உண்டு. மாதர்கள் முகத்தில் மஞ்சளைப் பூசிக் கொள்வார்கள். உடலில் கூடப் பூசிக் கொள்வதும் உண்டு. பல ஆயிரம் ஆண்டுகள் முன்பு, யூதர்கள் மஞ்சள் குளியல் தொட்டிகளில் நீராடியதாக வரலாறு சொல்கிறது. தங்கம் - பொன் மஞ்சள் நிறம்.

மஞ்சளின் மங்களகரத்தின் உன்னதத்தால் தான் மாங்கல்யத்தை (தாலியை) கூட மஞ்சள் கயிற்றில் சேர்த்தே மண விழாவில் மாங்கல்ய தாரண வைபவம் நிகழ்ந்து வருகிறது. மஞ்சள் முழுமையான மங்களச் சின்னமானதால் தான் அரிசியுடன் கலந்து மங்கல அரிசியாகி, புனித மிகு அட்சதையாகி, அருளும் ஆசியும் தந்து கொண்டிருக்கிறது.

கண்ணன் குழந்தையாக இருந்தபோது பசும் சிறு மஞ்சள் தடவி, நீராட்டியதாக நம்மாழ்வார் பாடிப் பரவசக் பட்டதை அறியலாம். காலங்காலமாக, ஆலயங்களில் பிரசாதமாவும் இந்த அட்சதை வழங்கப்பட்டு வருகிறது. சின்னஞ்சிறிய பிளாஸ்டிக் பைகளில் அட்சதையைப் போட்டு, பத்திரமாக பல இடங்களுக்கு அனுப்புகிறதும் கூட இந்நாளில் நடைபெறுகிறது.

நெல் குத்தி கிடைக்கும் அரிசி சமைத்ததும் சாதமாகிறது. அந்தச் சாதம் தெய்வீக அன்னமாகிறது.

அதே நெல் குத்தி கிடைக்கும் முழு அரிசி, மங்களத்தின் மஞ்சளுடன் கலந்து அட்சதையாகி மங்கல அரிசியாகத் திகழ்கிறது.

அரிசி அன்னமாகி உயிரூட்டுகிறது. அரிசி அட்சதையாகி அருள் சுரந்து ஆசியையும் அனுக்ரகத்தையும் நம்மிடம் சூட்டுகிறது. அரிசி என்பது அளவில் சிறியதானாலும், "மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது" என்ற பழமொழி அரிசிக்கு முற்றிலும் பொருந்துவதாகும்.

அத்தகைய மகத்துவமான மஞ்சள் அரிசியுடள் கலந்து அட்சதையாவதுடன் சமைத்தால், "ஹரித்ரான்னை கரஸிகா" என்பதாக ஸ்ரீ லலிதா ஸகஸ்ர நாமத்தில் அம்பாள் அழைக்கப்படுகிறாள்.

மஞ்சள் பொடி அல்லது குங்குமப்பூ கலந்ததும் அன்னம் மஞ்சள் நிறமாக மாறுகிறது. மஞ்சள் நிறமான அன்னத்தில் மிகவும் பிரியமுடையவள் அம்பாள் என்று ஸஹஸ்ர நாமத்தில் ஒரு நாமமாகக் சொல்லப்படுகிறது. அம்பிகைக்கு உகந்ததான மஞ்சள் நிற அன்னத்தை உண்டால் பக்தர்களுக்கு மனநிறைவும் நெடுவாழ்வும் உண்டாகும். நோய்கள் வராமல் உடல் வலிமை பெறுகிறது.

அம்பிகையின் அருட்பிரசாதமாக அளவோடு உண்பதால் மஞ்சள் நிற அன்னம் - மஞ்சள் கலப்பதால் உடல் நலத்தை காக்கிறது. இவ்வண்ணமாக மங்கலமான மஞ்சள் அரிசியுடன் ஒன்றி, அட்சதையாவதுடன் கூட, அம்பிகைக்குப் பிரியமான அன்னமாகி, அனைவருடைய உடலுக்கும் நலம் பயக்கிறது. ●

பாரதி காவலர் டாக்டர். **கே. ராமமூர்த்தி**


சிறுகதை

# பாதுகாப்பு வளையங்கள்!

அவளை மறுபடியும் சந்திக்க நேரும் என்று அவன் நினைத்ததே இல்லை. அந்தச் சந்திப்பு இன்று நிகழ்ந்தே விட்டது. பள்ளிக்கூடத்துக் கரும்பலகையில் எழுதி அழித்துவிட்ட கோடுகளுள் ஒன்றாகவே போயிருக்க வேண்டிய நிகழ்வுதான் அது. அப்படித்தான் அவன் நினைத்திருந்தான். ஆனால் அவள் அதைக் கல்வெட்டாய்த் தன்னுள் பதிவுசெய்து கொண்டிருப்பாள் என்று யார் கண்டது?

வாழ்க்கையில் சுவை என்று எதுவுமே இல்லை அவனுக்கு. எடுத்ததற்கெல்லாம் கோபம் வருகிறது. யார் மேலுமே நம்பிக்கையில்லை. தன் மீதேகூட அவனுக்கு மரியாதை இல்லை. எல்லோருமே தன்னை வெறுக்கிறார்கள். தனக்கு என்று யாருமே இல்லாத அனாதையாகி விட்டோம் என்கிற உணர்வில் தன்னைத்தானே வருத்திக்கொண்டிருக்கிறான்.

வயதோ ஏறிக்கொண்டே போகிறது. அவனை விடவும் சின்னவர்கள் எல்லாம் நல்ல வேலை, திருமணம், குடும்பம், குழந்தைகள் என்று வாழ்க்கையில் ஒரு மாதிரி



www.TheMagnat.com

வேர்பிடித்து விட்டார்கள். 'எனக்கு மட்டும் ஏன் இப்படி?' என்று அவன் உள்ளுக்குள் குமைந்து குமுறுவது வெளியில் யாருக்கும் தெரிவதில்லை. என்றாலும் அவனைப் பத்து மாதம் சுமந்து பெற்றவளால் அதை நன்றாக உணர முடிந்திருந்தது. அவனுடைய ஆதரவற்ற நிலையைக் கண்டு தினமும் கவலைப்பட்டே அவள் ஓய்ந்துபோனாள்.

அவன் ஆத்திரத்தில் யார் மீதாவது கோபப்பட்டு அள்ள முடியாமல் வார்த்தைகளைக் கொட்டுகிற போதெல்லாம் 'இயலாமை அல்லது ஆற்றாமைதான் காரணம். அவனுக்கு யார்மீதும் பொறாமை இல்லை' என்று அவனுடைய தாயார் சொல்லித் தனக்குத்தானே ஆறுதல் தேடிக் கொண்டிருப்பாள். இன்றைக்கு அவளும் இல்லை என்றாகிவிட்டது.

அந்த 'அவள்' இன்றைக்கு எதிர் இருக்கையில் வந்து அமர்ந்து கொண்டிருக்கிறாள். கையில் கனமான புத்தகம் ஒன்று. கல்கியின் 'அலை ஓசை'.! பாதிக்குமேல் படித்திருப்பாள் போலிருக்கிறது. இளங்காலை நேரம். பாத்ரூம் போகிற போது புத்தகத்திலிருந்த நீல நிற நாடாவை இழுத்து அடையாளம் வைத்துவிட்டுப் போயிருந்தாள்.

அவனுக்கு முதலில் அவளை அடையாளம் தெரியவில்லை. டெல்லியிலிருந்து வருகிறவளாயிருக்க வேண்டும். அவன் இடார்ஸியில் தான் வண்டியில் ஏறினான். அந்த அவசரத்தில் கவனிக்கத் தவறியிருக்கலாம். அப்போதும் அவள் புத்தகத்திலேயே ஆழ்ந்திருந்தாள். அதுமட்டும் அவனுக்கு நினைவிருக்கிறது.

யாராவது ரெயில் பயணத்தின்போது புத்தகம் படிக்கிறவர்களாக இருந்தால் அவர்கள்மீது அவனுக்கு ஓர் ஈர்ப்பு உண்டாவதுண்டு. அது என்ன புத்தகம் என்று கேட்டுப் பேச்சுக் கொடுக்க வசதியாக இருக்கும். அதுவும் அவனுக்குப் பிடித்தமான ஆசிரியரின் நூலாக இருந்தால் கூடுதல் அக்கறை உண்டாகும்.

இன்றைக்கு அந்த நூலின் தலைப்பைப் பார்ப்பதற்கு முன்னாலேயே அதன் பருமனை வைத்து அது 'அலை ஓசை'தான் என்பதைத் தெரிந்துகொண்டான். ஒரு பழைய பிரதிதான். அவனிடமும் அதே போல் ஒன்று இருக்கிறது. இருந்தாலும், அவள் இருக்கையில் அதை வைத்துவிட்டுப் போனபோது முகப்பைப் பார்த்துச் சந்தேகம் தீர்ந்தது.

அவள் இருக்கைக்குத் திரும்பியதும் அவனுடைய இயல்புப்படி அவளோடு பேச்சுக்கொடுக்க எண்ணிய போதுதான் அவளுடைய முகத்தைப் பார்த்தான். அதிர்ந்தான்.

ஆயிரம் மின்னல்கள் வெட்டியதுபோல் என்பார்களே அப்படி ஓர் உணர்வு! இருபது ஆண்டுகளுக்கு முன்னால் தன்னால் நிராகரிக்கப்பட்ட அதே முகம். தாடைக்குச் சற்று இடப்புறத்தில் பதிந்திருந்த வெட்டுத் தழும்பு. அதுவும் ஒரு வலுவான அடையாளமாய் அவன் நினைவில் பதிந்திருந்தது.

சம்பிரதாயமான பெண் பார்க்கும் நிகழ்வில் அவளை எல்லோருக்குமே பிடித்திருந்தது. அதிகம் படித்திராதவள் என்றாலும் ஒருவிதமான கம்பீரம் அவளிடம் காணப்பட்டதில் அதிகம் மகிழ்ந்தவள் அவனுடைய சகோதரி. 'பொண்ணு குடும்பப் பாங்கா இருக்கா' என்று திருப்திப்பட்டவள் அவனுடைய தாயார். ஆனால் அவனுக்கு மட்டும் ஏனோ மனம் சமாதானப்படவில்லை.

எந்த ஒரு விஷயத்திலும் துணிந்து முடிவு எடுக்கிற பக்குவம் அவனுக்கு அமையவில்லை. எதிலும் தயக்கம் வந்து காலைப்பிடித்து இழுக்கும். அப்படி ஒரு பிரகிருதியாகவே அவன் வளர்ந்துவிட்டிருந்தான்..

அந்தத் தயக்கம்தான் காரணமா? அல்லது 'நாக்கில் சனி' என்பார்களே அந்தக் கதையாய் 'இதை விட நல்ல இடமாக் கிடைக்காதா? பார்க்கலாமே.' என்று சொல்லிவைத்தான். அந்தப் பெண்ணின் குடும்பம் இருந்த சுமாரான பொருளாதார நிலையும் அவனுடைய தயக்கத்துக்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

பெண்ணைப் பார்த்துவிட்டுக்

www.TheMagnet.com

**சுப்ர.பாலன்**

குதூகலத்தோடு வீடு திரும்பியவர்கள் அதிர்ந்தார்கள். 'இனிமே உனக்குப் பெண் பார்க்க நான் வரமாட்டேன்ப்பா.. ஆளைவிடு" என்று காட்டமாகவே சொல்லிவிட்டுத் தன் கணவரோடு அவசரம் அவசரமாக வீட்டுக்குப் புறப்பட்ட சகோதரி நான்கு மாதம் வரை தாய்வீட்டுப் பக்கம் எட்டியே பார்க்கவில்லை. அப்புறம் தன்னுடைய அப்பாவுக்கு ஏதோ விபத்தில் அடிபட்டது என்பதையறிந்து அவரைப் பார்க்க என்றுதான் வரநேரிட்டது. அப்போதுகூடத் தம்பியிடம் முகம் கொடுத்தே பேசவில்லை அந்த ரோசக்காரி.

பெண்வீட்டுக்காரர்களுக்கு இந்த நிராகரிப்பை எப்படிச் சொல்வது என்று ஆயிரம் தடவை யோசித்து ஒரு வழியாய்ச் சொல்லி முடித்தபோது அவனுடைய அப்பாவுக்கு முகமெல்லாம், உடம்பெல்லாம் வியர்த்துக்கொட்டியது. காரணம் அவருக்கு இந்த நிராகரிப்பில் உடன்பாடே இல்லை. 'அநாவசியமா அந்த அப்பாவிப் பொண்ணோடெ வயத்தெரிச்சலைக் கொட்டிக்கிறானே' என்று வாய்விட்டே புலம்பித் தீர்த்தார்.

மற்ற விஷயமானால் கட்டாயப் படுத்தலாம். சின்னக் குழந்தையை மிரட்டி உருட்டி வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய் புகட்டுகிறமாதிரி ஏதாவது செய்யலாம். இது வாழ்க்கைப் பிரச்சினை ஆயிற்றே? எப்படிக் கட்டாயப்படுத்த முடியும்?

சொல்லிவைத்த மாதிரி, அந்தப் பெண் பார்த்தலுக்குப் பிறகு அவனுக்கு அப்படி ஒரு வாய்ப்பே கிடைக்காமல் போனது. 'இதைவிட வேறே நல்ல இடம் கிடைக்காதா?' என்று அவன் அன்றைக்குக் கேட்டது. அப்படியே கேள்வியாகவே நிரந்தரமானது.

திருமணத்துக்குப் பிள்ளைகள் கிடைப்பது சிரமம் என்று இருந்த காலம் என்றைக்கோ மலையேறிவிட்டது. பெண்கள் எல்லாம் நன்றாகப் படித்துவிட்டு ஐம்பதாயிரம், அறுபதாயிரம் என்று சம்பாதிக்கிற காலம். இவனுடைய வேலையோ, சம்பளமோ, அப்படி ஒன்றும் சொல்லிக்கொள்கிற மாதிரி அமையவில்லை. இத்தனைக்கும் கௌரவமாக 'பி.ஜி.' என்று மார் தட்டிக்கொள்கிற மாதிரி படித்தவன்தான். ஆனால் அந்தப் பட்டம் எல்லோருக்குமே வாழ்வு தருவதில்லை என்பது புரிய அவனுக்குப் பல ஆண்டுகள் ஆனது.

இருபது வருடம் ஓடியே போய்விட்டது. அந்தப் பெண் மட்டும் அவனுக்கு அமைந்திருந்தால் இன்றைக்கு அவனுடைய பிள்ளையோ பெண்ணோ, படித்து முடித்து நல்லபடியாக ஒரு வேலைக்குக் கூடப் போயிருக்கலாம். யார் கண்டது? 'விதி. விதி' என்கிறார்களே, அது இதுதான் போலிருக்கிறது.

அவனுடைய அம்மா இருந்தவரை ஜோசியம் ஜாதகம் என்று நம்பிக்கொண்டிருந்தாள். 'அவனுக்குன்னு ஒருத்தி பிறக்காமலா போயிருப்பாள். எங்கே அவ இருக்காங்கறதைத்தான் கண்டுபிடிக்க முடியல்லெ' என்று பழங்கால நம்பிக்கையிலேயே பொழுதைக் கடத்திக் கொண்டிருந்தாள்.

எல்லா நினைவுகளும் அவன் முன்னால் வந்து அலை மோதின. அன்றைக்குத் தான் செய்தது தப்போ என்கிற எண்ணம் இத்தனை ஆண்டுகள் கடந்த பிறகு இன்றைக்குத் தான் உறைக்கிற மாதிரி உணர்ந்தான்.

எதிர் இருக்கைக்காரியை நிமிர்ந்து பார்க்கவேண்டும் போல் தோன்றியது. அவளாகப் பேசுகிற மாதிரி தெரியவில்லை. அவளை இவன் அடையாளம் கண்டுகொண்ட மாதிரி அவள் புரிந்துகொண்டிருப்பாளா என்பதையும் ஊகிக்க முடிய வில்லை. அனிச்சையாக அவனுடைய பார்வை அவளுடைய பாதங்களில் பதிந்தபோது அவள் அணிந்திருந்த மெட்டி அவனுடைய கண்களில் பட்டது.

திருமணமாகியிருக்கவேண்டும். 'அப்படியானால், கணவன் குழந்தைகள்..?' என்று தேவையற்ற நினைவுகள் சிறகடித்தன. அவளுடைய பெயர் மட்டும் எவ்வளவு முயன்றும் அவனுடைய நினைவுக்கு வரவேயில்லை.

ஏதோ ஒரு முக்கியமான ரெயில் நிலையத்தில் இளைப்பாறுகிற மாதிரி சற்றுநேரம் அந்த ரெயில் வண்டி ஓய்வெடுத்தது. கீழே இறங்கிப் பார்க்கிற சாக்கில், கதவருகே ஒட்டியிருந்த

www.TheMagnet.com

பெயர்ப்பதிவுப் பட்டியலைப் பார்த்தான். அவனுடைய இருக்கை எண்ணுக்கு எதிர் எண்.. அவளுடைய பெயர் 'சபிதா குலோத்துங்கன்' என்று காணப்பட்டது.

டெல்லியிலிருந்து வருகிறாள் என்பதும், கூடூர் நிலையத்தில் இறங்குகிறாள் என்பதும் தெரிந்தது.

யோசித்துப் பார்த்தான். பெண் பார்க்கப் போனபோது அப்படி ஒரு பெயரைக் கேட்டதாக அவனுக்கு நினைவில்லை. ஏதோ சம்பிரதாயமான பழைய பெயராகவே இருக்கலாம் என்று தோன்றியது. இருபது ஆண்டுகளுக்கு முந்தைய அவ்வளவாய் முக்கியமில்லாத ஒரு நிகழ்வுதானே அது?

'சபிதா குலோத்துங்கன்? யார் இந்தக் குலோத்துங்கன்?. அந்தப் பெண்ணின் அப்பாவின் பெயரா? அல்லது? இவள்தானா அது? அல்லது நாம்தான் தவறுதலாக எண்ணிக் குழம்பிக் கொண்டிருக்கிறோமா?' என்ற தயக்கம் அவனில் கூடுகட்டியது

சற்று நின்று ஓய்வெடுத்த வண்டி, மறுபடியும் புறப்படுகிற பரபரப்பு ஏற்பட்டபோது அவனும் வண்டியில் தொற்றி ஏறித் தன்னுடைய இருக்கைக்கு வந்தான். அவள் புத்தகத்தை மூடிவைத்துவிட்டு இருக்கையில் ஜன்னலோரமாகச் சாய்ந்தவாறே கண்ணயர்ந்திருப்பதாகத் தோன்றியது.

ஏதாவது பேச்சுக்கொடுத்துப் பார்க்கலாம் என்கிற துணிவு வந்தது. அதற்கு முதல் வசதி புத்தகத்தைப் பற்றியதாகவே இருக்கலாம்.

சற்றைக்கெல்லாம் அவள் கண்விழித்தாள். எழுந்து சென்று 'பேஸினி'ல் முகம் கழுவிக்கொண்டுவந்தாள். ஏற்கெனவே சீராக அள்ளி முடிந்திருந்த கூந்தலை அவிழ்த்து உதறி மறுபடியும் முடிபோட்டுக்கொண்டாள். 'சாய்வாலா' வந்தபோது தனக்கு ஒரு கோப்பையை வாங்கிக்கொண்டாள். "நீங்கள்..?" என்கிறமாதிரி பார்வையை உயர்த்தினாள்.

"நான் சாப்பிடுகிறதில்லை.." என்று சொல்லிவிட்டு, அவளிடம் இருந்த புத்தகத்தைப் பார்க்கலாமா என்று கேட்டான். "ஓ..ஷ்யூர்" என்று எடுத்துத் தந்தாள்.

சில பக்கங்களைப் புரட்டினான். சில

**கனவுகளா? நிஜமான நிகழ்வுகளா என்பது முடிவாகும் முன்னாலேயே அவள் இறங்கவேண்டிய ரெயில் நிலையம் வந்தது. அவசரமாகத் தன்னுடைய பெட்டிகளை எடுத்துக்கொண்டு அவள் கீழே இறங்கினாள்....** ”

இடங்களில் சிவப்பு நிற மையினால் 'மார்ஜி'னில் அடையாளம் செய்திருந்தது. அவனுக்கு அப்படி யாராவது செய்தால் பழியாகக் கோபம் வரும். முகச்சுளிப்போடு அவன் அதை கவனிப்பதை அவளும் பார்த்திருக்கவேண்டும்.

"எனக்கு இப்படி 'மார்க்' செய்வது பிடிக்காது. என் தோழி ஒருத்தி செய்த வேலை. அவளைக் கோபித்துக்கொண்டு பாதி படித்திருந்தபோதே புத்தகத்தைத் திரும்ப வாங்கிக் கொண்டு வந்தேன்" என்று சொல்லி அழகாகச் சிரித்தாள்.

அவள் பேசிய விதம் அவனுக்குப் பிடித்திருந்தது. இத்தனை ஆண்டுக்காலமாக சாமியார்த் தனமாகவே நாட்களை ஒட்டியவனுக்கு இப்போது ஏனோ இந்தப் பெண்ணிடம் ஓர் ஈர்ப்பு உண்டானது. அது நியாயமானதா என்கிற கேள்வியும் அவனுள் எழுந்தது.

'அலை ஓசை' கதாபாத்திரங்களைப் பற்றிச் சிறிது நேரம் அவளுடன் கருத்துப் பறிமாற்றம் செய்துகொண்டபோது அவளுடைய படிப்பார்வத்தின் ஆழம் அவனை வியக்கப் பண்ணியது. இதுபோல் அவன் எந்தப் பெண்ணிடமும் இப்படியெல்லாம் உரையாடியதில்லை. பேச்சு, 'அலை ஓசை'யை விட்டு வேறு அம்சங்களில் நிலைகொண்டது.

கடைசியில் "உங்கள் கணவர் என்ன செய்கிறார்? எங்கேயிருக்கிறார்?" என்று இயல்பான தொனியில் அவன் கேட்டபோது அவள் பெரிதாக வாய்விட்டுச் சிரித்தாள். தன்னுடைய கால் மெட்டியை தானே பார்த்தபடி அவள் கேட்டாள்.



டாக்டர்: எங்க ஹாஸ்பிடல் விளம்பரத்துக்கு ஒரு பன்ச் டயலாக் சொல்லுங்க

விளம்பரதரர்: கூட்டிட்டு வாங்க!! தூக்கிட்டு போங்க!!

"அது எப்படி நான் கல்யாணமானவள் என்று நீங்கள் தீர்மானித்தீர்கள்? இந்த மெட்டியைப் பாலீத்துத் தானே? இது ஒரு பாதுகாப்பு வளையம் என்று இருக்கலாகாதா?" அவளுடைய விரல்கள் அந்த மெட்டியை அழகாக வருடிக்கொண்டிருந்தன. தன்னுடைய முகம் குற்ற உணர்வால் சிறுத்துப்போனதாய் அவன் உணர்ந்தான்.

அவனால் மேலே ஏதும் பேசத் தோன்றவில்லை. கேட்கவும் கூடத்தான். அவசரப்பட்டுக் கேட்டுவிட்டோமோ, தப்பாய் ஒன்றும் கேட்டுவிடவில்லையே? அவனுடைய மௌனம் சுமையானது.

அவள், ரெயில் பெட்டியின் கூரையை வெறித்து நோக்கியவளாய் ஏதோ பேசினாள். விழியோரத்தில் நீர் அரும்பு கட்டியிருந்தது. "எனக்கு இந்த ஜன்மத்தில் கல்யாணம் இல்லையென்பது தீர்மானமாகி இருபது வருஷம் ஆகிவிட்டது. தீர்மானித்தது கடவுளா, நானா என்ற கேள்விக்கு விடை கிடைக்கவே இல்லை. இராயப் பேட்டையில் ஒண்டுக் குடித்தன வாழ்க்கையில் நாங்கள் இருந்தபோது என்னைப் பெண்பார்க்க வந்த ஒருவன் என்னை நிராகரித்துவிட்டுப் போனான். காரணம் என்ன என்று சொல்லாமலே நிராகரித்தான். அப்போது எனக்கு அவ்வளவாய்த் துணிவு இருந்ததில்லை. 'அலை ஓசை' காலத்து சீதாவாகவே என்றைக்கும் இருந்துவிடக் கூடாது என்று மட்டும் மனசில் தோன்றியது. இப்போது மாதிரியிருந்தால் அவன் வீட்டுக்கே போய் இழுத்துவைத்து நாலு வார்த்தை கேட்டிருப்பேன்.

"அப்பாவால் அந்த நிராகரிப்பை ஜீரணிக்க முடியவில்லை. இரண்டே மாதத்தில் அந்த வேதனையிலேயே அவர் கண்ணை மூடினார். முதலும் கடைசியுமாய் நடந்த அந்த நிகழ்வுக்குப் பிறகு தனியாகவே இருந்துவிட்டால் என்ன, குடியா முழுகிவிடும் என்று அப்படியே இருந்துவிட்டேன். மெட்டி அணிவது தப்பா சரியா என்கிற கவலை எனக்கில்லை. இதை ஒரு பாதுகாப்பு வளையமாகத்தான் கருதுகிறேன். பார்க்கிறவர்கள் உங்களை மாதிரியே நினைத்துவிட்டுப் போகட்டுமே."

அவள் பேசிக்கொண்டே போனாள்.. அவன் ஒவ்வொரு வார்த்தையிலும் பொடிப்பொடியாய் உதிர்ந்து கொண்டேயிருந்தான். ஞானம் வெகு காலம் கடந்தே உதயமாவதுதான் நியதியோ? இப்படிப்பட்ட ஒருத்தியை அன்றைக்கு நிராகரித்தது எத்தகைய அறிவீனம் என்பது உறைத்தது. தயக்கத்தால் எத்தனை மகத்தான ஒரு பொக்கிஷமானவளை இழந்திருக்கிறோம் என்பது புரிந்தது. மானசீகமாகவேனும் அவள்முன்னால் விழுந்து மன்னிப்புக் கேட்கவேண்டும்போல் ஓர் உந்துதல் ஏற்பட்டது.

கனவுகளா? நிஜமான நிகழ்வுகளா என்பது முடிவாகும் முன்னாலேயே அவள் இறங்கவேண்டிய ரெயில் நிலையம் வந்தது. அவசரமாகத் தன்னுடைய பெட்டிகளை எடுத்துக்கொண்டு அவள் கீழே இறங்கினாள். "தாங்க் யூ" சொல்ல மறக்காதவள் ஒன்றை மட்டும் மறந்துவிட்டாள். வண்டி புறப்பட்டு வேகம் எடுத்தபிறகே அவன் அதைக் கவனித்தான்.

அவள் விட்டுப்போன 'அலை ஓசை' தன்னுடைய கைகளிலேயே இருப்பது அப்போதுதான் தெரிந்தது அவனுக்கு! ●

www.Themagnet.com



# தியாகத்தின் சிகரம்!

www.tamilmagnai.com

பெண்மையை மகள் நிலையில் வைத்துப் போற்றுவது உண்டு; அதே பெண்மையைச் சகோதரியாகப் பாவிப்பதும் நம் பண்பாடு; மனைவியாக வந்து வாழ்க்கைத்துணையாகும் போது ஆடவனின் மதிப்பும் கூடுகிறது. இந்த எல்லா நிலைகளையும் தாண்டி பெண்மையின் தாய்மை என்ற பரிணாம வளர்ச்சி படைப்பின் உச்சம். அருளாளர்கள் பலரும் இறைவனுக்கு இணையாகத் தாயை முன்னிறுத்தி உரைத்தனர். தசரதன் அரசியல் பண்பை உரைக்க வேண்டிய இடத்தில் கம்பர் இருக்கிறார். என்ன உவமை கூறுவது என்ற குழப்பம் அவருக்கு. உடனே பளிச்சென்று ஓர் உவமை தருகிறார். 'தாய் ஒக்கும் அன்பில்' என்று அன்புடைமைக்குத் தாயை உவமை காட்டுகிறார். கோசல நாட்டை மிகவும் வளப்படுத்தும் பெருமை வாய்ந்த சரயு ஆற்றைக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் விவரிக்கும் அழகே தனி.

முனைவர் சி.ஆர். மஞ்சுளா

**பிள்ளையில்லாதோர் அதற்கான அருள் கிடைக்கும் பட்சத்தில் அதை வேகமாகப் பெற்றுக் கொள்வதுதானே வழக்கம். அதை விடுத்துச் சுமித்திரை ஏன் பொறுமை காத்தாள் என்றால்...**

*'சரயு என்பது தாய்முலை அன்னது இவ் உரவு நீர்நிலத்து ஓங்கும் உயிர்க்கு எலாம்',*

என்ற வரிகளில் தாய்மையின் உன்னதம் பேசப்படுகிறது. தாய்மையுற்ற ஒரு தாயின் பால் சுரக்கும் மார்பகம் போலச் சரயு நதியை ஒப்பிடுகிறார். குழந்தை பசித்து அழுவதற்கு முன்பே அதன் பசியை அறிந்து பாலூட்டும் தாயைப் போன்று சரயு ஆறு பாய்கிறது. எனவே கோசல மக்கள் வாடாமல் இருக்க வளம் சுரப்பியாக அமைகிறது.

தாயின் பால் குழந்தைக்கு உணவு மட்டுமல்லாமல் மருந்தாகவும் செயல்படுகிறது. அவ்வாறே சரயுவும் கோசல நாட்டு மக்களுக்கு உண்ண நீராகவும், உடல்நலம் பெற மருந்தாகவும் விளங்கி அருளும் கருணை மிக்கதாகக் கம்பர் பாடுகிறார். நிலத்தை, நீரை, மொழியைத் தாயாக வணங்கும் மரபிற்குச் சொந்தக்காரர் நாம். ஆதிகாலத்தில் நம் தமிழ்நாட்டில் சக்தி வழிபாடு மிகவும் பிரசித்தம். ஆக, பெண்ணுக்கு உயர்வு தரும் இந்தப் பாரம்பரியத்தின் சமுதாயம் தாய்வழிச் சமூகமாகத்தான் இருந்தது. ஆதியில் பெண்களும் - ஆண்களும் வேட்டைக்குச் சென்றனர். காலப்போக்கில் ஆண்கள் மட்டும் வேட்டையாடி வந்தனர். பொருளாதாரக் கொள்கை வலுப்பெற்றது. இதனால் தந்தைவழிச் சமூகமாகச் சமுதாயம் மாற்றம் பெற்றது. இருப்பினும் 'தையலை உயர்வு செய்' என்ற பாரதியார் வாக்கிற்கிணங்க பெண் குழந்தைகளைத் தேவியின் அவதாரமாகக் கண்டு வணங்கும் சிறப்புப் பெற்றோர் நாம்!

இராமாயணத்தில் மிகவும் அருமையான கதாபாத்திரங்களில் சுமித்திரையும் ஒருத்தி; தசரதனின் மூன்று பட்டத்தரசிகளுள் இவளும் ஒருத்தி; இலக்குவன் - சத்ருக்னன் ஆகிய புதல்வர்களைப் பெற்றெடுத்த பேறு பெற்றவள். இராமாயணத்தில் குறைந்த இடத்தில் தோன்றினாலும் கற்றோர் மனத்தில் நீங்கா இடம் பெற்று விடுகிறாள். ஆரம்பத்தில் தசரதனுக்குக் குழந்தைப்பேறு வாய்க்காத போது வேள்வியின் மூலம் அது சாத்தியப்படும் என்று வசிட்டர் தெரிவித்த யோசனையால் மகிழ்ந்த மன்னர் முனிவரின் மொழிப்படி, கலைக்கோட்டு முனிவரை அழைத்து வேள்வி நடத்தினான். வேள்வியின் பயனாக ஒரு வேத புருஷன் வேள்வித் தீயிலிருந்து வெள்ளி மூடியால் மூடப்பட்ட தங்கமயமான கலசத்தில் பாயசத்துடன் தோன்றினார். இதன் மூலம் மூத்தவன் வெள்ளை மனம் கொண்ட சாத்வீகனாக இருப்பான் என்று கலசத்திற்கு விளக்கம் கொடுத்தனர் முன்னோர்கள்.

பிரசாதம் கிடைத்தவுடன் தசரதன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இதுவரை பல ஆண்டுகளாக மலடிக்கு எதிர்ப்பதமான மலடன் என்று பெயர் பெற்றிருந்த தசரதன் தனக்குக் குழந்தை வரம் கிடைக்கப் போவது குறித்து மிகவும் மகிழ்ந்தான். தேவ புருஷன் கொடுத்த பாயசம் இரண்டு பங்காகப் பிரிக்கப்பட்டது. முதல் பங்கை எடுத்து ஆர்வமாகக் கோசலைக்குக் கொடுத்தான் மன்னன். பயபக்தியுடன் கோசலை உட்கொண்டாள். இரண்டாம் பாதியை மேலும் இரண்டாக்கினர். அதன் முதல் பங்கு சுமித்திரைக்கு வழங்கப்பட்டது. சுமித்திரை அதை அப்படியே கையில் வைத்துக் கொண்டிருந்தாள். மீதமாக இருந்த அடுத்த பங்கை இன்னும் பிரித்தனர். அதன் ஒரு பாதியைக் கைகேயியிக்கு வழங்கிய அரசன் மீண்டும் சுமித்திரையைப் பார்த்தான். சுமித்திரை அந்த அருள்பெற்ற பாயசத்தை அருந்தாமலேயே இருந்தாள். அதற்குள் கைகேயி, குறைந்தபட்சம் கோசலைக்குப் பிறகாவது நமக்குக்

www.TheMagnet.com

குழந்தை பிறந்துவிட வேண்டும் என்று பாயசத்தைச் சுமித்திரைக்கு முன்னர் அருந்திவிட்டாள்.

சுமித்திரை மீது கருணை கொண்ட தசரதன் எஞ்சியிருக்கும் மற்றுமொரு பங்கையும் சுமித்திரையிடமே கொடுத்தான். தற்போது இரண்டு பங்கையும் ஒன்றன்பின் ஒன்றாக அவள் பருகினாள். இந்தச் செயலுக்குக் காரணம் என்ன?

பிள்ளையில்லாதோர் அதற்கான அருள் கிடைக்கும் பட்சத்தில் அதை வேகமாகப் பெற்றுக் கொள்வதுதானே வழக்கம். அதை விடுத்துச் சுமித்திரை ஏன் பொறுமை காத்தாள் என்றால், இங்குதான் அவளின் உத்தமமான குணம் வெளிப்படுகிறது. அவளின் மனவோட்டத்தை நீங்கள் அறிந்து கொண்டால் அவளின் மகத்தான பண்பு விளங்கும். அதாவது கோசலையின் பிள்ளைக்குத் தொண்டு செய்ய ஒரு பிள்ளையும், கைகேயியின் பிள்ளைக்குச் சேவையாற்ற ஒரு பிள்ளையும் தனக்கு வேண்டும் என்று விரும்பிய சுமித்திரை அந்த மக்களுக்குத் தொண்டு புரியும் தன்மையில் அவ்விருவருக்குப் பின்தான் தெய்விகப் பாயசத்தை உட்கொண்டாள். தாய்மையே தியாகத்தின் உச்சம் என்றால் சுமித்திரையின் எண்ணம் தாய்மைக்கே உச்சமாகத் திகழ்கிறது. தன்னைவிட மூத்தோருக்கு இளையோர் குற்றேவல் புரிவது வழக்கம். மாறாக இளையோருக்கு மூத்தோர் செய்வது பெரும்பான்மை வழக்கத்தில் இல்லாததால் முறை தவறி யோசிக்கும் கீழ்மையும் சுமித்திரையிடம் காணமுடியவில்லை.

*'ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்'*

என்ற குறட்பாவில் தன் மகவை இவ்வுலகில் பிரசவித்த இன்பமயமான தருணத்தைக் காட்டிலும் அவன் இந்த உலகத்தவரால் 'சான்றோன்' என்று பாராட்டப்படும் பொழுது அவள் எய்தும் இன்பத்திற்கு அளவே இல்லை என்று கூறப்படுகிறது. இதுதான் தாய்மையின் மேன்மை. அப்படிப்பட்ட ஒப்புயர்வில்லா அன்னையாக வலம் வருகிறாள் சுமித்திரை.

அடுத்த காட்சி! கதை வனவாசத்தின் துன்பமான பகுதிக்கு வளர்கிறது. மந்தரையின் சூழ்ச்சியால் கைகேயி மனம் மாறுபட்டுத் தன் கணவன் தசரதன் மூலம் இரண்டு வரங்களைப் பெற்று ஒருவரம் மூலம் இராமனைக் காடாள ஏவுகிறாள். இராமனுக்குத்தான் வனம்புகவேண்டும் என்ற கட்டளையே தவிர இலக்குவனுக்கு ஒன்றும் இல்லை. இருப்பினும் ஓர் உத்தமியால் வளர்க்கப்பட்ட இலக்குவன் விசுவாமித்திரர் வேள்வி காக்க இராமனுடன் சென்று தொண்டாற்றிய அதே இலக்குவன் சீதையை முன்னிட்டுக் கொண்டு இராமனிடம் சரணாகதி செய்து தானும் தமையனுடன் காட்டுக்குவர அனுமதி கேட்கிறான். தன் விருப்பம் நிறைவேற யார் முன்னிலையில் எப்படிப் பற்ற வேண்டும் என்ற நுணக்கம் அறிந்த இலக்குவன் அவ்வாறே செய்கிறான்.



**நண்பர் 1 : "என்னாடா ? தலையில இவ்வளவு பெரிய கட்டு ?? என்னாச்சு ??"**

**நண்பர் 2: "அது ஒன்னும் இல்ல பாஸ்....என் பொண்டாட்டி நேத்து வாழைப்பழ தோல் வழுக்கி கீழே விழுந்துட்டா... "**

**நண்பர் 1 : "உங்க பொண்டாட்டி விழுந்தா அவங்க தானே கட்டு போடணும்... நீங்க எதுக்கு கட்டு போட்டுருக்கீங்க ??? "**

**நண்பர் 2: "கீழே விழும் போதும் கொஞ்சம் சத்தமா சிரிச்சுட்டேன்... அதான் இப்படி... "**

**கோபம் கொண்ட இராமன் இந்தச் சமுத்திரத்தின் மீது அம்புகளை ஏவிக் கடலைத் தூர்த்துக் கடல் என்ற தத்துவமே இல்லாமல் செய்து விடுகிறேன் என்று பேசித் தன் வில்லை எடுத்து...**

இலக்குவன் எண்ணம் ஈடேறியது. பின்னர் சுமித்திரையைக் காணச் செல்கின்றனர். நகர் நீங்கு படலத்தில் இராமன் காடு செல்ல சுமித்திரையின் இருப்பிடம் சென்று அவளிடம் விடைபெறும் நிகழ்ச்சி அரங்கேறுகிறது. உடன் இலக்குவன் இருக்கின்றான். அந்த வேளையில் கைகேயி அனுப்பிய ஏவல் மகளிர் மரவுரியுடன் அங்கு வந்து சேர்கின்றனர். இலக்குவன் அதனைப் பெற்றுக் கொண்டு தாயை வணங்குகிறான். வணங்கிய மகனுக்குத் தாய் கூறும் அறிவுரை பொன்னெழுத்துக்களால் பொறிக்க வேண்டியது.

'மகனே! இராமன் செல்லும் காடே இனி உனக்கு அயோத்தி மாநகர் என்று அறிந்து கொள். இராமனே நம் எல்லோருக்கும் அரசன். அவனே உனக்குத் தந்தையானவன் என்பதை நினைவில் கொள். சீதையே உன் தாய். உடனே நீ இவ்விடம் விட்டுப் புறப்படுவாயாக!', என்று கூறுகிறாள்.

***'ஆகாதது அன்றால் உனக்கு அவ்வனம் இவ்வயோத்தி மாகாதல் இராமன் நம் மன்னவன் வையம் ஈந்தும் போகா உயிர்த் தாயர் நம் பூங்குழல் சீதை என்றே ஏகாய் இனிநீ இவ்வயின் நிற்றலும் ஏதம் என்றாள்'.***

என்ற கம்பரின் வரிகளில் மேற்கூறிய கருத்து நிரூபிக்கப்படுகிறது. அத்துடன் அவள் நிற்கவில்லை. அதற்கு மேலும் பேசுகிறாள்; 'மைந்தனே! நீ இராமனுக்குத் தம்பி என்ற உரிமை பாராட்டிக் கொண்டோ அரசகுமாரன் என்ற பெருமை தோன்றவோ காட்டுக்குச் செல்லாதே. ஓர் அடியவன் போல் குற்றேவல் செய்வதற்காக நீ செல்ல வேண்டும். இராமன் காட்டு வாழ்வை முடித்துக் கொண்டு நாடு திரும்பினால் நீயும் திரும்பி வா. அவன் வாராநிலை வந்தால் அவனுக்கு முன்னே நீ இறந்துபடுவாயாக!' என்று கூறி விழிநீர் சிந்தினாள் என்று கம்பநாட்டாழ்வார் வடித்துக் காட்டுகிறார். இந்தத் தியாகத்திற்கு ஈடு இணையே கூற முடியாது. சில காட்சிகளில் மட்டுமே வரும் கதாபாத்திரமானாலும் அன்பும், பண்பும், அவள் இராமன் மேல் வைத்திருக்கும் ஈடுபாடும் நம்மை வியக்கவைக்கின்றன. பல ஆண்டுகளாகப் பிள்ளை இல்லாமல் பிறந்த போதும் அப்பிள்ளைகளைத் தன் நலனுக்காக மட்டும் வைத்துக் கொள்ளாமல் உலக நலனுக்காகச் சமர்ப்பித்த பொதுநலம் பேணுபவள்.

உயிர் எல்லாவற்றையும் தன் உயிர் போலவே பேணிப் பாதுகாத்து வந்த அயோத்திய நாட்டின் அரசன் தசரத சக்கரவர்த்தி புத்திர சோகத்தால் விண்ணாளச் சென்றான் என்ற செய்தியை இராமன் பரதன் மூலம் அறிந்து கொள்கிறான். தாங்கொணாத துயரம் அடைகிறான். அப்பொழுது தன்னுடன் கானகம் வந்த இளவல் இலக்குவனை நோக்கி, 'தம்பி! நீ தந்தையை இழந்தாய்', என்று கூறுகிறான். இந்த இடத்தில் நம் எல்லோருக்கும் ஓர் ஐயம் எழலாம். இராமன் ஏன் நாம் தந்தையை இழந்தோம் என்று சொல்லாமல் நீ தந்தையை இழந்தாய் என்று கூறினான்? ஒருவேளை இராமனுக்குத் தசரதன் மீது மனவருத்தம் இருந்ததால் அப்படிக் கூறினானோ என்று நாம் எண்ணலாம். அது உண்மையல்ல. ஒரு தந்தை தன் மகனுக்கு என்னவெல்லாம் செய்வாரோ அதை இலக்குவன் இராமனுக்குச் செய்வதால் தனக்குத் தந்தை இல்லையே என்ற வருத்தம் ஏற்படவில்லையாம். ஆனால் இலக்குவனுக்கு இராமன் அப்படி எதுவும் செய்யவில்லை. அதனால்தான் நீ தந்தையை இழந்தாய் என்று இராமன் கூறினான். இப்படித் தொண்டு செய்ததற்குக் காரணம் சுமித்திரை இலக்குவனுக்குக் கூறிய அறிவுரை என்று சொல்லலாம்.

www.TheMagnet.com

கதைவோட்டத்தில் மற்றுமொரு காட்சி! இலக்குவன் தன் தாயின் மொழிகளை எல்லாத் தருணங்களிலும் விடாமல் காத்தமைக்குக் கவந்தன் படலத்தில் நிகழ்ந்த நிகழ்வும் சான்று கூறும். தனு என்ற கந்தவர்வன் முனிவரின் சாபத்தால் கோர உருவத்தில் வனத்தில் சுற்றி அலைந்தான். தனது இரண்டு கைகளையும் நீட்டி அதற்குள் சிக்கிய எல்லாப் பிராணிகளையும் வாரித் தனது வயிற்றினுள் இருக்கும் வாயில் அடக்கிக் கொள்வான். வயிற்றுக்குள் தலை அடங்கியிருப்பதால் கவந்தன் என்று பெயர் பெற்றான். தலையற்றதும் தொழிலுடன் கூடியதுமான உடலுக்குக் கவந்தம் என்று பெயர். சீதையைத் தேடி வந்த இராம - இலக்குமணர் கவந்தன் கைகளில் அடங்க, சிறிது நேரம் கலங்கிய அவர்கள் தங்கள் கைவாள்களினால் அவனுடைய இரண்டு கைகளை வெட்டித் தள்ளினர். அவ்வளவில் சாபம் நீங்கி அழகிய கந்தர்வன் வடிவம் பெற்று இராமபிரானைத் துதித்துத் தன் முற்பிறவியின் வரலாற்றையும், இராம - இலக்குமணர் சபரியைப் பார்க்க செல்ல வேண்டிய தொழில்களையும் கூறிப் போனான்.

அதற்கு முன்னர் அவன் நீட்டிய இரண்டு கைகளில் சிக்குண்ட இராமன் யாரோ ஒருவனால் கவர்ந்து செல்லப்பட்ட சீதையைக் காப்பாற்றத் திறமையற்றவனாய் நான் இருப்பதைவிட இறப்பதே நல்லது என்று புலம்பினான். அதே தோள்களில் சிக்குண்ட இலக்குவனோ 'என்னை அடிமையாகவுடைய அண்ணனே! உனக்குப் பணியாளாய் இந்தக் காட்டில் உன்னைப் பின்தொடர்ந்த நான், உனக்கு இப்படிப்பட்ட துன்பம் நேரிட்டதென்றால் அதற்கு முன்னர் நான் இறந்துவிடுதலே சரியானது. மாறாக நான் மட்டும் உயிர் தப்புவது தருமமன்று', என்று கூறித் தாயின் ஆணையை நினைவு கூர்ந்துப் பேசுகிறான்.

*'என்தா யின்முன் னேவிய யாவு மிசையின்னல்*
*பின்றா தெய்திப் பேரிசை யாளற் கழிவுண்டேல்*
*பொன்றா முன்னம் பொன்றுதி யென்றா ளுரைபொய்யா*
*நின்றா லன்றோ நிற்பது வாய்மை நிலையம்மா',*

என்ற வரிகளில் தன் தாய் சுமித்திரை வனவாசத்தின் பொழுது கூறிய வார்த்தைகளை நினைவுப் படுத்தி அதாவது இராமனுக்கு இறுதி உண்டாயின் அதற்கு முன்னர் நீ இறந்துபடுவாயாக! என்ற வார்த்தைகளைச் சிரமேற் கொண்டு தாய் சொல்லுக்கு உடன்பட்டு வந்த தான் அச்சொல்லை மீறமாட்டேன் என்று கூறும் பகுதியில் சுமித்திரையின் வளர்ப்பு விளங்கிவிடுகிறது.

இந்தச் சரணாகதியைப் பாருங்கள்! கடலரசனிடம் இராமன் செய்யும் சரணாகதி இப்போது நமக்குக் காட்சியாகிறது. இராமனிடம் பலரும் சரணாகதி செய்துள்ளனர். அவர்கள் வேண்டுதலை நிறைவேற்றியுள்ளான். ஆனால் அந்த இராமனே கடலரசனிடம் தஞ்சம் புகுந்தான். காரணம் - ஒரு பாலத்திற்காக. இராவணனால் அபகரிக்கப்பட்ட சீதையை மீட்டுக் கொணர இலங்கைக்குச் செல்ல கடல்மீது சேதுபந்தனம் அமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதற்காகத் தான் கடல் மீது செலுத்தும் கற்கள் தண்ணீரில் அமிழாமல் தாங்கிப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று பிரார்த்தித்துச் சரணாகதி செய்தான். இராவணன் மீது அச்சம் கொண்ட கடலரசன் எதுவும் பேசாமல் இருந்து விட்டான்.



> **தீயை மூட்டி அதில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ளத் தயாராக இருந்த பரதன் சத்ருக்னனிடம் 'எனக்குப் பின் அரசாட்சியை நீயே பார்த்துக் கொள்', என்று கூறினான். அதற்குச் சத்ருக்னன்...**

உடனே கோபம் கொண்ட இராமன் இந்தச் சமுத்திரத்தின் மீது அம்புகளை ஏவிக் கடலைத் தூர்த்துக் கடல் என்ற தத்துவமே இல்லாமல் செய்து விடுகிறேன் என்று பேசித் தன் வில்லையும் - அம்பையும் எடுத்துத் தரும்படிப் பணித்தான். ஐயோ இப்படிச் செய்தால் கடலே இல்லாமல் போய்விடுமே என்று பயந்து இலக்குவன் தயங்கினான். அவன் தயக்கத்தை உணர்ந்து, 'சாபம் ஆனைய சௌமித்ரே!', என்று ஓங்கி அழைத்தான். இலக்குவனே! என்று சொன்னால் உனக்கு விளங்கவில்லை. நீ யார்? நீ சுமித்திரையின் மகனல்லவா! அதற்காக வனவாசத்தின் போது அந்தத் தாய் கூறிய அறிவுரையை ஏற்று எனக்குப் பணி செய் என்ற குறிப்பு தோன்ற சுமித்தரையின் மகனே! என்று விளித்தான். அந்த அளவிற்கு இறைத்தொண்டே வாழ்க்கையாக வாழ வேண்டும் என்ற சுமித்திரையின் வழிகாட்டுதல் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒருமகனைத்தான் இறைத்தொண்டிற்கு அர்ப்பணித்தாள் என்றால் இன்னொரு மகனை அடியார்க்குப் பணி செய்வதற்காக விட்டுவிட்டாள். அவன்தான் சத்ருக்னன். தன் இந்திரியங்கள் எல்லாவற்றையும் இராமனிடம் செல்லாமல் பாதுகாத்து அவன் அடியார்பால் ஈடுபட்டு இந்திரியங்களாகிய சத்ருக்களை வென்றதால் சத்ருக்னன் என்றே அவனுக்குப் திருநாமம். திருமணம் முடிந்த கொஞ்ச நாளில் பரதன் தாய்மாமன் பரதனைக் கேகய நாட்டிற்கு அழைத்துச் சென்றான். அவனுடன் ஒரு பொருள் சென்றால் எப்படிச் செல்லுமோ அந்த முறையில் தனக்கென்று எந்த விருப்பும், எவ்வித வெறுப்பும் இல்லாமல் பரதனுக்காகச் சென்றான். மேலும், கைகேயி கேட்ட வரமோ, தந்தை இறந்தார் என்பதோ தெரியாமல் பரதனுடன் அயோத்தி நகர் புகும் போது நடந்த செய்தி அறிந்து மிகவும் வேதனைப்பட்டான். பரதன் அரசனானால் அவனுக்கு மிகமிக நெருக்கமாக இருக்கும் தனக்குச் சகலவிதமான நன்மையும் ஏற்படும் என்றெல்லாம் எண்ணாமல், மரபு வழியிலேயே நடந்து காட்டினான். அந்த மரபை மாற்ற வழிசெய்த மந்தரையைக் கொல்லவும் புறப்பட்டான். அப்பொழுது பரதன் தடுத்து விட்டான்.

இராமன் வனவாசத்திலிருந்து திரும்ப வேண்டிய காலம் ஏற்பட்டது. இராமன் திரும்புவதற்குக் காலதாமதமானது. இராமனுக்குத் தான் கொடுத்த வாக்கிற்கிணங்க தீயை மூட்டி அதில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ளத் தயாராக இருந்த பரதன் சத்ருக்னனிடம் 'எனக்குப் பின் அரசாட்சியை நீயே பார்த்துக் கொள்', என்று கூறினான். அதற்குச் சத்ருக்னன் 'நீங்கள் இல்லாமல் நான் மட்டும் உயிரோடு இருப்பேனா என்ன? நானும் இறந்து விடுவேன்', என்கிறான். இப்படி அந்த வகையிலுமே தவறுக்குத் தான் காரணமாகாத போதும் இந்த உலகில் வேறு எந்தப் பொருளாலும் ஈர்க்கப்படாத உத்தமனாக வாழ்ந்தான் சத்ருக்னன். இதற்கு அவன் தாயார் முதலும் முடிவுமான காரணம் என்று நம்பலாம்.

*'தாயைப் போலப் பிள்ளை*
*நூலைப் போல சேலை',*

என்ற பழமொழியும்,

*'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்*
*மண்ணில் பிறக்கையிலே - அவர்*
*நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும்*
*அன்னையின் வளர்ப்பிலே',*

என்ற முன்னோர் மொழியும் கொண்டு சுமித்திரையின் வளர்ப்பு இரண்டு உத்தம புத்திரர் உருவாக வழி செய்தது எனலாம். பெண்மையே தியாகம் என்றாலும் சுமித்திரை தியாகத்தின் சிகரம்! ●




பனகல் பார்க், தி.நகர், சென்னை - 600 017. தொ.பே. 044 - 2434 4115 / 4260 4567
பேக்ஸ்: 044 - 2434 3062 ஈமெயில்: inquiry@nalli.com வெப்சைட்: www.nalli.com
சென்னை • அகமதாபாத் • பெங்களூரு • கோயம்புத்தூர் • ஹைதராபாத் • காஞ்சிபுரம் • கொல்கத்தா • மதுரை • மும்பை • புதுடெல்லி • திருச்சி • சிங்கப்பூர் • USA


போத்தீஸின்
தித்திக்கும் தீபாவளி
₹5705
₹6605
₹6005
Vasundhara
CLASSIC
பெண்களின் இதயத்தை கவர்ந்த
வசுந்தரா பட்டு இந்த தீபாவளிக்கு
பிரத்யேகமாக புதுப்புது டிசைன்களில்
வடிவமைக்கப்பட்டு வசுந்தரா கிளாசிக்காக
உருப்பெற்றுள்ளது!
போத்தீஸின் இனிப்புப் பரிசு
வாடிக்கையாளர்களுக்கு ஸ்வீட் பாக்ஸ் இலவசம்
இந்த தீபாவளிக்கு போத்தீஸ் உங்களுக்கு இரட்டிப்பு தித்திப்பை
கொடுக்கிறது. எண்ணிலடங்கா வியப்பூட்டும் ரகங்கள் மற்றும்
ஆடைகள் வாங்கும் ஒவ்வொருவருக்கும் போத்தீஸின் இனிப்புப் பரிசு!
வாருங்கள், தித்திக்கும் தீபாவளிக் கொண்டாட்டத்தை
போத்தீஸில் தொடங்குங்கள்.
போத்தீஸ்
அழகிய ஜவுளிகளின் ஆலயம்
சென்னை (போத்தீஸ் | பொட்டிக் | ஹைப்பர் | போத்தீஸ்-ன் உமன்ஸ் வோர்ல்ட்) • ஸ்ரீவில்லிபுத்தூர் • திருநெல்வேலி • மதுரை
• கோயமுத்தூர் (ஒப்பணக்கார வீதி | கிராஸ்கட் ரோடு) • திருவனந்தபுரம் • புதுச்சேரி • நாகர்கோவில் | Online Shopping at www.pothys.com